திருவருட் செய்தி

[ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாசித் தொகுப்பு]

(மூன்றாம் தொகுதி)



தருமையாதீனம்

1990

வெளியீடு எண். 932

உ

குருபாதம்

திருவருட் செய்தி

தருமையாதீனம்

26வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் அருளுரைகள்

(மூன்றாம் தொகுதி)

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின் வண்ணம்

தருமை ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருவடியில் 26—5—1989 சூட்டப்பெற்று

குருபூஜை விழா மலராக மலர்ந்து

தருமபுர ஆதீனம் - தருமபுரம்

அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம் மற்றும் மேலைக் குருமூர்த்த ஆலயங்களின்

ஸ்ரீரணோத்தாரண அஷ்டபந்தன

மகா கும்பாபிஷேக விழாவில்

பிரமோதூத ஆண்டு, ஐப்பசித்திங்கள் 22 ஆம் நாள்

வெளியிடப்பெற்றது.

8—11—1990.

வெளியீடு :

'ஞானசம்பந்தம் பதிப்பகம்'

தருமபுரம் ஆதீனம்

தருமபுரம் - மயிலாடுதுறை.

அச்சிட்டோர் :

கணபதி பிரிண்டர்ஸ்,

5. மயூரநாதர் வடக்குவீதி, மயிலாடுதுறை.



ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

முன்னுரை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் சிவநெறியையும், செந்தமிழையும் இருகண்களாகப் போற்றிப் புரந்து வருவது. இவ்வாதீனக் குருமூர்த்திகள் பலரும், ஞானானுபூதிச் செல்வர்களாகத் திகழ்ந்தவர்கள். அவ்வனுபவங்களை அவ்வப்போது நூல் வடிவிலும் அருளிச்செய்து நாட்டுமக்களுக்கு உதவியவர்கள். தமிழிலும், வடமொழியிலும் பெரும் புலமை பெற்றியிலங்கிய இவர்கள், சைவசித்தாந்த சாத்திரம், தோத்திரம், யோகம் எனப் பல்வகை நூல்களை அருளிச் செய்துள்ளனர். இவையாவும் பண்டார சாத்திரங்கள் எனப் போற்றப்பெற்று வருகின்றன.

தருமையாதீன குருபரம்பரையில் இதுபோது 26 ஆவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்து அருளாட்சி நிகழ்த்தி வருபவர்கள் **ஸ்ரீலஸ்ரீ** சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். இவர்கள் முறையான திருமுறைப் பயிற்சியும், தமிழ்க் கல்வியும் பெற்றிலங்குபவர்கள். திருமுறைப்பண்ணிசையில் தோய்வும் புலமையும் மிக்கவர்கள். கேட்டார்ப்பிணிக்கும் சொல்வன்மை மிக்கவர்கள். உலகியல் அறிவும், உயர்பேர் ஒழுக்கமும் மிக்க தவசிலராக விளங்குபவர்கள்.

நாம் அருளாட்சி ஏற்ற நாள் தொடங்கி, காலநிலையால் கருத்தில் வாட்டமுறாது, ஆதீனத்தையும், ஆதீனக் கோயில் களையும் கண்ணெனப் போற்றிப் புரந்து வருபவர்கள். சமய, சமூகப் பணிகளுக்காக ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம் கண்டவர்கள். சைவசித்தாந்தச் செந்நெறியை உலகெலாம் பரவச்செய்யத் தருமையில் தருமையாதீன அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவி, பெரும் நிலைநிதி அமைத்தவர்கள். ஆதீனத் திருக்கோயில்களின் நிதி நிலையைப் பெருக்கி, தடையற்ற வழிபாட்டுக்கு வழிவகுத்துவருபவர்கள். ஆதீன மரபு நெறிவழுவாது, பல்வேறு இடங்களுக்கும் எழுந்தருளி மக்களிடையே அருளுரையாற்றி, அவர்களை அறநெறி வழாது வாழ அருட்கருணைபாலித்து வருபவர்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஞானபீடம் ஏறியநாள் தொடங்கி அன்பர்களிடையே நிகழ்த்திவரும் அருளுரைகள் யாவும் ஆதீனத்திங்கள் இதழ் 'ஞானசம்பந்தத்'தில் அவ்வப் பொழுது வெளியிடப்பெற்று வருதலை அன்பர்கள் அறிவார் கள். அவ்வருளுரைகள் பலவற்றையும் தொகுத்துத் 'திருவருட் செய்தி' என்ற பெயரில் வெளியிட அன்பர்கள் பலரும் வேண்டிக்கொண்டதற்கு இணங்கக் குருமணிகள் இசைந் தருளினார்கள். இவ்வகையில் திருவருட்செய்தி முதல்தொகுதி 7—11—1974 அன்றும், இரண்டாம்தொகுதி 11—5—1984 அன்றும் வெளிவந்தன.

1978 முதல் 1983 வரை ஐந்தாண்டு - ஞானசம்பந்தம் இதழ்களில் வெளிவந்த குருமணிகளின் அருளாசிகளின் கட்டுரை வடிவங்கள் மூன்றாவது தொகுதியாக இதுபொழுது வெளிவருகிறது. ஐந்தாண்டு இதழ்களில் அறுபது கட்டுரை கள் இடம்பெறுவதற்கு மாறாகத் திருவருட்பொருத்தமாய் அறுபத்துமூன்று கட்டுரைகள் அமைந்தன. திங்கள்தோறும்

முதல் ஞாயிற்றுக்கிழமைகளில், அன்பர்களிடையே பெரிய புராணத்தை விரித்துரைத்து, கருணைபாலித்து, குருமணிகள் நிறைவித்த நேரத்தில், அறுபான்மும்மை நாயன்மார்களை நினைவுகூரும் வண்ணம், அறுபத்துமூன்று கட்டுரைகள் அமைந்தது வியப்பூட்டுவதாகவே அமைகிறது.

திருவருட்செய்தி மூன்றாம் தொகுதியில் இடம்பெற்றிருக்கும் அருளுரைகள் யாவும், கட்டுரை வடிவில் அமைக்கப் பெற்றன, கட்டுரைகளின் தொடக்கத்தில் பொருத்தமான பாடல் ஒன்றும், கட்டுரையின் சாரமும் இணைக்கப்பெற்றன. கட்டுரையின் உள்ளீட்டை அறிந்து உட்புகுவதற்கு இவை உதவியாக அமையும். இம்மூன்றாம் தொகுதியில் புதிதாக நூல் இறுதியில், கட்டுரைகளில் இடம் பெற்றுள்ள அருஞ் சொல் – பொருள் விளக்கங்களுக்கான அகராதியும், கட்டுரைகளில் இடம்பெற்றுள்ள மேற்கோள் பாடல்களுக்கான அகராதியும் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

திருவருட்செய்தி - மூன்றாம் தொகுதியின் பதின்மூன்று கட்டுரைகள்மட்டும் கொண்ட சிறுதொகுதி, ஆதீன குரு முதல்வர் குருபூஜைத் திருநாளான 26—5—89 அன்று தொகுக்கப்பெற்று விழா மலராகக் குருமூர்த்திகளின் திருவடிகளில் சூட்டப்பெற்றது. தற்போது அறுபத்துமூன்று கட்டுரைகளோடு முழுமைபெற்ற நிலையில் இம்மலர், தருமையாதீனம் அருள்மிகு சித்திவிநாயகர் மற்றும் மேலைக் குருமூர்த்த ஆலயங்களின் ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக நன்னாளாகிய 8—11—1990 அன்று வெளிவருகிறது.

முதல், இரண்டாம் தொகுதிகளை வெளியிட அருள் பாலித்த குருமணிகளின் அளப்பரிய கருணையால், மூன்றாம் தொகுதியையும் தொகுத்து, முன்னுரை எழுதி முறைப்படுத்தி

அச்சிடும் வாய்ப்பு எளியேனுக்கு வாய்த்தது. கட்டுரைகள் யாவற்றையும் அச்சிடும் நிலையில், மீண்டும் ஒருமுறை திருக்கண்சார்த்தி உரிய திருத்தங்களைச் செய்து அருளிய குருணைக்கும், இப்பணியில் எளியேனை ஈடுபடுத்திய அளப்பரிய அருளுக்கும் மன, மொழி, மெய்களாலாகிய வணக்கங்களைக் குருமணிகளின் திருவடிகளில் பணிவோடு படைத்து வணங்குகின்றேன்.

இந்நூலை வெளியிடும் தருமையாதீனம் ஞானசம்பந்தம் பதிப்பகத்தாருக்கும், அச்சிட்டு வழங்கிய மயிலாடுதுறை சுணபதி அச்சகத்தாருக்கும். இம்மலரில் அருஞ்சொற் பொருளகராதியையும்; மேற்கோள் செய்யுள் அகராதியையும் தொகுத்து உதவிய தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி பகுதிநேரத் தமிழ் விரிவுரையாளர்கள் திரு. ப. சிவநேசன், திரு. நா. ஞானசேகரன் ஆகியோர்க்கும் திருவருளும் குருவருளும் உரியது.

சைவத் - தமிழ் உலகம் இவ்வரிய ஞானப்பெட்டகத்தை ஏற்றுப் போற்றிப் பயன்கொள்ளும் என்று நம்புகிறேன்.

தருமபுர ஆதீனம்
தருமபுரம்
8—11—1990.

அடியவன்,
இரா. செல்வக்கணபதி.

பொருளடக்கம்

வரிசை எண்	கட்டுரைப் பெயர்	வழங்கியருளிய நாள்	பக்கம் எண்.
	முன்னுரை		iii
	ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு		x
1	தாயுமானவர் நெறிமரபு	6-2-78	1
2	தாயுமானவர் சமரசநெறி	7-2-78	5
3	தாயுமானவர் காட்டும் ஜீவகாருண்யம்	8-2-78	11
4	தாயுமானவர் இகழும் ஆடம்பரக் கல்வி	9-2-78	15
5	தாயுமானவரது உண்மை உள்ளம்	10-2-78	19
6	தாயுமானவர் விளக்கும் சைவ சமயச் சிறப்பு	11-2-78	24
7	காஞ்சி, ஐயாறு, ஆரூர்	12-2-78	29
8	தற்செயல்	2-5-78	35
9	மனக்கவலை நீக்கும் மருந்து	11-9-78	41
10	மக்கள் தொண்டும் மகேசன் தொண்டும்	25-9-78	49
11	சாதகனும் சாதனங்களும்	3-12-78	54
12	பிரணவத்தின் உட்பொருள்	10-1-79	58
13	நல்லோர் வாழும் ஊர்	25-2-79	63
14	திருக்கோயில்களும், திருவிழாக்களும்	5-9-79	72
15	வாழும் இலக்கியம்	9-3-79	78
16	பாதயாத்திரையும் பயனும்	14-4-79	85
17	அப்பரடிகளின் அருள் அனுபவம்	22-4-79	91
18	அமரர்கள் போற்றும் அமரபுரீசுவரர்	10-7-79	97
19	அவரவர் வினைவழி	1-9-79	102
20	கோடீசுவரரின் குருபக்தி	15-9-79	110

வரிசை எண்.	கட்டுரைப் பெயர்	வழங்கியருளிய நாள்	பக்கம் எண்
21	கந்தபுராண உட்கிடக்கை	10-11-79	117
22	நளனுக்கு நலங்கொடுத்த நம்பன்	30-11-79	124
23	இல்லை என்போர் யாரடா ?	2-1-80	129
24	தோத்திர நெறியும் - சாத்திர நெறியும்	2-3-80	137
25	அடங்கியிருந்து அன்னை அருள் பெறுக	17-3-80	144
26	மதுரையை மீட்ட மாண்புடைப் பிள்ளை	21-4-80	150
27	சமய உணர்வும் சமுதாய எழுச்சியும்	13-6-80	156
28	நல்லனகற்று நாளும் வாழ்க	26-5-80	162
29	இயக்கம் கண்டு இணைந்து வளர்வோம்	21-5-80	171
30	நல்லன கற்று நாளும் தெளிக	29-8-80	177
31	தாயெனப் போற்றும் தகவுடைச் சான்றோர்	21-8-80	185
32	வழிபடுவீர்! வளம் பெறுவீர்!	10-11-80	192
33	மக்கட் பணியே மகேசன் பணி	18-10-80	195
34	பிச்சை எடுக்கவா பிறந்தோம் ?	3-1-81	201
35	பொறிவாயில் ஐந்தவித்தான்	8-9-80	208
36	தனக்குவமை இல்லாதான்	9-9-80	212
37	அறவாழி அந்தணன்	10-9-80	216
38	துன்மதியில் நன்மதி வளர்க	10-4-81	219
39	எண் குணத்தான்	11-9-80	221
40	பிறவிப் பெருங்கடல்	12-9-80	225
41	எண்ணமும் வாழ்வும்	10-5-81	228
42	இணைந்து வாழ்வோம்	27-7-81	232
43	மனநலமும் இனநலமும்	21-6-81	238
44	உணவும் உணர்வும்	6-9-81	243
45	உரிமையும் கடமையும்	8-9-81	248

வரிசை எண்.	கட்டுரைப் பெயர்	வழங்கியருளிய நாள்	பக்கம் எண்
46	சோதனையில் உய்ந்த சாதனை	29-4-81	255
47	சைவமே முதற்சமயம்	13-12-81	260
48	வேதங்களின் உள்ளீடு	12-2-82	267
49	இந்து மதத்தின் இரு கண்கள்	5-4-82	273
50	புத்தாண்டு ஆசிச் செய்தி	10-4-82	279
51	இந்து மதம்	21-4-82	281
52	குருவின் பெருமை	6-6-82	290
53	கற்பணி செய்தார் கயிலை நீங்கார்	20-4-82	296
54	கண்ணிற் சிறந்த உறுப்பில்லை	10-2-82	302
55	வேளாளர் வரலாறும், அவர்தம் கொள்கையும்	17-5-82	309
56	நவராத்திரி விழா வழிபாடு-ஒரு விளக்கம்	10-10-82	316
57	சைவ சித்தாந்த ஆய்வுமையமும் அதன் பணிகளும்	29-8-82	320
58	புற இருளும் அக இருளும்	26-6-82	328
59	நன்றி மறப்பது நன்றன்று	27-9-81	335
60	அறநெறி எது ?	31-12-82	341
61	எண்ணமே வாழ்வு	17-1-83	347
62	திருக்கோயில்களின் ஆற்றல்	30-3-83	354
63	ஒரு நெறிபற்றி உய்வோம்	27-4-83	360



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

தோத்திரம்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்துங்ளரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிளவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

ஸ்ரீ சம்பந்த சரணாலயர்.

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருபாதம்

தருமையாதீனத்தை நிறுவியருளிய
ஸ்ரீ குருஞானசம்பந்தர்
அருள் வரலாறு

ஞானக் குழந்தை:

தமிழகத்தில்—தென்பாண்டி நாட்டில்—ஸ்ரீவில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் மரபில் சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்ற நல்லறப் பெரியோர்கட்கு அருந்தவ மகவாகப் பதினாறாம் நூற்றாண்டில் அவதரித்தவர் தருமை யாதீன முதற் குருமூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள். இவருக்குப் பெற்றோர்கள், திருஞான சம்பந்தரைப்போல் தமது குழந்தையும் சிவஞானம் பெற்றுச் சைவம் வளர்க்கும் ஞானசூரியனாகத் திகழ வேண்டும் என்று எண்ணி 'ஞானசம்பந்தன்' என்ற நற்பெயரைச் சூட்டி வளர்த்துவருகையில், தமது குலதெய்வமாகிய சொக்க நாதரையும் மீனாட்சியம்மையையும் தரிசிப்பதற்கு ஞானசம்பந்த ருடன் மதுரை சென்று, பொற்றாமரைக் குளத்தில் நீராடி வழி பட்டனர். பெற்றோர்கள் ஊருக்குப் புறப்படுங்கால் ஞான சம்பந்தர் தொடர்ந்து நின்ற தாயும் தந்தையுமாகிய சொக்க நாதரைப் பிரிய மனமின்றி. உடலுக்குத் தாய் தந்தையர் களாகிய பெற்றோர்களுக்கு விடைகொடுத்தனுப்பிச் சொக்க நாதர் வழிபாட்டிலேயே ஈடுபாடு கொண்டவரானார்.

கண்ணுக்கினிய பொருள்:

நாள்தோறும் பொற்றாமரைக் குளக்கரையில் அடியார்கள் சிவபூசை புரிவதைக் கண்டார் ஞானசம்பந்தர். தாமும் அவ்வாறு சிவபூசை புரிய எண்ணினார்; சொக்கநாதரை

வேண்டினார். கருத்தறிந்து முடிக்கும் கண்ணுதற் கடவுளும் அன்றிரவு கனவில் தோன்றி, 'நாம் பொற்றாமரைத் தடாகத்தின் ஈசான்ய பாகத்தில் கங்கைக்குள் இருக்கிறோம். நம்மை எடுத்துப் பூசிப்பாயாக' என அருளினார். அவ்வண்ணமே மறு நாள் காலையில் பெருமானின் கருணையை வியந்து போற்றிப் பொற்றுமரைத் தடாகத்தில் மூழ்கினார்; ஸ்ரீ சொக்கநாதப் பெருமாள் கண்ணுக்கினிய பொருளாகத் தமது கரத்தில் வரப் பெற்றார். 'ஆசாரியன் வேண்டுமே? சிவஞானோபதேசம் பெற வேண்டுமே? எப்படிப் பூசனை புரிவேன்' என்ற எண்ணம் தோன்றவே, அது பற்றி இறைவனிடமே முறையிட்டார்.

ஞானாசாரியனை அடைதல்:

வேண்டத்தக்கது அறிந்து வேண்ட முழுதுந் தருவோனாகிய சொக்கநாதப்பெருமான், மறுநாள் கன்வில் எழுந்தருளி, 'திருக்கயிலாய பரம்பரை — திருநந்தி மரபு — மெய்கண்ட சந்தான வழியில் திருவாரூரில் விளங்கும் கமலை ஞானப் பிரகாசர் என்ற ஆசாரியரிடத்தில், வருகிற சோமவாரத்தில் ஞானோபதேசம்பெற்று நம்மைப் பூசிப்பாயாக' என அருளினார். அன்றிரவே, கமலை ஞானப்பிரகாசரிடத்திலும் கனவில் எழுந்தருளி, 'ஞானசம்பந்தன் வருகிற சோமவாரத்தன்று வருவான். அவனுக்கு ஞானோபதேசம் செய்து சிவபூசையும் எழுந்தருளி விப்பாயாக' என்று அருளினார். ஞானசம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு திருவாரூர் சென்று, பூங் கோயிலில் உள்ள சித்திச்சரம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் அமர்ந்திருந்த கமலை ஞானப்பிரகாசரைக் கண்டார்; காந்தம் கண்ட இரும்புபோல் ஆசாரியரால் ஈர்க்கப்பட்டார். சமய விசேட நிர்வாண தீக்ஷைகளால் பாசஞானம் பசுஞானங்கள் நீங்கிப் பதிஞானம் கைவரப்பெற்றார். சொக்கநாதப் பெருமானை ஆன்மார்த்த பூஜா மூர்த்தியாகப் பூசிக்கப்பெறும் பேற்றையும், ஞான அனுபூதியையும் அடைந்தார்.

கைவிளக்குப் பணிவிடை:

பன்னாளும் ஆசாரியப் பணிவிடைசெய்து தங்கி இருக்கும் நாள்களில் ஒருநாள், தியாகராசப் பெருமானின் அர்த்தயாம பூசையைத் தரிசித்து, ஆசாரியர் தமது மாளிகைக்கு எழுந்தருளினார். அப்பொழுது கைவிளக்குப் பணியாளன் உறங்கி

வீட், ஞானசம்பந்தர் தமககு ஞான ஒளியேற்றி நல்வழி காட்டிய ஞானாசிரியருக்கு ஒளி விளக்கு ஏந்தி முன் சென்றார். திருமாளிகையின் வாயில்முன்னர்ச் சென்றவுடன், சிவானுபூதியிலேயே திளைத்திருந்த ஞானப்பிரகாசர், அலைந்நி கைவரும் பக்குவத்திலிருந்த ஞானசம்பந்தரை 'நிற்க' எனக் கட்டளையிட்டு உட்சென்றார். ஆசாரியர் பெற்ற சிவானுபூதியை ஞானசம்பந்தரும் கைவரப்பெற்றவராய் மாளிகை வாயிலில் கை விளக்கு ஏந்தியவராகவே நின்றார். ஞானசம்பந்தரின் பெருமையை ஞாலம் அறியச்செய்து அதன்மூலம் சைவப்பயிர் தழைக்கத் திருவுளம் பற்றினான் போலும் இறைவன். அன்றிரவு பெருமழை பெய்தது சிவானுபூதியில் திளைத்திருந்த ஞானசம்பந்தர் மீது ஒருதுளி மழைகூடப் படவில்லை. விளக்கோ சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

குருஞானசம்பந்தராயினார்:

வைகறைப்பொழுதில் ஞானப்பிரகாசரின் பத்தினியார் சாணம் தெளிக்க வருங்கால், ஞானசம்பந்தர் அனுபூதி நிலையில் நிற்பதையும், விளக்குச் சுடர்விட்டுப் பிரகாசிப்பதையும் கண்டு உட்சென்று, தம் பதியிடம் வியப்புடன் வெளியிட்டார். ஞானப்பிரகாசர் விரைந்து வந்து பார்த்து, ஞானசம்பந்தரிடம் திருவருள் பெருகுகின்ற நிலையைக் கண்டு, மகிழ்ந்து 'ஞானசம்பந்தா! நீ ஆசாரியனாக இருந்து பக்குவம் உடைய ஆன்மாக்களுக்கு உபதேசிக்கும் தகுதி பெற்றுள்ளாய்; ஆகையால் உன்னிடம் வருகின்ற பக்குவம் உடையவர்களுக்கு ஞானோபதேசம் செய்து ஆசாரியனாக விளங்குவாயாக' என்று அருளினார். அப்பொழுது ஞானசம்பந்தர்,

> ''கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை
> கண்டதுண்டோ
> எனக்கும் உடற்கும் எனதிச்சை யோ இணங்கார்புரத்தைச்
> சினக்குங் கமலையுள் ஞானப்பிர காச சிதம்பர இன்று
> உனக்கிச்சை எப்படி அப்படி யாக உரைத்தருளே''

என்ற பாடலைப் பாடி 'எங்கு சென்று எவ்வாறு இருப்பேன்' என்று விண்ணப்பிக்க, ஞானப்பிரகாசர், 'மாயூரத்தின் ஈசான்ய பாகத்தில், வில்வாரண்யமாய் உள்ளதும், திருக்கடவூரில் நிக்ரகம் பெற்ற தருமனுக்கு அனுக்ரகம் செய்ததும் ஆன

தருமபுரத்தில் இருந்துகொண்டு, அன்புமிக உண்டாய், அதிலே விவேகமுண்டாய்த் துன்பவினையைத் துடைப்பதுண்டாய், இன்பம் தரும் பூரணத்துக்கே தாகமுண்டாய் ஒடிவரும் காரணர்க்கு உண்மையை உபதேசித்துக் குருவாக விளங்குவாயாக' என்று கட்டளையிட்டருளினார். அன்றுமுதல் ஞானசம்பந்தர் ''குருஞானசம்பந்தர்'' என்று வழங்கப்படுகிறார்.

தருமபுரத்தில் ஆதீனம் கண்டார்:

ஆசாரியர் ஆணையை மறுத்தற்கு அஞ்சியவராய், கன்றைப் பிரிந்த பசுபோலே, பிரிவுத் துயரை ஆற்றாதவராய்க் கலங்கிய ஞானசம்பந்தரை நோக்கிக் 'குருவாரந்தோறும் வந்து நம்மைத் தரிசிப்பாய்' என்று தேறுதல் கூறினார் ஞானப்பிரகாசர். குருஞானசம்பந்தர் தம் குரு ஆணையை மேற்கொண்டு தமது ஆன்மார்த்த மூர்த்தியுடன் தருமபுரத்திற்கு எழுந்தருளி, தருமபுர ஆதீன மடாலயத்தை நிறுவியருளினார். ஞானானுபூதியில் திளைத்துப் பல பக்குவ ஆன்மாக்களுக்குச் சிவஞானோபதேசம் செய்து அனுபூதிச் செல்வராய்த் திகழ்ந்தார். அவர் அனுபூதியில் பொங்கித்ததும்பிப் பூரணமாய் எழுந்த சிவஞானப் பேரருவியே, சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா, முத்தி நிச்சயம், திருபதார்த்தருபாதி தசகாரிய அகவல், சோடச கலாப்பிராசாத ஷட்கம், சொக்கநாதக் கலித்துறை, ஞானப் பிரகாசமாலை; நவமணிமாலை ஆகிய எட்டு நூல்கள். பாடல்கள் எளிமையும் இனிமையும் பயப்பனவாய், பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையைத் தெளிய விளக்குவனவாய் விளங்குகின்றன.

ஆனந்தபரவசருக்கு உபதேசம்:

குருஞானசம்பந்தர், தம்மை அடைந்த பக்குவமுடையவர்களுக்கு உபதேசித்து அனுபூதிமானாக விளங்கும்போது, உபதேச பரம்பரையை வளர்த்துவர அதிதீவிரப் பக்குவ நிலையிலிருந்த ஆனந்தபரவசர்க்கு உபதேசித்துத் தாம் ஜீவசமாதி கூடியருளினார்கள். அதிதீவிர நிலையில் இருந்த ஆனந்தபரவசர் தமது குருநாதர் உபதேசித்த ஞானநிலை விரைவில் கூடியவராய், தம் ஞானாசாரியர் ஜீவசமாதி கூடிய ஸ்ரீஞானபுரீசுவரர் ஆலய விமான ஸ்தூபியைத் தரிசித்தவாறு ஜீவசமாதி கூடினார்கள்.

மீண்டும் எழுந்தருளினார்:

திருக்கயிலாய பரம்பரை வழிவழியாக விளங்கவேண்டும் என்று விரும்பிய சீடர்களாகிய அடியவர்கள் ஸ்ரீ குருஞான சம்பந்தர் சந்நிதியில் நின்று தங்கட்கு ஓர் ஆசாரியனைத் தர வேண்டினர். குருஞானசம்பந்தர் ஜீவசமாதியினின்றும் மீண்டும் எழுந்தருளி, சச்சிதானந்தருக்கு ஞானோபதேசம் செய்தார்கள். மந்ததர நிலையிலிருந்த அவருக்கு அனுபூதி நிலை கைகூடாமையால் திருக்கண்ணோக்கம் செய்து, அனுபூதி நிலை கைகூடச் செய்து அவரிடத்துச் சொக்கநாதர் பூசையையும் ஞானபீடாதிபத்யத்தையும் அருளி மீண்டும் ஜீவசமாதியில் எழுந்தருளினார்கள். குருஞானசம்பந்தர் ஜீவசமாதி நிலை கூடிய ஆலயமே ஞானாம்பிகை உடனாய ஞானபுரீசுவரர் ஆலயமாக எல்லாப் பரிவாரங்களுடனும் திகழ்ந்து வருகின்றது.

அற்புத நிகழ்ச்சி:

தஞ்சை மன்னன் காவிரி கடலொடு கலக்குமிடத்தில் கடலாடச் சென்றான். தருமபுரத்திற்கு அண்மையில் வருகின்ற போது இரவு நேரம் ஆனதால் ஞானபுரீசுவரர் ஆலய அர்த்த யாம பூசையின் மணியோசைகேட்டு, மன்னன் கீழிறங்கி நின்று வணங்கினான். அருகிருந்த ஒருவர் 'இது சூச்திர சமாதிக்கு நடைபெறுகின்ற பூசை. இதைத் தாங்கள் வணங்குவது பாபம்; இவ்வாறு மற்றவர்களும் செய்யாதிருக்கக் கோயிலை இடித்து விடுதல் வேண்டும்' என்றார். அரசனும் ஏவலர்களை ஏவினான். ஏவலர்கள் கோயிலை இருப்புக் கோல் கொண்டு இடிக்க முற்பட்டனர். குருநாதர் கோயிலை இடிப்பதைக்கண்ட அடியவர்கள் அப்பொழுது ஞானபீடத்தில் எழுந்தருளியிருந்த 7ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகளிடம் சென்று

'தேசம் சிவாலயங்கள் சேர அலைய ஒரு
மோசம் வந்ததையே முதல்வனே - தேசத்து
மன்னை வெறுப்பேனோ வருவினையை ஊட்டுவிக்கும்
உன்னை வெறுப்பேனோ உரை."

என்ற பாடல்மூலம் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். அதனைச் செவியுற்ற குருமூர்த்திகள்,

"ஈசன் பலகீனன் என்றக்கால் ஆலயத்தில்
மோசம் வந்ததென்று மொழியலாம் - ஈசனே
ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவுந் தானானால்
நோக்குவதென் யாம்பிறரை நொந்து."

என்ற பாடலை அருளிச்செய்தார்கள். உடனே இரும்புக் கோல்பட்ட இடம் எல்லர்ம் குருதி பெருகிற்று இடித்தவர்கள் இடியுண்ட நாகம்போல மூர்ச்சித்து விழுந்தனர். மன்னனும் கண்ணொளி மழுங்கி மயங்கினான். ஏவலரும் மன்னனும் குறை உணர்ந்து பிழை பொறுக்க வேண்டினர். 7 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் குருஞானசம்பந்தப் பெருமானைத் தியானித்துத் திருநீறு அளித்தார்கள். திருநீறு அணிந்த மாத்திரத்தில் ஏவலர்கள் மயக்கம் தெளிந்து வணங்கினர். ஏவலர்களை ஏவிய மன்னன் ஒரு கண் ஒளி பெற்றான்.

மன்னன்பந்தல்:

மற்றொரு கண்ணும் ஒளிபெற வேண்டினான் மன்னன். குருமூர்த்திகளும் ஒரு மண்டலம் தங்கியிருந்து அர்த்தயாம பூசை வழிபாடு செய்தால் பாப விமோசனம் (விடுதலை பெறலாம் என அருளினார்கள். அதன்படியே மன்னனும் தருமபுரத்திற்குக் கிழக்கே ஒருகல் தொலைவில் பாடிவீடு அமைத்து அர்த்தயாம பூசையைத் தரிசித்து மற்றைக் கண்ணும் ஒளிபெற்று மகிழ்ந்தான். பாடிவீடு அமைத்த இடம் தற்பொழுது மன்னன் பந்தல் என வழங்கிவருகிறது. தான் அருள்பெற உதவிய அர்த்தயாம பூசை சிறப்புற நிகழ ஸ்ரீ குருஞான சம்பந்தர் ஆலயத்திற்கு நிலம் அளித்து அருள்பெற்றுச் சென்றான். அத்தகைய பேரருளாளராகிய ஸ்ரீகுருஞானசம்பந்தரால் நிறுவப்பெற்றதே தருமை ஆதீனத் திருமடாலயம் குருஞான சம்பந்தர் பரம்பரையில் தற்பொழுது 26 ஆவது குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** தருமையாதீன மடாலயத்தைப் புரந்து வருகின்றார்கள். இத்திருமையாதீனம் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க நாட்டு மக்களுக்கு நல்வழி காட்டிவருவதோடு இருபத்தேழு சிவாலயங்களையும் பாதுகாத்து வருகிறது. இதுவரை 932க்கும் மேற்பட்ட ஞான சாத்திர தோத்திர நூல்களை வெளியிட்டு அதன்மூலம் ஒல்லும் வகையால் அறப் பணியும் புரிந்து வருகிறது.

உ

குருபாதம்

திருவருட்செய்தி

(மூன்றாம் தொகுதி)

1

தாயுமானவர் நெறிமரபு

'சித்திநெறி கேட்டல் செகமயக்கம்; சன்மமற
முத்திநெறி கேட்டல் முறைகாண்; பராபரமே'

—தாயுமானவர்.

[சைவசமயப் பேரருளாளராகத் திகழ்ந்த தாயுமான சுவாமிகளின் மரபினையும், அவர் வகுத்தருளிய நெறிகளையும் இனங்காட்டி நடையிடுகின்றது இவ்வருளுரை. தாயுமானவர் திருமூலர்மரபினர் என்பதும், அவர் பேணி நின்றது சைவ சித்தாந்தச்செந்நெறியே என்பதும் குருமணிகளால் அகச்சான்றுகளுடன் இங்கே விளக்கப் பெற்றுள்ளன.]

தாயுமானவர் நெறிமரபு :

சோழநாட்டுத் திருத்தலங்களுள் திருச்சிராப்பள்ளி சிறப்புடைய தொன்று. அத்தலத்துக் குன்றுடையபெருமானை "நன்றுடையான்" என்றும், "தீயதில்லான்" என்றும் கூறி

---

* அகில இந்திய வானொலியின் திருச்சிராப்பள்ளி நிலையத்திலிருந்து 'நெறி விளக்கம்'—என்ற தலைப்பில் தாயுமானவர் நெறிபற்றி 6—2—1978 அன்று வழங்கியதைத் தழுவியது.

உள்ளங்குளிர்ந்தார் திருஞானசம்பந்தர். அத்திருமலைதந்த ஒரு தவச்செல்வர் தாயுமான அடிகள். இவரது காலம் இற்றைக்கு ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டது.

தமிழ் அறிந்தவரில் தாயுமானவரை அறியாதார் ஒருவரும் இரார். அடிகளது பாடல், பக்தியும் ஞானமும் நிரம்பி வழிவன. பக்தி, ஞானம் என்ற இருதுறையிலும் நிற்போர் அடிகளது பாடலை உணர்ச்சி பெருக ஓதி, உள்ளம் உருகி நிற்பர்.

அடிகள் பாடலைச் சிலர், 'பக்தி வெள்ளம்' எனப் பாராட்டி மகிழ்வர். சிலர் 'வேதாந்தம்' எனப் புகழ்வர். சிலர் 'சித்தாந்தம்' எனப் போற்றிப் பயன்கொள்வர். சிலர் 'வேதாந்த சித்தாந்த சமரசநெறி' எனக் கொண்டாடுவர். எனவே, தாயுமானவரது நெறிமரபு பற்றிச் சிறிது நோக்குதல் இன்றியமையாதது ஆகும்.

மூலன்மரபில்வருமௌனகுரு :

திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலுக்கு ஏறிப்போகும் வழியில் நமது ஆதீன மௌனமடம் இருப்பதை யாவரும் அறிவர். அதைத் தாபித்தவர் திருமூலர்மரபில்வந்த 'சாரமா முனிவர்' என்பவர் ஆவர். அந்த மடாலயத்தில் பதினேழாவது பட்டமாக எழுந்தருளியிருந்தவர் மௌனகுரு' என்பவர். அவரது பெயராலேயே இன்று அந்த மடம் வழங்கப்பெறுகிறது. அவரே தாயுமானவர்க்கு ஞானோபதேசம் செய்த ஞானகுரு ஆவர்.

தாயுமானவர் பாடியருளிய பல பாடல்களில் 'மௌனகுரு வணக்கம்' என்பது ஒன்று. அதில் அடிகள் அந்த அருட்குரவரது பெருமைகள் பலவற்றையும் கூறி, ஒவ்வொரு பாட்டிலும் "மூலன் மரபில்வரு மௌன குருவே" என்று தம் ஞானாசாரியரை அழைக்கின்றார். எனவே, அவரது மரபு திருமூலர் மரபே எனத் தெளிவாக விளங்குகின்றது.

சைவசித்தாந்தமரபு :

திருமூலர் தமது திருமந்திர நூற்பாயிரத்தில் தமக்கு மாணாக்கர் எழுவர் இருந்ததாகக் கூறியுள்ளார். ஆகவே அந்த எழுவருள் ஒருவர்மரபில் வந்தவர் சாரமா முனிவர் என்பது நன்கு விளங்கும்.

'திருமூலர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர்' என்பதும், 'அவர் சைவாகமங்களைத் தமிழில் திருமந்திர மாலையாக அருளிச்செய்தார்' என்பதும் உலகெலாம் அறிந்த உண்மைகள். எனவே, திருமூலர் வழிவந்த அருள் மரபு சைவாகம மரபு அல்லது, சைவசித்தாந்த மரபு என்பது சொல்லவேண்டுவதில்லை அதனால், சாரமா முனிவர் முதலாக மௌனகுரு வரையில் வந்த அருள்மரபு சித்தாந்த மரபு ஆதலால், மௌனகுருவிடம் உபதேசம் பெற்ற தாயுமானவர் மரபும் சித்தாந்த மரபு என்றே ஆகின்றது. தாயுமானவர், 'சின்மயானந்தகுரு' என்னும் தலைப்பில் உள்ள பதினொரு திருப்பாடலிலும் தட்சிணாமூர்த்தியை, 'சித்தாந்த முத்தி முதலே' என்று அழைத்துள்ளார்.

சைவாகமங்களின் சாரமாகிய சைவ சித்தாந்தத்தைக் கூறும் நூல் சிவஞானபோதம். சிவஞானசித்தியார் முதலாகப் பதினான்கு உள்ளன. அவைகளில் மிகவும் பெரிதாய் விரிந்திருப்பது சிவஞான சித்தியார். மௌனகுரு தாயுமானவருக்குத் தாம் உபதேசித்த ஞானத்தைச் சிவஞானசித்தி நூலைக்கொண்டே ஐயம் திரிபற விளக்கியருளினார் என்பது அந்த மௌனகுரு வணக்கத்தில் தாயுமானவர் தமது குருவை,

''வீறு சிவஞான சித்தி நெறி
மௌனோப தேச குருவே''

எனக் கூறியிருத்தலால் நன்கு விளங்கும்.

சிவஞான சித்தியாரின் பெருமையை,

''பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதிபோ தும்''

என அருளிச்செய்தவர் நம் குருஞானசம்பந்தர். அதைத் தாயுமானவர்

''பாதி விருத்தத்தால் இப் பார்விருத்தமாக உண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான் பணிவதெந்நாளோ''

எனத் தமது குரு மரபு வணக்கத்தில் கூறியுள்ளார் எனில், அவரது நெறி மரபு இன்னது என்பது எளிதில் விளங்குவதாம்.

சிவஞான சித்தி நெறி, ஒப்புயர்வற்ற சித்தாந்த ஞான நெறி என்பது வெள்ளிடைமலை. எனவே, தாயுமானவரது அருள் மரபு திருமூலர் வழிவந்த மௌனகுரு மரபாகிய சித்தாந்த ஞான மரபு என்பது தெளிவு.

நன்னெறிக்கருவூலம் :

உண்மை இது ஆகையால் தாயுமானவர் 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை' எனக் கூறுவது, 'வேதாந்தித் தெளிவாம்' சைவ சித்தாந்தம் எனச் சிவப்பிரகாச நூலுள் உமாபதி சிவாசாரியார் கூறியுள்ள கருத்தையே கொண்ட தாகும்.

சித்தாந்தம், '' இது ஆகும்; இது அல்லது எனும் பிணக்கு இன்றியிருப்பது '' எனச் சிவஞானசித்தி கூறுகின்றபடி சித்தாந்த சைவம் எச்சமயத்தையும் வெறுப்பதில்லை. அனைத்துச் சமயங்களிலும் உள்ள உண்மைகளை அது தழுவியேசெல்வதாகும். எனவே, அதனை ''வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை'' எனத் தாயுமான அடிகள் கூறியதில் வியப்பில்லை, ஆகவே, தாயுமானவரது அருள்மரபு, திருமூலர் வழிவந்த சித்தாந்த சைவச் செந்நெறி மரபு என்பது தெளிவான ஒன்றாகும்.

இச்செந்நெறி மரபு அனைத்து நலங்களையும் கொண்ட ஒரு நன்னெறிக் கருவூலம் என்பதை அடிகளே தமது மௌன குரு வணக்கப் பாடல் ஒன்றால் விளக்குகின்றார்.

'' போனகம் இருக்கின்ற சாலையிடை வேண்டுவ
புசித்தற் கிருக்கும் அதுபோல்
புருடர் பெரு தருமாதி வேதமுடன் ஆகமம்
புகலும் அதில் நாலாம் பயன்
ஞானநெறி முக்யநெறி காட்சி அனுமான முதல்
நானா விதங்கள் தேர்ந்து
நான் நான் எனக் குழறு படை புடை பெயர்த்திடவும்
நான்கு சாதனமும் ஓர்ந்திட்டு
ஆன நெறியாம் சரியை யாதி சோபானமுற்று
அணுபட்ச சம்பு பட்சம்
ஆம்இரு விகற்பமும் மாயாதி சேவையும்
அறிந்து இரண்டு ஒன்று என்னும் ஓர்
மானத விகற்பம் அற என்றும் நிற்பது நமது
மரபென்ற பரமகுருவே
மந்த்ர குருவே யோக தந்த்ர குருவே மூலன்
மரபில் வரு மௌன குருவே''.

2

தாயுமானவர் சமரசநெறி

"வேதாந்தம் சித்தாந்தம் வேறென்னசீர் கண்களிக்கும்
நாதாந்தமோன நலமே! பராபரமே".

—தாயுமானவர்

[அனைத்துச் சமயங்களும் உயிர்களின் பக்குவ பேதம் கருதி இறைவனால் வகுக்கப்பட்டவையே என்ற தாயுமானவரின் சமரச நெறியை, அவர்தம் அழகிய அரும்பனுவல்களை மேற்கோள் காட்டி குருமணிகள் அருளிச்செய்துள்ளார்கள். 'எது சமரசம்' என்ற வினாவிற்குக் குருமணிகள் தரும் அற்புதமான விளக்கம் முதற்கண் அமைந்து சிந்தனைக்கு விருந்தாகிறது.]

எது சமரசம்:

சப்த மாத்திரத்தால் மக்களைக் கவரும் சொற்கள் சில உண்டு. அவற்றின் உண்மையான பொருள் என்ன என்பது பற்றிச் சிறிதும் சிந்தனை இல்லாமலேயே மக்கள் அச்சொற்களில் ஈடுபடுவார்கள். அத்தகைய சொற்களில் "சமரசம்" என்பதும் ஒன்று.

"சமரசம்" என்றால், அனைத்துப் பொருள்களையும் ஒரே வகையாக வேறுபாடின்றி, அஃதாவது உயர்வு தாழ்வு பாராட்டாமல் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்வது எனப்

அகில இந்திய வானொலியின் திருச்சிராப்பள்ளி நிலையத்திலிருந்து 'நெறிவிளக்கம்' என்ற தலைப்பில் தாயுமானவர் நெறி பற்றி 7—2—1978 அன்று வழங்கியதைத் தழுவியது.

பொதுவாக மக்கள் நினைக்கின்றார்கள். 'சமரசம்' என்பதன் உண்மைப் பொருள் இதுவா என்று பார்க்க வேண்டும்.

"விலங்கொடு மக்கள் அனையர்" என்றும், "பொன்னோடிரும் பனையர்" என்றும், "வேம்பினோடு தீங்கரும்பு விரவி" என்றும் மற்றும், இவ்வாறு சொல்லப்படுவன பலவும் பொருள்களின் தரமறிந்து அவற்றைக்கொள்ளல் வேண்டும் என்பதையே வலியுறுத்தி நிற்கின்றன.

அவற்றிற்கு மாறாக, 'விலங்கும் மக்களும் ஒரு தன்மையரே என்றும், 'பொன்னும் இரும்பும் ஒருதரத்தனவே' என்றும், 'வேம்பும் கரும்பும்' ஒரே சுவையுடையன' என்றும் கூறுபவரோ அல்லது கொள்பவரோ ஒருவரும் இலர். ஆனால், மக்களும், பொன்னும், கரும்புந்தான் உலகத்தில் இருத்தல்வேண்டும்; மற்றைய விலங்கு, இரும்பு, வேம்பு இவை உலகத்தில் இருத்தல் கூடாது என்பதில்லை. 'சிறு துரும்பும் பல்லுக்குதவும்' என்பது போல எல்லாப் பொருளும் தேவைதான். ஆனால், தேவையே பொருளின் தரத்தை மாற்றி விடாது என்பதைச் சமரசம் பேசுகின்றவர்கள் நினைவில் வைக்கவேண்டும்.

'சமரசம்' என்பது தாயுமானவர் பாடலில் ஆங்காங்கும் பரவலாகவே காணப்படுகின்றது. சமய நெறியில் சமரசத்தை முதற்கண் காட்டினவர் தாயுமானவரே ஆவர். ஆயினும் அவரது சமரசம் மேற்கூறியது போலச் சிந்தனைக்கே வேலையில்லாத ஒரு சமரசம் அன்று.

இதுதான் உண்மைச் சமரசம்:

சமரசம் ஒரு நல்ல பண்பே. ஆனால், அதற்குத் தவறான பொருள் கொண்டுவிடக் கூடாது. ஒரு குடும்பத் தலைவனுக்கு அதில் உள்ள எல்லாரையும் சமமாகப் பாவிக்கும் பண்பு வேண்டுவதுதான். ஆனால், தந்தை, மகன், அண்ணன், தம்பி, தாய், மனைவி, தமக்கை, தங்கை என்ற எல்லாரிடத்திலும் ஒரே வகையாக அவன் இருத்தல் வேண்டும் என்று யாரேனும் கூறுவார்களோ? அதுபோலத்தான், எல்லாப் பொருளிலும் கொள்ளவேண்டும். அதாவது, எந்தப் பொருளிலும் காய்தல், உவத்தல் கொண்டு அதன் தரத்தைக் குறைத்தோ, அல்லது உயர்த்தியோ மதித்தல்கூடாது. அதனதன் தரத்திற்கு உரிய மதிப்பை அவற்றிற்குத் தரல்வேண்டும். அதோடு எந்தப்

பொருளையும் தனது விருப்பு வெறுப்பினால் அழிக்கவோ ஆக்கவோ கூடாது. அதனதன் தரத்தில் அதையதை வாழவிட வேண்டும். இதுதான் உண்மைச் சமரசம்.

தாயுமானவரது நெறியும் சித்தாந்த நெறியே :

திருவள்ளுவர் பொதுவாகப் பலர் நினைக்கின்ற சமரசத்தை "பொது நோக்கு" என்றும், உண்மைச் சமரசத்தை "வரிசை நோக்கு" என்றும் வைத்து, அரசனுக்குப் பொதுநோக்கு மட்டும் இருந்து வரிசை நோக்கு இல்லாவிடின் அவன் நாட்டில் உயர்ந்தோரும், நல்லோரும், திறமை மிக்கவர்களும் இருக்க மாட்டார்கள் என்றும், வரிசை நோக்கு இருந்தால், எல்லோரும் அவனைச் சேர்ந்து வாழ்வர்; ஒருவரும் அவனை விட்டு நீங்க மாட்டார்கள் என்றும் கூறுகிறார்.

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்"

என்பது அக்குறள். இக்குறளின் கருத்தைப் பிற்காலப் புலவர் ஒருவர்.

"தராதரம் அறிந்து முறை செய்யாத மன்னரைச்
சார்ந்தென்ன நீங்கில் என்ன"

என்று எளிய நடையில் கூறினார். இம்முறை எல்லாவற்றிலும் வேண்டுவதாயினும், மிக உயர்ந்த பயனாகிய ஆன்மீக லாபத்தைத் தருகின்ற சமயத்துறைக்கு இது மிகமிக இன்றியமையாதது. இல்லையேல், ஒன்றும் அறியா மக்களை நாம் அவர்களது அறியாமை வழியிலேயே செல்லும்படி செலுத்துகின்றவராவோம். சமயக்காழ்ப்புக் கூடாது; ஆனால், அதனதன் நிலைமைகளை உள்ளவாறு மக்கட்கு எடுத்துக் காட்டவேவேண்டும். 'சமரசம், சமரசம்' என்று பல இடங்களில் கூறுகின்ற தாயுமானவர் இவ்வாறு சமயத்தின் உண்மை நிலைகளை எடுத்துக்காட்டாது போகவில்லை.

தாயுமானவர் காலத்தில் தமிழ்நாட்டில் மேலோங்கியிருந்த சில சமய வேறுபாடுகள் வேதாந்தம், சித்தாந்தம் சைவம், மற்றும் பிற சமயங்களும் ஆகும் தாயுமானவரது நெறிமரபு சித்தாந்த நெறிமரபே என்பது தெளிவாகையால், அவரது நெறியும் சித்தாந்த நெறியே என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

வேதாந்த சித்தாந்த சமரசம் :

வேதாந்த சித்தாந்தங்களைப் பற்றி நன்கு உணராமலே தம்மை 'வேதாந்திகள்' என்றும் 'சித்தாந்திகள்' என்றும் சொல்லிக்கொண்ட பலர் 'வேதாந்தமாவது ஏகான்மவாதமே' என்றும் 'அத்துவிதம்' என்பது கேவலாத்துவிதமே என்றும், 'சித்தர்ந்தமாவது துவைதமே' என்றும் கொண்டு இருந்தனர். அவருள், 'வேதாந்திகள்' எனப்பட்டோர் சித்தாந்தம் ஒரு பக்தி நெறியே, அதில் அத்துவிதஞானம் இல்லை என்றும், 'சித்தாந்திகள்' எனப்பட்டோர், வேதாந்தம் மாயாவாதமாய் இம்மை மறுமை நலங்களைத் தராததோடு ஆன்ம லாபமாகிய மோட்சத்தையும் தரமாட்டாது என்றும் இன்ன பலவாகத் தம்முள் மாறுபட்டு வாதங்கள் பல செய்துவந்தனர் அதனால் தாயுமான அடிகள், வேதாந்தம், சித்தாந்தம் இரண்டும் பொருளால் ஒன்றே: அதைக்கூறும் முறைதான் வேறு. உண்மையை வேதாந்தம் .. பொதுவாகச் சுட்டுகின்றது. சித்தாந்தம் அதனைச் சிறப்பாக விளக்குகின்றது. இதனை அறிந்தவரே உண்மை வேதாந்திகளும், உண்மைச் சித்தாந்திகளும் ஆவர், அவர் தமக்குள் முரண்பட்டு நில்லார். இதை அறியாது வேறு கருத்துக்கொண்டு பூசலிடுதலால் ஒருவருக்கும் பயனில்லை, ஆகவே மேற்கூறிய கருத்தால் வேதாந்தசித்தாந்த சமரசம் காண்பவரது நிலையே நன்னிலையாகும் என விளக்கி வந்தார். அவரது பாடலில்,

"வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே"

".....வேதாந்த சித்தாந்த
சமரச சிவானுபூதிமன்ன"

என்பன போன்றவை நினைவிற்கொள்ளத்தக்கன.

அனைத்துச் சமயங்களும் இறைவனால் வகுக்கப் பட்டவையே :

சித்தாந்தத்தைத் 'துவிதமே' என்றுகொண்ட அந்தவேதாந்திகளில் சிலர், பொதுவாகச் சித்தாந்தத்தைப் புறக்கணித்ததோடு அதிற்சொல்லப்பட்ட சரியை முதலிய தவநெறிகளையும் புறக்கணித்து ஒதுக்குவாராயினர். இது தாயுமானவர்க்குப் பெரிதும் வருத்தத்தை அளித்தது. துவைதத்திலிருந்துதான்

அத்துவைதத்திற்குச் செல்லவேண்டும் என்பது எல்லார்க்கும் ஒத்த முடிபு. இதை வேறொரு கருத்தில் மேற்கூறிய வேதாந்திகளும் சொல்லலவில் உடன்பட்டே வந்தனர். அதனால் தாயுமானவர், 'எத்தகையோரும் சரியையாதி தவந்தனைப் புறக்கணியாது தைத்கொள்ளல் வேண்டும் என்று இரு சாரார்க்கும் பொதுப்பட, சமரசநிலையில் நயம்பட விளக்கி வந்தார். அவைதனில் ஒரு பாடல் சிறப்பாகத் குறிப்பிடத்தக்கது.

"வேதமுடன் ஆகம புராண இதிகாசமுதல்
வேறுமுள கலைகள் எல்லாம்
மிக்காக அத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவாய் எடுத்துரைக்கும்
ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
உண்டுபண்ணும் ஞானமாகும்
ஊகம் அனுபவம் வசனம் முன்றுக்கும் ஒவ்வும்ஈது
உபயவா திகள் சம்மதம்
ஆதலின் எனக்கினிச் சரியையா திகள்போதும்
யாதொன்று பாவிக்க நான்
அது ஆதலால், உன்னை நான் என்று பாவிக்கின்,
அத்துவித மார்க்கம் உறலாம்
ஏது பாவித்திடினும் அதுவாகி வந்தருள்செய்
எந்தை நீ குறையும் உண்டோ
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்கும் நிறைகின்ற பொருளே"

மற்றும்,

"பஞ்சசுத்தி செய்து நின்னைப்பாவித்துப் பூசைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே"

'விரும்பும் சரியையுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமவர் காய்கனிபோல் அன்றோ பராபரமே'

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்பன போன்றவற்றுல் அடிகள் தவநெறியைப் பலர்க்கும் வலியுறுத்தினார்.

"சைவம் முதலாம் அளவில் சமயமும் வகுத்து, மேல்
சமயம் கடந்த மோன
சமரசம் வகுத்த நீ, உன்னை நான் அணுகவுந்
தண்ணருள் வகுக்க இலையோ"

என்னும் பகுதியால், அனைத்துச் சமயங்களும் உயிர்களின் பக்குவ பேதம் நோக்கி இறைவனால் வகுக்கப்பட்டவை என்பதே அடிகள் கருத்து என்பது நன்கு விளங்கும். ஆதலால் அவரது சமரசநெறியின் தன்மையும் இனிது விளங்கும்.



3

தாயுமானவர் காட்டும் ஜீவகாருண்யம்*

"எவ்வுயிருந் தம்உயிர்போல் எண்ணும் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ!"

[சைவ சமயம் சுட்டும் நல்லறங்கள் பலவற்றுள்ளும் உயிர் இரக்கம் எனப்படும் ஜீவகாருண்யம் தலையாயது. இவ்வுயர் அறம் தாயுமானவர் அருட்பனுவல்களுள் பொதிந்து கிடக்கும் திறத்தை இச்சிந்தனையில் குருமணி அவர்கள் அருளிச்செய்துள்ளார்கள். இரக்க முடைமை, சிற்றுயிர்களைப் பேணுதல் முதலிய வற்றின் இன்றியமையாமையும் அழகுற விளக்கம் பெற்றுள்ளன.]

கொல்லாமை:

அறங்கள் பலவற்றுள்ளும் ஜீவகாருண்யமே தலையாய அறமாகச் சொல்லப்படுகின்றது. "ஒன்றாக நல்லது கொல்லாமை" என இவ்வறத்தினை முதலாவது அறமாகத் திருவள்ளுவர் கூறுகின்றார். அருளுடைமைக்கு அடிப்படை யாக விளங்கும் இந்த ஜீவகாருண்யத்தை மக்களிடையே

---

* அகில இந்திய வானொலியின் திருச்சிராப்பள்ளி நிலையத்திலிருந்து "நெறி விளக்கம்" என்ற தலைப்பில் தாயுமானவர் நெறிபற்றி 8—2—1978 அன்று வழங்கியதைத் தழுவியது.

பரப்புவதற்கு முதல் வழிகாட்டியாகத் தாயுமானவர் விளங்கினார்.

''கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே''

என்னும் பாடலில் ஜீவகாருண்யத்தை உலகெங்கும் பரப்புவதில் தாயுமானவ அடிகட்கு இருந்த ஆர்வத்தை நாம் நன்கறியலாம்.

''கொல்லாவிரதம் ஒன்று கொண்டவரே நல்லோர் மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே''

என்னும் பாடலில் ஜீவகாருண்யம் உடையவர்களது உயர்வை அவர் விளக்குவதோடு ஜீவகாருண்யம் இல்லாதவர்களது தாழ்வையும் நயம்படக் காட்டியுள்ளார் தாயுமானவர்.

இரக்கமுடைமை:

எவ்வுயிரையும் தம் உயிர்போல் எண்ணிப்பரிவு காட்டும் உளமும் தனக்கு வேண்டுமென்று இறைவனை வேண்டுகிறார் அடிகள்.

''எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
செய்ய அருட்கருணை செய்யாய் பராபரமே''

என்றும், அது இயலாவிடின்,

''எவ்வுயிரும் தம்முயிர்போல எண்ணும் தபோதனர்கள
செவ்வறிவை நாடிமிகச் சிந்தை வைப்பதெந்நாளோ''

என்றும் தாயுமானவ அடிகள் அருளிய பாடல்கள் ஜீவகாருண்யத்தை அவர் முக்கியமாகக் கருதினார் என்பதைத் தெரிவிக்கின்றன.

உலகில் பலரும் கூறும் ஜீவகாருண்யத்திற்கும், தாயுமானவர் கூறும் ஜீவகாருண்யத்திற்கும் வேறுபாடுகள் உண்டு. தாயுமானவர் கூறும் ஜீவகாருண்யம் சமய நெறிகளோடு தொடர்புடையது. அதாவது எல்லா உயிர்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்திருக்கின்றான் ஆதலின் எந்த உயிர்க்குத் தீங்கு செய்தாலும் அது இறைவனுக்குச் செய்த குற்றமாகவே முடியும் என்றும், எந்த உயிர்க்கு நன்மை செய்தாலும் அது இறைவனுக்குச் செய்த நன்மையாகும் என்றும் கூறும் சமயந் தழுவிய உயிர் இரக்கமே தாயுமானவர் கூறுவதாகும்.

'எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவன் என்று
எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு''

என்பது சைவ சமய நெறிக் குறள். சமய உணர்வோடு கலந்து போதிக்கப்பெறும் ஜீவகாருண்யமே மக்களிடத்தில் நிலைபெற்று விளங்கும்.

உணவளித்தல்:

உலக வாழ்க்கையில் மனித சமுதாயத்தோடு ஒட்டி வாழும் உயிரினங்கள் பசு, எருது, ஆடு, கோழி, காக்கை முதலிய உயிரினங்களாகும். இவற்றையும் இவற்றோடு ஏனைய உயிர்களையும் காப்பது நம் கடமையாகும். எல்லா உயிர் களிடத்தும் நமக்கு இரக்க உணர்வு உண்டாகவேண்டுமென்று அன்றாட வாழ்வில் பல சமய நியதிகளை நம் முன்னோர்கள் நமக்கு வகுத்துத்தந்துள்ளார்கள் பசுவைத்தெய்வமாக மதிக்க வேண்டுமென்றும், அதற்குப் புல் முதலிய உணவு கொடுக்க வேண்டுமென்றும் நம்சமயங்கூறும் நல்லறத்தில் ஜீவகாருண்யம் அடிப்படையாய் விளங்குவதைக் காணலாம்.

விடியற்காலையில் பெண்கள் வீட்டிற்குச் சாணம் தெளித்துக் கோலம் இடுகின்றார்கள். தமிழ்நாட்டுப் பெண்களின் கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டாய்த் திகழும் மாக்கோலம், வீட்டுக்கு அழகு தருவதோடு எளிய உயிர் களாகிய எறும்பு முதலியவற்றுக்கு உணவுதரும் நல்லறத்தையும் உள்ளடக்கியுள்ளது. எறும்பு கண்ணில்லாத உயிர் கண்ணற்ற அவ்வுயிருக்கு உணவுதந்தால் கண்ணொளி உண்டாகும் என்ற பொருளில்'எறும்பு தின்றால் கண்தெரியும்'என்ற பழமொழியும் வழங்கக் காண்கிறோம். நமக்குப் பயன்படாத நொய்யரிசி, குறுணை முதலியவற்றை எறும்புப்புற்றில் கொட்டும் பழக்கம் இன்றும் நம்மிடம் உள்ளது. நாள்தோறும் நாம் உண்பதற்கு முன் காக்கையை அழைத்து உணவுதந்து உண்ணும் பழக்கம், ஜீவகாருண்யத்தை அடிப்படையாகக் கொண்டது. இன்னோரன்ன பழக்கங்கள் எவ்வுயிர்களையும் தம் உயிர்போல் எண்ணும் மனநிலையை நமக்கு வளர்க்கப் பெரியோர்கள் வகுத்த சமய மரபுகளாகும். முல்லைக்குத் தேரளித்த பாரியின் செயலும், மயிலுக்குப் போர்வையளித்த பேகனின் செயலும் தாவரங்களிடத்தும் பறவைகளிடத்தும் அம்மன்னர்கள் காட்டிய அருளுள்ளத்தை நமக்குப் புலப்படுத்துகின்றன.

முன்னோர் திறம் :

சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்களைப் பயிரிடுவதைச் சிறந்த அறமெனக் கூறினர் பெரியோர். மக்கள் பலரும் செல்லும் சாலை ஓரங்களில் ஆல், அரசு, மா முதலிய மரங்களையே பெரும்பாலும் பயிரிடுவர். படர்ந்து விரிந்து வளரும் இம் மரங்கள் மக்களுக்கு நல்ல நிழல் தருவதோடு உடலுக்கும் நன்மை தரும். அணில், பறவை முதலிய உயிர்க்கட்கும் உணவு தரும்.

நம் முன்னோர்கள் எதையும் சிந்தித்து மக்கட் சமுதாயத்துக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் நன்மை தரும் செயல்களை நல்லறங்களோடு இணைத்து வழங்கும் முறைகளை நாம் உணரவேண்டும்.

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

என்று கூறிய தாயுமானாரின் மனநிலை எவ்வளவு உயர்ந்தது என்பதை நாம் எண்ணி உணரவேண்டும். இன்று நாம் கூறும் சோஷலிச அரசியல் நெறிகளின் கருவாக இத்தொடரை நாம் கருதலாம். மனித சமுதாயத்தில் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்; பஞ்சம், பசி, பிணி முதலியவற்றால் மக்கள் துன்புறாமல் வாழவேண்டும்; போட்டி, பொறாமை, தன்னலம் இவற்றால் மற்றவர்களைக் கெடுத்து அல்லது அழித்து வாழும் மனநிலை மக்களிடம் அறவே அகலவேண்டும் என்பன போன்ற கருத்துக்களுக்கு இருப்பிடமாக உள்ள இப்பாடல், தாயுமானவர் மனித சமுதாயத்துக்கு வழங்கிய தலையான அறிவுரையாகும்.



4

தாயுமானவர் இகழும் ஆடம்பரக் கல்வி*

'சுற்கஇடர்ப் பட்டுமிகக் கற்றவெல்லாம் கற்றவர்பால்
தற்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ – நற்கருணை
வெள்ளம் அடங்கும் விரிசடையார்க்கு ஆளாகி
உள்ளம் அடங்கவல்ல வோ'

—சிவபோகசாரம்.

[கல்வியின் உண்மைப்பயன் இது என அறியாது, வாழ்நாளெல்லாம் பிறரை மருட்டித் திரிவாரைக் கண்டு 'கல்லாத பேர்களே நல்லவர்கள்' என்ற முடிவுக்குத் தாயுமானவர் வருதல் ஏன்என்ற வினாவை உளங்கொண்டு அற நூல்கள், சமய நூல்கள், பண்டார சாத்திரங்கள் முதலியவற்றின் துணையோடு குருமணிகள் வழங்கிய அரிய விளக்கமாக இவ்வருளுரை அமைகிறது]

கல்வியின் பயன் :

மனித உள்ளத்தைப் பண்படுத்தும் மதிநலத்தைக் கல்வி என்று கூறுகிறோம். கல்வி என்ற சொல்லுக்கு அகழ்தல் என்பது பொருள். உயிரைப்பற்றி இருக்கும் அறியாமையை அகழ்ந்து எடுத்தல் கல்வியின் செயலாகும். நல்ல பல நூல்களைக் கற்பதனால் அறியாமை நீங்குகிறது. உயிருக்கு

---

* அகில இந்திய வானொலியின் திருச்சிராப்பள்ளி நிலையத்திலிருந்து 'நெறிவிளக்கம்' என்ற தலைப்பில் தாயுமானவர் நெறிபற்றி 9—2—1978 அன்று வழங்கியதைத் தழுவியது.

அறிவொளி உண்டாகிறது. கல்வியின் முடிந்த பயன் சிவபரம் பொருளை அடைவதேயாகும். அதற்குத் துணைபுரியும் நூல்களே நூல்களாகும். நன்னூலில் பவணந்தி முனிவர் "அறம், பொருள், இன்பம் வீடடைதல் நூற்பயன்" என்னும் சிறிய நூற்பா ஒன்றால் இதனைத் தெரிவிக்கிறார். அறநெறிகளை அறிதற்கும், அறநெறி வழுவாது பொருள் ஈட்டி இன்பம் நுகர்ந்து முடிவில் வீடுபேறு அடைதற்கும் நூல்கள் உதவல் வேண்டும்.

"கற்றதனால்ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்கிறார் வள்ளுவர்.

"உள்ளம் நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்ற வற்றால் தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன் கழலிற் செறிவு" என்கிறார் சேக்கிழார்.

"கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி" என்றும், "கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" என்றும் கூறப்படும் திருமுறைத் தொடர்களும் இக்கருத்தை உள்ளடக்கி எழுந்தனவேயாகும்.

கற்றல் எதற்கு ?

கல்வி கற்பது மற்றவர்களோடு விவகாரம் செய்வதற்கே என்ற முடிவோடு வாழும் அறிஞர்கள், கல்வியின் பயனை அடையாமற் போவதோடு கல்விக்கே இழுக்குத் தேடவும் செய்கின்றார்.

தர்க்கம் என்பது உணமையை ஆராய்ந்து காண்பதற்கு உரிய ஒரு வழியாகும். இதனைப் பொய்யை மெய்யாக்குதற்கும், மெய்யைப் பொய்யாக்குதற்கும் பயன்படுத்தும்போது கற்றவர் களையே வெறுத்துக் கூறத் தோன்றுகிறது. கற்றவர்களை விடக் கல்லாதவர்களே நல்லவர்கள் என்று சொல்லத் தோன்றுகிறது. திருவள்ளுவர் "கல்லாதவரும் நனிநல்லர் கற்றார்முன் சொல்லா திருக்கப் பெறின்" என்று கூறுவார். தாயுமானவர்.

"கற்றதும் கேட்டதும் தானே ஏதுக்காக
கடம்படம் என்று உருட்டுதற்கோ கல்லால் எம்மான்
குற்றமறக் கைகாட்டும் கருத்தைக்கண்டு
குணங்குறி அற்று இன்ப நிட்டை கூடவன்றோ!"

என்று அருளிச்செய்கின்றார்கள்.

கற்றவர் தவறு செய்தால் ?

சில வேளைகளில் மக்களில் கற்றவர்களைவிடக் கல்லாதவர்கள் உயர்ந்தவர்களாக மதிக்கப்பெறுகின்றனர். அதற்குக் காரணம் கல்லாதவர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்பதேயாகும். படித்தவர்கள் தவறு செய்வார்களேயானால், மக்களை யார் எப்படித் திருத்தி வாழவைக்க முடியும் ?

கல்லாதவர்கள் தவறு செய்வதைவிடக் கற்றவர்கள் தவறு செய்யும்போது அத்தவற்றை மிகத் திறமையாகச் செய்வதோடு தாம் செய்யும் தவறுகளையே நேர்மை என்று நிலைநாட்டவும் முனைகின்றனர். இது மக்கள் இனத்திற்குப் பெரும் தீமையாய் முடிகிறது. இப்படிப் பார்க்கும்போது கல்வியைக் கற்றவர்களை விடக் கல்லாதவர்களே நல்லவர் எனத் தோன்றுகிறது. இதைத் தாயுமானவர் "கல்லாத பேர்களே நல்லவர்கள்" என்று உறுதியாக எடுத்துக் கூறுகின்றார். இதற்குக் காரணம் கற்றவர்கள் செய்யும் தவறுகளேயாகும். கல்வி, பிறவி நீங்கிப் பேரின்பநிலை அடைதற்குரிய சாதனம் என்பதைத் திருவள்ளுவர்,

> "கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
> மற்று ஈண்டு வாரா நெறி"

என்ற குறளால் கூறுவார். நமது ஆதீன ஆதி பரமாசாரிய ராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர்,

> " கற்கஇடர்ப் பட்டுமிகக் கற்றஎல்லாம் கற்றவர்பால்
> தற்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ — நற்கருணை
> வெள்ளம் அடங்கும் விரிசடையாற்கு ஆளாகி
> உள்ளம் அடங்கவல்ல வோ "

எனக் கூறுகிறார். கற்றவர்செய்யும் தவறுகளைத் தம்மீதே வைத்துத் தாயுமானவர் கூறும் பாடலைப் பார்ப்போம்.

> " கற்றும் அறிவில்லாத என் கன்மத்தை என்சொல்கேன்
> மதியை என் சொல்கேன் "

என்று தன்னையே நொந்து கூறுகிறார்.

தாயுமானார் சினம் :

தாயுமானவர், ஞானம் முக்கியம் என்று ஒருவர் கூறினால், கர்மங்களைச் செய்வதே உயிர் விளக்கமடைவதற்கு வழியாகும் என்று கூறுவேன்; கர்மம் முக்கியம் என்று ஒருவர் கூறினால்

ஞானமே முக்கியமாகும் என்று என்னுடைய வாதத் திறமையால் நிலைநாட்டிப் பேசுவேன்; வடமொழியில் வல்லவர் ஒருவர் வந்தால் அவரிடம் திராவிட மொழிகளைக் கற்ற அறிவினால் அவரை மருட்டுவேன்; திராவிட மொழிகளைக் கற்றவர்கள் வந்தால் அவரிடம் வடமொழி வசனங்களைப் பேசி அவர்களை மயக்குவேன்; உண்மையான வெற்றியைப் பெறாமல் வாதத் திறமையினாலே நான் பெறுகிற வெற்றிகள் வீடு பேற்றினைத் தருமா? என்று கேட்கிறார். இக்கருத் தமைந்த பாடலைப் பார்ப்போம்.

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும் அறிவில்லாதென்
கன்மத்தை என் சொல்கேன்? மதியை என்சொல்லுகேன்?
கைவல்ய ஞான நீதி
நல்லோர் உரைக்கிலோ, கன்மம் முக்கியம் என்று
நாட்டுவேன் கன்மம் ஒருவன்
நாட்டினாலோ, பழைய ஞானம் முக்கியம் என்று
நவிலுவேன்; வடமொழியிலே
வல்லான் ஒருத்தன்வரவும் த்ராவிடத்திலே
வந்தவா விவகரிப்பேன்
வல்ல தமிழ் அறிஞர் வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்;
வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தை என் முத்தி தருமோ?
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே!

இறைவன் திருவருளைப் பெறுதற்குரிய சாதனமாக உதவும் கல்வியை வீண் விவகாரங்கள் செய்வதற்குமட்டும் பயன்படுத்தி உயர்ந்த குறிக்கோளை அடையத் தவறிவிடும் கல்வியாளர்களுக்கு இப்பாடல் நல்லதோர் அறிவுரையாக அமைகின்றது.

5

தாயுமானவரது உண்மை உள்ளம்

'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்' —திருக்குறள்

[சொல்வேறு செயல்வேறு பட்டார் வாழும் உலகம் இது. அகத்தூய்மை இல்லாதாரைச் சான்றோர் மதியார். அத்தகு அகத்தூய்மை கைவர யாதுசெய்தல் வேண்டும் என்ற வினாவிற்குத் தாயுமானவர் அருட்பனுவல்களை மேற்கோள்காட்டிக் குருமணிகள் தரும் அழகிய விளக்கமாக இவ்வருளுரை விரிகிறது. சொல்லால் மட்டுமன்றி வாழ்வாலும் தூய்மை பெற்றி லங்கியவர் தாயுமானவர் என்பதும் அழகுற விளக்கம் பெறுகிறது.]

அகத்தூய்மை:

''புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்''

என்றவள்ளுவர் வாக்கின்படி, ஒருவரது உள்ளத்தின் தூய்மையை அவருக்கு உண்மையின்மேல் உள்ள ஆர்வத்தைக்கொண்டே அறிய முடிகிறது. 'உண்மை' என்பது சிறப்பாக அகமும்,

---

* அகில இந்திய வானொலியின் திருச்சிராப்பள்ளி நிலையத்திலிருந்து 'நெறி விளக்கம்' என்ற தலைப்பில் தாயுமானவர் நெறி பற்றி 10—2—1978 அன்று வழங்கியதைத் தழுவியது.

புறமும் ஒத்திருத்தலேயாகும். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுதல் வஞ்சனை, என்றும், 'படிறு' என்றும் இழித்துச் சொல்லப்படும் இதனை 'நடிப்பு' என்றும் சிலசமயம் கூறுவார்கள்.

தாயுமானவரது உள்ளத் தூய்மை, அவரது உண்மை ஒழுக்கத்தில் வைத்து நன்கு அறியப்படுகின்றது. எண்ணமும் சொல்லும் ஒன்றுபட்டிருத்தலில் தமக்குள்ள ஆர்வத்தையும், அவை வேறுபட்டிருப்பதில் தமக்குள்ள வெறுப்பையும் அவர் பின்வருமாறு வெளியிடுகிறார்.

''உள்ளபடி ஒன்றை உரைக்கின் அவர்க்குள்ளுறவாய்க்
கள்ளமின்றி அன்பாய்க் களிப்பேன் பராபரமே''

''உள்ளம்அறி யாதொருவர் ஒன்றைஉன்னிப் பேசில்ஐயோ
துள்ளியிளங் கன்றாய்த் துடிப்பேன் பராபரமே''

மணிவாசகர் விளக்கம் :

உண்மை உள்ளம் உடையவர்களுக்குத்தான் தாங்கள் சொல்லும் சொற்களும், செய்யும் செயல்களும் நல்லனவாய் இருப்பினும் தங்கள் உள்ளம்இன்னும் அவ்வளவாக அவைகளில் தோயவில்லை என்றும், அதனால் அந்தச் சொற்களும், செயல்களும் சில நாடகங்கள்போல உள்ளன என்றும் தோன்றும்.

''நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்''

என்ற மணிவாசகர் வாக்கு இதற்குச்சான்றாகும் மணிவாசகற்கு உள்ளம் அன்பினால் நெக்கு நெக்குருகினாலும், அன்பும் கண்ணீர் அருவி போலச் சொரிந்தாலும், 'உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாய் உருகவேண்டும்; உடம்பெல்லாம் கண்ணாய் வெள்ளம் பாயவேண்டும்' என்று விரும்புகின்ற அவருக்குத் தமது உள்ள உருக்கமும், கண்ணீர்ப்பெருக்கும் வெறும் நாடகமாய்த் தோன்றின. அதனால், 'எனது நெஞ்சம் கல்; கண் மரக்கண்' என்று கூறினர்.

தாயுமானவரது நிலையும் அத்தகையதே. அதனைப் பின் வரும் பகுதியால் அறியலாம்.

" கண்ணார நீர்மல்கி உள்ளம்நெக் குருகாத
கள்ளனேன் ஆனாலுமோ
கைகுவித் தாடியும், பாடியும் விடாமலே
கண்பனித் தாரை காட்டி
அண்ணா ! பரஞ்சோதி ! அப்பா ! உனக்கடிமை
யான் எனவும் மேல்எழுந்த
அன்பாகி நாடகம் நடித்ததோ குறைவில்லை
அகிலமும் சிறிதறியுமேல்
தண்ணாரும் நின்னதருள் அறியாத தல்லவே "

என்று முறையிடுகின்றார். ஆனால், உண்மையில் அவர் கள்ளத்தனம் உடையவரா? அவருடைய சொல்லும், செயலும் நாடகங்களா ? அல்ல அல்ல. சில லட்சரூபாய் சேர்த்தவன் கோடிரூபாய் உடையவனைப் பார்த்துத் தன்னை 'ஏழை'என்று எண்ணுகின்றான். அதே நிலைதான் அருள் வேட்கையிலும் உள்ளது. அதனால்தான் இத்தகைய வாக்குகள் தோன்று கின்றன.

அருள் வேட்கை :-

தாயுமானவரது வரலாற்றை நோக்குவோமேயானால், அவருக்கு இத்தனை அருள்வேட்கை தோன்றியது வியப்பைத் தருகின்றது.

தாயுமானவர், வேதாரணியம், என்னும் திருமறைக் காட்டில் வாழ்ந்த கேடிலியப்பப் பிள்ளை என்னும் பெருமகனார்க்கு அவரது தவத்தால் இரண்டாம் மகனாராகத் தோன்றினார். முதல் மகனார் 'சிவசிதம்பரம்' என்பவரைக் கேடிலியப்பப்பிள்ளை தம் தமையனார்க்குச் சுவீகாரமாகக் கொடுத்துவிட்டார். பின்பு திருச்சிராப்பள்ளியை அக்காலத்தில் ஆண்ட முத்துகிருஷ்ண நாயக்கரது அழைப்பிற்கு இணங்கி அங்குச்சென்று தலைமைக் கணக்கு அலுவல் பார்த்துவந்த அவருக்கு அடுத்த மகப்பேறின்மையால், திருச்சிராப்பள்ளித் தாயுமானப்பெருமானைவேண்டி அவர் அருளால் பெற்றதம் இரண்டாவது மகனார்க்கு அப்பெருமானது திருப்பெயரையே இட்டார். தந்தையாருக்குப்பின் அவரது அலுவலைப் பார்த்து

வந்த தாயுமானவர் ஆன்மலாபத்தைப் பெறுவதிலேயே விருப்பமுடையவராக இருந்தார். திருச்சிராப்பள்ளி மௌன மடத்தைப் பரிபாலித்து வந்த மௌன குருவிடம் தம் கருத்தைத் தெரிவித்துத் தீட்சையும் உபதேசமும் பெற்றுச் சீடராயினார்.

அவர் அலுவல் பார்த்த காலத்தில் இருந்த அரசியின் தகாத அன்பினால் தானே கிடைக்க இருந்த பொருள் வசதியையும், இன்பத்தையும் துச்சமாகத் துறந்து அலுவலையேவிட்டுத் தம் சொந்த ஊராகிய வேதாரணியத்திற்குச் சென்றுவிட்டார் என்றால், அவரது உள்ளத் தூய்மையை என்னென்று உரைப்பது. அத்தகைய பெரியார் ஒருவரை அண்மைக் காலத்தில் தமிழகம் பெற்றிருந்தது என்பதை நினைத்தால் எத்தகைய தமிழ் மகனின் உள்ளமும் உருகாது இராது.

வேதாரணியம் சென்றபின் இவருக்கு இவர் தம் தமையனார் திருமணம் செய்வித்தார். தம் குரு ஆணைப்படி அதனை இவர் ஏற்று வாழ்ந்தார், ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது, இதையும் தாயுமானவர் இறைவனது திருவிளையாட்டாகவே கருதினார் என்பது பின் வரும் பாடற்பகுதியால் தெரிகின்றது.

'' பத்தி யாய் நெடிது நம்பும் என்னை ஒரு
மையல் தந் தகில மாயையைப்
பாரு பார் என நடத்த வந்த தென
பாரதத் திலும் இதுள்ளதோ?
... ...
என் சித்தம் இப்படி மயங்குமோ ? அருளை
நம்பினோர்கள் பெறு பேறிதோ ''

என்கிறார்.

திருவருள் நாட்டம்:

அடிகள் இறைவன் திருவருள் ஒன்றையே விரும்பி அதனை எடுத்த தேகம் விழுமுன்னே கைவரப் பெறல் வேண்டும் என்ற அதி தீவிரமான அருள் வேட்கையை உடையவராய் இருந்தார் என்பது ஒன்றே அவருடைய பாடல்களில் மிகப் பலவான இடங்களில் காணப்படுவது.

" இனியே தெமக்குனருள் வருமோ எனக்கருதி
ஏங்குதே நெஞ்சம் ஐயோ !
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பர் என்று
எண்ணவோ திடமில்லையே
அநியாய மாய்இந்த உடலைநான் என்றுவரும்
அந்தகற் காளாகவோ ?
ஆடித் திரிந்துநான் கற்றதும் கேட்டதும்
அவலமாய்ப் போதல் நன்றோ "

எனவும்,

" காய், இலை, உதிர்ந்த கனி, சருகு, புனல் மண்டிய
கடும்பசி தனக்கடைத்தும்
கார்வரையின் முழையில் கருங்கல்போல் அசையாது
கண்மூடி நெடிதிருந்தும்
தீயினிடை வைகியும் தோயமதில் மூழ்கியும்..."

இப்படியெல்லாம் பலவாறு வருந்தி

"அறிஞர்
ஆயும் மறை முடிவான அருள்நாடினார் அடிமை
அகிலத்தை நாடல் முறையோ "

எனவும் வருவன போல்பவை அடிகளது உள்ள நிலையை அங்ஙனமே படம் பிடித்துக்காட்டும். அடிகள் தமது உடமொழி தென்மொழி கல்விப் பெருக்கினால் பெருமையும், பொருளும் பிறவும் அடைய விரும்பவில்லை. அக்கல்வியின் பயனாக ஆண்டவனது அருள் ஒன்றையே பெற விரும்பினார் என்பது மேற்கண்ட பகுதியால் விளங்கும்.

இறைவனோடு இரண்டறக் கலத்தலாகிய சாயுச்சிய சுத்தாத்வைத பரமுத்தியில் தமக்கு உள்ள வேட்கையால் பித்துக்கொண்டவர் போல இவர் உப்பைத் தண்ணீரிலே கரைத்துப் பார்ப்பாராம், கற்பூரத்தை ஏற்றிவைத்து அது தியால் எரிந்து மறைந்துபோவதைப் பார்ப்பாராம். இத்தகைய பரமுத்திக்கு வழிகாட்ட, "சீகாழித்துரையே சிவன் அப்பா என்றன் அருட் செல்வத் தேவே, நாவலோய் வாதவூர்த் தேவே, திருமூலத் தேவே, அருணாகிரியே" என்று இதுபோலப் பல பெரியார்களைக் கூவி அழைப்பாராம். இத்தகைய உண்மை உள்ளம் படைத்தவரது பாடல்களைப் படித்தாவது நாம் அருள்வேட்கை உடையவர்களாதல் வேண்டும்

★★★

6

தாயுமானவர் விளக்கும் சைவசமயச் சிறப்பு

'சைவசமயமே சமயம்
சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளி
காட்டும் இந்தக் கருத்தை வீட்டுப்
பொய் வந்துழலும் சமயநெறி
புகுத வேண்டா'' ... ...

—தாயுமானவர்

[சைவ சமயம் ஒன்றே ஆன்மலாபத்தைத் தரவல்லது. இவ்வுண்மை சைவத்திலும், சைவ சித்தாந்தத்திலும் பலவாறாக விளக்கப் பெற்றுள்ளது. ஆசைபற்றிக் கூறாது, அகச் சான்றுகளோடு சைவ சமயச் சிறப்பைத் தாயுமானவர் வழி நின்று குருமணி அவர்கள் விளக்கியருளும் அருட்டிறம் மகிழ்வைத் தருகிறது. சைவசமயம் ஒரு பேரரசனைப்போல் பெருமிதமாக வீற்றிருக்கும் திறத்தை இவ் வருளுரை சிறப்புறவிரிக்கிறது.]

கொள்கைப் பிடிப்பு

உலகில் எத்தகையோரும் பிறருடன் கலந்து பழகியும், பிறர் சொல்வனவற்றிற்கு மதிப்புக் கொடுத்துக் கேட்டும் வந்தாலும் தமக்கென ஒரு கொள்கை அவர்கட்கு இருத்தல் வேண்டும். அதோடு 'அக்கொள்கை சிறந்தது' என்ற

---

* அகில இந்திய வானொலியின் திருச்சிராப்பள்ளி நிலையத்திலிருந்து 'நெறி விளக்கம்' என்ற தலைப்பில் தாயுமானவர் நெறிபற்றி 11—2—1978 அன்று வழங்கியதைத் தழுவியது.

நம்பிக்கையும், பற்றும் அதில் அவருக்கு இருத்தல் இன்றியமையாததாகும். ஒரு கொள்கையை ஒருவர் பிறருக்குச் சொல்லும்பொழுது, முதலில், சொல்லுபவருக்கு அதில் பற்று இருத்தல் மிகமிக இன்றியமையாதது.

சைவத்தின் பெருமிதம்:

தாயுமானவரது ஆன்மீகக் கொள்கை சைவம் அல்லது சைவ சித்தாந்தம் என்பது தெளிவு. அதில் அவருக்கிருந்த ஆர்வமும், பற்றும் அளவிடற்கரியன. அவர் அனைத்துச் சமயங்களையும் மதித்து அவற்றில் உள்ள உண்மைகளை ஏற்கின்ற ஒரு சமரச நிலையை உடையவர். ஆனால் அதே சமயத்தில் அவர் சைவத்தைத் தமது ஆன்மார்த்த சமயமாகக் கொண்டிருந்தார் என்பது நன்கு அறியப்பட்டதொன்று. 'சைவ சமயம் ஒன்றே ஆன்ம லாபத்தைத் தருவது' என்பது அவரது உறுதியான நம்பிக்கை அதனை அவர் தமது பாடல்களில் பல இடங்களில் பலவகையாக எடுத்துக் கூறியுள்ளார். தாயுமானவரது நெறியை உள்ளவாறு உணர்ந்து பின்பற்றுதற்கு அவற்றுள் ஒன்றிரண்டை நாம் நினைவுகூர்தல் நலமாகும்.

"சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டும் இந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந் தழலும் சமயநெறி புகுத வேண்டா"

என்பது அவருடைய திருப்பாடல்களுள் ஒன்றின் பகுதி. சைவத்தின் சிறப்பை இதை விட ஒருவர் தெளிவாகச் சொல்ல இயலாது.

'சமயம்' என்பது பரம்பொருளை அல்லது மெய்ப் பொருளை அடையச் செய்வது. ஆனால், 'சமயம்' என்று தோன்றியவை பலவும், ஒன்று சொல்வதை மற்றொன்று மறுத்துத் தாம் வேறு ஒன்றைக் கூறும் வாதங்களாகவே அமைந்துவிட்டன. அதனால் 'சமயம்' என்றாலே 'வாதம்' என்று ஆகிவிட்டது. இதுபற்றியே மாணிக்கவாசகர்,

"சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்"

என்று அருளினார். தாயுமான அடிகளும்,

''போதித்த சமயமோ
ஒன்றுசொன படிஒன்று பேசாகு''

என்றார்.

''ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்''

என்று திருவள்ளுவமாலையில் ஒரு பாட்டு உள்ளது. இதனால் 'பரம்பொருள்' அல்லது 'மெய்ப்பொருள்' என்பது சமயங்களுக்கு அப்பாற்பட்டதாகவே ஆகிவிட்டது. அதனையே இங்கு அடிகள் ''சமயாதீதப் பழம் பொருள்'' என்றார்.

சமயம் என்பதே சைவம்:

சமயங்களின் நிலை இதுவாயினும், அவைபோலச் சமயத்தின் ஆதி நோக்கத்தை விடுத்து வாதங்களிலே புகாமல் மெய்ப்பொருளை அடைச்செய்யும் நிலையை உடையதாய் இருப்பது சைவ சமயம் என்பதையும், அதனால் 'சமயம்' என்பதற்கு உண்மைப் பொருளாய் உள்ளது சைவமே என்பதையும்அடிகள்,

''சைவ சமயமே சமயம்''

''சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே காட்டும்''

என்றார். இதற்குமேல்,

''இந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந்துழலும் சமயநெறி புகுத வேண்டா''

என்றும் கூறுகின்றார் என்றால் உண்மை உணர விரும்புவார்க்கு இதைவிட இன்னும் என்ன கூறவேண்டும்?

காரணம் காட்டுதல்:

இனி அடிகள், ''சைவ சமயமே சமயம்'' என்று இவ்வாறு, பொதுவாகச் சொல்லியதனோடு நின்றுவிடவில்லை. அதற்குரிய காரணங்களையும் ஓரளவு எடுத்து விளக்குகிறார். அவற்றுள்,

''யாது சமயமும் வணங்கும் இயல்பதாகி''

என்பதும் ஒன்று. மற்றும்,

''இயல்பென்றும் திரியாமல் இயமமாதி
எண்குணமும் காட்டி அன்பால் இன்பமாகிப்
பயனருளப் பொருள்கள் பரிவார மாகிப்
பண்புறவும் சௌபான பட்சம் காட்டி
மயலறு மந்திரம் சிட்சை சோதிடாதி
மற்றங்கநூல் வணங்க மௌன மோலி
அயர்வற்ச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில்
அமர்ந்தது வைதிக சைவம் அழகிதந்தோ''

என்கின்றார். சைவம் சைவாகமத்தின் வழிவந்தது. சைவாகமம் வேதத்திற்கு மாறாக எழுந்தவை அல்ல. வேதத்தின் விளக்கமாகவே எழுந்தன அதனால் சைவம், வைதிகசைவம் எனப்படுகின்றது. வேதம் தழுவியும் தழுவாதும் எழுந்த சமயங்கள் பல. சைவமே வேத சாரமாய் இருத்தலால் அது சமயங்களாகிய பிரஜைகளுக்கெல்லாம் அரசனாய் ஆட்சி செய்கின்றது. என்றும் அந்த அரசனுக்குப் பேசா அழகுபூதியாகிய மோன ஞானமே கிரீடம் என்றும், சிட்சை, கற்பம், சோதிடம் முதலிய வேதாங்கங்கள் அவனுக்குப் பணியாளர்கள் என்றும், அறம் பொருள் இன்பம் வீடுஎன்னும் புருடார்த்தங்களே அவனுக்குப் பரிவாரங்கள் என்றும், தன்னை அடைந்தவர்கட்கு அவ்வரசன் அவரது பக்குவத்திற்கு ஏற்ப இம்மை மறுமை நெறிகளையும். சரியை. கிரியை யோகம் என்னும் தவங்களையும் தந்து அவற்றிற்கு ஏற்ற பயனை அடையச்செய்து, முடிவில் அவன் பக்தி ஞானம் இவை வாயிலாகப் பேரின்பப் பயனை அடையச் செய்கின்றான் என்றும் இவ்வாறெல்லாம் அடிகள் விரித்துக் கூறுகின்றார். இதனால், சைவ சமயம் ஒரு பேரரசனைப் போலயார் எது வேண்டினாலும்அதை அதற்குரிய வழியிலே சென்று பெறச் செய்வதாய் உள்ளது என்பதையும், சைவத்தை அடைந்தவர் எந்த ஒரு நல்லபயனையும் இழக்க வேண்டுவதில்லை; அவற்றோடு கூட, எல்லாப் பயன்களுக்கும் மேலான பயனாகிய வீட்டின் பத்தையும் அடையலாம்என்பதையும் அடிகள் விளக்கு கின்றார்.

யாவர்க்கும் பற்றுக்கோடு :

இதனை அடுத்து அடிகள் ''அணிமாதி அட்டமாசித்தி பெற்றவர்களானாலும், நிஷ்டாநுபூதிநிலையிலே நிற்பவர்

களானாலும், இந்திராதி பதவிபெற்ற போகிகளானாலும் அவர் யாவர்க்கும் சைவ சமயம் தவிர வேறு தாயகம் இல்லை; இல்லை'' என்று வலியுறுத்திக் கூறுகிறார். சைவ சமயத்தைப் பற்றி அடிகள் வெளியிடும் மற்றும் ஓர் அரிய கருத்தை இன்றியமையாது குறிப்பிடல் வேண்டும். அது,

> ''சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
> சமய சங்கேதப் பொருளும் தான் ஒன்றாகப்
> பன்மார்க்க நெறியினிலும் கண்டதில்லை''

என்பது. அஃதாவது, 'சைவ சமயத்தில் வகுக்கப்பட்டுள்ள கிரியா முறைகள் யாவும் ஞானமுறையிலேயே அமைந்திருத்தல் போல வேறு எந்தச் சமயத்திலும் இல்லை' என்பது. இவ்வாறாகக் கூறும் அவர் வாக்குகளை உணர்ந்தேனும் சைவத்தின் சிறப்பை உணர்தல் மக்கள் கடனாகும்.



7

காஞ்சி, ஐயாறு, ஆரூர்*

"எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ"

— திருநாவுக்கரசர்

[காஞ்சிபுரம், திருவையாறு, திருவாரூர் ஆகிய மூன்று தலங்களுக்கும் இடையே நிலவும் பொதுமையினை மிகநுட்பமாக ஆய்ந்து குருமணி அவர்கள் இங்கே வெளிப்படுத்தியருளியுள்ளார்கள். திருக்கோயில்களும், திருமடங்களும் சைவத்தின் இருகண்களாக விளங்கும் திறமும், திருக்கயிலாய பரம்பரையின் தொன்மைச் சிறப்பும் முறையாக அருளிச் செய்யப் பெற்றுள்ளன]

காஞ்சிபுரம் ஐயாறு ஆரூர்:

எல்லாம் வல்ல இறைவன் மண் புனல் அனல் கால் வெளி ஞாயிறு திங்கள் உயிர் ஆகிய எண்வகை வடிவங்களைக் கொண்டு விளங்குகின்றான். இவ்வெண்வகை வடிவகங்களையும் அஷ்டமூர்த்தங்கள் என்று கூறுவர்.

---

* காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் 230ஆவது குருமகாசந்திதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் பீடாரோகண விழாவிற்குக் குருமணி அவர்கள் 12—2—78 அன்று எழுந்தருளியபோது வழங்கியருளியது.

திருவையாறு காஞ்சிபுரம் ஆகிய இருதலங்களிலும் இறைவன் மண் வடிவில் விளங்குகின்றான். இவ்விரு தலங்களிலும் உள்ள சிவலிங்கங்கள் பிருதிவியாலானவை என்பதை அன்பர்கள் பலரும் அறிவார்கள். இதனால்தான் அப்பர் திருவையாற்றையும் காஞ்சிபுரத்தையும் இணைத்துப் பேசுகின்றார். அதைப்போல் மணிவாசகப்பெருமானும் ஆரூர் இறைவனையும் ஐயாற்றிறைவனையும் இணைத்து,

"ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவையாறா போற்றி".

என்று அருளிச்செய்கின்றார். பஞ்ச பூதத் தலங்களில் திருவாரூர் பிருதிவித்தலமாக விளங்குவது. அங்குள்ள பெருமான் வன்மீகநாதர் என்றும், தமிழில் புற்றிடங் கொண்டார் எனவும் வழங்கப்பெறுவார்.

காஞ்சிபுரம் :

காஞ்சிபுரம் வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மையான நகரம். பெரியபுராணத்தில் திருக்குறிப்புத்தொண்ட நாயனார் வரலாற்றில் தொண்டை நாடாகிய இந்நாட்டின் சிறப்பையும் இந்நாட்டின் தலைநகரமாகிய காஞ்சிமாநகரின் பெருமையையும் விரித்துரைக்கின்றார் சேக்கிழார். அன்னை காமாட்சி இறைவன்பால் இருநாழிநெல்பெற்று முப்பத்திரண்டு அறங்களைச் செய்த சிறப்பையும், சிவலிங்கப்பெருமானைப் பூசித்து வளைத்தழும்பும் முலைத்தழும்பும் பொருந்த வழிபட்ட பெருமையையும் இத்தலம் பெற்றுள்ளது. எங்கு நோக்கினாலும் சிவாலயங்களாகத்திகழ்வது இந்நகரின் தனிப்பெருமையாகும்.

சக்தியைச் சிவத்தோடு சேர்த்தே வழிபட்டனர் நம் முன்னோர். திருக்கோயில்களில் உள்ள சிவலிங்கம் சக்தி சிவம் இரண்டுமிணைந்த வடிவமாகும். முற்காலங்களில் கோயில்களை அமைத்த ஞானியர்களும் மன்னர்களும் நம் முன்னோர்களும் சிவலிங்கத்தை மட்டுமே கோயில்களில் மூலமூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்தனர். சக்தியைத் தனியே பிரித்துத் தனி வடிவமாக அமைத்து வழிபடும் முறை பிற்காலத்தில் தான் ஏற்பட்டது என்பர் வரலாற்றறிஞர். காஞ்சிபுரத்தில் உள்ள ஏகாம்பரநாதர் கோயில் தனியே உள்ளது. ஆலயத்தில் அம்பாள்கோயில் இல்லை. அம்பாள் இல்லாத இத்தகைய கோயில்கள் இத்தலத்தில் ஐந்து உள்ளன. ஏலவார்குழலி

என்ற திருப்பெயருடன் அம்பாள் செப்புத்திருமேனியாகவே ஏகம்பர் கோயிலில் காட்சியளிக்கிறார். மூலவிக்கிரக அம்பாள் கோயில் இல்லை என்பது, இக்கோயில்களின் பழமையையும். ஆதியில் அம்பாள் வழிபாடு தனியே இல்லை என்பதையும் புலப்படுத்தும். மொகஞ்சதரோ அகழ்வாய்வும் இதற்குத் துணைசெய்கின்றது.

சோமாஸ்கந்தவடிவம் :

இறைவனுடைய மகேஸ்வரமூர்த்தங்கள் இருபத்தைந்தில் சோமாஸ்கந்தர் வடிவமும் ஒன்றாகும். சோமஸ்கந்தர் என்பதற்கு உமையோடும் முருகனோடும் கூடியவர் என்பது பொருள் வலப்புறம் சிவபெருமானும் இடப்புறம் அம்பிகையும் எழுந்தருளியிருந்து, நடுவில் முருகப்பெருமானை வைத்து மகிழும் நிலையில் விளங்கும் இத்திருவுருவம் கோயில்கள்தோறும் விளங்குவதைக் காணலாம்.

காஞ்சிபுரத்தின் கோயிலமைப்பு சோமாஸ்கந்த வடிவ அமைப்பை நமக்கு விளக்கும் நிலையில் அமைந்திருப்பது அறிதற்குரியது.

வலப்புறம் ஏகாம்பரநாதர் கோயிலும், இடப்புறம் காமாட்சியம்மை கோயிலும், நடுவில் குமரகோட்டமும் அமைந்துள்ளதை இன்றும் கண்டு மகிழலாம்.

உண்மை அறிவு ஆனந்தம் என்ற மூன்றுநிலையில், சச்சிதானந்த வடிவாய் இறைவன் இத்தலத்தில் விளங்குவதை நாம் உணர வேண்டும். சத்து – உண்மை. அதாவது என்றும் உள்ளது. அதுவே சிவம். சித்து – அறிவு. அதுவே சத்தி. ஆனந்தம்-இன்பம். அதுவே முருகன். சத்து, சித்து ஆனந்தமே சச்சிதானந்த சொரூபமாக விளங்குகிறது. நாம் வணங்கி வழிபடும் இறைவன் என்றும் உள்ள உண்மைப்பொருளாகவும், என்றும் உள்ள அறிவுப்பொருளாகவும், என்றும் உள்ள இன்பப்பொருளாகவும் உள்ளான் என்பதைச் சச்சிதானந்தம் என்ற பெயரும், சோமாஸ்கந்தவடிவமும் உணர்த்துகின்றன.

திருக்கோயில்களும் திருமடங்களும் :

திருக்கோயில்களும் திருமடங்களும் சைவத்தின் இரு கண்கள் போல விளங்குவனவாகும். இவ்விரண்டையும்

பேணிக்காத்து வளர்த்தால்தான் சைவம் வளரும். தமிழ் நாட்டில் சைவசமயத்தைப் பேணிக் காக்கும் பெரும் பொறுப்பை மேற்கொண்ட சைவ ஆதீனங்கள் பதினெட்டு இருந்தன. அவற்றுள் பல ஆதீனங்கள் இன்று பெயரளவில் தான் உள்ளன. சில ஆதீனங்களே நல்ல நிலையில் உள்ளன. திருக்கயிலாய பரம்பரைத் தொடர்போடு வழிவழியாக உபதேசபரம்பரையில் வரும் இத்திருமடங்கள் மக்களுக்கு அறநெறிகளை அருளி அவர்களை நல்வழிப்படுத்தும் தொண்டுகளைச் செய்துவருகின்றன.

கயிலாய பரம்பரை :

கயிலாய பரம்பரை, நந்தி மரபு, மெய்கண்ட சந்தானம் என்ற அடை மொழிகள் திருமடங்களின் பாரம்பரியத்தை விளக்குவனவாகும். திருக்கயிலாயத்தில் இறைவன் நந்தி தேவர்க்கு ஞானமார்க்கமான பல உண்மைகளை உணர்த்தி அருளினார். நந்திதேவர் தாம் பெற்ற அவ்வுபதேசங்களைச் சனற்குமார முனிவர்க்கு வழங்கினார். அவர் சத்தியஞான தரிசனிகளுக்கும் அவர் பரஞ்சோதிமா முனிவர்க்கும் உணர்த்தி அருளினார் நந்தி தேவர் முதலாக வரும் இம்மரபே நந்தி மரபு எனப்படும். நந்திதேவர் முதலிய இந்நால்வரும் திருக்கயிலையில் விளங்கும் ஆசாரியர்கள். இவர்கள் அகச் சந்தானகுரவர் எனப்படுவர்.

மெய்கண்டசந்தானம் :

அகச்சந்தான குரவர்களில் நான்காமவராகிய பரஞ்சோதி மாமுனிவர் தாம் பெற்ற அருள் உபதேசங்களை நிலவுலகில் மெய்கண்டாருக்கு உணர்த்தியருளினார். மெய்கண்டார் முதலாக அவ்வுபதேச பரம்பரை அருணந்திசிவம், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நால்வர் வழியே உலகில் நன்கு நிலைபெறுவதாயிற்று. மெய்கண்டார் முதலாகவரும் இவ் வுபதேச பரம்பரையை மெய்கண்ட சந்தானம் எனக்கூறுவர். இவ்வுபதேச பரம்பரை சைவ ஆதீனங்களில் நின்றுநிலவி உலக மக்களுக்கு உய்யும்நெறி காட்டி வருகின்றது.

ஞானவேட்கை:

திருமடங்களின் தலைவர்களாய், மகாசந்நிதானங்களாய் விளங்கும் ஆசாரியர்கள் தங்களை நாடிவரும் அன்பர்களுக்கு அருளுபதேசங்கள் செய்து அவர்களை நன்னெறிப்படுத்தும் பணியை ஆற்றி வருகின்றனர்.

அன்பு மிகவுண்டாய் அதிலே விவேகமுண்டாய்த்
துன்ப வினையைத் துடைப்பதுண்டாய் — இன்பம்
தரும்பூ ரணத்துக்கே தாகமுண்டாய் ஓடி
வருங்கா ரணர்க்குஉண்மை வை.

என்பது நமது ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீ குருஞான சம்பந்தர் திருவாக்கு. ஞான வேட்கை உடையவராய்த் தம்மை வந்தடையும் அன்பர்கட்கு உபதேசம் செய்வதோடு அமையாது சென்று நடாத்தும் தண்டத்தலைவர்கள் போலப் பல இடங்களுக்கும் சென்று மக்களுக்கு அறிவுரை கூறி அருளுபதேசங்கள் வழங்கும் பணியையும் மகாசந்நிதானங்கள் செய்து வருகின்றனர்.

தொண்டைமண்டல ஆதீனம் :

காஞ்சிபுரத்தில் விளங்கும் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் ஆதீனம் மிகப்பழமையான ஆதீனங்களில் ஒன்றாகும். மெய்கண்டாரிடம் அருளுபதேசம் பெற்ற பரம்பரையில் வந்த சிற்றம்பல நாடிகளின் வழியில் வந்த ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளால் இவ்வாதீனம் தோற்றுவிக்கப்பெற்றுள்ளது. இத்திருமடம் தொண்ட மண்டல முதலியார்களின் ஆசாரிய பீடமாக விளங்கி வருதல் குறிப்பிடத் தக்கதாகும். இத்திருமடத்தின் ஞானபீடத்தை அலங்கரித்து முதுபெரும் புலவராக விளங்கிய 229ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அண்மையில் பரிபூரணமானார்கள்.

அவர்கட்குப் பின்னர் இவ்வாதீனக் குருத்துவத்தையும், பரிபாலனத்தையும் தக்கவர் ஒருவரிடம் ஒப்படைக்கவேண்டுமென்று நம் அன்பர்கள் திரு.வி.கே இராமசாமி முதலியார். திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் முதலியோர் விரும்பினர். கோவையில் பெரிய புராணப் பேருரையாளராக சிவக்கவிமணியாக விளங்கிய திரு. சி. கே சுப்பிரமணிய முதலியார் அவர்களின் உறவினரும், பிரமசரிய விரதத்தைக் கடைபிடித்து வாழ்ந்து வருபவரும், சமயநூல்களில் மிக்க ஆர்வமும் புலமையும் உடையவருமாகிய அன்பர் ஞான சம்பந்தன் என்பவரைத் தேர்ந்தெடுத்து, தருமையாதீனத்திற்கு அனுப்பிவைத்தனர். காஞ்சி ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளின் பீடத்துக்கு உரியவராதற்குள்ள பயிற்சி அளிக்கும்படி நம்மிடம் கேட்டுக்கொண்டனர். அவர்கள்

விரும்பியவாறே இவர்களுக்குத் துறவுநிலை வழங்கித்தீட்சைகள் செய்வித்து ஆதீன சம்பிரதாயங்கள் பலவற்றையும் விளக்கிப் பயிற்சி அளிக்கப்பெற்றது. இன்று இவர்களுக்குத் தொண்டை மண்டல ஆதீன சம்பிரதாயப்படி ஆசாரியாபிஷேகம் நமது முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றதை எல்லோரும் கண்டு மகிழ்ந்திருக்கிறீர்கள்.

அன்பர்கள் பலரும் இப்பழமையான ஆதீனம் மறுமலர்ச்சி யுற்றுத்திகழ்வதற்குத்தங்களாலான ஆக்கத்தையும் ஊக்கத்தை யும் வழங்கிடவேண்டும். புதிதாக ஒருமடம் அமைப்பதைவிடப் பழமையான ஒரு திருமடத்தை வளர்ப்பதே பெரும்புண்ணியம் ஆகும். அன்பர்களும், அறநிலையத்துறையினரும், இத்திரு மடத்தின் சீடர்களும் இத்திருமடத்தின் வளர்ச்சிப்பணிகளுக்கு உதவிசெய்து நலம் பெறுவார்களாக.

இன்று 230 ஆவது குருமூர்த்திகளாகப் பொறுப்பேற்றுள்ள காஞ்சி ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள், ஆதீனத்தை வளப்படுத்தி நீடு வாழவும், இவ்வாதீன வளர்ச்சிப்பணிகளில் பங்குபற்றும் அன்பர்களுக்கு எல்லா நலன்களும் உண்டாகவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவடிகளைச் சிந்திக்கின்றோம்.

8

தற்செயல்*

" இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்
உழவாரத்தின்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே
பதித்தநெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும்
துதித்து வாழ்வோம்

—சிவஞான சுவாமிகள்

[திருவாமூரில் அப்பருக்கோர் ஆலயங்கண்டு அருளிய தருமை 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஆண்டுதோறும் சித்திரைச் சதயநாளில் திருவாமூருக்கு எழுந்தருளும் நியம முடையவர்கள். குருபூசை என்றால் என்ன? அதன் இன்றியமையாமை யாது? என்பனவற்றை விளக்கி, அப்பரடிகள் வழங்கியருளிய அரிய அறவுரைகள் பலவற்றையும் குருமணி அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியுள்ளார்கள். இறைவன் அறிவித்தாலன்றி உயிர்கள் அறியா என்பதை 'என்னை ஏதும் அறிந்திலன்' என்ற திருக்குறுந் தொகை பாடல்வழி நுட்பமுறவிளக்கிக்காட்டும் அருளிப்பாடு சிந்தனைக்கு விருந்தாகிறது]

குருபூஜை:

எல்லாம்வல்ல இறைவன் உயிர்களுக்குக் கண்முன் தோன்றி அருளுதற்குக் கொண்ட வடிவம் குருலிங்க சங்கமம் என

* 2—5—78 அன்று திருவாமூரில் நடைபெற்ற ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாவில் வழங்கியருளியது.

மூவகைப்படும். இறைவனை இம்மூவகைத் திருமேனிகளில் வழிபடுவதை முத்திற வழிபாடு எனக்குறிப்பிடுவர் பெரியோர். பெரிய புராணத்துள் கூறப்படும் அறுபான் மும்மை நாயன்மார்களும் இம்மூவகை வழிபாட்டு நெறிகளை மக்கட்கு உணர்த்தியருளிய பெரியோர்களாவர்

இறைவனை வழிபடும் மூவகை வழிபாடுகளில் முதலாவ தாகக் கூறப்படுவது குரு வழிபாடு. குரு என்பதற்கு அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை அருள்பவர் என்பது பொருள். குரு தீக்ஷா குரு, வித்தியா குரு, போதக குரு என மூவகைப்படுவர். சைவசமய வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கி, உபதேச மொழிகளால் உலக மக்களின் ஈடேற்றத்திற் குரிய அறவுரைகளை அருளி, இறைவன் திருவடிகளில் நம்மை ஈடுபடுத்தியருளிய அவ்வாசாரியர்களை நாடோறும் நாம் நன்றியறிதலோடு சிந்தித்துப் போற்றுதல் வேண்டும். அப் பெரியோர்களைநாம் நாடோறும் போற்றுதலோடு அமையாது அவர்கள் இறைவன் திருவடி கூடிய நன்னாளைச் சிறப்பாகக் குருபூசைத் திருநாளாகக் கொண்டாடி மகிழ்தலும் வேண்டும்.

இன்று அப்பர் சுவாமிகள் குருபூசைத் திருநாள் இன்றைக்கு ஆயிரத்துமுந்நூறு ஆண்டுகளுக்குமுன் இவ்வூரில் திருவவதாரம் செய்து சமணம் முதலிய புறச் சமயங்களைக் களைந்து சைவப் பெருநெறியை இந்நாட்டில் தழைக்கச் செய்தருளிய திருத் தொண்டின் நெறியோடு தேவாரத் திருமுறைகளை நமக்கு வழங்கி இறைவனடி கூடிய அப்பர் பெருமானை அவர் திருவவதாரம் புரிந்த இப்மண்ணிலிருந்து போற்றும் பெரும் பேற்றை இன்றுநாம் பெற்றிருக்கிறோம். இத்தகைய அருளாளர்களைச் சிவமாகவே கருதி வழிபடுதல் நம் சமய மரபாகும்.

குருவே சிவம்:

தத்துவாதீதனாக விளங்கும் பரம்பொருள் உயிர்களை ஆட்கொண்டு அவர்கட்கு நலம் செய்யும் பொருட்டுத் தத்துவங்களை உயிர்களுக்குப் படைத்தளித்துதவுகிறான். தத்துவங்கள் கருவிகள் எனப்படும். அத்தத்துவங்கள் ஆன்ம தத்துவம் 24, வித்தியாதத்துவம் 7, சிவதத்துவம் 5, ஆக முப்பத்தாறாகும். இவற்றின் உட்பிரிவுகள் 60 வகைப்படும். அனைத்தையும் கூட்டி மண்முதல் நாதமீறாக 96 தத்துவங்கள் எனக் கூறுவர்.

நாதம் - சிவம் விளங்குமிடம். விந்து, சக்தி விளங்குமிடம் சாதாக்கியம், குருவின் இருப்பிடமாகும். தத்துவ அமைப்பில் குரு மூன்றாவது தத்துவத்தில் விளங்குகின்றார். புவனாம்பிகை கலைஞான தீபம் என்ற நூலில்,

பேராத மும்மலம் பேர்த்துத் திருவடிப் பேறுநல்கி
வாரா தெவர்க்கும் அரிதாய உண்மையின் வாழ்வருளித்
தீராத வல்வினை தீர்த்த குருவின் திருவுருக்கொண்(டு)
ஆராத இன்பச் சுகாதீதம் நல்கினள் அம்பிகையே.

என்னும் பாடலில் அம்பிகையே குருவாக வந்து நம்மை ஆட்கொண்டருளுகின்றாள் என்ற கருத்தை அந்நூலாசிரியர் தெரிவித்துள்ளதை நாம் உணரலாம். சிவம் குருவாக வருவது போலவே அடுத்த நிலையில் அம்மையும் குருவாக வந்து ஆட்கொள்வதை இப்பாடல் தெரிவிக்கின்றது.

மூவகை உயிர்கள்:

உலகில் காணப்படும் உயிர்கள் தகுதியால் மூவகைப் படுவர். ஒருமலமுடைய உயிர்கள் விஞ்ஞானாகலர் எனப் பெறுவர். இவர்களுக்கு இறைவன் உள்நின்று உணர்த்துவான். இருமலமுடைய உயிர்கள் பிரளயாகலர் எனப்படுவர். இவர் கட்கு இறைவன் மான் மழு முதலியவற்றோடு காட்சியருளி ஆட்கொள்வான். மும்மலம் உடையவர்கள் சகலர் எனப் படுவர். இவர்களை இறைவன் குருவாய் வந்து ஆட்கொண் டருளுவான் என்று கூறுகின்றன நமது சாத்திர நூல்கள். அருளாளர்கள் பலரும் தம்முடைய ஆசாரியர்களைச் சிவ மாகவேகருதி வழிபட்டதைக் காணலாம். அருணந்தி சிவாசாரி யர் தமது ஞானாசிரியராகிய மெய்கண்டாரைச் சிவமாகவே கருதி வழிபட்டார் என்பதை,

கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி
மண்ணிடையில் மாக்கள் மலமகற்றும்-வெண்ணெய்நல்லூர்
மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்துக் கண்

என்ற பாடலால் உணர்த்தியருளுகின்றார். நாமும் நம் சமயா சாரியர்களையும், சந்தானாசாரியர்களையும் சிவமாகவே கருதி வழிபடவேண்டும்.

அப்பர் அறவுரை :

திருநாவுக்கரசு சுவாமிகள் உலகிற்கு வழங்கிய அறவுரைகள் பன்னிரு திருமுறைகளில் 4, 5, 6 ஆவது திருமுறைகளாக விளங்குகின்றன. நான்காம் திருமுறை பல்வகைப் பண்களையும் கொண்டுள்ள பதிகங்களின் தொகுப்பு ஆகும். 5 ஆவது திருமுறை திருக்குறுந்தொகைப் பதிகங்களைக் கொண்டும், 6 ஆவது திருமுறை திருத்தாண்டகப் பதிகங்களைப் பெற்றும் திகழ்கின்றன.

திருநாவுக்கரசு சுவாமிகள் 5 ஆம் திருமுறையில் அருளிச் செய்துள்ள அறவுரை ஒன்றை இங்கே சிந்திப்போம்.

உலகில் வாழும் மக்களில் பலர் பின்வரும் கேள்வியை எழுப்புவர். கடவுளை நாமே நினைந்து வழிபடுகின்றோமா? அல்லது கடவுள் நம்மை நினைப்பித்து வழிபடும்படி செய்கின்றாரா? என்பது அக்கேள்வி. இக்கேள்விக்கு அப்பர் சுவாமிகள் விடை கூறும் நிலையில் ஒரு திருப்பாடலை அருளிச் செய்கின்றார். அப்பாடலைச் கூறுவதற்குமுன் சில உண்மைகளைத் தெரிந்து கொள்ளுதல் நல்லது.

சிவபெருமான் உயிர்களைத் துன்பத்தினின்றும் நீக்கிப் பேரின்பமாகிய திருவடிப் பேற்றை நல்குதற்பொருட்டு உடம்பையும் கருவிகரணங்களையும் தந்தருளுகின்றார். நடுக்கடலுள் தத்தளிக்கும் ஒருவனுக்குக் கரைசேரற் பொருட்டுத் தெப்பம் ஒன்று கொடுத்துதவுவது போலக் கருமையான ஆணவமலம் என்னும் கருவறையில் கண்ணிலாக் குழவியைப் போல் கட்டுண்டு கிடந்த உயிர்கள் அறிவு பெற்று உய்தி பெற வேண்டும் என்னும் பெருங்கருணையினால் அவ்வுயிர்கட்கு இறைவன் உடல் கருவி கரணங்கள், உலகம், அதனைத் துய்க்கும் உணர்வு ஆகியவற்றை வழங்கினான். ஆனால் அவற்றைப் பெற்ற உயிர்களில்பல, இவை இறைவனால் நாம் கரைசேர்தற் பொருட்டுத் தந்தருளியவை என்றஉணர்வின்றிக் கருவி கரணங்களைத் தீயவழிகளில் செலுத்திப் பிறந்திறந்து உழல்கின்றன.

இறைவன் உயிர்கட்கு அறிவிச்சைசெயல்கள் உண்டாக வேண்டுமென்று நினைவதனாலேயே நமக்கு அம் மூவகை ஆற்றலும் உண்டாகின்றன என்ற உண்மையை உணர்ந்தால் தான் நாம் கடைத்தேறமுடியும். அருளாளர்கள் பலரும்

இவ்வுண்மையைப் பல நூல்களினாலும் ஆங்காங்கு உணர்த்தி உள்ளனர்.

இறைவனை நினைக்கும் உணர்வை அவ்விறைவனே தந்தருளுகின்றான் என்பதை 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்று மணிவாசகரும்,

''என்னை நினைத்தடிமை கொண்டென் னிடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் — புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்''

என்ற பாடலால் நம்பியாண்டார் நம்பிகளும் உணர்த்தியருளுகின்றனர். 'கான்பார் ஆர் கண்ணுதலாய் காட்டாக் காலே' என்று அப்பரடிகளும் தெரிவிக்கின்றார். பிறிதோர் ஒளி இன்றித்தானே காண மாட்டாக் கண்போன்றது உயிர். இறைவன் உயிரிற்கலந்து பொருள்களை அறியச்செய்தால்தான் உயிர் அறியும். ஆதலின் திருவிசைப்பா ஆசிரியர் விளம்புமா விளம்பு, கருதுமாகருது, நுகருமா நுகர், நினையுமா நினை என்றெலாம் இறைவனை வேண்டுவதைக் காண்கிறோம்.

திருநாவுக்கரசு சுவாமிகள், இறைவன் அறிவித்தாலன்றி உயிர்கள் அறியா என்ற உண்மையைக் கூறும் பாடலைக் காண்போம்.

''என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்னடி யான்என்று அறிதலும்
தன்னை நானும் பிரான் என்று அறிந்தெனே''

என்பதுதான் அத்திருப்பாடல்.

'பெருமானே! நீர் உணர்த்தியருளுதற்குமுன்னால் என்னையே நான் அறியாதவனாக இருந்தேன். எனக்குத் தலைவனாக விளங்கும் உம்மையும் அறியாதவனாகவே இருந்தேன். என்பால் கருணை கொண்டு தேவரீர் என்னை அடியவனாகத் திருவுளம்பற்றியதால் நானும் என்னை உணர்ந்தேன்; உம்மையும் தலைவன் என்று அறிந்தேன்' என்பது இப்பாடலின் பொருளாகும்.

கேள்விக்குப் பதில் :

நாமே கடவுளை நினைக்கிறோமா ? கடவுள் நம்மை நினையும்படி செய்கின்றாரா ? என்ற கேள்விக்கு இப்பாடல் தெளிவான விடை தருவதை நாம் நன்குணரலாம்.

கடவுள் நம்மை நினைப்பிக்கின்றபோதுதான் நாம் அவரை உணரமுடியும் என்ற உண்மை இப்பாடலில் நன்கு தெளிவு செய்யப்படுகிறது. என்னைத் தன் அடியான் என்று அவர் நினைதலினாலேயே, நான் என்னை அடிமை என்றும் அவரைத் தலைவன் என்றும் உணரும் அறிவைப்பெற்றேன் என்று அப்பர்பெருமான் கூறியருளும் அறவுரை நமக்குச் சிறந்த உண்மையை உணர்த்துகிறது.

தற்செயல் :

அப்பர் அருளிய இப்பாடலில் மற்றொரு சிறப்பும் அமைந்துள்ளது. இப்பாடலில் வரும் தன் என்ற சொல்லுக்குச் சிவம் என்பது பொருள். தன் என்ற சொல் சிவபெருமானைக் குறிக்கும் சொல் என்பதை மெய்கண்டாரும் சிவஞானபோத அவையடக்கச் செய்யுளில் 'தம்மையுணர்ந்து தமை உடைய தன்னுணர்வார்' என்ற வெண்பாவினால் உணர்த்தியுள்ளார். உலக வழக்கில் 'தற்செயல்' என்று கூறும் வழக்கு உள்ளது. அத்தொடருக்கு இயல்பாக நடந்த நிகழ்ச்சி என்றே எல்லோரும் நினைக்கின்றனர். இறைவன் செயல் என்பதே அத்தொடரின் பொருள் என்பதை நாம் மறந்துவிடுகின்றோம். அறிந்தோ அறியாம்லோ இறைவன் செயலால்தான் எல்லாம் நடைபெறுகிறது என்று உணர்கிறபோது கடவுட் சிந்தனை வாழ்க்கையில் எவ்வளவு ஊடுருவிநின்று நலம் பயக்கிறது என்ற உண்மையை நாம் அறிந்து மகிழமுடிகிறது.

இத்தகைய பல்வேறு உண்மைகளை உணர்த்தும் திருப்பாடல்கள் அப்பர் அருளிய திருமுறைகளில் உள்ளன. தமிழ் மக்களுக்குச் சேமநிதியாகக் கிடைத்துள்ள இத்தகைய திருமுறைகளைப் போற்றிப் பயன் கொள்ளல் நம் கடமை ஆகும்.

9

மனக்கவலை நீக்கும் மருந்து*

''உனக்குப் பணிசெய்ய உன்றனைஎந் நாளும்
நினைக்க வரமெனக்கு நீதா — மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநா தா.''

— சொக்கநாத வெண்பா

[திருக்கயிலாய பரம்பரைத் திருமை ஆதீனத்தைத் தோற்றுவித்தருளிய ஸ்ரீ குருஞான சம்பந்தரின் 'உனக்குப் பணிசெய்ய' என்று தொடங்கும் சொக்கநாத வெண்பாப் பாடல் ஒன்றைத் துணைக்கொண்டு 'மனக்கவலை நீக்கும் மருந்து எது என்பதைக் குருமணி அவர்கள் மிக அழகாக இவ்வருளுரையில் விளக்கியருளுகின்றார்கள். திருவருள் துணை யின்றி மனக்கவலை நீக்கும் மருந்தில்லை என்பதை திரு ஞானசம்பந்தர் வாழ்வியலோடு ஒப்பிட்டுக் காட்டியருளிச் செய்துள்ளமை சிந்தனைக்கு விருந்தாக அமைகிறது.]

செந்தமிழ்ச் சொக்கன்:

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கத் திருமையாதீனம் நானூறு ஆண்டுகளுக்கு மேலாக நாட்டுமக்களுக்கு நற்பணி யாற்றிவருகிறது. நமது ஆதீன குருமூர்த்திகளாகிய ஸ்ரீ குரு ஞானசம்பந்தப் பெருமானுக்குக் கண்ணுக்கினியபொருளாய்க்

---

* 11—9—78 அன்று நடைபெற்ற திருமையாதீன ஆவணி மூல விழாவில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். மகராசன் அவர்களுக்கு 'இலக்கிய ரசிகமணி' என்னும் பட்டமும், பதக்கமும் அளித்து லழங்கியருளியது.

கரத்தில் வந்தருளிய செந்தமிழ்ச் சொக்கன், தருமையாதீனம் தமிழுலகில் செந்தமிழ் மொழியையும்,சிவநெறியையும் வளர்க்க அருந்துணையாயிருந்து வருகின்றார்.

சிவஞானப்பண்ணை:

தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் ஒன்றோ டொன்று தொடர்புடைய திருநகரங்களாக விளங்குவன. கமலையில் வாழ்ந்த ஸ்ரீஞானப்பிரகாசர் நெறிப்படுத்த, தருமைக்கு ஞானம் பரப்ப வந்தார் ஸ்ரீகுருஞானசம்பந்தர். அவரது ஆன்மார்த்தமூர்த்தி கூடல்மாநகர்ச் சொக்கேசன். குருநாதர் வாழ்ந்த கமலையும், குருஞானசம்பந்தர் வாழ்ந்த தருமையும், அவர்தம் ஆன்மார்த்த மூர்த்தியின் கூடல் மாநகரும் ஒருங்கே இணைத்து வழிபடற்குரிய திருநகரங்களாகத் தொடர்புகொண்டுள்ள பெருஞ்சிறப்பினவாகும்.

சிவஞானப் பண்ணையாக விளங்கும் தருமை, ஸ்ரீ குருஞானசம்பந்தரின் வருகைக்கு முன்னர் வில்வாரண்யமாக விளங்கியது. இங்குள்ள தருமபுரேசுவரர் ஆலயத்தை அகத்திய முனிவரின் சீடர்கள் பரிபாலித்து வந்தனர். பண்டே தமிழ்ப் பண்ணையாக அகத்தியர் ஆஸ்ரமமாக இருந்த தருமபுரம் ஸ்ரீகுருஞானசம்பந்தரின் ஞானப் பண்ணையாயிற்று. குருஞான சம்பந்தர் இத்தருமைக்கு வந்தபோது அகத்திய முனிவரின் சீடர்கள் தங்கள் ஆஸ்ரமத்தையும், தாங்கள் பரிபாலித்துவந்த ஸ்ரீ தருமபுரீஸ்வரர் ஆலயம் முதலானவற்றையும் அவரிடம் ஒப்படைத்துப் பொதியமலைக்குப் போய்விட்டார்கள். குரு ஞானசம்பந்தர் அகத்தியராஸ்ரமத்தையே தமது வாழ்விட மாகக் கொண்டு திருமடங்கண்டு தவம் பெருக்கிச் சிவநெறி பரப்பி வாழ்ந்தார்கள்.

அநுபூதி நிலையம்:

தருமையாதினம் அநுபூதியாளர்கள் பலரையும் உருவாக்கி உலகிற்கு அருள்விளக்கம் புரிந்து வந்துள்ளது என்பதை இவ் வாதீன வரலாற்றைப் படிப்போர் நன்கு அறிவர்.

நான்காவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகள் குமரகுருபரரை நோக்கி,

'ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
ஏல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.'

என்னும் பெரியபுராணப் பாடலுக்கு அனுபவப் பொருள் கூறுக என்று அருளியமையாலும், ஆதி குருமூர்த்திகள்,

'ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம் கல்விகேள்வி அல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள்ளே ஒன்றிரண்டுமறத்
தோய்வார் சுமசீயுள் ஞானப்ரகாசன் மெய்த்தொண்டர்களே,

என்று தொண்டர்களின் அநுபூதியை அருளியமையானும் சோடசகலாப்பிராசாத ஷட்கம் அருளிப் பிரசாதயோக நிலையை விளக்கியமையாலும் இது இனிது விளங்கும். அநுபூதிமான்களின் தவச்சாலையாகத் தருமைத் திருமடம் விளங்கியதென்பதைப் பூசை மடத்தின் பின்புறமுள்ள பதினாறொடுக்கம் போன்ற அமைப்புக்கள் இன்றும் காட்டுகின்றன.

குமரகுருபரர், வெள்ளியம்பலவாணர், சம்பந்த சரணாலயர், சிதம்பரநாத முனிவர், தமிழாகரர், படிக்காசுத் தம்பிரான் முதலிய அநுபூதிச்செல்வர்கள் இம்மடத்தின் சீடர்களாக விளங்கியுள்ளனர்.

இலக்கிய ரசிகமணி :

செந்தமிழ்ச் சொக்கன், மதுரையில் வைகையின் தென் கரையில் திருக்கோயில்கொண்டு விளங்குவது போலத் தருமையில் காவிரியின் தென்கரையில் மடாலயங்கொண்டு எழுந்தருளியுள்ளார். மதுரைப் பெருமான் சங்கம் அமர்ந்து தமிழ் வளர்த்தவர்: புலவர்களைப் போற்றியவர்; பாவலர் கட்குப் பரிசில் வழங்கிச் சிறப்பித்தவர். அப்பெருமானை ஆன்மார்த்த மூர்த்தியாகக்கொண்டு விளங்கும் நம் தருமையாதினமும் அவ்வருள் வழியிலேயே தமிழையும் புலவர்களையும்,

பல்லாண்டுகளாகப் பட்டங்கள் வழங்கிப் பரிசில்கள் அளித்துப் பாராட்டி வருகிறது. அவ்வரிசையில் இந்த ஆண்டு **'இலக்கிய ரசிகமணி'** என்ற பட்டமும் பதக்கமும் பாராட்டும் பெற்றவர், ஆங்கிலத்திலும் அருந்தமிழ் இலக்கியங்களிலும் இரண்டறக் கலந்த அநுபூதியாளராக, ரசிக மணியாகத் திகழும் நீதிபதி மகராசன் ஆவார். இலக்கிய ரசிகமணி மகராசன் அவர்கள் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் இலக்கியத் தொண்டுகளாற்றி எல்லா நலங்களோடும் நீடுவாழ்வாராக.

மனக்கவலை தீரவழி:

உலகம் மனக்கவலையைப் போக்கும் மருந்தைத்தேடி அலைகிறது. கல்வி, செல்வம் முதலியனவற்றால் குறைவின்றி வாழ்பவர்களும் தங்கள் மனக்கவலைகள் தீராமல் அமைதியின்றி வாழ்கின்றனர். மனக்கவலை போக்கும் மருந்தை முன்பே கண்டறிந்து வள்ளுவர் கூறியுள்ளார்

'தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது'

என்பது அக்குறள். பிறவிக் கடலை நீந்த இறைவன் திருவடிகளே தெப்பமாகும் என்ற வள்ளுவர், மனக்கவலையையும், அத்திருவடித்துணைதான் போக்கவல்லது என்கின்றார். இதைத்தான் நமது குருமூர்த்திகளும் 'மனக்கவலை நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே, எவ்வுலகும் ஆக்குகின்ற சொக்கநாதா" என்று அருளியுள்ளார்.

உலகில் அவரவர் செய்த வினைகளை அவரவரும் அனுபவித்தே தீரவேண்டும். இன்பம் வரும்போது மகிழ்வதும், துன்பம் வரும்போது துவள்வதும் கூடாது. ஏழரைநாட்டுச் சனி என்று கூறுகின்றார்கள். ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இது வந்தேதிரும். அவரவர் நிலைகட்குத் தக்கபடி துன்பத்தைத்தருகிறது. கடவுள் நம்பிக்கையோடு வாழத் தலைப்பட்டால் இத்தகைய துன்பங்கள் எதுவும் எந்நாளும் நம்மைத் தாக்கா.

கஷ்டம் வரும்போது அப்பர் பெருமானைப் போலத் திருவருளில் அழுத்தம் கொள்ளவேண்டும். சமயாசாரியர்கள் நால்வருமே துன்பங்களை அனுபவிக்கத்தான் செய்தனர்.

ஞானசம்பந்தரும், அப்பரும் சமணர்களால் பல தொல்லைகளுக்கு உள்ளாயினர். சுந்தரர் தன் சொந்த வாழ்வில் பொன் வேண்டி நலன் வேண்டிக் கவலையுற்றார். ஆனாலும் அவர்கள் தளர்வெய்தவில்லை. சிவஞானியர்கட்கும் அருளாளர்கட்கும் வரும் துன்பங்கள் உடலுழாய்க் கழியுமே தவிர அவர்களின் உயிரையோ, உணர்வையோ தாக்கா.

திருவருள் துணை :

மதுரையில் ஞானசம்பந்தர் அனல்வாதம், புனல்வாதம் மேற்கொண்டபோது இறைவனிடம் உத்தரவுபெற்றுத்தான் செயலாற்றுகின்றார்.

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுட னாயபரமனே
ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம்ஆதியே."

இப்பாடல் ஞானசம்பந்தர் இறைவனிடம் உத்தரவு கேட்பதைத் தெரிவிக்கிறது.

"கூடலாலவாய்க் கோனை விடை கொண்டு
வாடல்மேனி அமணரை வாட்டிட"

என்ற திருக்கடைக்காப்புச் செய்யுள் இறைவன் அவரது வேண்டுகோளுக்கு இசைவு தெரிவித்ததைக் கூறுகிறது.

ஞானசம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றியது சரியா ? அவரது பெருமைக்கு இச்செயல் பொருந்துமா ? என்றெல்லாம் கேட்கிறார்கள். ஞானசம்பந்தர் பெருமானைக் கேட்டுத்தான் இச்செயலில் ஈடுபட்டார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். வாதத்தில் வெற்றிகண்ட ஞானசம்பந்தப் பெருமான் ஆலவாய்க் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கிப் பாடுகிறார். அந்நிலையை,

"கைகளும் தலைமீதேறக் கண்ணில் ஆனந்த வெள்ளம்
மெய்யெலாம் பொழியவேத முதல்வரைப் பணிந்து போற்றி
ஐயனே அடியனேனை அஞ்சல் என்றருள்வல்ல
மெய்யனே என்று விடலாலவாய் விளம்பலுற்றார்"

என்பார் சேக்கிழார். அப்பதிகத்தின் மூன்றாவது பாடலாகிய;

"குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூல் கருத்தும்நீ அருத்தம் இன்பம் என்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் னுரைப்பதென் முகம்மனே"

என்ற பாடலில் ஞானசம்பந்தர், சமணர்கள் கழுவேற்றப் பட்டமைக்கு இறைவன் தம்மைக் கருவியாகக் கொண்டருளியதை நினைந்து நெகிழ்ந்தமை புலனாகிறது. தாம் செய்யும் செயல்களெல்லாம், அவ்விறைவன் செய்தனவேயாதலின் குற்றம் குணம் எதுவாயினும் அவை இறைவனையே சாரும் என்று அருளியிருப்பது காணலாம்.

பாண்டியன் சமணர்களைக் கழுவேற்ற எண்ணியபோது, சைவர் இருந்துவாழ்மடத்தில் தீங்கு தக்விலாச் சமணர் செய்த தன்மையால், சாலும் என்றே, வேந்தன் செய்கை விலக்கிடாது இருந்தார் திருஞானசம்பந்தர், அதாவது தனக்குத்தீங்கு செய்ததை எண்ணாமல் அடியார் திறத்துச் சமணர்கள் செய்த பிழையை உன்னியே அவர்களைக் கழுவேற்ற அனுமதித்தார் ஞானசம்பந்தர் என்கிறார் சேக்கிழார். அடியார்களுக்கு இடையூறு வந்தால் சமயாசாரியர்கள் அதனைப் பொறுக்க மாட்டார்கள் என்பதைப் பல வரலாறுகள் நமக்கு நன்கு எடுத்துக்காட்டும்

திருஞானசம்பந்தர் திருநெடுங்களத் திருப்பதிகத்தில் 'நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே' என்று அருளுவதையும், கொடிமாடச் செங்குன்றூரில் அடியார்களுக்குக் குளிர்சுரம் வந்த போது 'தீவினை வந்து எம்மைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்' என்று அடியார் துன்பத்தைப் பொறாமல் அவர்களின் இடையூறுகளை அகற்றியருளுமாறு இறைவனை வேண்டிப்பாடுவதையும் காணலாம். இன்னோரன்ன வரலாற்றுப் பகுதிகள் சமயாசாரியர்கள் இன்னலைக் கண்டு நெகிழாமலும் இன்பத்தைக்கண்டு மகிழாமலும் இறையருளைப் போற்றி வாழ்ந்தமையை நன்குபுலப்படுத்தும்.

அம்மையப்பர் :

கடவுள் அம்மையப்பராக விளங்கி உயிர்கட்கு அருள் பாலிக்கின்றார். மணிவாசகர், வந்தி இருவருக்கும் இறைவன்

அருள்செய்த திருவிளையாடல், 'இறைவன் உலகமெல்லாம் அம்மை அப்பராக நிறைந்தவன்' என்பதைஎடுத்துக்காட்டுகிறது. கட்புள் அம்மையப்பராக இருத்தலால் தாவரம் முதல் தேவர்கள்வரை எல்லாமே ஆண் பெண்ணாக இருந்தே செயல்படுகின்றன. பதியாகிய இறைவன் அம்மையப்பராக விளங்கிப் பசுக்களையும் அவ்வாறே ஆணும் பெண்ணுமாக் விளங்குமாறு செய்தருளி,பாசமாகிய ஜடப்பொருள்களில் ஆண் பெண் போன்ற இருதன்மைகளை நிலைபெறச்செய்துள்ளார். மின்சக்தி இயக்கம் இவ்வாறே பாசிடிவ், நெகடிவ் என்ற இரண்டு சக்திகளாகவே இயங்குகிறது. இறைவன் மணி வாசகர்க்கும் வந்தியம்மைக்கும் அருள் வழங்கிய ஆவணிமூல விழா இறைவன் ஆணுக்கும் பெண்ணுக்கும் அருள்புரிவதைத் தெரிவிக்கிறது

இத்தகைய ஆவணிமூல விழாவில் சொக்கநாதப்பெருமான் சந்நிதியில் பட்டம் வழங்கப்பெற்ற அன்பர் திரு. மகராசன் தமிழ் உலகிற்கும் சமய உலகிற்கும் நீதித்துறைக்கும் தொண்டு செய்தவர். ரசிகமணி டி.கே சிதம்பரநாத முதலியாரின் சீடர், ரசிகமணியின் வாரிசாக விளங்கும் மகராசனை, இன்று 'இலக்கிய ரசிகமணி' என்ற பட்டமளித்துப் பாராட்டு கிறோம்.

உலக வாழ்க்கையில் பெரியோர் பலரும் தம்மை வழிபடுபவரை மகராசனாக இரு என்று வாழ்த்துவார்கள். இவர் பெயரிலும் மகராசனாக இருக்கிறார். மகராசன் என்றும் மகராசனாகவே இருக்கவும் அவரது தொண்டுகள் சிறக்கவும் வாழ்த்துகிறோம்.

மாணவர்களுக்கு:

இன்று ஆவணிமூல விழாவோடு கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவும் நிகழ்கிறது. மாணவர்களுக்கு இன்று சில அறிவுரைகள் கூறுதல் பொருத்தம். அமெரிக்க ஜனாதிபதி காலம் சென்ற கென்னடி 'நாடு உனக்கு என்னசெய்தது என்றுமட்டும் கேட்காதே, நீ பிறந்த நாட்டிற்கு என்ன செய்தாய் என்று கேட்டுக்கொள்' என்று கூறியது போல நாம் இலக்கியத்திற்கும் சமயத்துக்கும், சமுதாயத்துக்கும் பணிசெய்ய

வேண்டும் 'துடைக்கிலும் போகேன்' என்று அப்பர்பெருமான் கூறியதுபோல் விடாது பணிசெய்யவேண்டும். நிறுவனத்தால் நாமும், நம்மால் நிறுவனமும் பெருமை பெறத்தக்கவகையில் மாணவர்கள் நடந்துகொள்ளவேண்டும் ஏன்? மனித இனமே அப்படி நடந்தால்தான் நாடு உயரும்; நம் சமுதாயம் உயரும். மாணவர்களும் மக்களும் சிறந்து விளங்க இது போன்ற அறிவுரைகளை மனத்தில்கொண்டு முயலவேண்டும்.



10
மக்கள் தொண்டும் மகேசன் தொண்டும்*

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே."

திருநாவுக்கரசர்

[மாணாக்கர்களுக்குத் தொண்டுள்ளம் இன்றியமையாதது என்பதை வலியுறுத்தியும், மக்கள் தொண்டு மகேசன் தொண்டாகவும், மகேசன் தொண்டு மக்கள் தொண்டாகவும் மலர்வதை எடுத்துக்காட்டியும், திருக்கோயில்களில் விளக்கிடுவதால் எய்தும் பயனைத் திருமுறைச் சான்றுகளுடன் விளக்கியும், குருமணி அவர்கள் அருளிச்செய்த சீரிய சிந்தனைகளின் பிழிவாக அமைந்த அருளுரை.]

தொண்டுள்ளம் :

கல்வி கற்கும் மாணவர்களுக்குத் தொண்டு மனப்பான்மை வளரவேண்டும். இந்த நோக்கத்தோடு, சென்னைப்பல்கலைக் கழகம் பல கல்லூரிகளிலும் தேசிய சேவைத்திட்டப்பணியைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ்த் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி, அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரி, மாயூரத்திலுள்ள தருமபுரம் ஸ்ரீ ஞானாம்பிகை

---

* தருமையாதீனத்திற்குச் சொந்தமான கருங்குயில் நாதன் பேட்டை ஸ்ரீ ஆனந்தவல்லி உடனாகிய ஸ்ரீ சக்தி புரீசுவர் சுவாமி தேவஸ்தானத்தில் 25—9—78 அன்று நடைபெற்ற மின் விளக்கேற்று விழாவில் வழங்கியருளியது.

அரசினர் மகளிர் கலைக்கல்லூரி மாணவ மாணவிகள் பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டுவருகின்றனர். மயிலாடுதுறை ஸ்ரீ ஞானாம்பிகைகலைக்கல்லூரி மாணவிகள், பத்துநாள்களாக நமது மணக்குடிகிராமத்தில் முகாமிட்டு மருத்துவம், சுகாதாரம் முதலிய துறைகளில் பல்வேறு பணிகளைப் புரிந்து, இன்று தங்கள் பணிகளை இப்புனிதத்திருக்கோயிலில் நிறைவு செய்துள்ளனர். அவர்களது சேவையுணர்வு பக்தியுணர்வோடு கலந்து வளர்வதை வாழ்த்தி, சில கருத்துக்களை உங்கள் சிந்தனைக்கு உரித்தாக்குகின்றோம்.

மக்கள் சேவையே மகேசன் சேவை:

மக்கள் சேவையே மகேசன் சேவை எனப் பலரும் பேசி வருகின்றனர். இத்தொடருக்கு இரண்டு வகையாகப் பொருள் கூறலாம். ஒருபொருள், மக்களுக்குச் செய்யும் சேவையே மகேசனுக்குச் செய்யப்படும் சேவை என்பதாகும். பிறிதொரு பொருள் மகேசனின் சேவையே மக்களுக்குச் செய்யும் சேவையாகத்தான் இருக்கிறது என்பது.

மக்களுக்குச்செய்யும் சேவையை மகேசன் தனக்குச்செய்யும் சேவையாக ஏற்று அருள்புரிகிறான் என்பதைத் திருமூலர் அருளிய,

> ''நடமாடுங் கோயில் நம்பற்கு ஒன்று ஈயின்
> படமாடுங் கோயில் பரமற்கு அங்கு ஆகும்''

என்ற திருப்பாடலால் நன்கு அறியலாம். இப்பாடலில் நடமாடும் கோயில் எனக் குறிப்பிடப்படுவது யாரெனின் நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் மன்றாடும் மலர்ப்பாதம் மறவாமையே பொருள் எனக்கொண்டு, செஞ்சாந்தெறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந்தோடாநிலையினராகிய ஜீவன்முத்தர்களையேயாகும்.

சாதாரணநிலையில் வாழும் மக்கட்குச் செய்யும் சேவைகளும் ஒரு வகையில் பசுபுண்ணியம் என்று கூறப்படும். நல்லன தீயனவற்றை உணர்ந்து நல்வழியில் வளரவேண்டும் என்ற எண்ணம் படைத்த மக்கட்குச் சேவை செய்வதையும் மகேசன் தன் சேவையாகவே ஏற்றுக்கொள்வான்.

மகேசன் சேவையே மக்கள் சேவை :

மகேசனே மக்கள் சேவைதான் செய்துவருகிறான். ஏன்? மக்கட்கு மட்டுமா? தாவரம் முதல் தேவர்கள் ஈறாக எல்லா உயிர்கட்குமேயல்லவா சேவைசெய்து வருகிறான். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து தொழிலுமே உயிர்கட்காக இறைவன்செய்யும் சேவையாகத் தானே அமைகிறது. மகேசனே தமது பெருங்கருணையினால் சேவை செய்யும்போது தகுதியும், திறமையும், கருணையும் மிக்கவர்கள் எளிய இனியவர்கட்குச் சேவைசெய்வதைப் பரமனே உவந்து ஏற்றுக்கொள்ளத்தான் செய்வார். எனவே தெய்வபக்தியோடும், நாட்டுப்பற்றோடும், சகோதர உணர் வோடும் மாணவ மாணவியர் சமூகசேவை செய்வது பாராட்டத்தக்கதாகும்.

இச்சேவைத்திட்டத்தில் மாணவர்கள் சிறுமை பெருமை பாராட்டாமல் உடலுழைப்புப்பணி செய்வதால் அவர்கட்குப் பண்பாடு வளர்கிறது. அதேநேரத்தில் கிராம சமுதாய மக்கட்கும் பேருதவி எளிதில் கிடைக்கிறது. இருதிறத்தார்களையும் வாழ்த்துகிறோம்.

மின்விளக்கு ஏற்றுவிழா:

இன்று இத் திருக்கோயிலில் மின்விளக்கு ஏற்றப்பெற்றது. மக்கள் பலரும் வந்து வழிபாடு செய்தற்குரிய ஆலயங்கள் ஒளிமயமாகத் திகழ்ந்தால்தான் நம் நாடும் வீடும் ஒளிமயமாகத் திகழும்; விளக்கமும் அடையும். இப்பணி மயிலாடுதுறை கோட்டாட்சித் தலைவர் திரு. சோணைமுத்துக்கோன் அவர்களால் தொடங்கப்பெற்றது. அவர் தெய்வ பக்தியும் செயல் திறனும் பெற்ற நிர்வாகி. அவர்கள் தொடங்கியது மகிழ்வுதருகிறது.

இருள் அறியாமையைப் போன்றது. ஒளி அறிவைப் போன்றது. நம் உள்ளங்களில் அறியாமை அகன்று அறிவொளி பெருகவேண்டுமானால் அவரவரும் திருக்கோயில் களில் திருவிளக்கேற்றும் பணியைச்செய்தல்வேண்டும்.

''விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினால் பதிற்றியாகும்
துளக்கில்நல் மலர்தொடுத்தால் தூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில கீதம்சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே''

என்று அருளிச்செய்கிறார் அப்பரடிகள். திருக்கோயில்களைத்

திருவலகிட்டுத் தூய்மை செய்யும் பணியைவிடத் திருமெழுக் கிடுதல் சிறந்த பயனைத் தரும்; நறுமலர்களை எடுத்துவந்து மாலையாகத்தொடுத்து அணிவித்தால் வானுலக இன்பங்களைப் பெறலாம்; திருவிளக்கு ஏற்றி வழிபட்டால் மெய்ந்நெறியில் செல்லத்தக்க சிவஞானம் உண்டாகும்; இசைப்பாடல்களைப் பாடி வழிபடுவோமாயின் இறைவன் திருவருள் நமக்கு மிகுதியும் உண்டாகும் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

எலியின் இறைபணி :

திருமறைக்காடு எனப்படும் வேதாரண்யம் திருக்கோயிலில் எலியொன்று வாழ்ந்துவந்தது. நள்ளிரவில் அர்த்தயாம பூசை முடித்து அர்ச்சகர் இல்லம் சென்றுவிட்ட நேரத்தில் எலி தீபத்தில் இருந்த நெய்யைக் குடிப்பதற்கு முற்பட்டது. சுடர் தட்டி அணைய இருந்த விளக்கில் ஏறி நெய்யைக் குடிக்க ஆரம்பித்தது. விளக்கின் சுடர் எலியின் மூக்கைச்சுட்டுவிட்டது. சூடுபொறுக்காத நிலையில் தன் மூக்கைச் சிலிர்த்ததால் அணைய இருந்த தீபம் நன்கு தூண்டப்பட்டு எரியத் தொடங்கிற்று. இதைக்கண்ட இறைவன் எலியின் செயலுக்கு மகிழ்ந்தார். அணைய இருந்த விளக்கைத் தூண்டி எரிய விட்ட அவ்வெலிக்கு அரசனாகப் பிறக்கும் பெரும் பேற்றை வழங்கியருளினார் என்று அருளிச்செய்கிறார் அப்பர்.

''நிறைமறைக் காடுதன்னில் நீண்டொரி தீபந்தன்னைக்
கறைநிறத்து எலிதன்மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவான் உலகமெல்லாம்
குறைவறக்கொடுப்பர் போலும் குறுக்கை வீரட்டனாரே''

என்பது அப்பர் அருளிய திருநேரிசைப்பாடல். அபுத்திபூர்வ மாக (அறியாமலேயே) செய்யும் இத்தகைய தொண்டுகட்கே இத்தனை பெரிய சிறப்பை இறைவன் அருளுவானேயானால், புத்திபூர்வமாக (அறிந்து) செய்யும் தொண்டுகளுக்கு எத்தனை பெரிய நலங்களை இறைவன் அருளுவான் என்பதைச் சிந்தித்துத்தெளிதல் வேண்டும்.

கருங்குயில்நாதன்பேட்டை :

இத்தலம் இந்திரன் குயிலுருவாய்ப் பூசித்து அருள் பெற்ற சிறப்புடையது. செம்பொன்னார்கோயிலுக்கு அருகிலுள்ள பரசலூர் என வழங்கும் பறியலூரில்தான் தக்ஷன் சிவபெருமானைப் புறக்கணித்து யாகம் செய்தான். தக்ஷனின் அழைப்பை ஏற்றுத் திருமால் பிரமன் இந்திரன் முதலிய

தேவர்கள் அனைவரும் அந்த யாகத்துக்கு அவியுணவு உண்ணுதற்பொருட்டு வந்திருந்தனர். சிவபிரானும் உமை யம்மையும், வீரபத்திரரையும், மகாகாளியையும் ஏவினர். வீரபத்திரர் தட்சயாகத்திற்கு வந்திருந்த தேவர்களுக்குத் தக்க தண்டனைகள் வழங்கினார். அத்தண்டனைகளைப் பெற்ற இந்திரன் பயந்து குயிலுருவம் எடுத்து இத்தலத்திற்கு ஓடி வந்தான். தான் செய்த பாவத்தையும் பறவை உருவம் எடுத்து வர நேர்ந்ததையும் உணர்ந்து இத்தலத்தில் பாவ விமோசனம் பெறுதற்பொருட்டு, சக்திபுரீசுவரரைப் பூசித்து வழிபட்டான். இறைவன் இந்திரனுக்கு அருள்புரிந்தார். இந்திரன் கருங்குயில் வடிவமெடுத்துவந்து பூசித்துப் பேறுபெற்ற காரணத்தால் இத்தலம் கருங்குயில்நாதன்பேட்டை என்றாயிற்று. இந்திரன் மேகவாகனனாதலின் கரிய முகில்களுக்கு நாதன் என்ற பொருளில் கருமுகில்நாதன்பேட்டை எனவும் இத்தலம் வழங்கப் படும். இங்குள்ள கருணாதீர்த்தம் குட்டம் முதலிய எல்லா நோய்களையும் போக்கவல்லது. கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகளில் அருள்மிகு சக்திபுரீசுவரர் ஆனந்தவல்லி அம்மையுடன் தருமபுரத்திற்கு எதிரில் உள்ள காவிரித்துறைக்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுத்தருளுவார். மயிலாடுதுறை வட்டாரத்தில் உள்ள பலரும் அன்று தீர்த்தமாடி நலம்பல பெற்று வருகின்றனர்.

மயிலாடுதுறை மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள திரு இந்தளூர், கழுக்காணிமுட்டம், ஆனந்ததாண்டவபுரம், பசுபதி அக்ரகாரம், கருங்குயில்நாதன்பேட்டை, தருமபுரம் ஆகிய ஏழு தலங்களும் பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி ஆகிய சப்தமாதர்கள் பூசித்த தலங்களாகும் அவ்வரிசையில் இத்தலம் வராகி பூசித்த சிறப்புடையது. சப்த மாதர் திருவுருவங்களும் இத்தலத்தில் உள்ளன. இத்தகைய பல்வகைச் சிறப்புக்களும் பாங்குறப் பெற்றுள்ள இத்தலம் நமது தருமை ஆதீனத் திருக்கோயில்கள் இருபத்தேழனுள் ஒன்றாய் இலங்கிவருகிறது.

அன்பர்கள் இத்திருக்கோயிலின் பெருமைகளை உணர்ந்து போற்றிவழிபட்டு எல்லா நலங்களும் பெற்று உய்வார்களாக.

11
சாதகனும் சாதனங்களும்*

[சைவசித்தாந்தம் விரிக்கும் முப்பொருள் களை எளிமையாக விளக்கித் தொடங்கும் குருமணிகள், சாதகன் என்பான் யார் என்பதை யும், சாதனங்கள் எவை எவை என்பதையும் விளக்கி, நிறைவாக, ஞானநிலை எய்தியவர் களுக்கும் ஆலயவழிபாடு இன்றியமையாது வேண்டத்தக்கது என்பதையும் வலியுறுத்தி நிறைவிக்கிறார்கள்.]

முப்பொருள் விளக்கம்:

தருமை ஆதீனத் திருமடத்தின் கொள்கை, சைவசித்தாந்த மாகும். அது பதி-கடவுள், பசு-உயிர், பாசம்-தளை என்னும் முப்பொருள் உண்மையை அடிப்படையாகக் கொண்டது. கடவுள் ஒருவர். உயிர்கள் பல. பாசம் ஒன்று. கடவுள் ஒருவரே ஆயினும் அனேக சக்திகளை உடையவர். அதுபோல் பாசமும் ஒன்றேயாயினும் அனேக சக்திகளை உடையது. கடவுள் அறிவு (ஒளி) மயமானவர். பாசம் அறியாமை (இருள்) மயமானது. உயிர்கள் ஒளியுடன் சேரும் போது ஒளியாகவும், இருளோடு சேரும் போது இருளாகவும் சார்ந்ததன் வண்ண மாக இருக்கும் தன்மையுடையவை. இறைவன் தானே எல்லா வற்றையும் பிறஉதவி இன்றிஅறிபவன். உயிர்களோ இறைவன் உடல் முதலிய கருவிகரணங்களைக் கொடுத்து அறிவித்தால்

---

* 3—12—78 அன்று தருமையாதீனத்திற்கு வருகைதந்த மேற்கு வங்காள உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. சங்கர பிரசாத் மிஸ்ரா அவர்களின் ஐயங்களைத் தெளிவிக்கும் வகையில் வழங்கியருளியது.

அன்றித் தானே அறியும் தன்மை இல்லாதன. பாசமோ அறிவித்தாலும் அறியாத சடப் பொருளாயுள்ளது. அதாவது அறிவில்லாதது.

சாதகன் யார் ?

கடவுளுக்குச் சாதனை தேவை இல்லை. அவர் விருப்பு வெறுப்பு அற்றவர். அவருக்கு எதுவும் தேவை இல்லை; அதே போல் பாசம் அறிவில்லாதது. ஆதலால் அது தானே அறிந்து செயல்படாது. அதற்குத் தேவையும் இல்லை. உயிர்கள் சித்தாகிய கடவுளோடு கூடிய காலத்தில் சித்தாகவும். அசித்தாகிய பாசத்தோடு கூடிய காலத்தில் அசித்தாகவும் இருக்கும் தன்மையுடையதாக இருப்பதால் சாதகனாக இருக்கும் தகுதி உயிர்கட்கே இருக்கின்றது.

சாதனங்கள் என்ன?

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன சாதனங்களாக உள்ளன. சரியை என்பது உடலால் தொண்டு செய்தல் அதாவது, திருப்பணிகள் முதலியன. கிரியையாவது, உடலும் உயிரும் இணைந்து தொண்டு செய்தல். பூசனை, வழிபாடு முதலியன. யோகம் என்பது சரியை கிரியைகளால் உயிருக்குக் கிடைத்த அனுபவத்தில் ஒன்றி(அழுந்தி) நிற்றல். ஞானமாவது அறிவொளியாகத் திகழும் இறைவன் வேறு, தான் வேறு என்று இல்லாமல் இரண்டறக் கலந்து நிற்கும் சுத்தாத்துவிதநிலை. இந்நான்கும் சாதனை நிலையில் வேறே தலிரப் பொருள் நிலையில் ஒன்றே. இதனைத் தாயுமானார் தெளிவாக நமக்குப் புரியும் நிலையில் கூறுகிறார்.

> '' விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
> அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே''

என்பது அவர் வாக்கு.

நடந்து காட்டிய ஆசாரியர்கள்:

இந்தநான்கு நிலைகளையும் நமக்குக் காட்டியவர்கள் நமது சமய ஆசாரியர்கள். சரியை வழிநின்று காட்டியவர் திருநாவுக் கரசர். கிரியை வழிநின்று காட்டியவர் திருஞானசம்பந்தர். யோகநெறிநின்று காட்டியவர் சுந்தரர். ஞானநெறி நின்று

காட்டியவர் மாணிக்கவாசகர். இவற்றைத் தாசமார்க்கம், சத்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்றும் கூறுவர். தாசமார்க்கம் இறைவனை ஆண்டவனாகவும் தன்னை அடிமையாகவும் கொண்டு வழிபடுதல். இதற்கு அப்பரடிகள் உதாரணமாகத் திகழ்கிறார். சத்புத்திர மார்க்கமாவது இறைவனைத் தத்தையாகவும் தன்னைப்புத்திரனாகவும் கொண்டுவழிபடுதல். இதற்குச் சம்பந்தர் வாழ்வு உதாரணமாகும். சகமார்க்கமாவது இறைவனைத் தோழனாகக் கொண்டு வழிபடுதல். இதற்குச் சுந்தரர் வாழ்வு எடுத்துக்காட்டு சன்மார்க்கம் தலைவன் தலைவி முறை. இதற்கு மணிவாசகர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்.

ஞானிகளும் வழிபட வேண்டுமா ?

ஜீவன்முத்தர்களாகத் திகழும் பெரியோர்கள் கோயிலுக்குப் போகவேண்டுமா ? அவர்கள் உள்ளத்தில்தான் கடவுள் இருக்கிறாரே! அவர்கள் நடமாடும் தெய்வங்களாகப் போற்றப் படுகிறார்களே ! அவர்களுக்கு வழிபாடு எதற்கு என்று சிலர் நினைக்கிறார்கள். உலோகப் பாத்திரங்களை அன்றாடம் விளக்க வேண்டும். விளக்காவிட்டால் அழுக்கேறிவிடும். அதேபோலத்தான் சாதனைபெற்ற உயிர்களும் நல்லவர் களுடைய கூட்டுறவும், இறைவழிபாடும் நாளும் செய்துவர வேண்டும். செய்யாதுவிட்டால் மீண்டும் அறியாமை அவர்களைப் பற்றி, கீழ் நிலையில் தள்ளிவிடும். இதுபற்றியே மெய்கண்டாரும் சிவஞானபோதத்தின் இறுதி நூற்பாவில்.

> " செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
> அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
> மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
> ஆலயம் தானும் அரன்என தொழுமே"

என்று அருளிச்செய்தார். ஔவையாரும்.

> " சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
> வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் — நித்தம்
> நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
> கொடையும் பிறவிக் குணம்"

என்று கூறியிருப்பதும் காணலாம்.

பாசிபடர்ந்த குட்டையில் கல்லெடுத்துப்போட்டால் பாசி விலகி, தண்ணீர் தெளிவாகத் தெரியும். சிறிது நேரத்தில் மீண்டும் மூடிவிடும். உறைக்குள் இருக்கும் கண்ணாடியை எடுக்கும்போதெல்லாம் நாம் ஏன் துடைத்த பிறகு போட்டுக் கொள்ளுகிறோம்? அழுக்கு அவ்வளவு நுட்பமாக இருக்கிறது. எனவே ஆணவமாகிய அழுக்கு முத்திக் காலத்திலும் நம்மைத் தொடர்ந்திருக்குமாதலால் உயிர்கள் எவ்வளவு மேல்நிலைக்குச் சென்றபோதிலும் இறைவழிபாடும் அடியவர் கூட்டுறவும் என்றும் உயிர்களுக்குத் தேவையானதே.



12
பிரணவத்தின் உட்பொருள்*

"ஒருசுடராய் உலகேழும் ஆனான் கண்டாய்
ஓங்காரத் துட்பொருளாய் நின்றான் கண்டாய்
விரிசுடராய் விளங்கொளியாய் நின்றான் கண்டாய்
விழவொலியும் வேள்வொலியும் ஆனான் கண்டாய்
இருசுடர்மீ தோடா இலங்கைக் கோனை
ஈடழிய இருபதுதோள் இறுத்தான் கண்டாய்
மருசுடரின் மாணிக்கக் குன்று கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் நானே"

— திருநாவுக்கரசர்

பிரணவம் உணராப் பிரமன் :

திருக்கயிலாயத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் பிரமதேவன் சென்று தரிசித்துத் திரும்பினான். திரும்பி வரும்போது, முருகப்பெருமான் கோபுரவாயிலில் இருந்தும், பிரமதேவன் முருகனைத்தொழாது சென்றான். இதனைக் கண்ட முருகப்பெருமான் பிரமனை அழைத்தார்; நீ யார்? உனது தொழில் யாது? என்று வினவினார். அதற்குப் பிரமன் தான் பிரமதேவன் என்றும், தனக்குத் தொழில் படைப்புத்தொழில் என்றும் கூறினான். படைப்புத்தொழில் என்றால் படைப்புக்கு மூலமான வேதம் தெரிந்திருக்க வேண்டுமே; வருமோ? என்றார். பிரமன் வரும் என்று சொல்ல, முருகன் சொல்லுக எனக் கட்டளையிட்டார். பிரமன் ஓம் என்று தொடங்கினான். உடனே முருகன், இந்த ஓம் என்ற பிரணவத்திற்கு முதலில் பொருள் சொல்லிவிட்டு அதற்குமேல் வேதம் ஓதுக என்றார். பிரமன் பிரணவத்திற்குப் பொருள் தெரியாது விழித்தான். பிரணவப்பொருளே

---

* 10—01—79 'ஞானசம்பந்தம்' இதழுக்கு வழங்கியருளியது

தெரியாத நீ படைப்புத்தொழிலை எப்படிச் செய்கிறாய்? என்று படைப்பும் இப்படித்தான் குறையுடையதாக இருக்கும்; எனவே நீ குற்றவாளி என்று கூறி, நான்கு தலைகளிலும் குட்டிச் சிறையில் இட்டார்; படைப்புத் தொழிலையும் தாமே மேற்கொண்டார் முருகப்பெருமான். இஃதறிந்த பரமேசுவரன், முருகன்வாயிலாகவே பிரமனைச் சிறைவிடச் செய்தார்.

குடிலை உரைத்த குமரன்:

முருகப்பெருமானைத் தமது தொடைமீதிருத்திப் பிரணவப் பொருள் உமக்குத் தெரியுமோ என்று வினவினார். 'தேவரீர் உமாதேவிக்கு ரகசியமாக உரைத்த பிரணவப் பொருளைப் பிறர் அறியச் செப்பலாமோ என்றார் முருகன். பரமேசுவரன் திருச்செவி சாய்த்தார். முருகன் பிரணவப் பொருளை ரகசியமாக உரைத்தார். இதுவே கந்தபுராணம் கூறும் வரலாறு. ஆனால் முருகன் பிரணவத்திற்கு என்ன பொருள் சொன்னார் என்பது ரகசியமாகவே இருக்கிறது. இருந்த போதிலும் ஓங்கார பிரணவத்தின் பொருள் வேதங்களின் முடிபாக விளங்கும் உபநிடதங்களில் தெளிவாகப் பேசப் படுகிறது. கந்தர்கலிவெண்பா போன்ற நூல்களும் பிரணவப் பொருளைப் பெரிதும் விளக்குகின்றது. இவற்றின் உதவி கொண்டே பிரணவப் பொருளை நம்மால் உணர முடிகிறது.

பிரணவப் பொருள்:

ஓம் என்பது பிரணவம் என்று பேசப் பெறும். அகாரம் உகாரம், மகாரம், நாதம், விந்து ஆகிய ஐந்து உறுப்புக்களை உடையது பிரணவம். இவற்றுள் அகார உகார மகாரம் என்ற இம்மூன்றும் கூடும்போது ஓம் என்ற பிரணவம் உண்டாகும். அது ஓம் என்று ஒலிக்கும் போது நாதமாகவும். ஓம் என்று வரி வடிவு கொள்ளும் போது விந்துவாகவும் விளங்கும்.

பிரணவம் சமஷ்டிப்பிரணவம், வியஷ்டிப்பிரணவம் என்று இருவகைப்படும். சமஷ்டிப் பிரணவம் ஓம் என நிற்பது வியஷ்டிப் பிரணவம் அகர, உகர, மகர, விந்து, நாதம் என நிற்பது. சமஷ்டி என்பது தொகுப்பாகும். வியஷ்டி என்பது வகுத்துச் சொல்வதாகும். சமஷ்டிப் பிரணவத்திற்குப் பொருள் சிவபெருமானே ஆவார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் முறையே

அ—பிரமன், உ—திருமால், ம—உருத்திரன், விந்து—மகேஸ்வரன், நாதம்—சதாசிவன் என்னும் ஐவரையும் கொண்டு நடத்துபவன் சிவபெருமானே. இது வியஷ்டிப்பிரணவம் எனப்படும் இவ்வைந்தும் கூடியதே ஓங்காரப் பிரணவம் என்பதைக் குமரகுருபரர், "ஓதியஐந் தோங்காரத் துள்ஒளிக்கும் உள்ளொளியாய், ஐந்தொழிற்கும்நீங்காத பேருருவாய் நின்றோனே" என்று கந்தர் கலிவெண்பாவில் கூறுவதால் நன்கு தெளியலாம். எல்லாவற்றிற்கும் முதலாயுள்ள சிவபரம்பொருள் ஐந்தொழில் அதிபர்களிடத்தும் ஒளித்ததுநின்றே ஒளியூட்டிச் செயல் படுகிறது என்ற நயம்வியந்து போற்றற்பாலது. பரம்பொருள் உடனாயிருந்து இயக்கினாலும் ஐந்தொழிற்கும் அப்பால் கடந்தே நிற்கிறான் என்பதையும் குமரகுருபரர் அக்கந்தர் கலிவெண்பாவிலேயே "ஐந்தொழிற்கும் அப்புறமாய்" என்ற தொடரால் குறிப்பிடுகின்றார்.

உபநிடதங்களில் ஓம் எனும் பொருள்:

அதர்வ வேத மாண்டூக்ய உபநிஷத்தில் இந்தப் பிரபஞ்சம் முழுவதும் ஓம் என்னும் எழுத்தாகச் சொல்லப் படுகின்றது. அந்த எழுத்தின் விரிந்த பொருளாகவும் இருக்கிறது. சென்றது, நிகழ்வது, வருவது யாவும் ஓங்காரமே என்று அறிவிக்கப் படுகிறது.

அதர்வவேத அதர்வசிகோபநிஷத்தில், காணப்படுகின்ற பிரபஞ்சமெல்லாம் ஓம் என்ற எழுத்தேயாம்; உலகத்திற்கு இதமாயுள்ளதும் இதுவே; பிரமனைச் சார்ந்தது; சர்வவேத சாரமானது; சோமன் என்ற உமாநாதனைத் தேவதையாக உடையது. ஓம் எனும் பிரணவ அட்சரமே ஆதியில் உபதேசிக்கபட்டது; அதுவே தியானம்; அதுவே தியானிக்கற் பாலது என்று அறிவிக்கப் படுகிறது.

பிரணவத் தோற்றம்:

இவ்வளவு பெருமை வாய்ந்த மகாமந்திரமாகிய பிரணவம் தோன்றிய வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். பரமேசுவரன் உயிர்கள்மீது வைத்த பெருங் கருணையால் உயிர்கள் உய்திபெறும் பொருட்டு உலகத்தைப் படைக்கத் தொடங்கினார். முதலில் சுத்தமாயை என்னும் மூடிலையைத் தமது ஒளியால் கலக்கினார். கலக்கியபோது

முதன்முதலில் தோன்றிய நாதமே ஓம் என்ற பிரணவமாக உதித்தது. அது பின்னர் விந்து தத்துவமாக விரிந்து பரவியது. எவ்வாறு எனின்? இரண்டு எதிர்மறையான மின்சக்திகள் அதாவது பாயும் சக்தி ஒன்று, தாங்கும் சக்தி மற்றொன்று-ஆக இவ்விரண்டும் ஒன்றோடொன்று சேரும்போது அவற்றிலின்றும் ஒளியும் ஒலியும் தோன்றுவதுபோல (மின்னல் ஒளியும் இடி ஒலியும் இதற்குச் சான்று) பரம்பொருளின் அருளொளி, குடிலைஎன்னும் சுத்தமாயையில் பொருந்தியபோது தோன்றிய ஒலியே ஓங்கார நாதமாகும்; ஒளியே ஓங்கார வரிவடிவமாகும். அதாவது விந்துவாகும். வைதிக சைவத்துள் கூறப்பட்ட தத்துவங்களுக்கெல்லாம் முதன்மையானது நாததத்துவமே. இதுவே எல்லா உயிர்கட்கும் அறிவைஎழுப்பி அறிவாய் விளங்கி நிற்பது

பிரணவத்தின் மறுபெயர்கள் :

பிரணவம் என்ற சொல்லுக்குப் பொருள் உயிர்களால் துதிக்கப்படுவது என்பதாகும். ஓம் அல்லது பிரணவம் என்பது சிவபிரான் எழுந்தருளும் பீடமாகவும் அதாவது இருப்பிடமாகவும், ஏனைய தேவர்கட்குப் பிறப்பிடமாகவும், அனைத்து மந்திரங்கட்கும் வேதங்கட்கும் மூலமாகவும் விளங்குவது. தாரகம், ஏகாக்ஷரம், ஓங்காரம், ஓம், மந்திரார்த்தம், மந்திரமூலம், மந்திரநாயகம், வெட்டாத சக்கரம், குடிலை எனபன இதன் மறுபெயர்களாகும்.

வேதத்தில் பிரணவம் :

வேதம் நான்களுள் அதர்வம் நீக்கி இருக்கு, யசுர், சாமம் என்னும் மூன்றே கொள்ளப்படும். அவற்றுள் இருக்குவேதத் தொடக்கத்தில் "அக்நிமீளே" என்று அகரமும், யசுர்வேதத்தின் நடுவில் "யோதிஸ்ஸமுத்ரோபத்து" என்று உகரமும், சாம வேதத்தின் இறுதியில் "ஸ்மாநம்வரம்" என்று மகரமும் அமைந்திருப்பதால் ஓங்காரத்தின் பொருள் சிவபெருமானே என்பதை உணர்த்தியது தமிழ்வேதத்திலும் முதல் திருமுறையில் காயத்திரியின் முதலெழுத்தாகிய தகரத்தோடு சேர்த்து தகர ஓகாரத்தில் "தோடுடைய" என ஞானசம்பந்தர் தொடங்கியிருப்பதும், பன்னிரண்டாம் திருமுறையில் உலகெலாம் என மகர ஒற்றில் முடிந்திருப்பதும் திருமுறைகள் ஓங்காரப் பிரணவமாயிருப்பதை உணர்த்தும் மேலும்.

திருமுறைக்குப் பொருளாவார் சிவபரம்பொருளே என்பதையும் நன்கு தெளிவிக்கும்.

பிரணவம் உணர்த்திய பெருமான் :

சுருங்கச் சொல்லின் ஓங்காரப் பிரணவ நாதமே பரம் பொருளின் முதல் படைப்பு; ஆதியெழுத்து. அவ்வெழுத்தின் பொருள் அம்மை அப்பராக விளங்கும் சிவபரம்பொருளேயாம். உலகைச் சுற்றிவந்து மாங்கனிபெற வேண்டிய விநாயகர் அம்மையப்பரை வலம் வந்து கனி பெற்றதாலும், திருவாசகத் திற்குப் பொருள்கேட்டபோது மணிவாசகர் தில்லை நடராசப் பெருமானைக் காட்டியதாலும் பிரணவத்தின் பொருளும் பரம்பொருளே என இனிது உணரலாம்.

யோ வேதாதௌ ஸ்வர : ப்ரோக்த
வேதாந்தே ஜ ப்ரதிஷ்டித :
தஸ்ய ப்ரக்ருதி லீநஸ்ய
ய : பரஸ்ஸ மஹேஸ்வர :

—யசுர் வேதம்.



13
நல்லோர் வாழும் ஊர் *

"உஞ்சேனை மாகாளம் ஊறல் ஒத்தூர்
உருத்திர கோடி மறைக்காட் டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்
வீரட்டம் மாதானம் கேதார்த்தும்
வெஞ்சமாக் கூடல் மியச்சூர் வைகா
வேதீச்சரம் விவிச்சரம் வெற்றியூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக் கையும்
கயிலாய நாதனையே காணலாமே"

— திருநாவுக்கரசர்

[கஞ்சாறூர் என்ற பழம்பெயர் கொண்ட ஆனந்ததாண்டவபுரத்தின் சிறப்பினைப் பெரிய புராண வரலாறு எடுத்துரைத்து விளக்கும் குரு மணிகள், நல்லோர் வாழும் ஊரை அடையாளம் காண வழிகாட்டி, மானக்கஞ்சாறர் திருமகளாரின் கற்பொழுக்கத்தை விதந்து, ஒரு சொக்கநாத வெண்பாவையும் விளக்கி அருளிச்செய்தது.]

வைப்புத்தலம் :

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் அருளிய தேவாரத் திருப்பதிகங்களைப் பெற்றுள்ள தலங்கள், பாடல்பெற்ற தலங்கள் என்று கூறப் படும். முழுமையான தேவாரத் திருப்பதிகங்களைப் பெறாமல்

---

* ஆனந்ததாண்டவபுரம் அருள்மிகு பஞ்சவடீசுவரசுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழாவில் 25—2—79 அன்று வழங்கியருளியது.

தேவாரப்பாடல்களில் இடம் பெற்றுள்ள தலங்கள் 'வைப்புத் தலங்கள்' என வழங்கப்படும் ஆனந்ததாண்டவபுரம் என வழங்கும் இத்தலம் தேவாரத்தில் குறிப்பிடப்பெற்ற வைப்புத்தலமாக விளங்குவது. இவ்வூரின் பழம்பெயர் 'கஞ்சாறூர்'. திருநாவுக்கரசர் அருளிய க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் இத்தலம் குறிக்கப்பெற்றுள்ளது. முழுமையான தேவாரத் திருப்பதிகங்கள் இத்தலத்திற்கு இருந்து மறைந்துமிருக்கலாம்.

நல்லோர் வாழும் ஊர்:

இத்தலம் தேவாரத் திருப்பதிகத்துள் இடம்பெற்று வைப்புத்தலமாக விளங்குவதோடு, மானக்கஞ்சாற நாயனார் திருவவதாரம் செய்த பெருமைக்குரியதாகவும் திகழ்கிறது ஏயர்கோன் கலிக்காமநாயனார் மானக்கஞ்சாறர் திருமகளாரை மணம் புரிந்துகொண்டு இவ்வூருக்கு மாப்பிள்ளையாகவந்தபெருமையையும் இவ்வூர் பெற்றுள்ளது இவ்வாறு பல்வகைச் சிறப்புக்களையும் பாங்குறப் பெற்ற இவ்வூரின் பழம்பெயராகிய கஞ்சாறூர் என்ற பெயர் இன்று வழக்கில் இல்லை. ஆனந்தமகாமுனிவர்க்கு இறைவன் நடனதரிசனம் காட்டியருளிய காரணத்தால் இவ்வூர் ஆனந்ததாண்டவபுரம் என வழங்கப்பெறுகிறது. இங்குள்ள நடராஜமூர்த்தி சிறப்பு மிக்கவர். வலது பாதத்தின் நடுப்பாகம் மட்டில் முயலகன் உடலின் மீது பொருந்தியுள்ளது. வேறு எந்தப்பிடிப்பும் இல்லாமல் நடனமிடும் காட்சி அருமையானது.

இத்தலத்தின் வளமை, நல்லவர்கள் இங்கு வாழ்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. ஒரு நாடோ ஊரோ நல்லவர்கள் அங்கு வாழ்வதனாலேயே வளம்பொருந்தியதாக இருக்கிறது என்பதைப் பாரதத்தில் வரும் ஒரு நிகழ்ச்சி உறுதிப்படுத்தும். பாரதத்தில் விராடபருவத்தில் பாண்டவர்கள் அஞ்ஞாத வாசத்தின்போது அவர்கள் இருக்கும் இடத்தை அறிய முயல்கிறான் துரியோதனன். பாண்டவர்கள் இருக்குமிடத்தை எவ்வாறு கண்டுபிடிப்பது என்று கேட்கிறான். அதற்கு எந்த இடம் நல்ல மழை பொழிந்து செழுமை உடையதாக இருக்கிறதோ அங்கு பாண்டவர்கள் இருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளலாம் என்று ஒருயுக்தி சொல்கிறார் பீஷ்மர்.

இந்நிகழ்ச்சி ''எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்றபடி நல்லவர் வாழும் இடம் வளமை உடையதாக இருக்கும் என்ற கருத்தை நமக்குத் தெளிவு செய்கிறது.

பிறந்த ஊர் :

'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும், நற்றவ வானினும் நனிசிறந்தனவே' என்பது பாரதியார் வாக்கு. ஒவ்வொரு வருக்கும் தாங்கள் பிறந்த ஊர்ப்பற்று இருத்தல் அவசியம். பெற்றதாய் குழந்தையைப் பேணி வளர்ப்பதுபோலவே நாம் பிறந்த ஊரும் நாடும் நமக்கு உணவு தந்து காக்கிறது. அதனால்தான் அகத்திலும் புறத்திலும் நம்மைக் காக்கும் தாயையும் நாட்டையும் இணைத்துப் பெற்றதாயும் தாய்க்குச் சமமாக ஏன்? ஒருபடி கூடுதலாகவே பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனிசிறந்தனவே என்று கூறுகிறார் பாரதியார். இவ்வூரில் பிறந்த அன்பர்கள் இவ்வூரில் உள்ள கோயிலைப் பாதுகாப்பது முக்கியமான கடமையாகும். இவ்வூரில் அன்பர்கள் தாங்கள்பிறந்த ஊரில் விளங்கும் திருக் கோயில் திருப்பணிகளுக்கு வேண்டும் உதவிகள் அளித்துள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

இன்று இத்தலத்தின் சிறப்புக்களுக்கெல்லாம் காரணமாக விளங்கும் மானக்கஞ்சாற நாயனாரின் தொண்டையும் பக்தி உணர்வையும் சிந்திப்பது நமது தலையாய கடமையாகும்.

ஏயர்கோன் கலிக்காமர் :

இவர் மானக்கஞ்சாற நாயனாரின் மாப்பிள்ளையாவார் சோழமன்னரின் சேனாபதியாக விளங்கியவர். இவரது ஊர் புள்ளிருக்கு வேளூருக்கு மேற்கே விளங்கும் திருப்புன்கூருக்கு அருகிலுள்ள பெருமங்கலமாகும். இவர் ஏயர்கோன்குடியில் தோன்றியவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு நண்பர். சுந்தரரோடு இவர் நட்புக்கொண்ட நிகழ்ச்சி குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும்.

கலிக்காமர் சிவபக்தியிலும் சிவனடியார் பக்தியிலும் சிறந்து விளங்கியவர். இவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவ ராகிய சுந்தரர் சிவபெருமானைப் பரவையார்பால் தூதனுப்பிய செய்தி கேட்டு, அவர் மீது இவர் சினம் கொண்டார். அதனைக் கேள்வியுற்ற சுந்தரர் தம் பிழையை

உணர்ந்து ஆரூர் இறைவனைப் போற்றி, கலிக்காமரின் செற்றத்தைத் தீர்த்தருள வேண்டினார். சிவபிரான் அவ்விரு வரையும் நண்பராக்கத் திருவுளம்கொண்டு கலிக்காமருக்குக் கொடிய சூலைநோயை அருளி, சுந்தரர் தீர்த்தாலொழியத் தீராதுஎன்றருளினார். கலிக்காமர் சுந்தரரால் நோய் தீர்வதைக் காட்டிலும் அந்நோய் தீராதிருத்தலே நன்றென்றிருந்தார். இறைவன் சுந்தரர் கனவில் கலிக்காமரின் சூலை நோயைச் சென்று தீர்க்குமாறு பணித்தார். சுந்தரர் நோய்தீர்க்க வருவதையறிந்த கலிக்காமர் அவரைக் காணவும் விரும்பாமல் உடைவாளால் வயிற்றைக் கிழித்துக் கொண்டு உயிர் துறந்தார். கலிக்காமர் இறந்தபின் தாமும் உயிர்விடத் துணிந்தார் அவர் தம் மனைவியார். அதற்குள் சுந்தரர் கலிக்காமரின் வீட்டிற்கு வந்துவிட்டார். கணவர் இறந்ததையும் மறைத்துச் சுந்தரரை வரவேற்றார் அவர்தம் அருமை மனைவியார். உடனிருந்தவர்கள் சொல்லக்கேட்டு ஏயர்கோன் கலிக்காமரைச் சென்று கண்ட சுந்தரர், அவர் உடைவாளால் தம்முயிரை மாய்த்துக் கொண்டு உயிர்துறந்ததை அறிந்து மனம் வருந்தினார். யானும் இவர்போலவே இறந்தொழிவேன் என்று உடைவாளைப் பற்றினார். உடனே இறைவர் அருளால் கலிக்காமர் உயிர்பெற்று எழுந்து, சுந்தரர் கையிலுள்ள வாளைப்பற்றி அவரைத்தடுத்து நிறுத்தினார். ஆரூரர் அவரை வீழ்ந்து வணங்கினார். கலிக்காமரும் வணங்கினார். இருவரும் ஒருவரையொருவர் தழுவிப் பிரியா நண்பர்களாயினர். இருவரும் திருப்புன்கூர் சென்று சிவலோகநாதன் சேவடியை வணங்கி மகிழ்ந்தனர் என்பது ஏயர்கோன் கலிக்காமரின் வரலாறு.

தூதுபோனது பிழையில்லை :

சுந்தரர் இறைவனைத் தூதராகப் பணிகொண்டது பொருந்துமா என்ற கேள்விக்கு ஏயர்கோன் கலிக்காமர் வரலாறு விடைதருகிறது. இறைவன் தாமே வலியவந்து தம்மைத் தோழராகத்தந்தும், தூதாகச் சென்றும் சுந்தரருக்கு உதவுகின்றார். எனவே இது பிழையில்லை என்பதை இந்நிகழ்ச்சியாலும் ஏயர்கோனுக்கு உணர்த்துகின்றார். சுந்தரரோ அவ்வாறு பணிகொண்டது பிழைதான் என்பதை உணர்ந்து இறைவனைப் பிழைபொறுக்குமாறு வேண்டிப் பணிகின்றார் என்பது இவ்வரலாற்றில்வரும் முக்கிய நிகழ்ச்சியாகும்.

மானக்கஞ்சாறர் :

இவ்வூரில் அவதரித்த பெருஞ்சிறப்புக்குரியவர் மானக் கஞ்சாற நாயனார். பெருமை பொருந்திய கஞ்சாறு என்னும் ஊரில் தோன்றியவர் என்பது இப்பெயரின் பொருள். இவரது இயற்பெயர் தெரியவில்லை. பெருஞ்செல்வராக விளங்கிய இவர் சிவனடியார்களுக்கு வேண்டுவன அளிக்கும் திருத் தொண்டு புரிந்து வாழ்ந்துவந்தார். இவருக்கு இறைவனருளால் ஒரு பெண்மகவு பிறந்தது. மானக்கஞ்சாறரின் பெண் வளர்ந்து மணப்பருவம் எய்தினார். பெரியவர்கள், ஏயர்கோன் கலிக்காமருக்கு அப்பெண்ணை மணம்பேசி நிச்சயித்திருந்தனர். திருமண நாளன்று மானக்கஞ்சாறரின் அடியார் பக்தியை உலகிற்குப் புலப்படுத்தத் திருவுளங்கொண்ட இறைவன் மாவிரத வேடமுடைய அடியவராக மானக்கஞ்சாறர் இல்லத்திற்கு எழுந்தருளினார். மாவிரதம் என்பது அகப்புறச் சமயங்கள் ஆறனுள் ஒன்றாகும்.

மானக்கஞ்சாறர் வணங்கி அவரை வரவேற்றார். வந்த அடியவர் இங்கு நிகழும் அற்புதச் செயல் யாது எனக்கேட்டார். மானக்கஞ்சாறர், அடியேன் பெற்ற மகளது திருமணம் என்றார். மங்கலம் உண்டாகுக என்று வாழ்த்தினார் மாவிரதியார். கஞ்சாறர் மணக்கோலம் கொண்டிருந்த மகளை அழைத்து வந்து சிவனடியாரை வணங்கச் செய்தார். அடியவர் மஞ்சு தழைத்திருந்ததெனத் தழைத்திருந்த மணமகளின் கூந்தலைக் கண்டு இவள் கூந்தல் நமக்குப் பஞ்சவடிக்கு ஆகும் என்றார். பஞ்சவடி என்பது மாவிரதிகள் மார்பில் அணியும் மயிர்ப்பூணூல்.

அதுகேட்ட மானக் கஞ்சாறர் உடனே தம்மகள் கூந்தலை உடைவாளால் அடியோடு அரிந்து அடியவரிடம் கொடுத்தார். அடியவராக வந்த இறைவன் அதனை வாங்குபவர்போலக் காட்டி மறைந்து விசும்பில் உமையம்மையாருடன் விடைமீது காட்சி கொடுத்தருளி நாயனாரைப் பார்த்து இச்செயல் உமது புகழை உலகமறியச் செய்துவிட்டது என்று அருள் புரிந்து மறைந்தார்.

அங்கு வந்த ஏயர்கோன்கலிக்காமர் இவ்வியப்புடைய காட்சியை காணவில்லையேயென்று மனம் வருந்தினார். இறைவனருளால் மணமகளின் மலர்புனைந்த கூந்தல்

வளர்ந்தது. கலிக்காமருக்கும் மானக்கஞ்சாறர் திருமகளுக்கும் திருமணம் இனிதாக நிகழ்ந்தது. இவ்வரலாறு இத்தலத்திற்குப் பெருமை தேடித்தரும் வரலாறாகும். இத்தலத்தில் விளங்கும் இறைவன் அடியவராகவந்து மானக்கஞ்சாறர் மகளின் கூந்தலைப் பஞ்சவடியாகக் கேட்ட காரணத்தினால் பஞ்ச வடீசுவரர் என வழங்கப்பெறுகிறார், இக்கோயிலில் மாவிர தியாகவந்த இறைவன் திருவுருவம் சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறும் உருவ வருணனைகளோடு விளங்குகிறது. மானக்கஞ்சாறரின் மகள்பெயர் பெரியபுராணத்தில் கூறப்பட வில்லை இத்தலத்தில் புண்ணியவர்த்தனி என்று வழங்கப் படுகிறது.

கற்பின் சிறப்பு :

மானக்கஞ்சாற நாயனார் புராணத்தில் அவர்தம் மனைவியாரின் கற்பு மேம்பாட்டையும் அவர் மகள் பெற்றோர்க்குச் செய்யும் பேருதவியைக் குறித்தும் சேக்கிழார் அருளியுள்ள பெரியபுராணப் பாடல் சிந்தித்து மகிழ்தற்குரிய பாடலாகும்.

> குழைக்கலையும் வடிகாதில் கூத்தனார் அருளாலே
> மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக்கிழத்தி யார்தம்பால்
> இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த இப்பிறவிக் கொடுஞ்சூழல்
> பிழைக்கும்நெறி தமக்குதவப் பெண்கொடியைப்
> பெற்றெடுத்தார்.

என்பதுதான் அப்பாடல். இப்பாடலில் மானக்கஞ்சாறரின் மனைவியாரது கற்பின் சிறப்பை, 'மழைக்குதவு பெருங்கற்பின் மனைக்கிழத்தியார்'' என்று சேக்கிழார் பாராட்டி உரைக்கும் சொற்றொடரும் அந்நாயனாரின் மகளைப் 'பிறவிக் கொடுஞ்சூழல் பிழைக்கும்நெறி தமக்கு உதவும் பெண்கொடி' என்று போற்றி உரைக்கும் சொற்றொடரும் பொருட்சிறப்பு உடையனவாகும். உலக வளர்ச்சிக்குப் பெய்யும் மும்மாரிகளில் ஒருமழை கற்புதெறிதவறாத பெண்களால் உண்டாகிறது. இதனை விவேக சிந்தாமணியும்.

> வேதம் ஓதும் வேதியர்க்கு ஓர்மழை
> நீதி மன்னர் நெறியினுக்கு ஓர்மழை
> மாதர் கற்புடை மங்கையர்க்கு ஓர்மழை
> மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே.

என்று கூறுகிறது. பெண்களின் கற்பை நெருப்புக்குச் சமமாகக் கூறுவர். கண்ணகியின் கற்புக்கனல் மதுரை மாநகரை எரித்ததைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது. பெரிய புராணத்தில் திருநீலநக்க நாயனார் வரலாற்றில் சேக்கிழார் திருச்சாத்தமங்கையில் வாழும் அந்தணர்கள் இல்லங்களில் அந்தணர்கள் வேட்கும் ஆகவனீயம் காருகாபத்தியம் தக்ஷிணாக்கினி என்ற முத்தீயோடு, பெண்கள் பேணிவளர்க்கும் கற்புக் கனலும் சேர்ந்து நால்வகைத் தீ வளர்க்கப்படுகிறது என்று கூறுகிறார். கற்புநெறி தவறாது மனையறம்பேணும் பெண்களே குடும்பத்திற்கு வேர்போல் விளங்குபவர்கள். சிறுத்தொண்ட நாயனாரின் மனைவி திருவெண்காட்டு நங்கையாரை 'மனையறத்தின் வேராகி விளங்கும் திருவெண் காட்டு நங்கை' எனப் போற்றியுரைக்கிறார் சேக்கிழார்.

நம் ஆதிபரமாசாரிய மூர்த்திகளாகிய குருஞானசம்பந்தர் மழை பெய்வதற்குரிய காரணங்கள் நான்கை எதிர்மறை முகத்தால் கூறுகின்றார்கள். நீதியில்லா மன்னர்களின் நாடும், விபூதி அணியாதவர் செய்தவமும், சிவபெருமானின் திருவடிகளை உணராத ஆசாரியனும், கற்புநெறிநில்லாத மகளிரும் நாடு வளமிழப்பதற்குக் காரணங்களாவர் என்று கருதுகின்றார். இது

நீதியிலா மன்னர் இராச்சியமும் நெற்றியிலே
பூதியிலார் செய்தவமும் பூரணமாம்—சோதி
கழலறியா ஆசானும் கற்பிலரும் சுத்த
விழலெனவே நீத்து விடு.

எனவரும் பாடலால் தெளிவாகிறது.

குருஞானசம்பந்தர் மிகச்சிறந்த அனுபூதிமான். அவர்கள் உலகிற்கு வழங்கிய உபதேசமொழிகள் நம்மனத்திற்கு நல்ல தெளிவை உண்டாக்க வல்லன. அவர்கள் அருளிய சிவபோக சாரத்தில் ஒரு பாடலையும், சொக்கநாத வெண்பாவில் ஒரு பாடலையும் உங்கள் சிந்தனைக்குக் கொண்டு வருகிறோம்.

உலகில் பிறந்த மக்கள் அனைவரும் ஒரே நிலையினராக இல்லை. சிலர் செல்வர்களாகவும், சிலர் ஏழைகளாகவும், சிலர் அறிவாளிகளாகவும், சிலர் மூடர்களாகவும், சிலர் நோயற்றவர்களாகவும், சிலர் நோயாளிகளாகவும் இருக்கிறார்கள். இவை போலவே எல்லாவகையிலும் ஏற்றத்தாழ்வுடையராயிருத்தற்கு

யாதுகாரணம் எனறு எல்லோரும் சிந்திக்கத்தான் செய்வர், இதற்குத் தெளிவான விடையைக் குருஞான சம்பந்தர் அருளியிருக்கிறார்.

அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்
எவரெவர்க் குதவினர் எவரெவர்க்கு தவிலர்
தவரவர் நினைவது தமை உணர்வதுவே

இத்திருப்பாடலில் குருஞானசம்பந்தர் இவ்வுலக வாழ்க்கையில் மக்கள் அடையும் இன்பத் துன்பங்களும் பிற ஏற்றத் தாழ்வுகளும் அவரவர் செய்த வினைப்பயன்களால் விளைகின்றன என்ற கருத்தைத் தெரிவித்தருளுகின்றார். வினை என்பது அவரவர் செய்யும் செயலேயாகும்.

ஒவ்வொருவரும் அவரவர் செய்த வினைப்பயன்களின் வழியே இவ்வுலகில் பிறந்து இன்பத்துன்பங்களை அனுபவிக்கின்றனர். நமக்குவரும் நன்மை தீமைகள் அனைத்தும் நாம் முன்பிறவிகளில் செய்த பழவினைகளாலேயே விளைகின்றன என்பதை இப்பாடல் தெரிவிக்கின்றது.

சொக்கநாத வெண்பா :

இறைவன் அவரவர் செய்த வினைப்பயன்களுக்குத் தக்க வாறு இன்பத் துன்பங்களை உரிய காலங்களில் உயிர்கட்கு ஊட்டுகின்றான் என்பதைச் சொக்கநாத வெண்பாவிலும் கூறியருளுகின்றார் குருஞானசம்பந்தர்.

இன்னவினை இன்னதலத்து இன்னபொழுதுஇன்னபடி
இன்னதனால் எய்தும் எனஅறிந்தே—அன்னவினை
அன்னதலத்து அன்னபொழுது அன்னபடி அன்னதனால்
பின்னமறக் கூட்டும் பிரான்.

இறைவன் வினைப்பயன்களை உயிர்கட்கு இன்னஇடத்தில் இன்னகாலத்தில் இம்முறையில் இதனால் விளைவிக்கலாம் என்பதை அறிந்து, அதில் சிறிதும் பிழையாதபடிக் கூட்டுவிப்பான் என்பது இப்பாடலின் பொருள். இவ்வுலகம் இறைவன் திருவருளாலேயே இயங்குகிறது. அவனன்றி ஓரணுவும் அசையாது. இறைவன் எவ்வளவு நல்லவர்களாயிருந்தாலும் கெட்டவர்களாயிருந்தாலும் கெடுங்காலம்

வந்தால் அவர்களைக்கெடுப்பான். நற்கதிகளில் விடுங்காலம் வந்தால் அவர்களை உய்விப்பான் என்பனபோன்ற கருத்துக் களையும் சொக்கநாத வெண்பாவில் குருஞானசம்பந்தர் கூறியருள்கின்றார். கெடுப்பதும் எடுப்பதும் அவரவர் வினைக்கு ஏற்ப அவரவர் நன்மைக்காகவே நடுநிலை நின்று நிகழ்த்திவைக்கின்றான் இறைவன் இத்தகைய அரிய உண்மை களைக் கற்பிக்கும் நூல்கள் பலவற்றை மக்கள் படித்து உணர வேண்டும்.

கும்பாபிடேகம் திருக்கோயில் பணிகளில் சிறப்புடையது இவ்வூர்க் கோயிலைத் திருப்பணிகள் செய்து கும்பாபிடேகம் செய்வதால் ஊர்சுபிக்ஷம் அடையும், இவ்வூர்மக்கள் நன்மைகள் பலவற்றை அடைவர். இவ்வூர்த் திருக்கோயில் மகாகும்பாபி டேக புண்ணியப் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் பாராட்டுகிறோம்.

கெடுங்காலம் வந்தால் கெடுப்பை கதியில்
விடுங்காலம் வந்தால் விடுவை—கொடுத்தவங்கள்
பண்ணிடினும் பாவம் பயிற்றிடினும் யாரேனும்
அண்ணலே சொக்கநா தா.



14
'திருக்கோயில்களும் - திருவிழாக்களும்'

'பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரிய பேரிழந் தாரே'.

— திருமந்திரம்.

[ஊர்ப்பெயர்களே அவ்வூரின் வரலாற்றை விளக்கி நிற்பன என்பதை எடுத்துக் காட்டி, காடுர் என்ற ஊர்ப்பெயர்க் காரணத்தை ஆய்ந்து விளக்கியருளும் குருமணிகள், மனிதப் பிறவியின் சிறப்பையும், அதனால் எய்த வேண்டிய உண்மைப் பயனையும் அறிவுறுத்தி அருளிச்செய்தது.]

கொன்றை வேந்தன் :

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா' என்பது உலக நாதர் இயற்றிய 'உலக நீதி' கூறும் அறிவுரையாகும். கோயில் உள்ள ஊரில் குடியிருந்தால் மட்டும் போதாது; அக் கோயில்களுக்கு நாள்தோறும் சென்று இறைவனை வழிபட வேண்டும் என்பதை வற்புறுத்தவே 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று 'கொன்றை வேந்தன்' என்ற நூலில் ஔவையார் கூறியுள்ளார்.

---

* 5—9—1976 அன்று காடுர் அருள்மிகு சௌந்தரேசுவரர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக தரிசனத்திற்கு எழுந்தருளிய போது வழங்கியருளியது.

ஊரும் பேரும்:

ஊர்கள் தோறும் இறைவன் உறையும் திருக்கோயிலை நடுவணதாக அமைத்து, அதைச்சூழ மக்கள் வாழும் வீதிகளை அமைத்தனர் பெரியோர். தமிழ்நாட்டில் பெரும்பாலான ஊர்களின் பெயர்கள் கோயில்களின் வரலாற்றை ஒட்டியே அமைந்து விளங்குதலைக் காணலாம். இறைவனைத் தொடர்பு படுத்தி உரைக்கும் வரலாறு ஒவ்வொரு ஊர்ப்பெயர்களின் பின்னும் மறைந்து இருப்பதைக் காணலாம். உதாரணமாக 'மயிலாடுதுறை' என்ற பெயர் அம்பிகை மயிலுருவமாய் இறைவனைப் பூசை செய்த வரலாற்றை நமக்கு நினைவு படுத்துகிறது. 'தருமபுரம்' எமதருமன்வழிபட்டு அருள்பெற்ற தால் ஏற்பட்ட பெயராக விளங்குகிறது. புள்ளிருக்கு வேளூர் - சடாயு, இருக்குவேதம், முருகன், சூரியன் வழிபட்டதை நினைவு படுத்துகிறது. இவ்வாறே ஊர்ப்பெயர்கள் பலவும் அவ்வூரில் விளங்கும்ஆலயம், தலமரம் முதலியவற்றோடு தொடர்பு உடையதாய் விளங்குவதை அறியலாம்.

மக்கள் காடுகளில் வாழும் காலத்திலேயே கடவுளை வழிபட்டு வந்தார்கள். கடவுள் வழிபாடு முதலில் மரத்தடியில்தான் தொடங்கப்பெற்றது. அம்மரமே கோயில்கள் தோறும் 'தலமரம்' எனப் போற்றப்படுகிறது.

மனிதன் யார்?

ஒரு ஊர் சிறப்பு அடைவதற்கு அங்கு விளங்கும் ஆலயங்களோடு அவ்வூரில் வாழும் மக்களும் காரணமாகிறார்கள். புறநானூறு என்னும் சங்கநூலில்,

''நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே''

என்று ஔவையார் பாடிய பாடல் ஒன்று உண்டு.

நாடாக இருந்தால் என்ன? காடாக இருந்தால் என்ன? பள்ளமாக இருந்தால் என்ன? மேடாக இருந்தால் என்ன? எந்த ஊர் நல்லவர் வாழும் ஊராக விளங்குகிறதோ அந்த ஊரே நல்ல ஊர்; அவ்வூர் வாழ்க என்பது அப்பாடலின் பொருள்.

மனிதன், மனிதன் எனும் நிலையில் வாழும்போதே அவன் நல்லவனாகின்றான்; அவன் வாழும் காடும் நாடாகிறது என்று கூறலாம். வெறும் கண்ணும் மூக்கும் காதும் பொருந்தியிருப் பதுமட்டும் ஒரு மனிதனுக்குரிய அடையாளங்கள் அல்ல. உலகில் வாழும் உயிர்களைத் தொல்காப்பியர் ஆறுவகையாகப் பிரித்துக் கூறுவர். தொட்டாலுணரும் உடல் உணர்வுமட்டும் உடைய உயிர் தாவரம். அதனோடு நாவறிவும் உடையன சங்கு, நத்தை போல்வன. அவற்றோடு மூக்கறிவும் உடையன எறும்பு, கரையான் போன்றன. மெய் நாக்கு, மூக்கு அறிவு களோடு கண்ணறிவும் உடையன வண்டு, தேனீ முதலியன. விலங்களும் பறவைகளும் அந்நால்வகை உணர்வுகளோடு செவியறிவும் உடையன. மனிதன் மேற்கூறிய உணர்வுகளோடு மன உணர்வும் பெற்று விளங்குவதால்தான் மனிதன் எனப்படு கின்றான். இதனால்தான் உலக உயிர்களில் மனிதன் மேம்பட்டவனாக மதிக்கப்படுகின்றான். ஆறாவது அறிவைப் பெற்ற மனிதன் அவ்வறிவுக்கேற்ற பண்புகளைப் பெறாத போது அவன் மனிதனில் தாழ்ந்தவனாகின்றான்.

> ''அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண்பு இல்லா தவர்''

என்ற திருக்குறளிலும் வள்ளுவர் இக்கருத்தினை விளக்கு கின்றார்.

மனிதப்பிறவி வேண்டுமா ?

உலகில் உயர்ந்த மக்கட்பிறப்பைப் பெற்றுள்ள மனிதன் மனிதப்பிறப்பின் பயனை அடைய முயலவேண்டும். அப்பரடிகள் ஒரு பாடலில் இக்கருத்தைத் தெளிவாக விளக்கியுள்ளார். உலகில் வாழும் எல்லாப்பிறவிகளைக் காட்டிலும் மேம்பட்ட மனிதப்பிறவியைப் பெற்ற ஒருவன், அப்பிறவியின் பெரும் பயனாக விளங்கும் இறைவனை வழிபட வேண்டும். தில்லையிலாடும் அவ்விறைவனின் குனிந்த புருவம், கொவ்வைச் செவ்வாய், குமிண்சிரிப்பு, பனித்தசடை, பலமேனியில் பால் வெண்ணீறு, இனித்தமுடைய எடுத்த பொற்பாதம் இவற்றைக்காணும் பேறுபெற்றால், கண்டு வணங்கும் மனம் பெற்றால் மனிதப்பிறவியின் பயனை நாம் பெற்றவர்கள் ஆவோம் என்று கூறுகின்றார் அப்பர். அப்பாடலைச் சிந்தியுங்கள்.

குனித்தபுருவமும் கொவ்வைச்செவ் வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்.
மனித்தப் பிறவியும் வேண்டுவதேஇந்த மாநிலத்தே.

மேலும், திருவிளையாடற்புராண ஆசிரியரும் இக்கருத் தினையே சிறிது மாற்றி இறைவன் புகழ் பாடும் பேறு பெறுவோமானால் மனிதப் பிறவி வேண்டும்; இன்றேல் இவ்வளவு பெரிய பிறவி தேவையில்லை என்ற கருத்தைக் குறிப்பால் உணர்த்துகின்றார். அப்பாடலையும் நோக்குவோம்.

''பாயுடையார் விடுத்தபழி அழல், வழுதி
உடல்குளிப்பப், பதிகமோதும்
சேயுடைஆ ரணம்திளைக்குஞ் செவியுடையார்,
அளவிறந்த திசைகள்எட்டும்
தோயுடையார், பொன்னிதழித் தொடையுடையார்,
விடஅரவஞ் சுற்றும்ஆல
வாயுடையார், புகழ்பாடப் பெறுவேமேல்
வேண்டுவதுஇம் மனிதயாக்கை.''

இதுபற்றித் திருமூலர் சிந்தனையையும் காண்போம்.

''பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்.
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே''

என்பது திருமூலர் திருமந்திரம்.

உயர்ந்த குறிக்கோளை அடைவதற்கே உயர்ந்த பிறப்பு நமக்குத் தரப்பட்டுள்ளது; இந்த உணர்வோடு வாழ்பவரே மனிதராவார் என்று அப்பாடலுக்குப் பொருள் காணுவது சிறப்புடையதாகும். மனிதப்பிறவி வேண்டுவதும் மகேசன் புகழ்பாடித் துதித்தற்கே ஆகும்; இல்லையேல் மாடாகப் பிறந்தாலும் குறையில்லையே என்னும் ஆழமான கருத்து விளக்கம் அப்பாடலில் இருப்பதனை நாம் நன்கு உணரலாம்.

இங்ஙனம்அன்றி அப்பாடலுக்குத் '' தில்லையில் நடமாடும் பெருமானைக் கண்டுவணங்கும் பேறுபெற்றால் மேலும்மேலும் மனிதப் பிறவிகளை நான் விரும்புகின்றேன் '' என்று கூறுவதில் சிறப்பில்லை.

ஊரும் காடும்:

மக்கள் வாழ்க்கையில் அடையத்தக்க முடிந்த குறிக் கோளாக உள்ள இறைவன் திருவடிப்பேற்றை அடைவதற்கு உதவும் திருக்கோயில்கள் இல்லாத ஊரைத் ' திருவில்லூர் ' என்றார் அப்பர். ஊருக்குரிய இலக்கணங்களை அப்பரடிகள் வகைசெய்து உணர்த்தும் பாடல் ஒன்றை நினைவுக்குக் கொண்டு வருகிறோம்.

'' திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணீ றணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையால் பாடா ஊரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா ஊரும்
அவைஎல்லாம் ஊரல்ல அடவி காடே ''

என்பது அப்பாடல்.

திருக்கோயில்கள் இல்லாத ஊரும், திருவெண்ணீறு அணியாத மக்கள் வாழும் ஊரும், திரு இல்லாத ஊர்களாகும். மக்கள் இறைவன் உறையும் ஆலயங்களுக்குச் சென்று உடலை வளைத்துப் பணிந்து அன்பு செய்தல் வேண்டும். ''பணிந்தெழுந்து குறைந்தடைந்தார் பாவம்போக்க நிற்பான்'' என்பது அப்பர் வாக்கு. '' கும்பிட்டுத் தட்ட மிட்டுக் கூத்தாடித் திரியே '' என்று சிலஞான சித்தியார் கூறுகிறது அல்லாறு பத்தி செய்யாதவர் வாழும்ஊர்களும் ஊர்கள் ஆகா. சிறியஊர்களுக்கு ஒருகோயில் போதும்; பெரிய நகரங்களில் பல கோயில்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் ஆங்காங்கு உள்ளவர்கள் ஆலயங்கட்கு எளிதாகச் சென்று வழிபடுவர்.

ஆலயங்கள் இருந்தால் மட்டும் போதாது; ஆலயங்களில் திருவிழாக்கள் பலவும் நிகழவேண்டும். 'கண்ணினால் அவர் நல் விழாப் பொலிவு கண்டு ஆர்தல்' என்பது சேக்கிழார் அருள் வாக்கு. திருக்கோயில்களில் முழங்கும் சங்கு, மணி ஓசைகள் கேட்காத ஊர்கள் ஊர்கள் ஆகா. திருவிழாக் காலங்களில் பக்தர்கள் விதானங்கள் அமைத்து வெண்கொடிகள் முதலிய கட்டி அதனைக் கொண்டாட வேண்டும். ஆலயங்களுக்குச் சென்று அரும்புகளையும் மலர்களையும் தொடுத்து இறைவனுக்கு அணிவித்துத் தரிசித்துப் பின் உண்ணும் முறைகள் மக்களிடம் வளரவேண்டும். இவ்வாறு கோயில்களும், வழிபாட்டு முறைகளும், திருவிழாக்களும் நிகழும் ஊர்களே ஊர்கள் ஆகும். இவையில்லாத ஊர்கள்ஊர்கள் ஆகா என்றும், அவ்வூர்கள் கொடிய விலங்குகள் வாழும் காடுகளாகும் என்றும் கூறுகின்றார் அப்பர்.

காடூர்:

இன்று நாம் கூடியிருக்கும் இவ்வூர்க் காடுகள் சூழ்ந்த முல்லை நிலத்தைச் சார்ந்துள்ளதால் காடூர் என வழங்கப் படுகின்றது. இவ்வூரில் சிவன்கோயில், பெருமாள் கோயில், கிராமதேவதைக் கோயில்கள் பலவும் உள்ளன. திருவிழாக்கள் நடைபெறுகின்றன. மக்கள் பக்தியும் பண்பாடும் உடையவர்களாக உள்ளனர். ஆதலின் 'காடூர்' என்று பெயர் இருந்தாலும் தல்ல ஊராகவே இருக்கிறது.



15
'வாழும் இலக்கியம்'*

'நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு'

— திருக்குறள்

[ஓர் இலக்கியத்தின் வாழ்வுக்கும் மறைவிற்கும் அடிப்படையான காரணங்கள் எவை எவை என்பதை விளக்கித் தொடங்கும் குருமணிகள், கம்பர் காவியச் சிறப்புக்களையும், பாத்திரப் புனைவுகளையும், விதந்துரைத்து, உலக ஒருமைக்குக் கம்பர் வித்திடும் திறத்தையும் எடுத்துக் காட்டி அருளிச் செய்துள்ளார்கள். 'கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்' என்ற இராம காவியத் தொடரில் வரும் 'கண்களால்' என்ற சொல்லுக்குத் தரும் விளக்கம் புது விருந்தாய் அமைகிறது.]

சொல்லும் செயலும் :

நம்நாட்டில் நல்லவற்றை நினைப்பவரும், நினைத்தாலும் தொடர்ந்து செயல்படுவோரும் அருகிக்கொண்டு வருவதைக் காணுகின்றோம்.

செயலைத் தொடர்ந்து செய்வோரும் அதன் முழுப்பயனை அடைகின்றாரா, என்றால் அதிலும் குறை இருப்பதைக் காண்கின்றோம். இவையெல்லாம் ஏன் ? என்னும் கேள்வியை எழுப்பிப் பார்த்தால் விடைகிடைக்கும்.

---

* 9—3—1979 அன்று தேரழுந்தூரில் நடைபெற்ற கம்பர் விழாவில் வழங்கியருளியது.

எந்தச் செயலும் முழுப்பயனை அடைவதற்குத் தடை கல்லாக இருப்பது எது என்று அறியும் அறிவும், அவற்றை நீக்கிச் செயலாற்றும் ஆற்றலும், அதற்குத் தேவையான பொருளும் ஆக இம்மூன்றும் இருக்குமானால் நாம் நினைத்த படியே செயலை நிறைவேற்ற முடியும்.

இம்மூன்றில் ஒன்று குறைகின்ற பொழுதும் அதனாலும் ஓர் இழப்பு ஏற்படத்தான் செய்யும். ஒருவன் வாழ்க்கை யானாலும் சரி; அவன் செய்யும் பொதுத்தொண்டு ஆனாலும் சரி; இந்த மூன்றும் மிகமிகத்தேவை என்பதை முதற்கண் உணர வேண்டும். இம் மூன்றனுள் அறிவைச் சரஸ்வதி என்றும், ஆற்றலைத் துர்க்கை என்றும் பொருளை இலக்குமி என்றும் நம்முன்னோர்கள் கண்டு போற்றினார்கள்.

வள்ளுவர் கூறுவது போல, எக்காரியத்தைக் கண்டும் அருமையானது இது; நம்மால் முடியாது; என்றெல்லாம் எண்ணித்துவளும் தோல்வி மனப்பான்மை இன்றி முழுமுயற்சி கொண்டு செய்தால் எதுவும் பயனைத்தரும் என்று உணர வேண்டும்

''அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்''

என்பது குறள்.

ஆக்கம் வழிகேட்டு வருவதற்கு நாம் இடைவிடாது ஊக்கம் உடையவர்களாகச் செயல்படவேண்டும்.

இக் ''கம்பன் கழகம்'' சென்ற ஆண்டைவிட ஒருபடி முன்னேறி வந்துள்ளது. இதற்குக் காரணம் கழகத்தினர் அறிவு திரு, ஆற்றல் இம் மூன்றும் வாய்ந்தவர்களாய் - இடைவிடா முயற்சியும் செயலில் மிகுந்த ஊக்கமும் உடையவர்களாய் அமைந்து செயல்பட்டதால்தானே தவிர வேறில்லை.

வாழும் இலக்கியம் :

கம்பன் பாடிய காவியம் பல நோக்கிலும் சிறந்துள்ளது. ஒரு காவியம் காலம் காலமாய்ப் பல்வேறு எதிர்ப்புக்களையும் கடந்து வெற்றி பெறவேண்டுமேயானால், அதனிடத்தில் ஓர் உயர்வு இருப்பது உண்மை. சில சினிமாப் பாடல்கள் மிகுந்த பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியதாய் இருந்து, பின்

இடம் தெரியாமல் மறைந்து போவதை நம் வாழ்நாளிலேயே கண்கூடாகப் பார்க்கிறோம் காரணம் அப்பாடல்கள் எழுந்த நோக்கமும் எழுதியோரின் நோக்கமும் ஒரு குறிப்பிட்ட நோக்கில் மட்டும் இருப்பதே ஆகும்.

ஆனால் கம்பர் பாடல்கள் ஏறத்தாழ 800 ஆண்டுக் காலமாக இன்றும் நிலைத்துப் போற்றப் பெறுகின்றது என்றால் அவர் நோக்கம் பரந்ததும் பயனுடையதும் ஆக இருந்ததே காரணம். மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழ வேண்டும்; அதற்கு நாம் எழுதும் இந்நூல் சிறந்த அளவில் பயன் கொடுக்க வேண்டும் என்னும் பொதுநோக்கில் அவர் பாடியதால்தான் இன்றும் அப்பாடல்கள் பலராலும் பாராட்டப் பெறுகின்றன.

நதியும் நற்றமிழ்க் கவியும்:

கம்பர் ஓரிடத்தில் நதியையும் நற்றமிழ்க் கவியையும் ஒப்பிட்டுப் பாடுகின்றார். இராமனும், இலக்குமணனும் சீதையும் கோதாவரியைக் கண்டார்கள் என்று கூறவரும் பொழுது சிலேடையாக ஆற்றிற்கும் ஆன்றோர் கவிதைக்கும் ஒப்புமைப்பட ஒருபாடல் பாடுகின்றார். அப்பாடலே அவரின் காவியத்திற்கு இலக்கணமாக உள்ளதை நாம் தெளியலாம்.

''புவியினுக்கு அணியாய், ஆன்றபொருள்தந்து புலத்திற்றாகி
அவிஅகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவி,
சவிஉறத் தெளிந்து, தண்ணென்று ஒழுக்கமும் தழுவிச்
சான்றோர்
கவிஎனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்''

என்பது அப்பாடல்.

கோதாவரி ஆறு இப்பூமிக்கு ஓர் அலங்காரமாயும், சிறந்த மலைபடு பொருள்களை முகந்து வந்து விளைநிலத்திற்கு ஆதரவாயும் மக்களுக்குப் பயன்படும் வகையில் இறங்கு நீர்த் துறைகள் பல உடையதாயும் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனும் ஐந்திணைகளின் வழிஓடிப் பயன் விளைப்ப தாயும், ஆழத்தில் உள்ள பொருள்களும் மிகத் தெளிவாகத் தெரியும் வண்ணம் தெளிந்த நீரினை உடையதாயும், குளிர்ந்த நீர்ப்பெருக்கை உடையதாயும் உள்ளது என்று அழகுறக் கூறுகிறார் கம்பர்.

இதே பாடலை வழிவழிவரும் புலவர்கள் எழுதும் கவிதைக்கும் பொருந்துமாறு அமைத்தது அவருடைய நுண்மாண் நுழைபுலத்திற்குச் சான்று எனலாம்.

சான்றோர் கவிதைகள் உலகத்தில் உயர்ந்தோர் பலராலும் கொண்டாடப் பெறும் அலங்காரம் உடையதாயும், சிறந்த அறம், பொருள், இன்பம், வீடு எனும் செம்பொருள் இலக்கினை விளக்குவதாயும், தன்னைக்கற்போர்க்கு நுண்ணறிவை விளைவிப்பதாயும், துயரமனத்தை மாற்றுவிக்கின்ற அகத்துறைகள் பலவற்றையும் தாங்கியதாயும், ஐந்திணைகளின் ஒழுக்க நெறிகளை உணர்த்துவதாயும், எச் செய்தியினையும், ஐயமறவிளக்குவதாயும், நல்லொழுக்கத்தினைக் குளிர்ச்சிபெறக் கூறுவதாயும் இருத்தலால் ஆற்றினைப்போன்றன என்கின்றார்.

இந்நிலையிலிருந்து நமக்குத் தெரிவதெல்லாம் கவிதை என்பது வெறும் சொற்கோர்வையாக மட்டும் இல்லாமல், காலக்கவிதையாகவும் இல்லாமல், காலம் காலமாய் நிலைத்து நிற்கக்கூடிய நிலையில் சமுதாய உணர்வோடு படைக்கப் பெற வேண்டும் என்பதாகும்.

இவ்விலக்கணம் கம்பரின் காவியம் முழுமைக்குமே பொருந்தும் என்று கூறலாம்.

புவியினுக்கு அணி ஆறானால், நாட்டுக்கு அணி நல்லியக்கியம் என்பதையே கம்பர் கூறுகின்றார்.

சொல்லின் செல்வன் அனுமன் :

இங்ஙனம் ஆற்றல் வாய்ந்த புலவன் பாடும் காவியத்தில் கதாபாத்திரங்கள் உணர்வதும் உணர்த்துவதும் நமக்குப் பெரிதும் சிந்தனையைத் தூண்டுவதாக அமைகிறது.

கம்பர்கண்ட பாத்திரங்களில் அன்பும் ஆற்றலும் சொல் தெளிவும் தியாக உணர்வும் உடைய ஒரு பாத்திரம் அனுமன் ஆகும்.

தன் தலைவனின் மனவேதனையை உள்ளபடி புரிந்து கொண்டது மட்டுமன்றி, கடல்கடந்து சென்று சீதையைக் கண்டும் வருகிறான் அனுமன். வருபவன் சொல்லின் செல்வன் என்பதனைக் கம்பர் நமக்கு இந்த இடத்தில் படம் பிடித்துக்

காட்டுகின்றார். ஒரு பணியினைச் செய்து வருபவன் தன் காரியத்தின் விளைவு நன்மையாய் இருந்தால் அதனை முதலில் தெரிவிக்கவேண்டும். பிறகுதான் அதற்கு ஏற்பட்ட இடையூறு களை அடுக்கிச் சொல்ல வேண்டும். காணாமல் தவிக்கும் நோயுடைய ஜீவனுக்கு உண்மையான மருந்தே, கண்டது கூறுவதுதான் எனும் நிலையில் அனுமன் மிக அருமையாகக் ''கண்டனன்'' என்று ஆரம்பிக்கின்றான். 'கண்டனன் சீதையை' எனில் அவள் தூய்மையாய் இருக்கின்றாளா? என்னும் அடுத்த கேள்வி எழும் ஆதலின் ''கண்டனன் கற்பினுக்கு அணியை'' என்று கூறுகின்றான். ''அதனை எங்ஙனம் நீ கண்டாய்?'' என்று எழும் அடுத்த கேள்விக்குப் பதில் கூறிவிடுதல் போல, ''கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்'' என்று கூறி விடுகின்றான். வேறு யாரும் சொல்லிக்கேட்டு வரவில்லை ; நானே என் கண்களால் பார்த்தேன் என்று கூறுகிறான். மேலும் அனுமன் பிரமசாரி ஆதலின் அனுமனுக்குச் சீதையின் களங்கமிலாத நிலை புலப்படுதல் இயற்கையே.

'கண்களால்' என்பதற்குச் 'சீதையின் கண்களால்' என்று பொருள் கூறுவதே சிறப்புடையது. என்னெனில். ஒருவன் கண்ணைக்கொண்டே அவன் திருடன், யோக்கியன் என்பதைக் கண்டுபிடிக்கலாம்; அதைப்போலவே கற்பினள் என்பதையும் கற்பிலள் என்பதையும் காணலாம். ''கண்ணிற் சிறந்த உறுப்பில்லை'' என்பதும் நோக்கத்தக்கது.

''பாம்பறியும் பாம்பின கால்'' என்று பழமொழிநானூறு கூறுவதுபோல, பிரமசாரியாகிய அனுமன் தன் கண்களால் கற்புக்கனலாம் சீதாபிராட்டியின் கண்களைக் கண்டு தெளிந்தான் என்று கூறுவதே சிறப்புடைத்தாகும்.

கவிஞனும் கதாபாத்திரமும் :

கம்பராமாயணம் வலியுறுத்தும் கருத்துக்களில் மிகவும் இன்றியமையாதது சகோதர மனப்பான்மையை எல்லோர் இடத்தும் எவ்வித வேற்றுமையின்றியும் கொள்ளல்வேண்டும் என்பதே ஆகும்.

இராமன், ஒரு வேடனையும், குரக்கினத்தான் ஒருவனையும், அரக்கன் ஒருவனையும் தம்பியாக ஏற்றுக்கொண்டு பாராட்டும் பாங்கினைப் போற்றவேண்டும். இவ்வொரு பண்பினை இராமாயணத்தின் வழி உலகெங்கும் பரப்பினாலேயே அதுவே நாம் கம்பனுக்குச் செய்யும் நற்பணியாகும்.

விபீஷணனை இராமன் தம்பியாக ஏற்றுக்கொண்டு கூறும் கருத்துடைய பாடல் மிகவும் சிந்திக்கத்தக்கது.

''குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு: பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்; எம்முழை அன்பின்வந்த
அகன் அமர் காதல் ஐய ! நின்னொடும் எழுவர் ஆனேம்
புகல் அருங் கானம்தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை''

இப்பாடலில் இராமனின் மன நிலையைக் கூறிய கம்பர் தன்னையும் உயர்த்திக் கொள்கின்றார். கவிஞன் உயர்வதும் கதாபாத்திரம் உயர்வதிலேயே இருக்கிறது என்பதனை உணர வேண்டும்.

சாப்பட்டு ராமன் :

நிறைவாக ஒரு கருத்தைச் சிந்திப்போம். நம்நாட்டில் வழங்கும் பழமொழி ஒவ்வொன்றிற்கும் ஒரு பின்னணி இருப்பதனை உணர்ந்து தெளியவேண்டும். யாரேனும் சாப்பாட்டிற்காகப் பொழுதைக் கழித்து வருவானானால் அவனைச் 'சாப்பாட்டு ராமன்' என்று வழங்குவதைக் காண்கின்றோம். இந்தச் 'சாப்பாடு' என்னும் சொல் இராமனுடைய பெயரோடு எங்ஙனம் தொடர்புகொண்டு வழங்கிவருகிறது என்பதனைப் பார்க்கவேண்டும். இதுபோன்ற சிந்தனை இன்றைய மக்களுக்கு வருவதும் சிந்தித்துத் தெளிவதும் மிகவும் முக்கியமாகும்.

இராமன் அயோத்திமாநகரை விட்டுக் காடுநோக்கிச் செல்லும் பொழுது பாரத்வாச முனிவரின் ஆசிரமத்தில் தங்கி அவரிடம் ஆசிபெற்றுச் செல்வதாக வருகிறது. அம்முனிவரின் குடியில் தங்கியபொழுது அவரின் விருப்பத்திற்கிணங்க இராமன் முனிவரின் உபசரிப்பினை ஏற்றுக் காடுநோக்கிச் சென்று பதினான்கு ஆண்டுகள் நிறைவுபெறும் நாளில் திரும்பும்பொழுது முன்னர் உணவுண்டு ஆசிபெற்ற நன்றி மறவாது அம்முனிவரின் குடிலுக்குச் சென்று ஆசிபெற முயல்கின்றான். அப்பொழுதும் முனிவர் உணவுண்டு போக வேண்டும் என்று விரும்ப, அதனால் காலந்தாழ்க்குமே என்று கருதியும் முனிவரின் விருப்பத்தினை நிறைவேற்றாமல் செல்வது பெருங்குற்றமாகும் என்று எண்ணியும் இராமன் அனுமனை அழைத்து ''நீ போய் பரதன் தீயில் மூழ்காமல் காப்பாற்று நாங்களும் பின்னே வந்துவிடுகின்றோம்'' என்று கூறி

அனுப்புகின்றான் பின்னர் உணவுண்டு அயோத்தி திரும்பு கின்றான் என்பது இராமாயணம் கூறும் செய்தியாகும்.

முனிவரின் விருப்பத்திற்காகவே இராமன் தங்கினாலும் சாப்பாட்டிற்காகத் தங்கினான் என்று வேடிக்கையாகக் கூறும் வழக்கம் ஏற்படலாயிற்று. அவ்வழக்கத்திலிருந்துதான் எங்கேனும் சாப்பாட்டிற்காகத் தங்கி உள்ள மனிதனைச் 'சாப்பாட்டு ராமன்' என்று கூறும்பழக்கம் உண்டாயிற்று, இதுதான் அப்பழமொழியின் பின்னணியில் மறைந்து கிடக்கும் செய்தி ஆகும்.

பலகாரம் :

முனிவர் பெருமான் இராமனை உபசரிக்கும் பொழுது அக்காட்டில் கிடைக்கும் கனிகளைக் கொடுத்து உண்ண வைத்துள்ளார். நாம் மேற்கொள்ளும் விரதநாட்களில் 'பலகாரம்' உண்ணும் பொழுது பழங்களைத்தான் உண்ண வேண்டும் என்பது பெரியோர்கள் கொள்கையாகும்.

'பழம்' எனும் சொல் 'பலம்' என்று வழங்குவதற்குக் காரணம் வடமொழியில் 'பலம்' என்றால் 'பழம்' எனும் பொருள் தருவது ஆகும். 'கதலிபலம்' 'நாளிகேரபலம்' எனும் சொல்லாட்சி வடமொழியில் பழங்களையே குறிப்பதை அறியலாம்.

விரதமிலா நாட்களில், மேலும் பிறப்பதற்குக் காரணமான விதையுடைய நெல் போன்றவற்றை உண்ணும் பாவத்திற்குப் பிராயச்சித்தம் தேடுவதுபோல, விரதநாட்களில் மீண்டும் முளைத்தற்குரிய விதைகளைத் தவிர்த்து, உண்ண இயலும் பழங்களை அதாவது மா, பலா, வாழை போன்ற கனிகளைச் சாப்பிடுங்கள் எனும் பொருளில்தான், விரதம் என்றால் பலகாரம் சாப்பிடலாம் என்று ஆன்றோர்கள் கூறினார்கள்.

ஆனால் இன்று பொங்கல், இட்லி, உப்புமா போன்ற பலவகையான ஆகாரங்களை அந்நாட்களில் உண்டுவரு கின்றோம். இதுதவறு, பெரியோர்கள் உண்டாக்கியுள்ள பழக்க வழக்கங்களை நன்கு ஆய்ந்து தெளிந்து அதனைக் கடைப்பிடித்து வாழ்வதே நலம்பயக்கும் செயலாம்.

16

பாத யாத்திரையும் பயனும்*

'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால்,
தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே':

—தாயுமானவர்.

[திருத்தலங்களுக்குப் பாதயாத்திரை செல்லும் பழக்கம் நாயன்மார்கள் காலத்திலேயே தொடங்கியது. பாதயாத்திரையின் பண்பும்-பயனும் குருமணிகளால் அழகுற விளக்கப் பெற்றுள்ளன. நம்பியாண்டார்நம்பிகள், அப்பரடிகள் முதலியோரின் சிறந்த சிந்தனைகளும் விருந்தாக அமைகின்றன.]

இடப் பொருத்தம் :

திருவாமூரில் நடைபெற இருக்கும் அப்பர்சுவாமிகள் குருபூஜை விழாவில் கலந்துகொள்ள இங்கே பல மெய்யன்பர்கள். தில்லைத் திருமுறைக் கழகச்சார்பில் இன்று பாதயாத்திரையை மேற்கொள்ள இருக்கின்றார்கள். அவர்கள் இம்மேலைக் கோபுர வாயிலில் கற்பக விநாயகர் சந்நிதியில் இருந்து புறப்படுவது மிகவும் பொருத்தமாகவே இருக்கிறது.

---

* 14—4—79 அன்று சிதம்பரம் மேலைக்கோபுரம் ஸ்ரீ கற்பக விநாயகர் சந்நிதியில் தில்லைத் திருமுறைக் கழகத் தொண்டர்கள், திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரையினைத் தொடங்கி வைத்து வழங்கியருளியது.

இன்று நம் நாட்டில் பரவலாக நடைபெறும் பாத யாத்திரை, உண்ணாவிரதம், சத்தியாகிரகம் ஆகிய அனைத்திற்கும் அப்பர் சுவாமிகளே வழிகாட்டியாகவும் மூலமாகவும் இருப்பவர். சமுதாய நன்மைக்காகத் தன்னை வருத்திக்கொள்ளலாம் எனும் பரந்த நோக்கில்தான் அப்பர் சுவாமிகள் பாதயாத்திரை போன்றவற்றை மேற்கொண்டார்.

இத்தில்லைத் திருக்கோயிலிலுள்ள நான்கு கோபுர வாயிலின் வழியாக நம்சமயகுரவர்கள் நால்வரும் தனித்தனியே வந்து நடராசப் பெருமானை வழிபட்டுள்ளனர். திருஞானசம்பந்தர் தெற்குக் கோபுரவாயில் வழியாகவும், சுந்தரமூர்த்திசுவாமிகள் வடக்குக் கோபுரவாயில் வழியாகவும், திருநாவுக்கரசர் மேற்குக் கோபுரவாசல் வழியாகவும் வந்தார்கள் என்பதற்குப் பெரிய புராண்ம் சான்று பகர்கிறது. ஆதலின் விடுபட்ட கிழைக்கோபுர வாயில் வழியாக மாணிக்கவாசகர் வந்திருத்தல் கூடும் என்று ஊகித்துத் தெரிந்து கொள்ளலாம்

அப்பர்சுவாமிகள் வந்த கோபுரமாயுள்ள இம்மேலைக் கோபுரத்திலிருந்து அவர்தம் அவதாரத்தலத்தில் நிகழும் குரு பூஜைவிழாவிற்குச் செல்லும் மெய்யன்பர்கள் பாதயாத்திரை புறப்படுவது பொருத்தமல்லவா? இன்னொன்றும் சிந்திக்க வேண்டும். திருமுறைக்கும் பிள்ளையாருக்கும் தொடர்புஉண்டு என்பதும், தில்லைக்கும் திருமுறைக்கும் தொடர்பு உண்டு என்பதும் அனைவருக்கும் தெரிந்தனவே. அங்ஙனம் தொடர் புள்ள நிலையில் இன்று இக்கற்பக விநாயகர் சந்நிதியிலிருந்து இந்தப் பாதயாத்திரை தொடங்குவது திருவருட்பொருத்தமே.

பாதயாத்திரையும் பயனும் :

பாதயாத்திரையில் செல்வோர்க்கும் அவர்களை வரவேற்று உபசரிக்கும் பக்தர்களுக்கும் இப்பாதயாத்திரை மிகவும் பயன் அளிக்கக் கூடியது. பெரியபெரிய நகரங்களிலேயே வாழ்ந்தும், அந்தநகர மக்களையே கண்டும், அவர்களின் நவநாகரிக வாழ் வினையே அறிந்தும் உள்ளவர்களுக்கு, இப்பாதயாத்திரையால் சிறுசிறு கிராமங்களைக் காணுவதும், அங்கே வாழும் மக்களின் மனநிலை, பக்திமுறை முதலியவற்றை அறிந்து கொள்வதும் அவர்களின் வாழ்வு நெறியினைத் தெரிந்து கொள்வதும் பயன் உள்ளதாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும் அங்கங்கே வாழும் மக்களிடையே நம்சைவ சமயத்தைப் பரப்புவதற்கு என்ன என்ன முறைகளைக் கையாளலாம் என்றும் அவர்களுடைய வாழ்வியலுக்குத் தேவையான உதவி, கல்வி, மருத்துவவசதி ஆகியவற்றின்வழி சமயத்தைப் பரப்பலாமா? என்பன போன்ற விபரங்களைச் சேகரிப்பதற்கும் இது மிகுந்த பயன் அளிக்கும்.

பாதயாத்திரையாக வருவோர்களை உபசரிக்கும் பக்தர்கள் தங்கள் வாழ்வு சிறக்க இதனைப் பயன்படுத்திக் கொள்வதும், அதனால்பெரும்பயன் அடைந்து இன்புறுவதும் நடைமுறையில் ஒவ்வொரு ஆண்டும் நாம் காண்பது ஆகும். இங்ஙனம் இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் உபசரிப்பதில் மனவளம் பெறுவதும், நன்கு புரிந்துகொள்வதும் மட்டும் இன்றி இவற்றிற்கெல்லாம் மேலாக மனப் பக்குவம் உற்றுப் பண்பாடு எய்துகின்றனர். 'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்' என்பது கலித்தொகை. இதனால்தான் தாயுமான சுவாமிகள்,

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்கின்றார்.

மாணவர்களுக்குப் பாடம் சொல்லித்தந்து அம்மாணவர்களை வளர்க்கும் ஆசிரியன் தானும் தன்நிலையில் வளர்ந்து சிறப்பெய்துவதை எப்படி இவ்வுலகில் காண்கின்றோமோ அதே போல, இப்பாதயாத்திரையில் இருபகுதியினரும் தம்தம் நிலையில் வளர்ந்து பிறரையும் வளர்ச்சியுறச் செய்வதைக் காண முடிகிறது.

இவற்றை நன்கு புரிந்து கொண்டு அப்பர் சுவாமிகள் குருபூசைக்காகச் செல்லும் அன்பர்கள், இவையெல்லாம் நம் வளர்ச்சிக்குத்தான் எனும் உண்மையை உணர்ந்து விட்டால் அதுவே ஒருபெரும்பயன் ஆகும்.

அருளாளர்களின் அரிய சிந்தனை:

இவ்விநாயகர் சந்நிதியில் இருந்து பாதயாத்திரை புறப்படுகின்ற காரணத்தினால், திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரை வணங்கிப் பாடிய நம்பியாண்டார் நம்பிகள் பாடலை இங்கு நினைவு கொள்வோம்.

'எல்லாம் இறைவன் செயல்' என்று சான்றோர்கள் கூறுவதும் 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்று மாணிக்கவாசகர் இயம்புவதும் 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்று தாயுமான அடிகள் சாதிப்பதும், 'ஆட்டு வித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்று அப்பர் சுவாமிகள் அருளுவதும் எண்ணிப் பார்த்தால் நமக்கு ஓர் உண்மை புலனாவது இயற்கை அதாவது இறைவன் இவ்வுலகிலுள்ள ஆன்மாவைப்பற்றித் துளியேனும் எண்ணிப் பாராவிட்டால் இதற்கு வேறுகதியே இல்லை என்பதும், இறைவனின் அருள் எண்ணமே ஆன்மாவை ஈடேற்றுகிறது என்பதுமே தெளிவாகும் உண்மையாம்.

இதனையே நம்பியாண்டார் நம்பிகள் தம் அனுபவத்தில் வைத்துக் கூறுகின்றார்

''என்னை நினைந்து அடிமைகொண்டு என் இட்டர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் — புன்னை
விரசுமகிழ் சோலை வியன் நாரையூர் மூக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்''

என்பது அவர் பாடிய பாடல்.

நம்பியாண்டார் நம்பிகளின் நாநலன்:-

முதலில் இறைவன் உயிர்களை நினைக்கின்றானா? அல்லது உயிர்கள் முதலில் இறைவனை நினைக்கின்றனவா? என்ற சாதாரண மனிதனின் கேள்விக்கும் இப்பாடலில் விடையளிக் கின்றார் நம்பியாண்டார் நம்பிகள். இறைவன் முதலில் ஆன்மாவை நினைப்பதால்தான் கேவலநிலையில் ஆணவத்தோடு அத்துவிதமாய்ப் பிரிப்பின்றிக் கிடந்த உயிர் இயங்கத் தலைப் படுகிறது இயக்கத்தால் நல்வினை தீவினை ஏற்பட்டு அதனால் பிறவி ஏற்படுகிறது பிறப்பு என்பது ஆணவத்தோடு தனித்திருந்த உயிர் கருவி காணங்களுடன் கலந்திருப்பதே யாகும். உயிரின் அறிவு, இச்சை, செயல்களை மறைப்பதும், கீழ்த்தரமான வழிகளில் ஈடுபடுத்தி இடர்ப்படுத்துவதுமே ஆணவத்தின் செயல்களாகும் எனவே ஆணவத்தால் விளையும் இடர்களைக் கெடுத்தாலன்றி உயிர் இறைவனை நினைய மாட்டாது. ஆணவ இடர், ஓரளவு நீங்கிய உயிர்தான் இறைவனை நினைக்கத் தலைப்படும். அப்படிப்பட்ட உயிர்களிடத்து இறைவன் தன்னை நினையுமாறு தன்னையே

தருகின்றான். இதனையே வேறொருவகையில் 'மணிவாசகரும் ''தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னைச் சங்கரா யார்கொலோசதுரர், அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அப்பர்சுவாமிகளின் அருள்வாக்கு

இங்ஙனம் விநாயகப் பெருமானின் வணக்கமாக நம்பி யாண்டார் நம்பிகள் பாடும் இப்பாடலின் கருத்து, இவருக்கு முன்னே வாழ்ந்த அப்பர்சுவாமிகள் பாடலிலும் இருப்பதைக் காணலாம்.

''என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும் முன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்னடியான் என்று அறிதலும்
தன்னை நானும் பிரான் என்று அறிந்தெனே''

என்பது அப்பாடல். என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான் ஆதலின் தன்னை நானும் முன் ஏதும் அறிந்திலேன் என்று முன் இரண்டு வரிகளில் தான் இறைவனை அறிந்துகொள்ளாமைக் குக் காரணம் கூறினார். பின் இரண்டு வரிகளில் என்னைத் தன்னடியான் என்று அறிதலும் அதனால் தன்னை நானும் பிரான் என்று அறிந்தேனே என்று புரிந்துகொண்டமைக்கு விளக்கமும் கூறுகின்றார். இங்கு அறிதலை நினைதல், உணர்தல் என்றபொருளில் கொள்ளவேண்டும், 'உணருமாறு உணரே' 'நினையுமாநினையே' என்ற திருவிசைப்பாச் சொற்றொடரும், ''உணர்த்தில் உணர்வேன், உணர்த்தாயேல் நாயேன் கணத்தும்உணரும்வகை காணேன்'' என்ற தருமை முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கும் நினைந்து இன்புறத் தக்கன.

என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான் என்பதற்குப் பெருமான் ஏதும் அறியாதவன் என்பது பொருளல்ல; ஆன்மாவிற்கு மூன்று நிலைகள் உண்டு. அவை கேவலநிலை, சகலநிலை, சுத்தநிலை என்பனவாம். அவற்றுள் கேவலநிலை என்பது காரிட்ட ஆணவக்கருவறையில்கண்ணிலாக்குழவியைப் போல் கட்டுண்டிருக்கும் நிலையாகும். சகலநிலை என்பது தத்துவக்கருவி கரணங்களுடன் கூடிப்பிறந்து, இருந்து, இறந்து உழலும் நமது நிலையாகும். சுத்தநிலையாவது பிறப்பு

இறப்புக்களினின்றும் விடுப்பட்டுப் பேரொளிப்பிழம்பாகிய இறையொளியில் இரண்டறக்கலந்து நிற்கும் நிலையாகும். சுருங்கச்சொல்லின் ஆணவத்தோடு அத்துவிதம் கேவலநிலை மெய்ஞ்ஞானத்தாணுவினோடு அத்துவிதம் சுத்தநிலை, அத்து விதம் என்பது பொருள் தன்மையால் வேறாக உள்ள இரு பொருள் கலப்பினால் வேற்றுமைதோன்றாது ஒன்றாயிருத் தலாம். இதனைத் தாயுமானவர்,

''ஆணவத்தோடு அத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோடு அத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ?''

என்று அருளிச்செய்தார்.

என்னை இறைவன் எந்தவகையிலும் நினைந்து உணர்த்தாமையின் தன்னை—இறைவனை நானும்முன்ஏதும் அறிந்திலேன். அவன் உணர்த்தாதமுன் எந்தவகையாலும் இறைவனை நினையவில்லை; அறியவில்லை; உணரவில்லை என்னை இறைவனை தன் அடியான் என்று அறிந்ததுமே அவனை நானும் பிரான் – தலைவன் என்று அறிந்து இன்புற் றேன் என்று இறுமாந்து பாடுகின்றார் அப்பர் சுவாமிகள். அப்பர் அருளிய அரிய விருந்தைச் சுவைத்துப் பாதயாத்திரை தொடங்குதல் மிகவும் பொருத்தமாகவே உள்ளதல்லவா?

17

அப்பரடிகளான அருள் அனுபவம்*

'ஏனின் சிவபோகம் இங்கிவர்க்கே என்னஉழ
வாரங்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்ப தெந்நாளோ'

— தாயுமானவர்.

[அப்பரடிகளிடம் பேரீடுபாடும், அப்பர் தேவாரத்தில் முறையான பயிற்சியும், ஆராய்ச்சியும கொண்டிலங்கும் குருமணிகள், 'பிறப்போடு இறப்பு என்றும் இல்லாதான்காண்' என்று தொடங்கும் நாவரசரின் திருவாரூர்த் திருத்தாண்டகத்தை விளக்கி அருளிச்செய்த அரிய புதையலாக இவ்வருளுரை அமைகிறது]

''பிறப்போ டிறப்பென்றும் இல்லா தான்காண்
பெண்ணுருவோ டாணுருவ மாயினான்காண்
மறப்படுமென் சிந்தை மருள் நீக்கினான் காண்
வானவரும் அறியாத நெறிதந் தான்காண்
நறப்படுபூ மலர்தூபம் தீபம் நல்ல
நறுஞ்சாந்தம் கொண்டேத்தி நாளும் வானோர்
சிறப்போடு பூசிக்கும் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெம் செல்வன் தானே''

— அப்பர் சுவாமிகள்

ஆதியும் அந்தமும் இல்லாதவன் :

இன்று அப்பர் சுவாமிகள் குருபூஜைத் திருநாள். இந்நாளில் இங்குக் கூடியுள்ளோர்க்கு அப்பர் அருளிய பாடல்

---

* 22—4—79 அன்று திருவாமூரில் நடைபெற்ற ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாவில் வழங்கியருளியது.

ஒன்றினை நினைவுபடுத்தினால் அது பயன்தரும் என்று கருது கின்றோம். அப்பர் சுவாமிகள் பல இடங்கள் தோறும் தலயாத்திரை செய்துவருகின்றபொழுது திருவாமூருக்கும் சென்று சேர்ந்தார். அப்பொழுது, அங்குக் கோயில் கொண்டுள்ள பெருமானை வணங்கித் துதித்துப்பாடிய பாடல் ஒன்றைத்தான் முதற்கண் நினைவுப்படுத்தினோம். அந்தப் பாடலையே இன்றைய சிந்தனைக்கும் எடுத்துக்கொள்வோம்.

இறைவன் பிறப்பு இறப்பு இல்லாதவன். இவ்வுலகில் எப் பொருளுக்கும் தோற்றம் உண்டேல் மரணம் உண்டு ; ஆதி இருந்தால் அந்தம் உண்டு முதல் இருக்குமேல் முடிவும் உண்டு இவை எதுவும் இல்லாதவன் இறைவன். அவனுக்கு ஆதியும் இல்லை ; அந்தமும் இல்லை. அதனால்தான் மணிவாசகர் ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி'' என்று பாடு கின்றார். அவன் முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாக இருப்பவன். ஆதி அந்தம் இல்லாத இறைவனை அநாதி என்றும் கூறுவர். இன்னும் கூறப்போனால் எந்த நிலையிலும் மாற்றம் இல்லாதவன். என்றும் ஒருபடித்தாய் இருப்பவன். அதனால்தான் அவனை இயற்கை என்று கூறினர் முன்னோர்.

எது இயற்கை ?

இன்று எதை எடுத்தாலும் இயற்கை என்று சொல்லுவதைக் கேட்கின்றோம். நம் ஊரில் ஒருசோலை இருந்தால், ஆகா ! இயற்கை என்ன அழகாக இருக்கிறது! என்கிறோம். செவ்வானத்தைப் பார்த்தால் இயற்கை என்கிறோம் அது தவறு. இன்று நாளை என்றில்லாமல் என்றுமே மாறாததாக ஒருநிலையிலேயே இருப்பது எதுவோ அதுவே இயற்கை என அழைக்கப்பெறும். ஆகவே இறைவனே அந்நிலையில் உள்ளவன். பிறவெல்லாம் காலவெள்ளத்தில் கரைந்துபோகக் கூடியன. ஆதலின் இறைவனையே இயற்கை என அழைத்தல் தகும். அவன் எந்தச்செயல் செய்தாலும் விகாரப்படுபவன் அல்லன். அவன் அவிகாரி. ஏனெனில் நினைவு மாத்திரையே காரியங்கள் ஆற்றும் தன்மையுடையவன். இத்தகைய தன்மைகள் உடைய இறைவனையே அப்பரடிகள் முதற்கண் 'பிறப்போடு இறப்பு என்றும் இல்லாதான் காண்' என்று கூறுகின்றார்.

பிறந்த கதைகூட இல்லை :

நாம் கருவிகரணங்களோடு கூடிநிற்பதே பிறவியாகும். இப்பிறவி இல்லையெனில் நாம் செயல்படமுடியாது. ஆனால் இறைவனுக்குக் கருவியோ கரணங்களோ தேவையில்லை. உதாரணமாகச் சொல்லப்போனால் நாம் ஒரு பொருளைக் காணக் கண் வேண்டும். ஒலியைக் கேட்கக் காது வேண்டும் ஓரிடத்துக்குச் செல்லுவதற்குக் காலின் துணை வேண்டும். இறைவனுக்கு அங்ஙனம் கருவிகரணங்கள் தேவையில்லை. அதனால் எவ்வகையிலும் இறைவனுக்குப் பிறப்புத் தேவை யில்லை. குகைநமசிவாயதேவர் என்பார் 'அருணகிரி அந்தாதி' எனும் நூலில் இக்கருத்தினைவைத்து அழகுறப்பாடுகின்றார்.

> "எல்லார் பிறப்பும் இறப்பும் இயற்பாவலர்தம்
> சொல்லால் தெளிந்தேம்நம் சோணேசா-இல்லில்
> பிறந்தகதை யும்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்(டு)
> இறந்தகதை யும்கேட்டி லேம்"

இப்பாடலில் அவர் கூறும்பொழுது 'பிறந்ததைக் கேளேம் என்று கூறாது 'பிறந்த கதையும் கேளேம்' என்று கூறியது பொருள் ஆழம் உடையது. எங்கும் கதையாகக்கூட இறைவன் இன்ன இடத்தில் இங்ஙனம் பிறந்தான் என்று கேட்க வில்லையே என்கின்றார். இதனால்தான் அம்பிகைக்கும் முருகனுக்கும் பிள்ளைத்தமிழ் பாடிய புலவர்கள்கூட, சிவபெருமானுக்குமட்டும் பிள்ளைத் தமிழ் பாடாதிருக் கின்றார்கள் என்று இலக்கிய உலகிலும் இக்கருத்து நிலை நாட்டப்படுவதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

பெண்ணுருவும் ஆணுருவும் ஆயினான் :

அடுத்துப் 'பெண்ணுருவோடு ஆணுருவும் ஆயினான்காண்' என்கின்றார். இவ்வுலகம் முழுவதுமே ஆண் பெண் என்றும் இருபகுப்பில் அடங்கி விடக்கூடியது. சைவ சித்தாந்தமும் இவ்வுலகில் என்றும் நின்று நிலவும் பொருள்கள் மூன்று என்று கூறுகின்றது. 1. கடவுள், 2. அதற்கு நேர் எதிரிடை யான உலகம், 3. இடைப்பட்டு நிற்கும் உயிர்கள். இவை மூன்றும் ஒன்றால் ஒன்று தோற்றுவிக்கப் படாதது. என்றுமே நின்று நிலவும் தன்மையுடைய உண்மைப் பொருள்கள்.

இந்த வகையில் மூன்றும் ஒன்றானாலும் தகுதியில் வேறு வேறு நிலை உடையதே. இந்த மூன்று பொருள்களும் மேலே கூறியதுபோன்று தனித்தனியே இரண்டிரண்டு பகுப்புக்கள் கொண்டன. உயிர்கள் ஆண் பெண் என்றும். உலகம் அதாவது ஜடப்பொருள்கள் (அறிவில்லாப் பொருள்கள்) நேர்முனை (Positive) எதிர்முனை (Negative) என்றும், கடவுள் அம்மை அப்பன் என்றும் பகுப்புக்கள் உடையனவாய் இருப்பதை நாம் உணரலாம்.

கடவுள் ஆண் பெண் வடிவில் இருப்பது, இவ்வுலகில் உயிர்கள் அனைத்தும் அங்ஙனம் இருந்து வளர்ச்சியடைய வேயாம். உயிர்களுள் தாவரங்கள்முதல் தேவர்கள்வரை இரு கூறுகள் உடையனவாய் இருக்கின்றன. தாவரத்திலும் இடப் பக்கம் பெண்மையும் வலப்பக்கம் ஆண்மையும் இருப்பதை உய்த்து உணர்ந்துகொள்ளலாம். ஒவ்வொரு ஆணிடமும் ஆண்மை மிகுந்து பெண்மை குறைந்தும், ஒவ்வொரு பெண்ணிடமும் பெண்மை மிகுந்து ஆண்மை குறைந்தும் இருப்பதனைக் கூர்ந்துபார்த்தால் புரிந்துகொள்ளக்கூடும். ஆணிடம் பெண்மையே இல்லை என்றோ, பெண்ணிடம் ஆண்மையே இல்லை என்றோ எண்ணுவது தவறு. இறைவனும் இந்த ஆணும் பெண்ணும் கலந்த நிலையில் இருப்பதைத்தான் அர்த்தநாரீசுவரர் எனும் உருவில் உணர்த்து கின்றான். ஜடப்பொருள்களிலும் இருகூறுகள் உள்ளன. பொதுவாகப் பொருள் ஒன்றாய், தன்மை இரண்டாய் இருப்பதே நியதி; பயனுமாகும். பொருளும் ஒன்றாய், தன்மை யும் ஒன்றாய் இருந்தால் பயன்தராது. ஒருதாளம் ஓசைதராது. மின்கம்பிகூட இரண்டு வகையாக இருந்து பொருந்துகிற பொழுதுதான் மின்சாரம் கிடைக்கிறது. ஆதலின் இறைவனாம் முதல்வன் எங்ஙனம் இரண்டாகி இருந்து அருளுகின்றானோ அங்ஙனமே சார்ந்தவையும் இருப்பதை உணரவேண்டும்.

மருள் நீக்கிய மாண்பு :

அடுத்து, 'மறப்படும் என் சிந்தைமருள் நீக்கினான்காண்' என்கின்றார். மறம் என்றால் பாவம் என்று பொருள். பாவத் தில் படஇருந்த என்னைக்காத்து என் சிந்தையின் மயக்கத்தை நீக்கியருளியவன் இறைவன் என்கின்றார் 'மருள் நீக்கினான் காண்' எனும் தொடர் அறிந்து இன்புறக் கூடியது. தம் தாய்

தந்தையர் தமக்கு இட்ட மருள் நீக்கியார் எனும் பெயரினை நினைவு படுத்திக்கொள்வார் போல இந்த இடத்தில் வைத்துப் பாடியுள்ளார் என்று நாம் எண்ணி மகிழ இடந்தருகின்றது.

'வானவரும் அறியாத நெறிதந்தான் காண்' என்பது அடுத்து வருவது. இதில் தேவர்களும் உண்மையான விடுதலை யாம் இறைவனடி அடைவது எனும் புண்ணியநிலையை அறியாதவர்கள் என்று அவர்களை நமக்கு இனங்காட்டு கின்றார். அந்தத் தேவர்களும் இறைவன் அடியைத் தொழுது வீடுபேறு அடையவேண்டும் என்று நினைத்தால் இப்பூவுலகில் வந்து வழிபட்டால்தான் இயலும் என்பதனையும் குறிப்பாக நமக்கு உணர்த்துகின்றார். வானவரும் அறியாத நெறி தருவான் என்று எதிர்காலத்தால் குறிப்பிடாது 'தந்தான்' என்று இறந்த காலத்தால் குறிப்பிட்டுள்ளார். சுவாமிகள் தாம்பெற்ற இறையருள் அனுபவத்தால் வானவர்கள் அறியாத நெறியாகிய வீடுபேறும் அடைவேன் என்ற உறுதிப்பாட்டில் இங்ஙனம் அருளியுள்ளார். " வாராக்காலத்தும் நிகழும் காலத்தும் ஓராங்கு வரூஉம் வினைச்சொற்கிளவி, இறந்த காலத்துக்குறிப்பொடு கிளத்தல் விரைந்த பொருள என்மனார் புலவர் " எனவரும் தொல்காப்பிய நூற்பாவை இங்கு நினைவு படுத்திக் கொள்ளவேண்டும்.

ஏத்துவதும் பாடுவதும்:

அடுத்து அவன் திருவடியை அடையும் வழி முறையில் ஒன்றான சிவபூஜை செய்வது எப்படி என்கின்றார். 'நறப்படு பூ மலர் தூபம் தீபம் நல்ல நறுஞ்சாந்தம் கொண்டேத்தி...' என்று கூறுகின்றார். தேன்பொருந்திய போதுகளையும் (போது, மலரும் பக்குவத்தில் உள்ள அரும்பு) மலர்களையும், தூபம்-தீபம், நல்ல நறுஞ்சாந்தம் முதலியவற்றையும் கொண்டு ஏத்தித் துதித்து வழிபடவேண்டும். வெறும் பொருள்களின் கூட்டம் மட்டும் போதாது. அவற்றுடன் நாம் இறைவனை எண்ணித் துதிக்கவேண்டும் என்று கூறுகின்றார். அப்பர் சுவாமிகளே " நிலைபெறுமாறு எண்ணுதியேல் " என்று தொடங்கும் மற்றொருபாடலில் "பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்துபாடி" என்று கூறுவதும் இங்கே நினைவுகூரத்தக்கதுஆகும். புனைந்து ஏத்துவது, புகழ்ந்து பாடுவது எனும் இரண்டு நிலைகளை நமக்கு விளக்குகின்றார் அடிகள். உடல்வழியும் உணர்வு

வழியும் நாம் வழிபடவேண்டும் என்பதைத்தான் இவ்விரண்டு நிலைகளும் நமக்குக்காட்டுகின்றன.

அந்திக் காப்பு :

இந்நிலையில் ''நாளும் வானோர் சிறப்போடு பூசிக்கும் திருவாரூர்'' என்று கூறுகின்றார். திருவாரூர்த் திருக்கோயிலில் தேவாசிரய மண்டபம் ஒன்று இருப்பதைச் சுந்தரர் வரலாற்றாலும் நாம் உணர்கின்றோம். அம்மண்டபம் தேவர்கள் வந்து தங்கும் மண்டபம் என்னும் பொருளில் தேவ–ஆசிரய - மண்டபம் என்று அழைக்கப்பெறுகிறது. இன்றும் திருவாரூர்த் திருக்கோயிலில் மாலை வழிபாட்டில் தேவர்களும் வந்து வழிபடுவதாக ஐதிகம் இருக்கிறது அதனால்தான் திருவாரூர்த்திருக்கோயிலில் மாலை வழிபாடு சிறந்தது என்று கருதப்படுகிறது. மாலை வழிபாட்டை அந்திக்காப்பு என்று வழங்குகின்றனர். மேலும் அப்பர் சுவாமிகள் இப்பாடலில் ''சிறப்போடு பூசிக்கும் திருவாரூர்'' என்று குறிப்பிடுவது திருவாதிரை போன்ற நாள்களில் சிறப்பு வழிபாடும் மற்ற நாள்களில் நித்திய பூசையும் நடைபெற்றது என்ற குறிப்பினை நமக்கு உணர்த்தவே எனலாம். திருவள்ளுவர் ''சிறப்பொடு பூசனை செல்லாது...'' என்று கூறுவதும் இங்கே நினைவுகூரத் தக்கது ஆகும்.

இங்ஙனம் இப்பாடல் முழுவதும் அப்பரடிகளின் அரும் பெரும் அருள் அனுபவமும், அரிய சொல்லாட்சியும் மிளிர்வதை நாம் நன்கு நுணுகி ஆய்ந்து உணரலாம். அவ்வருளாளரின் பாடல்கள் ஒவ்வொன்றையும் இங்ஙனமே ஆய்ந்து கற்கவும் அதன்வழி நிற்கவும் முயலவேண்டும்.



18
அமரர்கள் போற்றும் அமரபுரீசுவரர்*

'ஆதி அந்தங் காட்டா தகண்டிதமாய் நின்றுணர்த்தும்
போதவிழ்வாம் அடியைப் போற்றும்நாள் எந்நாளோ'
— தாயுமானவர்.

[தலப்பெயர்கள், இறைவன் திருநாமம் இவற்றின் பின்னணியில் புதைந்து கிடக்கும் வரலாற்று உண்மைகளையும், தத்துவக் குறிப்புக்களையும், நுட்பமாக ஆய்ந்து வெளிப்படுக்கும் விருப்புடையுருமணிகள் 'விளாகம்' என்ற ஊர்ப் பெயரையும், அமராபுரீசுவரர் என்ற இறைவன் திருநாமத்தையும் ஆய்ந்து அவற்றின் பின் புலங்களை எடுத்துக்காட்டி அருளியுள்ளார்கள்.]

விளாகத்தின் விளக்கம் :

''புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலர்வன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே''

நாளை இவ்வூர்த்திருக்கோயிலில் கும்பாபிஷேக விழா நடைபெற இருக்கிறது. விளாகம் எனும் இவ்வூரின் பெயர்

---

* விளாகம் ஸ்ரீபெரியநாயகி உடனாகிய ஸ்ரீ அமரபுரீசுவர சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேக விழாவின் முதல் நாளான 10—7—79 அன்று வழங்கியருளியது.

பற்றித் தெரிந்து கொள்வது நலமாகும். 'வளாகம்' என்றால் 'சுற்றியுள்ள இடம்' என்று பொருள்தரும். இன்றும் திருக் கோயிலைச் சுற்றியுளள இடத்தை மடவிளாகம் என்று அழைக்கின்றோம். 'மடவிளாகம்' என்னும் அச்சொல்லுக்கும் அவ்விடத்திற்கும் என்ன தொடர்பு? நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அக்காலத்தில் திருக்கோயிலைச்சுற்றிக் கோயிலில் பணிசெய்யும் பணிப்பெண்கள் வசித்துவந்தனர். அவர்கள் தெய்வீக ஆடல் பாடல்களில் தேர்ந்தவர்களாக இருந்ததோடன்றி இறைவனுக்கு மலர்கொய்து மாலை தொடுத்துக்கொடுப்பது போன்ற பல பணிகளையும் செய்து வந்தனர். அவர்கள் வசிக்கும் இடம் திருக்கோயிலைச் சுற் றி இருந்தது. ஆகவே பெண்கள் (மடவார்) வசிக்கும் இடம் எனும் பொருளில் 'மடவார் விளாகம்' என்று வழங்கிப் பின் அச்சொல் 'மடவினாகம்' எனச் சுருங்கி இருத்தல் வேண்டும் என்று தருத இடம் தருகிறது. எனவே பரவையார் போன்ற, அப்பெண்கள் வாழ்ந்த இடத்திற்கு இப்பெயர் ஏற்பட்டுள்ளது எனலாம். ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் மடவார் விளாகம் என்ற ஊரே இருப்பதும் இங்கு அறியத்தக்கதாகும். அவ்வகை யில் இவ்வூர் அமரபுரீசுவரரை அமரர்கள் சூழ்ந்து வழிபட்ட இடமாகக் கொள்ளலாம்.

அமரர் யார்?

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானின் திருப் பெயர் அமரபுரீசுவரர். அம்பாளின் திருப்பெயர் பெரியநாயகி. அமரர்கள் பூசித்துப் போற்றிய ஈசுவரர் இக்கோயிலிலுள்ள பெருமான். அமரர் எனும் சொல் தேவர்களைக் குறிக்கும். தேவர் எனும் சொல் இன்று நம்நாட்டில் மறவர் ஜாதியைக் குறிக்கும் பெயராக விளங்குவதைக் காண்கின்றோம். 'மறவர்' எனும் பிரிவினருக்குத்தேவர் என்றபெயர் எங்ஙனம்ஏற்பட்டது என்பது சிந்தித்தற்கு உரியது. 'மறவன்' என்றால் வீரம் உடையவன் என்று பொருள். போர்க்களத்தில் போரிட்டு வீரசொர்க்கம் அடையும் வாழ்வு நெறியினைக் கைக்கொண்ட வர்கள் ஆதலின் மறவர்களும் தேவர்கள் என அழைக்கப் பெறுகின்றனர். 'படையாட்சி' எனும் சொல்லும் வீரப் படையை ஆள்பவன் எனும் பொருளில்தான் தோன்றியிருத்தல் வேண்டும். அச்சொல் படையாட்சி என்று மருவி வழங்குகிறது.

வன்னி-நெருப்பு, வன்னியைப் போன்ற சுடுசினம்மிக்க வீரர் களாயிருந்தமைபற்றியே படையாட்சியர்களை வன்னியர் எனவும் வழங்கி வருகின்றனர்.

அமரர் போற்றிய ஆலயங்கள் :

இக்கோயிலிலுள்ள பெருமானைத் தேவர்கள் வந்து வழி பட்டது போன்று பல திருத்தலங்களிலும் உள்ள பெருமானை அங்கங்கே தேவர்கள் பலரும் வந்து வழிபட்டனர் என்பது தெளிவு. சாயாவனம் எனும் சாய்க்காட்டில் தேவேந்திரன் வந்து பூஜை செய்து வழிபட்டான் என்று வரலாறு கூறுகிறது. இதுபோன்று திருக்கற்குடியில் எழுந்தருளியுள்ள பெருமானைத் தேவர்களும் மற்றவர்களும் பூசித்து வழிபட்டனர் என்று சுந்தரரின் திருப்பதிகம் கூறுகிறது.

"மறையோர் வானவரும் தொழுதேத்தி வணங்கநின்ற
இறைவா எம்பெருமான் எனக் கின்னமு தாயவனே
கறையார் சோலைகள்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
அறவா அங்கணனே அடியேனையும் அஞ்சலென்னே"

என்பது அவர் பாடிய பாடல். இவைபோன்ற பல தலங்கள் தமிழகத்தில் இருக்கின்றன.

மாலவன் விருப்பமும் மலரவன் ஆசையும் :

மாணிக்கவாசகர் தாம் பாடியருளிய திருப்பள்ளியெழுச்சி எனும் பகுதியில் பெருமானை வழிபட்டு உய்யத் திருமாலும் நான்முகனும் எங்ஙனம் ஏங்குகின்றனர் என்பதனை ஒரு பாடலில் தெளிவுறக்கூறுகின்றார். "திருப்பெருந்துறையில் உறையும் பெருமானே! இந்தப்பூமி சிவன் உய்யக்கொள்கின்ற வாற்றை எண்ணிப் புவனியில் போய்ப் பிறலாமையால் நாம் நாட்களை அவமே போக்குகின்றோம் என்று திருமாலும் நான்முகனும் இப்பூமியில் பிறந்து வழிபட விரும்புகின்றனர்; விரும்புகின்ற அவர்களுக்கெல்லாம் அருள் செய்யாது நின் அலர்ந்த மெய்க்கருணையாம் தேவியுடன் நீ எளிய எம்மையும் ஆட்கொள்ள வருகின்றாய்! அங்ஙனம் இருந்தும் இப்பூமியில் பிறந்தோர் உன்னைப் பூசிக்கும் சிந்தனை இன்றி அவமே பொழுது போக்குகின்றனரே!" என்று மணிவாசகர் சொல்லாமற் சொல்லி நமக்கு உணர்த்துகின்றார். இப் பாடலைத்தான் முதலில் குறிப்பிட்டோம்.

சொர்க்க மத்திய பாதலம் :

இங்ஙனம் பெருமான் இந்த உலகைக் காக்கின்றான் என்பதைத் திருமாலும் நான்முகனும் அறிந்தனர். அறிந்தவர்கள் நாமும்போய்ப் புவனியிற் பிறக்காமல் இருக்கின்றோமே என்று வருந்திப் பூமியில் பிறந்து பூசித்து உய்ய விரும்புகின்றனர். அவர்களே அப்படி விரும்புகின்றனர் என்றால் இப்பூமியில் பிறத்தல் எத்துணை நற்பேறு என்பதை நாம் நன்கு சிந்தித்தல் வேண்டும். இங்ஙனம் பூமியில் பிறந்தும் நாம் அவமே செய்தால் என்ன பயன்? இப்பூமியில் நல்வினையால் புண்ணியத்தையும், தீவினையால் பாவத்தையும் மக்கள் சம்பாதிக்கின்றனர். புண்ணியப் பயனாகிய இன்பத்தைத் தேவர்களாகி மேலுலகமாகிய சுவர்க்கத்தில் அனுபவிக்கின்றனர். பாவத்தின் பயனாகிய துன்பத்தைக் கீழுலகமாகிய நரகத்தில் (பாதலத்தில்) அனுபவிக்கின்றனர். எனவே இன்பத் துன்பங்களுக்கு விளைநிலமாக இருப்பது மத்தியில் உள்ள பூமியே ஆதலால் இங்குதான் நன்மையும் தீமையும் செய்ய முடியும். சுவர்க்கமும் நரகமும் இன்பத் துன்பங்களை அனுபவிக்கும் இடங்களே. புண்ணியப் பயன் முடிந்தால் தேவர்களும், பாவப்பயன் முடிந்தால் நரகர்களும் திரும்பிவரும் இடம் மத்தியில் உள்ள பூமியேயாம். இது பற்றியே திருமாலும் பிரமனும் பிறவா இன்பப்பெருநெறி பெற்றுய்யப் பூவுலகைக் கண்டு ஆசைப்படுகின்றனர் என்கிறார் மணிவாசகர்.

கருணையே தேவி

பெருமான் தம் மெய்க்கருணையாகிய தேவியுடனே வந்து தான் அருள்பாலிக்கின்றார் என்பதனைச் சேக்கிழாரும் ஆனாயர் வரலாற்றில் அருளிச்செய்வதைக் காணலாம். அருள், கருணை என்பன ஒரு பொருட்சொற்கள். 'அருளது சத்தியாகும் அரன்றனக்கு' என்ற சித்தியார் வாக்கும் இங்கு நினைவு கூரத் தக்கது.

> "ஆனாயர் குழலோசை கேட்டருளி அருட்கருணை
> தானாய திருவுள்ளம் உடையதவ வல்லியுடன்
> கானாதி காரணராம் கண்ணுதலார் விடையுகைத்து
> வானாறு வந்தணைந்தார் மதிநாறும் சடைதாழ"

என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு.

பெருமான் அடியார்களுக்கு அருள்பாலிக்கும்போது தன் தேவியோடும், வருத்தும்போது தனித்தும் வருவதைப் பெரிய புராணத்தில் பல இடங்களிலும் அறிந்துகொள்ளலாம். அனுக்கிரகம் என்றால் கருணையாம் தேவியுடனும், நிக்கிரகம் என்றால் தனித்தும் பெருமான் வருவதை நாம் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

இதுபற்றியே பெருமான் அவனியில் புகுந்து நம்மை ஆட்கொள்ள வரும்போது அலர்ந்த மெய்க்கருணையாகிய தேவியுடன் வருகிறார் என்று அருளிச்செய்தார் மணிவாசகப் பெருமான்.

சித்தியாரில் ஒரு சிந்தனை:

இவைகள் எல்லாம் திருமுறை இலக்கியச் சிந்தனை என்று கூறலாம். சித்தாந்தசாத்திரம் எனும் வகையில் சித்தியார் எனும் நூல் ஒருபாடலில் இக்கருத்தினையே மிகத்தெளிவாகக் கூறுகின்றது. 'இந்த மானுடப் பிறவிதானும் நமக்குக் கிடைத்தது. மனத்தாலும், வாக்காலும், உடம்பாலும் இறைவனுக்குத்தொண்டு செய்ய அன்றோ! தேவர்கள் கூட இவ் உலகில் வந்து அரன்தனை அர்ச்சித்து வழிபடுவர். ஆனால் இவ்வுலகில் ஊனுடம்பு கொண்டு வாழும் நம்மவர்கள் ஒன்றையும் உணராமல் இருக்கின்றார்களே! அந்தோ! என்று சித்தியாரின் ஆசிரியர் அருணந்திசிவம் வருந்திப் பாடுகின்றார்.

"மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம்
ஆனிடத்(து) ஐந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன்தனை அர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும்உணரார் அந்தோ"

என்பது அவர் நொந்து பாடும் அருட்பாடல்.

அனைத்தையும் சிந்தித்துப்பார்க்கும்பொழுது, இவ்வுலகில் பிறப்பது பெரும்புண்ணியம் என்பதும் பிறந்தநாம் சிவபெருமானை எண்ணுவதும் வாழ்த்துவதும் வணங்குவதும் செய்து அதனால் மனத்தூய்மையும், அறிவுத்தெளிவும், செயல் திறனும் பெற்று உய்யவேண்டும் என்பதும் தெளிவாகப் புலனாகும்.

19
அவரவர் வினை வழி*

'அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்
எவரெவர்க் குதவினர் எவரெவர்க் குதவிலர்
தவரவர் நினைவது தமையுணர் வதுவே'

—சிவபோகசாரம்.

[ஆதீன ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப் பெருமானின் பெருவிழா ஆவணிமூலம். இந் நாளில், தமிழ் அறிஞர்களுக்குப் பட்டம் வழங்கி, அருளுரை வழங்கும் குருமணிகள், வினை என்றால் என்ன என்பதையும் சில பொருள்கள் மேல் மனிதர்களுக்கு ஏற்படும் இனம் புரியாத ஆசைக்குக் காரணங்களையும், அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற தொடரின் நுட்பத் தையும் விளக்கி அருளிச் செய்துள்ளார்கள்.]

இறைவனின் எளிவந்த கருணை :

''பண்சுமந்த பாடற்பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்''

இன்றைய தினம் ஆவணி மூலத்திருநாள். ஒரு அடி யவர்க்காக ஆண்டவன் அருள்செய்த திருநாள். ஆண்டவன்

---

*1—9—79 அன்று தருமை ஆதீனத்தில் நடைபெற்ற ஆவணி மூலப்பெருவிழாவில் வழங்கியருளியது.

மணிவாசகருக்காக நரிகளைப் பரிகளாக்கிக்கொண்டு வந்ததும், அன்றிரவே அக்குதிரைகளை நரிகளாக்கியதும் இந்த ஆவணி மூலத்திருநாளில்தான்.

பரிகள் கொண்டுவந்ததும், பின்னர் அவைகளை நரிகள் ஆக்கியதும், வைகையில் வெள்ளப்பெருக்கெடுத்து ஓட வைட்டதும், அவ்வெள்ளப்பெருக்கைத் தடுத்துக் கரைகட்டும் ஆளாய் வந்து முதுகில் புண்பட்டதும் இறைவனின் எளிவந்த கருணைத் திறத்திற்குச் சான்றுகளாகும்.

நம்மால் ஆவது ஒன்றுமில்லை !

இவ்வுலகம் நடைபெறுவது ஆண்டவனின் அருளால்தான் என்றாலும், யார் யாரைக்கொண்டு, எந்த எந்த நிகழ்ச்சிகளை, எங்ஙனமெல்லாம் நிகழ்த்துவிக்கலாம் எனக்கருதியே இறைவன் திருவிளையாடல் புரிகின்றான் என்பதனை நன்கு உணர வேண்டும். இந்த உலகத்தில் வாழ்வோர் பலரும் என்ன வெல்லாமோ நினைக்கிறார்கள்; திட்டம் போடுகிறார்கள் என்றாலும் அவையெல்லாம் அப்படியே நடைபெறுவதில்லை. மணிவாசகர்கூட அரசாங்கப் பணத்தை எடுத்து வேறுவழியில் பயன்படுத்தவேண்டும் என்றோ, திருக்கோயில் கட்டவேண்டும் என்றோ எண்ணினார் இல்லை. குதிரைகள் வாங்கவேண்டும் என்றுதான் செல்கின்றார். ஆனால் ஆண்டவன் அருள் அவரை வேறுவிதமாகத் திருப்பிவிடுகின்றது. இதனைத்தான் நம் அருள்நூல்கள் அனைத்தும் 'நம்மால் ஆவது ஒன்றும் இல்லை' என்று கூறுகின்றது.

வினை என்றால் என்ன :

நம் அருளாளர்கள் அனைவரும் கூறும் ஓர் உண்மை இங்கே எண்ணத்தக்கது. யார் எதைச் செய்தாலும் அதன் பயனை அனுபவித்தே தீரவேண்டும் என்பது. அதனை வினை என்கின்றனர்.

வினை என்றால் இன்று பல்லோரும் வேறுஏதோ சித்தாந்தத் தொடர்புடையது என்று எண்ணி விடுகின்றனர். வினை என்றால் செயல் என்று பொருள். "வின்ன முற்றிய தலைவன் தேர்ப்பாகற்கு உரைத்தது" என்று அக இலக்கியங்கள் கூறுகின்றன. இதற்கு என்ன பொருள் ? தலைவன் தன் செயல்

முடிந்தபின்னர், தன்தேர்ப்பாகனுக்கு உரைத்தது என்பதுதானே பொருள், எனவே வினை என்பதற்குச் செயல் என்பதே பொருள் என்பது தெளிவாகிறது அல்லவா ?

வினை என்பது முன் செய்தது : இது சமயம் செய்து கொண்டிருப்பது ; இனிச்செய்வது என்று மூன்று பாகுபாடு களை உடையது. எந்தச் செயலைச் செய்தாலும் வேலை செய்தவன் கூலிபெறாமல் போவானா? கூலிபெற்றவன் அதைக் கொண்டு உண்டும் உடுத்தும் அனுபவிக்காமல் இருப்பானா ? அதன்பலனை அனுபவித்துத்தானே தீரவேண்டும். இதில் எவருக்கும் மறுப்பிருக்க நியாயமில்லை. இதைத்தான் நம் ஆதீனக் குருமுதல்வர்,

"அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்"

என்று கூறுகின்றார். இங்கு ஒரு கேள்வி எழுகின்றது. நன்றாக எட்டுமணி நேரமும் படிக்கும் ஒரு மாணவன் தேர்வில் தோல்வியுறுகின்றான். வீட்டில் சென்று படிக்காமல், ஆசிரியர் சொல்வதனைக் கேட்டே தேர்வில் வெற்றி பெறுபவனும் இருக்கிறானே ! இதற்கு என்ன காரணம் ? என்று கேட்கலாம்.

ஒரு உதாரணத்தின்மூலம் நாம் இதனைத் தெளியலாம். பத்து ஆண்டுகளாகப் பதப்படுத்தி நல்ல விளைச்சலுக்குத் தகுந்த நிலமாக மாற்றிவைத்திருக்கும் நிலத்தில் விதை போட்டால் உடனே பலன கிடைக்கும். இதுநாள்வரை ஒரு முறை கூடப் பதப்படுத்தாத புதிய நிலத்தில் விதைபோட்டால் அது எதிர்பார்த்த பலனைத்தர முடியாது தானே! அதுபோல ஒரு சில மாணாக்கர்கள் முன் பல பிறவிகளிலும் கற்றும் கேட்டும் பண்பட்ட நிலையில் உள்ளதால் அவர்கள் அறிவு உடனே பலன் அளிக்கிறது. சில மாணவர்கள் இப்பொழுது தான் புதிதாகக் கற்கவும் கேட்கவும் தொடங்கியிருப்பதால் எட்டுமணி நேரம் படித்தாலும் பயனைப் பெறமுடியாமல் போய்விடுகின்றது. திருவள்ளுவரும் இக்கருத்தில் தான்,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்று, அறிவு பல பிறவிகள் தோறும் தொடர்ந்துவரும் என்பதனை வலியுறுத்துகின்றார்.

நம் குருஞானசம்பந்தர் இவற்றை எல்லாம் உட்கொண்டு தான்,

'அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்
எவரெவர்க் குதவினர் எவரெவர்க் குதவிலர்
தவரவர் நினைவது தமைஉணர்வதுவே''

என்று கூறுகின்றார்.

கடவுள் கண்ணில்லாதவரா ?

ஸ்ரீ குருஞர்ணசம்பந்தர் இன்றைய மக்களின் மனநிலையைப் புரிந்து பாடியிருக்கின்றார். இன்று மக்களில் பலர் பல நேரங்களில் ஆண்டவனை ஏசுவதைப் பார்க்கலாம். ''நான் எவ்வளவோ பூஜை செய்கிறேன்; எனக்கு ஏன் இவ்வளவு துன்பத்தைத் தருகின்றாய்; கண்ணில்லாத கடவுளே;'' என்று பலவாறாக ஏசிப்பேசுகிறார்கள். குருஞானசம்பந்தர் இதற்கு மிகவும் ஆழ்ந்து சிந்தித்து விடையும் கூறுகின்றார். அவர் பாடிய ஓர் அருமையான பாடல் இதற்கு மறைமுகமாக விடையைக் கூறுகிறது.

''அனைத்துயிர்க்கும் பாசம் அறுத்து முத்தி கூட்ட
மனத்துயரம் செய்தல் மருந்தோ — மனத்துயரம்
செய்யாமல் தீர்மருந்து சித்தா அறிந்திலையோ
ஐயாஎன் சொக்கநா தா''

என்னும் பாடலில் விடை இருக்கிறது. உதாரணமாக ஒரு மாணவன் படிக்கும் பொழுது மிகவும் சிரமப்பட்டாலும் பிற்காலத்தில் அது அவனுக்கு மிகவும் பயனைத் தருவதுபோல, ஆண்டவன் இவ்வுலக மக்களுக்குத் துன்பம் தருவது நம் வினையை நீக்கி, விடுதலை அளிக்கவே ஆகும் எனும் உணர்வு வர வேண்டும்.

குருமுதல்வர், இப்பாடலில் ''சித்தா! இவ்வுலகில் உள்ள உயிர்கட்கெல்லாம் உள்ள பாசத்தளையை நீக்கி முத்தியைக் கூட்டி வைக்கத்தான் மனத்துயரங்களை மருந்தாகத் தருகிறாயா ? மனத்துயரம் செய்யாமலே பாசம் தீர்ப்பதற்கு மருந்து இல்லையா! எல்லாம் வல்ல சித்தரல்லவோ நீ! உன்னால் ஆகாதது ஒன்றும் இல்லையே'' எனும் பொருளில் மிகவும் நயமுடன் பாடுகின்றார்.

இவ்வுலக மக்களுக்கு இறையருளால் துன்பம் ஏற்படுகிறது எனில் அது அவர்கள் செய்த வினையை நுகர்வித்து அவர்களுக்கு விடுதலை அளிக்க இறைவன் செய்யும் அருள் விளையாட்டே ஆகும் என்பதனை உணரவேண்டும். எல்லாமும் வல்ல சித்தருக்குத் தெரியாதா ?

இனம் புரியா ஆசையும் மனம் புரியும் விடையும் :

அருவருக்கத் தக்க பொருளிடத்தும் கூட நம்மில் பலருக்கும் ஆசை ஏற்படுகிறதே! அதற்கு என்ன காரணம் ? எனும் கேள்விக்கு மற்றுமொரு பாடலில் விளக்கம் தருகின்றார் உதாரணம்மாக இப்பொழுது சமீபத்தில் தினத்தாளில் படித்த ஒரு செய்தியினை நினைவு கூர்வோம். ஒரு வெளிநாட்டுப் பெண் சுற்றுலாவாக இராமேஸ்வரத்தில் வந்து தங்கி இருந்தாள். ஒருவனுக்கு உடல் எல்லாம் குஷ்டம்; பார்ப்பதற்கு அருவருப்பு ஏற்படுத்தும் தோற்றம்; என்ன காரணமோ சொல்லத் தெரியவில்லை - அவனை அவள் விரும்பினாள். இதற்கு நம்மால் காரணம் சொல்ல இயலாவிட்டாலும் பெருஞானியான குருஞானசம்பந்தர் விளக்கம் தருகின்றார்:

அருவருப்பான ஒரு பொருளிடத்தில் ஒருவனுக்கு இனம் புரியா வகையில் ஆசை ஏற்படுகிறதென்றால் அவன் செய்த முன்வினையைத் துய்ப்பிக்க ஆண்டவன் அருளும் விளையாட்டு இது என்கிறார்.

> ''அருவருப்பே மெத்தியிடும் ஆகத்தைச் சற்றும்
> அருவருக்கத் தோற்றுதில்லை ஐயோ — அருவருக்கத்
> தோற்றியிடா தென்னவினை துய்ப்பித் தறுப்பதற்கோ
> சாற்றியிடாய் சொக்கநா தா''

என்னும் பாடலில் நம் கேள்விக்கு விடை இருக்கிறது. இப் பாடல் உண்மையில் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. அவள் அனுபவிக்க வேண்டிய ஒருவினை உள்ளது. அதனால்தான் எல்லோரும் வெறுக்கும் ஒரு பொருள்மீது அவளுக்கு இத்தகைய ஈடுபாடு வருகிறது என்பதனை விடையாகக் கூறிவிடுகின்றார்.

இங்ஙனம் நமக்கு இடை இடையே ஏற்படும் ஐயங்களைத் தீர்க்கும் அருமருந்தாகக் குருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் இருப்பதனை நாம் தெளிந்து கொள்ளுதல் சிந்தனைத் தெளிவிற்கு ஏதுவாகும்.

அவனன்றி அணுவும் அசையுமோ :

மேலே சொன்னவற்றைக் கூட்டிப் பார்த்தால் நாம் நம் வினையைத்தான் அனுபவிப்பதாக இருந்தாலும் ஆண்டவன் அதனை இயற்றாமல்நாம் ஒருபோதும் ஒரு செயலும் செய்ய இயலாது என்பதனையும் மற்றுமொரு பாட்டில் கூறுகின்றார்.

"நீ இயற்ற ஓர்பொருளை நிச்சயித்த நாயேனும்
போயியற்றல் செய்யப் புரிகுவேன்—நீயியற்றல்
ஆக்கா தணுவும் அசையுமோ அவ்விகற்பம்
தாக்காத சொக்க நாதா"

என்னும் பாடல் அவ்விளக்கத்தைத் தருகின்றது. ஆண்டவனின் அருளால்தான் எல்லாம் நடக்கிறது என்றால் எங்ஙனம் புரிந்து கொள்வது என்ற தயக்கம் ஒருசிலருக்கு வருகிறது. உதாரணமாக ஒன்றைச் சிந்திக்கலாம். நமது உடலில் உள்ள கைகால்கள் அசைகின்றன—அது தெரிகிறது. ஆனால் உள்ளே கோடிக்கணக்கான அணுக்கள் இருக்கின்றன. அவை நம் அசைவுகளுக்குப் பல்லாற்றானும் துணைசெய்கின்றன. அவை எல்லாம் நமக்குத்தெரிகிறதா ? அதுபோலத்தான் ஆண்டவனின் அருளும் கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் காரணமாக இருந்து இயக்குகிறது என்பதை உணர முடிகிறதல்லவா?

ஆவணிமூல விழாவில் அரியசெய்தி :

இவற்றை எல்லாம் நன்கு சிந்தித்துப்பார்க்கும் பொழுது மாணிக்கவாசகராக ஒன்றும் செய்யவில்லை; மாணிக்கவாசகர் செயல் பெருமானின் அருளால் நடந்ததே தவிர வேறில்லை எனும் இந்த உண்மையினை இவ்வாவணிமூல விழாவில் தெரிந்து கொண்டால் போதும்; அதுவே விழாவினால் நாம் பெற்றபெரும் பயனாகும்.

இவ்விழாவிலிருந்து நாம் இன்னொரு உண்மையினையும் உணர்ந்து கொள்ளலாம். மாணிக்கவாசகர் தனக்கு நேர்ந்த துன்பங்கள் பலவற்றிலும் கலக்கம் கொள்ளாது இறைவன் தன்னைக் கடைசிவரையிலும் கைவிடமாட்டார் என்று எண்ணி உறுதியோடு வாழ்ந்தார். இந்த எண்ணம் நம் திருத்தொண்டர்கள் பலரிடத்தும் நிலவியிருந்ததைக்காணலாம்.

பண்பாடுமிக்க அமைச்சர் :

இன்றையநாளில் நம் மாநிலக்கல்வி அமைச்சர் திரு. சி. அரங்கநாயகம் அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்ற இருக்கின்றார்கள். அவர்கள் தம் இளமைக் காலம் முதற்கொண்டே தத்துவத்துறையில் பெரிதும்ஈடுபாடு உடையவர்கள். 25 ஆண்டுக்கு முன்பு நமது ஆதீனக்குரு முதல்வர் குருபூஜை விழாத்தொடர்பாக நடைபெற்ற சமயப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பயின்றுள்ளார்கள் என்பதும், அதனைப் பன்முறையும் நினைவுகூரும் பண்புள்ளம் கொண்டவர்கள் என்பதும் அவர்களின் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டுக்களாகும் நமது ஆதீனத்தின் சார்பில், வெளிநாடுகளிலிருந்து வரும்பல அன்பர்களுக்குச் சைவ சித்தாந்தத்தை நன்கு தெளிவிக்கும் வகையில் 'சைவ சித்தாந்த ஆய்வுமையம்' ஒன்று தோற்றுவிக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ளார்கள். அவர்களின் இந்த எண்ணம் நிறைவேற எல்லாம்வல்ல எம்பெருமானின் அருளை வேண்டுவோம்.

பட்டம் பெறும் பண்பாளர் :

இந்தகைய சிறந்த நாளான இன்று சைவசித்தாந்தம், இலக்கியம், பொருளாதாரம், விஞ்ஞானம் போன்ற பல துறைகளிலும் சிறந்த பல அறிஞர்களை அழைத்துப் பாராட்டிப் பட்டம் கொடுப்பது என்பதனை வழக்கமாகக் கொண்டுள்ளோம். ஏறத்தாழ 30 ஆண்டுகளாக இங்ஙனம் நடந்துவரும் இவ்விழாவில் இவ்வாண்டு டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதி அவர்கட்குப் பட்டம் கொடுப்பது என்று செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் முடிவு செய்தது. இவர் மயிலம் கல்லூரியில் தமிழ் பயின்று, பூம்புகார்ப் பேரவைக் கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பயின்றும் பணியாற்றியும் சிறந்தவர். ஞானியார் அடிகளிடத்தில் பாடம் கேட்டவர். இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் இராதாகிருஷ்ணன் மேல்நிலைக் கல்வி நிறுவனம் - தத்துவத்துறையில் பேருரையாளராகப்பணி யாற்றி வருகின்றார். இவ்வாண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'அளவையியல்' பற்றி ஒரு கருத்தரங்கம் மிகச் சிறந்த முறையில் நடத்தினார். அதுதான் நமது உள்ளத்தில் இவ்வாண்டு இப்பட்டம் கொடுக்கத் தோற்றுவித்தது. எங்கே

யிருந்தாலும் தாம் இருப்பதற்கு ஏதேனும் ஓர் அடையாளச் சின்னமாகத் தமிழிற்கும் சைவத்திற்கும் பணிசெய்ய வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர். அவருக்குச் 'சித்தாந்தக்கலைஞர்' எனும் பட்டத்தினைச் சொக்கநாதர் சந்நிதியில் வழங்கியுள்ளோம். இவர் சித்தாந்தக்கலைக்கும், தத்துவத்துறைக்கும், பணிசெய்து பல்லாண்டு வாழ்வாராக. இவ்விழாவிற்கு வந்து சிறப்பித்தருள்வீர் அமைச்சர் அவர்கட்கும், பட்டம்பெற்ற பண்பாளர் இரத்தினசபாபதிக்கும் மற்றும் இவ்விழாவில் பங்குகொண்டுள்ள பத்தர்கட்கும், குழந்தைகட்கும் ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கட்கும், எல்லா நலன்களும் மென்மேலும் பெருக எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

20
கோடீசுவரரின் குருபக்தி*

'புல்லினால் கோடியாண்டு
புதுமண்ணால் பத்துக்கோடி
செல்லுமா ஞாலந்தன்னில்
செங்கல்லால் நூறுகோடி
அல்லியங் கோதைமின்னே
ஆலயம் மடங்கள்தம்மைக்
கல்லினால் புதுக்கினோர்கள்
கயிலைவிட் டகலாரன்றே.

[வைப்புத் தலங்களின் சிறப்பினை விளக்கி, மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் இணங்கிவரும் திறம் அருளி, ஒரு கோடீசுவரரின் குருபக்தியைக் கதை வாயிலாக எடுத்துக்காட்டி, ஆலய வழி பாட்டில் தலைநின்று ஆன்மலாபம் பெற்றுய்ய ஆற்றுப்படுத்திக் குருமணிகள் அருளிச் செய்தது]

வைப்புத் தலம் என்றால் என்ன ?

''குத்தங்குடி வேதி குடிபுனல்சூழ்
குருந்தங்குடி தேவன் குடிமருவும்
அத்தங்குடி தண்டிரு வண்குடியும்
அலம்புஞ்சலந் தன்சடை வைத்துகந்த
நித்தன்நிம லன்உமை யோடுங்கூட
நெடுங்கால முறைவிடம் என்றுசொல்லாப்
புத்தர்புறங் கூறிய புன்சமணர்
நெடும்பொய்களை விட்டு நினைந்துய்மினே''

என்பது, திருஞானசம்பந்தர் குத்தங்குடி என்னும் இத்தலத்தை நினைவுகூர்ந்து பாடியருளிய திரு கேஷத்திரக்கோவைத் திருப் பாடலாகும்.

---

*குத்தங்குடி ஸ்ரீ பெரியநாயகி உடனாகிய ஸ்ரீ கோடீசுவரர் திருக்கோயில் மகாகும்பாபிஷேக விழாவின் முதல் நாளான 15—9—79 அன்று ஆழ்ங்கியருளியது.

தேவாரப் பாடல் பெற்ற சிவதலங்களைப் 'பாடல் பெற்ற தலம்' எனவும் 'வைப்புத்தலம்' எனவும் இருவகையாகப் பகுத்துக் கூறுதல் மரபு. தமக்கெனத் தனிப்பதிகங்களைப் பெற்றுள்ள தலங்கள் பாடல் பெற்ற தலங்கள் எனவும், தமக்கெனத் தனிப்பதிகத்தைப் பெறாது பிறதலத்திற்குரிய பதிகங்களிலோ, பொதுப் பதிகங்களிலோ இடம் பெற்ற தலங்கள் வைப்புத் தலங்கள் எனவும் வழங்கப்பெறுகின்றன. அருளாளர்களின் பாடல்களில் வைத்துப் பாடியமையால் வைப்புத் தலங்கள் எனப்போற்றப் பெறுகின்றன.

தனிப்பதிகங்களைப் பெற்றுள்ள தலங்கள், இந்திய நாட்டிலும் ஈழ நாட்டிலும் ஆக 274 தலங்கள் உள்ளன. வைப்புத் தலங்களாகக் குறிக்கப் பெறுவன 237 ஆகும். அவற்றுள் குத்தங்குடி என்னும் இத்தலம் வைப்புத் தலமாகத் திருஞானசம்பந்தர் பாடியருளிய கேஷத்திரக் கோவைத் திருப்பதிகத்தில் குறிக்கப் பெற்றுளது.

ஊரின் பெயரும் உண்மைக் காரணமும்:

நம்நாட்டில் வழங்கப்பெறும் தலங்களின் பெயர்கள் பலவும், அவை அமைந்துள்ள குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நில அமைப்பை ஒட்டியோ, அவற்றுள் மிகுந்துள்ள கருப்பொருள்களைப் பற்றியோ, அங்கு வழிபட்டோர் பெயரொடு அமைந்த திருக்கோயிலைப் பற்றியோ அமைந்துள்ளவற்றை அறியலாம்.

குறிஞ்சிநிலத் தலங்கள் - மலை குன்றம் அரை பருப்பதம் என்ற பெயர்களாலும், முல்லைநிலத் தலங்கள் - காடு வனம் பாடி என்ற பெயர்களாலும், மருதநிலத் தலங்கள் - ஊர் ஆறு துறை முதலிய பெயர்களாலும், நெய்தல் நிலத்தலங்கள் - பட்டினம் வாயில் முதலிய பெயர்களாலும் பெரும்பாலும் வழங்கப்பெறுகின்றன. சிறுபான்மை மாறியும் வழங்கப் பெறுகின்றன.

அவற்றுள் குடியிருப்பு என்னும் பொருளில் 'குடி' என்னும் சொல்லை ஈற்றில் கொண்டுள்ள தலங்கள் பலவாகும் சிறுகுடி, செங்காட்டங்குடி, விற்குடி, வேள்விக்குடி, வேதிகுடி, கற்குடி, கருக்குடி முதலிய ஊர்கள் 'குடி' என்ற பெயரோடு வழங்கப் பெறுவன. அறுபான்மும்மை நாயன்மார்களில் மாறனார்

திருவவதாரம் செய்தருளியதலம் 'இளையான்குடி' என்னும் ஊராகும். அவ்வூர்ப் பெயரையும் அவர் பெயரோடு இணைத்து 'இளையான்குடி மாறநாயனார்' என்று அவரை நாம் வழங்குகின்றோம். 'குடி' என்ற முடிபுடைய தலங்களைத் திருநாவுக்கரசு சுவாமிகள் அடைவு திருத்தாண்டகத்தில்,

நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன் செம்பொன்
குடி நல்லக் குடிநளிநாட் டியத்தான்குடி
கற்குடி தென் கள்ளக்குடி செங்காட்டங்குடி
கருந்திட்டைக்குடி கடையக்குடி காணுங்கால்
விற்குடி வேள்விக்குடிநல் வேட்டக்குடி
வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி
புற்குடிமா குடிதேவன் குடிநீலக்குடி
புதுக்குடியும் போற்ற இடர் போகுமன்றே'

என்று அருளிச்செய்கின்றார். 'குத்தங்குடி' இடம்பெறும் திருஞானசம்பந்தர் பாடல்முன்னர் எடுத்துக்காட்டப்பட்டது.

குத்தங்குடி ஓர் ஆய்வு :

குத்தன்குடி என்னும் இதுதலம் குதாத்தங்குடி என வழங்கப் பெறுகிறது. தில்லைக்கருகில் விளங்கும் கொற்றவன்குடி என்னும் தலம் மருவி கொத்தங்குடி என வழங்கப் பெறுகிறது. அதுபோலக் குத்தங்குடி என்னும் இவ்வூர் 'குப்தன்குடி' என்ற சொல்லின் திரிபாக இருத்தல் வேண்டும். குப்தன் எனும் பெயருடைய தலைவன் ஒருவன் வாழ்ந்த இடம் எனும் பொருளில் இது வழங்கியிருத்தல் வேண்டும். 'குப்தன்குடி' என்பது பிற்காலத்தில் குத்தன்குடி என்றாயிற்று. சப்தம் என்பது சத்தம் என்றாவதுபோல, குப்தன் என்னும் சொல் குத்தன் என்றாவது இயல்பே. அல்லது வேறு பொருள்களிலும் இப்பெயர் வழங்குவதாகலாம். அறிஞர்கள் ஆராய்ந்து காண்பார்களாக.

மெய்ஞ்ஞான விளக்கமே விஞ்ஞான வளர்ச்சி

இங்குப் பேசிய திருவெண்காடு சீனிவாசம் பிள்ளை அவர்கள் அருளாளர்கள் வாழ்ந்த அல்லது பாடிய தலங்களில், அருட்கதிர்களின் அலைகள் வீசிக்கொண்டிருக்கும் என்பதைக் குறிப்பிட்டார்; இது உண்மை.

கண்களுக்குப் புலனாவது பருமை; கருத்திற்குப் புலனாவது நுண்மை. அருள் நுண்மையானது. அது கருத்திற்கு மட்டுமே

புலனாகும் பொருளாகும். இன்றைய உலகில் விஞ்ஞானத்தினால் எத்தனையோ காரியங்களை எளிதாகச் செய்வதைக் காண்கிறோம். அதேபோல் அக்காலத்தில் மெய்ஞ்ஞானிகள் பல செயல்களைத் தங்கள் அருளாற்றலால் கண்டுகாட்டினர்.

காரில் வெளியே சென்றவர்கள் வீடு திரும்பியதும், காரில் இருந்தபடியே ஒரு பொத்தானை அழுத்திக் கார்ஷெட்டைத் திறக்கிறார்கள். இது விஞ்ஞானக் காட்சி. இதேபோலத்தான் திருமறைக்காட்டில் வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த கதவுகளை அப்பரடிகள் தேவாரப் பாடல்கள் பாடித் திறக்கச் செய்தார். இது மெய்ஞ்ஞானக் காட்சி. அதுபோல அருளாளர்களின் ஆன்மீக சக்தியின் வலிமையை உணர்த்தும் வரலாறுகளை நம் சமய நூல்கள் பலவற்றிலும் நாம் காண முடியும். உதாரணத்திற்கு ஒரு வரலாறு. திருவண்ணாமலையில் குகை நமச்சிவாயர் என்ற ஒருவர் இருந்தார். அவர் குகையில் வாழ்ந்து வந்ததால் குகை நமச்சிவாயர் எனப்பெயர் பெற்றார். அவருக்கு ஒரு சீடர் இருந்தார். அவர் பெயர் குரு நமச்சிவாயர் ஒரு நாள் அக்குருநமச்சிவாயர் தம் குருநாதருக்கு விசிறிக் கொண்டிருந்தார். இரவு 11 மணி இருக்கும். விசிறிக் கொண்டிருந்த சீடர் திடீரென்று விசிறியைக் கீழே போட்டு விட்டுக் கையைத் தேய்த்தார். குருநாதர் சீடரைப் பார்த்து 'என்னப்பா ? என்ன நடந்தது ?' என்றார். குருநமச்சிவாயர் ''சிதம்பரம் திருக்கோயிலில் நடராசப் பெருமான் சந்நிதியில் போடப்பட்டிருந்த திரை தீப்பிடித்து விட்டது; அணைத்தேன்'' என்றாராம். பிறிதொருநாள் திருவாரூரில் நடனமாடிய பெண் வழுக்கி விழுந்ததைத் திருவண்ணாமலையிலிருந்தே பார்த்து நகைத்தார் சீடர். இவற்றை அறிந்த குருநாதர் தம் சீடரை அழைத்து, ''நீ இனி பலருக்கும் குருவாக இருந்து உபதேசம் செய்து வாழ்வாயாக'' என்று ஆணை பிறப்பித்தார்கள். அதுமுதல் இவர் குருநமச்சிவாயர் என்று வழங்கப் படுகிறார்.

இவ்வரலாற்றோடு இன்றைய அறிவியலின் நிகழ்ச்சி ஒன்றை உங்கட்கு ஒப்பிட்டுக் காட்டுகின்றோம். அமெரிக்காவில் கென்னடி முனையிலிருந்து சந்திர மண்டலத்திற்கு அனுப்பப்பட்ட விண்வெளிக்கலத்திற்கு இங்கிருந்து கொண்டே சமிக்ஞைகள் செய்கிறார்கள்; விண்வெளிக் கலத்தின் கதவு திறந்திருக்கிறது மூடுங்கள் என்று அறிவிக்

கின்றார்கள், தூங்குகின்றவர்களை எழுப்புகிறார்கள். பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் நிகழும் நிகழ்ச்சிகளை இயக்கியும் அவற்றினைக் கண்டும் மகிழும் இக்கால விஞ்ஞானிகளின் ஆற்றலை மெய்ஞ்ஞானிகள் ஆன்மீக பலத்தினால் அன்றே பெற்றிருந்தார்கள். ஞானிகள் முக்காலமும் உணர்பவர்கள். வருங்கால உணர்வுடையவர் மெய்ஞ்ஞானியர் என்பதற்கு ஓர் உதாரணக்கதை சொல்வதுண்டு:

கோடீசுவரரின் குருபக்தி:

ஓர் ஊரில் கோடீசுவரர் ஒருவர் வாழ்ந்து வந்தார். கோடீசுவரர் மகான்களை மதித்துப் போற்றும் பண்புள்ளவர். ஒருநாள் அவர் வீட்டிற்கு மகான் ஒருவர் வந்திருந்தார். அன்று அந்தச் செல்வந்தர் வீட்டிற்குச் சித்திரகுப்தனும் வந்திருந்தான். அவன் கோடீசுவரரின் மகன் தலையெழுத்தைப் படித்தும் சொல்லியும் போனது மகானின் காதுகளில் விழுந்தது. இதை யாராவது கேட்டு வெளியில் சொன்னால் சொன்னவர் தலை வெடித்துவிடும் என்று நிபந்தனை கூறிச் சென்றான் சித்திரகுப்தன். கோடீசுவரரின் மகனுக்கு, இனி ஒரு மாட்டால் சீவனம் என்று அவன் தலையில் எழுதப் பட்டிருந்தது. மகானுக்கு மிகவும் வருத்தம். நம்மை ஆதரித்து நம்மீது பக்தி செலுத்தும் இச்செல்வந்தனுடைய குடும்பம் இப்படியா ஆகவேண்டும் என்று வருந்திச் சென்றார். பதினைந்து ஆண்டுகள் கழித்து மீண்டும் அந்தக் குடும்பத்தின் நிலையைக் காண வந்தார் மகான். கோடீசுவரரின் மகன் செல்வங்களை இழந்து ஒற்றைமாட்டுவண்டி ஓட்டிச் சீவனம் நடத்தும் காட்சியைக் கண்டார். மாடுமட்டும் அவனுக்குச் சொந்தம்; வண்டி வாடகை வண்டி. அந்த நிலையிலும் அவன் மகானை வரவேற்று உபசரித்தான். மனம் இரங்கிய மகான் அவனை அழைத்து மாட்டை விற்று அத்தப் பணத்தைக் கொண்டு அன்னதானம் செய் என்று சொன்னார். முதலில் தயங்கிய அவன், மகான் பேச்சுக்கு மதிப்புக் கொடுத்து மாட்டை விற்று அப்பணத்தைக் கொண்டு தானதர்மங்கள் செய்தான். இப்போது அவனிடம் மாடு இல்லை. ஒரு மாட்டால் ஜீவனம் என்பது தலைவிதி ஆகையால் தெய்வம் அவனுக்கு ஒருமாடு தந்தது. இரவுநேரம் பெரிய இடபம் ஒன்று அவன் வீட்டு வாயிலில் படித்திருக்கிறது. மறுநாள் அந்த இடபத்தையும்

அவ்வறே விற்று இன்னும் கூடுதலாகத் தானதருமங்கள் புரியும் படி சொன்னார் மகான். அவனும் அவ்வாறே செய்தான். முடிவில் அவன் செய்துவந்த புண்ணியமே அவனைக் காத்தது.

பெரியவர் வார்த்தையும் அரியதோர் ஆக்கமும்:

பொறையாற்றில் அன்பர் ஒருவர் வீட்டில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததாகச் சொல்வதுண்டு. தானதருமங்கள் செய்தும். அறவோரையும் துறவோரையும் போற்றியும் வாழ்ந்தது ஒரு குடும்பம். அந்த வீட்டிற்கு ஒரு பெரியவர் வந்திருந்தார். பொறையாற்றை அடுத்த தரங்கம்பாடியில் ஒரு கப்பல் ஒதுங்கியிருந்தது. கப்பல் தரைதட்டி விட்டதால் அதனை ஏலம் போட்டார்கள். பலரும் ஏலம் கேட்டார்கள். பெரியவர் தாம் தங்கியிருந்த வீட்டுக்காரரை அழைத்து யார் எவ்வளவு கூடுதலாகக் கேட்டாலும் அதற்குமேல் கேட்டுக் கப்பலை ஏலம் எடுக்கும்படி சொன்னார். அன்பரும் அவ்வாறே செய்தார். ஏலம் எடுத்த பிறகுதான் அக்கப்பலில் ஏராளமான பொன்கட்டிகள் இருந்தது தெரியவந்தது. அன்பர் பெரியவரின் ஆசியால் வளம் பெற்றார் என்று கூறுவார்கள்.

இவ்வாறு பெரியவர்கள், சிவஞானிகள், மகான்கள் முதலியோர் வருங்கால உணர்வோடு நமக்கு நன்மைகள் பலவும் செய்து வருகின்றனர் என்பதற்குப் பல வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறலாம்

கோயிலைக் கும்பிடு; குறைகள் தீர்ந்திடும்:

நம் நாட்டில் சமய உணர்வுகளும் நம்பிக்கைகளும் மக்கள் வாழ்வோடு பின்னிப் பிணைந்து வந்துள்ளன. கோயில்கள் சமயநெறிகளின் தலைமைத்தானம். அவைகளைப் பேணிப் போற்றுதல் நம்கடமை. ''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா'' என்பது நம் நாட்டுப் பழமொழி. 'திருக்கோயில் இல்லாத ஊர் திருவில் ஊர்'' என்பது அப்பர் திருமொழி. இவ்வூரில் உள்ள கோயிலைச் சைவ மெய்யன்பர்கள் பலரும் கூடி நல்ல முறையில் திருப்பணிகள் செய்வித்து, கும்பாபிடேகம் நடத்துவதைப் பாராட்டுகிறோம்.

இங்குள்ள இறைவன் திருப்பெயர் கோடீசுவரர் என்பதாகும். கொட்டையூரில் எழுந்தருளியிருக்கும் இறைவன்

திருப்பெயரும் கோடீசுவரர் என்பதாகும். கொட்டையூர்ப் பெருமான் திருமேனியில் கோடி சிவலிங்கங்கள் ஒரே பாணத்தில் உள்ளன. அவரை வணங்கினால் கோடி சிவலிங்கங்களை வழிபட்ட பலன் கிடைக்கும் என்பார்கள். அது போல இங்குள்ள பெருமானும் கோடீசுவரராக விளங்குகின்றார். சைவ மெய்யன்பர்கள் நாடோறும் சிவாலய தரிசனம் செய்வதை நியமமாகக் கொண்டு கோயிலுக்கு வந்து வழிபாடு செய்யத் தொடங்கினால் கோயில் விளக்கமாக இருக்கும்.

பழமையும் பெருமையும் உடைய இவ்வூர்த் திருக்கோயிலை அன்பர்கள் பலரும் ஒற்றுமையோடும், ஊக்கத்தோடும் நன்முறையில் திருப்பணிகள் செய்திருக்கின்றார்கள். கோயில் திருப்பணிகளுக்கு உதவும் பொருள்கள் வீண்போவதில்லை.

"புல்லினால் கோடியாண்டு புதுமண்ணால் பத்துக்கோடி
செல்லுமா ஞாலந்தன்னில் செங்கல்லால் நூறுகோடி
அல்லியங் கோதைமின்னே ஆலயம் மடங்கள் தம்மைக்
கல்லினால் புதுக்கினோர்கள் கயிலைவிட் டகலாரன்றே"

என்ற பாடல் சிவாலயங்களில் திருப்பணிகள் செய்வோர் அடையும் பலன்களைக் கூறுகிறது.



21

கந்தபுராண உட்கிடக்கை*

'புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி'

— கச்சியப்ப சிவாசாரியர்

[சிவபரம் பொருளின் முக்கண்களாகத் திகழ்வன தமிழில் எழுந்த முப்பெரும் புராணங்கள். அவற்றுள் ஒன்றாகிய கந்த புராணத்தின் உட்கிடக்கையை ஆய்ந்து வெளிப் படுத்தும் குருமணிகளின் அருட்கொடையாக இவ்வருளுரை அமைந்துள்ளது. ஒரு உயரிய நூல் எவ்வாறு அமையவேண்டும் என்பதும், கந்தபுராணம் உணர்த்தும் தலையாய மூன்று உண்மைகள் இவை என்பதும் இங்கே விளக்கி அருளிச்செய்யப் பெற்றுள்ளன.]

மூப்பெரும் புராணங்கள்:

தமிழில் முப்பெரும் புராணங்கள் உள்ளன. அவை பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் என்பன வாம். இம்மூன்றையும் இறைவனின் மூன்று கண்களுக்கு ஒப்பாகச் சொல்வது மரபு. இறைவனது வலக்கண் சூரியன்; இடக்கண் சந்திரன்; நெற்றிக்கண் அக்கினி. ஞாயிறு போன்றது பெரியபுராணம்; திங்களனையது திருவிளையாடற் புராணம்; அக்கினியை ஒத்தது கந்தபுராணம். இறைவனின்

---

* 10—11—1979 ஞானசம்பந்தம் இதழுக்குக் கந்தபுராணச் சிந்தனைகளாக வழங்கியருளியது.

முக்கண்களும் ஞாயிறு, திங்கள், அக்கினியாக இருந்து இவ் வுலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் தேவையான வற்றைக் கொடுத்துக் காப்பாற்றி வருகின்றன.

மூன்று கண்களும் மூன்று புராணங்களும்:

ஞாயிறைப் பெரியபுராணத்திற்கும், திங்களைத் திரு விளையாடற் புராணத்திற்கும், அக்கினியைக் கந்தபுராணத் திற்கும் ஒப்பிட்டுக் கூறுவது ஏன்? இதனைச் சிந்தித்துப் பார்த்தால் இவற்றினிடையே சில இயைபுகள் இருப்பதனை உணரலாம்.

ஞாயிறு எங்ஙனம் வெப்பத்தைக் கொடுத்து எல்லா உயிர்களையும் வாழவைக்கிறதோ அதுபோன்று பெரிய புராணமும் திருத்தொண்டர்களை வருத்தி ஆட்கொள்ளும் இறைவனின் அருமைப் பாட்டினை விளக்குகிறது. அநபாய சோழமன்னன் காரணமாகத் தோன்றியது என்பதும், அச் சோழர்கள் சூரிய குலத்தவர்கள் என்பதும் ஒப்புமைப் படுத்திச் சிந்திக்கத் தக்கனவாகும். மேலும் சேக்கிழார் இப்புராணத்தைத் தொடங்கும் பொழுதே,

> "இங்கிதன் நாமம்கூறின் இவ்வுலகத்து முன்னாள்
> தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற
> பொங்கிய இருளை ஏனைப் புறஇருள் போக்குகின்ற
> செங்கதிரவன்போல் நிக்கும் திருத்தொண்டர்புராணம் என்பாம்"

என்று செங்கதிரவனை உவமை கூறுவதாலும் இவற்றின் தொடர்பினை உணர்ந்து கொள்ளலாம்.

திங்களைத் திருவிளையாடற் புராணத்தோடு ஒப்பிட்டுக் காணும் பொழுது, சந்திரன் எங்ஙனம் குளிர்ந்த நிலையில் ஒளி தந்து வளம்சேர்க்கின்றானோ அதுபோன்று திருவிளையாடற் புராணமும், பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்தது போன்ற இறைவனின் எளிவந்த கருணையை விளக்குகிறது. மேலும் இந்நூல் சந்திர குலத்தவர்களான பாண்டியர்களைப் பற்றியது என்பதும், பாண்டியர்கள் காரணமாக எழுந்தனவே திருவிளை யாடல்கள் என்பதும், ஆசிரியர் பரஞ்சோதி முனிவர் தொடங் கும் பொழுதே 'திங்களனி திருவாலவாய் எம் அண்ணல் ...' என்று கூறுவதும் இப்புராணம் சந்திரனுக்கு ஒப்பான புராணம் என்பதை நன்கு உணர்த்துகிறது.

கந்தபுராணத்துடன் அக்கினியை ஒப்பிட்டுக் காணும் பொழுது, அக்கினி ஏங்ஙனம் மிகவும் கடுமையான வெப்பத் தினால் சார்ந்த பொருட்களைச் சுடுகின்றதோ, அதுபோன்று கந்தபுராணமும் அசுரர்களின் கொடுமைகளைக் கடுமையாகத் தாக்கி அடக்கிய முருகப்பெருமானின் அருள் விளையாட்டினைக் கூறுகிறது. சேரர்கள் அக்கினி குலத்தவர்களாகப் பேசப்படுவ தாலும், சேரநாடு மலைநாடாக விளங்குவதாலும், குன்று தோறாடல் முருகனுக்கு உரிமையாதலாலும். இதனைச் சேர நாட்டுடன் இயைபுடையதாகக் கொள்ளலாம். கொண்டால், மூப்புராணங்களும் மூவேந்தர்களுடன் தொடர்புடையனவா கின்றன். இவற்றிற்கெல்லாம் மேலாக இறைவனது நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய முருகப்பெருமானின் அருள் விளை யாடல்களைக் கூறுவதால் இப்புராணம் அக்கினியுடன் மிகுந்த இயைபு உள்ளமையைத் தெளியலாம்.

மூன்று வழியில் மூகிழ்ந்த புராணங்கள் :

இவ்வுலகில் மக்கள் பலதரப் பட்டவர்களாதலால் ஒவ்வொரு மனிதனுக்கும் அறத்தைக் கூறும்பொழுது ஒரே மாதிரியாகக்கூறாது சிலருக்கு எளிமையாகக் கூறியும், சிலருக்குக் கடுமையாகச் சொல்லியும், சிலருக்குக் கொடுமையாகத் தண்டனை கொடுத்து விளக்கியும் உணர்த்தவேண்டியுள்ளது. அதைப்போல அறச்செய்திகளைத் திருவிளையாடற் புராணம் எளிமையாயும், பெரிய புராணம் கடுமையாயும், கந்தபுராணம் மிகக்கடுமையாயும் கூறுகின்றன.

அரியநூலின் பெரியநோக்கம்:

ஒவ்வொரு இலக்கியத்திற்கும் ஓர் உயிரோட்டமான கருத்துத் தலைமையானதாகவும் மற்றவை துணை அங்கங் களாகவும் இருப்பதனை நாம் ஊகித்து உணர்ந்துகொள்ளல் வேண்டும், பெரியபுராணத்தைப் பொறுத்தவரையிலும் ஏழை பணக்காரன், முதலாளி தொழிலாளி என்பன போன்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரும் ஓர் உயரிய குறிக்கோளில் நின்று தொண்டுசெய்தால் இறைவன் அருளைப் பெறலாம் என்பது உயிரோட்டமான கருத்தாக இருப்பதை உணரலாம். மேலும் இந்நூலில் அடியார்களின் பக்திப் பண்பையும் ஆண்டவனின் அருமைப்பாட்டையும் அறிய இடமுளது

எவருக்கும் குறிக்கோளுடன் கூடிய வாழ்க்கை முக்கியம் என்பதை வலியுறுத்துவது.

திருவிளையாடற் புராணத்தை எடுத்துக்கொண்டால் ஆண்டவனின் எளிமைப் பண்பையும், மன்னர்களின் பக்திப் பண்பையும் உணர வாய்ப்புளது.

எல்லோரும் அறம் செய்யலாம்; குறிக்கோளுடன் வாழலாம் என்பதைப் பெரியபுராணமும், இறைவன் எல்லா உயிர்கட்கும் எளிவந்து அருளுவான் என்பதைத் திருவிளையாடற் புராணமும் உயிரோட்டமாய்க்கொண்டுள்ளன. கந்தபுராணம் சொல்லும் உயிரோட்டமான கருத்து, மனிதன் எவனும் தனக்குப்பிறர் செய்த நன்றியை மறவாமல் இருக்கவேண்டும் என்பதே ஆகும்.

நன்றி எது ?

'நன்றி' என்னும் சொல் 'நன்மை' என்னும் பொருளைத் தரும். திருவள்ளுவரும்,

> ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு''

என்னும் குறளில் எந்த நல்லசெயலைக் கொன்றாலும் உய்வுண்டு ; ஒருவன் தனக்குச் செய்த நன்மையைக்கொன்றால் உய்வேயில்லை என்று கூறுவர். 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்பதற்குப் 'பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும்' என்று பொருள் கண்ட உரையாசிரியர் பரிமேலழகர், பெரிய அறங்களைச்சிதைத்தலாவது – ஆன்முலை அறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த்தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்' என்று விளக்கி எழுதுவார்.

ஆனால் 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்பதற்கு இங்ஙனம் கடுமையாகப் பொருள் காண்பது மட்டுமின்றி எளிமையாகவும் பொருள் காணலாம் அன்றாடம் நாம் செய்யும் எத்தனையோ நன்மையான செயல்களைக் கொன்று, அதாவது தவிர்த்து வாழ்ந்தாலும், ஒருவன் செய்த நன்மையான செயலை மறந்து வாழ்வது கேடுதரும் என்றும் பொருள் கூற இடமுண்டு.

கந்த புராணத்தில் தட்சன் சூரபதுமன் இருவருமே நன்றி (சிவபெருமான் அருளிய வரங்களாகிய நன்மையை) மறந்து துன்பம் அடைந்தார்கள். தேவர்கள் தமக்குத் தலைவன் சிவபெருமான்தான் என்பது தெரிந்திருந்துங்கூட, தட்சனை எதிர்க்கத்துணிவு இல்லாமையால் தக்ஷயாகத்தில் கலந்து கொண்டார்கள். ஆதலின் உடந்தைக்குற்றம் செய்தமையால் மிகவும் துன்பம் அடைந்தார்கள். அவர்கள் வரலாற்றினைச் சிறிது சிந்திப்போம்.

தட்சன் யாகம் தருகின்ற பாடம் :

தட்சன் பல ஆண்டுகள் கடிய தவம் இருந்தான். இறைவன் அருளால் நல்வரங்கள் பல பெற்றான். பெருமாட்டியுடன் இறைவன் காட்சி கொடுத்தமையால், 'பெருமாட்டியை நான் திருமகளாகப் பெறவேண்டும்' என்றும் 'தாங்கள் மணமகனாக வந்து என்மகளை மணம்செய்து கொள்ளவேண்டும்' என்றும் வரம்கேட்டுப் பெற்றான். இங்ஙனம் வரம் கொடுத்த வள்ளலையே மதியாது நன்றி மறந்து யாகத்தைச் செய்தமை யால் அவன் இறுதியில் தண்டிக்கப்பெற்றான் அவனுக்குச் சிந்திக்கும் ஆற்றலே இல்லாத ஆட்டின் தலையை இறைவன் பொருத்தியருளினார். நன்றி மறந்தமையால் இந்நிலைக்கு ஆளானான் தட்சன் என்று, ஆட்டுத்தலையைப் பார்க்கும் தோறும். அவ்வரலாற்றினைக் கேட்கிற தோறும் மக்கள் புரிந்து கொண்டு நன்றி மறவாமல் வாழ வேண்டும் என்பதே இப்புராணத்தின் நோக்கமாகும்.

சூரனின் உணர்வில் சூழும் பல்லோர் :

சூரபதுமனும் பெருமானை நோக்கிப் பல்லாண்டுக் காலங்கள் கடுந்தவம் இயற்றி இறைவனின் அருளால் பல வரங்கள் பெற்றான். ஆனால் இறைவன்தன் முன்பு தோன்றிய பொழுது வீடுபேறு வேண்டாது தனக்கு வேண்டியவற்றைக் கேட்டுப் பெற்றான். எனக்கு யாராலும் அழிவு கூடாது என்று அவன் கேட்டுக் கொள்ள, இறைவனும் என் சக்தியைத் தவிர உனக்கு வேறு யாராலும் அழிவில்லை என்று திருவாய் மலர்ந்தருளினார். சூரன் வரம்பல பெற்ற களிப்பில் இறைவன் அருளிய இச் சொற்களைக் கேட்டானில்லை. அதனால்தான் பின்னர் வீரவாகுவும் சிங்கமுகன் போன்றவர்களும் பலவாறாக

எடுத்துச் சொல்லியும் தன் செருக்கு மிகுதியால் கேளாது போகின்றான். இறுதியில் முருகனே பேருருவம் எடுத்துக் காட்சி கொடுத்தபொழுது இறையருளால் நல்லுணர்வு சிறிது தோன்ற, பலவாறாகத் துதித்து வணங்க வேண்டும் என்று நினைக்கிறான்.

"சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாவு
ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான் இவற்காளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே"

என்னும் பாடல் சூரனின் மனமாற்றத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. எனினும் முருகனின் அருட்காட்சி முடிந்தவுடன் திரும்பவும் பழைய மனநிலைக்கே மாறிவிடுகின்றான் சூரன். "இவற்காளாகி வாழுதல் வேண்டும்: நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே" எனும் சூரனின் மனப்போக்கு இன்று பல்லோரிடையேயும் இருப்பதனை நாம் காணலாம்.

"மானம்" என்று மாண்பிறந்த ஒன்றைக் கருதிக்கொண்டு நல்லனவற்றைச் சிந்தியாதும், நல்லனவற்றைக் கூறும் பெரியோரை மதியாதும் மனம் போன போக்கில் திசைமாறிப் போய்க் கொண்டிருக்கின்றோம் என்பதனைப் புரிந்துகொண்டு நல்லநெறியில் வாழ்ந்தால் அதுவே இப்புராணம் படிப்பதன் பயனாகும்.

தேவர்களின் வீழ்வு தெரிவிக்கும் வாழ்வு :

தேவர்கள் தமக்குத் தலைவன் சிவபெருமானே என்று தெரிந்தும் தட்சனின் அச்சுறுத்தலுக்குப் பயந்து யாகத்தில் கலந்துகொண்டமையால் பல துன்பங்கள் அடைந்தார்கள். தேவர்கள் தங்கட்குத் தெரியாமையால் இத்தவறினைச் செய்திருந்தால்கூடப் பெருமான் மன்னித்தருளுவார். தெரிந்தே செய்தமையால் அவர்கட்குத் தண்டனை அதிகமாகிறது. அவர்கள் சூரபத்மனிடம் மிகவும் துன்புறுகின்றார்கள்

தேவர்கள் இத்தனை ஆண்டுகள் துன்புற வேண்டும் எனும் விதியை மாற்றாத நிலையில் பெருமானும் அவர்கள் அனுபவிக்க வேண்டிய காலம் முடியும் வரையிலும் பார்வதி திருமணம்,

முருகனின் திருஅவதாரம், வளர்ச்சி, தூது போன்ற காலங்களைக் கடத்திச்சென்று சூரனின் வாழ்வு முடியும் காலம்வரை காத்துநின்றே அவனை ஒடுக்கித் தேவர்களைக் காப்பாற்றுகின்றார் இல்லையேல் தேவர்கள் தம்மிடம் வந்து முறையிட்ட மறுவிநாடியே சூரனை ஒடுக்கியிருக்கலாம். இறைவன், நியதியைக் கடத்தல் முறையாகாது என்பதையும், அவரவர் செய்த நன்மை தீமைகளை அவரவரும் அனுபவிப்பதனாலேயே நல்லறிவு பெற்று உய்வர் என்பதையும் உணர்த்தும் பொருட்டே இங்ஙனம் நிகழ்த்தினார்.

கந்தபுராணம் கூறும் கருத்துக்கள் மூன்று

இந்தக் கந்தபுராணச் சிந்தனையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை மூன்று ஆகும்.

1. நமக்கு ஒருகாலத்தில் நன்மை செய்தவர்களை மறந்து விடுவதும், அவர்கட்குத் தீங்கு செய்வதும் கூடாது; அங்ஙனம் செய்தால் அறமே முன்னின்று அடக்கி ஒடுக்கும்.

2 நாம் எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும் நாம் துணைபோகும் காரியம் இழிவானது அல்லது கொடுமையானது என்றால் அது நம்மையும் பாதிக்கும்; நாம் நினைக்கும் நல்ல செயல்களைத் துணிச்சலோடு செயல்படுத்தும் கொடுமைகளைக்கண்டு எதிர்த்து நின்று போராடவும் வேண்டும்.

3. இறைவன் நடுநிலை தவறாதவன். நல்லவர்களைக் காப்பாற்றவும் தீயவர்களை ஒடுக்கவும் உரிய காலத்தில் அல்லாது முன்னரே வருவதில்லை; இதனை உணர்ந்து வாழ வேண்டும்.

ஆண்டுதோறும் கந்தசஷ்டி விழா கொண்டாடுவதோடன்றி கந்த சஷ்டி நாள்களில் விரதம் மேற்கொண்டு நல்ல பல நூல்களைச் சிந்திக்கவும் வேண்டும். இறைவன் அருள்பெறும் இவைபோன்ற நாள்களில் அருள் நூல்களை ஆழ்ந்து கற்று, அவற்றிலுள்ள நுட்பமான கருத்துக்களைத் தெளிந்து, அவற்றின்வழி நின்று, நம்மிடையே உள்ள குறைகளைப் போக்கிக்கொண்டு நிறைவுடன் வாழ்வோமாக!

'வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்'

22

நளனுக்கு நலங்கொடுத்த நம்பன்*

"வேயுறு தோளிபங்கன் வீடமுண்ட கண்டன்
மிகநல்ல வினை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்துளன்
உளமே புகுந்த அதனால்
ஞாயிற்று திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே."

—திருஞானசம்பந்தர்.

['நாளும் கோளும் நம்பன் அடியார்களை நலியா' என்ற உயரிய சிந்தனையின் வெளிப் பாடாக அருளிச் செய்யப்பெற்ற இவ்வரு ளுரையில் பஞ்சாங்கம் என்பது யாது என்பதும், நாள், கோள்களின் இயக்கமும், நளமகராசனின் வாழ்வியல் கூறுகளும், சனிபகவானின் அருளாற் றலும் விளக்கப் பெற்றுள்ளன.]

வானநூல் கலைக்குச் சான்று பஞ்சாங்கம்:

வானில்உள்ள நட்சத்திரங்களின் அமைப்புக்களையும், நவக் கிரகங்களின் இயக்கங்களையும் உள்ளவாறு ஆராய்ந்து, உலகில் நிகழ இருக்கும் நன்மை தீமைகளைக் கணித்து வெளியிடப் பெறும் பஞ்சாங்கம் நம்நாட்டு மக்களின் வானநூல் ஆராய்ச்சிக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது. கிரகணம்

---

*திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி விழாவில் 30—11—1979 அன்று வழங்கியருளியது.

சனிப்பெயர்ச்சி போன்றவற்றைப் பலமாதங்களுக்கு முன்பேயே சரியாக நாள், மணி, நிமிடம் வரை கணக்கிட்டு எழுதி வைக்கும் அரிய அறிவினைப் பாராட்ட வேண்டும்.

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது என்ற ஒன்பதும் நவக்கிரகங்கள் எனப்படும். இவற்றில் முதல் ஏழும் தனித்தனி கிரகங்கள் என்றும், பின் இரண்டும் சாயா கிரகங்கள் (நிழல் கிரகங்கள்) என்றும் பெயர் பெறும்.

ஆற்றல் உடையாரை அஃதிலார் சுற்றுவர்:

கிரகங்களில் மிகப் பெரியதும், ஜீவராசிகளை வாழவைக்கக் கூடிய ஆற்றல் பெற்றதும், சிறந்த ஒளியை உடையதும், மற்றக் கிரகங்களை ஈர்க்கக்கூடிய சக்திபெற்றதும் ஆனகிரகம்சூரியனே ஆகும் எஞ்சிய எட்டுக் கிரகங்களும் சூரியனைச் சுற்றிவருவன. இவ்வுலகில் மனிதவர்க்கத்தில்கூட ஆற்றல் உடையவரையும், அனைவரையும் வாழவைக்கும் அருள் உள்ளம் கொண்டவரையும், மிகுந்த செல்வாக்குப் பெற்றவரையும், எஞ்சிய மக்கள் தேவை கருதிச் சுற்றி வருவதுபோல எல்லாக் கிரகங்களும் சூரியனைச் சுற்றிவருகின்றன

எல்லாக்கிரகங்களும் சூரியனைச் சுற்றுகின்றன என்றாலும் உதாரணத்திற்கு ஒன்றைச் சிந்திப்போம். சூரியனைப் பூமி சுற்றி வருகிறது. சுற்றும்பொழுது முதலில் தன்னைச் சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றுகிறது. பூமி ஒருமுறை தன்னைத்தானே சுற்றிக்கொள்ள ஒருநாளும், சூரியனைச் சுற்ற 365 நாள்களும் ஆகின்றன ஒருகாரில் உள்ள சக்கரங்கள் தம்மைச் சுற்றிக்கொண்டே மற்ற இடங்களையும் சுற்றி வருவது போலவே, பூமியும் தன்னைச் சுற்றிக் கொண்டே சூரியனையும் சுற்றி வருகிறது பூமி சூரியனைச் சுற்ற 365 நாள்கள் ஆகும் என்பது கொண்டு சூரியன் எவ்வளவு பெரியது என்பது புலப்படும். இதைப் போலவே சனியும் சூரியனைச் சுற்றிவருகிறது. சனி சூரியனைச் சுற்ற சற்றேறக் குறைய 30 ஆண்டுகள் ஆகின்றன. சூரியனுக்கு 12 வீடுகள் (இராசி) உண்டு என்றும் சனி ஒவ்வொரு வீட்டையும் கடப்பதற்கு $2\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகின்றன என்றும் நம் முன்னோர்கள் திருவருட்குறிப்பால் உணர்ந்து உணர்த்தியுள்ளார்கள்.

மக்களின் மூச்சுக்களில் பிங்கலையாகத் (வலப்பக்கம்) திகழ்பவன் சூரியன் என்றும், இடகலையாகத் (இடப்பக்கம்) திகழ்பவன் சந்திரன் என்றும் கூறுவர். சூரியனைத் தந்தை யாகவும் (பிதுர்காரகனாயும்) சந்திரனைத் தாயாகவும்(மாதுர் காரகனாயும்) கூறுவர். தந்தையை இழந்தவர்கள் அமாவாசை விரதமும், தாயை இழந்தவர்கள் பருவ விரதமும் கடைப் பிடித்தலால் இது நன்கு விளங்கும். சூரியனைப் போலவே சந்திரனும் தன் அமுத கிரணங்களால் இவ்வுலகில் உள்ள உயிர்களை வாழவைக்கின்றான்.

கிரகங்களும், கிழமைகளும் :

சூரியன் எல்லா உயிர்கட்கும் ஒளியும் வாழ்வும் அளித்துக் காத்துவருவதால், 'உலகம் உவப்ப வலனேர்பு திரிதிரு பலர் புகழ்ஞாயிறு' என்று நக்கீரர் கூறி மகிழ்கிறார் ஒவ்வொரு நாள்களுக்கும் அமைந்த பெயர்க்காரணம் இங்கே சிந்திக்கத் தக்கதாகும். கிழமை என்றால் உரிமை என்று பொருள். ஞாயிற்றுக்கிழமை ஞாயிறுக்குரியது என்றும், திங்கட்கிழமை திங்களுக்குரியதுஎன்றும்,செவ்வாய்க்கிழமை செவ்வாய்க்குரியது என்றும், புதன்கிழமை புதனுக்குரியது என்றும்,வியாழக்கிழமை குருவுக்கு உரியது என்றும், வெள்ளிக்கிழமை சுக்கிரனுக்குரியது என்றும், சனிக்கிழமை சனிக்குரியது என்றும் கூறுவர். எஞ்சிய கிரகங்களாம் இராகுவும் கேதுவும் சாயாகிரகங்கள் ஆதலின் தனிப்பட்ட நாட்பெயரில்லை. ஒவ்வொரு நாளிலும் வரும் 1½ மணிநேரமும் இராகுவுக்கு உரியதாகும். இதேபோல் கேதுவுக்கும் ஒவ்வொரு நாளும் 1½ மணி நேரம் உரியதாகும்.

ஆளும் கிரகங்களும், அடியார்களும்:

சூரியன் முதலிய ஒன்பது கிரகங்களும் அதனதன் கடமையைச் சரிவரச் செய்துவருகின்றன. கிரகங்கள் யாவும் பரமேசுவரனை பூசித்துக் கிரக பதங்களைப் பெற்றுள்ளன; பரமேசுவரனின் ஆணை வழியே இயங்குகின்றன. கிரகங்கள் அதனதன் இயக்கத்தின் வழி மக்கட்கு நன்மையையும், தீமையையும் அளித்து வருகின்றன.

இந்தக் கிரகங்களின் வழிவரும் துன்பங்களிலிருந்து விடுதலை பெற வேண்டுமானால் கிரகங்களையும் அவற்றினை இயக்கும் சிவபெருமானையும் வழிபட வேண்டும்.

கிரகங்களின் தாக்குதல் தவசிகளையும், சிவனடியார்களையும், ஞானிகளையும் பாதிப்பதில்லை. மேலும், இறைவனை வழிபடும் அன்பர்களையும், நல்ல இறைபக்தி உணர்வுடைய பாடல்களைப் பாடிவருவோரையும் பாதிக்காது. காரணம் என்னவெனில், இவர்கள் கடவுளையே தியானித்துக் கொண்டிருப்பதால் பிறருக்குத் தீங்கு நினையாமல் வாழ்கின்றார்கள் ஆதலின் தீமைகள் அடைவதில்லை

சிலநேரங்களில் வினைவழி துன்பங்கள் வந்து தாக்கினும் அது அவர்களைப் பாதிப்பதில்லை. அல்வினையினால் அவர்களின் உடல் இடர் உற்றாலும், உள்ளம் இடர் உறுவது இல்லை. சூரியனைத் தலைவனாகக் கொண்டு இயங்கும் இந்தக் கிரகங்கள் பரமேசுவரனின் ஆணையில் கட்டுப்பட்டிருப்பதால் அவை சிவனடியார்கட்கு நல்லனவே செய்யும். இவற்றை எல்லாம்எண்ணியே ஞானசம்பந்தர், கோளறு திருப்பதிகத்தில்,

"வேயுறு தோளிபங்கன் ... .
என் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறும், நல்லநல்ல அவைநல்லநல்ல,
அடியாரவர்க்கு மிகவே
என்று பாடியருளினார்.

நாளும் கோளும் நம்பன் அடியார்க்குத் துன்பங்களைச் செய்யாது என்பது மட்டுமல்ல; இன்பங்களையும் செய்யும் என்னும் குறிப்பினை ஞானசம்பந்தர், "ஆசறும்" என்று கூறியதனோடு "நல்ல நல்ல" என்றும் கூறுவதால் தெளிந்து கொள்ளலாம்.

எல்லாக் கிரகங்களிலும் சூரியன்மிகப் பெரியவன், அந்தச் சூரியனும் ஆண்டவனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு இயங்குவதால் இறைவனைத் துதித்து வழிபடுவோர்க்கு, கோள்களால் ஒருநாளும் துன்பம் இல்லை என்பது உண்மை. இக்கருத்தை விளக்கும் வகையில் பல நிகழ்ச்சிகள் புராணங்களிலும் இதிகாசங்களிலும் வருவதனைக்காணலாம்.

நளனுக்கு நலங்கொடுத்த நம்பன் :

உதாரணமாக நளன் சரித்திரத்தைச் சிந்திப்போம். சனிபகவான் சூரியனுக்கும் சாயாதேவிக்கும் மகனாகத்

தோன்றியவர். கால் ஊனம் உடையவர், ஆதலின் மெதுவாகவே நடப்பார். இதனால் 'சஞ்ஸ்சரன்' என்று பெயர் பெற்றார். இதுவே வழக்கில் சனீஸ்வரன் என்றாகிவிட்டது. இவர் ஒரு முறை, நிடதநாட்டைச் சீரோடும் சிறப்போடும் ஆண்டுவந்த நளனை ஆட்கொண்டார். நல்லாட்சி புரிந்துவந்த நளன் ஆசாரசீலனாய் வாழ்ந்துவந்தகாலத்தில் ஒருநாள் அவசரத்தில் கால்களைக் கழுவும்பொழுது சூலின் பின்புறம் நனையாமல் இருக்க வந்துவிட்டான். இதுவே காரணமாக ஆசாரம் குறைந்த நிலையைத் துணைக் கொண்டு சனிபகவான் பிடித்துக் கொண்டார். அவனைத் துன்பங்கள் அடுக்கடுக்காய்த் தொடர்ந்தன. நாரதமுனிவரின் நல்லாசியால் தீர்த்தயாத்திரை மேற்கொண்ட நளனிடம் பாரத்துவாச முனிவர். 'இத் துன்பங்கள் நீங்கத் திருநள்ளாறு சென்று வழிபடு' என்று கூறியருளினார் அவனும் திருநள்ளாற்றை அடைந்தான். இங்குள்ள பிரமதீர்த்தத்தில் நீராடித் திருநீறு தரித்து ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டே திருக்கோயிலை அடைந்தான். உள்ளே செல்ல அடி எடுத்து வைத்தபொழுது, சனிபகவான், இனியும் இவனைத்தொடர்ந்தால சிவஅபராதியாவோம் என்று எண்ணி நளனைவிட்டுப் பிரிந்து கோபுரவாயிலின் வடபால நின்றார்; நிற்கிறார்.

இவ்வரலாற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்வதெல்லாம் எவ்வளவு தீமைகள் தொடர்ந்து நம்மை அடர்த்தாலும் நாம் எஞ்ஞான்றும் சிவசிந்தனையில் ஈடுபட்டும், திருநீறு தரித்தும், ஐந்தெழுத்தை உச்சரித்தும், திருக்கோயிலை வலம்வந்து வணங்கியும் வந்தால் தீமைகள் அகன்று நன்மைகள் பெருகும் என்பது ஆகும்.

கெடுப்பதும் கொடுப்பதும் செய்யும் சனியும் மற்ற மற்ற கிரகங்களும் நம்மைத் துன்புறுத்தா வண்ணம் நாம் பரமேசுவரனின் திருவருளை எண்ணி வழிபட்டு வாழ்வில் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் பெற்று வாழ்வோமாக!

நாள் என்செயும் வினைதான் என்செயும் எனைநாடிவந்த
கோள் என்செயும் கொடுங்கூற்று என்செயும் குமரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னேவந்து தோன்றிடினே

—கந்தர் அலங்காரம்.

23

இல்லை என்போர் யாரடா?*

"கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே"

- திருஞானசம்பந்தர்

[அமைதி காண எது வழி? அந்தணர் என்போர் யாவர்? அருளானர் வாழ்வு எத்தகையது? அடியவர் அடையாளம் எவை? ஆண்டவன் அருள்நிலை எத்தகையது என்பன வற்றை விளக்கி அருளிச் செய்யும் குருமணிகள், தில்லைநகரப் பெருமகனைப் பலபட வீதந்து, இறைவன் இல்லை என்போர் தில்லை சென்று காண்க என நெறியப்படுத்தியருளுகின்றார்கள்]

அமைதிகாண அரியவழி:

இவ்வுலகின்கண் பொருள் நெறியிலும் அருள்நெறியிலும் வாழ்வோர் பலரும் அன்றாடம் பல்வகை இன்னல்களை அடைந்து வருகின்றனர். இவர்களில் பலருக்கும் இறைவனை வணங்கி வழிபடவேண்டும் என்னும் எண்ணம் உண்டு. பக்தி உண்டு. ஆனால் அதில் அழுத்தம் இல்லை. நல்ல பக்தி உறைப்பு இல்லை. இறைவன்தான் இந்த உலகத்தை இயக்கு கின்றான்; அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்னும் அழுத்தமான இறையுணர்வும், பக்தி உறைப்பும் இருந்தால் எந்த நேரத்திலும் துன்புற வேண்டியது இல்லை. நிமைகளின்

---

* 2—1—1980 அன்று தில்லைத்திருக்கோயிலில் நடைபெற்ற "கோயில்" நூல்வெளியீட்டு விழாவில் வழங்கியருளியது.

விளைவு பாவம்; நன்மைகளின் விளைவு புண்ணியம். ஆதலின் பாவம் செய்தார்க்கு மன அமைதி இல்லாமல் போகிறது என்ற எண்ணம் கொண்டு நல்லன செய்து வாழவேண்டும்.

நமக்கு வருகிற துன்பத்திற்குக் காரணமாவது ஆசையே. அந்த ஆசையின் அடித்தளத்தில் பாவம் என்னும் மாளிகை எழுப்பப்படுகிறது. ஆதலின் உலகப் பொருள்களின் மீதுள்ள ஆசையினை விடவேண்டும். அதற்கு இவ்வுலகின்கண் வாழும் பற்றுடையார்களைப் பற்றி வாழாது, பற்றற்றானைப் பற்றி வாழவேண்டும். அங்ஙனம் வாழ்ந்தால் ஆசை அகலும். இதைத்தான் திருவள்ளுவர்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்று கூறுகின்றார். இக்குறளில் பற்றுக என்றும், அப் பற்றைப் பற்றுக என்றும் இருமுறை குறிப்பிடுகிறார். காரணம் இறையடியைப் பற்றுவது உயிர்கட்கு எளிதானதல்ல என்பதை அறிவித்தற்கும், எளிதல்ல என்பதை உயிர்கள் உணர்ந்து சோர்வின்றி விழிப்பாகப் பற்றிக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி உணர்த்துவதற்குமே உடன்பாட்டுவகையில் இரு முறை கூறியுள்ளார். மேலும் அப்பற்றின் வழியாகவரும் கவலையும் அதன் வழிவரும் துன்பமும் நீங்குவதற்கு இறைவன் தாளன்றித் துணை இல்லை என்று எதிர்மறையில் வற்புறுத்தி உள்ளார்.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

என்பது அக்குறள். இவற்றையெல்லாம் அப்பர் அடிகள்,

"பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா என்றும்
பொழில் ஆரூரா என்றே போற்றா நில்லே.

என்ற தாண்டகத்தில் பாடியருளுகின்றார். உற்றவரும் உறு துணையும் நீயே என்றும், உன்னையல்லால் ஒரு தெய்வத்தை

நினையேன் என்றும் ஒருமித்த நிலையில் வழிபட்டோர்க்குப் பாவங்களும் அதன் வழிவரும் துன்பங்களும் இல்லை என்றும் கூறுகின்றார். இதைத்தான் திருஞானசம்பந்தரும். 'முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே பற்றாதின்றாரைப் பற்றா பாவமே' என்று இத்தலத்திருப்பதிகத்தில் கூறியருளுகின்றார்.

அந்தணர் என்போர் அறவோர்:

இத்திருப்பாடலின்கண் இன்னும் ஒரு குறிப்பு உள்ளது. பாவங்களின்வழி உலகில்வரும் பஞ்சத்தினைப்போக்கி உலகில் வசியும் வளனும் சுரக்கக் கற்றாங்கு எரியோம்பும் கருணையுடைய அந்தணர்கள் வேள்வி செய்யவேண்டும் என்று கூறுகின்றார். வள்ளுவர் கூறுவது போல் கற்றவழிநிற்றல் எல்லாநிலையிலும் தேவை என்பதை உணர்த்த இங்கும் 'கற்றாங்கு எரியோம்பி' என்று குறிப்பிடுகின்றார். கலி என்றால் பஞ்சம் என்று பொருள். அப்பஞ்சம்நீங்க அந்தணர்கள் அழலோம்பும் அருமைப்பணியைச் செய்கின்றார்கள்.

"அந்தணர் என்போர் அறவோர்" என்று கூறிய திருவள்ளுவர் அதற்குக் காரணத்தையும் குறிப்பிடுகின்றார். உலகில் எல்லா உயிர்களும் வாழவேண்டும் என்ற அருளுடைய ராயிருக்கும் செந்தண்மையை அவர்கள் கொண்டு வாழ்கின்றார்கள் ஆதலின் அந்தணரை அறவோர் என்கின்றார். உலகம் பசியாலும் பஞ்சத்தாலும் துன்புறுகின்றதே என்று எண்ணி, அத்துன்பம் நீங்கி வளம்பெருக, அந்தணர்கள் வேள்வி செய்கின்றார்கள் ஆதலின் அவர்கள் அறவோர் தானே? வேள்வி செய்தால் மழைபொழிந்து வளம் சுரக்கும் என்னும் குறிப்பில் சேக்கிழாரும் 'வேள்வி நற்பயன் வீழ்புனலாவது' என்று அருளிச்செய்கின்றார்.

அழலோம்பும் அருமைப்பணி:

இங்ஙனம் அருள்நிலையில் அந்தணர்கள் அழலோம்புகின்றனர் என்ற குறிப்பு அப்பரடிகள் பாடலிலும் வருகிறது. அப்பூதி அடிகளின் வீட்டில் அரவுதீண்ட இறந்த மூத்த திருநாவுக்கரசை இறையருளால் எழுப்பிக்கொடுத்தருளிய திருநாவுக்கரசர் அப்பூதியடிகளைப் பாராட்டுமுகத்தான் திருப்பழனத் திருப்பதிகத்தில்,

"வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே"

என்று பாடியருளுகின்றார். அகத்துறையில்வரும் இப்பாடலில் தலைவி, கலியின் ஆற்றல்மெலிய அழலோம்பும் அப்பூதியின் தலையில் சென்று தங்கும் பூவாகியிருக்கும் சேவடி உடையவனே என்று போற்றுவது எரியோம்புதலின் பயனை அறிவிக்கின்றது. இதில், 'கலிமெலிய அழலோம்பும் அப்பூதி' என்று அப்பரும் வேள்வியால் கலிமெலிதலைச் சுட்டிக்காட்டுகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இதேபோன்று கலியின் வலிமைகெட அழல்ஓம்பும் அந்தணர்களை வலிவலத்தில் வந்து கண்டேன் எனும் குறிப்பில் திருவலிவலத் தேவாரத்தில்

"கலிவலம்கெட ஆரழல் ஓம்பும்
கற்றநான்மறை முற்றனல் ஓம்பும்
வலிவலந்தனில் வந்து கண்டடியேன்
மன்னு நாவலாரூரன் வன்றொண்டன்"

என்று பாடியருளுகின்றார். தேவாரம் அருளிய மூவருமே இக்கருத்தில் ஒன்றுபட்டு அருளியிருப்பதை ஒப்புமைப்படுத்திப் பார்க்கலாம்.

கேளுங்கள் கொடுக்கப்படும்.

அருளாளர்களின் அனுபவ வார்த்தைகளை நாம்கேட்டு அதன்வழி நடக்க முயலுதல் வேண்டும். ஆனால் நம்மில் பலரும் அருளாளர்களின் அருள் வார்த்தைகளையும் கேளாது, தாங்களாகவும் சிந்தித்து உணர்ந்து செயல்படாது துன்புறுகின்றனர்.

"ஏவவும் செய்கலான் தான்தேரான் அவ்வுயிர்
போஓ மளவும்ஓர் நோய்"

என்று வள்ளுவர் கூறுவதற்கேற்ப உலகில் ஓர்நோயாக நாம் இல்லாமல், நல்லோர் கூறுவதைக்கேட்டு வாழ்ந்தால் நன்மை உண்டு. 'கேளுங்கள் கொடுக்கப்படும்' என்பதற்கு இறைவன் முன்னின்று நமக்குத் தேவையான உலகியல் பொருள்களைக் கேட்டல் என்பது பொருளில்லை. இறைவனருளிய வேதாகமங்களும், ஆன்றவிந்து அடங்கிய சான்றோர்களும் அருளாளர்களும் சொன்னதைக் கேட்டு அதன்படி நடந்தால் என்பது

பொருளாகும். உலகியலிலும் சொன்னதைக்கேட்கும் பிள்ளை களுக்குத்தான் பெற்றோர்கள் கருணை பாலிக்கிறார்கள். எனவே அருளாளர்கள் சொன்னதைக்கேட்டால் நமக்கும் நல்லன எல்லாம் கிடைக்கும்.

அருளாளர்கள் வாழ்வு :

மேலும், அருளாளர்கள் வாழ்வில் சிந்தித்துப்பார்க்க வேண்டியது மற்றும் ஒன்று உண்டு. நம்மில் பலரும் துன்பங்களைக் கண்டு ஏதோ நமக்குத்தான் இவ்வளவு துன்பங்கள் வந்துள்ளன; வேறு யாருக்கும் இவ்வளவு வந்த தில்லை என்று எண்ணுகின்றனர். ஆனால் அது உண்மையல்ல. ஞானசம்பந்தருக்கும், நாவுக்கரசருக்கும், சுந்தரருக்கும், மணிவாசகருக்கும் வந்த துன்பங்களில் சிறிதுகூட நமக்கு வந்த தில்லை; வந்தால் நம்மால் பொறுத்துக்கொள்ளவும் முடியாது. நம்மில் யாரையும் நஞ்சு ஊட்டவோ, கல்லில் கட்டிக் கடலில் போடவோ இல்லை. அவர்கள் இத்தகைய துன்பங்கள் வந்தபொழுதெல்லாம் துன்புற வில்லை. இறைவன் அவரவர்கள் வினைகளுக்கீடாகவே அருள்பாலிக்கின்றான் என்பதற்கு அருளாளர்களின் வாழ்க்கையுங் சான்று பகர்கிறது. வேண்டுதல் வேண்டாமை இலான் இறைவன் ஆதலின், எல்லார்க்கும் பொதுவாகவே அருள் வழங்குகின்றான். அருளாளர்கள் துன்பம் வந்த பொழுதெல்லாம் 'எம்பெருமான் உளன்' என்றும் 'ஆலவாயரன் அருள் முன்னிற்க' என்றும் எண்ணி ஒரே நோக்கில் வாழ்ந்ததால் எத்துன்பங்கள் வந்தபொழுதும் அதிர்ச்சி அடையவில்லை. சுந்தரருக்குப் பல நேரங்களில் துணைநின்ற பெருமானே சத்தியம் தவறிய குற்றத்திற்காகக் கண்களைக் குருடாக்கினான். ஆனால் சுந்தரர் அதுகண்டு துன்புறாது திருவாரூர்ப் பெருமானை வழிபடப் புறப்பட்ட வேட்கையில் குறைந்துவிடாமலும், திருவொற்றியூருக்குத் திரும்பிச் சென்றுவிடாமலும் ஒரேநோக்கில் புறப்பட்டு வருகிறாரே, அதுதான் அவர்கள் நமக்குக் காட்டும் வழியாகும். இன்னல்களினால் துன்புறுவதுபோல அவர்கள் பாடுவதுகூட உடலைத்தாக்கி, உடலழியாய்க்கழியும் வினைநிலையே தவிர உயிரைப் பாதிப்பதில்லை. ஞானிகள் புற்றுநோய் தமக்கு வந்தபோதும்கூட கலங்காமல் மகிழ்ச்சியாகவே இருந்தனர் என்பது இரமணர் போன்ற பெரியோர்களின் வரலாறு.

அடியார்களைக் காணும் அடையாளம் :

சமயாசாரியர்கள் வரலாற்றில் தனிச்சிறப்பு என்னவெனில், இறைவன் தங்களை முதன்முதலில் ஆட்கொண்டபொழுது என்ன உணர்வும் பக்தியும் ஒருமித்த மனமும் கொண்டிருந்தார் களோ அவற்றில் எள்முனையும் குறையாமலும் மாறாமலும் நிறைவடையும் வரையிலும் வாழ்ந்தார்களே அதுதான். அதற்கு ஆதாரமாக, அவர்கள் பாடிய பாடல்களில் எந்த ஒன்றை எடுத்துப் பார்த்தாலும் தரம் குறையாமலும், வாழ்த்தும்நிலை மாறாமலும் அப்பாடல் ஒரே நோக்கில் அமைந்து இருப்பதனையே கொள்ள்லாம். சுந்தரர்கூட, ''இவரலாது இல்லையோ பிரானார்'' என்று பாடும்போது 'இவரைத் தவிர தலைவன் இல்லை' என்னும் பொருளில்தான் பாடுகின்றார்.

இத்தகைய குறிப்புக்கள்தாம் அருளாளர்கள் என்பதற்குச் சரியான அடையாளங்களாகும். இந்த உயர்வுகளை உடையோர் கூறுவதே அருள்வாக்கு எனலாம்.

தில்லைப் பெருமை:

இவ்வுயர்வுடையோர் மூவராலும் பாடப்பெற்ற இத் தில்லைப்பதி பலபெருமைகளையும் உடையது தில்லை என்பது ஒருவகை மரத்தைக் குறிக்கும். இப்பதியில் இம்மரமே தல விருட்சமாக இருத்தலின் இப்பெயர் பெற்றது. இம்மரம் சிவ கங்கையின் வடகரையில் இருப்பதாகத் தெரிகிறது. அதனை, வழிபடும் தலவிருட்சமாக அமைத்தல் சிறப்புடையதாகும். சிதம்பரம் என்ற சொல்லைச் சித் + அம்பரம் என்று பிரிப்பர். சித் என்றால் அறிவு என்றும், அம்பரம் என்றால் ஆகாயம் என்றும் பொருள். அறிவாகாயமாயிருப்பது இத்தலம் என்று கூறலாம். நம்நாட்டில் பஞ்ச பூதத்தலங்கள் என்று ஐந்து இடங்களைக் குறிப்பிடுவர். காஞ்சிபுரத்தை பிருதிவித்தலம் என்றும், திருவானைக்காவை அப்புத்தலம் என்றும், திருவண்ணாமலையைச் சோதித்தலம் என்றும், காளத்தியை வாயுத்தலம் என்றும், சிதம்பரம் ஆகிய இத்தலத்தை ஆகாயத் தலம் என்றும் கூறுவர்.

ஆகாயத்திற்கு நிலம் இன்மைபோல இத்திருக்கோயிலுக்கும் ஒருகுழி நிலம்கூட இல்லாமல் இருப்பதும், நடராஜா என்பதற்கு ஏற்ப ராஜதர்பாரிலேயே பூஜாகாலங்கள் நடைபெறுவதும் சிந்திக்கற்பாலன.

ஆண்டவனின் அருள்நிலை:

இக்கோயிலுக்கு வருவோர் பலரும் மூலவராகிய திருமூல நாதரைத்தரிசிப்பதில்லை; நடராசரைத் தரிசித்துவிட்டுச் சென்று விடுகின்றனர். இது தவறு. பழமையில் திருமூலநாதரையே பதஞ்சலியும், லியாக்ரபாத முனிவரும் வழிபட்டனர். அவர் களின் வேண்டுகோட்படியே தாண்டவ தரிசனம் புரிந்தார் திருமூலநாதராகிய நடராசப்பெருமான். எனவே திருமூலநாத ரையும் அவசியம் வழிபட வேண்டும். சிவகங்கையின் தென்பால் ஆலமரத்தின் அடியில் திருமூலநாதர் எழுந்தருளியிருந்தார். ஆனால் இப்போது ஆலமரம் இல்லை. இத்தல விருட்சமும் வைத்து வழிபடுதல் நலம்பயக்கும்.

ஆண்டவன் உயிர்களின் பக்குவ நிலைக்கு ஏற்ப உருவ நிலையிலும் அருவுருவ நிலையிலும் அருவ நிலையிலும் வந்து அருள்பாலிக்கின்றான் என்பர். இம்மூன்று நிலைகளையும் சிற்றம்பலத்திலேயே கண்டுமகிழலாம். நடராசப்பெருமானாக உருவநிலையிலும், இலிங்கவடிவில் சந்திரமவுலீசராக அருவுருவ நிலையிலும். ஆகாயவடிவில் இரகசியமாக அருவநிலையிலும் இருந்து அருள்பாலிக்கும் நிலையே அம்மூன்று நிலைகளாம்.

ஐந்து சபைகள்:

இங்கே ஐந்து சபைகள் உள்ளன. நடராசப்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம் சித்சபை எனப்படும். சிற்றம்பலம் என்றும் கூறுவர். இதற்கு முன்னால் நடராசப்பெருமான் திருமஞ்சனம் கொண்டருளுகின்ற இடம் கனகசபை எனப்படும். இதனைப் பொன்னம்பலம் என்பர். உற்சவமூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் இடம் தேவசபை எனப்படும். இதனைப் பேரம்பலம் என்பர். இங்குதான் தீட்சிதர்கள்கூடி நிர்வாக நிலைகுறித்தும் மற்றும் நடைமுறைச் சட்டதிட்டங்கள் குறித்தும் கலந்துபேசி முடிவெடுப்பர். இவர்கள் கொண்டுள்ள நிர்வாக முறைகளை ஆட்சியிலுள்ளவர்கள்கூடப் புரிந்து கொள்ளுதல் பயனளிக்கும் எனலாம். நடராசப்பெருமானின் திருமுன்னர், கொடிமரத்தின் தென்பாலுள்ள இடம் சித்திரசபை எனப்படும். இதனை எதிரம்பலம் எனக் குறிப்பிடுவர். இராஜ சபை எனப்படுவது ஆயிரக்கால் மண்டபமாகும்.

நூல் அரங்கேற்றம்:

இதுபோன்ற மண்டபங்களில்தான் அக்காலத்தில் நூல்கள் அரங்கேற்றம் பெறுவது உண்டு. இக்காலத்தில் பதிப்பிக்கப்

பெற்ற நூலை அரங்கேற்றம் செய்வதற்குக் காலமும் சூழலும் அமையாத நிலையில் வெளியீட்டுவிழா என்று ஒன்று கொண்டாடி விடுகின்றோம். இன்று, இங்கு, உலகம் சுற்றிய தமிழன் என்று பாராட்டப் பெறும் திரு. சோமலெ அவர்கள் ஆய்ந்து எழுதியுள்ள இந்நூலை வெளியிடுகின்றோம். இத் திருக்கோயில் நிர்வாகநிலைகள் குறித்தும், வழிபாட்டுமுறைகள் குறித்தும் தீட்சிதர்கள் பலர் பலகட்டுரைகள் எழுதியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இல்லை என்பார் தில்லையைப் பார்க்க:

கடவுள் இல்லை என்று கூறிவருவோர் உண்மையிலேயே கடவுள் இருக்கிறாரா என்பதை அறிந்து கொள்ளும் வேட்கையில் இருப்பார்களேயானால் இங்கு நடக்கும் வழிபாட்டு முறைகளைக் கூர்ந்து கவனித்துவந்தால் புரிந்து கொள்ளலாம். உலக முக்கியத்துவம் வாய்ந்த இத்தலம் நட ராஜர் தலம் என்பதற்கு ஏற்ப ராஜஉபசாரத்தில் வழிபாடுகளும், மற்றமற்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. ஒருகுழி நிலம் தனக்குச் சொந்தமில்லாத இத்திருக்கோயிலைச் சார்ந்து 300 தீட்சிதர் குடும்பங்கள் வாழ்ந்து வருவதும், வழிபாடுகளும், சிறப்பு நிகழ்ச்சிகளும் எந்தத் தடையுமின்றி, குறைவுமின்றி இராஜதர்பாரில் நடந்துவருவதும் கடவுள் உண்டு என்ற உண்மையைப் புலப்படுத்தும்.

இங்கு வெளியிடப்பெறும் இந்தநூலைத் திரு. சோமலெ அவர்கள் இனிய தமிழில் பாமரரும் பண்டிதரும் புரிந்து கொள்ளும்வகையில் எழுதியுள்ளார் தெய்விக மணம் பரப்பும் இம்மலரின் முதல் தொகுதியே இப்பொழுது வெளியிடப் பெறுகிறது. மேலும் இரு தொகுதிகள் வெளியிடப்பட உள்ளன என்பது மகிழ்ச்சிக்குரியது.

24
தோத்திர நெறியும்-சாத்திர நெறியும் *

"பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே"

— மாணிக்கவாசகர்

[அறிவு நெறியும் அன்பு நெறியும் ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள இணக்கத்தை விரித் தருளும் குருமணிகள், சைவ தோத்திரங் களையும், சைவசித்தாந்த சாத்திரங்களையும் இ வை யெ னச்சுட்டி, அவ்விருநெறிகளையும் உரியவாறு எடுத்துக்காட்டி, இறைவன் அருள் நிலையை, பூனை குரங்கு நியாயங்கள் வாயிலாக விளக்கியருளியுள்ளார்கள்.

சமயம் ஏன் ?

முன்னோர்கள் குறைந்த வருவாயிலும், குறைந்த வசதி யிலும் நிறைவாக வாழ்ந்தார்கள். வாழ்க்கையோடு இயைந்த சமய நம்பிக்கையில் விரதங்கள் என்று அமைத்துக்கொண்டு

---

* 2—3—80 அன்று ஈரோடு அருள்நெறித் திருக்கூட்டத்தினர் தருமையாதினத் திருமடத்தில் குரு லிங்க சங்கம வழிபாடு நிகழ்த்தியபோது வழங்கியருளியது.

உடலையும் உணர்வையும் கட்டுப்படுத்தும் கலையில் தேர்ந்து வாழ்ந்தனர். அதனால் அவர்கள் வாழ்வில் உடற்பிணியும், உளக்குமுறலும் மிகமிகக் குறைவாகவே இருந்தன.

ஆனால் இன்றைய மக்கள் தாம் பெறும் வருவாயிலோ, அல்லது அமைத்துக்கொண்ட வாழ்க்கை வசதிகளிலோ முன்னோர்களைவிடக் குறைந்தவர்கள் அல்லர். எனினும் அன்றாடம், உடற்பிணியாலும், உளத்தளர்வாலும் துன்புறுகின்றனர். இதற்குக் காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்ப்பது ஒவ்வொருவரின் கடமையாகும்

மனிதன் தன் ஆற்றலாலும், அறிவுநுட்பத்தாலும் பல கருவிகளைக் கண்டுபிடித்து வாழ்க்கையை வளமாக்கிக் கொண்டான். ஆனால் அவன் மனத்தில் நிம்மதி இல்லை. அந்த நிம்மதியைச் சமயம் ஒன்றுதான் தரமுடியும். இதனைப் பலரும் இன்று உணர ஆரம்பித்துள்ளனர்.

அருளைப்பெற அமைந்த நெறிகள்:

அத்தகைய சமயமும் உயிர்களின் தரத்திற்கேற்பப் பலவகைப் படுகின்றது. அவற்றுள் சிறந்ததான சைவ சமயம் ஆண்டவனின் அருளைப் பெறுவதற்குக் கூறும் நெறிகள் இரண்டு. ஒன்று அன்புநெறி; மற்றொன்று அறிவுநெறி. அன்பு நெறியைத் தோத்திரநெறி என்றும் இலக்கியநெறி என்றும் சொல்லலாம். அறிவு நெறியைச் சாத்திர நெறியென்றும் இலக்கண நெறியென்றும் சொல்லலாம்.

அன்பு பலவகை:

அன்பு என்னும் சொல் பக்தி, காதல், பற்று, பாசம், நட்பு என்று பல நிலையில் பல பெயரில் வழங்கிவருகிறது. ஒரு பொருள் பல சொல்லில் எடுத்தாளப்படுமேயானால் அதற்குள்ள காரணங்களை உணர வேண்டும். தண்ணீர்தான் எல்லாவற்றிலும் இருக்கிறது என்றாலும் இருக்கிற இடத்தையும் அமைப்பையும் கொண்டு, குளம் என்றும், கிணறு என்றும், ஆறு என்றும், கடல் என்றும் பல சொல்லால் வழங்கி வருவது போல, அன்பு என்பது ஒன்றுதான் என்றாலும் வைக்கப் படுகின்ற இடமும் நோக்கமும் கருதிப் பலபெயரில் கூறப் படுகிறது.

ஆண்டவன்மீது வைக்கும் அன்பைப் பக்தி என்றும், நாட்டின்மீதும் மொழியின்மீதும் வைக்கும் அன்பைப்பற்று என்றும், குழந்தையிடமும் உற்றாரிடமும் வைக்கும் அன்பைப் பாசம் என்றும், நண்பனிடம் வைக்கும் அன்பை நட்பு என்றும், பெண்ணின்மீது கொள்ளும் அன்பைக் காதல் என்றும் கூறுவர்.

கடவுளின்மீது வைக்கும் அன்பைக் காதல் எனும் சொல்லாலும் முன்னோர்கள் குறித்துள்ளனர்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி"

என்பது ஞானசம்பந்தர் தேவாரம். சுந்தரரும்,

"காதல்செய்து களித்துப் பிதற்றிக்கடிமா மலரிட்டு உனைஏத்தி
ஆதல் செய்யும் அடியார்."

என்று திருக்கச்சூர் ஆலக்கோயில் பதிகத்தில் 'காதல் செய்து' எனக் குறித்தருளுகின்றார் மணிவாசகரும்,

"காலமுண்டாகவே காதல் செய்து உய்மின்"

என்று மொழிந்தருளுவர். எனவே அடியார்கள் ஆண்டவன் மீது கொள்ளுகின்ற அன்பு நெறிக்கு முன்னோர்கள் 'காதல்' எனும் சொல்லையும் பயன்படுத்தி வந்தனர். இப்பக்தி நெறியைத் தோத்திர நெறி என்று கூறுவர்.

அறிவு நெறி:

அறிவுநெறியை வடமொழியில் ஞானநெறி என்பர். சாத்திரநெறி என்பதும் இதுவே. நம்மில் பக்தி நெறியில் வழிபடுவோர்க்கு அச்சம் இருப்பதில்லை அறிவு நெறியில் வழிபடுவோர்க்கு அன்பு இருப்பதில்லை. அறிவுநெறியில் அன்பும், அன்பு நெறியில் அச்சமும் வேண்டும். இதனைத் திருவிளையாடல் புராணத்தில் பரஞ்சோதிமுனிவர் கீழ்வரும் பாடலால் குறிப்பிடுகின்றார்.

"நிச்சலும் ஈசன் அன்பர் நெறிப்படின் சிறார்மேல் வைத்த
பொச்சமில் அன்பும் மன்னர் புதல்வரைக் கண்டா லன்ன
அச்சமும் கொண்டு கூசி அடிபணிந்து இனிய கூறி
இச்சையா தொழுகி உள்ளக் குறிப்பறிந்து ஏவல் செய்வார்"

இதையே 'பயபக்தியுடன் சுவாமி கும்பிட்டார்' என நாட்டு வழக்கில் மக்கள் பேசிவருகின்றனர். இதுவே அருளாளர்கள் காட்டிய வழியுமாகும். நல்ல பண்பட்ட உள்ளத்தில் தோன்றும்

அன்புநெறி எந்தவகையிலும் அறிவுநெறிக்கு மாறுபட்டு போய் விடுவதில்லை. நல்ல உணர்வும் பண்பாடும் உள்ள அறிஞனிடம் தோன்றும் அறிவுநெறி எந்தவகையிலும் அன்பு நெறிக்கு மாறு படுவதில்லை. பக்திநெறித் தோத்திரங்கள் பாடியருளிய அருளா ளர்கள் வாழ்வில் அறிவு நெறிச் சாத்திரங்கள் தாமாகவே அமைந்து விடுகின்றன. அவ்வாறே அறிவுநெறிச் சாத்திரங்கள் பாடியருளிய அருளாளர்கள் வாக்கில் அன்புநெறித் தோத்திரங்கள் இயல்பாகவே அமைகின்றன. மெய்யான அறிவு நெறிப்பட்டவர்கள் அன்புநெறிக்கு மாறாகச் சென்று விடுவதில்லை.

விஞ்ஞானியின் அனுபவம்:

இந்நிலையினை மெய்ஞானத்தில் மட்டுமல்லாது விஞ்ஞான நிலையிலும் காணலாம் வானொலியைக் கண்டுபிடித்த மார்கோனி ஒருசெய்தியைக் கூறினார் '' நான் இளைஞனாய் இருந்தபொழுது என்தந்தையுடன் வழிபாட்டிற்குச் செல்வேன்; அப்பொழுது அவர் ' பரமண்டலத்தில உள்ள பிதாவே ' என்று அழைத்துப் பிரார்த்தனை செய்வார். அப்பொழுதெல்லாம் இங்குக் கூறும் இப்பிரார்த்தனை எப்படி அங்குச்செல்ல இயலும் என்று ஐயுறுவேன். வானொலியைக் கண்டுபிடித்த பின்னர் தான் அதன் உண்மையை உணர்ந்து கொண்டேன் '' என்று கூறினார். இவரைப்போன்ற அறிவு வயப்பட்ட விஞ்ஞானிகள் கடவுளை வழிபடும் அன்பு நெறியிலும் வாழ்ந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

எது விஞ்ஞானம் ?

உண்மையிலேயே விஞ்ஞானம் என்பது ஆண்டவன் படைத்த பொருள்களின் உள்ளார்ந்த இரகசியங்களைக் கண்டு பிடித்து அறிவிப்பதே தவிர வேறில்லை. இல்லாத எதையும் விஞ்ஞானிகள் நமக்குச் சொல்லிவிடுவதில்லை. இருப்பதைப் புரிய வைக்கிறார்கள்.

இவற்றால் உண்மையான பக்தன் உண்மையான அறிஞனா யிருப்பான் என்பதைத் தெளிகிறோம்.

இலக்கியமும் இலக்கணமும்:

அன்புநெறியை இலக்கிய நெறி என்றும், அறிவுநெறியை இலக்கணநெறி என்றும் கூறலாம். உயர்ந்தோரின் செம்மை யான வாழ்க்கை நெறியே இலக்கியம் எனப்படும். அவ்வாறு நடந்துகாட்டிய செம்மைநெறியைப் பிறரும் பின்பற்றிப் பயன்

பெற அம்முறையை மேல்வரிச் சட்டமாக அமைத்து எழுதப் படுவதே இலக்கணம் எனப்படுகிறது.

'' உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்''

எனும் குறளின் இலக்கணத்திற்கு ஏற்ப நடந்து காட்டிய இலக்கியம் மகாத்மாகாந்தியைப் போன்றோராவர்.

சட்டம் என்று இப்போது சொல்வதும் இலக்கணம் தான். இவ்விலக்கணம் நடைமுறைக்கு ஒத்ததாகவும், பிறரால் பின் பற்றி நடக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

திருமுறை ஆசிரியர்கள்:

சைவசமயத்தைப் பொறுத்தவரையில் தோத்திர நெறியினைப் போதித்தவர்கள், சமயாசாரிய பெருமக்களை, உள்ளிட்ட இருபத்தெழுவராவர். இவர்களை வரிசைப்படுத்திக் கூறும் பாட்டு ஒன்று உண்டு.

1'திருஞான சம்பந்தர் 2 வாகீசர் 3சுந்தரர்
4திருவாத வூரர் மற்றைத்
5திருமாளி கைத்தேவர் 6சேந்தனார் 7கருவூரர்
தெள்ளு 8பூந்துருத்தி நம்பி
வருஞான 9கண்டரா தித்தர் 10வேணாட்டடிகள்
வாய்ந்த 11திரு வாலி யமுதர்
மருவு 12புருடோத்தமர் 13சேதிராயர் 14மூலர்
மன்னு திரு 15ஆல வாயார்
ஒரு16 காரைக் காலம்மை 17 ஐயடிகள் 18சேரமான்
ஒளிர்19 கீரர் 20கல்லாடனார்
ஒண்21கபிலர் 22பரணர்மெய் உண23ர்ளம் பெருமானொடு
ஓங்கும் 24அதிராவடிகளார்
திருமேவு 25பட்டினத் தடிகளொடு
26நம்பியாண்டார் நம்பி 27சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண்டருள்செய்த
தெய்விகத் தன்மையோரே'

என்பது அப்பாடல் இவர்கள் அருளிச்செய்த தோத்திரங்கள் திருமுறைகளாகும்.

சாத்திரங்கள் :

சாத்திரநெறியினைப் போதித்தவர்கள் சந்தானாசாரியர் களுள் மெய்கண்டார், அருணந்திசிவம், உமாபதிசிவம் ஆகிய மூவரும், திருவியலூர் உய்யவந்தார், திருக்கடவூர் உய்ய வந்தார், திருவதிகை மனவாசகங்கடந்தார் ஆகிய மூவரும்

ஆக அறுவராவர். இவர்கள் அருளிச்செய்த சாத்திரங்கள் பதினான்காகும். இப்பதினான்கையும் கூறும் பாட்டு ஒன்றுண்டு. அது,

''உந்தி களிறொ டுயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மைப் பிரகாசம்-வந்தவருள்
பண்புவினா போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று''

என்பதாகும்.

தோத்திரமும் சாத்திரமும்:

தோத்திர நெறியைக் கூறியருளிய சமயாசாரியர்கள் ஒவ்வொரு இடத்திலும் வாழும் மக்களை நாடிச்சென்று பதியுண்மையை அறிவுறுத்தி நல்வழிப்படுத்தினார்கள்.

சாத்திரநெறியைக் கூறியருளிய அருளாளர்கள் இருந்த இடத்திலிருந்தே பக்குவிகளாய்த் தம்மை நாடிவந்தோர்க்கு உண்மைப்பொருள்களை உபதேசம் செய்தருளினார்கள்.

நம் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஒரு பாடலில் யார்யாருக்கு உண்மைப் பொருள்களைக் கூற வேண்டும் என்பதை மிகவும் தெளிவாகக் கூறியருளுகின்றார்.

''அன்புமிக உண்டாய் அதிலே விவேகமுண்டாய்த்
துன்பவினை யைத்துடைப்ப துண்டாய்-இன்பம்
தரும்பூரணத்துக்கே தாகமுண்டாய் ஓடி
வரும்கா ரணர்க்குண்மை வை''

எனும் இப்பாடல் நற்பொருளைக்கேட்போரின் தகுதிதனை விளக்கமுறக்கூறுகிறது.

ஆண்டவன் அருளும்நிலை:

மணிவாசகர் ஒரு பாடலில் ஆண்டவன் அடியார்களை நாடிச்சென்று அருள்வதையும், நாடிவருவோர்க்கு அருளுவதை யும் கூறியருளுகின்றார். ''பால் நினைந்தூட்டும் தாயினும்'' என்ற பாடலில்,

''பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்துநீ
பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா
ஆனந்தம்ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே
சிவபெருமானே''

என்னும் வரிகளால் ஆண்டவன் தானே நாடிவந்து ஊனினை

உருக்கியும் உள்ளொளி பெருக்கியும் அருள்பாலித்தான் என்பதையும்,

''யான் உனைத்தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்''

என்னும் வரியால் தான் தேடிச்சென்று அருள்பெற்றதையும் கூறுகின்றார். இவ்விரண்டு நெறிகளையும் அப்பர் சுவாமிகளும் திருக்குறுந்தொகைப் பாடலில் குறிப்பிடுவது கண்டு மகிழலாம்.

''தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்து அவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப்போகும் நம்உள்ள வினைகளே''

பூனையும் குரங்கும்:

உலகியலில்கூட இதுபோன்ற நிலைக்கு உதாரணமாகப் பூனையின் நிலையையும், குரங்கின் நிலையையும் எடுத்துக் கூறுவர். பூனை தகுதியில்லாத தன் குட்டியைத் தானே வாயில் கவ்விக்கொண்டு சென்று காப்பாற்றும் நிலையுடையது. ஆனால் குரங்கோ தன் குட்டி தன்னைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ள இடம்கொடுத்துத் தன்போக்கிலேயே சென்று குட்டியைக் காப்பாற்றும் நிலையுடையது. இதனை முறையே மாற்சாலநியாயம், மற்கடநியாயம் என்பர் வடநூலார். மாற்சாலம் — பூனை. மற்கடம் — குரங்கு. பொதுவாக மெய்ஞ்ஞான நெறியினைத் தெரிந்தவர்கள் தாமே சென்று பற்றவேண்டும். தெரியாதவர்களைத் தெரிந்தவர்கள் சென்று பற்றி வழிப்படுத்தவேண்டும்.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்:

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து நிறைவாக வீடுபேறும் அடைய, அன்புநெறியாம் தோத்திர நெறியும், அறிவு நெறியாம் சாத்திர நெறியும் தேவை. எனவே நம் முன்னோர்கள் அருளியுள்ள இரண்டு நெறிகளையும் தகுதிநோக்கித் தெரிந்தெடுத்து அதன்வழி நடந்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தும், எண்ணில் நல்ல கதியைப் பெற்றும் உய்வார்களாக

25

அடங்கியிருந்து அன்னை அருள் பெறுக!*

"தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே".

— அபிராமிபட்டர்

['அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்' என்பர் திருவள்ளுவர். மகளிர்க்கு அணியாய அடக்கத்தின் சிறப்பினை வற்புறுத்தி அருளிச்செய்யும் குருமணிகள், 'தனந்தரும்' என்று தொடங்கும் அபிராமி அந்தாதிப் பாடலுக்கு நுட்பமாக விளக்கம் அருளுகிறார்கள்.]

சுற்றுலாத்தரும் அறிவு:

சுற்றுலா என்பது சிறந்ததொரு கல்வி ஆகும். பரந்து பட்ட இடங்களில் நடக்கின்ற நிகழ்ச்சிகளை ஏட்டின் மூலம் கற்பது சிறந்த கல்வியே என்றாலும், ஆங்காங்கே சென்று அந்தந்தச் சூழலில் அவற்றின் தன்மைகளை நேரில் தெரிந்து கொள்வது அதைவிடச் சிறந்த நடைமுறைக் கல்வியாகும். இந்த அடிப்படையில்தான் கல்வி நிலையங்கள் சுற்றுலா மேற்கொள்கின்றன. அம்முறையிலேயே புதுக்கோட்டை

---

* 17—3—'80 அன்று புதுக்கோட்டை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி ஆசிரியைகளும், மாணவியர்களும் சுற்றுலா மேற்கொண்டு, தருமையாதீனத் திருமடத்திற்கு வந்து வழி பாடாற்றியபோது வழங்கியருளியது.

அரசினர் மகளிர். கலைக்கல்லூரியினரும் சுற்றுலா மேற் கொண்டு தருமபுரம், திருக்கடவூர், சிதம்பரம், சீகாழி, வைத்தீசுவரன் கோயில் முதலிய திருக்கோயில்களுக்குச் சென்று வருவது என்று முடிவெடுத்து வந்திருப்பது மகிழ்ச்சிக் குரியதாகும்.

திருக்கோயில்களுக்குச்சென்று பார்ப்பது என்பதில் பல சிறப்புக்கள் உள்ளன. கலை, பண்பாடு, வரலாறு, பூகோளம், தெய்விகம் என்னும் பலவற்றிற்கு உறைவிடமாகவும், உரிய இடமாகவும் விளங்குவன திருக்கோயில்களாகும். ஆங்காங்கே உள்ள கோயில்களின் சுவர்களிலும் தூண்களிலும் காணும் கலைச்சிறப்பும், முன்னோர்களின் வாழ்க்கையில் பொதிந்து கிடக்கும் பண்பாடும், கல்வெட்டுக்களின் மூலம் காணப் பெறும் வரலாறும், நிலவள நீர்வளத்தின் தன்மையை அறிந்து கொள்ளும் பூகோள அறிவும், இவற்றிற்கெல்லாம் மேலாக அங்கே எழுந்தருளி அருள்வழங்கும் பெருமானின் தெய்விகமும் என எல்லாவற்றையும் அறிவதும் உணர்வதும் இந்தச் சுற்றுலாவின் முக்கிய நோக்கமாக இருத்தல் வேண்டும்.

தீராப்பிணி தீர்க்கும் திருக்கோயில்கள்:

பல திருக்கோயில்கள் தீராப்பிணி தீர்க்கும் தெய்விக மருத்துவ நிலையமாக விளங்குகின்றன. வைத்தீசுவரன் கோயில், திருவெண்காடு, திருமணஞ்சேரி, திருக்கருகாவூர் போன்ற இடங்கள் முறையே இன்றும் பிணிதீர்த்தல், மகப் பேறு அருளல், திருமணம் கூடிவரல், கருக்காத்தல் போன்ற பல்வேறு மருத்துவ அருள்நிலைக்கூடங்களாக விளங்கி வருகின்றன. சுற்றுலாச்செல்வோர் இவற்றை நன்கு தெரிந்து தெளிதல் அவசியமாகும்.

வாழ்வாங்குவாழ வழி தரும் மூன்று:

பெண்கள், வாழ்வில் வளம் பெறவும், இறைவன் அருள் பெறவும் எங்ஙனம் நடந்துகொள்ளவேண்டும் என்பதை அபிராமிபட்டர் வாயிலாகச் சிந்திப்போம்.

மனிதன் மனிதனாக வாழத் தேவைப்படும் இன்றி யமையாத பொருள்கள் மூன்று. செல்வம், கல்வி, வீரம் (தைரியம்) என்பன. இம்மூன்றில் ஒன்று குறைந்தாலும் வாழ்க்கைப் பிரகாசிக்காது. இவற்றுள் முதலில் வேண்டுவது

செல்வமா? கல்வியா? வீரமா? என்பது சிந்திக்கற்பாலது. நவராத்திரி விழாவில் வீரம் முன்பும், பின்னர் செல்வமும், அதன் பின்னர் கல்வியும் வைத்து அமைத்திருக்கின்றார்கள். வீரம் வர வேண்டுமாயின் செல்வம் வேண்டும் என்பதனால் 'தனம் தரும்' என்று அபிராமிபட்டர் முதற்கண் செல்வத்தைத் தொடங்குகின்றார் துர்க்கை, லெட்சுமி, சரஸ்வதி எனும் அமைப்பினை லெட்சுமி, சரஸ்வதி, துர்க்கை என மாற்றி அமைக்கின்றார்.

முதற்கண் உள்ள செல்வத்தை அடைந்துவிட்டாலும் அவற்றை நல்ல வகையில் பயன்படுத்தி, உயிர்வளர்ச்சிக்கும், வாழ்க்கை வசதிக்கும் தேவையான பல நல்ல காரியங்களைச் செய்வதற்குக் கல்வி அவசியமாகிறது. செல்வமும் கல்வியும் சேர்ந்து அமைந்தாலும் நல்ல பல காரியங்களைச் செய்து முடிப்பதற்கு உறுதியான தளர்வறியாத மனம் வேண்டும்.

தெய்வவடிவம் எய்தப்பெறலாம் :

இவைமூன்றும் ஒரு மனிதனின் வாழ்வில் அமைந்து விடுமானால் முழுமனிதநிலை கிடைத்து வாழ்வாங்கு வாழ அவை வழிவகுக்கும் குறைவிலா வாழ்க்கையையே வாழ்வாங்கு வாழ்தல் என்பன. வாழ்வாங்கு வாழும் நிலையினை எய்தப் பெற்றால் தெய்வமென மதிக்கும் வடிவும் தகுதியும் பெறுவது உறுதியாகும். அதனால்தான் அபிராமிபட்டர்,

''தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா மனம் தரும்'' என்று கூறிப் பின்னர், ''தெய்வ வடிவும் தரும்'' என்று கூறுகின்றார், திருவள்ளுவரும்,

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

என்கின்றார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் என்பது தெய்வநிலை பெறுதற்கு ஓர் அடிப்படை என்பதனை இரண்டு சான்றோர்களும் இணைந்தே கூறியுள்ளனர்.

நல்லினத்தின் சிறப்பு :

இவ்வுலகில் இவை கிடைத்தாலும் அவை நிலைபெறத் தேவையானது நல்ல கூட்டுறவு ஆகும். மேற்கண்டவை இருந்து நல்ல இனமும் அமைந்துவிடுமானால் மேன்மேலும்

வளர்ச்சி அடைய வழியுண்டு. கரவாடும் வஞ்னெஞ்சக் கள்வர்கள் ஒருநாளும் நம்மோடு உறவாடாமல் இருக்க அபிராமியின் பரிபூரண அருள் தேவை என்கின்றார் அபிராமி பட்டர். இப்படி எண்ணிக்கொண்டே போகலாம் ஆதலின் அவற்றை எல்லாம் அடக்கி, ''தல்லன எல்லாம் தரும்'' என்கிறார்.

முயற்சி எப்படி வரும்?

இவை அனைத்தையும் மனிதனே தன் முயற்சியால் பெற முடியாதா? என்ற கேள்வி எழும். முயற்சி இருந்தால் உறுதியாகப் பெறலாம்.

''தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்கிதன்
மெய்வருத்தக் கூலி தரும்''

என்பதும்,

''முயற்சி திருவினை ஆக்கும் மூயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்''

என்பதும் வள்ளுவர் வாக்கு. ஆனால் இந்த முயற்சியும் விதிவசத்தாலன்றி விளையாது என்பதைச் சிந்திக்கவேண்டும். அதனால்தான் திருவள்ளுவர், முயற்சி, எல்லாவற்றையும் தரும் என்றாலும் அந்த முயற்சியும் அவரவர் வினைவழியேதான் தோன்றும் என்றார். வினை என்பது அவரவர் முன்செய்த செயலாகும். இக்கருத்தை,

''ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி''

என்னும் குறளால் விளக்குகின்றார் இங்கு 'அசைவின்மை. என்பதற்கு 'முயற்சி' என்று பொருள் எழுதுவர் பரிமேலழகர்' ஆதலின் முயற்சி வருவதற்கு அவரவர் வினையும், அதைச் செலுத்தும் ஆண்டவனின் அருளும்தான் காரணம் என்பதனை வள்ளுவர் இக்குறள் மூலம் தெளிவாக விளக்கிக் கூறுகின்றார். எனவே முயற்சியும் அவன் அருள்வழியேதான் உண்டாகும்.

அன்பர் என்பவர் யார்?

இங்ஙனம் உள்ள நன்மைகளை அடையும் தகுதி யாருக்குண்டு? என்பதற்கு விளக்கம் கூறுவார் போல,

"அன்பர் என்பவர்க்கே" என்கின்றார். அபிராமிபட்டர் அன்பர் என்பவர் யார்? ஆண்டவனிடத்தில் அசைவிலா அன்புடையவரே அன்பராவார். அவனிடத்தில் அன்பு இருக்குமானால் அவ்வன்பு மற்ற தகுதிகளைப் படிப்படியாக நாளடைவில் வளர்க்கும்.

நல்லனவே செய்து அல்லன அகற்றி வாழ்வோரும், பிற உயிரையும் தம் உயிர் போல் நினைத்து வாழ்வோரும், தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு பிற உயிருக்கு வரும் துன்பங்களைத் துடைத்து வாழ்வோரும், எல்லா உயிரும் இன்புற்றிருக்கவேண்டும் என்று எண்ணி வாழ்வோரும், எந்நிலையில் நின்றாலும் அந்நிலையில் இறையுணர்வு வழுவாது நிற்போரும் துன்பத்தைக் கண்டு துவண்டு போகாமலும், இன்பத்தைக் கண்டு இறுமாப்புக் கொள்ளாமலும் வாழ்வோரும், பிறருக்கு ஒருநிலை தமக்கு ஒருநிலை என்று எண்ணாமல் வாழ்வோரும் என இத்தகையோரே அன்பராவார்.

இந்த அன்பராவார்க்கு அபிராமியின் கடைக்கண்களே அருள்பாலிக்கும் மேற்சொன்ன யாவற்றையும் தருவது இறையருள் என்றோ அம்மையின் அருள் என்றோ கூறாது அபிராமி கடைக்கண்களே அருளும் என்று பாடிய காரணம் யாது? அன்னையின் அளவிறந்த அருளாற்றல் நேரே பாய்ந்தால் உயிர்கள் தாங்காது. எனவே உயிர்களின் தகுதி நோக்கிச் சிறிதுசிறிதாக வழங்கி உயிர்களை உய்விப்பவள் என்பதைப் புலப்படுத்தவே கடைக்கண்களே நல்லன எல்லாம் தரும் என அருளினார்.

இணைபிரியா இயல்பு :

எனவே தனமும், நல்லமனமும் பொருந்திய இனமும்பெற்று வாழ்வாங்குவாழ இறையோடு இணைபிரியாமல் இருக்கின்ற அபிராமியை நாளும் தொழுது எழுந்து பணிந்து வணங்கி வாழ்ந்து வருதல் வேண்டும். தண்ணீரும் குளர்ச்சியும், மலரும் மணமும், தீயும் வெம்மையும் எங்ஙனம் பிரிப்பின்றிச் சேர்ந்து நின்றே பயனளிக்கின்றதோ அதுபோன்றே அம்மையும் இறையோடு கலந்துநின்றே அருளுகின்றாள் என்பதனை உள்ளடக்கியே அபிராமிபட்டர் அம்மையின் கருணையே அனைத்தும் நல்கும் என்கின்றார்.

மறைவில் இருக்கும் மாண்புடைப் பொருள்கள் :

பெண்களாயிருப்போர்கள் சிலவற்றைச் சிந்தித்துவாழ வேண்டும். ஒரு கட்டடத்தின் முக்கியமான பகுதியாக அஸ்தி வாரம் உள்ளது. ஒருமரத்தின் முக்கியமான பகுதியாக வேர் உள்ளது. ஒருஅரசின் முக்கியமான பகுதியாகச் செயலகம் உள்ளது. ஒரு சமுதாயத்தின் முக்கியமான பகுதியாகச் சான்றோர்கள் இருக்கின்றனர். உலோகங்களில் முக்கியமான தாக உள்ளது பொன். உலகத்திற்கு முக்கியமானவராகக் கடவுள் இருக்கிறார். இப்படி முக்கியமான பொருள்கள் எல்லாம் மறைந்தும், பின்னிருந்தும் அவ்வப்பொருள்களை இயக்கியும், நிலைநிறுத்தியும் விளங்குகின்றன. அதுபோலவே, குடும்ப வாழ்விற்கு முக்கியமான, மனைவியாக இருக்கின்ற பெண்கள் எப்படி வாழவேண்டும் என்பதை இவை எடுத்துக் காட்டுகின்றன.

மரத்தின் முக்கியமான பகுதியாகிய வேர் எங்ஙனம் மறைந்து நின்றே முக்கியத்துவம் பெற்றுப் பயன்தருகிறதோ, அதேபோன்று, பெண்களும் மறைந்திருந்தே பயனளிக்கத்தக்க வர்கள். சேக்கிழார் இக்கருத்தில்தான் சிறுத்தொண்டர் புராணத்தில் திருவெண்காட்டு நங்கையைக் கூறவந்தபொழுது,

"..... மனையறத்தின்
வேராகி விளங்குதிருவெண்காட்டு நங்கைபால்
சீராள தேவர்எனும் திருமைந்தர் அவதரித்தார்"

என்று குறிப்பிடுகின்றார். பெண்கள். வாழ்க்கையின் அடிப்படையாகவும், மூலமாகவும் நின்று இயக்கத்தக்கவர்களே அன்றி, முற்றத்தில் வந்து இயங்கவேண்டியவர்கள் அல்லர் என்பது சேக்கிழார்சுவாமிகள் திருவுள்ளம். இதுவே இந்தியப் பண்பாடு; சிறப்பாகத் தமிழர் பண்பாடு.

அடங்கியிருந்து அன்னை அருள்பெறுக :

எனவே தனம், கல்வி, மனம், வடிவம், இனம் எல்லாம் நன்கு பெற்று மகிழ்வுடன் வாழவேண்டுமானால் பெண்கள் தங்களுக்குரிய கடமைகளை அடக்கத்துடன் நிறைவேற்ற வேண்டும். அங்ஙனம் நிறைவேற்றுவோர்க்கு நல்லன எல்லா வற்றையும் அபிராமியின் கடைக்கண்களே நல்கும் என அபிராமிபட்டர் அருளிச்செய்து உறுதி அளிக்கின்றார். அவர் வாக்கின்வழியே காலத்தில் கடமைகளைச் செய்து, உடைமை களைப்பெற்று, வளத்துடனும் நலத்துடனும் வாழ்வாங்கு வாழ்வது அனைவரது கடமையாகும்.

26
மதுரையை மீட்ட மாண்புடைப் பிள்ளை*

"என்றும் அடியவர் உள்ளத்திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித்துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்கள் யாப்புக்குரியன ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன் சைவசிகாமணி பொன்னடியே"
—நம்பியாண்டார் நம்பிகள்.

[ஓங்கு புகழ் கொண்ட, பண்டைய தமிழக நாடுகள் நான்கினை ஔவையார் அருட்பாடல் வழிசுட்டி அருளிச்செய்யும் குருமணிகள், 'சோறு' என்ற சொல்லுக்குத்தரும் விளக்கமும், இப்பி, வேழம், இயல்புடைய சான்றோர் பற்றித்தரும் இணைப்புவிளக்கமும், திருவிழாக்களின் தத்துவ விரிவுரையும் அன்பர்களுக்கு நல்விருந்தாவன.]

ஓங்கு புகழ்கொண்ட நான்கு நாடுகள் :

இன்று திருஞானசம்பந்தப்பெருமான் ஞானப்பால் உண்ட ஐதிகத்திருநாள். இந்த நன்னாளில் கலந்துகொள்ளப் பாண்டிய நாட்டிலிருந்து மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீன மகா சந்நிதானமவர்களும், தொண்டைநாட்டிலிருந்து காஞ்சிபுரம் ஞானப்பிரகாசராதீன மகாசந்நிதானமவர்களும் இங்கே வந்திருக்கிறார்கள். பாண்டியநாடும், தொண்டைநாடும், என்றும் சோழநாட்டோடு தொடர்புடையனவாகவே இருந்து வந்துள்ளன என்பதனை வரலாறு விளக்கிக்கூறுகிறது.

---

* 21—4—80 அன்று சீகாழி அருள்மிகு சட்டைநாதசுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற திருமுலைப்பால் உற்சவத்தில் பாகனேரி திரு. ஆர். சம்பந்தம் பிள்ளை அவர்களுக்குத் "திருமுறைக்கலாநிதி" என்னும் பட்டமளித்தபோது வழங்கியருளிது.

ஔவையார் பாடிய தனிப்பாடல் ஒன்று எந்த எந்த நாடு எவ்வெவ்வற்றிற்குச் சிறந்தது என்பதனைக் கூறுகின்றது. அப்பாடலைக் காண்போம்.

''வேழமுடைத்து மலைநாடு மேதக்க
சோழவளநாடு சோறுடைத்துப் — பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத்தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து''

சோறு எது?

'சோழவளநாடு சோறுடைத்து' என்பது எல்லோரும் அடிக்கடி கூறிவருவதாகும். 'சோறு' என்னும் சொல்லுக்கு உணவு என்று மட்டும் பொருள் இல்லை; 'வீடுபேறு' என்னும் பொருளும் அதற்கு உள்ளார்ந்தபொருளாக அமைந்துள்ளதை ஆழ்ந்து சிந்தித்துப்பார்க்கப்புலனாகும். சோறு எனும் சொல் வெறும் அரிசி உணவைமட்டும் குறிக்காமல் பிறதுணை உணவாகிய காய்கறிகளையும் சேர்த்துக் குறிக்கிறது. பொதுவாகச் சுவைக்கத்தக்க பொருள்கள் - இன்பம் பயக்கும் பொருள்கள் எல்லாவற்றையும் குறிக்கும் பொதுச்சொல்லே 'சோறு' என்பதாகும். இவ்வுலகில் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலன்களின் அனுபவ நிலையினை சிற்றின்பம் என்றும், இவைகளைக் கடந்து வென்றநிலையில் இறைவனின் திருவடி நீழலை அடைந்து அமைதியுறும் நிலையினைப் பேரின்பம் என்றும் சான்றோர் கூறுவர். சோறு என்பதற்கு இன்பம்பயக்கும் பொருள் என்று பொருள்கொண்டு, சோழநாடு உலகியலின்பங்களைக் கொண்டிருத்தலோடு பேரின்ப நிலையாகிய வீட்டு நெறியையும் தக்கசமயத்தில் சரியான முறையில் பரப்பிய பெருமையும் உடையது என்று உணரவேண்டும். இக்கருத்திலேதான் 'சோழநாடு சோறு உடைத்து' என்றனர். மேலும் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்று அறியும் இன்பமெல்லாம், உண்ட பின்னரே நிகழும் என்னும் முதன்மையும் உணரத்தக்கது.

இப்பியும், வேழமும், இயல்புடைய சான்றோரும் :

''பாண்டியநாடு முத்துடைத்து'' என்பர். முத்தும் ஒரு வகையில் காணும் இன்பமும், ஊற்றின்பமும் உடையதேயா யினும் 'முத்தி' எனும் வீடுபேற்றுடன் தொடர்புடையதே எனலாம். 'முத்தி' எனும்சொல்லே பின்னர் முத்து என்று

ஆகியிருக்கவேண்டும். ஏனெனில் இப்பியின் வயிற்றிலிருந்து விடுதலைபெற்று வெளிவருவது முத்து என்பதனால் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலைபெற்று முத்தி அடைகின்ற ஆன்மாவைப் போன்று. முத்தும் அமைந்திருக்கிறது.

'தொண்டைநாடு சான்றோருடைத்து' என்பதும் ஒப்பு நோக்கற் பாலதாகும். சான்றோர்கள் முத்தி எனும் வீடு பேற்றினை விளக்கமாகப் பேசியும், அங்ஙனமே நடந்து காட்டியும் நடக்கத்தூண்டியும் வாழ்பவர்கள் ஆதலின் அவர்கள் வாழ்வும் இங்கே சிந்திக்கத்தக்கதாகும்.

'சேரநாடு வேழம் உடைத்து' எனும் வரியில் வேழம் என்பது யானையைக் குறிக்கும். 'வேழமுகத்து விநாயகனைத் தொழ, வாழ்வு மிகுத்துவரும்' என்பர் பெரியோர், மிக்க வாழ்வு என்பது பெருவாழ்வு ; அதாவது பேரின்பவாழ்வாகிய வீடுபேற்றை உணர்த்தும். எனவே எல்லாவற்றிற்கும் முதலில் விநாயகரை வழிபட்டே தொடங்கவேண்டும் என்றகுறிப்பும் தோன்றவே வேழமுடைய மலைநாட்டை முதலில் குறிப் பிட்டார்போலும். மேலும், வேழமுகத்து விநாயகனே ஔவை யாரைக் கயிலையில் சேர்த்தவர். இன்ன பிறகுறிப்புக்களால் வேழமும் முத்திப்பேற்றைக் குறிப்பது உணரலாம்.

ஆகவே, நான்கு நாடுகளும் உயிர்கட்கு இம்மைப்பயனாகிய இன்பம் நல்குவதோடு, அம்மைப்பயனாகிய முத்திப்பேற்றுக்கும் வழிவகுக்கும் சிறப்புடையனவாய்த் திகழ்கின்றன என்னும் உள்ளுறைப் பொருள் தெளிவாக விளங்குகிறது. ''சோறிட்டுச் சோறு பெற்றார்.'' என்றும், ''பாதகமே சோறு பற்றினவா தோள்நோக்கம்'' என்றும் அருளாளர்கள் சோறு என்பதனை இணைத்து முத்தியை விளக்கியிருத்தலையும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

மதுரையைமீட்ட மாண்புடைப் பிள்ளை :

சேர, சோழ, பாண்டிய, தொண்டைநாடுகளுள் சோழ நாட்டிற்குத் தனிச் சிறப்பு உண்டு. இங்கே சீகாழியில் அவதாரம் செய்த ஞான சம்பந்தப்பெருமான் பாண்டிநாட்டில் பிறசமய ஆதிக்கம் தலைவிரித்தாடியபொழுது, அங்கேசென்று, அதனை அடக்கிச் சைவசமயத்தை நிலைநாட்டினார். சோழ நாட்டிலிருந்து ஒரு திருஞானசம்பந்தர் பாண்டிநாடு சென்று

சைவசமயத்தை நிலைநாட்டியருளினார். அவர் தங்கியிருந்த இடம்தான், மதுரையில் திருஞானசம்பந்தர் ஆதீனமாகத் திகழ்கிறது. அதேபோல், பாண்டிநாடும் ஒரு ஞான சம்பந்தரைச் சோழநாட்டிற்கு அளித்து ஒரு திருமடத்தினை நிறுவச்செய்தது. இதுதான், ஸ்ரீ குருஞானசம்பந்தரால் நிறுவப்பெற்ற தருமையாதீனத் திருமடமாகத் திகழ்கிறது. மேலும், சோழநாட்டு ஞானசம்பந்தர் மதுரைசென்று சைவ சமயத்தைப் பாதுகாத்தற்குக் காரணமாக இருந்ததும் சோழ நாட்டு மணிமுடிச்சோழன் மகளாகிய மங்கையர்க்கரசியார் தான் என்பதையும் உணர்கிறபோது, உவகைமீதூர்கிறது. இருநாட்டிற்கும் இரு ஞானசம்பந்தரைப் பரிவர்த்தனை முறையில் அருளிய திருவருளை நினைக்கிறபோது, நெஞ்சு நெகிழ்கிறது. சோழ நாட்டில் பிறசமயத்தாரின் ஆதிக்கம் மற்றைய நாடுகளை நோக்கக் குறைவாகவே இருந்தது. அநபாயச்சோழனின் மனம் புறச்சமயத்தில் ஈடுபட்டபொழுது தொண்டைநாட்டுச் சேக்கிழார் தம் பெரியபுராணத் திறத்தாலேயே மாற்றி மாண்புறுத்தினார்.

சோழவளநாடும், சோர்விலாத் தொண்டைநாடும் :

தொண்டை நாட்டை எடுத்துக்கொண்டால் "தீய என்பன கனவிலும் நினைவிலாச்சிந்தைத் தூய மாந்தர்வாழ் தொண்டை நாடு" என்று சேக்கிழார் பாராட்டும் இயல்பையுடையது. இத்தொண்டைநாடும், சோழநாட்டோடு சைவத்தொடர் புடையது என்பதற்கு ஒரு வரலாறு உள்ளது.

மாயூரத்திற்கு அருகிலுள்ள சித்தர்காட்டில் மெய்கண்ட சந்தான வழியில் சிற்றம்பல நாடிகள் என்ற ஒரு மகான் வாழ்ந்துவந்தார். அவருக்குச் சிஷ்யர்களாக இருந்தவர்களில் ஞானப்பிரகாசர் என்பவரும் ஒருவராவர். சிற்றம்பலநாடி களின் சிஷ்யரான ஞானப்பிரகாசரால் தோற்றுவிக்கப் பெற்ற திருமடமே காஞ்சிபுரத்தில் உள்ள தொண்டைமண்டல ஆதீனம் ஞானப்பிரகாசர் திருமடம் என்பது இங்கே சிந்திக்கத்தக்க தாகும். எனவே, சோழநாடு தொண்டைநாட்டிற்கும் ஒரு ஞானப் பிரகாசரை அனுப்பி ஞானப்பயிர் வளர்க்க உதவி செய்துள்ளதை அறியலாம். மேலும், இன்று வருகைபுரிந்துள்ள மதுரை, காஞ்சி மகாசந்நிதானங்கள் இருவரும் தருமையாதீன ஞானப்பண்ணையில் பயின்றவர்களே. அன்று, திருவருளால் தொடங்கிய ஞானத்தொடர்பு இன்றும் திருவருளால் தொடர்

வதை எண்ணும்போது இறையருளை வியக்காமல் இருக்க இயலுமா ? இங்ஙனம், பாண்டிநாடும், தொண்டைநாடும் என்றும் சோழநன்னாட்டுடன் தொடர்புடையனவாகவே இருந்து வருகின்றன.

விழாக்கள் ஏன் ?

திருஞானசம்பந்தப்பெருமான் ஞானப்பாலுண்ட இந்த ஐதிகத் திருநாளை ஆண்டுதோறும் கொண்டாடிவருகின்றோம். இங்ஙனம், ஆண்டுதோறும் கொண்டாடவேண்டுமா என்று சிந்திக்கவேண்டும்.

ஞானசம்பந்தர் தம் அருள் வாழ்க்கையில், பல்வேறு இன்னல்கள் வந்தன. சில நேரங்களில் இன்னல்களை நாடியே இவரும் சென்றார். திருமறைக்காட்டிலிருந்து மதுரைக்குப் புறப்படும் பொழுது, அப்பரடிகளின் எச்சரிக்கையை மனம் கொண்டு, இன்னல்களையும் நெஞ்சில் நிறுத்திச் சென்றார் என்று வரலாறு கூறுகிறது. இங்ஙனம் சென்ற அவ்வருளாளரின் பக்தி உறைப்பினையும், கடமை உணர்வையும் சிந்தித்தல் வேண்டும். கடமை உணர்வு மேலிடும்போது, துன்ப உணர்வு கடமை உணர்வில் மறைத்துவிடுகிறது. இதனை ஞான சம்பந்தர் வாழ்வில் காணுகிறோம். திருவள்ளுவர்,

> ''இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
> துன்பம் துடைத்தூன்றும் தூண்''

என்றும்,

> ''இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
> துன்பம் உறுதல் இலன்''

என்றும் கூறும் அருங்குறள்களின் கருத்துக்களை அருளாளர்களின் வாழ்வில்தான் காணமுடிகின்றன. துன்பங்கள் தாக்கிய பொழுது துவண்டுபோகாமலும், இன்பங்களை எதிர்நோக்கி இளைத்துப்போகாமலும் இருப்பார் எவரோ, அவரே தன்கேளிரைக் காக்கும் பெருந்தகுதி கொண்டோராவர் எனும் இலக்கணத்திற்கு ஞானசம்பந்தரின் அருள் வாழ்வு, பொருந்திய இலக்கியமாக விளங்குவதனை உணரலாம்.

இதுபோன்ற நற்சிந்தனை கொண்டு வாழ்வில் உயரவும் அதன் வழிச் சிறப்பெய்தவும் தன்னை வளர்த்துக்கொள்ளவுமே இத்தகைய விழாக்கள் ஆண்டுதோறும் தேவைப்படுகின்றன; அதன்வழியே நிகழ்ந்தும் வருகின்றன.

என்றும் நிலைத்தது எது ?

நம்பியாண்டார் நம்பிகள் "என்றும் அடியவர் உள்ளத் திருப்பன" எனும் பாடலில், ஞானசம்பந்தப் பெருமானின் பொன்னடிகள் என்ன என்ன செய்யும் என்று கூறுகின்றார். உலகியலில், கொள்கையும், அதனைத்தாங்கும் பல்வேறு குழுக்களும், நாளுக்குநாள் தேய்ந்து அழிந்துவருகின்றன. ஆனால், இன்று நேற்று என்றில்லாமல் என்றும் நிலைத்து நிற்கக் கூடியனவும், நல்லமலர்களைக்கொண்டு துவித் துதிப் பதற்குரியனவும், கலியின்வன்மையை அழிக்கும் ஆற்றலுடை யனவும் ஆயது எது எனில் ஞானசம்பந்தரின் பொன்னடிகளே என்று விளக்குகின்றார்.

இத்தகைய அருள் நலம்பழுத்த அருளாளர் ஞானப்பாலுண்ட ஐதிகத் திருநாளில் பல ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த ஒரு ஓதுவாருக்குத் 'திருமுறைக்கலாநிதி' எனும் பட்டம் அளித்துப் பண முடிப்புவழங்கிச் சிறப்பிப்பது கயிலைக்குருமணியின் காலந்தொட்டு வழக்கமாக உள்ளது. பாகனேரி திரு. ஆர். சம்பந்தம்பிள்ளை வயதிலும், திருமுறை ஓதும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்; தொண்டுகள் பலசெய்து வருபவர். அவருக்குத் 'திருமுறைக்கலாநிதி' எனும் பட்டம்பொறித்த பொற்பதக்க மும் பணமுடிப்பும் (1001) திருவருள் வழியே வழங்குகின்றோம். ஞானசம்பந்தர் தேவாரந்தான் வெப்புநோய் வாதத்தையும், அனல்வாதம், புனல்வாதத்தையும் வென்று அமண் இருளில் முழ்கிக்கிடந்த மதுரையை மீட்டது. அத்தகைய தேவாரமும், அதை அருளிய ஞானசம்பந்தர் திருவடியும் என்று வாழ்வதாக.

27

சமய உணர்வும் சமுதாய எழுச்சியும்*

"வம்மின் அடியீர் நாண்மலரிட்டுத் தொழுதுய்ய
உம்மன்பினொ டெம்மன்புசெய் தீசன்உறை கோயில்
மும்மென்றிசை முரல்வண்டுகள் கெண்டித்திசையெங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல் வீழிம்மிழலையே"

— திருஞானசம்பந்தர்.

[சைவ சமய அருளாளர்கள் வாழ்ந்து காட்டிய, வாழ்வியல் நெறிகளை எடுத்துக்காட்டி, தமிழக மெங்கும் நிலவிவரும் சமயமன்றங்கள், சமய வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்து, முனைப்போடு தொண்டாற்ற வேண்டிய இன்றியமையாமையை வற்புறுத்தி, அதற்கான நிதி நிலையை உருவாக்கும் வழிமுறைகளையும் இனங்காட்டி குருமணிகள் அருளிச்செய்தது]

அமைதியற்ற வாழ்வு ஏன் ?

மக்கள் வாழ்க்கையில் சமய உண்மைகள், தத்துவங்கள் பற்றிய ஆழ்ந்த அறிவும் நம்பிக்கையும் இருந்தால் வாழ்க்கை அமைதியாக இருக்கும். இதனை உணர்ந்த நமது முன்னோர்கள் பல்லாயிரம் ஆண்டுகட்குமுன்னரே இவ் வுண்மைகளைக்கண்டும் கடைப்பிடித்தும் வந்தனர். சமயத்தில்

---

* 3—6—80 அன்று தருமையாதீனத் திருமடத்தில், குருபூஜைப் பெருவிழாவையொட்டி நடைபெற்ற சமயமன்றங்கள் ஒருங்கிணைப்பு ஆலோசனைக் கூட்டத்தைத் தொடங்கிவைத்து வழங்கியருளியது.

நம்பிக்கையில்லாது, கடவுள் உண்டா? இல்லையா? என்ற ஆய்வில் இறங்கி, இன்று பலர் நிம்மதியில்லாமல் உழல்கின்றனர்.

நம்முடைய சைவ சமயம் கி. மு என்றோ, கி. பி. என்றோ குறிப்பிட்டுச் சொல்ல இயலாத பழமையுடையது சமய வாழ்வு என்பது இன்று பலராலும் போலியாக மேற்கொள்ளப் பட்டுவருகிறது. வெளிப்பார்வைக்காகச் சிவசின்னங்களை அணிந்தும், திருக்கோயில்களுக்குச் சென்றும் பகட்டு வழிபாடு செய்வோர் அமைதிபின்றி அலைகின்றனர். சமயத்தில் ஆழமாகவும், அழுத்தமாகவும் நம்பிக்கைகொள்வதையும், அருளாளர்களின் வாழ்க்கை நெறியினைக் கடைப்பிடித்து வாழ்வதையும் நியமமாகக் கொண்டவரே உண்மையான சமயநெறியினராவார். இத்தகையர் எளியராயினும், வலிய ராயினும் அமைதியுடன் இனிது வாழ்கின்றனர். அங்ஙனம் உறைப்பான பக்தி வாழ்க்கையில் தத்துவவாழ்க்கையில் வாழ்ந்தும். வாழ வழிகாட்டியும் வந்தவர்கள் அருளாளர்கள். நம்மை நெறிப்படுத்த ஆண்டவனாலும், அருளாளர்களாலும் அருளிச்செய்யப்பட்டனவே வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், தோத்திரசாத்திரங்கள். ஞானசம்பந்தர் முதலான சமயகுரவர்களும், மெய்கண்டார் முதலிய சந்தானகுரவர்களும் நம் நாட்டில் சமய தத்துவ நெறியில் வாழ்ந்தும், வாழ வேண்டியவர்களுக்கு வழிகாட்டியும் வந்தவர்கள்.

அருளாளர்கள் காட்டிய இருவழி:

சமய உண்மைகளையும், தத்துவங்களையும் பரவச்செய்ய இரண்டு வழிமுறைகள் உண்டு. ஒன்று, இருந்த இடத்திலிருந்தே நாடிவந்தோர்க்கு உபதேசம் செய்வது. பிறிதொன்று மக்களை நாடிச்சென்று உபதேசம் செய்வது. இந்நிலை மொழியியலிலும் உண்டு. இலக்கண நூல்களில் சொற்கள் சூத்திரங்களில் பயன் படுமாற்றை விளக்கும்பொழுது ஓர் அரசனின் ஆணைவழிச் செயல்படும் அதிகாரிகள் ஆங்காங்கே சென்றுசென்று வரி வசூலிப்பது போல் சொற்கள் சூத்திரங்கள் தோறும் சென்று சென்று பொருள் பயப்பன ஒருமுறை. அரசன் தான் இருந்த இடத்திலிருந்தே, தன் நிலம் முழுவதும் தன் ஆணையின் நடக்கச் செய்வது போல், ஒருசொல் தான் இருக்கும் இடத்திலிருந்தே அதிகாரம் முழுவதும் தம் பொருள் பயக்குமாறு செய்வது ஒருமுறை. அங்ஙனமே சமய உலகில் சமயாசாரியர்கள் மக்கள்

இருக்கும் பல்வேறு இடங்களை நாடிச்சென்று அருளுபதேசம் செய்தருளினார்கள். இது பூனை, தன் குட்டியினை வாயில் பற்றி இடரிலிருந்து காப்பாற்றி அதனை வாழவைப்பதுபோல விளங்குவது. இதனை மார்ஜாரநியாயம் என்பர். மார்ஜாரம் பூனை.

சந்தானாசாரியர்கள் அங்ஙனமன்றித் தாங்கள் இருந்த இடத்திலிருந்து தங்களை நாடிவருவோருக்கு உபதேசித்து அருளினார்கள் அன்பு மிக உண்டாய், அதிலே விவேகம் உண்டாய், துன்பவினையைத் துடைப்பதுண்டாய், இன்பம் தரும் பூரணத்திற்கே தாகமுண்டாய், ஓடிவரும் சரணர்க்கு உண்மையை உபதேசித்தருளியவர்கள். குரங்குக்குட்டி தானே தன்தாயை இறுகப்பற்றிக் கொள்வது போல், பக்தன் பக்குவ முதிர்ச்சியால் தானே இறைவன் இருக்கும் இடம் தேடிச்சென்று பற்றிக்கொண்டு பயன்பெறுவது. இதனை மற்கடநியாயம் என்பர். மற்கடம் குரங்கு.

இக்காலச் சூழலில் இனிச்செய்வது எது ?

தண்டத்தலைவர்கள் போலவும், மாற்சாரநியாயப்படியும் சென்று பணிசெய்தவர்கள் சமயாசாரியர்கள். அரசனைப் போலவும், மற்கடநியாயப்படியும் இருந்த இடத்தில் இருந்தே பணியாற்றியவர்கள் சந்தானாசாரியர்கள். இச்சந்தானாசாரியர்கள் பரம்பரையில்வந்த திருமடங்கள்தாம் தருமை, துறைசை ஆதீனங்கள் போன்றவை. அந்தந்தக்காலநிலைக் கேற்பத் திருமடங்கள் சமயவளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் பல்வேறு நிலையில் துணைபுரிந்துவருகின்றன.

இப்பொழுது இருக்கும் காலநிலையில் சமயாசாரியர்களின் வழியில் திருமடங்களும், அறநிலையங்களும், சமயமன்றங்களும் தண்டத் தலைவர்கள்போல், பூனைக்குட்டி நியாயப்படி மக்களிருக்கும் இடங்களை நாடிச்சென்று சமய உண்மைகளையும் தத்துவங்களையும் உபதேசித்தும், சிவசின்னங்களை அணியச்செய்தும், அதில் அழுத்தமான பக்தியுடையவர்களாகச் செய்தும், மக்களை நெறிப்படுத்த வேண்டுவது இன்றியமையாததாகும். இந்த அடிப்படையில்தான் இங்கு மன்றங்கள் ஆலோசனைக்குக் கூடியுள்ளன.

மக்களிடையே சமய நம்பிக்கையும், அழுத்தமான பக்தியும் இருந்தால், திருக்கோயில், திருமடங்களில் நிலச்சீர்திருத்தம்

போன்ற சட்டங்கள் புகுந்து விளையாடியிருக்காது. இதனை இன்றிருக்கும் பக்தர்களும் மக்களும் சிந்திக்கவேண்டும். ஆட்சியாளர்கள், நம்நாட்டில் சுதந்திரம் எங்ஙனம் சாத்விக மாகவந்தது என்பதையும், அதற்குள்ள அடிப்படைக்காரணம் சமய உணர்வுதான் என்பதையும் மறந்துவிட்டார்கள் என்றே தோன்றுகிறது. அதுபோலவே பொது மக்களும் சமய உணர்வின் அடிப்படையை மறந்துபோனதன் விளைவே இன்று பல்வேறு திருக்கோயில்களும் அறநிலையங்களும் அரசாங்கச் சட்டத்திற்கு உள்ளாகி இன்றுள்ள கட்டத்திற்கு ஆளாகிநிலைந்த நிலையில் காட்சிதருகின்றன.

சமய மன்றங்களின் சத்தான பணிகள் :

இனியாகிலும் ஆங்காங்குள்ள சமயமன்றங்களும், மன்றங் களைச் சார்ந்தோரும், பிறரும் இதனைச் சிந்தித்து ஆக்க பூர்வமான பணிகளைச் செய்ய ஒருங்கிணைந்த ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும். எத்தவித மாற்றங்களையும் இனி ஒரு தனி மனிதனோ, ஓர் அறநிலையமோ செய்துவிட முடியாது. எனவே மக்கள் இதனை நன்கு சிந்தித்து மன்றங்கள், சங்கங்கள், கழகங்கள் என்ற பல்வேறு பெயரில் தமக்குள் ஒரு அமைப்பினை ஏற்படுத்திக்கொண்டு தக்க சமய சமூகப்பணிகளைச் செய்வதே இப்பொழுது உடன் செய்யத்தக்கதாகும்.

சமய மன்றங்கள் பொதுமக்களுக்குச் சமய உண்மை களையும் தத்துவங்களையும் போதிக்க வேண்டும். செல்வந்தர் களும் பிறரும் தங்கள் பிள்ளைகளுக்குப் பொன்னையும், பொருளையும் பகட்டான மாளிகையையும், நிலத்தையும், சொத்துக்களாகச் சேர்த்துவைப்பதை விட்டுவிட்டு, அவர்களின் உள்ளத்தில் பக்தியையும், பண்பாட்டையும், நீதியையும், நேர்மையையும், உண்மையையும், ஒழுக்கத்தையும், உழைப்பை யும், அன்பையும், அறிவையும், தியாகத்தையும் பதிய வைப்பதே செய்யத்தக்க உண்மையான செல்வங்களாகும். இங்ஙனமே ஆசிரியர்களும் நடப்பதுடன், தங்களிடம் படிக்கும் மாணவர்களுக்குப் போதிக்கவும் வேண்டும்.

அரசாங்கம் பொதுமக்களுக்கு அச்சத்தின் வழியும், ஆணையின் வழியும் வரிவசூலித்து நன்மைகள் செய்வதுபோல,

அறநிலையங்களும், மன்றங்களும். அன்பின்வழியும், அற உபதேசங்களின் வழியும் பொது மக்களை நல்வழிப்படுத்த வேண்டும்

பொருளை ஈட்டுதற்குப் புதிய வழிமுறைகள் :

இங்ஙனமுள்ள பணிகள் பலவற்றையும் செய்வதற்குப் பொருள் தேவை. அப்பொருளையும் மக்களிடையே சந்தா முறையிலும் கட்டண முறையிலும் அன்புக்காணிக்கை முறையிலும் வசூலிக்கலாம். 'நாடார் மகிமை' போலச் 'சிவமகிமை' என்ற பெயரில் ஒவ்வொரு கடையிலும் விற்பனைப் பட்டியல் ஒன்றுக்குப் பத்துபைசா அல்லது பதினைந்துபைசா வீதம் வாங்குவோரிடம் வசூலிக்கச் செய்து பொருள் ஈட்டலாம். மேலும் ஒவ்வொரு கடையிலும், வீட்டிலும் ஓர் உண்டியலைவைத்துத் தினந்தோறும் கடையைத் திறந்தவுடன் கடையின் உரிமையாளர், சமயம் வளரத் தன் சமுதாயம் வளரப் பிரார்த்தனை செய்து, அவரால் இயன்றது பத்துபைசாவோ இருபத்தைந்து பைசாவோ அதில் போடச் செய்யலாம். மாதம் ஒருமுறையோ,அல்லது மூன்று மாதத்திற்கு ஒருமுறையோ மன்றப்பொறுப்பாளர் அத்தொகைகளை வசூலித்து நிதிவளம் பெருக்கலாம். இங்ஙனம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள கடைகள் மூலமும், செல்வந்தர்கள், பொது மக்களிடமிருந்தும் பணத்தை ஈட்டலாம். தொகைகள் சேரச் சேரக் கட்டுப்பாட்டுடனும், நேர்மையுடனும் செயல்படுவது மிகவும் அவசியமானது. மக்கள் பணத்தைக் கொண்டு மக்களுக்கே பணிசெய்யலாம். காலை மாலை வகுப்புக்கள், கோடைக்கால வகுப்புக்கள், முதியோர் வகுப்பு, அன்பில்லம், குழந்தைகள் காப்பகம், குழந்தைக் கல்வியகம் இப்படிப் பலவகையிலும் பணிபுரிந்து சமயத்தையும் சமுதாயத்தையும் வளர்க்கலாம்.

இந்த மன்றங்கள் தனித்தனியே இயங்குவதுமட்டுமன்றித் தமக்குள் ஒரு தலைமை மன்றத்தினையும் ஏற்படுத்திக்கொண்டு அதற்குக் கட்டுப்பட்டு இயங்கவும் வேண்டும். மன்றங்களிடையே எந்தவிதப் பூசலும் இடம்பெறாவகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். பணம் இல்லையே என்ற கவலையை விட்டுவிட்டுப் பணிசெய்ய முன் வருதல் வேண்டும்.

பணியை நாம் நாடினால் பணம் நம்மை நாடிவரும் :

எந்த மனிதனும் தனக்குப் பணமில்லையே என்று கவலை யுறுதல் தேவையில்லை. பணம் நம்மை நாடிவரும். பணியினை நாம் நாடிச்செல்ல வேண்டும். வாழ்க்கை வசதிகளுக்காகவே உழைப்பது என்றில்லாமல், நாயன்மார்களைப் போல், சமயத்திற்காகவும், சமுதாயத்திற்காகவும் உழைக்கத் தயாராக வேண்டும். விவேகானந்தர் கூறியதுபோலத் தியாக உணர்வும், செயல் திறமும் மிக்க தொண்டர்கள் பலர் இப்பொழுது தேவைப்படுகின்றனர்.

சமய உணர்வும் சமுதாய எழுச்சியும் :

இந்தக் குருபூஜைத் திருநாளில் மக்களிடையே சமயத்தைப் பரப்பும் ஒரே நோக்கில் பல மன்றத்தினரும் ஆய்ந்து ஒரு நல்ல முடிவுக்குவர இங்குக் கூடியிருக்கின்றீர்கள். திருக்கோயில் களிலும் அற நிலையங்களிலும் நடைபெறும் பூஜைகள், திருவிழாக்கள் போன்றவை நல்லநிலையில் குறைவின்றி நடைபெற வருவாய் பெருகவேண்டும். அதற்கு மக்களிடையே சமய உணர்வில் எழுச்சியும், ஒருமித்த மன நிலையும் தேவை. சமய மன்றங்கள் அப்பணியினை ஆங்காங்கே செய்தல் வேண்டும்.



28

நல்லனகூற்று நாளும் வாழ்க*

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனே அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலைபில்"

—சேக்கிழார்

[சைவ சமயத்தில் 'குரு'வின் பெருஞ்சிறப்புப் பேசப்படும் திறத்தை அருளித் தொடங்கும் குருமணிகள், கைமாறு கருதாது பணி செய்தால் பதவி தானே தேடிவரும் என்பதையும், சைவ சமயத்தின் தொன்மையோடு கூடிய பல்வகைப் பெருமிதங்களையும் எடுத்துக்காட்டி, சைவ சமய நூல்களின் தலையாய மூவகைப் பாகு பாடுகளையும் விளக்கி நிறைவிக்கிறார்கள்.]

குருபூஜை :

இற்றைக்கு நானூற்றைம்பது ஆண்டுகட்குமுன் இந்த ஆதீனத்தைத் தோற்றுவித்தருளிய ஆதிகுருமூர்த்திகள் ஸ்ரீகுருஞானசம்பந்ததேசிக பரமாசாரியசுவாமிகள் ஆவார்கள். அவர்கள் ஜீவசமாதி கூடிய புனித இடமே ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருகோயிலாகத் திகழ்கிறது. இக்குருமூர்த்திகளின் குருபூஜைத் திருவிழாவும், ஸ்ரீஞான புரீசுவரர் பெருவிழாவும் இன்றுமுதல் பத்து நாள்கள் நடை பெறுகின்றன. இவ்விழாக்களையொட்டி ஆண்டுதோறும்

---

* 26—5—80 அன்று தருமையாதீனத் திருமடத்தில் ஸ்ரீகுருஞான சம்பந்தர் குருபூஜைப் பெருவிழாவை ஒட்டி நடைபெற்ற சமயப் பயிற்சி வகுப்புத் தொடக்க நாளில் வழங்கியருளியது.

நடைபெறும் சமயப் பயிற்சி வகுப்பு, வழக்கம்போல் இவ் வாண்டும் இனிது தொடங்கி நடைபெற இருக்கிறது.

இறைவன் அருளின்றி எவையும் நடைபெறா:

சைவ சமயம் உணர்த்தும் பல கருத்துக்களில் குருவழிபாடு என்பது மிகவும் அடிப்படையானதும். முழுமையான பயனளிக்கக் கூடியதுமாகும். திருமூலர் அருளிய திருப்பாடலை இக்கருத்திற்கு ஒப்பச் சிந்திப்போம்.

" தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே "

என்ற இப்பாடல் குருவழிபாட்டால் ஏற்படும் பயன்களைக் கூறுகிறது. திருமூலர் அருளிய மற்றுமொருபாடல் குருவும் சிவனும் வேறுவேறு அல்லர் என்பதனைத் தெளிவாக விளக்குகிறது.

" குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே "

என்பது அப்பாடல் குருவையே சிவமெனக் கருதும் கொள்கை சைவ சமயத்தின் முக்கியக் கொள்கையாகும் உலகியலில் யாராவது ஓர் உதவிசெய்தாலும் அல்லது உபதேசம்செய்தாலும் அதனை அவர்களின் செயலாகவும் அவர்களின் கூற்றாகவும் கருதிவிடுவது இயற்கை. ஆனால் ஆண்டவனுடைய அருளின் துணையின்றி இவ்வுலகில் எதுவும் நடைபெறுவது இல்லை. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பது ஆன்றோர் வாக்கு ஆண்டவன் அவரவரின் வினைக்கேற்ப அளிக்கும் இன்பத் துன்பங்களை யாரேனும் ஒரு மனிதரின் வழியே அருளுகின்றான். கடவுள் மனிதவடிவிலேயே அருளுவர் என்பதனைத் 'தெய்வம் மனுஷ்ய ரூபேண'; என்று வடமொழியும் கூறுகின்றது இதனை 'அதிஷ்டித்து நின்று செய்தல்' என்று கூறுவர். குருஞானசம்பந்தரும் இக் கருத்தினைத்தான்,

" அவரவருக் குள்ளபடி ஈசன்ரு ளாலே
அவரவரைக் கொண்டியற்று மானால் — அவரவரை
நல்லார்பொல் லாரென்று நாடுவதென்? நெஞ்சமே!
எல்லாம் சிவன்செயலென் றெண் "

என்று பாடியருளுகிறார். ஒலிபெருக்கி, தான் பேசாமல் பேசுவோரின் சொற்களை வாங்கிக்கொடுக்குமாறுபோல ஆண்டவனின் அருளைக் குருமூர்த்திகள் வாங்கி வழங்குகின்றார்கள். அரசாங்கத்தில் அரசு ஆணைகள் தாசில்தார் மூலமாகவும், தண்டல் அதிகாரி மூலமாகவும் செயல்படுவது போலவும், கல்வித்துறைச் செய்ல்கள் இயக்குநர், மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி, மாவட்டக் கல்வி அதிகாரி மூலமாகச் செயல்படுவதுபோலவும், இதனைக் கொள்ளலாம். குரு வேறு சிவம் வேறு என்று பிரித்துப்பார்த்தல் கூடாது. அரசாங்கம்வேறு அதிகாரிவேறு என்று எங்ஙனம் பிரித்துப் பார்க்காமல் செயல்கள் நடைபெற்று வருகின்றனவோ அதுபோல மானிடச்சட்டை தாங்கிய மகேசன் திருவுருவமே குருவுருவம் என்று எண்ணி வழிபடுதல் தக்கதும் பயனளிக்கக் கூடியதுமாகும்.

பணிந்து பணி புரிந்தால் பதவி தானேவரும்!

இத்தகைய உயர்ந்த குருவாகும் நிலையினை யாரும் தேடிச் செல்லுதல் கூடாது. தகுதிநோக்கித் தானேவரும். உயர் பதவியினைத் தகுதியில்லாதார் ஆசையினால் தாமே நாடிச் செல்கின்றனர். இக்குறை இன்று எல்லாத்துறைகளிலும் இருக்கின்றது. பொதுவாக எந்தத்தகுதியான பதவிக்கும் யாரும் முன்வந்து போட்டி போடுதல் கூடாது. பணிகளைப் பயன்கருதாது செய்யும் உள்ளமும், இடையறவுபடாது செயலாற்றும் திறனும் ஒருவர் மேற்கொண்டு பணிசெய்து வந்தால் உரியவர்கள் இவற்றினை அறிந்து உயர்ந்த பதவியினைத் தாமே முன்வந்து அளிப்பார்கள். இராமாயணத்தில் இதற்கு ஓர் உதாரணம் உள்ளது.

சீதையைத்தேடும் நோக்கில் தெற்கு எல்லையில் தங்கியிருக்கும் அனுமன், ஜாம்பவான், அங்தன் முதலானோர் சம்பாதியின் கூற்றால் கடலுக்கு அப்பாலுள்ள இலங்கையில் தான் சீதை உள்ளாள் என்பதனைத் தெரிந்துகொள்கிறார்கள். அவர்கள், வானரர்களுடன், யார் அங்கே சென்று சீதையைக் கண்டு வருவது என்று ஆலோசனை செய்கிறார்கள். அங்கதன், ''நான் அங்கே போய்விடுவேன்; ஆனால் திரும்பிவருதல் இயலாது'' என்று கூறுகின்றான். ஜாம்பவானும் வயது முதிர்வு, காலிலுள்ள ஊனம் இவை காரணமாகத் தன்னாலும்

சென்றுவருதல் இயலாது என்று கூறி விடுகின்றான். இவ்வளவுக்கும் ஒருவார்த்தையும் பேசாமல் நின்றுகொண்டு இருந்த அனுமனைப்பார்த்த ஜாம்பவான் "அனுமனே சென்று கண்டுவரும் தகுதியுடையோன்" என்று அங்கதனிடம் கூறுகின்றான். இதிலிருந்து ஓர் உண்மை புலனாகின்றது அமைதியாக இருந்தால் அரியபதவியும் தேடிவரும். அப்பர் சுவாமிகள் கூறுவதுபோல 'என் கடன் பணிசெய்துகிடப்பதே' என்று உளம்கொண்டு தொண்டுசெய்துவருதலே தக்கது. கீதையும் இக்கருத்திலேதான், உனக்குக் கர்மத்தைச் செய்யத் தான் அதிகாரம் உண்டு' என்று கூறுகிறது. எனவே தன்னுடைய கடமைகளைச் சரிவரச் செய்துவந்தால் ஆண்டவனின் அருள் மனிதர்கள் மூலமாக வந்தடையும் என்பதும், குருமூர்த்திகள் போன்ற உயர் பதவியும் தகுதி நோக்கித் தானே வரவேண்டுமே ஒழிய விரும்புதல் ஆகாது என்பதும் புலப்படும்.

குரு எனப்படுவார் :

குரு என்ற சொல்லுக்கு அறியாமையைப் போக்குபவர் என்பது பொருளாகும். 'கு' என்றால் அறியாமை; 'ரு' என்றால் போக்குபவர். உலகியல் அறிவாகிய கலைஞானத்தையும், உலகியலுக்கு அப்பாற்பட்ட அறிவாகிய மெய்ஞானத்தையும் அறிந்தவரே குருவாகும் தகுதியுடையோராவர். அதனால் தான் ஞானசம்பந்தர் அருள் வரலாற்றில் அம்மையின் அமுத ஞானப்பாலை உண்டநிலையில் அவர்பெற்ற சிறப்பினைப் பாட வந்த சேக்கிழார்,

> "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
> பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்
> உவமையிலாக் கலிஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
> தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்"

என்று பாடியருளுகின்றார். இதற்கு விளக்கம் காண வந்த வர்கள் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமாகிய உவமையிலாக் கலைஞானம் என்றும், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமாகிய உணர்வரிய மெய்ஞானம் என்றும் பொருள் கண்டனர். சுருங்கக்கூறின் இதனைச் சிவனடியே சிந்திக்கும் கலைஞானம் எனவும், பவமதனை அறமாற்றும் மெய்ஞானம் எனவும் கொள்ளலாம். கலை ஞானம் சாதனமாயிருப்பது ; மெய்ஞானம் சாதனத்தின் பயனாய் இருப்பது. சாதனமாக இருக்கும் உலகியல் ஞானத்

தையும், பயனுக இருக்கும் மெய்ஞானத்தையும் உணர்ந்தவரே குரு எனப்படுவார்.

இப்பாடலில் சேக்கிழார் கலைஞானத்தை உவமையிலாதது என்றும், மெய்ஞானத்தை உணர்தற்கரியது என்றும் குறித்திருப்பது அறிந்தின்புறத்தக்கது. ஆண்டவனை மாணிக்கவாசகர், ''உணர்ந்தார்க்கும் உணர்வரியோன்'' என்று திருக்கோவையாரில் குறிப்பதும் இங்கே நினைவு கூரத்தக்கது.

இங்ஙனம் குருவாகும் நிலைடையுயோர் உலகியல் ஞானத்தையும் மெய்ஞானத்தையும் அறித்திருத்தல் கூடப்பாடு என்பதனை விளக்குவது போல, குருஞானசம்பந்தர் ஒருபாடல் அருளுகின்றார். குருவாகும் தகுதியுடையோர் தன்னை அறிந்த வராகவும், தனக்கு முதல்வனாக உள்ள தலைவனை அறிந்த வராகவும், தளையாக உள்ள வினைகளை அறிந்தவராகவும் இருத்தல்வேண்டும் (தான் - பசு; தலைவன் - பதி; தளை-பாசம்) எனவே முப்பொருள் உண்மையை உணர்ந்தவராக இருத்தல் வேண்டும் இதனை எதிர்மறை முகத்தால்,

''தன்னை அறியார் தலைவன்தனை அறியார்
முன்னை வினையின் முடிபறியார் — பின்னைக்
குருக்களென்று பேரிட்டுக் கொள்ளுவர்கள் ஐயோ
தெருக்கள் தனிலே சிலர்''

என்று அருளிச் செய்கின்றார். மேற்கண்ட தகுதியில்லாதோர் குருவானால் நாட்டிற்குக்கெடுதல் என்னும் குறிப்பில் ஐயோ என்று இரக்கம் கொள்ளுகின்றார்.

அடிமையும் உடைமையும்:

மெய்கண்டாரும் தன்னை உணர்தலும், தலைவன்தனை உணர்தலும் சித்தாந்த சைவராதற்குள்ள தகுதிகள் என்னும் குறிப்பில், சிவஞானபோத அவையடக்கப் பாடலில், அடிமைப் பொருளாகிய தம்மியல்பினை உணர்ந்து, தம்மை அடிமையாக உடைய தலைவன் தனை உணர்ந்த சித்தாந்த சைவர்கள், தமக்கடிமைப் பொருளாகிய எம்மை ஆளாக உடையராதலின் இகழ்தல் செய்யமாட்டார்கள் என்று கூறுகின்றார்.

''தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மையுடைமை எமை இகழார்''

என்பன அப்பொருள் பொதிந்த வரிகளாகும்.

இப்பாடலில் 'தமை உடைய தன்னுணர்வார்' என்பதனைச் சிந்தித்தால் ஓர் உண்மை புலனாகும். உடைமை என்று கூறுவதெல்லாம் அறிவற்ற சடப்பொருள்களையே குறிக்கும், அடிமை என்று கூறுவதெல்லாம் அறிவுள்ள உயிர்பொருள் களையே குறிக்கும். உடைமையும் அடிமையும் வேறுவேறான பொருள்தரும் சொற்கள். அதனால்தான் இங்குத் 'தம்மை அடிமையாக உடைய தலைவன்' என்று பொருள் கொள்ளு கின்றோம்.

சைவமே முதற்சமயம் :

'தமையுடைய தன்னுணர்வார்' என்பதிலுள்ள 'தன்' என்னும் சொல் ஆண்டவனைக் குறிக்கிறது. வழக்கிலும்கூடத் 'தன்' என்னும் சொல் கடவுளைக் குறிக்கும்படியாகப் பயன் பட்டு வருதலைக் காணலாம். 'தற்செயல்' எனும் சொல்லைப் பலரும் பலநேரத்தில் கையாண்டு வருகின்றனர். 'தற்செயலாக நடந்துவிட்டது' எனும்போது எதிர்பாராதவிதமாக நடந்து விட்டது என்ற பொருளில்தான் பயன்படுத்தி வருகின்றோம். 'தன்' என்பது கடவுளைக் குறிப்பது. தன் செயல் என்றால் கடவுளின் செயல் என்று பொருள்படுகிறது. -தன் செயல்' இலக்கண விதிப்படித் 'தற்செயல்' என்றாகும். இச்சொல்லை இதேபொருளில் சைவசமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமின்றிப் பிறசமயத்தாரும் பயன்படுத்தி வருகிறார்கள். இதனைக் காணும்பொழுது சைவ சமயம்தான் மிகப் பழங்காலந்தொட்டு வேரூன்றி நின்ற முதற்சமயம் என்பதும், அது பிற்காலத்தில் பலரால் பலகாரணங்களால் பலசமயங்களாகப் பிரிக்கப்பட்டு விட்டது என்பதும் தெளிவாகும். எனினும் இதுபோன்ற சொற்கள் பயின்று வருவதைப் பிரிந்த பலசமயத்தலர்களும் மாற்றிக்கொள்ளாமல் அப்படியே கையாளுகின்றார்கள். இது போன்று இன்னும் பலசொற்கள் இருப்பனவற்றையும் உணரலாம். சிவனே' எனும் சொல் இன்று மிகவும் பழக்கத்தில் உள்ள சொல்லாகும். செயலின்றிக் கிடக்கும் ஒருவனைப் பார்த்த பிறர் 'இவன் சிவனே என்று இருக் கின்றான்' என்று கூறுகின்றனர். மேலும் ''சக்தி இருந்தால் செய்; இல்லையானால் சிவனே என்று இரு'' என்றும் கூறுகின்றனர். இச்சொற்களும் சமயச் சார்பைக் கடந்த பிற சமயத்தாராலும் இப்பொருளில் பயன்படுத்தப் பெற்று வருவதைக் காணமுடிகின்றது. சிவனையும் சக்தியையும்

சம்பந்தப்படுத்தியிருக்கும் இச்சொற்கள் எவ்வளவு ஆழமான பொருட் சிறப்புடையன என்பது அறிந்தவர்கட்கே விளங்கக் கூடியது.

இதுபோன்ற இன்னும் பல சொற்கள், பாமரர்களிடையேயும் அவர்களால் புரிந்துகொள்ளாமலேயே பழக்கத்தில் கையாளப்பட்டு வருவதைக் காணலாம்

'அவன் ஆணவத்தால் தலைகால் புரியாமல் தடுமாறுகிறான்'
'அவன் கர்மாவை அவன் அனுபவிக்கிறான்'
'அவன் அவள் மாயையிலே மயங்கிக்கிடக்கிறான்'

என்று மும்மலத்தை உணர்த்தும் சொற்கள் கிராம மக்களால் புரிந்து கொள்ளாமலேயே பயன்படுத்தப்பட்டுவருவதைக் காணலாம். இங்ஙனம் இச்சொற்கள் அனுபவ வாக்கியங்களாகக் கிராமங்களில் கையாளப்பட்டுவருவதைக்காணும் பொழுது பரந்துபட்ட சைவசமயம் பண்டுதொட்டே வேரூன்றி நின்ற நிலையினை உணரமுடிகிறது.

பற்றியிருந்தால் பற்றுவிடும்:

இங்ஙனம் எத்தரப்பிலும் எங்கும் பரவியிருக்கும் சைவ சமயம் ஆண்டவனையோ குருவையோ ஆராய்ந்து கண்டு பிடிக்க முயலாமல் நம்பிக்கையுடன் ஒருகடவுளை அல்லது ஒரு குருவை இளமையிலேயே பற்றிக்கொள் என்று கூறுகிறது. ஏகலைவனை உயர்த்தியது நம்பிக்கைதான். எல்லாவற்றையும் ஆராய்ந்து தெளிந்தபின் ஒரு கடவுளையோ ஒரு குருவையோ பற்றிக் கொள்வது என்பது இயலாததாகும். ஆதலின் முதலில் ஒருகடவுளை அல்லது ஒருகுருவைப் பெற்றோர் காட்டக்கண்டு பற்றிக்கொள். அவர்களின் அருளே உனக்குத் தெளிவையும் நல்வழியையும் காட்டும் என்பது முன்னோர்களின் முடிபு. இக் கருத்தில்தான் திருவள்ளுவரும்,

> ''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு''.

என்னும் குறளில் பிறபற்றுக்களை விடுவதற்குப் பற்றற்றவனாக இருக்கும் ஆண்டவனை முதற்கண் பற்றிக் கொள்வதே வழியாகும் என்று கூறுகின்றார்.

இந்நிலையினை இல்லற வாழ்க்கையிலும் வைத்துப் பார்க்கலாம். முற்காலத்தில் சிறுவயதிலேயே திருமணம்

செய்து வைத்தார்கள். அது தவறு என்பார் சிலர். ஆனால் அதுதான் சிறந்தது என்பதனை ஆழமாகச் சிந்தித்தால் உணரலாம். ஆணோ பெண்ணோ தனக்கு உரிய துணையை, இளமையிலேயே, பெற்றோர்களால் தேர்ந்துகொண்டு அதன் வழி வாழும்பொழுது, புறத்திலே மனம்திரிய இடமில்லாமல் போகிறது. அத்துடன் இளமைக்காலம் தொடங்கி ஒருவரை ஒருவர் நேசிப்பதால் புரிந்து கொள்ளவும், பெரியோர் 'கொளுத்தியது கொண்டு கொண்டது விடாமை' என்ற திறனும் உண்டாகிறது. பெண்கள் தங்கள் துணையை இளமையில் பற்றிக்கொள்வதால் ஏற்படும் சிறப்பைப் போலவே, பக்தனும் குருவையோ, கடவுளையோ இளமையிலேயே பற்றிக்கொள்வ தால் பிற பற்றுக்கள் விடுபட்டுப் பேரின்பம் கிட்டும் என்பது உறுதியாகிறது.

மூப்புரம் எரித்த மூர்த்தி :

இங்ஙனம் மனிதன் பற்றுக்கோடாகக் கொள்ளக்கூடிய ஆண்டவன், மனிதனைப்போலல்லாமல் கருவி கரணங்களின் துணையில்லாமலேயே காரியங்கள் செய்யக்கூடிய சிறப்புடை யவர். நினைவு மாத்திரத்திலேயே அருள்வதும் பிறவும் செய்யக் கூடிய ஆற்றலுடையவர். இந்தச்சிறப்பினை எடுத்துக்காட்டும் புராண நிகழ்ச்சிதான் திரிபுரம் எரித்த வரலாறு.

ஆண்டவன் திரிபுரம் எரிப்பதற்காகப் புறப்பட்ட பொழுது தேரின் உறுப்புக்களாக இருந்த தேவர்கள், தங்களின் உதவி யின்றி இத்திரிபுரம் எரிக்கும் செயல் நடைபெறாது என்று தங்களுக்குள் எண்ணினர். இவ்வுள்ளக்குறிப்பினை எல்லாம் அறியும் ஆண்டவன், தம்திருவுள்ளத்தில் இவர்களின் நிலை யினை எண்ணிச் சிரித்தார். அந்தச் சிரிப்பே தீயாகச் சென்று திரிபுரங்களை எரித்துவிட்டது. இதனால் ஆண்டவன் எச் செயலையும் கருவி கரணங்களின் துணையின்றித் தான் நினைத்த மாத்திரத்திலேயே செய்யக்கூடியவர் என்பது பெறப்படும். இது சங்கற்ப மாத்திரத்தில் நிகழ்ந்த செயலாகும். சூரியனின் சந்நிதியில் தாமரை தானே மலர்வதும், அல்லிமலர் கூம்புவதும், என்பிலா உயிர்கள் இளைத்துப்போவதும், என்புள்ள உயிர்கள் ஏற்றம்பெறுவதும் நடைபெறுவதுபோல ஆண்டவனின் சந்நிதியே அனைத்தையும் செய்யும், இது சந்நிதி மாத்திரத்தில் நிகழ்ந்த செயலாகும்.

மூவகைநெறியில் முளைத்த நூல்கள் :

இத்தகைய கடவுளின் திருவடியை அடையத் தடையாக இருப்பவை ஆணவம், கன்மம், மாயை எனும் பாசங்கள். பசுவாகிய ஆன்மா அப்பாசங்களின் நீங்கிப் பதியை அடைதலே முடிந்தபயன் ஆகும். இவ்வுண்மையினையே வேதம், ஆகமம் புராணம், இதிகாசங்கள், தோத்திரங்கள், சாத்திரங்கள் கூறுகின்றன. வேதம், ஆகமம் என்னும் இரண்டும் ஆண்டவனால் அருளிச் செய்யப் பெற்றவை. மற்றவை ஆண்டவனின் அருள்பெற்ற அடியார்களாலும், ஆசாரியர் களாலும் செய்யப்பெற்றவை.

இவ்வுலகில் வாழும் மனிதர்கள் பல்வேறு தரத்தில் இருப்பதால், அவரவர்களின் நிலைமைக்கேற்பக் கூறவேண்டும் என்பதனாலேயே, மூப்பொருளுண்மையினைப் பல்வேறு நூல்கள் பல்வேறு நிலையில் கூறுகின்றன. வேதம், ஆகமம் எனும் இரண்டும் எஜமானன் உத்தரவு போடுவது போன்று கூறும் இயல்புடையன. இதனை வடமொழியில் 'பிரபு சம்ஹிதை' என்பர். புராண இதிகாசங்களும் அறநூல்களும் நண்பன் கூறுவது போன்ற இயல்புடையன. இதனை வடமொழியில் 'சுஹ்ருத்சம்ஹிதை' என்று கூறுவர். காவியங்களும் இலக்கியங்களும் மனைவி கூறுவது போன்ற இயல்புடையன. இதனை 'காந்தாசம்ஹிதை' என்று வடமொழியில் கூறுவர்.

நல்லனகூற்று நாளும் வாழ்க :

இங்ஙனம் முன்னோர்கள், உயிர்கள், துன்பங்களினின்று விடுபட்டுப்பேரின்பம் அடைய, பல நூல்களைப் பலதரத்தில் ஆக்கித்துணைபுரிந்துள்ளனர். அவற்றினைக் கசடறக்கற்றலும் அவ்வழிநின்று உய்தலுமே இதுபோன்ற சமயப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வதால் ஏற்படும் பயனாகும்.



29

இயக்கம் கண்டு இணைந்து வளர்வோம்*

"நிலைமை சொல்லு ; நெஞ்சே ! தவம் என்செய்தாய் ?
கலை களாய வல்லான் ; கயிலாயநன்
மலையன் ; மாமயி லாடு துறையன் ; நம்
தலையின் மேலும் மனத்துளும் தங்குவே"

- திருநாவுக்கரசர்

[நமது தாய்ச்சமயத்தைக் கட்டிக்காப்பதில் நாம் கொள்ளவேண்டிய விழிப்புணர்ச்சியை நினைவு கூர்ந்து, வரலாற்று அடிப்படையில் நமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எடுத்துக்காட்டி, காழ்ப்புணர்ச்சி ஏதுமின்றி நாம் நமது தாய்ச்சமயத்தைத் கட்டிக்காக்க வேண்டிய இன்றியமையாமையையும், அதற்கான வழிமுறைகளையும் குருமணிகள் நன்கெடுத்து அருளியுள்ளார்கள்.]

'விஸ்வ ஹிந்து பரிஷத்' எனும் இயக்கம் இன்று முதல் ஐந்து நாள்கள் தருமபுரத்தில் முகாமிட்டுப் பல நற்பணிகளைச் செய்ய இருக்கிறது. இப்பொழுதிருக்கும் கால நிலையில் இது போன்ற இயக்கங்கள் பல இடங்களிலும் கூடி நல்ல பல காரியங்களைச் செய்வது மிகத்தேவையாக உள்ளது. இதனை ஒட்டி இங்கே சில கருத்துக்களைச் சிந்திப்போம்.

---

* தருமையாதீனத் திருமடத்தில் நடைபெற்ற விஸ்வஹிந்து பரிஷத்தின் ஐந்து நாள் முகாமில், தொடக்க நாளான 21—5—80 அன்று வழங்கியருளியது.

பெருமையும் சிறுமையும் பின்பற்றுவோரால்:

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பிய நூற்பா. எல்லாச் சொற்களும் பொருளை யுணர்த்துவனவே என்பது இதன் பொருளாகும். அதேபோல, நாட்டிலுள்ள எல்லாச் சமயங்களும் உயிர்களுக்கு, அதிலும் சிறப்பாக மக்களுக்கு நன்மை செய்யவே தோன்றின. இருப்பினும், அவை அனைத்தும், தோன்றிய நன்னோக்கத்தில் அந்தந்தச் சமயத்தைச் சார்ந்தவர்கள் செயற் படாமையால் அவ்வவற்றிற்கும் குறைவு ஏற்பட்டுவிடுகிறது. சட்டம் நன்மையைச் செய்யத்தான் தோன்றியது என்றாலும், அதனைச் செயல் படுத்துபவர்களின் குறையினால் அந்தச் சட்டத்திற்கே குறைவு ஏற்பட்டுவிடுகிறது. மழைநீர் எவ்வளவுதான் தூய்மையுடையதாக இருந்தாலும், அது சாரும் இடத்தின் குறைவினால் அதுவும் தன் தரத்தினை இழந்துவிடுதலைப் போல, சட்டமும் சமயமும், சார்ந்தவர்களின் குறைவினால் மதிப்பிழந்து விடுகிறது. இந்த அடிப்படையில், கடந்த காலங்களில் நிகழ்ந்த சில வரலாறுகளைச் சிந்திப்போம்.

கிறித்தவர் - இஸ்லாமியர்களின் காழ்ப்பு:

கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆண்ட காலத்தில், சென்னையில் மயிலாப்பூரிலிருந்த கபாலீசுவரர் திருக்கோயில் வெள்ளையர்களால் இடிக்கப்பட்டுவிட்டது. இது வரலாறு அறிந்த உண்மை. இப்பொழுதிருக்கும் கபாலீசுவரர்கோயில் 300 ஆண்டுகட்கு முன் புதிதாகக் கட்டப்பெற்றதாகும்.

1300 ஆண்டுகட்கு முன்பு ஞானசம்பந்தர், 'மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலை' எனும் பதிகம்பாடி எலும்பைப் பெண்ணாக்கிய வரலாற்றினைக்கொண்ட அற்புதத்திருக் கோயில் இடிக்கப்பட்டுவிட்டது. பழைய கபாலீசுவரர் திருக்கோயில் இருந்த இடத்தில்தான் இப்பொழுது' சாந்தோம் சர்ச்' இருப்பதாகக் கூறுகிறார்கள். அதற்கு ஆதாரமாக அங்கே சில நந்திகள் காணப்படுகின்றன. இதனைக் காணும் பொழுது வெள்ளையர்களின் மதக்காழ்ப்பும், அதன் அடிப் படையில் நிகழ்ந்த இந்தச் செயல்களும் அவர்கள் சார்ந்துள்ள கிறித்தவ மதத்தைத் தாழ்த்திவிட்டது என்றே எண்ண வேண்டியுள்ளது.

மேலும், வெள்ளையர்களால் சென்னை மல்லீசர் திருக் கோயிலும், சென்னை கேசவப்பெருமாள் திருக்கோயிலும் இடிக்கப்பட்டுவிட்டன. இப்பொழுதிருக்கும் சென்னை மல்லீசர்கோயில் துபிபாஷாவல்லுனர் சீனிவாச முதலியார் என்பவரால் வெள்ளையரிடமே பொருளுதவி பெற்றுப் புதிதாகக் கட்டப்பெற்றது என்று கூறுவர். இதேபோன்று பிரெஞ்சு ஆட்சியில் கி. பி. 1720 இல் டுப்ளே என்பார் ஆண்டு வந்த பொழுது, பாண்டிச்சேரியில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. கிறித்தவர்கள் அங்கிருந்த வேதபுரீசுவரர் திருக்கோயிலையும், வேதநாராயணப்பெருமாள் திருக்கோயிலையும் இடித்துத் தள்ளிவிட்டார்கள். இப்பொழுது அந்த இடத்தில் சர்ச் கட்டப்பட்டுள்ளது இடித்துத் தள்ளப்பட்ட அவ்விரு கோயிலும் அப்பெயரால் வேறிடத்தில், அதாவது இப்போது மகாத்மாகாந்திரோடு என வழங்கும் சாலையில் கட்டப் பட்டுள்ளது. மேலும் முகலாயர்கள் ஆட்சியில் வேலூர் ஜலகண்டேசுவரர் ஆலயம், ஜோதிர்லிங்கத் தலங்களுள் சோமநாதர் ஆலயம் முதலியன தகர்க்கப்பட்டன. சுதந்திர இந்தியாவின் துணைப்பிரதமராக விளங்கிய இரும்புமனிதர் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களால் சோமநாதர் கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

முகமதியர்களைப் பாருங்கள்:

அந்தக்காலத்தில் மிகப்பிரபலமானவரும், துபாஷ் (இரு மொழி அறிந்தவர்) எனும் தகுதியில் இருந்தவரும், மிகவும் செல்வாக்குடன் வாழ்ந்தவருமான புதுவை ஆனந்தரங்கம் பிள்ளை போன்றோர் இச்செயல்களைக் கண்டிக்காமல் இருந்து விட்டார்கள். இங்ஙனம் சமயத்திற்கும் சமயச் சின்னங் களுக்கும் (திருக்கோயில்களுக்கும்) ஊறு ஏற்படும் பொழுதெல் லாம், வியாபகமாய் உள்ளவர்களும், பக்தர்களும், பொது மக்களும் வாய்மூடி மௌனிகளாய் இருந்துவிடுவது மன்னிக்க முடியாத குற்றமாகும். இங்கே இன்னொன்றும் நினைவு படுத்துதல் தக்கதாகும். அதே காலத்தில் புதுவையில் முகமதியர் களின் மசூதி ஒன்றினை இடிக்கச் சென்றபொழுது, அங்கிருந்த முகமதியர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு எங்களின் தலைகள் இந்த மண்ணிலே உருண்டபின்னர், எங்கள் பிணத்தின்மீது நடந்து சென்றுதான், மசூதியினை இடிக்க வேண்டும் என்று

வீராவேசத்துடன் போர்க்கொடி காட்டினார்கள். அதனால், அந்த மசூதி இடிக்கப்படவில்லை என்றும் வரலாறு கூறுகிறது.

அவரவர் கடமையைச் செய்க :

நன்றாக வேரூன்றி ஆல்போல் தழைத்துள்ள இந்து சமயப் பக்தி உறைப்பும், தியாக மனமும் உள்ளவர்கள் இல்லாமையால் வரவரச் செல்வாக்கு குறைந்து வருகிறது. எதிரிகளால்தான் அழிகிறது என்று எண்ணும் எண்ணத்தை விட்டுவிட்டு, நம்மீது தான் குறை இருக்கின்றது என்பதை உணர்ந்தால் பயன் விளையும். எந்தச் சமயத்திற்கும் தன் கருத்துக்களைத் தெளிவு படுத்தவும், பரப்பவும் உரிமை இருக்கிறது. அதை நாம் மறுப்பதற் கில்லை. ஆனால் அச்சமயத்தின் சார்பாளர்கள், நம் சமயத்தில் கைவைக்கவோ, வேறுபல குறைபாடுகளைச் செய்யவோ நாம் விட்டுவிடுதல் கூடாது. அங்ஙனம் விட்டுவிடுவோமேயானால் பிற்காலத்தில் வரும் சந்ததியினரின் இழிச்சொல்லுக்கு ஆளாக வேண்டிவரும். எனவே, பிறர் சமயத்தில் தலையிடாமலும், பிறர் நம்சமயத்தில் கைவைக்க இடம்தராமலும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது சமயச் சார்புடையோர் ஒவ்வொருவரது கடமையுமாகும்.

நினைவும் சொல்லு நெஞ்சே:

இன்றைக்கு மக்களிடையே சமயம் நல்லமுறையில் விளக்கம் பெறாமலும், அவர்களின் உயிரைவிட மேலாகச் சமயத்தை எண்ணும் எண்ணம் வராமலும் இருப்பதற்குக் காரணம், சரியான முறையில் சமயம் பரப்பப் படாமலிருப்பதே ஆகும். இன்று பலரின் கூற்றுக்களாக நாம் கேட்பதெல்லாம் ' நம்சமயம் மக்களிடையே வளரவில்லை ' என்பதே. வளரவில்லை, வளர வில்லை என்று கூறிக்கொண்டிருக்கும் ஆதங்கம் மட்டும் போதாது. அங்ஙனம் சமயம் வளர நாம் என்ன செய்திருக் கிறோம் ? என்ற கேள்வியினை ஒவ்வொரு பக்தனும் தன்னை நோக்கிக் கேட்டுக் கொள்வானேயானால் பலன் விளையும். உழைக்காமலேயே செல்வம் சேர்வதோ, நல்ல நூல்களைப் பயி லாமலேயே அறிவு வளர்வதோ, தவம் செய்யாமலேயே ஞானம் பிறப்பதோ எப்போதும் இல்லை. அதேபோலத் தொண்டு செய்யாமலேயே சமயத்தை மக்கள் உள்ளத்தில் மலரச் செய்ய முடியாது.

அப்பர் கூறும் அரியவழி:

இன்றிருக்கும் நிலைக்குப் பொருத்தமாக அப்பர் சுவாமிகள் அன்றே பாடிய, 'நிலைமை சொல்லு நெஞ்சே' எனும் பாடலைத்தான் முதலில் குறிப்பிட்டோம் அதன் பொருளை நினைவு கூர்வோம்.

நெஞ்சே, கலைகள் பலவற்றையும் உடையவனும், கயிலாய மலையிலுள்ளவனும் ஆகியசிவபெருமான்,மயிலாடுதுறையிலும் உறைகின்றான். அவன் நம்தலையின் மேலும், மனத்துள்ளும் வந்து தங்குவதற்கு நீ என்ன தவம் செய்தாய்? அந்த நிலைமை யைச் சொல்லு என்று கேட்கின்றார் நாவுக்கரசர்.

இக்கேள்வியைத்தான் நாம் இப்பொழுது கேட்டுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆதலின், தவம் செய்தாலொழிய, எங்கணும் பரந்திருக்கும் ஆண்டவன். சிரத்திலும், மனத்துளும் வந்து தங்கான் என்பது உறுதியாகத் தெளிவாகின்றது

இப்பாடல் தவம் செய்தலர்கட்குப் பயனாய் அமைகிறது. தவம் செய்யாதார்க்குக் கேள்விக்குறியாய் அமைகிறது. இந்நிலை நம் தவம் இம்மையையே காட்டுகிறது.

தவம் என்பது, வள்ளுவர் கூறுவதுபோலத் தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகும். அத்தவத்தினை இன்று நம்மில் பலரும் செய்யத்தவறியதே இன்றிருக்கும் அவல நிலைக்குக் காரணமாகும்.

பரமேசுவரன் கரவாடும் வன்னெஞ்சர்க்குக் கரந்தும் கரவாத நன்னெஞ்சர்க்கு விரவிப் பரந்தும் இருப்பவன். அவன் உன் வாழ்வில் விளங்கித் தோன்ற வேண்டுமானால், முதலில் நீ உன் நிலையை உணர்ந்துகொள்ளல் வேண்டும். பிறகு எங்கும் பரந்திருக்கும் ஆண்டவனை நெஞ்சிலும் சிரத்திலும் நிறுத்த முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விரண்டுமே நாம் செய்யத்தக்கனவாம்

இயக்கம் கண்டு இணைந்து வளர்வோம் :

நம் நெஞ்சிலும், சிரத்திலும் ஆண்டவனை நீங்காது பெற்றுக்கொள்ளவேண்டும் எனும் அதே சமயத்தில், நம்முடைய சமயத்தை மக்களின் நெஞ்சிலும் சிரத்திலும் வைத்துப்

போற்றிடப் பாடுபடுதல் நமது தலையாயகடமை என்பதை, ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்படுதல் இன்றியமையாத தாகும். பிறருக்குத் தீங்கிழைக்காமலேயே தொண்டு செய்ய ஒருமித்த ஓர் இயக்கம் தேவை. இக்கருத்தில் இந்த 'விஸ்வ ஹிந்து பரிஷத்' நல்ல பல காரியங்களைச் செய்துவருகிறது. இவர்கள் உயர்வு தாழ்வு பாராட்டாமல் தொண்டாற்றுகின்றனர். ஒருங்கு கூடும்பொழுது கட்டுப்பாடும், ஒழுங்கும் இவர்களிடையே காணப்படுகின்றன. ஓரியக்கத்திற்கு இவை மிகவும் தேவை.

இந்து சமயத்திலிருந்து பல்வேறு காரணங்களால் பிரிந்து சென்றவர்களும் இப்பொழுது தாய்ச்சமயத்திற்கு வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்களை இந்து சமயத்திற்குக் கொண்டுவருவதற்கு இவ்வியக்கம் பெருமுயற்சி செய்து, சில இடங்களில் பெரும்பலனும் பெற்றிருக்கிறது. 'விஸ்வம்' என்ற சொல்லே பெரியது எனும் பொருள் தரக்கூடிய சொல்லாகும். 'விஸ்வரூப தரிசனம்' என்றால் பேருருவ வழிபாடு என்பது பொருளாகும். விஸ்வநாதர் என்பதும் இக்கருத்துப் பற்றியதேயாம். 'விஸ்வ ஹிந்து பரிஷத்' பெரிய இயக்கமாக வளர்ந்து உலகம், முழுமையும் சென்று, அயராது தொண்டு செய்து சிறப்புப்பெறும் என்று நம்பிக்கை கொள்வோமாக. நமது தொண்டு, நமது திருக்கோயில்களை மையமாகவைத்தே செயல்படவேண்டும். அப்போதுதான் திருக்கோயில்களும் திருவருட்பொலிவோடு திகழும். நமது தொண்டும் பெரும் பயன்தரும். இதனை விஸ்வ ஹிந்து பரிஷத்தினர் நடைமுறைப் படுத்துவார்கள் என்று நம்புகிறோம். உலகம் முழுமையும் இந்துசமயம் பரவித் தழைத்து வளர, இவ்வியக்கத்தைச் சார்ந்தோரும், பக்தர்களும் இடையறாது தொண்டு பலசெய்து, தம்மையும் உயர்த்தித் தம் சமயத்தையும் உயர்த்தித்தாய் நாட்டையும் உயர்த்தப்பாடுபடுவார்களாக!

30

நல்லனகற்று நாளும் தெளிக

"சுரவின்றி நன்மா மலர்கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்
சிரமொன்றிய செஞ்சடையான் வாழ்
வரமா முயிலாடுதுறையே".

— திருஞானசம்பந்தர்

[தென்முகக்கடவுள் வழிபாடு மிகத்தொன்மையானது. இவ்வழிபாட்டின் சிறப்பையும், மூர்த்தியின் அருளையும் நினைவு கூர்ந்து அருளிச் செய்யும் குருமணிகள், நல்லவர்களாக இருப்போர் வல்லவர்களாகவும், வல்லவர்களாக இருப்போர் நல்லவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பதைப் புராண இதிகாசங்களின் மேற்கோள் காட்டி இனிது நிறைவித்துள்ளார்கள்.]

எல்லாம் இறைசெயலே :

அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரியின் வெள்ளிவிழா இன்று தொடங்கிச் சிறப்பாக நடைபெற இருக்கிறது. வெள்ளிவிழா நிகழ்ச்சிகள், வெள்ளிக்கிழமையில் தொடங்கி, அடுத்த வெள்ளிக்கிழமை முடிய நடைபெறுவது மகிழ்ச்சிக்கு உரியது; தெய்விகம் ஓங்கியது. இருபத்தைந்து

---

* 29—8—80 அன்று மன்னன்பந்தல் அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரியில், தென்முகப்பரமனுக்கு வெள்ளிக்கவசம் அணிவித்தும், வெள்ளிவிழா அரங்கைத்திறந்து வைத்தும், கண்காட்சியைத்தொடங்கி வைத்தும் வழங்கியருளியது.

ஆண்டுகளுக்கு முன்பு இக்கல்லூரி தொடங்கியது ஜூன் 29-ஆம்தேதி. ஆனால் வெள்ளிவிழா தொடங்கும் இன்றைய தேதியும் 29 ஆக அமையும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. இறைவன் அருளால் இதுபோன்று ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் எதிர்பாராத பொருத்தங்கள் வந்து அமைவதுண்டு. இவையெல்லாம் இறைவன் கட்டளைப்படியே அமைபவை. அதனால்தான் 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்று தாயுமானாரும், 'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே' என்று அப்பரடிகளும் அருளிப்போந்தனர். இங்ஙனம் அனுபவ பூர்வமான ஆன்றோர்களின் வாக்கியங்களை அவரவர் அனுபவங்களில் வைத்துத்தான் புரிந்துகொள்ளமுடியும்.

கடவுளை முன்வைத்துக் காரியம் செய்க:

இன்று இக்கல்லூரியின் நுழைவாயிலின் கீழ்பால் அமைந்துள்ள தென்முகக்கடவுளுக்கு, ஆசிரியர் மாணாக்கர்களின் காணிக்கையாக, வெள்ளிக்கவசம் சார்த்தி வழிபாடு செய்து இவ்வெள்ளிவிழா நிகழ்ச்சிகளைத் தொடங்கியுள்ளீர்கள். வெள்ளிக் கிழமையில் தென்முகப்பரமனுக்கு வெள்ளிக்கவசம் அணிவித்து. வெள்ளிவிழாவைத் தொடங்கியிருப்பது இக்கல்லூரிக்கே உரிய தனிச்சிறப்பாகும். எச்செயலையும் கடவுளை முன் வைத்தே தொடங்குவது முன்னோர்களின் வழக்கம். அங்ஙனம் தொடங்கின், நிகழ்ச்சியில் குறைவோ தடங்கலோ நிகழா என்பது அவர்களின் நம்பிக்கை. அங்ஙனமே இங்கும் தொடங்கியிருப்பது பாராட்டக்கூடியது.

ஆறுமுகனாய் அமைந்த கல்லூரி :

இக்கல்லூரியை அன்பநாதபுரம், ஏனாதிமங்கலம், கங்கணம்புத்தூர், காருகுடி, பல்லவராயன்பேட்டை ஆகிய ஐந்து ஊர்களில் வாழ்ந்துவரும் காராளப் பெருமக்கள் சேர்ந்து தொடங்கினார்கள். அன்னசத்திரங்கள் ஆயிரம்வைப்பதைவிட, ஆலயம் பதினாயிரம் அமைப்பதைவிட, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் உயர்ந்தது எனும் பாரதியாரின் கருத்திற் கிணங்க, இவர்கள், இக்கல்லூரியினை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கினார்கள். தொடங்குவதை ஒரு அருளாளர் திருக்கரத்தால் தொடங்கவேண்டுமென்று திண்ணமாக எண்ணினார்கள். எண்ணிய எண்ணியாங்கு எய்தப் பெற்றார்கள். நம்து கயிலைக் குருமணியின் திருக்கரத்தால் ஒளிவளர் விளக்கேற்றிக் கல்லூரி தொடங்கப்பெற்றது

இதனால் அன்னசத்திரம் அமைப்பதிலோ ஆலயங்கள் கட்டுவதிலோ பாரதியாருக்குக் கருத்துவேறுபாடு இருப்பதாகக் கொள்ளக்கூடாது. மக்கள் அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் பொழுது அன்னசத்திரங்களையும்ஆலயங்களையும்அமைத்தால், மக்கள் தம் அறியாமையினால் அவைகளைச் சரிவர நிர்வகிக்க மாட்டார்கள்; இடித்துப் பாழ்படுத்தி விடுவார்கள்; ஆதலின் ஆங்காங்கே பள்ளிக்கூடங்களை வைத்து அவர்களை அறியாமை யினின்றும் நீக்கி, நல்லறிவினைப் புகட்டிவிட்டால், தாங்களே முன்வந்து ஒவ்வொரு ஆலயத்தையும், அன்னசத்திரத்தையும் கட்டிவிடுவார்கள் என்ற கருத்தில்தான் பாரதியார்

''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''

என்று கூறினார். இக்கருத்தினை வலியுறுத்துவதற்குப் பாரதியார் பிறிதோரிடத்தில் கூறிய ''பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம்'' என்ற வாக்கும் துணைசெய்கிறது. இந்த நல்ல கருத்தில்தான் அன்பநாதபுரம் வகை அறத்துறை யினர் இக்கல்லூரியினை அமைத்துள்ளார்கள்.

பொதுவாக எந்தச் செயலும், எந்த நிறுவனமும் நல்ல எண்ணத்தோடு தொடங்கப்பெற்றால் அது மென்மேலும் வளர்ந்து ஓங்கும். இன்றிருக்கும் கலைக்கல்லூரிகளில் சிறந்த கல்லூரிகளுள் ஒன்றாக இந்த ஏ வி. சி. கல்லூரியும் திகழ் வதற்கு, அமைத்தவர்களின் அழுத்தமான நல்லெண்ணமும், தொடங்கி வைத்தவர்களின் அருளாசியுமே காரணங்களாகும். இவைமட்டுமல்லாமல் இக்கல்லூரி இந்த அளவுக்கு வளர்ந்து வந்தமைக்கு இன்னுமொரு காரணமும் உண்டு. ஐந்து ஊர்களில் வாழ்ந்தவர்களின் பொருள் வளம், நல்லெண்ணங் களுடன், மாயூரநாதப் பெருமானின் அருள்கொழிக்கும் வளமான இடத்தில் இக்கல்லூரி அமைந்துள்ளதும் ஒரு முக்கிய காரணமாகும். இங்ஙனம் ஐந்து ஊரும் ஐந்து முகமாக இருக்கவும், அதோ முகமாக மாயூரநாதரின் மன்னன் பந்தல் நிலம் விளங்கவும், அறுமுகனாக இக்கல்லூரி காட்சி தருகிறது.

குருவை அணுகிக் குறையை நீக்கு:

இக்கல்லூரியின் நுழைவாயிலின் கீழ்பால் திருக்கோயில் கொண்டுள்ள, தென்முகக்கடவுளின் திருவுருவ அமைப்பில் ஒரு தத்துவம் அமைந்துள்ளது. கடவுளின் தத்துவத்தை நல்ல குருநாதரை அணுகிப்புரிந்துகொள்ளவேண்டும். அங்ஙனம் இன்றிப் பார்த்தமாத்திரத்தில் எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே என்று ஒருவன் கூறுவானேயானால், அது அவனது அறியாமையையே காட்டும். உதாரணமாக, இக்கல்லூரியில் வரலாறு, பொருளாதாரம், கணிதம், விஞ்ஞானம், உயிரியல் போன்ற பல்வேறு பாடங்களைக் கற்றுத்தருகின்றார்கள். யாரேனும் ஒருவர் வந்து இக்கட்டடங்களின் முன் நின்று கொண்டு "இக்கல்லூரியில் என்ன என்னவோ கற்றுக் கொடுக்கிறார்கள் என்றார்களே! ஒன்றும் காணோமே!" என்று கூறினால், அது அவரின் அறியாமையைத்தானே புலப்படுத்தும். அந்த மனிதர், இக்கல்லூரியில் சேரும் தகுதியுடன் வந்து, முறையாகப் பணம் கட்டிச் சேர்ந்து, தவறாமல் வகுப்பு களுக்குவந்து, ஆசிரியர்கள் சொல்வனவற்றைக் கவனமுடன் கேட்டுப் பயின்றால் எந்தத் துறையும் எளிதில் கை வரும். அதுபோலவே, ஆண்டவனது தத்துவமும், முன்னோர்களின் அனுபவ வார்த்தைகள் எனும் துணையைக்கொண்டு, நல்ல குருநாதரை அணுகி, அவரின் சொற்படி நடந்துவந்தால், தெளிவாக விளங்குவதோடு, அவனது இன்னருளும் கிடைக்கும்.

பாவனையில் விளக்கிய பரமன் அருள்!

இனித் தென்முகக்கடவுளின் திருவுருவத்தில் அமைந்துள்ள தத்துவத்தைக் காண்போம். அவரின் திருவ்டியால் அழுத்தப் பட்டுள்ள வடிவம், முயலகன் எனும் அறியாமையின் வடிவம் ஆகும். 'அறியாமையை அழுத்தி அடக்கமுடியுமே தவிர, அழிக்கமுடியாது. அவரின் திருமுன்னர், நான்கு முனிவர்கள் அமர்ந்துள்ளதைக் காணலாம். அவர்கள் நால்வேதம் ஆறங்கம், ஆகமம் போன்ற நூல்களைக் கற்றுக் கேட்டு வல்லவராகிய சான்றோர்கள். அவர்கள் கேட்ட கேள்விக்கு இறைவன் அளித்த விடைதான், அப்பெருமான் காட்டும் வலக் கையின் அடையாளம் ஆகும். அந்த அடையாளத்தைச் சின் முத்திரை என்று கூறுவர். சித் என்பது அறிவு; முத்திரை என்பது அடையாளம். இறைவன் சொற்களாகக்கூறி விளக்காமல், பாவனையால் அம்முனிவர்களின் தகுதிநோக்கி

விளக்கியுள்ளான். இன்றும் அறிவுத்துறையில் மேல் வகுப்புக்குப் போகப்போகப் பேச்சுக்கள் குறைவதைக் காணலாம். அதுபோலத்தான், மெய்ஞானத் துறையிலும், உயிர் வளரவளரச் சொற்கள் குறைந்து, ஆன்ம அனுபூதி அதிகமாகும். இதனால்தான் ''மோனம் என்பது ஞானவரம்பு'' எனக் கூறப்படுகிறது.

கையில் காட்டிய பொய்யில் பொருள்!

இன்று சின்முத்திரை பற்றிச் சிறிது சிந்திக்கலாம். உலகிலுள்ள எந்த மனிதனுக்கும், கையின் அமைப்பில் மாற்றம் இல்லை. சைவர்களுக்கு என்றில்லாமல், எந்தச் சமயத்தைச் சார்ந்தோர்க்கும் கையில் உள்ள விரல்கள் ஐந்தேயாகும். அந்தக் கையின் அமைப்பில், சைவசித்தாந்தக் கருத்தினையே, அமைத்து விளக்கியுள்ள சின்முத்திரைப் பாங்கினை, எண்ணி எண்ணி வியக்கவேண்டியுள்ளது. கையிலுள்ள ஐந்து விரல்களிலும் முக்கியமானதும், அடக்கமானதும், தனித்து இருப்பதும், தன்னையின்றி எந்தச்செயலையும் பிற விரல்கள் செய்ய இயலாத வகையில் மூக்கியத்துவம் வாய்ந்ததுமாயிருப்பது, கட்டை விரலாகும். ஆதலின் அது, கடவுள் என்பதற்கு அடையாளமாகத் திகழ்கின்றது. எதற்கெடுத்தாலும் நான் என்று முந்திவருகின்ற ஆள்காட்டிவிரல் என்று அழைக்கப்பெறும் சுட்டுவிரல், ஆன்மாவை உணர்த்தும். நான் என்னும் முனைப்பு ஆன்மாவிற்கு (சுட்டுவிரலுக்கு) ஆணவத்தைச் சார்ந்திருப்பதால் வருவது. அடுத்துள்ள பெரிய விரல் ஆணவத்தையும், அதற்கடுத்த விரல் கன்மத்தையும், சுண்டு விரல் மாயையையும், உணர்த்துகின்றன.

பார்வைக்குப் பெரியதாக இருந்து, தலை நிமிர்ந்துநின்று, உயிரைத் தன்வயப்படுத்தும் தன்மையால், நடுவிரல் ஆணவத்தைக் குறிக்கும் அடையாளமாயிற்று. அதற்கடுத்த விரல் மோதிரவிரல் என்று அழைக்கப்பெறும். கர்மாவைச் செய்வோர், பவித்திரம் அணிந்தே செய்வர். பவித்திரமே நாளடைவில் மோதிரமாயிற்று. ஆதலால், மோதிரவிரல் எனப் பெயர் பெற்றது. திருமணக்காலங்களில் மைத்துனன் முறையுள்ளவன், மாப்பிள்ளையின் கையில் மோதிரம் ஒன்று அணிவிப்பது இன்றும் வழக்கமாக உள்ளது. என்ன கருத்து எனின் ''என் சகோதரியை இன்றிலிருந்து கர்மாக்களைச் செய்வதற்கு

உனக்குத் துணைவியாக்கிவிட்டேன்; அவளின் துணையைக் கொண்டு, கர்மாக்களைச் செய்து உடல் பெற்ற பயனை அடைவாயாக!'' ஏன்பதாகும் ஆனால், இன்று அந்த மாப்பிள்ளையும் பதிலுக்கு மைத்துனனுக்கு ஒரு மோதிரத்தை அணிவித்து விடுகின்றான். இது காலப்போக்கில் மரியாதைபற்றி வந்ததாகவே தோன்றுகிறது. அந்த மோதிர விரலுக்கு அடுத்தவிரல் மாயைக்கு அடையாளம். அந்தச் சுண்டு விரலுடன் திருமண நேரத்தில் மணப்பெண்ணின் சுண்டு விரலையும் சேர்த்துக் கோர்த்து அக்னியை வலம் வரச் செய்கின்றனர். அவளே (சுண்டுவிரல்) மாயை என்பதை உணர்த்தும் கருத்தில்தான் இந்த நிகழ்ச்சியும் அமைந்துள்ளது.

இங்ஙனம், ஆண்டவனின் அருளால் மாயையாம் துணைவியுடன் கன்மங்களைச் செய்யச்செய்ய ஆணவத்தின் வலிமை குறைய ஆரம்பிக்கும். கர்மம் என்பது செயல். கன்ம வளர்ச்சியினால் உயிரானது ஆணவம், கன்மம், மாயை எனும் மும் மலங்களையும் விடுத்துப் பதியை அடையும் என்ற தத்துவத்தில் தான் சுட்டுவிரலின் நுனி கட்டைவிரலின் அடியில் தங்கும் அடையாளத்தைப் பெருமான் வைத்துக்காட்டியுள்ளார். இவ்வடையாளத்தைதான் சின்முத்திரை என்கிறோம். இவ்வரிய உண்மையை விளக்கும் தக்ஷிணாமூர்த்தியின் திருவுருவம், மேல் நிலைக்கல்வி புகட்டும் இக்கலைக்கல்லூரியில் எழுந்தருளியிருப்பது மிகமிகப் பொருத்தமாகும்.

நல்லவனும் வல்லவனும்:

இத்தத்துவத்தின் அடிப்படையில், ஆன்மா பக்தி தெறியில் நின்று, பரமன் அருள் பெறவேண்டும். பக்தி எனும்பொழுது அசுர பக்திதான் முன்னே வருகிறது. அசுரர்கள் எந்தச் செயலிலும் தீவிரம் உடையவர்கள். அவர்கள் இறைவனை நோக்கித் தவம் செய்தாலும், அதிலும் அவர்களின் தீவிரம் புலப்படும். அதனால்தான் அசுரசாதனை என்றனர். சூரபதுமன் எனும் அசுரன், இறைவனை நோக்கிச் செய்த வேள்வியில், தனது உடல் உறுப்புக்களைத் தானே அறுத்து வேள்வி செய்ததோடு அல்லாமல், தன்னையே வேள்வித் தீக்குப் பலியாக்கினான். இந்த அசுரர்கள் வல்லவர்கள். பிறருக்கு அல்லதைச் செய்து மகிழ்ச்சி அடைபவர்கள். சுரர்கள் என்றழைக்கப்பெறும் தேவர்கள் நல்லவர்கள். அவர்கள்

பிறருக்கு நல்லனதைச்செய்து மகிழ்ச்சி அடைபவர்கள். தேவர்களின் செயலில் வல்லமை குறைவாக இருக்கும். அசுரர்களின் செயலில் நல்லவை குறைவாக இருக்கும். இந்த மண்ணுலகில்கூட நல்லவர்களாக இருப்போர் வல்லவர்களாக இருப்பதில்லை. வல்லவர்களாக இருப்போர் நல்லவர்களாக இருப்பதில்லை. நல்லவனாகவும், வல்லவனாகவும் இருக்க நாம் முயலவேண்டும். திருப்புகழ்கூட இக்கருத்தில்தான் 'மதியால் வித்தகனாகி மனதால் உத்தமனாகி' என்று குறிக்கிறது.

இணைந்து வாழும் எதிர்க்கட்சிகள்:

சுரர்களுக்கு குரு வியாழ பகவான். அசுரர்களுக்குக் குரு சுக்கிராசாரியார். சுரர்-தேவர், நல்லவர்கள். அசுரர்-நல்ல ஒழுக்கமில்லாதவர்கள். "வல் அசுரர் மாள நல்லசுரர் வாழ,வல்லை வடிவேலைத் தொடுவோனே" என்பது அருணகிரியார் வாக்கு. வியாழனும் சுக்கிராசாரியாரும் எதிரிடையானவர்கள். உலகியல் வழக்கில் கூறினால் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி எனலாம். இன்று வீட்டிலும் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி இருப்பதைப் பார்க்கலாம். கணவன் ஆளுங்கட்சி என்றால் மனைவி எதிர்க்கட்சியாகவும், குழந்தைகள் பொது மக்களாகவும் கொள்ளலாம். பொது மக்களாம் குழந்தைகளின் தேவையை எதிர்க்கட்சியாம் மனைவி பக்குவமாகக் கணவனிடம் எடுத்துச் சொல்லிக் குழந்தைகளுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுத்துவிடுகிறாள். இதுபோல எல்லோரும் நல்லனவற்றைச் செய்வது என்ற ஒரே நோக்கில் செயல்பட்டால் மக்களுக்கு நன்மைகள் கிடைக்கும். மேலும் கணவனும், மனைவியும் எதிரிடையானவர்கள் எனினும் எதிரிகளாக நடந்துகொள்வதில்லை. அன்புடன் வாழ்கிறார்கள் இந்நிலையினைப் புராணங்களில் விளக்கியுள்ளார்கள். இதனை ஆட்சியாளரும் பின்பற்றினால் அனைவரும் நலம் பெறலாம் அல்லவா?

சுக்கிராசாரியாரின் தவ வலிமையையும், மந்திர சக்தியையும் அறிந்த வியாழபகவான், தன்மகன் கசனை அனுப்பி அவரிடம் பயிற்சி பெற்றுவரச் செய்தார். சுக்கிராச்சாரியாரும் எதிரியின் மகன் என்ற எண்ணம் கொள்ளாமல் உண்மையாக 'அமுத சஞ்சீவினி' எனும் மந்திரத்தைக் கற்றுக்கொடுத்தார். அம்மந்திரத்தைக் கற்றுக்கொண்டு சென்று, தன் தந்தையாகிய

வியாழனுக்குத் தெரிவித்தார். அதன் பின்னரே தேவர்கள் அதன் பயனாய் அமரத்துவம் பெற்றார்கள்.

மகாபாரதத்தில்கூட, எதிரியான துரியோதனனுக்கு நல்ல நாள் பார்த்துக்கொடுத்தவன், பஞ்சபாண்டவர்களில் ஒருவனான சகாதேவன் தான் என்பதையும் இங்கே சிந்தித்துப் பார்த்தல் தக்கதாகும் இங்ஙனம் எவ்வளவுதான் எதிரியாயிருந்தாலும், அவர்களின் தேவை கருதி, வஞ்சனையின்றி உதவிய உயர்ந்த மனோபாவம் மக்களிடையே பரவுதல் பண்பாட்டிற்கு உகந்ததாகும்..

நல்லன கற்று நாளும் தெளிக :

இதுபோன்றே, நல்ல கருத்துக்கள் எங்கிருந்தாலும் அதனைத் தேடிக்கற்றுத் தெளிந்து, அதன்படி நடந்து, மாணாக்கர்கள் எனும் சொல்லுக்குப் பொருத்தமாக மாண்பு உடையவர்களாகத் தேர்ந்து வெளியேறினால் நாடும் வீடும் நலம் பெறும் என்பதில் ஐயமில்லை.

31
தாயெனப் போற்றும் தகவுடைச் சான்றோர்*

"தாயர் மகவருத்தம் சற்றும் தரியார்கள்
ஆயவினைக் கீடா அமைத்தாலும்—காயம்
பரிக்கும் துயரமெல்லாம் பார்க்கவுனக்கு என்றும்
தரிக்குமோ சொக்கநா தா"

— குருஞானசம்பந்தர்

[திருவிளையாடற்புராணம், மணிவாசகர் அருள் வரலாற்றில் சிலர் எழுப்பும் ஐயங்களுக்கு அரிய விடை பகர்ந்து தொடங்கும் குருமணிகள். இறைவனின் கருணைத் திறத்தைத் தாயின் செயல்களோடு, உலகியல் கண்ணோட்டத்தில் ஒப்பிட்டுக்காட்டி, ஆண்டவனின் அருட்செயல்கள் யாவும், உயிர்களின் நன்மைக்கே என்பதனை அழகுற விளக்கியுள்ளார்கள்.]

ஐயங்கள் சில :

இன்று ஆவணிமூலத்திருநாள், மதுரைச் சொக்கநாதப் பெருமான் மாணிக்கவாசகருக்காக நரிகளைக் குதிரைகளாக்கிக் கொண்டுவந்தருளிய திருநாள். இறைவன் அடியார்களுக்காக நிகழ்த்திய அற்புதத்திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று. மணிவாசகர் வரலாற்றில் அவர்பால் வந்தடைந்த இன்னல்கள் பல. அவை, குதிரை வாங்குவதற்காகக் கொண்டுசென்ற பொருளை இறைபணியில் செலவிட்டமை பற்றி எழுந்த அரசனின் ஆணையால் விளைந்தவை. அவை, சிறையிறுத்தல்,

* 21—8—80 அன்று தருமையாதீனத்தில் நடைபெற்ற ஆவணி மூலப்பெருவிழாவில் வழங்கியருளியது.

சுடுமணலில் நிறுத்தல் முதலியனவாம். எனினும் ஈசன் எந்தை இணையடி நீழலிலே நின்ற அவரை அவ்வின்னல்கள் என்ன செய்யக்கூடும்? ஆனால் இன்று பலர், அடியவர் சிறையகப் படவும் சுடுமணலில் நிற்கவும் ஆண்டவன் பார்த்துக்கொண்டு வாளா இருக்கலாமா? என்றும், ஆலயப் பணிக்காக அரசாங்கப் பணத்தைச் செலவிட்ட மணிவாசகருக்கு இவ்வின்னல்கள் வர நியாயம் இருக்கிறதா? என்றும் இவ்வரலாற்றில் ஐயங்களை எழுப்புகின்றனர். ஆண்டவன் ஒரு செயல் செய்தாலும், வாளா இருந்தாலும் அதற்குள் அடங்கியிருக்கும் உள்குறிப்பை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் புலனாகும்.

அவரவர் வினைவழி அவரவர் அனுபவம் :

நமக்கு வரும் நன்மைக்கும் தீமைக்கும் நாம்தான் காரணம் என்று புறநானூறு கூறுகிறது. ''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' என்பது அத்தொடர். ''அவரவர் வினைவழி அவரவர் வந்தனர், அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்'' என்பது ஆதீனக் குரு முதல்வரின் அருள்வாக்கு. ஆதலின் அனுபவிக்க வேண்டிய வினை இருப்பின் அவ்வினை ஆண்டவன் அருள் வழியே அவர்களை வந்து பற்றவே செய்யும். அங்ஙனம் பற்றுமாறு இறைவனின் கருணையுள்ளம் செயற்படுத்தலாமா? எனின், அது தாயின் பரிவு போன்றது என்பதனைப் புரிந்து கொள்ளல் தக்கதாகும். இக்கருத்தினை விளக்கமாக இங்கே சிந்திப்போம்.

தாயெனப் போற்றும் தகவுடைச் சான்றோர் :

ஆண்டவனை மாணிக்கவாசகரும் பிறரும் பல இடங்களிலும் தாயாக வைத்துப் பாடியுள்ளனர். ''தாயும் நீயே தந்தை நீயே'' என்பது ஞானசம்பந்தர் வாக்கு. ''தாயிற்சிறந்த தயாவான தத்துவனே'' என்றும், ''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே'' என்றும், ''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து'' என்றும் மாணிக்கவாசகர் இறைவனைத் தாயாகப் பாடியருளினர். அப்பர் சுவாமிகளும் ''அப்பன் நீ அம்மை நீ'' என்றும் ''தந்தையும் தாயுமாகி'' என்றும் அருளிச்செய்துள்ளார்.

துன்புறுத்தும் செயலில் அன்பிருக்கும் நிலை :

ஒருதாய் தன் பிள்ளைகள் தவறுகளைச் செய்யும்பொழுதும் நோயுற்றபொழுதும் அவற்றிற்குரிய தீர்வுகளைச் செய்யத் தவற மாட்டாள், தன் பிள்ளைகள் பிறர் பார்த்துக் குற்றங்கள்

சொல்லாத வகையில் நல்லவர்களாக வாழவேண்டும் என்று தான் ஆசைப்படுவாள். அதற்காக அந்தப் பிள்ளைகளிடத்துத் தவறுகண்டபோது அடித்துத் திருத்துவாள். இதனை வெளிப் படையாகப் பார்க்கும் பிறருக்கு இச்செயல் மிகவும் கருணை யற்ற செயலாகவே தோன்றும். ஆனால் அந்தத்தாயின் மனம் எந்த நோக்கத்தோடு இதனைச் செய்கிறது? என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். இக்கருத்தைத்தான் சிவஞான சித்தியாரும்,

"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொலாற்றின்
வந்திடாவிடின், உறுக்கி வளாரினால் அடித்துத்திய
பந்தமும் இடுவர்; எல்லாம் பாத்திடின் பரிவேயாகும்;
இந்தநீர் முறைமையன்றோ ஈசனார் முனிவும்என்றும்"

என்று கூறுகிறது. இதேபோன்று தன் பிள்ளைகளுக்கு ஏதேனும் கட்டியோ சிரங்கோ வந்திடின் பார்த்துக்கொண்டு சும்மா இருந்துவிடமாட்டாள். அந்தக்குழந்தை மணற்பகுதியில் விளையாடுகிறபோதும் பிறநேரங்களிலும் பன்முறையும் 'இந்த மணலில் விளையாடாதே" "அந்தத் தின்பண்டங்களைத் தின்னாதே" என்று எச்சரித்திருந்தும் கேளாத அக்குழந்தை இப்பொழுது கட்டியும் சிரங்கும் வந்து துன்புறும்பொழுது. துன்புறட்டும் என்று விட்டுவிடமாட்டாள். அதனைத் தூக்கிச் சென்று மருத்துவரிடம் காண்பித்து வாளால் அறுத்து மருந்திட்டுக் குணப்படுத்த முயற்சி செய்வாள். அங்ஙனம் செய்யும்பொழுது அக்குழந்தை படுகிற வேதனையைப்பார்க்க அவளால் சகித்துக்கொள்ளமுடியாது. எனினும் தற்காலிகமான இத்துன்பத்தினால் நிரந்தரமான இன்பம் கிடைக்குமே என்று எண்ணி ஆறுதல் கொள்கிறாள். இது உலகியலில் காணும் நிலை. அதுபோலவே ஆண்டவனும் உயிர்களாகிய குழந்தைகள் படும் துன்பங்கள் அவற்றின் ஆன்ம வளர்ச்சிக்குத் தேவை எனக்கருதி வினைக்கேற்பத் துன்பங்களைத் தருகிறான். துன்பங்கள் தருவ தனாலேயே ஒருவர்மீது வெறுப்புத் கொள்ளுதல் கூடாது. சிரிக்கச் சிரிக்கப் பழகுபவர்களைவிட அழ அழச் சொல்லு பவர்கள் எவ்வளவோ மேலானவர்கள் என்று உலகியலிலும் கூறுவதைக் காணலாம்.

சேயின் வேதனையைத் தாயும் தாங்குவாளா?

ஆதினக் குருமுதல்வரும், ஆண்டவனைத் தாயின் நிலையில் வைத்து ஒரு பாடலை அருளிச்செய்கிறார். இறைவா! உயிர்கள்

படும் துன்பங்கள் அவற்றின் வினைக்கு ஈடாகத்தான் வருகின்றன என்றாலும், அவ்வுயிர் துன்புறும்பொழுது, தாயின் கருணையுள்ளம்கொண்ட உனக்குத்தாங்கிக்கொள்ள இயலுமா? என்று கேள்வி நிலையில் வைத்து ஒரு பாடல் அருளிச்செய்கிறார். அப்பாடல் தான் தொடக்கத்தில் சிந்திக்கப்பெற்றது.

இங்கே இன்னொரு கேள்வியும் எழுகின்றது அங்ஙனம் வினைவழியே உயிர்கள் துன்பத்தை அனுபவித்துத்தான் தீர வேண்டும் எனின், ஆண்டவனின் அருள்துணை எதற்கு? என்ற கேள்விக்கும் விடை சொல்லியாக வேண்டும். குழந்தை துன்புறும்பொழுது, தன் தாய் அருகிலிருக்கின்றாள் என்ற உணர்வினால் அதன் உடல் வலியைத்தாங்கிக்கொள்ளும் மன வலிமையை அக்குழந்தை பெறுதல் போலவே, துன்பங்கள் வந்தடைந்தபொழுது ஆண்டவனின் அருட்கவசம் தங்களைக் காப்பாற்றும் என்னும் பக்தியுணர்வுடையவர்கள் அத்துன்பங் களைத்தாங்கும் சக்தியையும் ஆறுதலையும் பெற்று இன்புறு கிறார்கள். மேலும் நாம் செய்த வினைகளுக்கு ஈடாகத்தான் இறைவன் நமக்குத் துன்பத்தை அருளித் திருத்துகிறான் என்ற உண்மையை உணர்ந்தவர்களுக்குத் துன்பம் துன்பமாகத் தோன்றாது. மாறாக இன்பமாகவே தோன்றும். "பிணி அறியோம், எந்நாளும் இன்பமே; துன்பமில்லை" என்ற அப்பர் வாக்கு இதனை நன்குதெளிவிக்கிறது. எனவே இறை செயல், முறை என்பதை உணரலாம்.

வினை என்பதற்குச் செயல் என்பது பொருளாகும். ஆதலின் ஒருவர்செய்த செயல்களுக்கேற்ப ஆண்டவன் இன்பத் துன்பங் களைக் கூட்டு வித்தருளுகின்றான் என்று உணர்ந்துகொண்டு இறைவனை எந்நேரமும் எந்நிலையிலும் வணங்கி இன்புறு தலே செய்யத்தக்கதாகும்.

ஆண்டவனின் அருட்செயல்கள் அனைத்தும் நன்மைக்கே !

இங்ஙனம் சிந்தித்த பல்வேறு கருத்துக்களினால் மணிவாச கரை அடைந்த இன்னல்கள் அவரின்வினைவழி அருளப்பட்டன எனினும், இறைவன் தாயின் உள்ளார்ந்தபரிவு நிலையிலிருந்து அத்துன்பங்களைத்தாக்கிக்கொண்டு அவரை இன்பநிலையிலேயே

இருக்கச்செய்தான் என்றும், அது அவன்கருணையையே காட்டு இற்று என்றும் உணர்தல் தக்கதாகும். ஆண்டவன் நமக்குத் துன்பத்தைத் தரமாட்டான்; தருவானேயானால் அது நம் நன்மைக்குத்தான் என்று ஏற்று வாழ்வதும், அதன்வழி உய்தி பெறுவதுமே இன்றைய வாழ்வின் சிந்தனையாகக் கொள்ள வேண்டும்.

பாராட்டுப் பெறுகின்ற பண்புடையார் :

சொக்கநாதப்பெருமானை ஆன்மார்த்த மூர்த்தியாகக் கொண்டு பன்னெடுங்காலமாகச் சிவநெறிப்பரிபாலனமும் செந்தமிழ்ப்பரிபாலனமும் செய்துவரும் தருமை ஆதீனம், அப்பெருமானுக்குகந்த திருநாளாகிய இந்த ஆவணிமூலத் திருநாளை ஆண்டுதோறும் மிகச்சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. இந்நன்னாளில் கயிலைக்குருமணி அவர்கள் தத்துவம் விஞ்ஞானம், பொருளாதாரம், மொழியியல் ஏதேனும் ஒன்றில், புலமை வாய்ந்த ஒருவரைப் பாராட்டிப் பட்டம் கொடுப்பது என்பதனைக் கடந்தபல ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வந்தமையையொட்டி இவ்வாண்டும் திருச்சியில் வாழ்பவரும், நாடறிந்த நல்லவருமான திரு கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்களைப் பாராட்டிச் சொக்கநாதப்பெருமான் சந்நிதியில் ஆசிக்கவசமாகப் பொன்னாடை போர்த்திச் 'செந்தமிழ்க் காவலர்' எனும் பட்டம் வழங்கப்பெற்றது. இவரின் தொழில் வணிகம் எனினும் சைவமும் தமிழும் தழைக்கச் சுமார் அறுபது ஆண்டுகளாக இடையறாது பாடுபட்டுவருபவர். இவருக்கு 'மூத்தமிழ்க் காவலர்' எனும் பட்டம் முன்னமேயே இருக்கிறது. செந்தமிழுக்கு இரண்டு சிறப்புகள் உள்ளன. ஒன்று, அகம், புறம் எனும் பகுப்பு; பிறிதொன்று இயல், இசை, நாடகம் எனும் பிரிவுகள். இயல், இசை, நாடகம் எனும் மூன்றையும் அமைத்து முத்தமிழ்க்காவலர் எனும் பட்டம் முன்னரே அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவற்றினையும் அகம், புறம் எனும் இரண்டையும் சேர்த்துத் தொகுப்பாக முழுமையும் தழுவுவதாகச் 'செந்தமிழ்க்காவலர்' எனும் பட்டம் இன்று அளிக்கப்பெற்றது.

தமிழை வளர்க்கும் தகவுடையார் :

முன்பெல்லாம் மன்னர்கள் தமிழ்ச்சங்கம் வைத்துத் தமிழ் மொழியை வளர்த்து வந்தனர். இந்த நூற்றாண்டில் இவர்

திருச்சியில் தமிழ்ச்சங்கம் அமைத்துத் தமிழ்ப்பணி செய்து வருகிறார். முன்பு சென்னையில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டில், மிகுந்த பொறுப்பில் இருந்து செயலாற்றிப் பலரின் பாராட்டுக்களைப்பெற்றவர். 'தமிழகப் புலவர் குழு' எனும் அமைப்பு ஒன்றைவைத்து நாடு முழுவதும் சென்று நல்ல பணியாற்றி வருபவர். மேலும் வாலையானந்த அடிகளிடம் சமய விசேட நிர்வாண தீட்சைகள் பெற்று, சமயத் தொண்டும் செய்துவருபவர். இப்படிப் பல பணிகளை நாடெங்கிலும் செய்துவரும் திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து மக்களுக்கும் சமயத்திற்கும் மொழிக்கும் தொண்டு செய்வாராக!

அமைதியைக் காண அமைப்போம் பணி மன்றம் :

இன்று நாடு பல்துறைகளிலும் முன்னேறியிருந்தாலும் மக்களின் மனத்தில் அமைதியும் மகிழ்வும் இல்லாமல் துன்புறுகின்ற நிலையினை அன்றாடம் செய்தித்தாள்கள் மூலமாகவும் பிறவற்றாலும் அறிகிறோம். இதற்கு அடிப்படைக்காரணம் சமய நம்பிக்கையும், தெளிவும், நடைமுறையும் வரவரக் குறைந்து கொண்டு வருவதும், மாறாகப் போலி நாகரிகமும் புரட்சி மனப்பான்மையும் வளர்ந்து கொண்டு வருவதும்தான் என்பதனை அனைவரும் இப்போது உணரத்தலைப்பட்டுள்ளனர்.இதற்குள்ள அடிப்படை நிலையினைச் சிந்தித்துப் பார்த்தால் தமிழகத்தில் ஆங்காங்கே சமயப்பணிசெய்யும் மன்றங்கள் சிதறிக் கிடப்பதும், பணிகள் பலவும் பொது மக்களின் நல்வாழ்வுக்குச் சென்று சேராமையும்தான் காரணங்கள் என்பதனை உணரலாம்.

இக்கருத்துக்களைப்பற்றி ஆராய்ந்து ஒரு நல்ல முடிவு எடுப்பதற்காக நமது ஆதிபரமாசாரியரின் குருபூஜைத்திருநாளில் தமிழகத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த 49 சமய மன்றங்களைச் சார்ந்தோரும் பிறரும் கலந்துகொண்ட கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது அதன் நிறைவில் அனைத்துச் சமய மன்றங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புகொள்ளவும், பணிகளைச் சிந்தித்துத் தேவையான நிலையில் பொதுமக்களுக்குப் பணிசெய்வதற்கு ஒருபேரமைப்பு வேண்டும் என்றும், அதற்கு நாமே தலைமை ஏற்க வேண்டும்

என்றும் கேட்டுக்கொண்டார்கள். குருமுதல்வரின் வழிநின்று அனைத்துப் பணிகளையும் செய்தலே தக்கதெனக்கருதி ஆதிபரமாசாரியரின் திருப்பெயரையே அப்பேரமைப்புக்குரிய பெயராக அமைத்து **ஸ்ரீ குருஞான சம்பந்தர் பணி மன்றம்** எனும் பேரமைப்பு ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதப் பெருமானுக்குகந்த திருநாளாகிய இந்த ஆவணி மூல நன்னாளில் தொடங்கப்பெறுகிறது. ஆண்டவனே அடியவருக்காக நரியைப்பரியாக்கிக் குதிரைச்சேவகனாகவும், பொன் மேனி நலிய மண்கூடை சுமந்து கூலி ஆளாகவும் வந்தருளிய இந்நாளில் மக்களுக்குப் பணியாற்ற ஒருபேரமைப்புத் தொடங்கப்பெறுவதும் பொருத்தமாகவே உள்ளது. இவ்விழாவில் சமயப் பணியும் சமுதாயப் பணியும் அமைந்திருப்பது சுபசூசகமாகவே தோன்றுகிறது

இப்பேரவை சமயம், சமுதாயம், கல்வி, மருத்துவம் போன்ற பணிகளை ஆங்காங்கே உள்ள கிளைகளின் துணையுடன் செய்துவரும், சமுதாயப்பணியுடன் கூடிய சமயப்பணியைச் செய்வதற்காகத் தொடங்கியுள்ள இப்பேரமைப்புடன் ஆங்காங்கே பணிகள் பலவும் செய்து முன்னமே இயங்கிவரும் மன்றங்கள் இணைந்தும், சமயப்பணியையும் சமுதாயப்பணியையும் செய்யவேண்டும் என்னும் விருப்பமுடையவர்கள் ஆங்காங்கே புதிதாகப் பணிமன்றங்களைத் துவக்கி இப்பேரமைப்புடன் இணைந்தும் அதன்வழி மக்களுக்குத் தொண்டாற்றி மனவளமும் ஆன்மபலமும் கொண்டு வாழ்வார்களாக!



32

வழிபடுவீர்! வளம்பெறுவீர்..

வேட்களத் துள்ளுறை வேதியன் எம்இறை
ஆக்கள் ஏறுவர் ஆனைந்தும் ஆடுவர்
பூக்கள் கொண்டு அவன் பொன்னடி போற்றினால்
காப்பர் நம்மை கறைமிடற் றண்ணலே

— திருநாவுக்கரசர்

[அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம், என்றால், அவர்களை நமக்கு வழங்கிய பெருந் தெய்வம் ஒன்று உண்டு என்பதனை உணர்ந்து. இனங்கண்டு வழிபட்டு உய்திபெற வேண்டும் என்பதனை அரியசமய இலக்கிய மேற்கோள்கள் காட்டிக் குருமணிகள் அருளிச்செய்துள்ளார்கள்.]

தாய் தந்தையரை அருளுபவன் :

'அன்னையும் பிதாவும்முன்னறி தெய்வம்' என்பது ஆன் றோர் வாக்கு. தாய்தந்தையர்களே நம்மைப்பெற்று வளர்த்து ஆளாக்குகின்றனர். நமக்குவேண்டிய நன்மைகளையெல்லாம் செய்கின்றனர். நமது வளர்ச்சியே அவர்கள் வளர்ச்சியாகக் கொண்டு மகிழ்கின்றனர். இத்தகைய தாய் தந்தையர்களை நமக்கு அருள்பவனே கடவுள்.

இறைவனுக்கு நன்றி :

தாய் தந்தையர் இன்றி நாமே நமக்கு உடல் பெற இயலாது. அதுபோல் கடவுள் அருளின்றி, நம் தாய் தந்தையரும் நமக்கு உடல் முதலியவற்றை உதவ முடியாது. எனவேதான் ''ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினாய்'' என அப்பர்பெருமான் அருளிச்செய்தார். மேலும் அவரே 'தாயும் நீயே தந்தை நீயே' என்றும், ''தந்தையும் தாயுமாகி''

* 10—11—80 'ஞானசம்பந்தம் இதழுக்கு வழங்கியருளியது.

என்றும், "அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ ஒப்புடைய மாதிரும் ஒண்பொருளும் நீ" என்றும் ஓதியருளினார். இதுபற்றியே "தெய்வம் மனுஷ ரூபேண" என்று கூறினர் பெரியோர். எனவே கடவுள் கண்ணுக்குத்தெரியாமல் மறைந்து நுட்பமாயிருந்து மனிதர் வாயிலாக நமக்கு உதவிசெய்துவருகிறார்.

'ஈயறியாப் பசுந்தேனே எழுத்தறியா மறைப்பொருளே
காயறியாச் செழுங்கனியே கற்பகத்தின் பசுங்கொழுந்தே
தாயறியாக் கருவிலிருந்து அமுதூட்டும் தாய்த்துணையே
நீயறியாச் செயலுண்டோ நிகிலபரம் பரமூர்த்தி'

என்று திரிகூடராசப்பக் கவிராயரும் குறிப்பிடுகிறார். ஆதலால் நாம் அனைவரும் நமக்கு உதவிசெய்யும் கண்ணுக்குத் தெரியும் தாய் தந்தையர் முதலிய மனிதர்களுக்கும், நமக்கு அவர்களைக் கொண்டு நன்மையைச் செய்துவரும் கண்ணுக்குப் புலனாகாத கடவுளுக்கும் நன்றிசெலுத்த வேண்டியது மிகவும் அவசிய மாகும். எந்த நன்மையை மறந்தாலும் ஒருவர் செய்த நன்மையை மறக்கக்கூடாது. இதனைத்தான் திருவள்ளுவர்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வுஇல்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்று அருளிச்செய்தார்.

வழிபாடாவது யாது?

ஆகவே நாம் தாய் தந்தையர்க்கும், கடவுளுக்கும் எப்படி நன்றி செலுத்துவது? அதுதான் வழிபாடாக மலர்ந்தது. வழிபாடு என்ற சொல்லுக்குப் பொருள் வழியின் பெருமை என்பதாகும். வழிபடுதல் என்றால் பெரியோர்கள் சென்றவழி யிலே பொருந்துதல் என்பது பொருளாகும். பெரியோர் காட்டிய வழியிலே சென்று அதன் பெருமையை உணர்ந்து கொள் என்பது இதன் சிறந்த பொருளாகும், வழிபாடு இறைவனுக்காக அல்ல; நமக்காகத்தான். நாம் அறிவும் பண்பாடும் அமைதியும் வழிபாட்டினால்தான் பெறுகிறோம். "வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்" என்ற மணிவாசகர் மணிமொழியிலும்,

"பொன்னால் பிரயோசனம் பொன்படைத்
தார்க்குண்டு, பொன்படைத்தோன்
தன்னால் பிரயோசனம் பொன்னுக்கு
அங்கேதுண்டு அத்தன்மையைப் போல்
உன்னால் பிரயோசனம் வேணதெல்லாம்
உண்டு உனைப்பணியும்
என்னால் பிரயோசனம் ஏதுண்டு
காளத்தி ஈச்சுவரனே"

என்று பட்டினத்தார் வாக்கிலும் வந்தமைகண்டு உண்மை யுணர்ந்து வழிபடல் வேண்டும்.

ஆழ்கதீயது:

இங்ஙனம் ஆன்ம வளர்ச்சிக்கும் மண்ணில் நல்ல வண்ணம் வாழும்உலகியல் வாழ்விற்கும், விரைவில் தீயதெல்லாம் ஆழ்ந்து அரன்நாமமே சூழ்ந்து, வையகம் துயர் தீர்ந்து நன்மை பெறுவதற்கும் துணைபுரியும் வழிபாட்டின் சிறப்பினை அறிந்து மக்களனைவரும் நாளும் வழிபட்டு, வளம்பலபெற்று நலமுடன் வாழ்வார்களாக

கரவின்றி நன்மாமலர் கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்
சிரமென்றிய செஞ்சடையான் வாழ்
வரமா மயிலாடுதுறையே

அஞ்சொண் புலனும் அவைசெற்ற
மஞ்சன் மயிலாடுதுறையை
நெஞ்சொன்றி நினைந்தெழுவார்மேல்
துஞ்சும் பிணியாயினதானே.

அவ்வதிசை யாரும் அடியாரும்உள ராகஅருள் செய்து
அவர்கள்மேல்
எவ்வமறவைகலும் இரங்கிஎரி யாடும்எமது ஈசனிடமாம்
கவ்வையொடு காவிரி கலந்துவரு தென்கரை நிரந்து கமழ்பூ
மவ்வலொடு மாதவி மயங்கிமணம் நாறு மயிலாடுதுறையே.

— திருஞானசம்பந்தர்

நிலைமை சொல்லு நெஞ்சேதவம் என்செய்தாய்
கலைகள் ஆயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையன்நம்
தலையின் மேலும் மனத்துளும் தங்கவே.

— திருநாவுக்கரசர்

33

மக்கட் பணியே மகேசன் பணி*

"குலங்கொடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை இடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்டு
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையின் னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற்றானை
நானடியேன் தினைக்கப்பெற் றுய்ந்த வாறே"

—திருநாவுக்கரசர்

[சமய-சமூக நல்லறப் பணிகளை நாடெங்கும் முனைப்போடு இயற்றத் தருமையைத் தலைமை யகமாகக் கொண்டு ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றத்தைத் தோற்றுவிக்கத் திருவுளம்கொண்ட குருமணிகள், 'மக்கட்பணியே மகேசன் பணி' என்ற தொடரின் நுண்பொருளை இனிது விளக்கி, ஆலயங்களையும் சமய நிலையங்களை யும் பேணிக்காக்க வேண்டுவதன் இன்றியமையா மையையும் வற்புறுத்தி அருளிச்செய்தது.]

பாடல் உணர்த்தும் பணிமன்றப் பணி :

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் கிளை இன்று மாயூரம் நகரில் தொடங்கப்பெறுகிறது. இக்கிளையின் சார்பில் வாரவழிபாடு, பாலர்பள்ளி, இலவச மருத்துவமனை ஆகிய மூன்றையும் இன்று மாயூரநாதரின் சந்நிதியில் தொடங்கி

18—10—80 அன்று ஸ்ரீகுருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் சார்பில் மயிலாடுதுறையில் தொடங்கப்பெற்ற வாரவழி பாடு, பாலர்பள்ளி, இலவச மருத்துவமனை ஆகிய மூன்றையும் தொடங்கிவைத்து வழங்கியருளியது.

வைக்கின்றோம். மாயூரநாதரைத் தரிசிக்கின்ற போது ''கரவின்றி நன்மா மலர் கொண்டு .....'' என்று தொடங்கும் மயிலாடுதுறைப் பதிகத்தினை ஓதுவார் ஓதினார். நாம் மேற் கொள்ளும் பணிகளை மாயூரநாதர் ஆசீர்வதிப்பதுபோல அப்பாடல்களில் பணிமன்றம் செய்யும் இம்மூன்று பணிகளும் இடம் பெற்றிருக்கின்றன. அதனை எண்ணுகிறபோது மாயூர நாதரின் சந்நிதியில் தொடங்கப்பெறும் இப்பணிமன்றத்தின் செயல்களுக்கு அப்பெருமானின் ஆசீர்வாதம் நிரம்ப இருக்கின்றது என்பதைக் குறிப்பால் உணரமுடிகின்றது.

மயிலாடுதுறை திருப்பதிகம்:

பணிமன்றம் நாடுதழுவிய ஒருபேரியக்கமாக வளர்ந்து சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் பணி செய்வது என்பதைக் குறிக்கோளாக உடையது. அந்நிலையில் சமயப்பணியாக வார வழிபாடும், சமுதாயப் பணிகளாகப் பாலர்பள்ளியும், இலவச மருத்துவமனையும் இன்று இங்குத் தொடங்கப் பெறுகின்றன.

''கரவின்றி நன்மா மலர் கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்''

என்று இப்பதிகத்தின் முதல் பாடல் வரிகள் அமைந்து உள்ளமையால் முதற்கண் செய்யத்தக்கதாகிய வழிபாட்டு நெறி முறையினை இவ்வரிகள் உணர்த்துவனவாகக் கொள்ளலாம். காலை, மாலை என்றில்லாமல் எப்பொழுதும் சிவசிந்தனையில் இருத்தலே வழிபாடு என்பதன் சிறந்த பொருளாகும்.

அடுத்து மூன்றாவது பாடலில், ''ஊனத்திருள் நீங்கிட வேண்டில் ஞானப்பொருள் கொண்டடி பேணும்'' எனும் வரிகளில் அஞ்ஞானம் நீங்கவேண்டில் ஞானப் பொருளைத் துணையாகக் கொண்டு அடிபேணுவது அவசியம் எனும் பொருள் அமைந்துள்ளது. இதனால் இரண்டாவதாகிய கல்விப் பணியின் முக்கியத்துவம் புலனாகின்றது. ஐந்தாவது பாடல்,

தணியார் மதிசெஞ் சடையான்தன்
அணியார்ந் தவருக் கருளென்றும்
பிணியாயின தீர்த்தருள் செய்யும்
மணியான் மயிலா டுதுறையே

என்பதாகும். இப்பாடலில், ''பிணியாயின தீர்த்தருள் செய்யும் மணியான்'' என்று இறைவனைப் பிணிதீர்த்தருளும் பெம்மான்

என்று சுட்டியுள்ளதால், மூன்றாவதாகிய மருத்துவப்பணியின் குறிப்பும் அமைந்துள்ளது. எனவே இன்று தொடங்கப்பெறும் இம்மூன்று பணிகளுக்கும் இறையருள் துணைசெய்யும் என்ற நம்பிக்கையுடன் இம்முப்பணிகளையும் மகிழ்வுடன் தொடங்குவோமாக.

மக்கட்பணியே மகேசன்பணி:

இங்ஙனம் செய்யப்பெறும் சமயப்பணியும் சமுதாயப் பணியும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து பிரிக்க முடியாமல் இருக்கின்றன. இதனைப் பெரும்பாலோர் புரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. இன்று பலரும் எடுத்தாளும் ஒரு தொடர் 'மக்கட்பணியே மகேசன் பணி' என்பதாகும். அதற்கு அவர்கள் கொள்ளும் பொருள், சமுதாயத்தில் வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் அனைவ இல்லாத பொதுமக்களுக்குப் பணி செய்தால் போதும்; அதுவே மகேசனுக்குச் செய்யும் பணியாகும் என்று கூறுகின்றார்கள். மக்களுக்குச் செய்யும் பணியே மகேசன் பணி என்று நான்காம் வேற்றுமையுருபை விரித்துப் பொருள் செய்தால்தான் அவர்கள் சொல்லும் பொருள் வரும். இயல்பாக, முதல் வேற்றுமையிலேயே வைத்துச் சொல்லுக்குப் பொருள் செய்தால் மக்கள் செய்யவேண்டிய பணியே மகேசன் பணிதான் என்ற பொருளே வரும். மீண்டும், இத்தொடரில் உள்ள சொற்களை முன்னும் பின்னுமாக மாற்றிச் சிந்தித்தால் மகேசன் பணி மக்கள் பணியேதான் என்ற பொருளும்வரும் இத்தொடரில் இருபொருளும், அமைந்து உள்ளமை சிந்திப்பார்க்குச் சிறந்ததோர் விருந்தாம். முன் சொன்ன பொருளில் ஆறுமுகநாவலர், "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வழிபட்டு முத்தி இன்பம் பெறுதற் பொருட்டேயாம்" என்று வேத ஆகமத் திருமுறைகளின் துணைக்கொண்டு அறிவுறுத்தினார் 'எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனிதப்பிறவியும் வேண்டுவதே!' என அப்பர் அறிவிப்பதும் இக்கருத்துப் பற்றியதேயாம்.

இருவருக்கும் கடமை உண்டு:

உலகம் முழுவதும் படைத்துக் காத்து அழித்து 'மறைத்து அருளுகின்ற ஐந்தொழில்களைச் செய்தலே ஆண்டவன் மக்கட்குச் செய்யும் பணியாகத் திகழ்கிறது. மகேசன் பணி ஐந்தொழில்களைச் செய்தலே எனக் கொள்ளலாம். அது மட்டுமின்றி, ஆண்டவன் கண்ணுக்குப் புலனாகாமல் இருந்து

மக்களுக்கு எல்லா வசதிகளையும். அல்லும் பகலும் அனவரதமும் செய்து கொண்டே வருகின்றான். இந்தக்கருத்தும் அந்தத் தொடரிலேயே அமைந்துள்ளது. எனவே மக்கள் மகேசனுக்குப் பணி செய்வதும், மகேசன் மக்கட்குப் பணி செய்வதும் இத்தொடரால் குறிக்கப்பெறுகின்றன உலகியலில் முதலாளிக்கும் ஒரு பணி உண்டு. ஒரு கடமை . உண்டு. அதே போலத் தொழிலாளிக்கும் ஒரு பணி உண்டு; ஒரு கடமை உண்டு. முதலாளியின் கடமை தன்னைச் சார்ந்து வாழும் தொழிலாளிக்குக் குறைகள் வராமல் பார்த்துக் கொள்வதாகும், தொழிலாளியின் கடமை தன்னைக் காப்பாற்றும் முதலாளிக்கு வஞ்சனையில்லாமலும் தூய அன்போடு பணிசெய்து வருதலாகும். இருபாலரும் தத்தம் கடமையினைச் சரிவரச் செய்தால் ஒருவரது கடமை மற்றொருவருக்கு உரிமை ஆகிவிடுகிறது இந்த நிலையை வைத்து அப்பரடிகள்,

''தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே''

என்று அருளிச் செய்கின்றார்.

நாட்டைக் காக்கும் நல்லறக் கோயில்கள்:

நம்முடைய சமயத்தில் சமுதாயப் பணிகள் பலவகையிலும் கலந்திருக்கின்றன. திருக்கோயில்களை எடுத்துக்கொள்வோம், திருக்கோயில் நூற்றுக்கணக்கான பணியாளர்களுக்கு வாழ்வளித்து வருகின்றது. இதனால் கோயில் சமுதாயத்திற்குப் பயன்படுகிறது எனலாம். இது உலகியல்நிலை. அருளியல் நிலையில் கோயில்கள் தொட்ட தொட்ட இடமெல்லாம் சமுதாய முன்னேற்றமே குறிக்கோளாகக் கொண்டு இயங்கிவருகின்றன என்பதைச் சிந்தித்துப் பாத்தால் நன்கு புலனாகும். இசைக்கலை, சிற்பக்கலை, நாட்டியக்கலை, ஓவியக்கலை போன்ற நாட்டின் பண்டைய கலைகளின் வாழ்விடமாகவும் வளரிடமாகவும் திருக்கோயில்கள் அமைந்துள்ளன. திருக்கோயிலில் ஆறு கால பூசைகள் நடைபெறுகின்றன என்றால் அவை ஆண்டவனுக்காக அல்ல: அவனியில் இருக்கும் அத்துணை உயிர்களின் வாழ்க்கைக்காகவே என்பதை உணர்தல் தகும்.

ஆலையைப்போல் ஆலயம்:

உதாரணமாக ஒரு நூற்பாலையை எடுத்துக்கொண்டால் அதில் ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் பணியாற்றுகின்றார்கள். அவ்வாலையில் பணிசெய்வதால் அத்தொழிலாளிகளின் வாழ்வும் வளம்பெறுகின்றது; அதேசமயம் நாட்டு

மக்களுக்கு நல்லாடைகள் பெற வழியும் பிறக்கின்றது. இதைப் போலவே திருக்கோயில்களும் அங்குப் பணிசெய்யும் மக்களுக்கு வாழ்வளிப்பது மட்டுமின்றி நாட்டிலே வாழும்மக்கட்குப் பயன்படுவதைப் புரிந்துகொள்ளலாம். நூற்பாலையிலிருந்து கிடைக்கும் பலன்கள் கண்ணுக்குத் தெரிவதுபோல, திருக் கோயில்களின் பயன்கள் அங்ஙனம் கண்களுக்குப் புலப்படாது; என்றாலும் அவை கற்றோரின் கருத்துக்குப் புலனாகும் என்பது வெளிப்படை, ஆலைத்தொழிலாளிகள் பணிமூடக்கம் செய்தால் பொருள் உற்பத்தி குறைந்து நாடு கேடுறுகிறது. தொழிலாளி களும் துன்புறுகின்றனர். அதேபோல் ஆலயத்தில் பூசை முறைகள் சரியாக நடைபெறாவிட்டால் நாட்டில் பஞ்சம் பட்டினி தாண்டவமாடும். இக்கருத்துப்பற்றியே திருமூலரும்-

> "முன்னவனார் கோயில் பூசைகள் மூட்டிடின்
> மன்னவர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
> கன்னம் களவு மிகுத்திடும் காசினி
> என்னரு நந்தி எடுத்துரைத் தானே"

என அருளிச்செய்துள்ளார்.

திருக்கோயில்களில் நடைபெறும் பூஜை, தோத்திரம், தியானம், ஜபம், போன்றவற்றால் நாடுமுழுமைக்கும் நன்மை விளைவதும், தாவரம் முதல் தேவர்கள் வரை எல்லாத் தரப்பிலும் வளம் சேர்வதும், ஆன்றோர்களின் நெஞ்சுக்குப் புலனுகும் உண்மைகளாகும். எனவே அனைத்துயிர்களும் வாழ வேண்டும் என்ற பெருநோக்கில் தான் நமது முன்னோர்கள் பக்தியுணர்வோடு அன்றாடம் வழிபாடு நிகழும் திருக்கோயில் களைப் போற்றிப் பாதுகாத்து வந்துள்ளனர். ஆகவே எந்தச் செயலைச் செய்தாலும் இறைவழிபாட்டுடன் தொடங்குவது நமது முன்னோரின் வழக்கமாக இருந்துவருகிறது. அவ்வழக் கத்தில்தான் இன்று இறைவழிபாடும், பாலர்பள்ளியும், இலவச மருத்துவமனையும் மாயூரநாதரின் மாலை வழிபாட்டுடன் தொடங்கப் பெறுகின்றன.

ஐந்தொழிலில் அமைந்த அற்புத உண்மை :

இறைவனை நாம் வழிபடுவதும் இறைவன் ஐந்தொழில் களை உயிர்களுக்காகச் செய்வதும் எந்த நோக்கத்தில் அமைந் துள்ளன என்பது சிந்தித்தற்குரியது. இறைவனை வழிபடுவது ஏன்? என்றால் நமது நலத்திற்காகத்தான் என்று நம்மில்

பலருக்கு ஓரளவேனும் தெரிந்திருக்கும். ஆனால் தனக்கொன்றும் தேவையில்லாத இறைவன் ஏன் ஐந்தொழில்களைச் செய்கின்றான் என்பது விடைகாணும் நிலையில் உள்ளது. இறைவன் ஐந்தொழில்களைச்செய்வதில்ஓர் உண்மை பொதிந்திருக்கிறது. எல்லாவிதமான வசதிகளையும் உடைய ஒருவன் வசதியற்றுத் தாழ்ந்த நிலையிலிருக்கும் மக்களுக்கும் ஏனைய உயிர்களுக்கும் பல்லாற்றானும் துணையாகவும் உபகாரியாகவும் இருந்துவர வேண்டுமெனும் கருத்தினை உணர்த்தும் நிலையில் ஆண்டவன், தன்னைவிடத் தாழ்ந்த உயிர்களின் ஈடேற்றம் குறித்துத் தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்து ஐந்தொழில்களைப் பெருங்கருணையுடன் செய்தருளுகின்றார். இக்கருத்தில்தான் அப்பரடிகள்,

> ''சலங் கெடுத்துத் தாயமூல தன்மம் என்னும்
> தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம்
> நலங் கொடுக்கும் நம்பி''

என்று நள்ளாற்றிறைவனைப் பாடியருளுகின்றார்.

ஆண்டவன் பெருங்கருணைத் திறமுடையவன் ஆதலின் 'தாழ்ந்தோர்க்கெல்லாம் நலம் கொடுக்கும் நம்பி' என்றார். பிறருக்கு உதவ வேண்டும் எனும் கருணையே, அதாவது தயை என்னும் அருங்குணமே அறத்திற்கு மூலமாகும்; அதாவது அடிப்படையாகும். ஆதலின் அதனை உடையவன் எனும் பொருளில் ''தயா மூல தன்மம் என்னும் தத்துவத்தின் வழி நின்று'' என்று அருளுகின்றார்.

எனவே, பொருள் நிலையிலும், சமுதாய நிலையிலும் தாழ்ந்திருப்போர்க்கு உதவுதலே உண்மையான அறம் எனும் கருத்தில் அமைந்துள்ள இவ்வரிகளை இப்பணி மன்றத்தின் குறிக்கோளாகக் கொண்டு, பணி மன்றத்தில் பணி புரியும் அன்பர்கள் நலிந்தோரைக் காப்பாற்றும் நல்ல பணியில் ஈடுபடுவார்களாக.

34

பிச்சை எடுக்கவா பிறந்தோம்?*

''போற்றும் தகையன பொல்லா முயலகன் கோபப்புன்மை
ஆற்றும் தகையன ஆறு சமயத் தவரவரைத்
தேற்றும் தகையன தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றும் தகையன இன்னம்ப ரான்றன் இணையடியே''

[உழைத்து உண்ணும் மனமும், இறைவனுக்குப் படைத்து உண்ணும் குணமும் கொண்டு வாழ்வதே வாழ்வு என்பதை வற்புறுத்தி அருளிச்செய்யும் குருமணிகள், இறைவன் எவரையும் கையேந்தி வாழப் படைக்கவில்லை என்பதை உறுதிப்பட உபதேசித்து, காலத்தின் கட்டாயமாகத் தோன்றி வளரும் 'விஸ்வஹிந்து பரிஷத்' எனும் இந்து சமய அமைப்பின் தேவையையும் கடமையையும் நினைவூட்டி நிறைவிக்கிறார்கள்]

நெறி : சமயம் · மதம் :

கடவுள் மற்றும் கடவுளைப்பற்றிய வழிபாட்டுமுறைகளைக் குறிக்க நெறி-சமயம்-மதம் என்ற சொற்கள் இன்று ஆளப்பட்டு வருகின்றன. நெறி என்ற சொல்லுக்கு வழி, பாதை என்பது பொருள் இச்சொல்லே நெடுங்காலமாக வழக்கில் இருந்து வருகிறது. 'வேதநெறி தழைத்தோங்க' என்றும், 'சைவநெறி ஏழுலகும் பாலிக்கும் தன்மையினால்' என்றும் நெறி என்ற சொல் வழக்காற்றில் இருந்து வந்திருப்பதை உணரலாம். இதன்பின் வந்தசொல் சமயம் என்பது. வடமொழியில்

---

* 3—1—81 அன்று விஸ்வஹிந்து பரிஷத்தின் சார்பில் மாயூரம் A.V.C புதிய திருமண மண்டபத்தில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட ஹிந்து மாநாட்டின் தொடக்க நாளன்று வழங்கியருளிய ஆசியுரை.

இச்சொல் நேரம், கட்டுப்பாடு என்ற இரு பொருள்களைக் குறிக்கிறது. தமிழில், பக்குவப்படுத்துதல் என்ற பொருள் தருகிறது. இடைக்காலத்தில் இந்துசமயம், சைவ சமயம் என இச்சொல், நெறி என்ற சொல்வழங்கும் பொருளிலேயே ஆளப் பெற்றது. பிற்காலத்தே 'மதம்' என்றசொல் வழக்கில் வந்தது மதம் என்ற சொல்லுக்குக் கொள்கை - கருத்து - எண்ணம் என்பன பொருள்கள். இச்சொல்லே தற்போது பெருவழக்குப் பெற்று வழங்கப்பட்டு வருகின்றது. நெறி-சமயம்-மதம் என்ற சொற்களுக்கிடையே பெரிய பொருள் வேறுபாடுகள் ஏதும் இல்லை. மனிதனைப் பக்குவப்படுத்தி உயர் நிலைக்குக்கொண்டு செல்லும் நிலைகளையே இவை குறித்துநிற்கின்றன. இவ்வகையில் நமது இந்தியநாட்டு வேதவழிப்பட்ட சமயங்களைக் குறிக்கத் தற்போது இந்துமதம் என்றசொல் வழக்கில் உள்ளது. இந்து மதம் என்ற குறியீடுபற்றி நாம் இங்கே சிறிது சிந்தித்தல் வேண்டத்தக்கதாகும்.

'இந்து' என்ற வழக்காறு:

பாரத நாட்டில் வழங்கிவரும் வேதவழிப்பட்ட சமயங்கள் பலவற்றையும் குறிக்க இந்துமதம் என்ற சொல் வழங்கப்பட்டு வருகிறது. வேதத்திலோ அல்லது தொன்மையான இந்திய இலக்கியங்களிலோ இந்துமதம் என்ற சொல் இல்லை என ஆராய்ச்சி முடிவுகள் தெளிவாக அறிவிக்கின்றன. ஹிந்து என்ற பாரசீகச் சொல்லைக் கிரேக்கர்கள் இந்து எனவழங்கினர். அலெக்சாண்டர் இமயமலைக் கணவாய் வழியே சிந்துநதிக் கரைக்கு வந்தபோது, அப்பகுதியில் வாழ்ந்த மக்களைச் சிந்து ஹிந்து-இந்து என வழங்கினர். மேலை நாட்டாரும் கிரேக்கர் இட்ட இக்குறியீட்டையே மேற்கொண்டு இந் நாட்டு மக்களை இந்துக்கள் என்றும், இவர்கள் சமயத்தை இந்துமதம் என்றும், இவர்கள் நாட்டை இந்தியா என்றும் வழங்கினர். நமது பண்டைய வழக்காற்றின் படி இந்நாட்டைப் பாரதம் பரதக் கண்டம் என்றும், இங்கே வழங்கிய சமயநெறியை வேதவழிப் பட்ட வைதிக நெறி என்றும், வைதிக சைவம் என்றும் வழங்கி வருகிறோம்.

மாநாடு தேவையா?

விஸ்வஹிந்து பரிஷத் போன்ற பேரியக்கமும், இம்மாதிரி மாநாடும் சமயத்திற்குத் தேவையா என்ற கேள்வி உருவாவது

இயற்கை. பசியறிந்து பாலூட்டும் தாயும், தேவையறிந்து குறை தீர்க்கும் அரசும், நீதியறிந்து முறைசெய்யும் ஆட்சியும் உள்ளவரை யாரும் அழுதும் போராடியும் எதனையும் பெற வேண்டியதில்லை. ஆனால் இன்று அந்நிலை இல்லை. பசித்த முகம்பார்த்துப் பாலூட்டும் அன்புதலையன்பு; குழந்தை அழுத பின்னர் அறிந்து பாலூட்டும் அன்பு இடையன்பு; அழுத பின்னரும் பாலூட்டாத அன்பு கடை யன்பு. தலையன்பு இக் காலத்தில் நாட்டிலும் வீட்டிலும் மிகவும் அருகி வருகிறது. எனவேதான் வீட்டிலும் சரி நாட்டிலும் சரி எதனையும் கேட்டுப் பெறவேண்டிய அவசியம் உருவாகிவிட்டது.

ஆலயங்களுக்கும், அறச்சிந்தனையாளர்களுக்கும் பாது காப்பும் வளமும் குறைந்துவரும் இந்நேரத்தில் 'விஸ்வ ஹிந்து பரிஷத்' போன்ற பேரியக்கம் தோன்றி மாநாடுகள் மூலமும், பத்திரிக்கைகள் மூலமும் அரசுக்கு இம்மாதிரியான குறைகளைத் தெரிவிக்க ஆரம்பித்துள்ளது. கிளர்ச்சியில் ஈடுபடுவது-போராடுவது போன்றவை சமய நெறியாளர்களுக்கு ஒவ்வாதவை. ஆகவே அமைதி வழியில் தங்களின் நியாயமான கோரிக்கைகளை எடுத்தியம்பவே இம்மாநாடு இங்குக் கூட்டப் பட்டுள்ளது.

சோழன் பெருமை;

'ஆயிரமானாலும் மாயூரமாகாது' என்பது பழமொழி. இத்தகு சிறப்பு வாய்ந்த மாயூர நகரத்தில் விஸ்வஹிந்து பரிஷத்தின் சார்பில் தஞ்சை மாவட்ட இந்து மாநாடு நடத்துவது பொருத்தமானதே. இம்மாநாட்டில் தஞ்சை மாவட்டத்திலிருந்தும் பிற மாவட்டங்களிலிருந்தும் அன்பர்கள் பலரும் வந்து கலந்து கொள்கின்றார்கள் என்னும் செய்தி மகிழ்ச்சிக்குரியது. தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங் களும், தென்னார்க்காடு மாவட்டத்தின் தென் பகுதியும் முற் காலத்தில் சோழநாடு என்று அழைக்கப்பெற்ற பகுதிகளாகும். சோழநாடு எல்லா வகையாலும் முற்போக்கானது என்று கருதி வந்த காலம் அது. பிறசமயத்தின் ஆதிக்கம் தொண்டை நாடு, நடு நாடுகளாகிய பல்லவ நாட்டிலும், 'பாண்டிய நாட்டிலும் புகுந்து பரவியிருந்தது போலச் சோழநாட்டில் எக் காலத்திலும் பரவியதில்லை. இது வரலாற்றுண்மை அதனால் தான் நம்பியாண்டார் நம்பிகள்,

"மைவைத்த கண்டன் நெறியன்றி
மற்றோர் நெறிகருதாத் தெய்வக்குடிச் சோழன்"

என்று சோழமன்னனைப் பாராட்டுகின்றார்.

ஆனால் இன்று சோழநாட்டில் பக்தியும் கலைவளமும் வளர்ந்து வருகின்றனவா என்றால், எல்லோரும் சிந்தித்துப் பதில் சொல்ல வேண்டியதாகத்தான் உள்ளது. வளர்ந்தவர்கள் சில காலம் தளர்வதும், தளர்ந்தவர்கள் சிலகாலம் வளர்வதும் கால அமைப்பு என்பதற்கேற்ப இங்ஙனம் மாறினவோ என்று எண்ணவேண்டி உள்ளது.

பரிஷத்தின் நோக்கம்:

விஸ்வ ஹிந்து பரிஷத் சமய வேறுபாடும், மொழி வேறுபாடும் கடந்த ஒரு பேரியக்கமாக வளர்ந்துவருகிறது. இந்தியப் பெரு நாட்டில் மொழியாலும் இனத்தாலும் கலாசாரத்தாலும் வேறுபட்ட மக்கள் பலர் இருப்பினும், 'இந்தியன்' என்ற பெயரில் ஒன்றுபட்டு வேற்றுமையில் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். அதே போலச் சைவம் வைணவம் போன்ற பல சமயப் பிரிவுகள் இருப்பினும் 'இந்து' எனும் பெயரில் சமய நம்பிக்கையுடையோர் ஒன்றுபடுவதும், அதன் வழி சமயத்திற்கும் நாட்டுக்கும் நல்லது தேடுவதும் இவ்வியக்கத்தின் நோக்கங்களாக இருப்பதை அறிந்து பாராட்டுகிறோம்.

சமய வேறுபாட்டின் அடிப்படை:

சமயப் பிரிவுகளின் அடிப்படையை நன்றாகப் புரிந்து கொள்ளுதல் தக்கது. சமயப்பிரிவு என்பது மாறுபட்ட கருத்து என்பது பொருள் அல்ல; வேறுபட்டவழி என்பதே அதன் விளக்கமாகும் உதாரணமாகச் சென்னைக்குச் செல்லும் பயணிகளில் சிலர் ஒரு வழியாகவும், வேறு சிலர் மற்றொரு வழியாகவும் செல்லுகின்றார்கள் என்றால் முரண்பட்டவர்கள் என்றா பொருள்? அவரவர்களின் வசதிக்கேற்பவும் தகுதிக் கேற்பவும் செல்லுதலே கருத்து என்பதைப்போல, சமயப்பிரிவு களும் அவரவர்களின் தகுதிக்கேற்பவும் விருப்பத்திற்கேற்பவும் பரந்துபட்டனவாக உள்ளன. காவிரியாறு புறப்படும் இடத்தில் ஒன்றாய் இருந்து ஆங்காங்கேயுள்ள மக்களின் வசதிக்கேற்பப் பற்பல வாய்க்கால்களாகவும், சிறுநதிகளாகவும் பிரிவதும்

பின்னர்க் கடலில் புகும் இடத்தில் ஒன்றாகிச் சேர்வதும் கண் கூடாகத் தெரிவதாகும். அதேபோல் வேதம் எனும் ஒன்றில் இருந்து புறப்பட்ட கடவுள்கொள்கை ஆங்காங்கேயுள்ள மக்களின் கருத்தால் பிரிந்தும் பின்னர்க் கடவுளை அடைதலில் ஒன்றுபட்டும் இருக்கும் நிலையினை புரிந்துகொண்டால் சமயப் பூசல்கள் வர நியாயம் இல்லை. அதனால்தான் மணிவாசகர் 'ஏகன்' என்றும் 'அநேகன்' என்றும், இறைவனை விளக்கி அருளுகிறார். திருமூலரும் இக்கருத்தில்தான் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்றருளுகின்றார் உபநிடதமும் 'ஏகம் சத்விப்ரா பகுதா வதந்தி' என்று கூறுகிறது.

தனி ஒருவன் — யார்?

இங்ஙனம் சமயப் பொது நோக்கில் அமைந்துள்ள இவ்வியக்கம் தன் நோக்கமாக, திருக்கோயில்களின் வருமானம் பெருகவும், இறைவழிபாடும் இறை பணியாளர்களின் வாழ்க்கையும் வளம் பெறவும் உரிய ஆக்க பூர்வமான பணி களைச் செய்துவருவது என்பதைக் கொண்டுள்ளது. ஒரு நாட்டில் திருக்கோயில்களில் நடைபெறும் வழிபாடுகள் தடைப்படுமானால், நல்வளமும் நற்குணமும் குறைந்து நாடு சீரழியும் என்னும் கருத்தைத் திருமூலர்,

> "முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
> மன்னவர்க்குத் தீங்குள வாரிவளம் குன்றும்
> கன்னம் களவு மிகுத்திடும் காசினி
> என்னரு நந்தி எடுத்துரைத் தானே"

என்று அருளிச் செய்கின்றார். இச்சமயத்தில் பாரதியார் பாடியுள்ள பாடலின் வரியொன்று நினைவுக்கு வருகின்றது. அது 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்பதாகும். இவ்வரிக்குப் பலரும் சொல்லும் உரையாவது, தனி மனிதனுக்கு உணவு இல்லை எனில் இவ்வுலகத்தையே அழித்திடுவோம் என்பதாகும். இவ் வுரை பொருத்தம் இல்லை. 'தனி ஒருவன்' என்று பாரதியார் சுட்டியுள்ளது இறைவனையே ஆகும். ஒருவன் எனும் சொல் இறைவனையே குறிக்கும் என்பது முன்னோரின் வழிவழி வந்த கருத்தாகும். 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்னுமிடத்திலும் ஒருவன் எனும் சொல் ஆண்டவனையே

குறித்தல் காணலாம். இறைவன் ஒருவனே தனி ஒருவனாக இருப்பவன் 'ஏகஃ: வஷீ சர்வபூ தாந்தராத்மா' என்று இறைவனை உபநிடதம் ஒருவன் என்றே கூறுவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. எனவே தனி ஒருவனாம் இறைவனுக்கு உணவில்லை எனில், அதாவது நிவேதனம் (ஆறிவித்தல்) செய்து அனுபவியா விடில், இவ்வுலகம் அழிந்துவிடும் எனும் கருத்திலேதான் பாரதியார் கூறினார். அவர் தமது ஆன்மீக உணர்வின் அழுத்தம் காரணமாக அழித்திடுவோம். என்கின்றார். பாரதி ஆன்மீக உணர்வுடையவர் என்பதற்கு, அவர் பாடிய பாடல்கள் பலவும் சான்றாக உள்ளன. 'பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்; பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்; பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்பன போன்ற வரிகளைக் காணலாம்.

பிச்சை எடுக்கவா பிறந்தோம்?

இதேபோன்று திருவள்ளுவர் எழுதிய குறளொன்றுக்கும் இன்று வேறுவிதமாக உரை கூறி வருகின்றனர். 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகு இயற்றியான்' என்னும் குறளின் உண்மை உரை என்ன என்று பார்ப்போம். ஆண்டவன் யாரையும் பிச்சை எடுத்து பிழைக்க விடவில்லை. நீர், நிலம் போன்ற வளங்களைத்தந்தும், அவற்றைப் பயன் படுத்தி உயரக் கை, கால் போன்ற உறுப்புக்களைக் கொடுத்தும் உழைத்துப் பயன்பெற்று மதிப்போடு வாழவே படைத்து உள்ளான். அதை மறந்தும் உதாசீனம் செய்தும், பிச்சை எடுத்துப் பிழைப்பது என்பது படைப்புக்கு நேர்மாறான தொழில் ஆகும் என்னும் பொருளில்தான் வள்ளுவர் விளக்குகிறார். இங்கு 'இரந்தும்' என்ற உம்மையால் இரக்க வேண்டிய நிலைமையில் நம்மை இறைவன் படைக்கவில்லை என்பது தெளிவாகிறது. பிச்சைக்காரர்கள் செய்யும் அச்செயலின் இழிதகைமையின் மேல் வந்த கோபத்தைப் படைத்தல் தொழிலியற்றும் கடவுள் மீது காட்டிக் 'கெடுக உலகியற்றியான்' என்கின்றார் திருவள்ளுவர்.

தனித்தியங்கும் மன்றம் வேண்டும்:

இங்ஙனம் உழைத்து உண்ணும் மனமும், இறைவனுக்குப் படைத்து உண்ணும் குணமும் கொண்டு வாழ்ந்தால் அதுவே வாழ்வு எனப்பெறும்; அத்தகையோர் வாழும் நாடும் நலம்

பெற்றுத் திகழும் எனவே அல்லலின்றி மக்கள் வாழ அரசாங்கம் திருக்கோயில்களையும், அக்கோயில்களை நப்பி வாழும் இறைபணியாளர்களையும் வளத்தோடு வைத்திருக்க வேண்டியது இன்றியமையாதது. அதற்கு இப்பொழுதிருக்கும் நிலையில் அரசாங்கம் செய்யவேண்டியது, 1953க்கு முன் இருந்ததுபோல இப்போதுள்ள இலாகாவை இந்து அறநிலைய பாதுகாப்பு மன்றமாக, தன்னாட்சி உள்ளதாக மாற்றி யமைத்துச் செயல்படுவதேயாம். அது அரசுக்கும் அறநிலையங் களுக்கும் நன்மையைப் பயப்பதாகும். தனித்தியங்கும் தன்னாட்சிபெற்ற பல்கலைக்கழகங்கள் போலவும், அப்பல்கலை கழகங்களிலிருந்தும் தன்னாட்சியுடன் நிகழும் சில கல்லூரி களைப் போலவும் முழு உரிமையுடன் இயங்க வழிசெய்தால் நாடும் சமயமும் நன்மை பெறும். திருக்கோயில்களைச் சார்ந்த எந்தப்பிரச்சனையும் அந்த மன்றத்தின் வழி முறையிடவும், அதன்வழி அரசு குறைதீர்க்கவும் எளிதாகும். இம் மன்றத்தை அரசு மேற்பார்வையிடுதல் வேண்டத்தக்கதே ஆதலின் அரசு இதனைச் சிந்தித்து ஆவனசெய்தல் நல்லது.

மத மாற்றம் நிகழும் காரணம்:

இன்று பல இடங்களிலும், தினத்தாள்களிலும் காணப் பெறும் செய்தி மதமாற்றம் பற்றியது. மதமாற்றம் நடை பெறுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று அறியாமை: பிறிதொன்று வறுமை. இன்று பலரும் வறுமையே இதற்கு முக்கிய காரணம் என்கின்றனர். வறுமையும் ஒரு காரணமாக உள்ளது; அவ்வளவே. நல்ல வசதி படைத்தவர் களும் பல பெண்களை மணம் செய்து கொள்ளுவதற்கு வசதியாகப் பிறமதம் மாறும்நிலை நாட்டில் உள்ளது மத மாறும் மக்கள் இரண்டு தவறுகளைச் செய்கிறார்கள். ஒன்று. இது நாள் வரை இருந்த மதத்திற்குத் துரோகம் செய்வது: பிறி தொன்று சென்று சேரும் மதத்திலும் உண்மையான கொள்கை வழி ஈடுபாடு இல்லாமையால் வெறும் ஆட்கூட்டத்திற்கு மட்டும் பயன்படும் வகையில் இருப்பது. ஆதலின் இவர்கள் எங்கிருந்தாலும் பயனில்லை எனினும் நல்லவர்கள் மதம் மாறினால் அதைத் தவிர்க்க முயற்சி செய்யலாம். மதம் என்ற பெயரால் மாசு ஏற்படுத்துவோரை இனம் கண்டுபிடித்து நீக்கவும் நல்லோரைச் சேர்க்கவும் இதுபோன்ற இயக்கம் பயன்படுதல் நல்லது.

35

பொறிவாயில் ஐந்தவித்தான்*

" பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் "

- திருவள்ளுவர்

[அருட் சிந்தனையோடு, அறச் சிந்தனை களிலும் மக்களைத் திளைக்கச் செய்யவேண்டும் என்ற கருணைத் திறத்தோடு 'பொறிவாயில் ஐந்தவித்தான்' எனத்தொடங்கும் திருக் குறளுக்கு அரிய விளக்கங்களைக் குருமணிகள் அருளிச் செய்துள்ளார்கள். திருக்குறள் பாயிரம் பற்றிய விளக்கமும், கடவுள் வாழ்த்தில் இடம் பெற்றுள்ள குறட்பாக்கள் ஒவ்வொன்றிலும் மும் மூன்று செய்திகள் இடம் பெற்றிருக்கும் திறமும் இச்சிந்தனையுள் நன்கு விளக்கம் பெற்றுள்ளன.]

உலகில் வாழும் எல்லா உயிர்களுள்ளும் மனிதனே சிறந்தவன். மனித உடலமைப்பில் எல்லா உறுப்புக்களும் இன்றி யமையாதன என்றாலும், முகமே பெரிதும் சிறப்புடையது. முகத்தின் துணையின்றி ஒருவரை அடையாளம் காணமுடியாது. அதுபோல் எந்த ஒரு நூலாயினும் அதற்கு முகம்போல் இன்றி யமையாத ஒரு முன்னுரை வேண்டும். இதனையே பாயிரம் என்பர்.

" ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவல் அன்றே "

என்று பாயிரத்தின் சிறப்பை நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் குறித்துள்ளார். நெஞ்சத்து எண்ணங்களை

* திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் ஒலிபரப்பிய குறள் நெறிக்கு 8—9—'80 அன்று " பொறிவாயில் ஐந்தவித்தான் " எனும் குறள் பற்றி வழங்கியருளியது.

முகம் பிரதிபலித்துக் காட்டும் என்பதனை, 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்பார் திருவள்ளுவர். இதுபோல் நூலின் உள்ளீட்டைப் பிரதிபலித்துக் காட்டும் திறம் பாயிரத்திற்கே உண்டு.

வள்ளுவர் தம் நூலின் முன்னுரையாக நான்கு அதிகாரங்களை அமைத்துள்ளார். இந்நான்கு அதிகாரங்களையும் பாயிரம் என முன்னோர் குறித்தனர்.

> "ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும்
> பாயிரத்தி னோடு பகர்ந்தற்பின் — போய்ஒருத்தர்
> வாய்கேட்க நூல்உளதோ மன்னு தமிழ்ப்புலவ
> ராய்க்கேட்க விற்றிருக்க லாம்."

என நத்தத்தனார் என்ற சங்கப்புலவரும் இந்நூற்குப் பாயிரம் இது என்பதனைக் குறித்துள்ளார்.

பாயிரம் என்பது கடவுள் வாழ்த்தும், செயப்படுபொருளும் என இருவகையாக அமையும். அதை ஒட்டியேதான் திருவள்ளுவர் தமது நூலின் முதல் அதிகாரமாகக் கடவுள் வாழ்த்து அமைத்திருக்கின்றார். அதுவே, அவரது கடவுள் கொள்கையை தெளிவிக்கும். கடவுளைப்பற்றிய குறிப்பை இவ்வதிகாரத்தில் மட்டுமின்றி நூலின் பிற இடங்களிலும் காணுகின்றோம். துறவறவியலில் 'துறவு' அதிகாரத்தில் 'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்ற குறளில், 'பற்றற்றான்' எனும் தொடர் கடவுளைத் தவிர வேறு யாரையும் குறித்தற்கில்லை. அரசனை 'இறை' என்றும், 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்' என்றும் வருவன எல்லாம் கடவுளைப் பற்றிய குறிப்புக்களாகும்.

கடவுள் வாழ்த்தைத் திருவள்ளுவர், பிறர்போலப் பெயர் கூறாமல், கடவுளைப் பற்றி மக்கட்குத் தாம் என்ன கூற விரும்பினாரோ அவற்றைக் கூறும் அதிகாரமாகவே அமைத்து உள்ளார். முதற்குறளில் தக்கதோர் உவமையால் கடவுள் உண்டு என்பதை நிறுவினார். அடுத்த குறளில் கடவுளது திருவடிகளை வணங்குதல் கல்வியறிவு உடைய மக்களுக்கு இன்றியமையாக் கடன் என்றார். அதனை அடுத்துக் கடவுளை.

வணங்குபவர் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' எனக் குறித்தருளினார். அடுத்து கடவுளின் திருவடிகளைச் சிந்திப் பவர்கள் எவ்விதத் துன்பங்களாலும் துளங்கார் என்பதை உணர்த்தினார். ஐந்தாவதாக இறைவனை வாழ்த்துவோர்க்கு நல்வினை, தீவினையாகிய இருவினையும் சேரா என வீடுபேறு கிடைத்தலைக் குறிப்பித்தார். அதனை அடுத்துவரும் ஆறாவது திருக்குறளே இன்றைய நம் சிந்தனைக்குரியது.

கடவுள் வாழ்த்தில் ஒவ்வொரு குறளிலும் திருவள்ளுவர் மூன்று செய்திகளைக் குறித்தலைக் காணலாம். ஒன்று கடவுளின் இலக்கணம். இரண்டாவது, கடவுளை நாம் அணுக வேண்டிய, அதாவது, வழிபட வேண்டிய முறை. மூன்றாவது, கடவுளை, வணங்குவதால் உயிர்கள் எய்தும் பயன் என இவை. இவற்றுள் கடவுள் இலக்கணத்தைத் தனியாகக் கூறாமல், கடவுளைக் குறிக்கக் கூறும் பெயரிலேயே அதனை அமைத்து விடுகின்றார் வள்ளுவர். 'ஆதிபகவன்' 'வாலறிவன்' முதலிய வற்றைக் காணலாம். அம்முறையில் இக்குறளிலும் கடவுளைப் 'பொறிவாயில்' என்னும் பெயரால் குறிக்கின்றார். இறைவன் ஐம்பொறிகளை வழியாகக் கொண்டு ஐம்புலன்கள்மேற் செல்கின்ற அவாவை அடக்கினவன் என்பது அதன் பொருள். பொறிகளாவன மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. புலன்களாவன : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. உயிர், மெய், வாய், முதலிய பொறிகள், வழியாகச் சென்று சுவை, ஒளி முதலிய புலன்களைப் பற்றுகின்றன. இதனால் இறைவனுக்கும் ஐம்புல அவா உண்டோ என நாம் நினைத்தல் கூடாது. ''பற்றுக பற்றற்றான் பற்றினை'' என்னும் இடத்தில் இதற்கு உரிய விளக்கத்தை உரைகாரர் பரிமேலழகர் தருகின்றார். எல்லாப் பொருளையும் பற்றிநின்றே பற்றற்று நிற்பவன் என்பதே அதன் பொருள் என்கிறார். எனவே இறைவன் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பினும், அவற்றின் தன்மையைத் தான் அடையாதவனாகத் தாமரை யிலைத் தண்ணீர் போல் இருக்கின்றான் என்பதே அதன் விளக்கம். இங்கும் அத்தகைய விளக்கத்தையே நாம் கொள்ளுதல் வேண்டும்.

இதனால் ஐம்புலப் பொருள்களை இறைவன் அறிபவன் ஆயினும் அனுபவிப்பவன் அல்லன் என்பது விளக்கும்.

"நேரிழையைக் கலந்து நின்றே புலன்கள் ஐந்தும்
வென்றானை"

என அப்பர் பெருமானும்,

"மங்கையோடிருந்தே யோகு செய்வானை"

எனத் திருவிசைப்பா ஆசிரியரும் இதனைக் குறித்தனர்.

அப்படிப்பட்ட இறைவனாலேயே வேத-ஆகமங்களின் வழியாக உலக உயிர்களுக்குப் பொய்யற்ற மெய்யான ஒழுக்கநெறி கூறப்பட்டது. அந்த நெறியில் உயிர்கள் பிழையாது நிற்றல் வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அவ்வாறு ஒழுக்கநெறியில் பிழையாது நின்றவர்களே, என்றும் ஒரு பெற்றியாய் நிலைத்து நிற்கும் இன்ப வாழ்வாகிய வீடுபேற்றினைப் பெறுவர். எனவே, எல்லாப் பொருள்களோடும் கூடியிருந்தும் யாதொன்றையும் அனுபவியாமை இறை இலக்கணம் என்பதை முதலில் உணர்த்துகின்றார். இரண்டாவதாக அவன் வகுத்த ஒழுக்க நெறியில் தவறாது நிற்றலே இறைவனை அடையும் முறைகளுள் மேலானது என்று குறிப்பிடுகின்றார். மூன்றாவதாக இம்மேலான முறையே வீடுபேறாகிய மிகுச் சிறந்த பயனைத் தருமென்று வலியுறுத்துகின்றார்.

36

தனக்குவமை இல்லாதான்

'தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது'

— திருவள்ளுவர்

[உடன்பாட்டு வகையாலும், எதிர்மறை முகத்தாலும் அறன்வலியுறுத்தும் திருவள்ளுவரின் இலக்கிய உத்தியும், மனக்கவலைக்கு உரிய மருந்து இறைவன் திருவருள் ஒன்று மட்டுமே என்ற மெய்மையும், தனக்குவமை இல்லாதான் எனத்தொடங்கும் திருக்குறள் சிந்தனையோடு இணைத்துக் குருமணிகளால் வழங்கப் பெற்றுள்ள திறம் விருந்தாக அமைகிறது.]

''நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய் தந்துரைத்த — நூன்முறையை
வந்திக்க சென்னி; வாய் வாழ்த்துக; நன்னெஞ்சம்.
சிந்திக்க; கேட்க செவி''

தெய்வப்புலமைத் திருவள்ளுவர் தாம் கூறும் ஒவ்வொரு பொருளையும் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வலியுறுத்தி கூறும் இயல்புடையவர். கல்வி கற்றால் வாழ்வில் உயரலாம் என்பது உடன்பாடு. கல்லாவிட்டால் உயரமுடியாது என்று எச்சரிப்பது எதிர்மறை 'கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு ஆகிய நான்கு குறட்பாக்களும்

---

* திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் ஒலிபரப்பிய குறள் நெறிக்கு 9—9—80 அன்று ''தனக்குவமை—இல்லாதான்'' என்னும் குறள் பற்றி வழங்கியருளியது.

இறைவனை வணங்குவதால் உயிர்கள் எய்தும் நன்மைகளைக் குறிக்கின்றன. இதனுள் மூன்றும் குறட்பாவாகிய 'மலர்மிசை ஏகினான்' என்ற பாடலால் இவ்வுலகில் நீடுவாழ்தலையும், ஆறாம் பாடலாகிய 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்பதனால் வீட்டுலகில் நீடுவாழ்தலையும் ஆகிய இன்ப ஆக்கத்தை உடன்பாட்டால் வள்ளுவர் குறிக்கின்றார். இடை நின்ற நான்காம் பாடலாகிய 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்ற குறட்பாவால் 'யாண்டும் இடும்பை இல, என்றும், ஐந்தாம் பாடலால் 'இருள்சேர் இருவினையும் சேரா' எனவும் எதிர்மறை முகத்தான் துன்பநீக்கம் கூறியிருக்கின்றார். இன்று நாம் சிந்திக்க இருக்கின்ற குறளிலும் எதிர்மறையிலேயே ஒரு கருத்தைக் குறிப்பிடுகின்றார்.

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

இங்கு இறைவற்கு, 'தனக்கு உவமை இல்லாதான்' என்ற ஒரு பெயரைத் தருகின்றார். இதிலும் இறைவனது தலையாய ஒருதன்மை விளங்குகின்றது. இங்கு உவமை என்பதற்குப் பொருள் 'ஒப்பு' என்பதேயாகும். இறைவனுக்கு ஒப்பாக இரண்டாவது ஒரு பொருளில்லை என்பதைக் கூறுமுகத்தால் இறைவன் ஒருவனே அன்றிப்பலரில்லை என்பதை இதனால் விளக்குகிறார். இறைவன் ஒருவனே ஆதல்பற்றி அவனை உபநிடதங்கள் 'ஏகன்' எனக்குறிக்கும். தமிழில் இது 'ஒருவன்' என்று சொல்லப்படும். மாணிக்கவாசகர் இறைவனை 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்கிறார்.

எனவே உயிர்கள் அவனது திருவடியை அடைந்து பயனுறும் என்பதைத் 'தாள்சேர்ந்தார்' என்றதனால் குறிக்கின்றார். திருவடி என்பது இறைவனது ஞானமாகிய அறிவையும், கிரியையாகிய செயலையும் குறிக்கும். நிறை ஞானத்தையும், அதனால் விளையும் செயலாற்றலையும் திருவடியைப்பற்றுவதன்மூலம் பெறமுடியும் என்பது குறிப்பு. இவ்விடத்தில் அவர் கூறும் பயன், 'மனக்கவலையை மாற்றிக் கொள்ளுதலேயாகும். மனத்துன்பமே மனக்கவலை எனப்படும் உடலில் வருகின்ற ஊறுகளைத் துன்பம் என்கின்றோம். மனத்தில் வரும் துன்பங்களைக் கவலை எனக்குறிக்கின்றோம். உலகில் மனக்கவலை இல்லாதவரே இல்லை எனலாம்.

கூழுக்கு உப்பில்லை என்பார்க்கும், பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பவர்க்கும் உண்டாகின்ற கவலை ஒன்றே எனப் பழம்பாடல் ஒன்றுகூறும். அப்பாடல்:

" பாலுக்குச் சர்க்கரை யில்லைஎன் பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப் போடஉப் பில்லையென் பார்க்குமுட் குத்தித்தைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லையென் பார்க்கும் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை யில்லையென் பார்க்கும்
விசனமொன்றே "

அதனால், கவலை என்பது அவரவர்கள் தரத்துக்குத் தக்கவாறு இருக்கவே செய்கின்றது. யாவரிடத்தும் உள்ளதாகிய இக்கவலையை நீக்கிக்கொள்ள முயலாதவர் ஒருவரும் இல்லை. கவலையை விரைவில் நீக்கவேண்டும். முற்றிலும் நீக்கிக் கொள்ள வேண்டும் என்று கருதி அதன் பொருட்டு மக்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் பலப்பல; ஆனால் அம்முயற்சிகள் யாவும் அவர்கள் கருதிய பயனைத் தருகின்றனவா என்பது ஐயப்பாடே.

இறைவனுடைய திருவடியைப் பற்றுக் கோடாகக் கொண்டவர்கள் கவலையற்றிருக்கின்றார்கள் என்பதை ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்கள், வானம் தூளங்கினும், மண் கம்பமாகினும் மால்வரையும் தானம் தூளங்கித் தலைதடுமாறினும் தண்கடலும் மீனம்படினும் விரிசுடர் வீழினும் கவலையற்றிருப்பார்கள் எனவரும் அப்பர் திருமொழி போன்றவற்றால் அறியலாம். எல்லாம் இறை செயலே என்று உரைக்கின்ற தெளிவான உணர்வுடையவர்கள் உள்ளத்தைத் துன்பங்கள் வந்து பற்றுதல் இல்லை. அதனால் மனக்கவலையை நீக்கிக் கொள்ளுதற்கு நீங்குவதற்கு இறைவன் திருவடிகளைப் பற்றுவதைத்தவிர வேறுவழி இல்லை, இது பற்றித்தான் திருவள்ளுவர் தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு மனக்கவலை மாற்றலாம்' என உடன் பாட்டில் கூறாமல், தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக் கவலை மாற்றல் அரிது என எதிர்மறையில் வைத்து வலியுறுத்திக் கூறினார். இதனையே நமது ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தரும் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதபெருமானைக் குறிப்பிடும்போது

''மனக்கவலை, நீக்குகின்ற தென்மதுரை நின்மலன்' என்கின்றார்.

''உனக்குப் பணிசெய்ய உன் தன்னை எந்நாளும்
நினைக்க வரமெனக்கு நீதா—மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநா தா''

எனவரும் இப்பாடலில் 'உனக்குப்பணி செய்ய' என்பதால் உடலால் செய்யும் பணியினையும், 'எந்நாளும் நினைக்க என்பதால் மனத்தால் நினைத்தலையும் குறிப்பிட்டருளுகின்றார். 'உனக்குப் பணி செய்ய' என்னும் தொடரில் வாக்கால் துதித்து வழிபாடாற்றும் பணியினையும் இனம்கருதி அடக்கிக் கொண்டு, மனம்வாக்குக்காயம் எனும் மூன்றினாலும் இறைவனுக்குப்பணி செய்வதே மனக்கவலை நீக்க வழியாகும் என்று இப்பாட்டிற்குப் பொருள் காண்பது பொருத்த முடைத்தாகும்.

எனவே, அனைவரும் திருவள்ளுவர் காட்டிய இக்குறள் நெறியில் நின்று இறைவனது திருத்தாள் பற்றி மனக்கவலை நீங்கி மகிழ்வுடன் வாழ்வார்களாக!

37

அறவாழி அந்தணன்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறஆழி நீந்தல் அரிது.

[நாற்பொருளையும், அறவாயிலாகவே விளக்கிக் காட்டும் வள்ளுவர் நெறியை விதந்து, அறவாழி அந்தணன் எனத் தொடங்கும் குறளுக்கு அரிய விளக்கம் அருளும் குருமணிகள், 'அறவாழி, 'அந்தணன்' முதலிய சொற்களுக்குத் தரும் விளக்கங்கள் விருந்தாக அமைகின்றன.]

"அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம் — மறனெறிந்த
வாளார் நெடுமாற! வள்ளுவனார் தம்வாயால்
கேளா தனவெல்லாம் கேட்டு"

திருக்குறள் சீரியதொரு அறநூல் என்பது பலரும் அறிந்ததே. அதில் கூறப்பட்டுள்ள பொருள், இன்பம் என்பவைகளையும் திருவள்ளுவர் அறத்தின் வழியிலேயே அமைத்துக் கூறியுள்ளார். அதுபற்றியே, முப்பால்களை யுடைய திருக்குறளை "அறநூல்" என்றே குறிப்பிடும் வழக்கம் உளதாயிற்று. அதனால் திருவள்ளுவருக்கு அறத்தின்கண் இருந்த ஆராவேட்கை நன்கு புலப்படும்.

கடவுள்வாழ்த்தில் - கடவுளைப் பல வடிவுகளில் கண்ட திருவள்ளுவர் ஓர்குறளில் அறத்தின் வடிவிலேயே காணுகிறார்.

---

* திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் ஒலிபரப்பியகுறள் நெறிக்கு 10—9—80 அன்று "அறவாழி அந்தணன்" என்னும் குறள் பற்றி வழங்கியருளியது.

அதனால், இறைவனை அவர் அறக்கடலாக உருவகம் செய் கின்றார். அறக்கடல் என்பது பல்வேறு வகைப்பட்ட அறங்கள் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி, அவையனைத்தின் வடிவமாகவும் இறைவன் நிற்கின்றான் என்பதனைக் குறிக்கும். இவ்வகையில் இறைவனை அற ஆழி - அறக்கடல் என்றே கூறிய திருவள்ளுவர், அதன்பின் "அந்தணன்" என்றும் அவனைக் குறிப்பிடுகிறார். அந்தணன் : அம் - தண்ணன், அஃதாவது, அழகிய தண்மையை உடையவன் என்பதாகும். தண்மை-குளிர்ச்சி. அஃது இங்கு, அருள். அதாவது கருணை என்பதைக் குறிக்கும். அழகு என்பது, இங்கு எந்த உயிரிடத்தும் விருப்பு வெறுப்புப் பாராட்டாது, ஒரு தன்மையாகவே நினைக்கின்ற நடுவுநிலைமையைக் குறிக்கும். எனவே, அந்தணன்என்பது எல்லா உயிர்கள் மீதும் சிறந்த கருணையை உடையவன் எனக் காரணப் பெயராக வந்துள்ளது. எவர் அழகிய தண்ணளியால் அழகு பெற்றவர்களோ, அவர்களை யெல்லாம் அந்தணன் என்ற சொல் குறிக்கிறது. எனினும், உண்மையில் இறைவனுக்கே அப்பெயர் பொருந்தும் என்பதைத் திருவள்ளுவர் குறிக்கிறார்.

அறமே வடிவானவன் இறைவன் – அழகிய கருணையே வடிவானவன் இறைவன் என்று இரு பெயர்களால் இறையிலக் கணத்தை இங்கே திருவள்ளுவர் குறித்திருப்பதை அறிகின்றோம் இக்குறள்மட்டும் இரண்டு பெயர்களை இறைவனுக்குச் சூட்டுவது ஒரு சிறப்பு, கடலில் மூழ்கச் செல்கின்றவர்கள் அதில் எத்துணையோ பகுதியான துறைகளில் ஒரு இடத்தில் தான் மூழ்கமுடியும். அதுபோல, அறக்கடலாகிய இறைவனைச் சேர்கின்றவர்களும் அவனது கருணையாகிய திருவடிகளைத் தான் சேரமுடியும் என்பதனையே சேர்ந்தார் என்று குறிப்பிடுகின்றார்.

கடலில் மூழ்கியவர்கள் அக்கடல்நீரால் வெப்பம் நீங்கிக் குளிர்ச்சியடைவர். அதுபோல அறக்கடலும் அந்தணனும் ஆகிய இறைவனை அடைந்தோரும் பாவத்தினின்றும், அதனால் ஆகிய துன்பத்தினின்றும் நீங்கி இன்புறுவர். இதனையே "பிற ஆழி நீந்தல்" என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

பிற என்பது மற்றப்பொருளும், இன்பமும் ஆகும். பொருளும் இன்பமுமாகிய இவைகளும் கடல்களே. மக்கள் பலரும் இந்த இரு கடல்களில் அகப்பட்டுக் கரையேற இயலாமல் அழுந்து கின்றனர். ஆனால், அவ்விடர்ப்பாடு நீங்குதற்கு உரிய ஒரே வழி இறைவனுடைய திருவடியைச் சேர்தல் என்பதுதான் என வலியுறுத்துவதற்கே, இங்கும் திருவள்ளுவர் எதிர்மறையிலேயே தமது குறளை அமைக்கின்றார்.



38

துன்மதியில் நன்மதி வளர்க

''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்''

–திருவள்ளுவர்

[துன்மதித் தமிழ்ப் புத்தாண்டு நாளில் ஞானசம்பந்தம் வாசகர்களுக்கு அருளாசி வழங்கும் குருமணிகள், ஒரு இனத்தின் பெருமைக்கே காரணங்களாகத் திகழும் உயர்பண்புகளை விடாது போற்றி நிற்றல் வேண்டும் என்பதை வற்புறுத்தி அருளிச்செய்துள்ளார்கள்.]

''பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல'' என்பர் இலக்கண நூலார். ரௌத்திரி ஆண்டு நிறைந்து துன்மதி புத்தாண்டுப் பிறக்கின்றது. பழையன கழிதல் என்பது மொழி வரலாற்றில் தேவையானதே. ஆனால் சமூகத்தில் நம் முன்னோர் போற்றி வளர்த்த பக்தி, பண்பாடு, நல்லறங்கள் முதலியன என்றும் புதுமைப்பொலிவோடு நம்மைப் பாதுகாக்கும் சிறப்பின. நாகரிகமாற்றம் என்பது ஓரளவு நடை, உடை, பாவனைகளில் அமையலாம். நமக்கே உரிய பாரம்பரியப் பண்புகளை விட்டுவிடுதல் நன்றன்று.

'தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவற்கோர் குணமுண்டு; அழிற்தம் அவனது மொழியாகும்; அன்பே அவனது வழியாகும்' என்று பாடினர் தற்காலக் கவிஞர். இந்தப் பாரம்பரியப் பண்பாடுகள் மறவாது போற்றப்படவேண்டும். உலகில் பதட்டமும், போர்க்குமுறல்களும், கடும் வரட்சியும் நிலவும்நேரத்தில் புத்தாண்டு பிறக்கின்றது.

---

* 10—4—81 'ஞான சம்பந்தம்' இதழுக்குத் தமிழ்ப் புத்தாண்டுச் சிந்தனையாக வழங்கியருளியது.

நாம் வளமையில் வாழ்வதற்கும், வரட்சியில் வாடுதற்கும் நமது எண்ணங்களும் செயல்களுமே காரணங்களாகின்றன. ''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும், தத்தம் கருமமே கட்டளைக்கல்'' என்பார் திருவள்ளுவர். உள்ளத்தில் உண்மையும், வாக்கில் வாய்மையும், உடலில் மெய்மையும் துலங்குதல் வேண்டும். 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாகில் வாக்கினிலே ஒளியுண்டாகும்'. எனப் பாரதியாரும் இதனை வற்புறுத்தினார். யாவும் இறைவன் உடைமை; நாம் அவன் ஏவல்வழிச் செயற்படப் பணிக்கப்பட்டுள்ளோம் என்ற எண்ணம் நம்மிடையே உருவாகிவிட்டால் பலசிக்கல்கள் தாமே அகன்றுவிடும். மனிதமுயற்சிகளில் இறையருளும் கலந்திருக்கிறது என்பதை உணர்ந்தால் எல்லாத் துன்பங்களும் நீங்கும்.

அன்பு, அடக்கம், ஈகை, ஒழுக்கம் முதலிய உயர் குணங்கள் மக்களிடையே வளர்வது இன்றியமையாதது ''நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்'' என்ற சான்றோர் அறவுரை நினைந்து போற்றத்தக்கது. இதனைத் தனிமனிதனும் சமுதாயமும், அரசும் சிந்தித்துச் செயற்படுதல் நல்லது. துன்மதி ஆண்டில் அனைவர்க்கும் நன்மதி பிறக்கவும், பசியும் பிணியும் நீங்கி நாட்டில் வசியும் வளனும் சுரக்கவும் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

39
எண்குணத்தான் *

''கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை''

– திருவள்ளுவர்

''வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழால் உரைசெய்தார் — ஆதலால்
உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு''

– திருவள்ளுவமாலை

[தலைபற்றி விளக்கும் தலையாய குறள் என நயம்படப்பேசித் தொடங்கும் குருமணிகள். தலைபற்றிக் கூறப்பட்டதாயினும், இனம் பற்றி வரும் பிற பொறிகளும் வணக்கம் செய்தற் குரியன என்பதை மேற்கோள் காட்டி விளக்கி, எண் குணங்களையும் விதந்துரைத்து அருளிச் செய்துள்ளார்கள்.]

திருவள்ளுவர் அளுளிச் செய்த கடவுள் வாழ்த்துக் குறள்களில் ஒருகுறளைத் தலையாயது என்று நாம் கூறலாம். ஏனெனில், அது நாம் தலைபெற்ற பயனைக் குறிப்பிடுகிறது. 'எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்' என்ற வகையில் உடல் உறுப்புக்கள் பலவற்றிலும் மிக்க சிறப்புடையது தலை ஒன்றே. அதனிடத்தில்தான் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து அறிவுப்பொறிகளும் அமைந்துள்ளன. அதனால், தலை பெற்றதன் பயன், அந்த ஐம்பொறிகளாலும் சுவை

* திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் ஒலிபரப்பிய குறள் நெறிக்கு 11—9—'80 அன்று ''கோளில் பொறியில் குணமிலவே'' என்னும் குறள் பற்றி வழங்கியருளியது.

முதலிய ஐம்புலன்களை நுகர்வதே என நினைக்கின்றோம். ஆனால், திருவள்ளுவர் தலைபெற்றதன் பயனாக அதனைக் குறிப்பிடவில்லை.

இறைவனுடைய திருவடிகளில் அத்தலை பொருந்தும்படி வணங்குவதே, தலை பெற்றதன் பயன் எனத் திருவள்ளுவர் தெளிதின் விளக்கிக் கூறுகின்றார். இக்குறளிலும், அவர் இக்கருத்தை எதிர்மறை முறையிலேயே வலியுறுத்திக் குறிக்கின்றார். அக்குறள்,

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

இறைவனுடைய தாளை வணங்காததலைகள் பயனில்லாத தலைகளாகும் என இக்குறளில் குறிக்கின்றார். அதற்கு அவர் கூறும் உவமையையும் சிறிது சிந்தித்துப்பார்த்தல் வேண்டும். அவ்வுவமை,கோள் – இல் – பொறி என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் இவைகளையே பொறி என்று கூறுவர். இவை மக்களுக்கு எவ்வகையில் பயன்படுகின்றன எனின் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் புலன் (அறிவு) களைத் தாம் ஏற்றுத் தம்மை உடையவனுக்கு அறிவிக்கும் முறையிலே பயன்படுகின்றன. ஆனால் இவை உடம்பில் அமைந்திருந்தும் ஊறு, சுவை, ஒளிமுதலியபுலன்களைக் கொள்ள வில்லையாயின் அவை இருந்தும் என்ன பயன்? அஃதாவது, ஒலியைக் கேளாத காது, ஒளியைக் காணாத கண், நாற்றத்தை அறியாத மூக்கு இவையெல்லாம் இருந்து பயன் என்ன? அதுபோலத்தான் இறைவனுடைய திருவடியை வணங்காத தலைகள் இருந்தும் பயனில்லை என்கின்றார் திருவள்ளுவர். தலைகள் பயனில என்று கூறாமல் 'குணம் இல' என்று கூறிய நயத்தையும் நோக்குதல் வேண்டும்.

இக்குறளில் திருவள்ளுவர் தலையைப் பற்றியே கூறியிருப்பினும் இனம்பற்றி வாழ்த்தாதநாக்கள், நினையாதநெஞ்சங்கள் முதலியவற்றையும் நாம் குறித்துக்கொள்ளும் படியே அமைத்துள்ளார். இவ்விடத்தில் நாம் அப்பர்பெருமான் அருளிய 'திரு அங்கமாலையை' நினைவுகூர்தல் நலமாகும். மற்றும் அவர்

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே"

என்று கூறியிருப்பதும் சிந்திக்கத்தக்கதாம். "வணங்கத் தலை வைத்து வார்கழல் வாய் வாழ்த்த வைத்து" எனவரும் திருவாசகமும் நினைக்கத்தக்கது. சேரமான் பெருமான் நாயனார்,

"சிந்தனை செய்ய மனம் அமைத்
தேன்; செப்ப நா அமைத் தேன்;
வந்தனை செய்யத் தலை அமைத்
தேன்; கை தொழ அமைத் தேன்;
பந்தனை செய்வதற் கன்பமைத்
தேன்: மெய் அரும்ப வைத்தேன்
வெந்தவெண் ணீறணி ஈசற்கு
இவை யான் விதித்தனவே"

என்று ஆண்டவன் அருளிய மெய்யுறுப்புக்களை, இங்ஙனம் வழிபாடுசெய்ய அமைத்துக் கொண்டேன் என்று கூறுவதும் சிந்திக்கத்தக்கதாகும். பிறஅருளாளர்கள் ஆண்டவன், தன்னை வழிபடுதற் பொருட்டு நமக்கு அருளிய உறுப்புக்களைக் கொண்டு அவ்விறைவனை வணங்குதல் வேண்டும் என்று கூறி யிருக்க, இச்சேரமான் பெருமாள் நாயனார் ஆண்டவனை வழிபட இவ்வுறுப்புக்களை இங்ஙனம் அமைத்து விட்டேன் என்று பாடும்திறம் சிந்திக்கத்தக்கது. இதுபோன்று அனைவரும் இறைவழிபாட்டில் திண்ணிய உள்ளத்தராய் இருத்தல் மிகவும் இன்றியமையாதது.

இங்கே இறைவனைத் திருவள்ளுவர் 'எண்குணத்தான்' எனக் குறித்தார். இலை முறையே தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர் தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை எனவகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் தன்வயத்த னாதல் என்பது - பூரண சுதந்திரம் உடையவனாய் இருப்பவன் என்பதைக் குறித்தது. தூய உடம்பினனாதல் என்பது - மாயா சம்பந்தமில்லாத அருள் திருமேனி கொண்டவன் என்பதை

விளக்கியது. இயற்கை உணர்வினனாதல் என்பது கண், காது முதலியபொறிகளின் துணையின்றியே யாவற்றையும் உணரும் தன்மையன் என நின்றது. முற்றும் உணர்தல் என்பது யாவற்றையும் நிறைவாக அறிபவன் எனக் குறித்தது. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் என்பது - மலமாயை களுக்கு உட்படாத பெருஞ்சிறப்பினைப் பேசியது. பேரருள் உடைமை என்பது - இறைவனது பெருங் கருணை கூறியது. முடிவில் ஆற்றலுடைமை என்பது – அவனது எல்லை காண மாட்டாத பேராற்றலை விளக்கியது. வரம்பில் இன்பம் உடைமை எனபது பேரானந்தப் பெரும்பொருள் அவனே என்பதை விளக்கியது. இவை உயிர்களுக்கு இல்லாமல் இறைவனுக்கே உரிய சிறப்புக்களாகும்,

மனிதன் எதனை நினைக்கிறானோ அதன் தன்மைகளைப் பெறுகிறான் என்பது பொது உண்மை. 'எத்பாவம் தத்பவதி' என்பது இதனை விளக்கவந்த வடமொழி வாசகம். சார்ந்ததன் வண்ணமாகும் உயிர்கள் எண்குணத்தானை வணங்கின், அக் குணச் சிறப்புக்கள் அவ்வுயிர்களுக்கும் நாளடைவில் வந்து விடும் என்பதே ஆசிரியரின் கருத்தாகும். எனவே, அத்தகு சிறப்புடைய இறைவனை உயிர்கள் சார்ந்தும், துதித்தும், வணங்கியும் நலம்பெறக் கடமைப்பட்டுள்ளன. இன்று பலரும் கோயிலுக்குச் சென்று கண்காட்சியைக் கண்டு வருவதுபோல் தரிசித்து வருகின்றனர். கொடிமரத்துமுன் தலை தரைதோய வணங்குதல் வேண்டும். 'தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி' என அப்பர் பெருமானும் இதனை வலியுறுத்தினார். இனியேனும் இக்குறளைச் சிந்தித்ததன் பயனாகத் தலைநிலந் தோய வணங்கும் பழக்கம் உருவாதல் வேண்டும். அவ்வகை யில் அனைவரும் ஆண்டவனை மனம், மொழி, மெய்களால் வணங்கி உடல் பெற்ற பயனைப் பெறுவார்களாக.



40
பிறவிப் பெருங்கடல்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவ னடிசேரா தார்."

– திருவள்ளுவர்

[துன்பங்கள் பலவற்றுள்ளும்பெருந் துன்பம் பிறவித்துன்பமே என்பதனை இனிது விளக்கி, அத்துன்ப நீக்கத்திற்கு இறைவன் திருவடியே புணையாவது என்பதனை எடுத்துக்காட்டி, 'தனியனேன்' எனத் தொடங்கும் திருவாசகத் தோடு 'பிறவிப் பெருங்கடல்' எனத் தொடங்கும் இக் குறளை ஒப்பிட்டுக் குருமணிகள் அருளிச் செய்துள்ள அரிய சிந்தனையாக இது அமைகிறது.]

எல்லா உயிர்களின் குறிக்கோளும் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமுமேயாகும். ஆலல் எது துன்பம், எது இன்பம் என்பதை உயிர்கள் உணர்ந்துள்ளன என்று கூற முடியாது. எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படையாக உள்ள துன்பம் பிறவித் துன்பமேயாகும். அதனால், இத்துன்பத்தை நீக்கிக்கொள்ளாமல் பிற துன்பங்களை நீக்க முயல்வது சிறப்புடையதாகாது. துன்பங்கள் எல்லாவற்றிலும் மிகமேலாயது பிறவித் துன்பமேயாய் இருத்தல் போல, எல்லா இன்பங்களிலும் மிகமேலாய இன்பம் வீட்டின்பமே ஆகும். அவ்வின்பம் நிலைத்தது; எல்லையற்றது.

---

* திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் ஒலிபரப்பிய குறள்நெறிக்குப் 'பிறவிப் பெருங்கடல்' என்னும் குறள் பற்றி 12—9—'80 அன்று வழங்கியருளியது.

பிறவித்துன்பமே பெருந்துன்பம் என்பதை விளக்கத் திருவள்ளுவர் - பிறவியைக் கடல் என்றும் - பெருங்கடல் என்றும் கூறுகின்றார். அப்பெருங்கடலில் உயிர்கள் இனிச் சென்று வீழப்போவதில்லை. முன்பே அதன்கண் அகப்பட்டுக் கரையேற மாட்டாது அலைகின்றன; அல்லல் அடைகின்றன. அறியாமை காரணமாக இத்துன்பத்தை அவை அறியவில்லை என்றாலும், அறிவுடையோர்கள் அதனை அறிந்து அக்கடலைக் கடந்து கரையேற வழியைத் தேடுகின்றனர் அவர்களுக்குத் திருவள்ளுவர் கூறும் வழி இறைவனது திருவடியைப் பற்றுதல் ஒன்றேயாகும். அத்திருவடி பிறவி என்ற பெருங்கடலுக்குப் புணையாய் நின்று உயிர்களுக்கு உதவி, அவைகளைக் கரை யேற்றும். இக்கருத்தையும் திருவள்ளுவர் இறைவனது திருவடியைச் சேர்ந்தவர்கள் பிறவியாகிய பெரிய கடலைக் கடந்து கரையேறுவார்கள் என்று உடன்பாட்டில் கூறியதோடு அமையவில்லை. இறைவனுடைய திருவடியைச் சேராதவர்கள் பிறவிக்கடலைக் கடக்கமாட்டாது அதனுள்ளே அழுந்துவர் என எதிர்மறையிலும் குறிப்பிடுகின்றார்.

இதனால், பிறவியாகிய துன்ப நீக்கத்திற்கும், வீடுபேறாகிய இன்ப ஆக்கத்திற்கும் இறைவனுடைய திருவடியைத் தவிர உயிர்களுக்குப் பற்றுக் கோடாக உள்ளது வேறு ஒன்றும் இல்லை என்பது நன்கு புலனாகும். கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் இறுதியாக இக்குறளில் தெளிவாகவும் வலியுறுத்தியும் இவ்வாறு கூறிய கருத்தையே திருவள்ளுவர் இக்கடவுள் வாழ்த்து அதிகாரம் முழுவதிலும் ஆங்காங்கே இலை மறை காய் போல் பொதிந்து விளங்க அமைத்திருக் கின்றார்.

இவ்விறுதிக் குறளின் பொருளைத் திருவாசகம், தெரிவிப்பதைக் கீழே கண்டு தெளியலாம்.

" தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லற்
சுரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே "

என்ற திருப்பாடலால் இதனை விளக்கியது. இக்குறளில் ஆசிரியர் கடவுளை 'இறைவன்' என்ற பெயரால் குறித்தார். 'இருள்சேர் இருவினையும்' என்னும் குறளினும் 'இறைவன்' என்றே குறித்துள்ளார். இறை என்பது இறுத்தல்-எல்லாப் பொருளிலும் தங்குதல் என்னும் கருத்தை உடையது. எனவே, இறைவன் எல்லாப் பொருளிலும் நீக்கம் அற நிறைந்திருப் பவன் என்னும் இயல்பு விளங்குகின்றது. எல்லாப்பொருளிலும் இருப்பவன் ஆகையினால் உயிரிலும் உயிர்க்குயிராய் நின்று அதற்கு நன்மை புரிபவன் என்பது விளங்கும். எனவே அந் நிலையினை உணர்ந்து அவனது திருவடியைப் புணையாகப் பற்றி நின்று இன்புறுதலே யாவர்க்கும் நலம் பயப்பதாகும்.

''இறவா இறைவன் இணையடி பற்றிப்
பிறவாப் பெரும்பதம் பெறுவோம்நாமே''



41
எண்ணமும் வாழ்வும்

'சேரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்துமளரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரைஆள அவர்போல் வந்த
சைவசிக்ர மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்''

— சம்பந்த சரணாலயர்

[மனித எண்ணங்களுக்கும், வாழ்க்கைக்கு மிடையே உள்ள தொடர்பினை இனிது விளக்கி, நல்லோர் வாழுமிடம் நலமிகு வளம்பெற்றுத் திகழும் என்பதனை மகாபாரதத்தை மேற்கோள் காட்டி தரம்குறையாது அனைவரும் நல்லமனம் கொண்டு நாளும் வாழ வற்புறுத்திக் குருமணிகள் அருளிச்செய்துள்ள உபதேசமே இக்கட்டுரை.]

பயிற்சி வகுப்பு ஏன் ?

சுதந்திரம் பெற்று முப்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் எது வாழ்வு என்பதனைய மக்கள் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை. பகட்டாக வாழ்வதுதான் வாழ்வு என்று எண்ணிகிற எண்ணம் கொண்ட மக்களே பல்கிப் பெருகி வருகின்றனர்.

---

* தருமையாதீனத் திருமடத்தில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழாவை ஒட்டி 10—5—81 அன்று நடை பெற்ற, சமயப் பயிற்சி வகுப்பினைத் தொடக்கிவைத்து வழங்கியருளியது.

மனிதர்கள் வாழ்வல்லாதவற்றை வாழ்வாக எண்ணி மயங்குகின்றனர். அதனால் வல்வினையின் வயப்பட்டு ஆழ்கின்றனர். மேலும் தமக்குத்தாமே கேடு சூழ்ந்து கொள்கின்றனர். முடிவாகத் துன்பக் கடலாகிய வெள்ளத்திலேயே வீழ்ந்து விடுகின்றனர். இவர்கள் துன்பக் கடலினின்றும் கரையேற வழியிருக்கிறதா? இருக்கிறது! இறைவனடி சேர்தலே வழி என்பார் திருவள்ளுவர். வல்வினைப்பட்டு ஆழாமல் காப்பவனை ஏத்தித்துதிப்பதே வழி என்கிறார் மணிவாசகர். இவர்தம் அருள்வாக்கைக் கவனிப்போம்.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழமாற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே.

இத்திருவாசகப்பாடல் எவ்வளவு எளிமையாக நமக்கு வழி காட்டுகிறது. இது போன்ற சுருத்துக்களையெல்லாம் சிந்தித்து நல்ல தீர்வு காண ஒரு சிலராவது முன்வரவேண்டும் என்ற நோக்கில்தான் இந்தச் சமயப்பயிற்சி வகுப்பு நடத்தப்பெற்று வருகின்றது.

எண்ணமும் வாழ்வும்

மனிதர்கள் எண்ணுகிற எண்ணங்களே அவர்களை வாழ வைக்கிறது என்ற கருத்து வேத, ஆகம, புராண காலங்களில் இருந்து, இக்காலம் வரை பலரும் எடுத்துக்கூறி வருவதாகும். நம்நாட்டில் மட்டுமில்லாது வெளிநாட்டில் வாழ்வோருங்கூட இக்கருத்தை உடன்பட்டுப் பேசிவருகிறார்கள். ஒரு நாட்டின் சூழ்நிலை கெடுகிறது என்றால் அந்நாட்டு மக்களின் எண்ணங்களில் தவறு இருக்கிறது என்பதே கருத்தாகும். இதனையே தனிமனித நிலையில் வைத்து 'எத்பாவம் தத்பவது' என்று வடமொழி கூறுகிறது. எண்ணத்தின்படியே வாழ்வு என்பது இதன்பொருள், ''நினைக்கத் தனக்கு'' என்பதும், ''மனம் போல மாங்கல்யம்'' என்பதும் இக்கருத்தையே வலியுறுத்தும்.

பாரதக் கருத்து

மகாபாரதத்தில் இக்கருத்து நன்கு விளக்கப்படுகின்றது. பஞ்சபாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசம் இருந்துவிட்டு ஓர் ஆண்டு நாட்டிற்குள் மறைந்து வாழவேண்டும் என்ற

உடன்படிக்கையின்படி விராட தேசத்தில் ஒவ்வொருவரும் மாறுவேடம் கொண்டு மறைந்து வாழ்ந்து வருகின்றனர். பஞ்சபாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசம் முடித்து நாட்டிற்குள் ஓர் ஆண்டு மறைந்து வாழ்கிறார்கள் என்பதை அறிந்த துரியோதனன், அவர்களை இச்சமயத்தில் கண்டுபிடித்து, மீண்டும் வனவாசம் அனுப்பவேண்டும் என்று எண்ணுகிறான். அதனால் பாண்டவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய, பலரைப் பல இடங்களுக்கும் அனுப்புகின்றான். அவர்கள் கண்டுபிடிக்க இயலாமல் திரும்பி வந்துவிடுகின்றனர். அப்பொழுது பீஷ்மர் துரியோதனனைப் பார்த்து, ''இப்படியெல்லாம் தேடினால் அவர்களைக் கண்டுபிடிக்கமுடியுமா ? எந்த நாட்டில் மக்கள் மகிழ்ச்சியோடும் வளத்தோடும் இருக்கிறார்களோ அந்த நாடே அவர்கள் வாழும் இடம் என்று கண்டுகொள்க'' என்று அறிவுறுத்துகின்றார். துரியோதனனும் அதனைக்கேட்டு, விராடதேசந்தான் வளத்தோடும் செழுப்போடும் இருக்கிறது என்பதனை அறிந்து அங்கேசென்று அவர்களைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்கின்றான்.

இன்பமும் துன்பமும் :

இதிலிருந்து நல்லோர்கள் வாழும் இடம் வளம் குன்றாமல் இருக்கும் என்பது உண்மையாகிறது. திருமூலர் தம் திருமந்திரத்திலும் இக்கருத்தினை விளக்கியருளுகின்றார்.

''இன்பமும் துன்பமும் நாட்டா ரிடத்துள்ள
நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்
என்ப; இறைநாடி நாடோறும் நாட்டினின்
மன்பதை செப்பஞ்செயின் வையம் வாழுமே''

எனும் இப்பாடலில், ஒருநாட்டில் இன்பமும் துன்பமும் விளைவது அந்நாட்டிலுள்ள மக்களின் நல்லசெயல் - அற்பச் செயலால்தான் என்று விளக்கியருளுகின்றார். மேலும் மக்களை ஆளுகின்ற மன்னனும் குறை வேண்டினார்க்குக்குறை தீர்த்தும், முறை வேண்டினார்க்கு முறைசெய்தும் நன்முறையில் அனைவரையும் ஒப்பக்கருதி ஆட்சி செய்வானேயானால் வையம்வாழும் என்றும் கூறியருளுகிறார். ஆதலின் நெஞ்ச எண்ணங்களே எல்லோரையும் வாழவைக்கிறது என்பது தெளிவாகின்றது. வள்ளுவரும் ''உள்ளத்தனையது உயர்வு'' என்றருளினார்.

எது அவவேடம் ?

இக்கருத்தமைந்த இந்தப்பாடல் 'அவவேடம்' என்னும் தலைப்பில் திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளது. அவவேடம் என்றால் துறவிகள் கொண்டுள்ள வேடக்குறைவு என்பது மட்டும் பொருளில்லை. ஆசிரியர்கள் அவர்கள் நிலையில் தாழ்ந்து போனாலும் அதுவும் அவவேடமேயாகும். காவல் துறையினர் அவர்களின் தகுதியில் குறைந்து போனாலும் அதுவும் அவவேடமேயாகும். இதேபோன்று நீதிபதிகள் அரசியல்வாதிகள், இன்னும் அனைத்துத் துறையினரும் தங்கள் தங்கள் நிலையில் திரிந்தாலும், தாழ்ந்தாலும் அதுவும் அவ் வேடமேயாகும். எனவே எல்லாத்தரப்பிலும் தரம்குறையாமல் அனைவரும் நல்ல மனம்கொண்டு வாழத் தலைப்பட்டால் வீடும் நாடும் வளம் பெற்றுத் திகழும் என்பது கருத்து.

நல்லோரால் நாடு வளம்பெறும்:

இக்கருத்தினையே புறப்பாடல் ஒன்றும் விளக்குகிறது. ஔவையார் ஒருநாட்டினைப்பற்றிப் பாடும்பொழுது ஒருநாடு, நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும் மேடாக இருந்தாலும் பள்ளமாக இருந்தாலும் அதில்வாழும் மக்கள் நல்லவர்களாக வாழ்வார்களே ஆனால் அந்நாடும் வளமுற்று இருக்கும் என்று பாடுகின்றார்.

"நாடா கொன்றோ; காடா கொன்றோ;
அவலா கொன்றோ; மிசையா கொன்றோ;
எவ்வழி நல்லவர் ஆடவர்;
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்பது அப்பாடலாகும்.

எனவே மக்களின் மனப்போக்குக்கு ஏற்பவே வாழ்வும் தாழ்வும் அமையும் என்பதனை மகாபாரதமும், திருமந்திரமும். புறப்பாடலும், பிற அறிஞர்களின் கூற்றும் மெய்ப்பித்துக் காட்டுகின்றன. இதனை நன்குணர்ந்து நாடு வளம் பெறத் திட்டங்கள் பல தீட்டுவதோடு மனத்தையும், வாக்கையும், செயலையும் தீதின்றிப்பழக்கிவைத்துக் கொள்வதேதக்கதாகும்

எண்ணம் சரியானால் எல்லாம் சரியாகும்



42

இணைந்து வாழ்வோம்*

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" திருவள்ளுவர்

[இந்து மதத்தின் உயர்ச்சி, அதில் ஏற்பட்ட சரிவுகள், அதற்கான காரணங்கள் முதலிய வற்றைச் சான்றுகளுடன் விளக்கி அருளும் குருமணிகள், மதமாற்றக் கொடுமைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதையும், ஆதிதிராவிடர்களின் நிலைபற்றியும், அவர்கள் முன்னேற்றத்திற்கான வழிமுறைகள் பற்றியும் விரிவாக விளக்கியுள்ளார்கள்.]

உறுதிநெஞ்சம் ;

இன்று இந்து ஒற்றுமை எழுச்சி மாநாடு கர்லை முதல் தொடங்கிச் சிறப்பாக நடந்துவருகிறது. அறிஞர் பெருமக்கள் பலர் உணர்ச்சி ததும்பப் பேசியுள்ளனர். ஆன்றவித்தடங்கியு கொள்கைச் சான்றோர் பலர் இந்து சமய மக்களிடம் ஒற்றுமையும், விழிப்புணர்ச்சியும் உண்டாகும் வண்ணம் பேருரையாற்றியுள்ளனர். பல்லாயிரக்கணக்கில் நீங்கள் கூடியிருந்து பாரம்பரியமான நம் இந்து சமயத்தைக் காக்க உறுதியேற்றிருக்கிறீர்கள். தமிழகத்தின் சைவ ஆதீனத் தலைவர்களும், ஏனைய இந்துசமயத்தலைவர்களும் ஒன்றுகூடி நம் சமயப்பண்புகளைக் காக்கவும், இன்று நமக்கு ஏற்பட்டுள்ள சோதனைகளை முறியடிக்கவும் உறுதிகொண்டு இங்கே வந்துள்ளனர்.

---

*27—7—'81 அன்று இராமநாதபுரத்தில் நடைபெற்ற இந்து ஒற்றுமை எழுச்சி மாநாட்டில் தலைமையேற்று வழங்கியருளியது.

நோய் நாடுக :

எந்த ஒரு தீமையைக் களைவதற்கும் அத்தீமை உண்டாவ தற்குரிய காரணத்தை முதலில் நாடி அதனை அகற்ற முயற்சிக்க வேண்டும்.

> ''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்''

என்கிறார் வள்ளுவர். இருளை அகற்றுவதற்கு முயற்சிப்பதை விட, ஒளியைக் கொண்டுவந்து வளர்ப்பதற்கு முயல்வதுதான் அறிவுடைமை. விளக்கை ஏற்றினால் இருள் தானே அகல்கிறது. நாம் நம் சமயக்கோட்பாடுகளையும் அவற்றின் சிறப்புக்களை யும் பயன்களையும் மக்களுக்கு விளக்கிச் சொல்லமுற்பட்டால் வேற்றுச் சமயங்கள் இந்நாட்டில் தலைகாட்ட முடியுமா? நோய் எப்போது தன் ஆதிக்கத்தைச் செலுத்த முற்படும்? உடலில் தளர்ச்சிவரும்போதுதானே. இன்மையும் வலிமையும் மன உறுதியும் உள்ளவரையில் நோயைப்பற்றி அஞ்ச வேண்டாம். நாம் நம் மக்களின் மனச்சோர்வையும் சமயத்தின் பால் மக்கள் கொண்டுள்ள அலட்சியப்போக்கையும் மாற்ற முயற்சிக்கவேண்டும். நம் சமய நெறிகளை மக்களுக்கு எடுத்துக்கூறி இந்துமதத்தினர்க்கு எழுச்சி உண்டாக்கி வீறுபெற்று எழச்செய்யவேண்டும்.

இந்துசமயம் :

நம் இந்து சமயங்களின் கொள்கைகளினால் உயர்ந்தவை. அவை தம்மைத்தாமே காத்துக்கொள்ளும் வலிமை உள்ளவை. அடிப்படைகள் நன்றாக அமைந்துள்ள நமது சமய நெறிகளை அழிக்க முற்படுவோர் யாவராயினும் அவர்கள் அழிவது திண்ணம். இவ்வுண்மையை வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. ஞானசம்பந்தர் நாவுக்கரசர் காலத்தில் சமண பௌத்த மதங்கள் சைவத்தை நிலைகுலைக்க முற்பட்டன. தென்னாட்டின் வடபகுதியிலும் தென்பகுதியிலும் புறச் சமய இருள் சூழ்ந்துகொண்டது. ஆட்சிபலத்தால் பல்லாயிரக் கணக்கான மக்கள் சமண மதம் மாறினர்.

உடனடித்தேவை :

பாண்டியநாட்டில் மங்கையர்க்கரசியாரும் குலச் சிறையாரும் தவிர எல்லோருமே சமணர்களாயினர். என்ன நடந்தது? ஞானசம்பந்தர் சைவசமய இளஞாயிறாய்ப் புறப்பட்டு மதுரை மாநகர் சென்றார். எங்குமே சைவஒளி

பரவிற்று. சமண் இருள் அகன்றது. அதுபோலவே தமிழ் நாட்டின் வடபகுதியில் திருநாவுக்கரசருக்குச் சமணர்கள் எத்தனை இடையூறுகள் செய்தனர்? அவரைக் கொல்வதற்குக் கூட முற்பட்டார்கள் அல்லவா? முடிவு என்ன? மக்கள் தாமே மனந்திருந்தினர். சைவத்தின் பெருமையை அறிந்தனர். சமண்பாழிகளையெல்லாம் இடித்துச் சைவக்கோயில் கட்டினர் என்பதைத்தானே நாட்டு வரலாறு நமக்கு அறிவிக்கின்றது ஆகவே, நம் சைவத்தையோ அல்லது வைணவத்தையோ எங்கும் யாராலும் அழிக்க முடியாது? வேற்றுச் சமய மக்களின் எண்ணிக்கையினால் நம் சமயம் அழிந்துவிடாது? இருந்தாலும் இத்தகைய பண்டைப்பெருமைகளை எண்ணி நாம் வாளா இருத்தல்கூடாது. இன்றையநிலையில் நம் சமயங்களைக்காக்க மக்களிடம் மன எழுச்சி தேவை. நமக்குள் ஒற்றுமை மிகமிகத்தேவை. அவற்றை வளர்க்க இத்தகைய மாநாடுகள் துணை புரிவது நிச்சயம்.

புனிதமண் :-

இந்து சமய ஒற்றுமை எழுச்சி மாநாடு இராமநாதபுரத்தில் நடப்பது மிக்க பொருத்தமுடையது இந்தியப் பெருநாட்டு மக்களை ஒன்றாக இணைத்து, தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழி வகுக்கும் காசி இராமேசுவரப் புனிதயாத்திரையில் இராமேசுவரத்தைத் தன்னகத்தேகொண்டது இம்மாவட்டம். நமது ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தரும் ஸ்ரீ ஆண்டாள் அம்மையாரும் அவதரித்த ஸ்ரீவில்லிபுத்தூர் இம்மாவட்டத்தில் தான் உள்ளது. இந்து சமயப் பெருமையை அமெரிக்கநாட்டில் எடுத்துரைத்த நம் விவேகானந்தரை அந்நாட்டுக்கு அனுப்பி வைத்த பெருமைக்குரியவர்கள் இராமநாதபுரம் சேதுபதிகள், தமிழும் சைவமும் தழைத்தினிதோங்க அரசுபுரிந்த சேதுபதி களின் ஊர் இராமநாதபுரம். இவ்வூரில் இந்து சமய மாநாடு நடப்பது மிக்க இயைபுடைய நிகழ்ச்சியல்லவா? இம்மாநாடு நாம் செய்துவரும் சமயப்பணிகளைத் திரும்பிநோக்கவும் எதிர் காலத்திற்குப் பயன்தரும் திட்டங்களை வகுக்கவும் மிகுதியும் பயன்படும்.

பேரிழப்பு :

அண்மையில் நெல்லை மாவட்டம் மீனாட்சிபுரத்தில் வாழ்ந்த ஆதித்திராவிட மக்களில் பெருபாலோரை இஸ்லாம் மதத்திற்கு மாற்றிய நிகழ்ச்சி நம் இந்து சமயத்திற்கும் கலாச் சாரத்திற்கும் பேரிழப்பாகும். ஹரிஜனமக்கள் இந்து

சமயத்தைச்சார்ந்தவர்கள். அவர்களை ஆதித்திராவிடர் என்ற பெயரால் தமிழ்மக்கள் வழங்குவர். ஹரிஜனங்கள் என்பது காந்தியடிகள் வைத்தபெயர்.

பழங்குடிகள்

ஆதித்திராவிடர்கள் இந்நாட்டின் பழங்குடிமக்கள். மற்றவர்கள் பின்னர் இந்நாட்டில் குடியேறிய மக்களாவர் என்பதை அவர்களின் பெயர்களே உணர்த்தும். இத்தகைய பழங்குடி மக்களில் ஒரு பகுதியினரே நீலகிரியில் வாழும் தொதவர், கல்வராயன்மலையில் வாழும் கொத்தடிமை மக்கள் முதலியோர் ஆவர். இதனை வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள் எழுதியுள்ள தமிழ்மொழி வரலாற்றால் அறியலாம். நாளடைவில் அவர்கள் வசதிபடைத்தவர்களால் அடிமைகளாய் நடத்தப்பட்டனர். அவர்களும் பறையடித்தல், உழவுசெய்தல், நகரைத் தூய்மைசெய்தல் முதலிய பணிகளைச் செய்து வாழ்ந்தனர் காந்தியடிகள் இவர்களது வறுமை நிலையை உணர்ந்தனர். அவர்களைச் சமுதாயத்தோடு இணைத்தார். அவர்களும் கடவுளின் குழந்தைகள்தான் என்ற பொருளில் அரிஜனங்கள் என்று அழைத்தார். தீண்டாமையை ஒழிக்கவும் பாடுபட்டார். இந்துக்களுக்குள்ள உரிமைகளை இவர்களுக்கு வழங்க வேண்டுமென்று ஏனையோருக்கு உணர்த்தினார். ஆலய வழிபாடுகளில் அவர்களுக்குள்ள உரிமைகளை எடுத்துச்சொல்லி ஹரிஜன ஆலயப் பிரவேசம் முதலியன செய்வித்து ஏனைய இந்துமக்களுக்குச் சமமாகச் செய்தார். ஆதிதிராவிடர்களுக்கு எல்லா உரிமைகளையும் முதலிடம் தந்து உதவிவருகிறது நமது அரசு கல்வி, உத்தியோகம் முதலியவற்றில் முன்னுரிமை தந்தும், கல்வி மற்றும் தொழில்களுக்கு நிதிஉதவியும் அவர்களை முன்னேற்றம் அடையச் செய்து வருகிறது. இன்று இக்குடும்பத்தினர் பல துறைகளிலும் முன்னேறியுள்ளனர். முன்னுக்கு வருகின்றனர்.

முன்னேற்றம்காண ...!

முன்னேற்றம் என்பது சமுதாயமும். அரசும் எவ்வளவு உதவினாலும் ஒவ்வொரு மனிதனது சொந்த முயற்சியில்தான் பெரும்பாலும் உள்ளது. சிறப்பாக விருதுநகர்ப்பக்கம் பொதுவாக நமது நாட்டில் நாடார் சமூகத்தினர் தீண்டத்தகாதவர்களாக இருநூறாண்டுகட்குமுன்பு இருந்தனர். அவர்கள் சிறிது

சிறிதாக முயன்று தனிப்பள்ளிக்கூடம் நிறுவி தம் சமூகத்தவர் எல்லோரையும் கல்வி அறிவுஒழுக்கங்களில் முன்னேற்றி சில பல ஆண்டுகளில் தங்கள் நிலைகளை உயர்த்திக்கொண்டு ஏனைய சமூகத்தினரோடு சம உரிமைகள் பெற்றனர் என்பதைக் கண் கூடாக அறிகிறோம். இந்தச் சமூகத்தைச்சேர்ந்த பெருந் தலைவர் காமராஜ்அவர்கள் நாடுபோற்றும் பெருந்தலைவராய் விளங்கியதை நாம் அறிவோம். இத்தகைய முன்னேற்றமனப் போக்கு ஆதித்திராவிட சமூகத்திற்கு இருக்குமானால் அவர்களும் விரைவில் இந்நாட்டு மக்களோடு பொருளாதாரத் துறையில் சம அந்தஸ்து பெற்றுவிடமுடியும். தீண்டாமையை அறவே அகற்றிவிடவும் முடியும்.

சாதி பிறந்த கதை;

சாதி என்பது தொழிலால் வந்தது. தீண்டாமை என்பது ஆசாரங்களால் வந்தது. தூய்மைக் குறையுடையோரைத் தூயவர் விலக்கி வாழத் தொடங்கிய காரணத்தால் தீண்டாமை என்ற சொல் பிறந்தது. நமது சமயங்கள் விரதங்களாலும் அனுட்டானங்களாலும் மேம்பட்டோரை ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த வரன் முறைகள் நாமும் தூயராய் வாழ்ந்து மேம்பாடு அடைய வேண்டும் என்ற எண்ணத்தை எல்லோருக்கும் உண்டாக்கும் தூயோரை, பக்தியுடையோரை, நம்சமயம் ஏற்றுக்கொண்டுள்ளது. நாயன்மார்களிலும் ஆழ்வார்களிலும் எல்லாச் சாதியினரும் இருக்கிறார்கள். 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே' என்பது நம் அப்பர் அடிகள் அருளிய தேவாரம். ஹரிசனர்களால் தாழ்ந்தவராகக் கருதப்பெறும் அருந்ததியார் (சக்கிலியர்) வகுப்பினரும் இந் நாட்டில் வாழ்கின்றனர். நரிக்குறவர்கள் நகரசுத்தித் தொழிலாளர்களில் உள்ள குறவர்கள், இன்னோரன்ன தாழ்த்தப்பட்ட பல்லாயிரவர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களை நினைவு கூர்ந்தால் மதம்மாற எண்ணும் ஹரிசனங் களின் மனம் மீண்டும் நம் வழிக்கே மாறும் என்பது உறுதி.

இந்து சமயங்களில் அவரவர்களும் தாங்கள் தாங்கள் மேற் கொண்ட மதக்கொள்கைகளைப் பின்பற்றி வாழலாம். ஒருவர் தான் பிறந்த தாய்ச்சமயத்தை விட்டுவிட்டுமற்ற சமயங்களைச் சார்தல் கூடாது. பெற்ற தாயையும், பிறந்த பொன்னாட்டை

யும் மறப்பவர்கட்கு மன்னிப்புக் கிடையாது. தாயிடம் குறை யிருந்தாலும் தனயன் தாயைப் புறக்கணித்தல் அறமாகாது.

எட்டப்பர்கள்:

இந்நாட்டில் வந்து குடியேறிய மதங்கள், நம்நாட்டு இந்து சமய மக்களின் அறியாமையையும் வறுமையையும் பயன் படுத்தித் தங்கள் சமயங்களை வளர்க்க முயற்சி செய்து வருகின் றன. மக்கள் தங்கள் சமயங்களில் உள்ள வெறுப்பினாலோ பிற சமயங்களிடம் உள்ள கவர்ச்சியினாலோ மதம்மாறவில்லை. பொருளாதாரம் பிற வசதிகளைத்தேடி மதம் மாறுகின்றனர். இந்நிலையை நீடிக்கவிட்டால் நாட்டுக்கே ஆபத்து வந்து சேரும். இதை அரசும் விழிப்பாக ஆராய்ந்துவருகிறது, ஏனைய மதத்தினர் இதுவரை சகோதர மனப்பான்மையுடன் இந்து சமய மக்களோடு பழகிவந்தனர். வருகின்றனர். மறைமுகமாக இந்துக்களில் உள்ள எட்டப்பர்களைத்தூண்டித் தங்கள் சமயத்துக்கு ஒட்டு மொத்தமாக மக்களை மதம்மாற்றுவதால் தங்கள் நட்புரிமையை அவர்கள் இழக்க நேரிடும். இதனை இஸ்லாமியர்கள் அவர்களுக்குள் உள்ள எட்டப்பர்களை எச்சரித்து இந்துக்களுடன் என்றும் சகோதர்களாக வாழ முயற்சித்தல் இருபாலாருக்கும் நலம் பயக்கும். நம்மக்களும் பணத்துக்கும் பதவிகட்கும் தங்களை அடிமைப்படுத்திக் கொள்ளக்கூடாது.

இஸ்லாமியரும் கிறித்தவர்களும் இந்துக்களிடம் நம்பிக்கை யுடையவர்களாயும், நட்புடையவர்களாயும் இதுவரை பழகி வந்ததுபோல இனியும் பழகி அன்புகொண்டு வாழவேண்டும். இந்துக்கள் தங்கள் நாட்டின்-சமயத்தின் பெருமைகளைப் போற்றிக் காத்து வாழவேண்டும். இந்நிலையே இந்துமுஸ்லீம் ஒற்றுமைக்கு வழிவகுக்கும்.

இணங்கி வாழ்ந்து இன்புறுவோம்.



43

மனநலமும் இனநலமும் *

"நல்லாரைக் காண்பதும் நன்றே; நலமிக்க
நல்லார்சொல் கேட்பதும் நன்றே; நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று" — ஔவையார்.

[மனிதனை உருவாக்குவதில் மனநலத்திலும் இனநலமே பெரும் பங்கு வகிக்கிறது என்பதனை அறநூல் வழக்கு, சமயநூல் மரபு, உலகியல் நெறி முதலியன காட்டி விளக்கியருளும் குருமணிகள், சிற்றினம் சேராமையின் இன்றியமையாமையையும், சான்றோர் உறவால் வரும் சிறப்புக்களையும் பல எடுத்துக்காட்டுகளால் நிறுவியுள்ளார்கள்.]

மனநலமும் இனநலமும்:

ஐம்புல உணர்வுகளுக்கு மேலாக - ஆறாவதாக மனிதர்களுக்கு மன உணர்வு சிறந்திருக்கிறது. இந்த மன உணர்வு காரணமாகவே 'மனிதன்' என்ற குறியீடும் அமைந்தது. உலகப்பற்றிலிருந்து இறையடியைச் சென்று சேர்வதற்குரிய கருவிகளாகிய படிமுறைகளையே நமது சாத்திரங்கள் தத்துவங்கள் என்று கூறும். அவை முப்பத்தாறு. இம்முப்பதாறனுள் ஒன்றாக - சிறப்பாக உட்கருவிகள் (அந்தக்கரணங்கள்) நான்கில் ஒன்றாக இம்மனம் பேசப்பட்டுள்ளது. இம்மனத்தின் தூய்மையே ஒரு மனிதனை உயர்த்தும். 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்றார் வள்ளுவர். மனநலத்தின்

---

*ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் சார்பில் 21—6—81 அன்று ஆதீனத்திருமடத்தில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் வழங்கியருளியது.

சிறப்போடு, மனிதனை உருவாக்கும் பணியில் அவன் சார்ந் திருக்கும் இனநலமும் பெரும்பங்கு வகிக்கிறது. மனநலத்திலும் இனநலத்தின் பங்கு பெரிது, இதனை,

"மனநலமும் மன்னுயிர்க்கு ஆக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும்"

எனத் திருவள்ளுவரும் உணர்த்தியுள்ளார். மன நலம் உயிர்களுக்கு ஆக்கத்தை (செல்வத்தை) மட்டுமே வழங்கும். இன நலமோ பல்வேறு வகைப்பட்ட புகழ்களையும் வழங்கும் என்பது குறள்நோக்கு. மனநலம் உடையார்க்கே இனநலமும் சிறக்கும். இதேபோல் ஒருவன் மனநலம் சிறக்க இனநலமும் காரணமாகிறது. எனவே மனநலமும், இனநலமும் இணைந்தால்தான் ஒரு மனிதனின் வாழ்வு சோபிக்கும்– சிறக்கும் என்பது விளங்குகின்றது. தன்னியல்பில் சுவையோ, நிறமோ, குணமோ இல்லாதமழை நீர், நிலத்தில் விழுந்த பிறகு நிலத்தின் இயல்பையே தன்னியல்பாகக் கொள்ளும். இதுபோல், தூய அறிவும், சார்ந்திருக்கும் இனத்தின் இயல்புக்கு ஏற்பவே மாறும் என்பர்,

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு"

எனவே, மனநலத்தைப் பாதுகாக்க இனநலம் தேவை என்பதனை நன்கு உணருகின்றோம்.

சான்றோர் இணக்கம்:

இனநலம் என்பது இங்கே நல்லார் இணக்கத்தையே குறிப் பதாகும். நல்லாரின் இணக்கமும், நல்லினச்சார்பும் மனிதர் களுக்கு இன்றியமையாதது. இவ்வாறான நல்லினத்தாரையே 'ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்' எனச் சங்க இலக்கியங்களும், 'பெரியார்' எனத் திருக்குறளும் குறிக்கும். நமது ஆதீனத்தில் இச்சான்றோர் கூட்டத்தைத் 'திருக்கூட்டம்' எனக் குறித்தல் மரபு. மிக எளியவர்களிலிருந்து, இறையருள் பெறும் தகுதிமிக்க பெரியோர் வரை அனைவருக்கும் இச்சான்றோர் இணக்கம் இன்றியமையாதது. 'மால் அற நேயம் மலிந்தவர் வேடமும் - ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே' எனச் சிவஞானபோதமும் இக்கருத்துக்கு அரண் செய்கின்றது. இப்பெரியார் திருக்கூட்டத்தையே 'சத்சங்கம்' என வடமொழியிலும் குறிப்பர். இச்சொல், உண்மைப்

பொருள் பற்றியே சிந்திப்பார் கூட்டம் என்ற பொருள் தரும். இங்கே உண்மைப் பொருள் என்பது இறை, உயிர், தளை என்ற முப்பொருள்களையேயாகும்.

உயிர் இயல்பு:

உயிர் பளிங்கு போன்றது. அருகில் இருக்கும் பொருள் களைத் தன்னுள் கொண்டு பிரதிபலிப்பது. இதனைச் 'சார்ந்ததன் வண்ணமாதல் உயிர் இயல்பு' எனநமது சாத்திரங்கள் பேசும். எனவே, இவ்வுயிர் நல்லார் இனத்தில் சார்ந்திருந்தால் நன்கு வளரும்; பேரின்பப்பெருவாழ்வும் பெறும். இத்தகு சான்றோர் கூட்டுறவைப் பெறவேண்டு மென்றே நமது அறநூல் ஆசிரியர்களும், அருள்நூல் ஆசிரியர் களும் பலவாறு வற்புறுத்தி உள்ளனர் 'அடியேன்உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்; என மாணிக்கவாசர் சிவபெருமானை வேண்டுகின்றார் ஔவையார் நல்வழியுள், நல்லாரைக்காண்டல், நல்லார்சொல் கேட்டல். நல்லார் புகழ் பேசுதல், நல்லார் இணக்கம் யாவும் தேவை என வற்புறுத்துகின்றார்.

"நல்லாரைக் காண்பதும் நன்றே: நலமிக்க
நல்லார்சொல் கேட்பதும் நன்றே; நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று"

என விதந்து பாராட்டினார். இவரது இப்பாடலுக்கு முன்னோடியாக நமது அருள்நூல்களுள் ஒன்றாகிய திருமந்திரத்திலும் ஒரு பாடல் உள்ளது. நல்லார் என உலகியலில் ஔவையார் கூறுவதையே நமது அருள்நூல்கள் ஞானாசிரியனாகப் போற்றி உரைக்கும். ஞானகுருவின் தரிசனம், அவர் அருள்மொழி செவிமடுத்தல், அவர் புகழ் பேசுதல், அவர்களோடு சதாகாலமும் சிந்திப்பதன் மூலம் அவர்களோடு கருத்தால் இணைந்துவாழ்தல் என்பனவற்றைத் திருமந்திரம்.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"

என நுட்பமாக விளக்கியருளியது.

சிற்றினம் சேராமை:

சான்றோர் இணக்கம் பூரணபலன் தரவேண்டுமானால் தீயாரோடு தொடர்பில்லா திருத்தல்வேண்டும். இதனை வற்புறுத்தலே, ஔவையார் 'நல்லாரைக் காண்பதுவும் நன்றே' என்பதனோடு நிறுத்திக்கொள்ளாது, உடனேயே தீயர் தொடர்புகளை அறுத்தல் வேண்டுமென்று அடுத்து ஒரு பாடலை அமைக்கிறார்.

''தீயாரைக் காண்பதுவும் தீதே: திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே: தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு
இணங்கி யிருப்பதுவும் தீது.''

என அழகுபெறப் பாடியுள்ளார். முதற்பாடலில் நலம்மிக்க நல்லார் என்றார். நல்லாரோடு இணைந்தால் நமக்கு நலம் மிக்குவரும் என்றவர், தீயாரைக்குறிக்கும்போது திருவற்ற தீயார் என்றார். தீயர் இணக்கம் கல்வி, செல்வம் முதலியவற்றையும் இழப்பிக்கும் என்பது ஔவையின் குறிப்பு. இவ்வகையிலேயே பெரியாரைத்துணைக் கோடல் என்ற அதிகாரம் அமைத்து நல்லோர் இணைக்கத்தால் பெறப்படும் சிறப்பினைக் கூறிய திருவள்ளுவரும், உடனே சிற்றினஞ் சேராமை என அடுத்த அதிகாரம் அமைத்து, இவ்வினக்கத்தால் வரும் தீமைகளை நினைவூட்டி எச்சரிக்கிறார்.

சங்கரர் வாக்கு:

நல்லார் இணக்கமும் - நல்லார் உறவும் நம்மை, நமது உயிரை, மனத்தை, உணர்வுகளைத் தூய்மைப்படுத்தி நலம் பயக்கும் என்ற நோக்கிலேயே சான்றோர் பலரும் இவ்வாறு அருளிச்செய்வாராயினர். இதனையே ஆதிசங்கரரும்,

''சத்சங்கத்தால் பற்றின்மை ஏற்படும்,
பற்றின்மை ஏற்படுவதனால்
வாழ்வியல் மயக்கம் நீங்கும்: மயக்கம்
நீங்குவதால் மனம் ஒருமித்தநிலை அடையும்,
மனம் ஒருமித்த நிலை அடைந்தால்
ஜீவன் முத்தி கிட்டும்.''

என்ற கருத்தமைந்த,

"ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்:
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்;
நிர்மோஹத்வே நிச்சலதத்வம்;
நிச்சலதத்வே ஜீவன்முத்தி."

என்று அருளியுள்ளார்.

எனவே, இவ்வாற்றான பெரும் பேறுகள் பலவற்றையும் வழங்கும் சத்சங்கத்தின் பெருமை கருதியே ஸ்ரீ குருஞான சம்பந்தர் பணிமன்றத்தின் அன்பர்கள் திங்கள் தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமை காலையில் தருமையில் ஒன்றுகூடிப் பிரார்த்தனைக் கூட்டத்தில் பங்கேற்றுத் திருவருள் பெற முயல்கிறார்கள். திருவள்ளுவர் அருளிச்செய்தது போல் பெரியோர் இணக்கம் ஒருவனுக்கு அரியவற்றுள் எல்லாம் அரியபேறாக விளங்குவது: இதுவே வன்மையுள் எல்லாம் தலையாயது; இத்தகு சான்றோர் கூட்டத்தில் இணங்கி இருப்பாரைச் செற்றார் செய்யலல்லது ஏதும் இல்லை என்றெல்லாம் பலவாறான சிறப்புக்களைத்தரும்.

"அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

44

உணவும் உணர்வும் *

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞர்னம்
கற்குஞ் சரக்கன்று காண்"

—மெய்கண்டார்.

[சிறு குழந்தைகளும் மனங்கொண்டு மகிழுமாறு எளிய-இனிய சொற்களால் அருளுரை வழங்கியருளும் குருமணிகள், தமிழ்மக்கள் சிறப்பாகக் கொண்டாடும் விநாயகர் சதுர்த்தி, மற்றும் கிருஷ்ணஜெயந்தி விழாக்களையும், அவ்விழாக்களில் பொதிந்துள்ள தத்துவங்களையும் விளக்கி அருளிச் செய்தது]

குழந்தைகளுக்காக :

மயிலாடுதுறை விஸ்வ ஹிந்து பரிஷத்தைச் சேர்ந்த அன்பர்கள் இன்று விநாயக சதுர்த்தியையும், கிருஷ்ண ஜயந்தியையும் ஒருங்கிணைத்து விழாக் கொண்டாடுகின்றனர். விநாயகசதுர்த்தி விழாவையும் கிருஷ்ணஜயந்தி விழாவையும் இணைப்பதன்மூலம் சைவ வைணவ சமயஞ் சார்ந்த மக்களை ஒன்றுபடுத்தும் நோக்குடன் இவ்விழாவை அமைத்திருக்கிறார்கள். சைவ வைணவ சமய மக்களால் பெரிதும் போற்றி வழிபடப்பெறும் இவ்விரு தெய்வ தத்துவங்களைக் குழந்தைகள் அறிதல் பயன்தரும். இங்குப் பள்ளி மாணவர்கள் பலரும் கூடியிருப்பதால் அவர்களுக்குப் பயன்படுமாறு சில கருத்துக்களைச் சொல்லலாம்.

---

*மயிலாடுதுறை தேசிய உயர்நிலைப்பள்ளியில், 6—9—81 அன்று, மயிலாடுதுறை விஸ்வ ஹிந்து பரிஷத் நடத்திய விநாயகசதுர்த்தி, கிருஷ்ணஜெயந்தி விழாவில் வழங்கி அருளியது.

உணவும் உணர்வும் :

விநாயகர் சதுர்த்தி இந்தியா முழுவதும் ஒவ்வொருவர் வீட்டிலும் கொண்டாடப்படும் விழா. விநாயகர் என்றவுடன் எல்லோருடைய உள்ளத்திலும் நினைவுவருவது மோதகம். நம் முன்னோர்கள் இன்சுவைப்பண்டங்களை இணைத்தே சமய விழாக்கள் பலவற்றையும் அமைத்துள்ளனர். பழனி என்றவுடன் பஞ்சாமிர்தமும், திருப்பதி என்றவுடன் இலட்டும் ஆவணிமூலம் என்றதும் பிட்ட முதமும், திருவாதிரை என்றதும் களியமுதமும், திருக்கார்த்திகை என்றதும் பொறியும், திருமால் ஆலயம் என்றதும் புளியோதரையும் எல்லோர் நினைவிலும் எளிதில் நினைவுவரும். அதுபோல விநாயக சதுர்த்தி என்றவுடன் கொழுக்கட்டை அல்லது மோதகம், கிருஷ்ண ஜயந்தி என்றவுடன் வெல்லச்சீடை முறுக்கு முதலிய தின்பண்டங்கள் எல்லோர் நினைவிலும்வரும். இங்ஙனம் தெய்வ உணர்வால் உயிரையும், சுவை உணர்வால் உடலையும் வளர்த்துவருவதே நமது சமயம் என்பது நினைவுகூரத்தக்கது.

விநாயகர் தத்துவம் :

முதலில் விநாயகரின் உருவ அமைப்புத் தெரிவிக்கும் சில உண்மைகளைக் காண்போம். முதலில் வழிபடும் தெய்வம் விநாயகர். இவர் பெரிய—பேழை வயிற்றை உடையவர். லம்போதரர் என்று வடமொழியில் இவரை அழைப்பர். உலகில் மகப்பேறுற்ற பெண்களைப் பிள்ளையார்வேடம் போட்டாயிற்றா ? என நகையாடுவதைக் காணலாம். தாய் தன் வயிற்றில்மகவை ஏற்றுக் காப்பதுபோல உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளையும் தன்வயிற்றில் அடக்கிக் காப்பவர் என்பதுதான் விநாயகரின் பெருவயிற்றுக்குப் பொருளாகும். இறைவன் வியாபகப்பொருளாவான் என்பதும், உயிர்கள் அவ்வியாபகப்பொருளில் அடங்கிய வியாப்பியப் பொருள்கள் என்பதும் விநாயகரின் பேழை வயிறு நமக்கு உணர்த்து கின்றது. இதேபோல் கண்ணனின் வரலாறும் ஒரு உண்மையை நமக்கு உணர்த்தும். கண்ணன் மண்ணை உண்டதாகப் பலராமர் சொல்லக் கேட்ட தாய் யசோதை, உண்மையா என்றறியக் கண்ணனை வாயைத்திறக்குமாறு கூறினாள். வாயைத்திறந்த கண்ணனின் வாயில் உலகமே தெரிந்தது என்ற வரலாறும் இத்தகைய உண்மையை நமக்கு உணர்த்தும்.

ஐந்தொழில் :

ஆனைமுகமும், ஒற்றைக் கொம்பும், அமுதகலசம் ஏந்திய கையும் மோதகமும் உடைய விநாயகரது வடிவம் 'ஓம்' என்ற பிரணவ வடிவத்தை நமக்கு உணர்த்துகிறது. விநாயகருக்கு ஐந்துகைகள். இவை அவரியற்றும் ஐந்தொழில்களையும் சுட்டுவன. மேற்புறம் அமைந்த கரங்களில் பாசம், அங்குசம், கீழ்ப்புறம் அமைந்த கைகளில் ஒடிந்த கொம்பு, துதிக்கையில் மோதகம் அல்லது அமுதகலசம் அமைந்திருத்தலைக்காணலாம். ஒடிந்த கொம்பு வைத்திருக்கும் கீழ்க்கரம் படைத்தலையும் மோதகம் வைத்திருக்கும் துதிக்கை காத்தலையும், மழுவேந்திய வலக்கரம் அழித்தலையும், பாசம் ஏந்திய மேல் இடக்கரம் மறைத்தலையும், கீழே உள்ள இடக்கரம் அருளலையும் குறிக்கும். இவ்வாறு பரமேசுவரனுக்குரிய ஐந்து தொழில்களும் குமாரராகிய விநாயகருக்கும் உண்டு. மேலும் அவனடியார்களுக்கும் உண்டு. கஜமுகாசுரனை ஒடுக்குவதற்காகச் சிவபெருமான் விநாயகரைத் தோற்றுவித்தார் என்பது வரலாறு. கஜமுகாசுரன் சிவபெருமானை வேண்டி வரங்கள் பலவும் பெற்றவன். தேவர்களாலும் மனிதர்களாலும் விலங்குகளாலும் தனக்கு அழிவு ஏற்படக்கூடாது என்ற வரம் பெற்றவன். இத்தனையும் சேர்ந்த ஒன்றால் தனக்கு அழிவு வரக்கூடாது என்று கேட்க வில்லை. சிவபெருமான் அவனது கொடுஞ்செயல்களை அறிந்து அவனை அழிப்பதற்கு மனித உடலும் யானைத்தலையும் பூதவடிவும் உடைய விநாயகரைத் தோற்றுவித்தார். விநாயகர் கஜமுகாசுரனைத் தன் தந்தங்களில் ஒன்றை ஒடித்து அவனை சம்கரித்தார். அவன் மூஷிகமாகமாறி அப்பெருமானின் வாகனமாயினன். விநாயகர் கஜமுகாசுரனை அழித்தபழி தீர வழிபட்டதலம்தான் திருச்செங்காட்டங்குடி. அங்குள்ள கோயிலுக்குக் கணபதீச்சரம் என்பது பெயர்.

விநாயகருக்கு மிக உகந்த நிவேதனம் மோதகம். இது நாம் அப்பெருமானிடம் செலுத்தும் பக்தியின் அடையாளமாகும். இடையீடின்றி இன்சுவைப்பாகால் நிறைந்த மோதகும் நமது இடையீடில்லாத பக்தியை அவரிடம் செலுத்துவதற்கு அறிகுறியாக நிவேதிக்கப்படுகின்றது.

"கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள்தீர்ப்பாம்"

என்ற பரஞ்சோதி முனிவரின் விநாயக வணக்கப்பாடல் பகுதி ஈண்டு நினைவுகூரத்தக்கது.

தந்தையைப்போலவே விநாயகருக்கு மூன்று கண்களுண்டு. அவை சூரியன், சந்திரன், அக்கினி ஆகியவற்றைக்குறிக்கும். தன்னை வழிபடும் பக்தர்களின் இடையூறுகளை அகற்றி அவர் கட்கு நலம்பலவும் அருளும் இப்பெருமான் குழந்தைகள் முதல் பெரியோர்வரை அனைவராலும் நம் நாட்டில் வழிபடப் படுகிறார்.

கண்ணன் லீலைகளின் கருத்து:

அடுத்துக் கண்ணபிரானின் வரலாற்றில் அமைந்த உண்மை களைச்சிந்திப்போம். விஷ்ணுவின் அவதாரங்களில் இராமாவ தாரமும் கிருஷ்ணாவதாரமும் சிறந்தவை. மாயக்கண்ணன் மக்களை ஆட்கொள்வதற்கு எளிய நிலையில் மக்களில் ஒருவராய் வந்துதோன்றி அருள்செய்தநிலையைக் குறிப்பது கிருஷ்ணாவதாரம். துரியோதனாதியர்களின் வஞ்சகச்செயல் களிலிருந்து பாண்டவர்களுக்குத் துணையாய் நின்று அவர்களைக்காத்த அவரது திருவிளையாடலைப் பாரதம் விரித்துப்பேசுகிறது. வசுதேவருக்கும் தேவகிக்கும் மைந்தராய்க் கிருஷ்ணன் அவதரித்தார். ஆயர்பாடியில் நந்தகோபனுக்கும் யசோதைக்கும் புதல்வராய் வளர்ந்தார். அவரது அவதாரத்தைக் கோகுலநந்தனன் என்றும் துவாரகாநாதன் என்றும், பார்த்தசாரதி என்றும் மூன்று நிலைகளில் பிரித்துக் காண்பர்.

கண்ணபிரான் கோகுலத்தில் பதினாறு வயதுவரை வாழ்ந்து பல திருவிளையாடல்கள் புரிந்தார். கண்ணபிரான் வெண்ணெய் திருடி உண்பதில் மிக்கவிருப்புடையவர். பால் போன்ற தூய்மையும் வெண்ணெய் போன்ற மென்மையும் உடைய அடியார்களின் உள்ளங்களைக் கவர்வதில் அவர் விருப்புடையவர் என்பதை இச்செயல் குறிப்பதாகக் கூறுவர். இவ்வாறே அவர் செய்த செயல்களுக்கெல்லாம் உண்மைப் பொருள்கண்டு உயர்வடைய வேண்டுவது மக்கள் கடமை.

துவாரகைநாதனாக அவர் விளங்கியகாலத்தில் இல்வாழ்க் கையின் சிறப்பை உலகிற்கு எடுத்துக்காட்டினார். வேதங்கள் தன்னைத் துதிக்கப் பாண்டவர் பொருட்டாக அவதார

புருஷராகிய கண்ணபிரான் தூது சென்றதைப் பாராட்டாத நூல்கள் இல்லை.

''படர்தாரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணா என்னா நாவென்ன நாவே''

என்கிறது சிலப்பதிகாரம்.

கண்ணன் உத்தம நண்பனுக்கு உதவும் பொருட்டுத் தேரோட்டியாகவும் தோன்றினார். அந்நிலையில் அவர் பார்த்தசாரதி எனப்பெற்றார். போர்க்களத்தில் உறவினர்மேல் கணைதொடுக்க நேரிடுவதை எண்ணி மயங்கி நின்ற அருச்சுனனுக்குக் கீதோபதேசம் செய்து கடமையைச் செய்யும் படித் தூண்டி அவன் நினைப்பை மாற்றினார். 'செயல்புரிவது தான் உனது கடமை. பயனை எதிர்பார்ப்பது உன் குறிக் கோளாக இருத்தல் கூடாது' எனக்கூறி உனது கடமையான போரைச்செய் என்று கண்ணன் அருச்சுனனுக்குக் கீதையில் அறிவுரை கூறுகிறார். இது ''தன்கடன் அடியேனையும் தாங்குதல் என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற அப்பரடிகள் திருவாக்கோடு ஒப்பிட்டு எண்ணுதற்குரியது. கண்ணனின் பிறவிரிவான வரலாறுகளைப் பாரதம், பாகவதம் ஆகிய நூல்களில் காணலாம். கண்ணனின் கீதோபதேசம் மகாபாரதத்தில் உள்ளதால், தான் பாரதம் ஐந்தாம் வேதம் எனப்போற்றப்படுகிறது.



45
உரிமையும் கடமையும்

"பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கான் அம்மானாய்"

— மாணிக்கவாசகர்.

[சமயத்தையும் சமய இலக்கியங்களையும் சமூகக்கண்ணோட்டத்துடன் சிந்தித்து அரிய கருத்துக்களைக் கேட்போர் உளம் நிறைய அருளிச்செய்யும் குருமணிகள், ஒரு அழகிய திருவாசகப்பாடலைப் பல்வேறு கோணங்களில் சிந்தித்து, அப்பாடலில் உரிமையும்கடமையும் இழையோடும் திறத்தை அன்பர்களிடையே அருளிச்செய்தது.]

பண்சுமந்த பாடல், பெண்சுமந்த பாகம், விண்சுமந்த கீர்த்தி, கண்சுமந்த நெற்றி, மண்சுமந்த மாமுடி, புண்சுமந்த பொன்மேனி இவற்றை எல்லாம் உடையவன் செந்தமிழ்ச் சொக்கன் என்று இப்பாடல் மூலம் அறிவிக்கின்றார் மாணிக்க வாசகர். இப்பாடலை உற்றுணர்ந்தால் வாழ்க்கைக்கு வேண்டிய நெறிமுறைகள் பலவும் தெளிவாகும்.

பண்ணும் பாடலும்

முதலில் "பண் சுமந்த பாடல்" என்கின்றார். பாடல் என்றால் பண்ணைச் சுமந்திருக்க வேண்டும். பண்ணைமைப்பு

* 8—9—81 அன்று தருமையாதீனத்தில் நடைபெற்ற ஆவணி மூலப்பெருவிழாவில் வழங்கியருளியது.

இல்லாத பாடல் பாடல் ஆகாது. அதுபோலவே பாடற்கு இயைபு இல்லாத பண்ணும் பண்ணாகாது. இக்கருத்தை வள்ளுவரும்

"பண்ணென்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்ணென்னாம் கண்ணோட்டம் இல்லாத கண்"

என்று கூறுகின்றார். பண் என்பதை இக்காலத்தார் "மெட்டு" என்று கூறுகின்றனர். பண்ணும் பாடலும் உயிரும் உடலும் போன்றது. உயிரால் உடலுக்கும் உடலால் உயிருக்கும் சிறப்புக் கிடைக்கிறது. அதே போலப் பண்ணால் பாடலுக்கும் பாடலால் பண்ணுக்கும் சிறப்புக் கிடைக்கிறது. எனவேதான் பரமேசுவரன் பண்சுமந்த பாடலை உடையவனாகத் திகழ்கிறான். பண் இல்லாத பாடலை அவன் விரும்புவதில்லை. மேலும் பண்சுமந்த பாடலுக்குத்தான் பரிசும் படைத்து அருள்கின்றான்.

பெண்ணும் ஆணும்

அடுத்துப்பெண் சுமந்த பாகத்தன் என்கின்றார். இறைவன் திருமேனியின் இடது பாகத்தில் உமாதேவியைத் தாங்கியிருக்கின்றான். இதனைப் 'பெண் சுமந்த பாகத்தன்' என்று மணிவாசகரும் "மாதோர் கூறன்" என்று திருஞான சம்பந்தரும், 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்' என்று ஐங்குறுநூற்றுக்கடவுள் வாழ்த்துப் பாடலால் பெருந்தேவனாரும் கூறுவன கொண்டு தெளியலாம். இக்கருத்தில் தான் இறைவனை அர்த்தநாரீசுவரர் எனவும் அழைப்பர். அர்த்தம் என்றால் பாதி; நாரி என்றால் பெண். பாதிப் பெண்ணுருவன் என்பது பொருளாகும்.

இங்ஙனம் இறைவன் மட்டும்தான் பெண்ணொருபாகன் என்பதில்லை. தாவரம் முதல் தேவர்கள் வரை அனைத்துயிர்களுமே பெண்ணொரு பாகமாகவே திகழ்கின்றன. தாவர இனத்திலும் விலங்கு இனத்திலும் பறவை இனத்திலும் பொதுவாக எல்லா உயிரினங்களிலுமே இடது பாகத்தில் பெண் தன்மையும் வலதுபாகத்தில் ஆண்தன்மையும் அமைந்துள்ளன என்பதை உற்றுநோக்குவோர் உணரக் கூடியதாகும். மனிதர்களிடையேயும் ஆணிடத்தில் பெண்மையும் பெண்ணிடத்தில் ஆண்மையும் அமைந்துள்ளன. ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிகுதிப்பட்டவர்களைப் பெண்கள் என்றும்

பெண் தன்மை குறைந்து ஆண் தன்மை மிகுதிப்பட்டவர்களை ஆண்கள் என்றும்அழைக்கின்றோம் இந்நிலையில் இவ்வேற்றத் தாழ்வுகள் மாறுகின்ற காரணத்தால் ஆண் பெண்ணாவதும் பெண் ஆணாவதும் நிகழ்கின்றன. இச்செய்தி சமீபகாலச் செய்தித் தாட்களில் அடிக்கடி வந்து கொண்டிருக்கிறது.

இவற்றை எல்லாம் உள்ளடக்கிய தத்துவ நிலையைத்தான் 'பெண் சுமந்த பாகத்தன்' என்று அப்பொழுதே வாதவூரர் பாடியருளினார்.

நாட்டார் நலம்பெற

'விண் சுமந்த கீர்த்தி' என்று அடுத்துக் கூறுகின்றார். விண் என்றால் ஆகாயம் என்று பொருள்படும். உலகிலுள்ள அண்டங்கள் எல்லாம் ஆகாய மண்டலத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மண்டலத்திற்கும் அதனதன் வியாபகம் (ஈர்ப்புச் சக்தி) ஒரு குறிப்பிட்ட எல்லைவரை உள்ளது. இம்மண்மண்டலத்திற்கும் அதுபோன்று ஒரு குறிப்பிட்ட எல்லை வரை வியாபகம் உண்டு. இம்மண்ணுலகில் வாழ்கின்ற மக்களின் மனம், வாக்கு, காயம் என்னும் மூக்கரணங்களால் நிகழும் நன்மை தீமைகள் மண் மண்டல வியாபகத்தில் உள்ள விண்மண்டலத்தில் பரவுகின்றன. நல்லவை பரவினால் நன்மை கிடைக்கும். தீமை பரவினால் நலம் குறையும்; தீமைதான் பெருகும். ஆதலின் மக்களின் எண்ணங்களும் பேச்சுக்களும் செயல் முறைகளுமே அவர்களை உயர்த்தவும் தாழ்த்தவும் செய்கின்றன. இதனால்தான் விஞ்ஞானிகளும் வானவெளியைச் சுகாதாரமாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று கூறி வருகின்றனர். விஞ்ஞானிகள் காயத்தால் செய்யும் செயலைமட்டும் கூறினாலும் மெய்ஞ்ஞானிகள்மற்ற இரண்டையும் சேர்த்து மூன்று கரணங்களாலும் நன்மைகளைச் செய்தால்தான் நாட்டார்க்கு நன்மைகளே விளையும் என்று கூறினர். எனவே மக்களாய்ப் பிறந்தோர் நற்சிந்தை, நல்வாக்கு, நற்செயல் உடையவர்களாகத் திகழ வேண்டும் இதனால் அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோர்க்கும் அவர் சார்ந்து வாழும் நாட்டிற்கும் நலம் விளையும். மக்கள் புகழுக்குரிய காரியங்களைச் செய்து புகழுக்குரியவர்களாக வாழ வேண்டுமேயல்லாது இகழுக்குரியவர்களாக வாழ்தல் கூடாது. இதைத்தான் 'விண் சுமந்த

கீர்த்தி' எனும் தொடரில் ஆளுடைய அடிகள் விளக்குகின்றார். கீர்த்தி என்றால் மிகுபுகழ் என்பது பொருள். விண் சுமந்த புகழ் என்றால் அவ்விண், புகழைச் சுமக்குமாறு அதன் கீழ் வாழ்வோர் நன்மையான காரியங்களைச் செய்து புகழ் பெற்று வாழ வேண்டும் என்பது கருத்து. இக்கருத்தில்தான் திருவள்ளுவரும்,

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்றார். இதனையே, "மன்னாஉலகத்து மன்னுதல் குறித்தோர் தம் புகழ் நிறீஇத் தாம்மாய்ந்தனரே" என்றார் புறநானூற்றுப் புலவருள் ஒருவராகிய பெருந்தலைச்சாத்தனார்.

மூன்று கண்களும்

அடுத்துக் கண் சுமந்த நெற்றியைக் காண்போம். இறைவனுக்கு மூன்று கண்கள் குறிக்கப்படுகின்றன. வலக் கண் சூரியன் இடக் கண் சந்திரன். ஆண்டவன் இவ்விரண்டாலும் ஒளி நல்கி உலகுயிர்களைக் காக்கின்றான். மூன்றாவதாக நெற்றியில் திகழ்வது அக்னிக்கண். இதனை நெற்றிக் கண் என்பர். மூன்று கண்களாலும் உயிரினங்களுக்கு வேண்டிய உணவு வகைகளை எல்லாம் உற்பத்தி செய்தும், வேண்டிய அளவு தட்ப வெப்பத்தை நல்கியும் காத்தருளுகின்றான். நெற்றிக்கண் இறைவனுக்கு எப்பொழுதும் வெளிப்படுவது இல்லை. கருவேள் எரிவதற்கும், செவ்வேள் உதிப்பதற்கும், நக்கீரர் அறிவுத் தெளிவு பெறுவதற்கும், உமாதேவியார் இறைவனின் இரு கண்களைப் பொத்திய பொழுது உலகுயிர்களைக் காப்பதற்குமே நெற்றிக்கண் திறக்கப்பட்டதாகக் காணப் பெறுகிறது.

இறைவன் எப்படியோ அப்படியே உயிரினங்களும் சிறப்பாக மனித இனமும் இறைவனால் படைக்கப்பட்டிருக்கின்றன மனிதனுக்கும் இரண்டு கண்களுடன் நெற்றியில் ஒரு கண்ணும் உண்டு. உடலிலுள்ள ஆறு ஆதாரங்களில் ஆஞ்ஞை என்று சொல்லப்படும் புருவ நடுவில் நெற்றிக்கண் எல்லோருக்கும் இருக்கிறது. யோக நெறி கைவந்தவர்கட்கு இது புலனாகும்.

அறிவும் தொழிலும் :

அடுத்து, ''மண்சுமந்து கூலி கொண்ட மாண்பை அறிவிக்கின்றார் மணிவாசகர். கூலிகொண்டு மண்சுமந்தாரேயல்லாது மண் சுமந்து பிறகு கூலி கொள்ளவில்லை. செய்யுளாதலின் எதுகை நோக்கி 'மண் சுமந்து' என்பதை முதலில் கூறுகின்றார்.

மண் சுமத்தல் முடியின் செயல். இதில் ஒரு தத்துவம் அடங்கியுள்ளது. உயிர், உடலைக் கொண்டுதான் எல்லாச் செயல்களையும் செய்கிறது. இந்த உடல், அறிவுக்கருவி என்றும் தொழிற்கருவி என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. மெய், வாய், கண், மூக்கு, செவி இவ்வைந்தும் அறிவுக்கருவி. வாக்கு, பாதம், கை, எருவாய், கருவாய் இவ்வைந்தும் தொழிற்கருவி. அறிவுக் கருவியாகிய நாக்குச் சுவையுணர் கருவி என்றும், கண் ஒளியை உணரும் கருவி என்றும், காது ஒலியைக் கேட்டுணரும் கருவி என்றும், மெய் உற்றறியும் கருவி என்றும், மூக்கு நாற்றம் உணரும் கருவி என்றும் கூறப் பெறும். மெய் என்பது உடல் முழுவதையும் குறிக்கும் என்றாலும் தலைமைபற்றித் தலையைக் கொள்ளவேண்டும்.

அறிவுக்கருவிகள் தலையில் இருக்கின்றன. தொழிற் கருவிகள் தலைக்குக் கீழே உள்ளன. இதனால் அறிவு தலையானது என்றும், தொழில் அடுத்த நிலையில் உள்ளது என்றும் அறியலாம். அதே நேரத்தில் அறிவு, தொழிலுக்கும் முதன்மை கொடுக்க வேண்டும் என்பதை, முடியில் மண் சுமந்த திருவிளையாடலால் மகேசன் அறிவிக்கின்றார். அவர் மட்டுமல்ல; மனித இனமும் முடியில் சுமை தாங்கி இதனை உணர்த்திக் கொண்டுதான் இருக்கின்றது. இதனால்தான் போலும் அப்பரடிகளும் சிறந்த ஞானியாயிருந்தும் (அறிஞராயிருந்தும்) உடலுழைப்பு இன்றியமையாதது என்று உழவாரப்பணியினை இடைவிடாமல் செய்வதன் மூலம் விளக்கிக்காட்டினார். அறிவுத்துறையில் பணியாற்றுவோர் உடலுழைப்பும் மேற்கொள்ள வேண்டும் அது உடல் நலத்திற்கும் சுகாதாரத்திற்கும் உலகியல் வாழ்விற்கும் நன்மை பயப்பதாகும்.

அறிவுக்கு அடுத்த தரத்தில் இருப்பது என்பதற்காக அது உதாசீனப்படுத்தக் கூடாது என்பதனை உணர்த்தவே

இறைவன் முடிமீது மண் சுமந்தான். இதனைப் பலரும் உணர்வதில்லை. ''வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமும் தோன்றும்'' என்ற அப்பர் அருள்வாக்கு இத் திருவிளையாடலை அறிவிக்கிறது. இதனை உணராததால் இழப்பு அம்மக்களுக்கே! பிறர்க்கில்லை.

உரிமையும் கடமையும் :

புண் சுமந்த பொன்மேனியினால், ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் சரியாகச் செய்யவேண்டும் என்பதையும், கடமை தவறினால் கடுந்தண்டனைக்குள்ளாவார்கள் என்பதை யும் உணர்த்துகின்றார்.

வேலை செய்து கூலி பெறுதலே இந்நாள் வரையிலுள்ள வழக்கமாகும். அதிலேயும் ஒரு புரட்சியை ஆண்டவன் இத் திருவிளையாடலால் செய்து காட்டினார். பிட்டமுதைக் கூலியாக வாங்கிக்கொண்டுதான் வேலைக்குச் செல்கிறார். ஆனால் வேலையே செய்யாமல் விளையாடுகிறார். இவ் விளையாட்டிலும் ஓர் உண்மை பொதிந்துள்ளது.

உலகில் எவரும் உரிமையைப் பெறவே விரும்புவர். கடமையைச் சரிவரச் செய்யார். இதனையே பரம்பொருள் வைகைக் கரையில் நடித்துக் காட்டுகின்றார். இக்காலம் வரையிலும் எவரும் பெறாத நிலையில் கூலியை முதற்கண் கேட்டுப்பெற்றார். இது மக்களின் உரிமை விரும்புவதைக் காட்டுகிறது. பின்னர், அவர் தம் கடமையாகிய கரை அடைத்தலைச் செய்யவில்லை. இது மக்களின் கடமை உணர்வின்மையை அறிவிக்கிறது. கடமை உணர்வின்றி உரிமை உணர்வுமட்டும் கொண்டு வாழ்வாரைக் கடவுள் அரசின் வழியே தண்டிப்பார் என்பதைத்தான் அப்பாண்டிய மன்னனிடம் பிரம்படி பெற்றதன்மூலம் உணர்த்துகின்றார். நாம் நன்னெறியில் நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் இறைவன் இத் திருவிளையாடல்களை நிகழ்த்தியுள்ளார் இவற்றை உணர்ந்து செயற்படுதல் நமது கடமையாகும்.

வேலைக்கு உணவுத்திட்டம் என்று அரசு கொண்டு வந்திருப்பதுகூடப் பல்லாண்டுகளுக்கு முன்பே இறைவன் இத் திருவிளையாடலால் காட்டிய ஒன்றேயாகும். அதுவும் வேலை செய்வதற்கு முன்பு உணவு பெறுதல் என்ற முற்போக்கு

நிலையில் நடித்துக் காட்டுகின்றார். இவற்றை எல்லாம் சிந்தித்துப் பார்த்தால் ஆண்டவன் பழமைக்குப் பழமையாயும் புதுமைக்குப் புதுமையாயும் திகழ்பவன் என்பதை உணர முடிகின்றதல்லவா? எனவே கடமை உணர்வோடு செயல்பட வேண்டும் என்பதனை உணர்த்தியே கண்ணுதற்கடவுள் பொன்மேனியில் புண் பெற்றார் என்பதனை உணர்ந்து உய்வோமாக !

புலமைக்குப் பரிசு :

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும் சொக்கநாதப் பெருமான் அருளீவிளையாடல் நிகழ்ந்த புனித நாளாகிய இவ் ஆவணிமூலத் திருநாளில் அப்பெருமானின் அடியொட்டி, மொழித்துறையிலும் சமயத்துறையிலும் தத்துவத்துறையிலும் அறிவியல் துறையிலும் பல்லாண்டுகள் பணியாற்றிவரும் அறிஞர் பெருமக்களைக் கடந்த 30 ஆண்டுகளாகப் பாராட்டிப் பட்டம் அளித்து அவர்கள் மென்மேலும் அத்துறையில் ஆக்க பூர்வமான செயல்கள் செய்ய அருளாசி வழங்கப்பட்டு வருகிறது. அம்முறையில் இவ்வாண்டு தமிழ்த்துறையில் புலமை நலம் சான்ற அன்பர் டாக்டர் திரு. சி. பாலசுப்பிரமணியம் அவர்கட்குச் 'சங்கத் தமிழ்ச் செல்வர்' என்னும் பட்டம் அளித்துச் சொக்கநாதப் பெருமானின் ஆசிக்கவசமாகப் பொன்னாடை போர்த்தி ஆசி வழங்கியுள்ளோம். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணிசெய்து வருபவர். மொழிப் புலமையோடு சமய ஈடுபாடும் உடையவர். அவர் மேலும் இத்துறையில் பணிசெய்து நலம் பல பெற்று நீடுவாழ எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

"தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து இடப்பதே"

46

சோதனையில் உய்ந்த சாதனை

[அப்பரடிகளிடம் அளப்பரிய பக்தி ஈடு பாடும், அவர் அருளிய தேவாரத்தில் தோய்வும் மிக்குத் திருவாமூரில் அப்பருக்கோர் ஆலயம் கண்ட குருமணிகள். அப்பர் பெருமான் சோதனைகளை எல்லாம் சாதனைகளாக ஆக்கிக்கொண்டு உய்ந்த திறத்தை, அருளியல் கண்ணோட்டத்துடன் அழகுற இங்கே சித்திரிக் கிறார்கள்.]

''கூற்றாயின் வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தனநான் அறியேன்
ஏற்றாய் அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்.
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடி யேன் அதி கைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே''

—திருநாவுக்கரசர்

ஆசாரியர்களின் பெருமை :

சைவசமயாசாரியர் நால்வருள் இரண்டாமவராக வைத்து எண்ணப்பெறுபவர் அப்பர் பெருமான். தேவாரம் அருளிய மூவருள் நடுவணராக வைத்துப் போற்றப்பெறும் சிறப்புடை யவர். அவர் அவதரித்த பெருமையைப்பெற்று விளங்குவது சிவம்பெருக்கும் சிறப்புடையதாகிய இத்திருவாமூர். சைவர் களுக்குக் குருவாக விளங்கும் இவர், இறையருளில் நிறைவுற்ற

---

* திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜைப் பெருவிழாவில் 29—4—'81 அன்று வழங்கியருளியது.

திருநாளே இச்சித்திரைச் சதயத்திருநாள். இந்நன்னாளில் இக் குருமூர்த்திக்குக் குருபூஜைப் பெருவிழா சிறப்புறக் கொண்டாடுகின்றோம். ஆசாரியர்கள் என்பவர்கள், மனத்தா லும் வாக்கா லும் செயலா லும் தூயவர்களாய் இருப்பவர்கள். தூய்மை இல்லாதவர்களை - தூயநெறியை அடையவேண்டும் என்று விரும்புபவர்களைத் தம் வாக்கா லும் வாழ்வு நெறியா லும் நன்னெறிக்கு அழைத்துச் செல்லும் சிறப்புடையவர்கள்.

குருபூஜை விழா :

நமக்குக் குருவாக இருக்கும் அத்தகைய சிறப்புடையவர் களைப் பூஜித்து வழிபடுகின்ற முறையால் அவர்களின் நினைவு நாளைக் குருபூஜைத் திருநாளாகக்கொண்டாடி மகிழ் கின்றோம். அப்படிக்கொண்டாடும் பொழுது அவர்கள் வழங்கிய அறவுரைகளை, வாழ்ந்துகாட்டிய நெறிமுறைகளை முற்றிலும் பின்பற்ற இயலாவிட்டா லும், ஆண்டிற்கு ஒரு சிலவற்றையாவது சிந்தித்தும், அவற்றின்வழி வாழ முயன்றும் நம்முடைய உயர்வுக்கு வழி வகுக்கும் நிலையில் இவ்விழாவைப் பயனுடையதாக்கிக்கொள்ளுதல் சைவமக்களின், சமய உணர் வுடையமக்களின் தலையாய கடமையாகும். அந்தவகையில் இந்த ஆண்டு அப்பரடிகள் வாழ்ந்துகாட்டிய நெறிமுறைகளில் ஏற்றுப் போற்றிக்கொள்ள வேண்டிய ஒரு சில கருத்துக்களை இங்கே சிந்திப்போம்.

பகைவனுக்கு அருள்வாய்:

ஒருவன் பகைமை பாராட்டுகின்றான் என்றால் அது அவன் அறியாமையால் நிகழ்வது. அந்தப் பகைமைக்கு ஆளாகின்றவன் நல்லவனாகவும் அறிவுடையவனாகவும் இருப்பானேயானால் அந்தப்பகைமையைப் பாராட்டியவனி டம் பகைமை கொள்ளமாட்டான்; மாறாக அவனது அறியாமையை நினைந்து இரக்கமே கொள்வான். இந்த உயரிய பண்புள்ளம் நாயன்மார்கள் அனைவரிடத்தும் காணலாம்; சிறப்பாக அப்பர் பெருமானிடத்தில் கான்போம்.

சோதனையால் பெற்ற சாதனை

திருநாவுக்கரசர் சமணசமயத்திலிருந்தபோது சூலை நோயால் துயருற்றார். அதுதீரப்பெறாமையால் திலகவதி யாரின் வழி சார்ந்து திருவதிகைவீரட்டானம் சேர்ந்து, இறை

யருளால் தேவாரம் அருளிச்செய்து நோய்நீங்கப்பெற்றார். இந்நிலையை அறிந்த சமணர்கள், தங்கள் தீய அறிவுரைகளால் மகேந்திரவர்மப்பல்லவன் மூலம் அப்பரடிகளுக்குப் பல இன்னல்களை இழைத்தார்கள்.

அவற்றில் ஒன்று; ஒருவாரகாலம் சுண்ணாம்புக் காளவாய் எனக்கூறப்பெறும் நீற்றறையில் இட்டச்செய்தனர். அப்பரடிகள் நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்ற உறுதி படைத்தவர் அல்லவா? பெருமானின் அஞ்செழுத்தை நெஞ் சழுத்தி நீற்றறையில்தங்கித் தவமிருந்தார். மாற்றாருக்கு நீற்றறையாக அது தோன்றினும் ஈசன் எந்தை இணையடி நீழலைப் பிரியாமல் இருந்த அப்பருக்கு மாசில்வீணையும் மாலைமதியமும் வீசுதென்றலும், வீங்கின வேனிலும், மூசுவண்டறை பொய்கையுமாகக் குளிர்ந்தது.

மற்றொன்று; நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்பித்தனர். அதனை, ''பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்'' என்னும் திருவள்ளுவர் வாக்கிற்கு இணைங்க நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியாருக்கு என்று கொண்டு நஞ்சு என அறிந்தும் உண்டு அமைந்திருந்தார். வஞ்சகரால் நஞ்சருந்தியும் மகேசன் அருளால் மாளாது வாழ்வு பெற்றுய்ந்தார்.

பிறிதொன்று; கல்லில்கட்டிக் கடலில் இட்டனர். கல்துணைப்பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும் நல்துணை யாவது நமச்சிவாயவே என்று உருவேற்றி, கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறினார்.

கலியுகமும் துவாபரயுகமும்:

இம்மூன்று நிகழ்ச்சிகளும் கலியுகத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள். இதற்கு முந்தியயுகத்தில், அதாவது, துவாபர யுகத்தில் நட ந்த வரலாற்று நிகழ்ச்சிகள் சிலவற்றையும் இவற்றுடன் ஒப்பிட்டுக் கண்டு உண்மைதெளியலாம்.

வஞ்சகநெஞ்சம் படைத்த துரியோதனாதியர்கள் நல்லுள்ளம் படைத்த பஞ்சபாண்டவர்கள் மீது கொண்ட பொறாமையால் அவர்கள் தங்கியிருந்த அரக்கு மாளிகைக்குத் தீயிட்டனர். கண்ணன் அருளால் பாண்டவர்கள் தப்பிப் பிழைத்தனர். இந்நிகழ்ச்சி நீற்றறையில் இட்ட நிகழ்ச்சியோடு நினைவு கூரத்தக்கதாம்.

அடுத்ததாகப் பொறாமையுள்ளம் கொண்ட துரியோதனன் பாண்டவர்களில் ஒருவனான பீமனுக்கு நஞ்சுகலந்த சோற்றை உணவாக அளித்தான். பீமன் அதை உண்டு சாகாது பிழைத்தான். மேலும் நச்சுப்பாம்பை அவன்மீது விட்டான். அவை எல்லாம் மூட்டைப்பூச்சிகளாய் நசுங்கி அழிந்தன. இந்நிகழ்ச்சி திருநாவுக்கரசருக்கு நஞ்சு கலந்த பால்சோறு ஊட்டிய நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் காணத்தக்கதாய் உள்ளது.

பின்னர்பீமனது கைகால்களைக் கயிற்றால் கட்டிக் கங்கையில் போடச் செய்தான். அதிலும் அவன் இறையருளால் தப்பினான். ஒருவாரகாலம் நாகலோகம் சென்றுவாசுகி உதவியால்பிழைத்து மீண்டும் வந்தான் என்று பாரதம் கூறுகிறது. இது. அப்பரடிகளைக் கல்லில் பிணைத்துக் கடலில் இட்ட வரலாற்று நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் காணக்கூடியது.

இந்த நிகழ்ச்சியில் ஒரு வேறுபாடு இருப்பதைக் காணலாம். துவாபரயுகத்தில் பகைவனைக் கங்கையில் போட எண்ணிய பொழுது கைகால்களைக் கட்டிப் போட்டார்கள். ஆனால் கலியுகத்தில் சமணர்கள், அப்பரடிகளைக் கடலில் இடும் பொழுது கல்லுடன் பிணைத்துக் கடலில் இட்டனர். இது கலியுகக் கடுமையைக் காட்டுவதோடு, முன்யுகத்தைக் காட்டிலும் பின்யுகத்தில் தீமை வளர்வதையும் காட்டுகிறது.

விழாவும் விழுமியபயனும் :

எனவே பொதுவாகத் துவாபரயுகமானாலும், கலியுகமானாலும் வஞ்சகர்கள், நேர்மையுள்ளவர்களுக்குப் பல இன்னல்கள் விளைவித்து வந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

வஞ்சனையும் பொறாமையும் கொண்ட துரியோதனாதியர்கள், நல்லுள்ளமும் அன்பும் கொண்ட பாண்டவர்களுக்குப் பல்வேறு வகையில் இன்னல்கள் செய்தாலும், அவற்றை எல்லாம் பொறுத்துக் கொண்டு அவர்கள்மீது பகைமை பாராட்டாது பாண்டவர்கள் சகோதர பாசத்துடன் நடந்து கொண்டார்கள் என்பதைப் பாரதத்தைக்கொண்டு அறிய முடிகிறது. அதேபோல, இக்கலியுகத்திலும் சமணர்களின் தூர்ப்போதனையினால் மனம் மாறிய பல்லவமன்னன், அப்பரடிகளுக்குச் சொல்லொணாத் துயரங்கள் இழைத்தபோதிலும்

பின்னர் அவனே மனம்மாறித் திருந்தித் தம்வழி வந்தபொழுது அவன் செய்த தீங்குகளை மறந்து மன்னித்து அவனைச் சைவ சமயத்தில் ஈடுபடுத்தி அவனையும் ஒரு பக்தனாக ஏற்றுக் கொண்டார் அப்பர் பெருமான் என்பதை அவரது வரலாறு கூறும் பெரியபுராணம் நமக்கு அறிவிக்கிறது.

எனவே நமக்குப் புகைமை உணர்வுடன் தீங்கு செய்த ஒருவனையும், அத்தீங்கினை எண்ணி அவனை வெறுக்காது அவன்மீது இரக்கம் கொண்டு அவனும் திருந்தி வாழ ஆவன மேற்கொள்ள வேண்டும் என்பதை இவ்விருதிறத்து நிகழ்ச்சி களும் எடுத்துக்காட்டி நம்மை வழிப்படுத்துகின்றன.

பகைவனுக்கு அருளும் பாங்காகிய இப்பண்பையே இவ் வாண்டின் குருபூஜைவிழாச் சிந்தனையாக எண்ணி ஏற்றுப் போற்றி அனைவரும் வாழ்வோமாக.

அப்பர் பெருமானின் குருபூஜைப் பெருவிழாவினை அவர் அவதரித்த இத்திருவாமூரில் திருப்பணிச்செல்வர் திரு. வாகீசம் பிள்ளை திரு. திருநாவுக்கரசுபிள்ளை உள்ளூர், வெளியூர் அன்பர்கள் முதலியோர் ஆண்டுதோறும் குருபூஜைவிழாக் கமிட்டியின் சார்பில் மிகச் சிறப்பாக நடத்திவருவது மகிழ்ச்சிக்குரியது; பாராட்டுதற்குரியது. விழாவில் பங்கு கொள்ளும் அன்பர்கள் பலரும் எல்லா நலன்களும் பெற்று நீடுவாழ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக் கின்றோம்.

"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங்கரன்"



47
சைவமே முதற்சமயம்

"வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கள் சடையானைத் தொடர்ந்து நின்றென்
பானைத் தவமாய தன்மையானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவன்டியே சிந்திக்கப் பெற்றேன் நானே"

—திருநாவுக்கரசர்

['இந்து' என்ற சொல் ஒரு மதத்தைக் குறித்து நிற்பது என்று கருதியிருப்பாரைத் தெளிவித்து, இச்சொல் இரக்க உணர்வுமிக்க ஒரு கூட்டத்தாரைக் குறித்து நிற்பது என்றும், பிற உயிர் துன்பம் கண்டு துவண்டு அதனை விரைந்து தீர்ப்பதும், இயலாவிடின் அவற்றிற் காக நெஞ்சார இரங்குவதும் இந்துக்கள் இயல்பு என்பதைச் சமய இலக்கிய சான்றுகள் காட்டி நிறுவும் குருமணிகளின் ஆழ்ந்த புலமை வெளிப்பாட்டை இங்கே தரிசிக்கிறோம்.]

இந்து – சொல்விளக்கம் :

இந்திய நாட்டிலுள்ள வேதவழிப்பட்ட சமயங்களைக் குறிக்கத் தற்போது 'இந்துமதம்' என்ற சொல் கையாளப்பட்டு வருகிறது. 'இந்து' என்ற சொல்பற்றிய விளக்கத்தைப் பலரும் பலவிதமாகக் கூறிவருகின்றனர். ஹிந்து என்ற சொல்

*13—12—'81 அன்று புதுக்கோட்டையில் நடைபெற்ற இந்து சமய மாநாட்டில் வழங்கியருளியது.

பாரசீகச் சொல். அதனைக்கிரேக்கர்கள் இந்து என்று வழங்கினர். அலெக்ஸாண்டர் இமயமலைக் கணவாய் வழியே சிந்துநதிக்கரைக்கு வந்தபோது அப்பகுதியில் வாழ்ந்த மக்களைச் 'சிந்து' என்று வழங்கினர் என்றும், அதுவே பின்னர் 'இந்து' என்று மாறி வழங்கலாயிற்று என்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சப்தகல் பத்ருமம் என்ற சம்ஸ்கிருதநிகண்டு, இந்த 'இந்து' என்ற சொல்லுக்கு ஒரு விளக்கம் தருகின்றது. ''ஹீநம் துஷய திஇதி'' என்று; அதாவது, ஈனனையோ ஈனச்செயலையோ வெறுப்பவன் என்ற காரணத்தால் அவன் இந்து எனப்படும் ஜாதியினன் ஆயினன்' என்பது அந்நிகண்டு கூறும் விளக்கம். ஹிந்தி நிகண்டு ஒன்று வேறு விளக்கம் கூறுகின்றது 'வேதம், ஸ்மிருதி, புராணம் முதலியவைகளையோ இவைகளில் ஒன்றையோ பின்பற்றி நடப்பவர் இந்து ஆவார்' என்பது அந்நிகண்டு கூறும் விளக்கமாகும். ஹிம் - ஹிப்சையில், து - துக்கமடைபவன் என்று லேதவாக்கியம் ஒன்று விளக்கம் கூறுகிறது என்பர். ''ஹிம்ஸாயாம் தூயதேய : ஸ : ஹிந்து : இத்யபிதீயதே'' என்பதால் ஹிம்சையைக்கண்டு வருந்துபவன் இந்து எனப்படுவான் என்பது அதன் விளக்கமாகும்.

எனவே 'இந்து' என்பது ஒரு குழுவைக் குறிக்க எழுந்த சொல் என்றும், அக்குழு இரக்க உணர்வு மிகுந்தவர்களைக் கொண்டதாக இருப்பது என்றும் விளக்கம் காணலாம். பிற உயிரினங்கள் துன்புறும் நேரத்தில் அதனைத் துடைக்க எண்ணுவதும், அங்ஙனம் துடைக்க இயலாவிடில் அது கண்டு துன்புறுவதும், இந்து எனப்படுவான் ஒவ்வொருவனுக்கும் உரிய பண்பு என்பதை உரிய விளக்கமாகக் கொள்ளலாம்.

இலக்கிய விளக்கம் :

இப்பண்பு விளக்கம் நம் அறநூல்கள் பலவற்றிலும் பரக்கக் காணலாம். சேக்கிழார், திருக்குறிப்புத்தொண்டர் வரலாறு கூறும் பகுதியில்,

> ''தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத்
> தூய மாந்தர்வாழ் தொண்டை நாட்டியல்பு
> [சொல்வரைத்தோ ?''

என்று கூறுகின்றார். பின்னே வந்த தாயுமான சுவாமிகள்,

''எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய்! பராபரமே''

என்று அருளிச்செய்கின்றார். எல்லா உயிர்களையும் என்னுயிர் போல் எண்ணவும், அவை வேதனைப்படுகிறபோது இரங்கும் உள்ளம் பெறவும் நின் தெய்வ அருட்கருணையைத் தருவாய் என்று வேண்டுவது 'இந்து', எனும் சொல்லுக்குரிய விளக்கமாகும்.

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே''

என்று, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுவதோடு மட்டும் அமைந்துவிடாமல் துன்புறும்வழித் துயர் துடைக்கும் உள்ளமும் வேண்டும் என்று வேண்டுகின்ற தாயுமானாரின் உள்ளம் பெற்றவர் இந்து எனப்படுவார். இந்நூற்றாண்டுக் கவிஞர் பாரதியாரும் இக்கருத்தினராய்,

''பக்கத்து இருப்பவர் துன்பம் பார்க்கப் பொறாதவன்
புண்ணிய மூர்த்தி''

என்று பாடினார். எனவே அருளாளர்களும் அறநூலாசிரியர் களும் ஒத்த கருத்தினராய், துன்புறும் உயிரின் துன்பம் துடைக்க முனைவதும், இல்லையேல் வருந்துவதும் இந்து மதத்தைச் சார்ந்த ஒவ்வொருவரின் அடிப்படைக் குணம் என்பதை விளக்கிக் கூறியுள்ளனர்.

செயல் விளக்கம்

மேலும் அன்றாடம் மேற்கொள்ளுகின்ற செயல்களிலும் இக்குணம் மேலோங்கி இருப்பதனை உணரலாம். எறும்பு போன்ற உயிரினங்கள் பலவும் உண்ணப் பயன்படும் வகையில் அரிசி மாக்கோலம் இடுதல், காக்கைக்கு உணவு இடுதல் எறும்புப் புற்றுக்கு அரிசி போடுதல் போன்ற பழக்கவழக்கங் களிலும் பிற உயிரினங்களின் மேல் நாம் கொண்டுள்ள இரக்கம் தெள்ளிதின் புலனாகும்.

சங்ககாலத்திலும் முல்லைக்குத் தேரீந்த பாரியின் மனநிலை யும், மயிலுக்குப் போர்வையைத் தந்த பேகனின் உள்ளமும் இதேநோக்கம் கொண்டிருத்தலை வரலாறு கொண்டு உணரலாம்.

எனவே, பிற உயிர் படுகிற துன்பம் கண்டு இரங்குவது இந்து இனத்தைச் சேர்ந்தவனின் உயிர்க்குணம் என்பதும் அதுவே இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கை என்பதும் தெளிவு கொள்ள வேண்டியவைகளாகும். இதுபற்றியே புலால் உண்ணாமையை இந்து மதத்தில் வற்புறுத்தப்படுகிறது.

சைவமே முதற்சமயம்

இந்துக்களின் சமய நெறியினை வகுத்துரைக்கும் நூல் வேதம் எனப்படும். வேதவழிப்பட்ட சமயத்தை வைதிகசமயம் எனக்குறிப்பர். அந்த வேதத்தில் வருணன், அக்கினி, வாயு, சூரியன் முதலான பல தெய்வங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் சிவபரம் பொருளே முதன்மையும் தலைமையும் உடையது என்பதை விளக்கியுள்ளனர்.

சிவனை வழிபடும் சைவமே மிகப்பழமையானது என்பதை மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் காணக் கிடைத்த அகழ்வாய்வுப் பொருள்களாலும், வேதாகம புராண இதிகாசங்களாலும் நன்கு தெளியலாம். மேலும் திருக்கயிலாயம், கேதாரம், அமரநாதம் போன்ற இடங்களில் சிவலிங்கமே உள்ளது. சக்தியைத் தனித்துப் பிரித்து வழிபாடு செய்தது பிற்காலநிலையாகும். சத்தியை இணைத்து வழி பட்டதே முற்காலநிலை. திருமுறை ஆசிரியர்கள் முருகனையும் கணபதியையும் அம்பாளையும் துதிக்கும்போது சிவ பெருமானோடு இணைத்தே துதித்து வழிபாடுசெய்தமையை அவர்கள் அருளிச்செய்த பதிகங்கள் சான்றுபகர்கின்றன.

"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்"

என்ற அப்பர் பெருமான் பாடலும் இதுபற்றி விளக்குவதைக் காணலாம். காஞ்சிபுரத்தில், பாடல் பெற்ற தலங்களாகப் போற்றப்பெறும். திருக்கச்சித்திரு ஏகம்பம், திருக்கச்சிநெறிக் காரைக்காடு, திருக்கச்சி அநேகதங்காவதம், திருக்கச்சிஏண காந்தன்தளி, திருக்கச்சிமேற்றளி ஆகிய ஐந்து தலங்களிலும் அம்பிகைக்கு மூல விக்கிரகம் இல்லை என்பதும் ஐந்து தலங்களுக்கும் அம்பாள் ஏலவார்குழலி என்னும், உற்சவ விக்கிரகமே உள்ளது என்பதும், பழமையான வழிபாட்டு முறையில் சக்தியைப் பிரித்து வழிபடுவது இல்லை என்பதை

விளக்குகிறதன்றோ! இலிங்கத்தைச் சிவமாகவும், பீடத்தைப் பிரிப்பின்றித் திகழும் சத்தியாகவும்கொண்டு வழிபட்டனர் நமது முன்னோர்.

ஆதலால் சக்தியை வழிபடும் சாக்தம், முருகனை வழிபடும் கௌமாரம், கணபதியை வழிபடும் காணாபத்தியம், திருமாலை வழிபடும் வைணவம் என்பவை காலத்தின் நிலையில் பிந்தியவை என்பதும், அவை அனைத்தும் சைவத்தின் உட்பிரிவுகளே என்பதும் வரலாற்றாய்வு மிக்காரும். நுணுகி ஆய்வோரும் உணர்ந்து கொள்ளலாம்.

எந்தச் சமயத்திலிருந்து எந்தக் கடவுளை வழிபட்டாலும் அது சிவபரம் பொருளையே அடையும் என்பதும் சைவக் கருத்தாகும். உதாரணமாக எந்த ஆற்றில் ஓடும் நீரும் முடிவில் கடலையே சென்று அடைவதுபோல எல்லாச் சமயங்களும் ஒரு பரம்பொருளையே அறிவிக்கின்றது என்பது வேதவாக்கியம், அதனால்தான் அருள் நந்திசிவமும்.

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்"

என்று விளக்கியருளினார்.

பிரச்சாரம் தேவையா ?

இத்தகைய சிறப்புடைய இந்துமதக் கருத்துக்களை அறிந்து அவற்றில் நம்பிக்கை கொண்டு பின்பற்றுவோர் இன்று நாட்டில் கோடிக்கணக்கில் உள்ளனர். நாத்திகம் பேசுவோரும்கூட ஒரு காலத்தில் பேசிய கருத்துக்களைப் பிற்காலத்தில் தம் அனுபவங்கள் தரும் பாடத்தினால் மாற்றிக் கொள்கின்றனர். இளமையில் ஏதோ ஒரு வேகத்தில் பலவிதக் கருத்துக்களைப் புரியாமல் பேசிவந்தாலும் காலம் தரும் கஷ்ட நஷ்டங்களாகிய அனுபவங்கள் தமக்கு நேரடியாக வரும்போது யாரும் மாறத்தான் செய்கிறார்கள். இதுவும் இயற்கை நியதியே. எனவே இன்றைய நிலையில் சமய நம்பிக்கை பற்றியோ, அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றோ பிரச்சாரம் செய்யத்தேவை இல்லை. அங்கங்கே நடக்கும் அதிசயங்களும் ஆங்காங்கே இருக்கும் இறையருள் செயற்பாடுகளுமே அவ்வேலையைச் செய்துகொண்டுதான் இருக்கின்றன. உதாரணமாக இந்த ஊரிலேயே ஓர் அதிசயம்

இருக்கிறது இவ்வூர்த்தலவரலாற்றில் காமதேனு என்னும் பசு கல் மலையைத் தன் கொம்பினால் கீறி அதில் ஊறும் நீரைக் காதில் முகந்துவந்து இவ்வூர்ப் பெருமானுக்கு அபிஷேகம் செய்வித்தது என்று உள்ளது. அதன் தொடர்பில் இவ்வூர்த் திருக்கோயிலின் மேல் சுமார் 25 அடி உயரத்தில் ஒரு சுனை உள்ளது. அதன் நீர், என்றும் எந்த வறட்சிக் காலத்திலும் முற்றிலும் வற்றாமல் இருக்கிறது. பூமியில் தரைமட்டத்திலுள்ள கிணற்றிலும் திருக்குளத்திலும் உள்ள நீர் வற்றிவிடுவதையும் பலநேரங்களில் தண்ணீரே இல்லாதிருப் பதையும் காணமுடிகின்ற இந்த ஊரில் 25 அடிக்குமேல் மலைப் பகுதியிலுள்ள சுனையில் தண்ணீர் வற்றாமல் இருக்கிறது என்றால் அது வியப்பாக உள்ளதன்றோ ! கண்ணுக்கும் கருத்துக்கும் புலப்படாத இதைத்தான் இறையருள் என்று கூறுகிறோம்.

மாநாடுகள் ஏன் ?

அங்ஙனமெனில் இதுபோன்ற மாநாடு கூட்டி எதைச் சிந்திக்கவேண்டும் ? என்ற கேள்விக்குரிய விடையினை ஆழமாகச் சிந்தித்தல் நலம் பயக்கும். இந்நாட்டில் வானளாவிய கோபுரங்களை உடைய திருக்கோயில்களுக்குப் பஞ்சமில்லை. அக்கோயில்களை நோக்கி வந்து வழிபடும் அன்பர்களுக்கும் பஞ்சமில்லை. அவர்களை நல்வழிப்படுத்தும் ஞானிகளுக்கும் பஞ்சமில்லை. சமய நூல்களையும் தத்துவ நூல்களையும் ஆக்கி அச்சிட்டு வெளியிடும் பணியினையும், அறநிலையங்கள் அமைத்தும், மாநாடுகள் கூட்டியும் நல்ல கருத்துக்களை வெளியிடும் பணியினையும், உயிர் மூச்சாகச் செய்துவரும் திருமடங்களுக்கும் பஞ்சமில்லை. பின் எங்கேதான் குறை இருக்கிறது ? எனின் இவை அனைத்தும் ஒருங்கு இணைந்து திட்டமிட்டுச் செயல்படாததே குறை ஆகும். நியாயங்களை, அங்கும் இங்குமாகப் பேசிக்கொண்டு இல்லாமல் ஓர் இயக்கத்தின் கீழ் இருந்து சொல்லவும் அதன் வழிச் செயற்படவும் இயலாமல்போனமையே இன்று தோன்றி உள்ள பல பிரச்சனைகளுக்கு மூலகாரணங்களாகும்.

இவைபோன்ற கருத்துக்களைச் சிந்திக்கவும் செயற்படத் தேவையான ஆக்க பூர்வமான பணிகளைத் திட்டமிடவும் இது போன்ற மாநாடுகள் நடைபெறுமானால் அது நாட்டின் எதிர்கால நன்மைக்கும், குறிப்பாகச் சமய வளர்ச்சிக்கும் அன்பர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கும் பயன்தரும் என்பது உறுதி. இவ்வடிப்படையில் சமய நிறுவனங்களும், சமய வளர்ச்சியில் நாட்டம் கொண்டுள்ள அன்பர்களும் ஏன் ? அரசும் சேர்ந்து செயற்படுத்தவேண்டிய திட்டங்களைப்பற்றிச் சிந்திப்போம்.

நல்லன யாவும் நன்கு நடந்திட
வல்ல அமைப்பை வகுத்து நடத்துவோம்.



48
வேதங்களின் உள்ளீடு*

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

— திருஞானசம்பந்தர்.

[தென் தமிழ்ப் புலமையோடு, வடமொழி வேத சிவாகமங்களிலும் தோய்வும் பயிற்சியும் மிக்க குருமணிகள். நமது சைவத்தின் மூலநூல்களாகிய வேதங்களின் தோற்றம், அவற்றின் பகுப்பு, அவை ஒவ்வொன்றின் உள்ளீடு, வேதங்களில் ஐந்தெழுத்துத் திருமந்திரங்கள் பேசப்படும் திறம், சிவாகமங்கள் முதலியன பற்றி வழங்கியருளிய சிந்தனை உரை இது.]

வேதத்தோற்றம் :

வேதம் என்பது அறிவுநூல், அது ஆன்ம அறிவை விளக்கும் பொருட்டுப் பரமேஸ்வரனால் அருளிச் செய்யப் பெற்றதாகும். வேதத்தினைப் பரமேஸ்வரனின் மூச்சுக் காற்றென்றே கூறுவர். இறைவன் ஓதியருளிய இவ்வேதத்தை கௌசிகர், சாகலர், பாஷ்கலர், மாண்டூகர் முதலியரிஷிகள் பன்னூற்றுவர் கேட்டறிந்து உலகுக்கு வழங்கினர். ரிஷிகளே வேதங்களை இயற்றினர் என்று கூறுதல் மரபாகாது. இந்த

* 12—2—'82 அன்று திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற பிரும்ம ஸ்ரீ. T.V. இராஜி சாஸ்திரியார் அவர்களின் சதாபிஷேக வேத பாராயணப் பாராட்டு விழாவில் வழங்கியருளியது.

ரிஷிகளிடமிருந்து வழிவழியாகக் கேட்டே வேதம் ஓதிவரப் படுகின்றது. இதுபற்றியே வேதத்தைச் சுருதி என்பர். தமிழில் இதனைக் கேள்வி நூல் எனக்குறித்தனர். இவ்வேதம் கடல்போல் அளக்க ஒண்ணாதது.

வேதப்பகுப்பு :

இத்தகு அரும்பெரும் வேதத்தை முதன்முதல் வகைப் படுத்தியவர், பாதராயணர் என்னும் இயற்பெயரையுடைய வேதவியாசரேயாவர். இவர் ருக்வேதம், யஜுர்வேதம், சாம வேதம், அதர்வணவேதம் என வேதத்தை நான்காகவகுத்தார். ஒவ்வொருவேதமும் மந்திரபாகம், பிராமணபாகம், ஞான பாகம் என மூன்று பிரிவுகளையுடையது. அவற்றுள் மந்திர பாகமும். பிராமணபாகமும் கர்மகாண்டம் எனவும், ஞான பாகம் ஞானகாண்டம் எனவும் பேசப்பெறும். மந்திரபாகம் எனப்படுவது பிரமன், விஷ்ணு, ருத்ரன், அக்கினி, வருணன், வாயு சூரியன், அஸ்வினிதேவர்கள் முதலிய தெய்வங்களைப் போற்றியுரைப்பனவாகும். பிராமணபாகம் என்பது மேற் கூறிய மந்திரங்களைக் கொண்டு வேள்விமுதலிய கிரியைகளைச் செய்யும் முறைகளை விளக்குவனவாகும். ஞானபாகம் அதாவது ஞானகாண்டம் என்பது உபநிடதங்களாகும். மேற் கூறிய மந்திரபாகங்களையும், பிராமண பாகங்களையும் இணைத்துக் கர்மகாண்டம் என்றும் அற்பசுருதி என்றும் கூறுவர். உபநிடதங்களை ஞானகாண்டம் என்றும், பிரம காண்டம் என்றும், வேதாந்தம் என்றும், பிரபல ஸ்ருதி என்றும் கூறுவர். ஒவ்வொருவேதத்திலும் கர்மகாண்டம், ஞானகாண்டம் என்ற இருபகுதிகளும் உண்டு. முதலாவதாகிய கர்மகாண்டச் செயல்முறைகள் அனைத்தும் ஞானம் கிடைத்தற்கு அடிப்படையாக அமைவன. எனவேதான் ஒவ்வொரு வேதத்திலும் கர்மகாண்டம் முன்னாகவும், ஞான காண்டம் (உபநிடதங்கள்) பின்னாகவும் அமைந்துள்ளன. சிக்ஷை, வியாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜோதிடம், கற்பகம் என்ற ஆறு அங்கங்களையும் உணர்ந்தால்தான் இவ்வேதங் களை ஓதியுணர்தல் கைகூடும்.

ருக்வேதம் :

'ருக்' என்ற சொல்லுக்கு மந்திரம், பாட்டு என்பது பொருள். ருக்வேதத்தில் மந்திரப்பாடல்கள் மிகுதியாகவும்,

கிரியாபாகங்கள் (வேள்வி பற்றிய பகுதிகள்) குறைவாகவும் உள்ளன. இப்பெரும்பான்மைபற்றியே இவ்வேதம் ருக்வேதம் எனக்காரணப் பெயர்பெற்றது. தமிழில் இதனை 'இருக்கு' வேதம் என்பர். இது தொகுக்கப்பட்ட காலத்தில் ஆயிரம் சாகைகளைக் (பிரிவு) கொண்டிருந்தது. இப்பொழுது 21 சாகைகளே உள்ளன திருஞானசம்பந்தர் தேவாரத்துள் ''மூந்தியதேவர்கூடி முறைமுறை இருக்குச்சொல்லி'' என்றும், ''வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப் போதத் தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே'' என்றும் கூறப் படுவதால் ருக்வேதம் மந்திரமாகப் பாடல்களைச் சிறப்பாகக் கொண்டுள்ளது என்பதை அறியலாம்.

யஜுர்வேதம் :

'யஜ்' என்ற வேர்ச்சொல் வேள்வியைக்குறிக்கும். இவ் வேதத்தில் மந்திரபாகங்கள் குறைவாகவும், கிரியாபாகங்கள் அதாவது - பிராமணபாகங்கள் (செய்முறை) மிகுதியாகவும் கூறப்பட்டுள்ளதால் இது யஜுர் வேதம் எனக் காரணப்பெயர் பெற்றது. இது பற்றியே வேள்விக்கிரியையாகிய பிராமணங் களைச் செய்பவர்கள் பிராமணர் எனப்பட்டனர். இவ்வேதம் கிருஷ்ணயஜுர் (தைத்ரியம்). சுக்கிலயஜுர் (வாஜசனேயம்) என இரண்டாகக் கூறப்பெறும். சுக்கிலயஜுர் கிருஷ்ண யஜுரைவிடத் தெளிவு மிக்கது என்பர். இவ்வேதத்திற்கு 101 சாகைகள் இருந்தன. இப்பொழுது கிருஷ்ணயஜுர் வேதத்திற்கு 41 சாகைகளும், சுக்லயஜுர் வேதத்திற்கு 15 சாகைகளும் ஆக 56 சாகைகளே உள்ளன. கிருஷ்ணயஜுருக்கு 32 உபநிடதங்களும் சுக்கிலயஜுருக்கு 17 உபநிடதங்களும் உள்ளன.

சாமவேதம் :

சாமம் என்ற சொல்லுக்கு ''கானம்'' (இசைப்பாட்டு) என்றும், சிவபரம்பொருள் என்றும் பொருள் கூறுவர். 'சாம கண்டன்' என்றும், 'சாமமும் ஓதுவதுடையார்' என்றும், திருமுறைகள் சிவத்தைக் குறிக்கின்றன. இவ்வேதம் இசைப் பாடல்களாக அமைந்துள்ளது. இது ஆயிரம் சாகைகளை உடையதாயிருந்தது. ''சாகை ஆயிரம் உடையார்'' என்பது ஞானசம்பந்தர் வாக்கு. இப்போது 17 சாகைகளே உள்ளன.

இதில் உள்ள மந்திரங்கள் 1875 ஆகும். அவற்றுள் சாம மந்திரங்கள் 85 தான், 1725 மந்திரங்கள் ரிக் வேதத்திலிருந்து எடுக்கப்பட்டவை. மற்ற 65 மந்திரங்கள் யஜுர், அதர்வண வேதமந்திரங்களாகும். இது டச்சு, ஜர்மன், ஆங்கிலம், வங்காளி, இந்தி மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது. ஜர்மானியர்கள் இதை, சுவரத்துடன் இசைத்தட்டில் பதிவு செய்து பாதுகாத்துவருகின்றனர். சாமகானத்தை, வேயகானம், ஆரண்ய கேயகானம், ஊஹகானம், ஊஹ்யகானம் என நான்காகப் பகுத்துள்ளனர். சாமத்தில் 52 தேவர்கள் போற்றப்படுகின்றனர். அவர்களைப் போற்றுவதெல்லாம் ஒரே தேவரான ஈசனையே சேரும் எனப் பேசுகிறது சோமன் என்ற சொல் சர்வேஸ்வரனையும் குறிக்கும் என்றும், அவன் சாதியை விரும்புவதில்லை என்றும், ஆண் பெண் வேற்றுமைகள் அவனுக்கு இல்லை என்றும், எல்லோரும் அவன் குழந்தைகளே என்றும் கூறப்படுகிறது.

அதர்வணவேதம் :

அதர்வ என்ற சொல்லுக்கு அனல் (நெருப்பு), சிவன் என்ற பொருள்கள் உண்டு. அறியாமையை அதர் என்னும் அனல் எரிப்பதால் அதர்வ வேதம் எனப் பெயர் பெற்றுள்ளது என்பர். செம்மேனி எம்மானாக, செம்பொருளாக உள்ள பரம் பொருளைப் பற்றிப் பேசுவதாலும் இப்பெயர் பெற்றது என்பர். மேலும் அதர்வன் என்னும் அறிஞர் இம்முறையில் உள்ள மந்திரங்களை அதிகம் பிரசாரம் செய்ததால் அவரது பெயரால் இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். பிரம்ம வித்தையைப் பிரகாசம் செய்வதால் இதற்குப் பிரம்மவேதம் என்ற பெயரும் உண்டு. துஷ்டசம்ஹாரத்தைத் தூண்டுவதால் க்ஷத்ரவேதம் எனவும் வழங்குகிறது. நோய்பற்றியும், அது தணிக்கும் மருத்துவம் பற்றியும் பேசப்படுகிறது. ருத்ரனின் கோபச்சிறப்பைச் செம்மைப்படுத்திக் கூறுவதால் அதர்வணம் என்று அழைக்கப்படுகிறது. இதற்கு ஒன்பது சாகைகள் உள்ளன. அதர்வணவேதம் ஓதுவோர் தென்னாட்டில் இல்லை எனத் தெரிகிறது. காசியிலும், காஷ்மீரத்திலும் சிலரே உள்ளனர் என்பர். இதற்கு 31 உபநிடதங்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஜர்மன், ஆங்கிலம், வங்காளி, இந்தி முதலிய மொழிகளில் இவ்வேதம் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

நமசிவாய மந்திரம் :

இந் நான்கனுள் அதர்வண வேதத்தை நீக்கி வேதத்தை மூன்றாகவே கூறுவர். இம்மூன்றில் நடுவணது, யஜுர் வேதம். இது ஏழு காண்டங்களையுடையது. இவற்றின் நடுவணதாகிய நாலாவது காண்டத்தின் நடுவில் (வேதத்தின் இருதய கமலத்தில்) பரமேஸ்வரனை நமஸ்கரிக்கும், நமகம், எனப்படும் ஸ்ரீருத்ரம் அமைந்துள்ளது. இந்த ஸ்ரீருத்ரமந்திரத்தின் நடு நாயகமாக மகாமந்திரமாகிய 'நமசிவாய' என்ற பஞ்சாட்சரம் அமைந்திருப்பது பெருஞ்சிறப்பாகும். இதனையே ''வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது, நாதன் நாமம் நமசிவாயவே'' என்று ஞானசம்பந்தரும் சிறப்பாக எடுத்துப் போற்றியுள்ளார்.

நால்வகைப்பேறுகள் :

வேதங்கள் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற நான்கு பேறுகளையும் பல கோணங்களில் பெரிதும் எடுத்துரைக்கின்றன. தமிழில் இவற்றை அறம், பொருள், இன்பம், வீடு என்பர். இவற்றை அடைவிப்பனவே நூல்களின் நோக்கமாக வேண்டும் என்பது மரபு. பொருளை அறவழியில் ஈட்டுக. ஈட்டியபொருளைத் தருமம், காமம், மோட்சம் என வகைப்படுத்தி வழங்கித் தனக்கும், தன் குடும்பத்தார்க்கும், நாட்டுக்கும் நலம் பயப்பவராக அனைவரும் வாழ வேண்டும் என்பதே வேதத்தின் நோக்கம்.

ஆகமங்கள் :

வேதத்தில் கூறப்பட்டுள்ள நடைமுறைப்படுத்த இயலாத யாகங்களையும், பயன்கருதி மட்டுமே செய்யப்படும் கிரியைகளையும் விலக்கி மந்திரப்பகுதிகளின் சாரங்களையும், உபநிடதங்களாகிய ஞானப் பகுதிகளின் சாரங்களையும் இணைத்து யாவர்க்கும் பயன்படும் வண்ணம் பரமேஸ்வரன் அருளிச் செய்தனவே சிவாகமங்கள் எனப்படுவன.

வாழ்த்துரை :

வாழ்வியல் நெறிமுறைகளாகிய தருமத்தின் வழிநின்று பொருள் ஈட்டி, பின் இவற்றை உரியவகையில் வழங்கி உலகப் பற்றிலிருந்து விடுபட்டு - உலகுக்கு அப்பாற்பட்ட சிவபரம் பொருளோடு இரண்டறக் கலந்து பேரின்பப் பெருவாழ்வு

பெற்று அனைவரும் வாழவேண்டும். அறுபதாண்டுகட்கும் மேலாக ஸ்ரீ அமிர்தகடேசர் ஆலயத்தில் வேத பாராயணப் பணிசெய்து சிரஞ்சீவித்துவம் பெற்றுத் திகழும் பிரம்மஸ்ரீ இராஜு சாஸ்திரிகளுக்குப் பக்தர்கள் சதாபிஷேக விழாக் கொண்டாடுவதும், அதன் நினைவாக வேதபாராயண சபை நிறுவி வேதபாராயணத்தை வளர்ப்பதும் பாராட்டிற்குரியன. இப்பணியில் பெரும் பங்கு கொண்டுள்ள ஆக்கூர் திரு. T.R. அகோரம் ஐயர் உள்ளிட்ட அனைவருக்கும் விழா நாயகர் பிரும்மஸ்ரீ சாஸ்திரிகளுக்கும், சிறப்புரை யாற்றும் உயர்நீதிமன்ற நடுவர் உயர்திரு. T.N. சிங்காரவேல் B.A B.L., அவர்களுக்கும் எல்லா நலமும் பெருக ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கர் திருவருளைச் சிந்திக்கிறோம்.

வாழ்க உலகெலாம்!

"வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுடன்னுக"



49
இந்து மதத்தின் இரு கண்கள்

"மாலாகி நான்முகனாய் மாபூதமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வுமாகிப்
பாலாகி எண் திசைக்கும் எல்லையாகிப்
பரப்பாகிப் பரலோகம் தானேயாகிப்
பூலோக புவலோக சுவலோக மாய்ப்
பூதங்களாய்ப் புராணன் தானேயாகி
ஏலாதன வெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்றவாறே"

— திருநாவுக்கரசர்

[எல்லா மதங்களையும் நேசிப்பதும், எல்லா மதக்கோட்பாடுகளையும் அறிவதும், ஆராய வழிகாண்பதும், சமயத்தலைவர்கள் அனைவரையும் வரவேற்றுப் போற்றுவதுமாகிய பண்பாடு மிக்க குருமணிகள் சைவமும் வைணவமும் இந்து மதத்தின் இரு கண்களாக விளங்கும் தீறத்தை அழகுற விளக்கியருளியது].

சைவமும் வைணவமும்:

சைவமும் வைணவமும் இந்து சமயத்தின் இருகண்கள் போன்றவை. எல்லாச் சமயங்களும் மக்களுக்கு நல்வழி புகட்டி நன்மை தரவே தோன்றின. ஆனால் அச்சமயங்களைப் பின்பற்றுவோர்கள் பிற்காலத்தில் செய்த குறைகளினால்

* 5—4—'82 அன்று ஸ்ரீ வானமாமலை திருமடம் 28ஆவது ஆசாரியார் ஸ்ரீ மத் பரமஹம் ஸேத்யாதி ஸ்ரீ சடகோப இராமானுஜ ஜீயர் சுவாமிகள் தருணமயாதினத்திற்கு எழுந் தருளியபோது வழங்கியருளியது.

அச்சமயங்களுக்குள் குறைகளும் பிளவுகளும் ஏற்படலாயின. சமயப் பொதுமையும் சமய உணர்வும் மக்கள் மத்தியில் பரவவும், அவற்றின்வழி மக்கள் அனைவரும் வேறுபாடு நீங்கி ஒற்றுமையுடன் வாழவும் சமயம் சார்ந்தவர்கள் ஒன்றுபடுதல் இன்றியமையாததாகும். அவ்வகையில் இன்று ஸ்ரீ வானமாமலை திருமடத்தின்கண் 28ஆவது ஆசாரியராய் வீற்றிருந்து தொண்டு புரிந்துவரும் ஸ்ரீமத் ஜீயர் அவர்கள் இவ்வாதீனத்திற்கு வந்திருப்பதும் அவர்களை வரவேற்றுமகிழ்வதும் எடுத்துக்காட்டுக்களாய் அமைந்துள்ளன.

ஆதீன அருள்வரலாறு:

தருமையாதீனம் இன்றைக்கு நானூறு ஆண்டுகட்குமுன்பு தோன்றிச் சைவசமயமும் தமிழும் ஒருங்கு தழைக்கத் தொண்டாற்றி வருவது. ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளால் தோற்றுவிக்கப்பெற்றது. மதுரை ஸ்ரீ சொக்கநாதப்பெருமானைக் கண்ணுக்கு இனிய பொருளாகக் கைவரப் பெற்ற குருமூர்த்திகளின்வழி அப்பெருமானை நாளும் பூஜித்து வரும் நியமம் உடையது. திருக்கயிலாய பரம்பரையின் வழிவந்து இல்லற ஞானியாய் விளங்கிய திருவாரூர் கமலை ஞானப்பிரகாசரைத் தம் ஞானாசிரியராகக் கொண்ட குரு முதல்வரின் வழி சைவப் பயிர் தழைக்க ஒல்லும் வகை சமயப் பணி செய்து வருவது. இங்கே பதினாறு ஒடுக்கங்கள் அமைந்திருத்தலுக் கேற்பப் பிராசாதயோக அனுபூதிமான்கள் பலரும் தோன்றி வாழ்ந்து வழிகாட்டிய சிறப்புடையது.

ஸ்ரீவானமாமலை வரலாறு :

ஸ்ரீ வானமாமலை திருமடம் வைணவத் திருமடங்களில் தென்கலைத் திருமடமாக விளங்குவது. உரோமச முனிவரின் தவத்திற்கிரங்கித் திருமால் வானம் என்ற வைகுந்தத்திலிருந்து கீழிறங்கி மலைக்கண் தோற்றமளித்தபடியால் வானம் ஆம்மலை எனும் காரணப்பெயர் பெற்றது. ஆதிசேஷன் அங்கே இறைவனைக் குறித்து வழுவிலா அடிமைகள் செய்த தலமாதலின் "நாகணைச்சேரி" என்றும் சேற்றுத் தாமரைக் குளத்தில் மூழ்கியிருந்த திருமாலின் திருமேனியை வெளிக் கொணரும்பொருட்டு அவ்வேரியை நான்குகூறாக வெட்டிய தால் "நான்குனேரி" என்றும் அழைக்கப்படுகிறது. இத்தகைய சிறப்புக்கள் பல பெற்ற அவ்வூரின் கண் ஸ்ரீ ரங்காசாரியாரின்

இரண்டாவது புதல்வராகத் தோன்றியவர் அழகியவரதர் ஆவார். இவருக்குப் பன்னிரண்டுவயது நிரம்பிய நிலையில் திருவாய்மொழிப்பிள்ளை என்னும் அருளாளர் இவரை ஆழ்வார்நகரிலுள்ள தம்சீடராகிய மணவாளமாமுனிகள் என்பாரிடம் சீடராக ஒப்படைத்தார் அவ்வாசிரியரை விட்டகலாது தொண்டுகள் புரிந்துவந்த அழகியவரதர் ஒரு முறை மணவாள மாமுனிகளின் இசைவுபெற்று வானமாமலைத் தெய்வநாயகனைத் தரிசிக்கச் சென்றார். வானமாலைப் பிரானிடம் இல்லற வாழ்க்கையின் மீதுள்ள வெறுப்பையும் துறவுநோக்கையும் வெளிப்படுத்தினார். வானமாமலை தெய்வநாயகனும் அழகியவரதருக்குத் துறவுக்கோலும் முக்கோலும் வழங்கித் துறவுநெறிப்படுத்தி, "ஸ்ரீவானமாமலை ராமானுஜ ஜீயர்" என்ற திருநாமமும் சூட்டியருளினார்.

திருமடம் :

தம் திருக்கோயிலின் அருகிலேயே விடுதி ஒன்றைத் திருமடமாக்கியும் வைத்தார். இத்திருமடத்தின் கண் இருந்து தெய்வநாயகனின் திருவடித் தொண்டில் ஈடுபட்டிருந்தாலும் ஆசாரியரான மணவாள மாமுனிகளை விட்டுப்பிரிந்து வாழ்வது ஜீயருக்குப் பெருந்துயர் விளைவித்தது. அதனால் மாமுனிகள் இருக்கும் ஆழ்வார் நகரிக்குப் புறப்பட்டுச் சென்றார், அங்கே பல்லாண்டுகள் ஞானாசிரியருடன் இருந்தும் தலங்கள் பலவற்றை உடனிருந்து யாத்திரை செய்தும் வந்தார். அதன் பின்னர் தெய்வநாயகனின் திருவருட்குறிப்பறிந்த ஞானாசிரியரின் அருளாணை ஏற்றுத் திருமடத்தின்கண் வந்து தங்கினார் என்பது வரலாறு. இங்கே நம் ஆதீன நிகழ்ச்சி ஒன்றையும் ஒப்பிட்டுக் காணலாம்: ஆதீனக் குரு முதல்வரவர்களும் பல்லாண்டுகள் இல்லற ஞானியாகிய ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசரைப் பிரிய மனமின்றித் தொண்டுகள் பல செய்து வந்தார் என்பதும், பின்னே ஞானாசிரியரின் அருளாணை ஏற்றே தருமபுர ஆதீனத்தை நிறுவி அடியார்களுக்கு அருளுபதேசங்கள் வழங்கியருளினார் என்பதும் ஒப்பு நோக்கி மகிழத்தக்கனவாகும்.

தந்தைச்சமயம், தாய்ச்சமயம் :

இங்ஙனம் அருளாளர்களால் தோற்றுவிக்கப்பெற்ற திருமடங்கள் சமயப்பயிர் தழைக்க ஒல்லும் வகை அறப்பணி

புரிந்து வருகின்றன. இத்தருணத்தில் இங்கே உள்ள சைவ வைணவ அன்பர்கள் சில கருத்துக்களைச் சிந்தித்தல் நலம் பயக்கும். சிவபெருமான் முழுமுதற்கடவுள் என்பதும், திருமால் புருடசக்தியாய் விளங்குபவர் என்பதும் முன்னோர்கள் கண்ட உண்மையாகும். சிவனை ஆண்மை நிலையிலும், திருமாலைப் பெண்மை நிலையிலும் வைத்து வழிபடுவது மரபாக இருந்து வருகிறது. பெண்மை நிலைக்கேற்ப திருமால் அலங்காரப் பிரியர்; ஆண்மை நிலைக்கேற்ப சிவபெருமான் அபிடேகப் பிரியர். திருமால் பள்ளி கொண்டிருக்கும் பொழுதும் பெண்மை நிலையில் லலப்பக்கம் கீழ் வைத்தும் இடப்பக்கம் மேல் வைத்தும் இருப்பதனைக் காணலாம். அவதாரத்தில் மோகினி அவதாரம் எடுத்ததும் இக்கருத்திற்கு ஆதாரமாக விளங்குவது ஆகும். இக்கருத்தினால்தான் அப்பரடிகளும்,

''அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே''

என்றும்

''நாரணனை இடப்பாகத்து அமைத்தார் போலும்''

என்றும் அருளிச்செய்கின்றார். அபிராமி பட்டரும் உமை யம்மையைத் திருமாலின் தங்கை என வைத்து, ''செங்கண்மால் திருத்தங்கச்சியே'' என்று மொழிகின்றார். அதனால்தான் சிவபெருமான் திருக்கோயிலில் திருமாலின் திருவுருவம் இடம் பெற்றுள்ளது. சங்கரநாராயணர் திருக்கோயில் போன்ற தலங்கள் இக்கருத்திற்கு அரண் சேர்ப்பனவாகும். எனவே சிவவழிபாட்டில் திருமால் வழிபாடும் ஓர் அங்கமாக இருந்து வருகிறது.

தத்துவங்கள் :

சைவ சமயிகள் கூறும் 36 தத்துவங்களில் முதற்கண் உள்ள 24 தத்துவங்கள் வரையிலும் சைவ வைணவம் இணைந்தே கருத்து வழங்குதலைக் காணலாம். அவ்விருபத்து நான்கு தத்துவங்களும் இவை எனச்சிந்தித்தல் தேவையானது. ஞானம் தோன்றுதற்கு நிலையாகிய மெய், வாய், கண், மூக்கு செவி, எனும் பொறிகளாகிய அறிவுக் கருவிகள் ஐந்து, இவ்வைந்தின் வழித் தோன்றுவதாகிய ஊறு, சுவை, ஒளி; நாற்றம், ஓசை எனும் புலன்களாகிய தன் மாத்திரைகள் ஐந்து;

தன் மாத்திரைகளின் வெளிப்பாடாகிய மண், நீர், தீ, வெளி, காற்று ஆகாயம்எனும் பூதங்கள் ஐந்து. அறிவுக் கருவிகளைப் போன்று உடலில் உள்ள தொழிற்கருவிகளாகிய வாக்கு, பாதம், பாணி எருவாய், கருவாய், எனும் ஐந்து. இவ்விருபதும் புறக் கருவிகள் எனப்படுவன. இவ்விருபதோடு மனம், புத்தி, சித்தம், அகங்காரம், எனும்உட்கருவிகளாம் அந்தக்கரணங்கள் நான்கை யும் கூட்டத் தத்துவங்கள் 24 ஆகும். இவ்விருபத்து நான்கும் போக காண்டம், என்ற பிரிவுடையது. துய்க்கும் நிலைகளை யுடையது இப்போக காண்டம், வித்தியாதத்துவங்கள் என அடுத்துக் கூறப்பெறும் போக்கிய காண்டம் துய்க்கும் நிலைக்கு ஆயத்தப்படுத்தும் சிறப்புடையதாகும். அடுத்துள்ள சிவ தத்து வங்கள் எனக் கூறப்பெறும் பிரேர்க காண்டம் ஆணையிடும் உயர்வுடையது. இக்கருத்துக்களைச் சைவர்கள் சிந்தித்து விளக்கியுள்ளனர். எனவே சைவ வைணவம் ஒரு குறிப்பிட்ட எல்லை வரையிலும் இணைந்தே செல்லும் சிறப்புடையன. சைவம், வைணவக் கருத்துக்களையும் உள்ளடக்கிய உயர்வு உடையது என்பது உணரத்தக்கது. இங்கேவருகைதந்திருக்கும் ஸ்ரீமத் ஜீயர் அவர்கள் 'திரிதண்டம்' என்றழைக்கப்பெறும் ஒன்றைக் கையில் கொண்டுள்ளார்கள். பரந்தாமன், சித்து அசித்து என்ற மூன்றும் திரிதண்டத்திற்கு விளக்கங்கள் எனக் கூறுகிறார்கள். சைவசமயம் கூறும் பதி, பசு, பாசம் என்ற மூன்றும் இவற்றுடன் ஒன்றுபட்டு இருத்தலைச் சிந்தித்தல் தக்கதாகும்.

இந்து மதத்தின் இரு கண்கள்:

எனவே இதுவரை சிந்தித்த கருத்துக்களையும் இணைத்துப் பார்க்கும் பொழுது இந்துமதத்தின் இருகண்களாக விளங்கும் சைவமும் வைணவமும் தத்துவங்கள் பலவற்றில் ஒன்று பட்ட நிலையுடையன என்பதும், அவ்வச் சமயத்தைச் சார்ந்த அன்பர்கள் அவரவர்கள் வழிநின்றே இறையருள் பெறலாம் என்பதும் உணரத்தக்கன. பள்ளிகள் பல இருப்பினும் அவை அனைத்தும் அறிவு வளர்க்கவே பயன்படுகின்றன என்பது போலத் திருமடங்கள் பல இருப்பினும் அவை அனைத்தும் அவ்வத்தத்துவங்களின் வழி நின்றே அறப்பணி செய்து வருகின்றன என்று கொண்டு சமயப் பொதுமையுணர்வுடன் வாழ்ந்து இறையருள் பெறுவார்களாக!

இனிதே நிகழ்க:

இதற்கு முன்பு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளாட்சிக் காலத்தில் இவர்களுக்கு முன்பிருந்த ஸ்ரீமத் ஜீயர் அவர்கள் தருமையாதீனத்திற்கு விஜயம் செய்திருக்கிறார்கள். இப்பொழுதும் அதே போன்று இவர்கள் இங்கு வந்திருப்பதும் அவர்களை வரவேற்பதும் மகிழ்ச்சிக்குரியன. 108 வைணவத் திருப்பதிகளைத்தரிசிக்கும் நோக்குடனுன் பக்தர்களையும்' சிஷ்யர்களையும் ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் தலயாத்திரை மேற்கொண்டு வரும் ஜீயர் சுவாமிகள் வடநாடு சென்று பத்ரிநாதரைத் தரிசனம்செய்யும் பெரும்பணியை மேற்கொண்டு உள்ளார்கள். அவர்களின் தலயாத்திரை இனிதே நிகழவும் பக்தர்கள் அனைவரும் நலம்பலபெற்று நீடுவாழவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச்சிந்திக்கின்றோம்.

சைவ வைணவச் சமயம் இரண்டும்
வையத்தோர்க்கு வளர் இரு கண்கள்.

50
புத்தாண்டு ஆசிச் செய்தி*

நீயியற்ற ஓர்பொருளை
நிச்சயித்த நாயேனும்
போயியற்றல் செய்யப்
புரிகுவேன்—நீயியற்றல்
ஆக்கா தணுவும்
அசையுமோ அவ்விகற்பந்
தாக்காத சொக்கநாதா.

ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

[பசியும் பிணியும் நீங்கி மக்கள் வாழ்வில் வசியும் வளனும் சுரக்க நாளெல்லாம் பூசையும தவமும் இயற்றுவதையே வாழ்வாகக் கொண்டு மகிழும் குருமணிகள் 'துந்துபி' ஆண்டில் நலஞ் சிறக்க மனமுவந்து அருளிச்செய்தது.]

பஞ்சாங்கம் என்பது திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் எனும் ஐந்து அங்கங்களைக் குறிக்கிறது. சூரியன், சந்திரன், பூமி இம்மூன்றின் தொடர்பினால் உண்டாகும் கிரகணம் பற்றியும் மற்றும் இவை போன்ற வானசாத்திரக் கூத்துக்களையும் முன்னோர்கள் மிகவும் நுட்பமாகக் கணக்கிட்டு வைத்துள்ளனர். இன்றும் பஞ்சாங்கத்தில் பின்னே வரும் சந்திரகிரகணம், சூரியகிரகணம் பற்றிக் குறிப்பிட்ட நாள், குறிப்பிட்ட மணி. குறிப்பிட்ட நிமிடம் எனக் கணக்கிட்டுத் தருவதைக் கணக்கிட்டபடியே அறியமுடிகிறது. இது முன்னோர்கள் அறிந்திருந்தவான சாத்திரத்தின் சிறப்பைக்

*10—4—82 'ஞானசம்பந்தம்' இதழுக்குப் புத்தாண்டு ஆசிச் செய்தியாக வழங்கியருளியது.

காட்டுகின்றது. எனவே பஞ்சாங்கம் பார்ப்பது என்பதுகுறை யுடையது என்று கருதாமல் அது வானசாத்திரத்தை அறியப் பயன்படும் நூல் என்று கருதுதல் வேண்டும்

வானத்தில் நிகழும் கிரக மாறுபாடுகளினால் இன்பத் துன்பங்கள் ஏற்படுகின்றன என்பது அறிவுபூர்வமான உண்மை, ஆனாலும், அக்கிரகங்களின் மாறுபாடுகளும் பூமியில் வாழும், மக்களின் நல்ல செயல் தீய செய்ல்களால்தான் விளைகின்றன என்று திருமந்திரம் கூறுகிறது.

''இன்பமும் துன்பமும் நாட்டாரிடத்துள்ள
நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்
என்ப இறைநாடி நாடோறும் நாட்டினின்
மன்பதை செப்பஞ் செயின்வையம் வாழுமே''

என்பது திருமந்திரப் பாடல். இக்கருத்திலேயே ''தீதும் நன்றும் பிறர்தரவாரா'' எனப் புறநானூறும் ''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்'' என்று திருக்குறளும் கருத்து வழங்குவதைக் காணலாம். ஆதலின் மக்களுக்கு வரும் இன்பத் துன்பங்களுக்கு மக்களின் எண்ணங் களும் பேச்சுக்களும் செயல்களுமே காரணமாகின்றன என்று உணர்ந்து நல்ல முறையில் நடத்தல் இன்றியமையாதது.

இவ்வாண்டின் பலன்களை,

''துந்துபியின் மிக்கசுக சோபன முண்டாம் புவியில்
சந்ததமும் வாசமலர்த் தாமரைமேல்-இந்திரையும்
செல்வமிகக் கொடுப்பாள் செந்நெல் விளைவுண்டாமே
நல்ல மழையுண்டு நவில்''

எனும் இவ்வெண்பாவினால் அறியலாம். இவ்வாண்டு நல்ல மழை பெய்து உணவுப் பற்றாக்குறை நீங்கும். செல்வ வளம் கொழிக்கும் என்று தெரிகிறது. இவ்வளங்களோடு, துன்மதி ஆண்டில் நடைபெற்ற மதமாற்றங்கள். பூசல்கள் போன்றவை இன்றி மக்கள் அனைவரும் துந்துபி ஆண்டில் நாளும் நல்லனவே செய்து நல்லனவே பெற்று ஆண்டின் பெயருக்கு ஏற்ப மங்கல முழவு இயம்ப நல்லவற்றிற் கெல்லாம் மூலமாகவுள்ள இறைவனைப் போற்றி இன்புற்று வாழ்வார்களாக.

51
இந்து மதம்*

அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய், வேறாங்
குறியது உடைத்தாய், வேதாகமங்களின் குறியிறந்தங்(கு)
அறிவினில் அருளால் மன்னி அம்மையோ டப்ப னாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.

—அருணந்தி சிவாசாரியார்

[இந்திய மதங்கள், அவற்றின் தோற்றம், பாகுபாடு - வளர்ச்சி போராட்டங்கள் குறித்த வரலாற்று உண்மைகளை எடுத்தியம்பி, இவற்றுள் எல்லாம் இந்துமதம் பெற்றிலங்கும் உயர்ச்சிகளையும், அவற்றிற்கான காரணங் களையும் குருமணிகள் அழகுற விளக்கி அருளிச் செய்த இனிய விருந்தாக இது அமைகிறது.]

மத விளக்கம் :

'மதம்' — என்பது 'கொள்கை' எனப் பொருள்தரும். எனினும், இந்து ஆன்மீகத்துறை பற்றிய கொள்கைக்கே சிறப்பாக உரியபெயராயிற்று.

கொள்கையை, 'இலட்சியம்'—என்றும் கூறலாம். ஆன்ம லாபமாகிய இலட்சியத்தை அடைவதற்குச் சில வழிமுறை களைப் பெரியோர்கள் வகுத்தமைத்தார்கள். அந்த அமைப்பே 'சமயம்' எனப்படுவது. எனினும், 'மதம், சமயம்' என்பவற்றை ஒரு பொருட் சொற்களாக வழங்குதல் வழக்கமாயிற்று.

---

*21—4—'82 முதல் 25—4—'82 முடிய இலங்கையில் நடை பெற்ற அகில உலக இந்துமத மாநாட்டிற்கு வழங்கியருளியது.

இந்தியாவில் பல மதங்கள் :

'உலக நாடுகளில் இந்தியா ஆன்மீகத்துறையில் சிறப்புற்ற நாடு' என்பது உலகு உடன்பட்ட கொள்கையாக உள்ளது. இவ்விந்தியா மிகப் பழங்காலந் தொட்டே பண்பாடுற்று விளங்குவது. அதனால் இங்குப் பலவகை மதங்கள் காணப் படுகின்றன. அவை அனைத்தும், 'இந்துமதம், பிறமதம்'— என்னும் இரு பிரிவுகளில் அடங்குவனவாய் உள்ளன. 'இந்து மதம்' என்பது குறிப்பிட்ட ஒரு மதத்தை மட்டுமே குறிப்ப தன்று: ஏறக்குறைய ஒத்த கொள்கையையுடைய பல மதங்களைக் குறிக்கும் பெயரே இந்துமதம் என்பது.

வைதிக அவைதிக மதங்கள் :

இந்து மதங்கள் அனைத்திற்கும் ஒரு பொதுவான அடிப் படைக் கொள்கை உண்டு. அது, 'வேதம் தலையாய பிரமாண நூல்'—என்பதேயாகும். எனவே, இந்துமதம்'—என்பதற்குக் கருத்து 'வேத்வழிப்பட்ட மதம்'—என்பதேயாகும். 'வேதம் சிறந்த பிரமாண நூல்'-என்னும் அடிப்படைக் கொள்கையைச் சிறிதும் உடன்படாமல், 'வேதம் உயர்ந்தோரால் கொள்ளத் தக்க ஒரு நூல் அன்று' என மறுத்து, அதற்கு நேர்மாறாய் உள்ள மதங்களும் இந்தியாவில் உள்ளன. அவை சமணமும் பௌத்தமும் ஆகும். அதனால் அவை, 'புறச்சமயங்கள்' எனப்படுகின்றன. வேதவழிப்பட்ட மதங்கள், 'வைதிக மதம்' என்றும் ஏனையவை 'அவைதிக மதம்' என்றும் சொல்லப்படும். ஆகவே, சமணமும், பௌத்தமும் அவைதிக மதங்கட்கே பெயராயிருப்பினும் ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட காலத்தில் இந்நாட்டுக்குரிய சட்டங்களை அமைத்தபொழுது ஜைன மதத்தை இந்து மதத்தோடு ஒன்றுபடுத்தியே இச் சட்டத்தை அமைத்தார்கள். என்றாலும் கொள்கைகளிலும், நடைமுறைப் பழக்க வழக்கங்களிலும் ஜைனமதம் முற்றிலும் வேறுபட்டுப் புறமதமாகவே உள்ளது. பிற்காலத்தில் வெளிநாட்டினின்றும் இந்தியநாட்டில் புகுந்த மதங்கள் 'இசுலாமியம், கிறித்தவம்' என்பனவாகும். இவற்றை நவீன மதங்கள் என்பர். இவையும் அவைதிக மதங்களே என்பதைச் சொல்லத் தேவையில்லை

வேதமதமே இந்துமதம் :

இந்திய நாட்டில் நில அமைப்பில் சிந்து நதியைச் சார்ந்த சமவெளி நிலம் பலவகையில் மக்கள் வாழ்க்கைக்குச் சிறந்த

இடமாக உள்ளது. இந்திய நாட்டில் மக்கட்பெருக்கம் அங்கே தான் மிகுந்திருந்தது என ஆராய்ச்சியாளர் கூறுவர். பாரசீகம், கிரீஸ்-என்னும் நாட்டிலிருந்து இந்திய நாட்டை முதற்கண் வந்துபார்த்த மக்கள் சிந்துவெளி மக்களை முதலில் 'சிந்துக்கள்' எனக் கூறியவர்கள், பின் ஹிந்துக்கள் - ஹிந்திஸ் என வழங்கினர். அவ்வாறு அவர்களால் குறிக்கப்பட்ட மக்களில் பெரும்பாலோர் வேத மதத்தினராய் இருந்தமையால், 'ஹிந்துக்கள்' என்பதற்கு 'வேதமதத்தினர்' என்பதே பொருளாயிற்று. அதன்பின் அண்மைக் காலத்தில் இந்தியாவிற்கு வந்து இதனைக் கைப்பற்றி ஆளத்தொடங்கிய ஆங்கிலேயர் இந்நாட்டு மக்களை 'இந்துக்கள்' என்றும் 'இசுலாமியர் என்றும் இரண்டே வகையினராகப் பிரித்து, அவரவர்கட்கும் அவர்கள் கொள்கைப்படி வேறுவேறான சட்டங்களை வகுத்தார்கள். அவ்வமைப்பில் அவர்கள் ஜைனர்களையும், இந்துக்களாக வகைப்படுத்திச் சட்டம் செய்தார்கள். ஆயினும், உண்மையில் ஜைன மதம் இந்து மதத்திற்கு வேறானதாகவே உள்ளது.

வேதகாலம் :

இந்திய நாட்டு வரலாற்றை ஆராய்கின்றவர்கள் அதற்குரிய நூல்களை மட்டுமன்றி, அகழ்வாராய்ச்சியையும் அதற்குச் சிறந்த சான்றுகளாகக் கொள்கின்றனர். இந்து மதத்தின்-அல்லது வைதிக மதத்தின்-கொள்கைப்படி வேதம் காலம் கடந்தது-உலகம் தோன்றிய காலத்தே தோன்றியது. எனக் கூறப்பட்டாலும், வரலாற்றாசிரியர்கள் வேதத்தின் காலத்தை வரையறுக்கின்றனர். அவர்களுக்குள்ளே சில கருத்து வேறுபாடுகள் இருப்பினும் யாவர்க்கும் பொதுவான வகையில், வேதத்தின் தொடக்ககாலம் இற்றைக்குச் சற்று ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுக்கு முற்பட்டது-அஃதாவது, கி.மு. 3-ஆம் நூற்றாண்டு எனக்கொள்கின்றனர்.

அகழ்வு ஆய்வின் முடிவு :

அகழ்வாராய்ச்சியில் சிந்துசமவெளியில் அகழ்ந்து கண்ட முடிவில், 'அங்குப் புதையுண்டு போன நகரங்களில் வேத காலத்திற்கு முன்பே நாகரிகம் மிக்க மக்கள் வாழ்ந்திருந்தமை அறியப்படுகின்றது எனக் கூறுகின்றனர். 'வேதம் ஆரியமொழியாய் இருத்தலால், அதனைச்சார்ந்து விளங்கிய நாகரிகமும்

ஆரிய நாகரிகமே' என்றும், 'சிந்து நதிப்பாங்கரில் வாழ்ந்த மக்கள் ஆரியர் இந்நாட்டிற் புகுதற்கு முன்பே வாழ்ந்தவராதலாலும், பிறவற்றாலும் அங்கு அன்று விளங்கிய நாகரிகம் திராவிட நாகரிகமே என்றும் கூறுகின்றனர்.

சிந்துவெளி மதம் சைவமே:

இனி அவ்வாராய்ச்சியாளர்கள் கூறுகின்ற மற்றொன்றையும் இங்கு நாம் கவனித்தல் வேண்டும். அது, சிந்துவெளி மக்களது சமயம் இன்று 'சைவம்' எனப்பெயர்பெற்று விளங்கும் சமயமே என்பது சிவலிங்கங்கள் அங்குக் காணப்படுவதனாலும், பிறவாற்றாலும் தெளிவாய்த் தெரிகின்றது என்பதேயாகும். இதனால், சைவசமயம்-அல்லது, சிவநெறி வேத காலத்துக்கு முற்பட்டது என்பதை ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒரு முகமாக ஒப்புக் கொள்கின்றனர்.

திராவிட ஆரியக் கலப்பின் விளைவு:

வேத காலத்திற்கு முன்பே இந்திய நாட்டில் மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தனர் என்றால், ஆரியர் இந்நாட்டிற்கு வந்து வேதங்கள் தோன்றி, அது சிறப்புப் பெற்ற காலத்தில் பழமையாகவே இந்நாட்டில் வாழ்ந்த மக்கட்கும், புதியவராய் வந்த ஆரியர்கட்கும் இடையே முதற்காலத்தில் அல்லது இடைக் காலத்தில் கருத்து வேறுபாடும், பகைமையும், பூசலும் இருந்திருத்தல் இயல்பேயாகும்.

பின்பு நாளடைவில் இருதிறத்தாரும் கொண்டும் கொடுத்தும் பழகும் முறையில் ஒரளவு வேற்றுமை நீங்கி ஒற்றுமை உண்டாயிற்று. அதனால், வேதத்தில் ஆரியரது பழக்க வழக்கங்களோடு திராவிடரது கொள்கையும் கலப்புற்றுக் காணப்படுதலை அறிஞர்கள் வெளியிடுகின்றார்கள். இந்நிலையில் சைவத்தையே தங்கள் சமயமாக்கொண்டு வாழ்ந்த பண்டை மக்களில் பெரும்பாலோர் பல காரணத்தால் பகைமை நீங்கி ஆரியரோடு ஒன்றுபட்டுத் தங்களை வேதநெறி நிற்பவராகவே ஆக்கிக் கொண்டவராவர். அதனால் வைதிகமும், சைவமும் வேறாய் நில்லாது ஒன்றாகிவிட்டன இதுவே முதலில் 'இந்துமதம்' எனக்குறிப்பிடப்பட்டது.

திராவிட ஆரிய இணைப்பே இந்துமதம் :

ஒருவகை நாகரிகம் தோன்றும்பொழுது அஃது அதற்கு முற்பட்ட நாகரிகத்தின் ஒரு பகுதியைத் தன்னகத்தேகொண்டு

தோற்றம் எடுக்கும். வரலாறு என்பது என்றும் தொடர்புற்று வரும் இயக்கமாகும். இத்துடன் எல்லாம் முடிந்துவிட்டன என்றும், இனி நம்மைச்சார்வன எவையும் இல்லை என்றும், எந்த இடத்திலும், எந்தக்காலத்திலும் கூற உண்மை வரலாறு இடம்தராது. உதாரணத்திற்கு ஐரோப்பாவை எடுத்துக் கொள்வோம். உரோமப் பேரரசும், கிரீஸ்பேரரசும் இணைந்த அமைப்பே ஐரோப்பாவாகும். இந்த உண்மையை உணர்ந்தால் சிந்துவெளி நாகரிகம் என்பது அதற்கு முற்பட்ட நாகரிகத்தின் ஒரு பகுதியைத் தன்னகத்தேகொண்டு தோன்றியது என்பதை நன்கு உணரலாம் எனவே, சிந்துவெளிநாகரிகம் என்பது மிகப் பழமைவாய்ந்த திராவிட நாகரிகத்தின் முக்கிய பண்புகளைக் கொண்டுள்ளது என்பதை அறியலாம். இன்ன பல காரணங்களால் திராவிட நாகரிகமும், ஆரிய நாகரிகமும் இணைந்த இணைப்பே இன்றைய இந்து மதம் என்று வரலாற்றாய்வாளர் கூறுகின்றனர்

வருணாச்சிரமமும், ஜைனத்தோற்றமும் :

இவ்வொற்றுமைக்குப்பின் 'வேதநெறி' என்னும் பெயரால் பலபல சமுதாயக்கொள்கைகளை வகுக்கும் நூல்கள் வடமொழியில் தோன்றின. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன வருணாச்சிரம தருமங்கள். இவை தொழில் பற்றியும் ஒழுக்கம் பற்றியும் அமைந்திருந்த இனப்பிரிவை பிறப்பிலே வைத்து அமைத்தன. இவைகளை அடுத்துக்குறிப்பிடத் தக்கது வேள்விகளை மிகச் சிறந்தனவாகவும், இன்றியமையாதனவாகவும் வலியுறுத்தப்பட்டதாகும். இவற்றால் எல்லாம் மேற்குறித்த ஒற்றுமையை விரும்பாத சிலர், தனியே பிரிந்து வேறு மதத்தையும், மத நூல்களையும் உண்டாக்கி, மக்களிடையே அவற்றைப் பரப்புவாராயினர். அவர்களது மதமே ஜைனமதமாகும். ஜைனத்திற்கும், சைவத்திற்கும் சில பல ஒற்றுமைகள் காணப்படுவதற்கு மேற்கூறிய நிலைமையே காரணமாகும். மேற்கூறிய வகையில் 'இந்துமதம்' எனப்பெயர் பெற்ற மதம் இயற்கையில் பழைய மதமாக விளங்க, 'ஜைன மதம்' புதிய மதமாய்ச் சிலர் சிலரிடையே சிறப்புற்று விளங்கியது, என்றாலும், ஜைனம் உண்மையில் பழைய மதத்தின் பிரிவேயாகும். 'ஜைனம்' என்னும் பெயர் தோன்றாதிருப்பினும், அச்சமயத்தின் தோற்றமாகிய இந்நிலை, ஜைன மதத்தைத் தோற்றுவித்தவராக இன்று வரலாற்று ஆசிரியர்

களால் குறிப்பிடப்படுகின்ற வர்த்தமான மகாவீரருக்கும் மிக முற்பட்ட காலத்து நிலைமையாகும். ஜைனசமயத்தில் வர்த்தமான மகாவீரருக்கு முற்பட்டவர்களாகப் பல தீர்த்தங்கரர்கள் சொல்லப்படுவதும், 'அவர்களுள் விருஷப தீர்த்தங்கரரே முதல்வர்' என்று சொல்லப்படுவதும், இங்கு நினைக்கத் தக்கன.

புறச்சமயங்கள்:

ஜைனக் கொள்கை நாட்டில் பரவிவரும்பொழுது கௌதம புத்தர் தோன்றித் தம் தனியான ஒரு தவநிலையில் ஒரு புதிய ஞானத்தைப்பெற்று அதனை வெளியிட்டார், அதனைப் பின் பற்றியவர்கள் அதனையும் வளர்க்கத்தொடங்கினார்கள் அதுவும் வேதத்தைப் புறக்கணிப்பதாகவே அமைந்தமையால் அந்தப் பௌத்தமும், அதற்கு முன் இருந்த ஜைனமும் ஏறக் குறைய ஒன்றுபோல ஆகி, வைதிகர்களால் 'புறச்சமயங்கள்' என விலக்கும் விலக்கிற்கு உள்ளாயின.

வைதிக சைவப்பிரிவு

வைதிகத்தில் சைவம் சிறப்பிடம் பெறாமைபற்றி அதன் சிறப்பினை உணர்த்தல்வேண்டிச் சைவாகமங்கள் பின்பு தோன்றலாயின அதனால், மீண்டும் வைதிகத்திற்கும், சைவத் திற்கும். இடையே சிறுவேறுபாடு நிலவலாயிற்று. இவ்வேறு பாட்டில் சைவருள்ளே சிலர் தாம் தாம் விரும்பும் கடவுளரைச் சிறப்பாக வைத்துத் தங்கட்கு விருப்பமான வகையில் வழிபட லாயினர். அதனால் ஷண்மதங்கள் தோன்றின. அவை வழிபடு கடவுள்பற்றி வேறுபட்டனவேயன்றி கொள்கை வகையில் பெரிதும்வேறுபடவில்லை. அவை சைவம், வைணவம், சாக்தம் காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன 'சௌமியம்' என்றும் ஒருமதம் சொல்லப்படுகின்றது. இவை எல்லாம் சைவத்தின் பிரிவுகளேயன்றி, வேறாகாமையைக் காணலாம்.

சைவ வைணவப் பிரிவு:

வைணவம் சைவத்தினின்றும் வேறுபட்ட ஒருமதமாகியது மிகப் பிற்காலத்திலேயாகும். ஷண்மதங்கட்கும் பின்னர் மற்றும் சிலர் 'தந்திரங்கள்' எனச் சில நூல்களைப் பின்பற்றிச் சில மதங்களைக் கைக் கொண்டனர். அவை,

'பாசுபதம், மாவிரதம், காபாலிகம், வாமம், வைரவம்'

என்பன. இவைகள் 'தாந்திரிகங்கள்' என்றும், 'வாமமார்க் கங்கள்' என்றும் சொல்லப்பட்டன.

இதுவரையில் சொல்லிவந்தன யாவும் பெரும்பான்மையும் 'கிரியா மார்க்கம்' எனச் சொல்லப்படுகின்ற வழிபாட்டு முறைகள் பற்றி நேர்ந்த நிலைமைகளேயாகும்.

தத்துவ ஆய்வு:

அதன்பின் 'மெய்ப்பொருட் கொள்கை' என்னும் தத்துவ ஆராய்ச்சி மிகுதிப்பட்டது. இதற்கு வித்திட்டவை வேதாந்தம் என்னும் உபநிடதப் பகுதிகளும், பௌத்த மதமும் ஆகும். பௌத்தமதம் முற்றிலும் ஆராய்ச்சியையே மேற்கொண்டது. அதனைச் சார்ந்து ஜைனமும் அந்நிலையை மேற்கொண்டது. எனினும், 'வேதப்பிரமாணம்' என்னும் நூற்பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்டு, 'தரிசனங்கள்' அல்லது 'சாத்திரங்கள்' என்னும் நூல்கள் தோன்றி, மெய்ப்பொருள் இயலை விளக்கின. அவை நியாயம், வைசேடிகம், பூர்வமீமாஞ்சை, உத்தர மீமாஞ்சை, சாங்கியம், யோகம் என்பனவாகும் இவை 'ஷட்தரிசனங்கள்' எனப்படும். 'தர்சனம்' என்பதற்கு வேதத்தின் உண்மைப் பொருளைக்காட்டுவன என்பது பொருளாகும். நியாயமும், வைசேடிகமும்-தர்க்கமதங்கள். இவையும், சாங்கியமும் வேதப்பொருளைப் பொதுவாக உணர்த்துவன. வேதத்தின் கருமகாண்டத்தைச் சிறப்பாக ஆராய்ந்து விளக்கம் தருவது பூர்வமீமாம்சை. ஞானகாண்டத்தைச் சிறப்பாக ஆராய்ந்து விளக்கம் தருவது உத்தரமீமாம்சை. இதுவே, 'பிரம்ம சூத்திரம்' எனப்படுகின்றது. யோகம் யோகமுறையை விளக்குவது.

பிரம்மசூத்திரமும் பாடியமும் :

நீண்டகாலத்திற்குப் பிறகு பிரம்ம சூத்திரத்திற்கு அவரவர்கள் தங்கள் கருத்துப்படி பாடியம் (பேருரை) செய்தனர். அதனால் தத்துவ சமயங்கள் பலவாயின. அவற்றுள் சங்கரர் பாடியத்தால் அத்துவித மதமும், நீலகண்டர் பாடியத்தால் சிவாத்துவித மதமும், இராமநுசர் பாடியத்தால் விசிட்டாத்துவித மதமும், மத்துவர் பாடியத்தால் துவித மதமும் தோன்றின இவருள் இராமானுசரே வைணவத்தைச் சைவத்திற்கு வேறாகப் பெரிதும் பிரித்து வைத்தார். அவருடைய கொள்கைக்கு ஆதரவாக ஆழ்வார்களில் ஒருவர் இருவரது பாடல்கள் சில இருப்பினும் வைணவத்தை ஒரு தனி மதம் ஆக்கி நிலை நிறுத்தியவர் இராமானுசரே. இந்தப்

பாடியங்கள் தோன்றுதற்கு முன்பே புராணங்களும், அவற்றின் பின் இதிகாசங்களும் தோன்றின. அவை பெரும்பாலும் பக்தி நூல்களாகவே ஆகிவிட்டன.

தமிழ்நாட்டின் தத்துவநிலை :

இவையெல்லாம் பெரும்பாலும் வடநாட்டு நிலைமைகளே யாக, தமிழ்நாட்டின் நிலைமை வேறாகவே இருந்தது. அது பழமையாக இலக்கியங்களில் ஈடுபட்டிருந்தது பின்பு நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றிப் பக்திநெறியைப் பரவச்செய்தனர். பாடியங்கட்குப்பின் சைவ சந்தானா சாரியர்கள் தோன்றிச் சித்தாந்த உண்மைகளையும் அவற்றிற்கு ஏற்ற ஒழுக்க நெறிகளையும் வலியுறுத்தினர். அதனால், பக்தி நெறியே தமிழ்நாட்டில் நிலைபெற்றது. அதனால்,

''சைவ சமயமே சமயம்''
''சைவத்தின்மேல் சமயம்வேறிலை''

என்னும் நிலை தமிழ்நாட்டில் உளதாயிற்று.

தமிழில் பக்திக் கருவூலமாகப் பெரியபுராணமும், தத்துவக் கருவூலங்களாகச் சித்தாந்த சாத்திரங்களும் இருத்தலை யாவரும் அறிந்து மகிழ்ந்து போற்றுகின்றனர். குறிப்பாகப் பெரியபுராணம் முழுக்க முழுக்கத் தமிழக அருளாளர்களின் அருள் வரலாறாகவும், சித்தாந்த சாத்திரங்கள் முழுக்க முழுக்கத் தமிழரின் தத்துவ விளக்கங்களாகவும் இருத்தல் அவர்களால் அறிந்து போற்றப்படுகின்றன. இந்நிலை இன்னும் நன்கு செழித்தோங்குவதற்கு ஆவன செய்தல் தமிழ் மக்கள் அனைவர்க்கும் தலையாய கடனாகும்.

சைவத்தின் சிறப்பு :

'சைவ சமயமே சமயம்'—எனக் கூறிய தாயுமான அடிகள் மற்றோர் இடத்தில் ஓர் அரிய கருத்தை வெளியிடுகின்றார். அது,

''சன்மார்க்க நெறியதனின் பொருளும் வேறு
சமயசங்கே தப்பொருளும் தான்ஒன்றாகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்டதில்லை''

என்பது.

''சன்மார்க்க நெறியதனின் பொருள்'' என்றது தத்துவக் கொள்கையை. ''சமய சங்கேதப்பொருள்'' என்றது மரபு வழியான கிரியைகளை. 'இந்த இரண்டும் ஒன்றாகச் சைவ சமயத்தில் காணப்படுவதுபோல, வேறு எந்தச் சமயத்திலும் காணப்படவில்லை' என்பது இதன் பொருள். சைவத்தில் சமய தீக்கை பெற்று அநுட்டானம் செய்யும்பொழுது முதலில் ஆசமன மந்திரமே ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம்; சிவதத்துவம் என்பவற்றைச் சுத்தி செய்வதாகச் சொல்லப் படுகின்றது.

பஞ்சப் பிரமம், சடங்கம்-என்னும் மந்திரங்கள் சிவபிரானது பஞ்சசக்திகள் அவனுக்குச் சிரசு முதலிய அங்கங்களாகவும், இருதயம் முதலியன்வாகவும் அமைதலை நினைவூட்டுகின்றன.

சிவபூசையில் ஆசனம் - மூர்த்தி - மூலங்கள் தத்துவங் களையும், அவற்றிற்கு அப்பாற்பட்டு நிற்கும் சத்தியையும், அச்சத்தியைத் தனக்குக் குணமாக உடைய சிவத்தையும் விளக்கி நிற்கின்றன. இன்ன பலவும் இத்தகையனவே. இனி சைவ சித்தாந்தத் தத்துவங்கள் இன்றைய அறிவியலோடு ஒத்து நிற்றலை அறிவியலார் கண்டு வியக்கின்றனர் இத்தகைய அரும்பெரும் சமயத்தை மக்களிடையே பரப்பி என்றும் நின்று நிலவச்செய்வது இந்துமதத்தில் பற்றுடைய யாவர்க்கும் இன்றியமையாக் கடனாகும்.

52
குருவின் பெருமை

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்துமளரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணிஅன் பரைஆள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்கணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

—ஸ்ரீ சம்பந்த சரணாலயர்

[சைவ சமய வரலாற்றில் சிவமே குருவாக - குருவே சிவமாகப் போற்றப்பெற்று வரும் பண்புகளை விதந்து அருளிச்செய்யும் குரு மணிகள் இருவகை குருமார்களையும், இருவகை ஞானங்களையும், ஒரு, பெரிய புராணப்பாடலை மையமாகக் கொண்டு அரிய நுட்பத்துடன் விளக்கியருளியது.]

குருவின் பெருமை :

நமது ஆதீன ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவின் அங்கமாக இன்று சமயப்பயிற்சி வகுப்புத் தொடங்குகின்றது. இவ்வகுப்பில் பங்குகொள் கின்றவர்கள் அனைவரும் அடைய விரும்புவது ஞானமே என்றால் அது புகழுரை ஆகாது, உண்மையுரையேயாகும்.

---

*தருமையாதீனக் குருபூஜை விழாவின்போது 6—6—'82 அன்று சமயப் பயிற்சியாளர்கட்கும், அன்பர்கட்கும் வழங்கி அருளியது.

பிற பொருள்களை யாவரிடத்தினின்றும் பெறுதல் கூடும். ஆனால் ஞானம் குருவினாலன்றிப் பிறர் ஒருவரிடத்திலும் பெறுதல் இயலாது. இதனை,

> ''ஞானம் இவனொழிய நண்ணியிடும், நற்சல் அனல் பானு ஒழியப் படின்''

என உமாபதிதேவர் தமது திருவருட்பயனில் கூறினார். சூரியன் இல்லாமலே சூரியகாந்தக்கல்லில் நெருப்பு உண்டாதல் கூடுமாயின், குருவில்லாமலே ஞானத்தைப் பெறுதல் கூடும் என்பது அதன் பொருள். இன்னும் அவர் அந்நூலிலே,

> ''எமக்கென் எவனுக் கெவைதெரியும் அவ்வத் தமக்கவனை வேண்டத் தவிர்''

என்றார். அஃதாவது ஒவ்வொரு துறையிலும் சென்று அதில் பயன்பெற விரும்புவோர் யாவரும் அந்த அந்தத் துறையில் அனுபவம் பெற்ற முதியோரை அடைந்து அதற்குரிய நெறி முறைகளை அறிந்து அவ்வழியிலே செயற்பட்டுப் பயன் பெறுதல் உலகில் கண்கூடான நிகழ்ச்சியாய் இருக்க, ஞானத்தை மட்டும் ஒருவன் அதனை உணர்த்துபவர் ஒருவரும் இன்றித் தானே பெற்றுவிடுவது எப்படி என்றார்.

உழவு, வாணிபம் முதலிய தொழில்களிலும், ஓவியம் சிற்பம், இசை நாடகம் முதலிய கலைகளிலும் சிறந்து விளங்க விரும்புபவர், அவற்றில் வல்லவர்களை அடைந்து அவர்கள் மனம் மகிழும்வகை நடந்து அவற்றைப் பெறுவது உலகில் இயல்பாக எங்கும் நடைபெறுவது.

ஒவ்வொரு துறையிலும் அனுபவம் பெற்று அதில் பிறருக்கு வழிகாட்டிகளாய் இருப்பவர்கள், 'வல்லுநர்' என்றும், 'தலைவர்கள்' என்றும், 'வழிகாட்டிகள்' என்றும் பெயர் பெற்று விளங்குதல் தெளிவு. அதுபோல ஞானானுபவம் மிக்கவர்களாய்ப் பிறருக்கும் ஞானத்தை அளிக்கவல்ல அருளாளர்கள் 'குரு' என்றும், ஆசாரியர்' என்றும், ஆசிரியர், என்றும் பெயர் பெற்று விளங்குகின்றார்கள் 'குரு' என்பதற்குப் பொருள் கு - அஞ்ஞானம், ரு- நீக்குதல் எனவே அஞ்ஞானத்தை நீக்குபவர் என்பதாகும் 'ஆசிரியர்' என்பதற்கும், ஆசு-குற்றம் அஞ்ஞானம். இரியர்-நீக்குபவர் என்பதுதான் பொருள்,

'ஆசாரியர்' என்பதற்கு, நல்லொழுக்கத்தைக் கற்பித்தல் மட்டும் அன்றி, அவ்வொழுக்கநெறியில் நடந்து காட்டுபவர் என்பதும் பொருளாகும்.

இருவகை ஞானங்கள்:

ஞானமாவது அறிவே யாகையால், எந்தத் துறையில் அறிவைத் தருபவரையும், 'குரு' என்றும், 'ஆசிரியர்' என்றும் சொல்லலாம். எனினும் மெய்ப்பொருள் அறிவே பேரறிவும், மேலான அறிவுமாகும். ஆகையால், அதுவே பெறுதற்கரியது. அதனால், பிற அறிவைத் தருகின்றவர்களை, 'குரு' அல்லது 'ஆசாரியர்' எனக் கூறாமல், மெய்யறிவைத் தருகின்றவர் களையே 'குரு' என்றும், 'ஆசாரியர்' என்றும், கூறுதல் மரபாக உள்ளது அவ்வாறே, மற்றைய அறிவு 'ஞானம்' எனப்படாது மெய்ப்பொருள் அறிவே, 'ஞானம்' எனப்படுகின்றது.

இனி மெய்ப்பொருள் அறிவாகிய ஞானம், 'அபர ஞானம், பரஞானம்' என இருவகைப்படும். அபரம்-படிநிலை. பரம்-முடிநிலை மெய்ப் பொருளை ஒருவன் உண்மையாக உணர்தல் அதனை நேரேகண்டு அதன் தன்மையில் தான் அழுந்தி நிற்றலே யாகும். எனவே மெய்ப்பொருளை அனுபவமாக உணர்ந்து அதன் இன்பத்தில் திளைத்திருத்தலே 'பரஞானம்' என்பது தெளிவு.

இந்த அனுபவ ஞானம் எவருக்கும் முதலிலே வந்து விடாது. மெய்ப் பொருளின் இயல்பை ஞான குரு சில சொற்களால் உபதேசிக்கக் கேட்டலாலும், பின்பு, மெய்ப் பொருளின் இயல்பு களைப் பலவகையில் விரித்துக் கூறும் நூல்களை நல்லாசிரியர் ஓதுவிக்க ஓதி உணர்ந்து அவற்றின் பொருளை ஆசாரியர் உபதேசித்த உபதேச மொழிகளோடு இணைத்துப் பலகாலும் சிந்தித்தலாலுமே உண்டாவதாகும். எனவே, பரஞானமாகிய அனுபவ ஞானத்திற்கு அபர ஞானமாகிய கலைஞானம் படிநிலை என்பது விளங்கும்.

வித்தியா குருவும் ஞான குருவும்:

பரஞானம், அபர ஞானம் இரண்டும் அஞ்ஞானத்தைப் போக்குவன ஆயினும், அபர ஞானம் அஞ்ஞானத்தைப் போக் குதல், விளக்கு இருளைப் போக்குவது போன்றதும், பரஞானம்

அஞ்ஞானத்தைப் போக்குவது சூரியன் இருளைப் போக்குவது போன்றதும் ஆகும். எனவே. அபர ஞானம் அஞ்ஞானத்தை முற்ற நீக்காதாகப் பரஞானமே அஞ்ஞானத்தை முற்றிலும் நீக்குவதாகும் அதனால் 'அஞ்ஞானத்தைப் போக்குபவர்' எனப்பொருள்தரும் 'குரு' என்னும் பெயர் பல்லாற்றாலும் அஞ்ஞானத்தை முற்றப் போக்குபவராகிய ஞான குருவையே குறிக்கின்றது. நூலறியை மட்டும் தருபவர், 'வித்தியாகுரு' எனப்படுவர்.

ஞானசம்பந்தர் தம் ஞானப்பேறு:

ஞானத்தை முறையாகப் பெறுகின்றவர்கள் முதலில் அபர ஞானமாகிய கலைஞானத்தைப் பெற்றுப் பின்னர் அதன் வழியே பரஞானத்தைப் பெறுதற்குரியவர். ஞானசம்பந்தருக்கு அம்மை ஞானப்பாலை ஊட்டியபொழுது ஞானசம்பந்தர் இந்த இரண்டு வகையான ஞானங்களை அப்பொழுதே பெற்றார் என்பதனைச் சேக்கிழார்.

> "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்,
> பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
> உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
> தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்"

எனக் குறிப்பிடுகின்றார். இதில் முன் இருவரிகளில் சொல்லப் பட்ட இரண்டு ஞானங்களோடு. பின் மூன்றாவதுவரியில் சொல்லப்பட்ட இரண்டு ஞானங்களையும்முறையே இணைத்து நோக்குதல்வேண்டும் அஃதாவது, 'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமாகிய உவமையிலாக் கலைஞானம்' என்றும், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞான மாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானம்' என்றும் இயைத்துக் கொள்ளுதல் வேண்டும். முன்னே சொல்லப்பட்டது அபர ஞானமும், பின்னே சொல்லப்பட்டது பரஞானமும் ஆகும்.

சிந்தித்தல் ஆராய்ச்சியேயன்றி அனுபவம் அன்று, அதனால், அஃது அபர ஞானமே. பாங்கினில் ஓங்குவது. அஃதாவது செவ்வனே நிலைபெற்று வளர்வது அனுபவஞானம். அது 'பவம்' எனப்படுகின்ற பிறப்பை அறவே நீக்குவது. இந்த அனுபவ ஞானம் முதிரப் பெற்றுப் பிறர்க்கும் அதனைத் தர வல்லவரே குருவாவார்.

குரு, தாமே ஞானக் கருவூலமாய் இருப்பதுடன் அக் கருவூலத்தை அண்டதற்கு வழிகாட்டுபவராயும் இருத்தலால், 'தேசிகர்' என்றும், 'பண்டாரசந்நிதி' என்றும், 'சந்நிதானம்' என்றும் போற்றப் பெறுகின்றார் 'பண்டாரம்' என்பது பொதுவாகக் 'கருவூலம்' எனப் பொருள்தருமாயினும், அது ஞானக்கருவூலத்திற்கே சிறப்புப் பெயர் ஆகின்றது.

" ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்பிரான் தன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே "

என அருளிச்செய்தார் மாணிக்கவாசகர். மகா என்பது பெருமை எனப் பொருள்தரும். 'மகா சந்நிதானம்' என்பது, ஏனைய பெருமைகள் எல்லாவற்றிலும் தலையாய பெருமையாகிய ஞானத்தைத் தரும் பெருமையை உடையவர் எனப் பொருள் தந்து உண்மைப் பெருமையை உணர்த்தி நிற்கிறது.

குருபக்தியின் சிறப்பு :

இத்தகைய பெருமையை ஒருவர் பெறுதற்குத் தாமும் இத்தகைய ஆசாரியரை அடைந்து அவரையே தமக்கு அன்னையும் தந்தையும் மற்றும் யாவுமாகக் கொண்டு, அவர்பால் அளவிறந்த பக்தியும் பணிவும் உடையராய் அவர் திருவடி நிழலிலே நீங்காதிருத்தல் வேண்டும் அவ்வாறிருந்தவர் தாம் நம் ஆதி பரமாசாரியர் அதனால்தான் அவர்கள் பின்பு தாமே பண்டாரசந்நிதியாகவும், மகாசந்நிதானமாகவும் விளங்கினார்கள்.

அவர்கள் மதுரையில் இருந்தபொழுதே இறைவன் அவர்கட்குத் திருவாரூரில் உள்ள ஞானப்பிரகாசரது பெருமையை உணர்த்தினான். அதனைக்கேட்டவுடனேயே அவர்கட்கு அக்குருமூர்த்திகளிடம் அளவிறந்தபக்தி உளதாயிற்று. அதனால் அவர்கள் திருவாரூருக்கு விரைந்து சென்று அங்கு அக்குருமூர்த்திகளைக் கண்டார். கண்ட மாத்திரத்திலேயே தமது பாச இருள்கள் எல்லாம் அறவே நீங்கின; சிவஞானத்தால் சிவத்தைப்பெற்று சிவானந்தத் தேனை முகந்து உண்டேன் என்று அவர்களே அருளிச் செய்கின்றார்கள்.

'கண்டேன் இப் பாசம் கழிந்தேன் அமுதைமுகந்து
உண்டேன் சுகானந்தத் துள்ளிருந்தேன்—வண்டிமிர்காத்
தேனைப் பொழிகமலைச் செங்கமலப் பொற்பாத
ஞானப்பிர காசனையே நான்''

ஞானத்தை விரும்புகின்ற ஒவ்வொருவர்க்கும் இத்தகைய குரு பக்தி அல்லது ஆசாரிய பக்தி இன்றியமையாததாகும் குரு பக்தியாலே குருவினது அருள் எளிதாகக் கிடைக்கும் என்பதற்குப் பாரதத்தில் சொல்லப்படுகின்ற 'ஏகலைவன்' என்னும் ஒரு வேடன் கதையே போதுமானது.

இத்தகைய குருபக்தியின் அடையாளமாகவே இக்குருபூசை விழா நிகழ்கிறது. இதன் பயனாக இவ்வகுப்பில் கலந்து கொள்கின்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும், அபரஞானமாகிய கலைஞானத்தின் வழியே பரஞானமாகிய சிவஞானம் சித்திக்க ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

53

கற்பணி செய்தார் கயிலை நீங்கார்

''பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானை பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழுத்தின் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே''

—திருநாவுக்கரசர்.

[நாட்டுக்கோட்டை நகரத்தார் தமிழ்நாட்டுச் சிவாலயங்களுக்குச் செய்துள்ள திருப்பணிகள் நினைவு கூரத்தக்கன. நகரத்தார் வாழ்வு, பண்பு, தொண்டு முதலியன குறித்து அருளிச் செய்யும் குருமணிகள், மூர்த்தி தலம், தீர்த்தம் கோக்கி மேற்கொள்ளப்பெறும் நடைப்பயணத் தின் சிறப்பினையும் இதில் விளக்கியுள்ளார்கள்.]

நகரம்–சொல்விளக்கம்!

நகரத்தார் என்னும் சொல் கோயிலை மையமாக வைத்து எழுந்ததாகத் தெரிகிறது. நகரம் எனும் சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. எனினும், பட்டினம் எனும் பொருளும்

---

* 20—4—'82 அன்று செட்டிநாட்டு நகரத்தார் குழுவினர் ஆயிரவர் வழிநடைப்பயணமாக வைத்தீஸ்வரன்கோயிலுக்கு வந்துவழிபட்டசிறப்புநிகழ்ச்சியின்போது வழங்கியருளியது.

கோயில் எனும் பொருளும் சிறப்பாகக் கொள்ளப்படுகின்றன. இந்த வகையில் நகரத்தார் எனும் சொல்லுக்குக் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து சென்றவர்கள் எனும் பொருள் கொள்ளத் தக்கதாக இருப்பினும், சிறப்பான பொருளாகக் கோயிலுக்குத் திருப்பணி செய்த குடும்பத்தார் - சிவனருட்செல்வர்கள் எனும் பொருளைக் கூறுதலே பொருத்தமாக உள்ளது நகர் என்னும் சொல்லுக்குக் கோயில் என்னும் பொருள் உண்டு என்பதனை, ''பணியியர் அத்தை நின்குடையே முக்கட்செல்வர் நகர்வலம் செயற்கே'' என்னும் புறநானூற்றுப் பாடல் தொடரில் 'நகர் வலம்' என்னும் சொற்றொடருக்குக் கோயிலை வலம்வரும் பொழுது என்று பொருள் கூறுவது கொண்டு உணரலாம்.

செட்டியார் எனும் சொல்லும் சிந்திக்கத் தக்கதாகும். 'செட்டு' என்றால் எந்தப் பொருளையும் வீண்செய்யாமல் அளவோடு தேவையறிந்து செலவுசெய்வது என்பது பொருளாகும். செட்டாக - சிக்கனமாக இருப்பது வேறு; கருமியாக இருப்பது வேறு. இதுபோலவே தாராளத்தன்மையில் கொடைவேறு; ஊதாரித்தனம் வேறு; கொடை என்பது தக்கபொருளைத் தக்கவர்க்குத் தேவையறிந்து போதுமான அளவு கொடுப்பது. ஊதாரித்தனம் அங்ஙனமின்றி மாறாகக் கொடுப்பது. எனவே செட்டு; செட்டியார் என்று கூறுவது எல்லாம் வாழ்க்கையின் தேவையையும் அளவையும் அறிந்து வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடத்தும் சிறப்பைக் குறிக்கும் சொற்களாகவே கொள்ளப்படும்.

கற்பணி செய்தார் கயிலை நீக்கார்

நகரத்தார் முற்காலத்தில் தாம் ஈட்டிய பெருஞ்செல்வத்தைத் திருக்கோயில் திருப்பணிக்கே செலவிட்டவர்கள். இன்ன கோயில் திருப்பணி செய்தவர் என்று அழைக்கப்படுவது அவர்கள் குடும்ப மரபு. திருப்பணியின் பெருமைபற்றி ஒரு பாடல் மிக விளக்கமாகக் கூறுகிறது.

''புல்லினால் ஐந்துகோடி புதுமண்ணால் பத்துகோடி
செல்லுமா ஞாலம்தன்னில் செங்கல்லால் நூறுகோடி
அல்லியங்கோதை கேளாய் அரனுறை ஆலயத்தைக்
கல்லினால் செய்வித்தோர்கள் கயிலைவிட்டு
அகலாரன்றே!

எனும் பாடலில் திருக்கோயில் திருப்பணியினைக் கருங்கல்லினால் செய்வித்தவர்கள் கயிலை விட்டு நீங்கார் என்பது கொண்டு இதன்பெருமை உணரலாம். இவ்வகையில் நகரத்துப் பெருமக்கள், பாடல்பெற்ற சிவாலயங்கள் பலவற்றையும்கருங்கல் திருப்பணி செய்துள்ளனர். கருங்கல்லே கிடைக்காத இராமேச்சுரம் முதலிய தலங்களில் கற்றளிகளைக் கலைவண்ணத்தோடு மிளிரும்படித் திருப்பணி செய்த அதிசயத்தை எண்ணும் தோறும் வியப்புண்டாகிறது. திருவையாற்றில் ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்பாள் திருக்கோயில் திருப்பணியைத் தேவ கோட்டை சேவுகன் செட்டியார் குடும்பத்தினர் செய்துள்ளனர். மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசர் திருக்கோயிலை வயிநாகரம் குடும்பத்தினர் திருப்பணி செய்துள்ளார்கள் வயிநாகரம் குடும்பத்தில் பிறந்த இராமநாதன் செட்டியார் என்பவர் சிறந்த கவிஞர். ஒருமுறை நமது ஆதினத்து 23 ஆவது குருமகா சந்நிதானத்தைத் தரிசிக்க வந்தபோது நிந்தாஸ்துதியாகப்பாடிய பாடல்களில் தமது குலப்பெருமையினை ஒரு பாடலில் கூறுகிறார்.

''துஞ்சாத புகழ்மதுரை மீனாட்சி
இறைசோம சுந்த ரேசர்க்கு
எஞ்சாத திருபணியைக் காற்கோடி
பொருட் செலவில் இயற்றியுள்ளோம்
அஞ்சாதபடி இருபத்தெட்டு ஆண்டு
கமிட்டியினில் அரசு செய்தேன்
செஞ்சாலிவயல் அமரா வதிபுத்தூ
ரினில்பிறந்து சிறந்துள்ளேனால்''

எனும் பாடலில் மதுரைத் திருக்கோயிலுக்குக் காற்கோடி திருப்பணி செய்வித்தமையை விளக்கமாகக் குறிக்கின்றார். இங்ஙனம் தமிழ்நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட திருக்கோயில்களைத் திருப்பணிசெய்த காரணத்தாலேயே இவர்கள் நகரத்தார் எனப் பெயர்பெற்றனர் என்பதே சாலும்.

இத்தகு சிறப்புவாய்ந்த நகரத்தார் பலதலங்கட்கு வழி நடைப்பயணம் (பாதயாத்திரை) செய்து வருகின்றனர். வைத்தீசுவரன் கோயிலுக்கும் ஆண்டுதோறும் வருவதும், சித்திரை முதற் செவ்வாயன்று வழிநடையைப் பூர்த்திசெய்து சிறப்பு வழிபாடு செய்வதும், நூறாண்டுகட்கு மேலாக

நடந்துவரும் நிகழ்ச்சியாகும். நூறாண்டுகட்கு முன்னர் நகரத்தார் ஒருவருக்கு வயிற்றுவலி வந்து கடுமையாகத் துன்புறுத்தியது அப்போது அவர் வயித்தியநாதரிடம் வயிற்று வலி தீர்ந்ததும உன்னை பாதயாத்திரையாகவே வந்து தரிசிக்கிறேன் என்று பிராத்தனை செய்துகொண்டார். அவர் செய்த பிரார்த்தனையே ஆண்டு தோறும் பல்கிப்பெருகி ஆயிரகணக்கான நகரத்தார் வழிநடைப் பயணமாக வேளூர் வந்து தரிசிக்கின்றனர் யாத்திரையை முதலில் தொடங்கிய குடும்பத்தினரின் வழியினரும் இங்கு வந்துள்ளனர் என்று அறியவருவது மகிழ்ச்சிக்குரியது.

வேளூரில் விளையும் தத்துவம் :

இந்த வைத்தீசுவரன்கோயில் எத்தனையோ தத்துவ விளக்கங்களுக்கு உறைவிடமாக விளங்குவது போலத் தந்தை மகன் உறவு எங்ஙனம் அமையவேண்டும் எனும் தத்துவத்தையும் விளக்கும் புண்ணியத் தலமாகவும் விளங்குகிறது. உலகில் வயது முதிர்ந்தவர்கள் தம் பிள்ளைகளிடம் பொறுப்புக்கள் அனைத்தையும் ஒப்படைப்பது வழக்கம். அப்பிள்ளைகளும் அப்பொறுப்புக்களைப் பொறுப்போடும் உரிமையோடும் அன்போடும் எடுத்துச் செயற்படுத்துவது இயல்பு ஆனால் பல பெற்றோர்கள், தம்பிள்ளைகளைப் பின்னே சுமக்க இருக்கும் பொறுப்பினைச் செயற்படுத்தும் திறனோடும் துணிவோடும் வளர்க்கத்தவறிவிடுகிறார்கள். பிள்ளைகளும் அங்ஙனம் பொறுப்புணர்ந்து வளரத்தவறிவிடுகிறார்கள். நெறிப்பட்டோர் நடத்தும் குடும்பப்பாங்கை இவ்வாலய நடைமுறையில் காணலாம் வைத்தீசுவரன்கோயிலில் அனைத்துப் பட்டாக்களும் வைத்திய நாதர் திருப்பெயரில்தான் அமைந்துள்ளன. ஆனால் ஆட்சியும், அனுபவமும் செல்வமுத்துக் குமாரசாமியின் வசமே உள்ளன. திருவிழாக்காலங்களிலும் கிருத்திகைதினங்களிலும் ஸ்ரீ செல்வமுத்துக் குமாரசாமி, மண்டபத்திற்கும் உலாவிற்கும் எழுந்தருளுவதற்கு முன்னால் வைத்தியநாதப்பெருமானின் திருச்சந்நிதியில் நின்று உத்தரவு கேட்பதும், அம்பாள் சந்நிதியில் நின்று உத்தரவு பெறுவதும் ஒரு ஐதிகமாக நிகழ்ந்து வருகிறது. இந்த ஐதிகத்தில் தான், இன்றும் நடைபாவாடை இட்டு ராஜ உபசாரத்துடன் மேள தாளங்களும் வேதஒலியும் முழங்க ஸ்ரீ முத்தையாவை

எழுந்தருளச்செய்து சுவாமியை வலம்வரச் செய்து சுவாமி சந்நிதி முன்னர் சிறிதுநேரம் நிறுத்துவதும் அம்பாள் சந்நிதியில் சிறிதுநேரம் நிறுத்துவதும் சம்பிரதாயமாக நடந்துவருகின்றன.

இங்ஙனம் சுவாமி, அம்பாள் உத்தரவு பெற்று வெளியில் எழுந்தருளி விழாக்கொண்டு மீளும் முருகன் மீண்டும் சுவாமி யையும் அம்பாளையும் தரிசித்து வந்துவிட்டேன்; இருப்பிடம் செல்கிறேன் என்பதைத் தெரிவிப்பது போலவும் ஐதிக நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பால் நினைந்தூட்டும் தாய்க் கெல்லாம் தாயாக இருப்பவள் தையல்நாயகியம்பாள் ஆதலின், அவள் சந்நிதியில் குழந்தை முத்தையாவிற்குப் பால்நிவேதனம் நடப்பது தாய்க்குலத்திற்கு ஓர் படிப்பினையாக விளங்குகிறது.

தந்தை மகன் பொறுப்பு:

தந்தை, தம்பொறுப்புகள் அனைத்தையும் மகனிடம் கொடுத்து அவன் ஆள்வதையும் அனுபவிப்பதையும் கண்டு பூரிப்பது எவ்வளவு சிறப்பானதோ அதே போன்று மகனும் தனக்கு உரிமையும் அனுபவமும் உண்டு என்ற போதிலும் அவை அத்தனையும் தந்தையின் முன்னிலையில் முறையிறழாமல் அடக்கதோடு நடக்கவேண்டியவை என்பதனை உணர்ந்து அவர்தம் அனுமதியோடு அனைத்துக் காரியங்களையும் செய்வது இருதிறத்தார்க்கும் சிறப்பானதாகும். இக்கருத்தினை இச்சம்பிரதாய நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன.

நடைப்பயணத்தின் நன்மை:

இவ்வேளூருக்கு வழிநடைப் பயணமாகப் பல்லாண்டுகள் தொடர்ந்துவந்துகொண்டிருக்கின்றநகரத்தார்எத்துணையோ சிவாலயங்களுக்குத் திருப்பணி செய்துள்ளனர் ஆனால் அவர்கள் பெரிதும் விரும்பி வழிபட்டு நலம்பெறும் இத்திருக் கோயிலில் இவர்கள் திருப்பணி இடம்பெறாதது வியப்பாகவே இருக்கிறது. இனிமேல், நடைபெற உள்ள திருப்பணிகளில் நகரத்தார் பங்கு கொண்டு பயன்பெறலாம் என்பதை நினைவு கூர விரும்புகிறோம் இதுபோன்று வழிநடைப் பயணமாக வருவதால் பல நன்மைகள் கிடைக்கின்றன. பல்வேறு பொது மக்களைச் சந்திக்கும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. பலரது பழக்கவழக்கங்களை அறிந்துகொள்ளும் பட்டறிவு (அனுபவம்) கிடைக்கிறது பல ஊர்கள், ஆறுகள் போன்றவைகளைக் கடந்து வருவதால் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப உடல் நலம் பெறுகிறது பலருக்கு நடந்து பழக்கமின்மையால் சிலமைல்கள் சென்றவுடனேயே கால்வலி ஏற்படும். உடனே பயணத்தை

நிறுத்தி விடுதலோ, அல்லது பயணத்தை இன்னும் வேகமாக நடத்துதலோ கூடாது கால்வலி உடல்வலி ஏற்பட்டால் தக்க உடனடி சிகிச்சைகள் செய்து சிறிது ஓய்வு கொண்டு, ஆனால் பயணத்தை நிறுத்திவிடாமல், தொடர்ந்து நிதானமாகச் சென்றால் உடல்தானே ஒத்துழைக்க ஆரம்பித்துவிடும். எந்த ஒரு உழைப்பிற்கும் உடலானது முதலில் ஒத்துழைக்க மறுத்து விடும். பின்னர் அதனைச் செய்தே தீரவேண்டும் என்ற உறுதிப்பாட்டைக் கொண்டு மேலும் தொடர்ந்து நிதானமாகச் செல்வோமேயானால் பிறகு உடல் ஒத்துழைக்க ஆரம்பித்து விடும். எனவே துன்பத்தைத் தொடர்ந்து சிறிது சிறிதாக ஏற்றுப் பின்னர் அதனையே இயல்பாக எண்ணும் மனநிலையை இதுபோன்ற வழிநடைப் பயணத்தின் மூலம் உணர்ந்து கொள்ளலாம். இவற்றையெல்லாம் உளம் கொண்டே தாயுமானார்,

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்று அருளிச்செய்தார்.

இத்தகைய வழிநடைப் பயணத்தைச் சிறப்பாகச் செய்து இறைவழிபாடாற்றி வரும் நகரத்தார் அனைவரையும், மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் அன்பர் திரு. வி. என். சிதம்பரம் அவர்களையும் பாராட்டுகின்றோம். இவர்களின் இவ்வழிபாட்டு முறை மேலும் சிறந்து வளரவும், அனைவரும் வாழ்வில் எல்லா நலங்களும் பெற்று நீடு இனிது வாழவும் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க நகரத்தார் ! வளர்க பாதயாத்திரை !

54

கண்ணிற்சிறந்த உறுப்பில்லை*

''ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழு தேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தை யுளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கூற்றனெம் மானைக்
காணக் கண் அடி யேன்பெற்ற வாறே''

[ஏந்த ஒரு பொருள் பற்றிச் சிந்தித்தாலும், அதன் ஆழ அகலங்களை ஆராய்ந்து தெளிந்து அருளிச்செய்யும் இயல்பு மிக்க குருமணிகள், கண் சிகிச்சை முகாம் ஒன்றில் 'கண்' பற்றி வழங்கியுள்ள செய்திகள் கற்போரை வியப்பில் ஆழ்த்துகின்றன.]

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை :

'என்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்' என்பது ஆன்றோர் வாக்கு. ''கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யாவதும் காட்டியதே'' என்பது தஞ்சைவாணன்கோவை. சமஸ்கிருத மொழியிலும், ''ஸர்வஸ்ய காத்ரஸ்ய சிரஸ்ப்ரதானம், ஸர்வேந்திரியானாம் நயநம் ப்ரதானம்'' என்று இருக்குருத்தே கூறப்பெற்றுள்ளது. மக்களின் உடம்பிலுள்ள கருவிகளை

---

* 10—2—'82 அன்று வைத்தீசுவரன் கோயிலில் நடைபெற்ற சஞ்சய்காந்தி நினைவு கண் சிகிச்சை முகாமில் வழங்கியருளியது.

இரண்டு வகையாகப் பிரிப்பர். ஒன்று அறிவுக்கருவி; மற்றொன்று தொழிற்கருவி. அறிவுக்கருவிகள் ஐந்து; தொழிற் கருவிகள் ஐந்து; ஊற்றுணர்வுள்ள உடம்பு; சுவையுணர்வுள்ள நாக்கு; ஒளியுணர்வுள்ள கண்; நாற்றவுணர்வுள்ள மூக்கு; ஒலியுணர்வுள்ள காது எனும் அறிவுக்கருவிகளாகிய ஐம்பொறி களும், அவற்றை உணர்ந்து செயற்படுத்தும் மூளையும் தலையில் இருக்கும் காரணம் பற்றியே ''எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்'' என்றனர்.

இவ்வைம்பொறிகளுள்ளும் கண் சிறந்த இடம் வகிக்கிறது. காரணம் மற்றைய பொறிகள் தன்னிடம் வருவனவற்றை அறிந்து மூளைக்கு உணர்த்துவன. ஆனால் கண் மட்டுமே தொலைவிலுள்ள பொருளையும் சென்றறிந்து அதனை மூளைக்கு உணர்த்தும் திறனுடையது. கண்ணைத்தவிர மற்றையபொறிகள் நின்று பற்றுவன; கண்மட்டுமே சென்று பற்றும் சிறப்புடையது. இச்சிறப்புக் கருதியே, ''கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யாவதும் காட்டியதே!'' என்று தஞ்சை வாணன் கோவையின் ஆசிரியர் பொய்யாமொழிப் புலவர் கூறினார்.

மன்னனே மக்களின் கண் :

சேக்கிழாரும் மன்னனின் இலக்கணம் கூறவந்த இடத்து.

''மண்ணில் வாழ்த்தும் மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்''

என்று மொழிகின்றார். மன்னனானவன் தம் நாட்டில் வாழும் உயிர்கட்கெல்லாம் உயிராக வாழ்பவன். அதோடு மட்டுமின்றிக் கண்ணாகவும் வாழ்பவன். தன்னிடம் குறைவேண்டியும் முறைவேண்டியும் வருவோர்க்கு ஆவன செய்வதோடல்லாது தானே பல இடங்களுக்கும் சென்று குறைகளையும் முறைகளையும் கண்டும் கேட்டும் அறிந்து அதற்குத்தக தீர்வுசெய்யும் கடப்பாடு உடையவன் என்பது கருத்தாகும். உயிர் நின்று பற்றுவது; கண்சென்றுபற்றுவது. மன்னன் உயிராக, இருந்துழி இருந்து, ஒற்றர்வழி அறிந்து, மூளையைப்போல் நின்றும் நீதி வழங்க வேண்டும் கண்ணாக இருந்து சென்றும் நீதி வழங்க வேண்டும் எனும் உட்கருத்தில்தான் சேக்கிழார்பெருமான், 'கண்ணும் ஆவியும் ஆம்பெருங்காவலான்' என்றருளிச் செய்கின்றார்.

இன்பத் துன்பத்தைக் காட்டுவது கண்:

மேலும் கண்ணிற்குப் பல சிறப்புக்கள் உண்டு. அறிதற் கருவியாக விளங்கும் கண், அறிவுக்கருவிகளிலும், தொழிற் கருவிகளாகிய கை, கால், வாக்கு,எருவாய், செருவாய் எனும் உடலுறுப்புக்களிலும், ஏதாவது நன்றோ தீதோ நிகழுமாயின் அதனைப் புலப்படுத்துகின்ற நிலையில், இன்பத்துன்பக் கண்ணீர் வடிப்பதும் அக்கண்ணின் சிறப்பாகும். மனிதனின் உள்ளத்திற்குள் நிகழும் மகிழ்ச்சியையும். நெகிழ்ச்சியையும் வெளிப்படுத்தும் கருவியாக இலங்கும் சிறப்புடையது. கண் ஒரு செயலை ஏற்று இசைவு தருவதும், புறக்கணிப்பதும் கண்ணின் புலப்பாட்டிலேயே அறிந்துகொள்ள இயலும். அத்தகைய சிறப்புடைய கண், திருடனைக் காட்டிக் கொடுக்கவும், ஒழுக்கம் இல்லாதவனை உலகுக்கு உணர்த்தவும் உரிய கருவியாக விளங்குகிறது.

கற்பினைக் காட்டுவது கண் :

இதனால்தான் சீதாப்பிராட்டியின் கற்புத்திறத்தை இராமபிரானிடம் கூறவந்த அனுமன், 'கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்'' என்று விளக்குகின்றான். சீதை உயிரோடுதான் இருக்கிறார் என்பதைப் பிறர்கூறக் கேட்டு வரவில்லை; நானே என் கண்களால் கண்டு வந்தேன் என்று அனுமன் கூறுகிறான் என்பதாகப் பொருள் கூறலாம். ஆனால் அம்மையார் கற்போடுதான் இருக்கிறார் என்பதை எங்ஙனம் கூறமுடியும் என்பதற்கு விளக்கம் கூறவே இத்தொடருக்கு இன்னும் ஆழமாகச் சிந்தித்துப் பொருள் விளக்கம் காணுதல் அவசியமாகிறது. 'கண்டனன்' என்றாலேயே கண்களால்தான் என்பது தானே விளங்கும். பின்னும் 'கண்களால்' என்று கூற வேண்டிய அவசியமில்லை. எனவே முன்னே உள்ள 'கண்டனன்' என்பதற்கு அனுமன் தான் தன் கண்களால் பார்த்தேன் என்ற பொருளும், பின்னே உள்ள 'கண்களால் எனும் சொல்லிற்குச் சீதையின் கண்களால் அவர் கற்பினுக் கணியாக இருப்பதைப் பார்த்தேன் என்னும் பொருளும் கொள்ளுதல் ஒருவகை. மேலும் அனுமன் கண்களால் சீதாபிராட்டியைக் கண்டனன் என்றும், சீதாபிராட்டியின் கண்களால் அவரது கற்பு நெறி பிறழாது அணியாகத் திகழ்வதைக் கண்டனன் என்றும் கொள்ளுதல் சிறப்பாகும்.

எனவே கண்ணானது மற்ற பொருள்களை அறிந்து மூளைக்கு உணர்த்துவதோடல்லாது கண்களையுடைய மனிதனின் உள்ள உணர்ச்சிகளைச் சமூதாயத்திற்கு உணர்த்தும் உயர்கருவியாகவும் விளங்குகிறது.

காக்க வேண்டிய சிறப்பினது கண் :

இத்தகைய சிறப்புக்கள் பலவுடைய கண்ணைக் காப்பதற்கு இறைவனே தக்க பாதுகாப்புக் கொடுத்திருக்கின்றார். 'கண்ணை இமை காப்பது போல' என்று உலகோர் கூறுவதும் ஈண்டு நினைவுகூரத்தக்கது. காக்கும் இமையைக் கொடுத்துக் காத்துக்கொள் என்று ஆண்டவனே அறிவுறுத்தியுள்ள கண்ணை இன்று பலர் பல காரணங்களினால் கெடுத்துக் கொள்கின்றார்கள்.

கண்கெடுவதற்குரிய காரணங்கள் பலவாகும், பொதுவாக மனித வாழ்வில் ஒழுங்கு நெறிமுறைகள் கெடுமானால் அவை கண்களைப் பாதிக்கும். குறிப்பாக ஒழுக்கக் கேட்டினாலும், பொய் சொல்வதனாலும், கோபப்படுவதனாலும், திரைப்படம், தொலைக்காட்சிகளைப் பார்ப்பதனாலும் கண் கெடும். மற்ற காரணங்கள் தெளிவாக விளங்கினாலும் பொய் சொல்வதனால் கண் பாதிக்கும் என்பது பலருக்குப் புரிவதில்லை. பொய் அதனால் சொல்கிற போது அவனது மனம் அவனை உறுத்துகிறது. உடம்பிலுள்ள நரம்புகள் பாதிக்கப்படுகின்றன. இவ்வகையில் கண் கெடுகிறது.

கூந்தர் வாழ்வில் கண் :

பொய்சாட்சி சொன்னவர்களுக்கும் கண்தெரியாமல் போய்விடும். ஏனெனில் 'சாட்சி' என்றாலேயே கண்ணால் கண்டதைக் கூறுதல் என்பது பொருளாகும். 'சட்சு' எனும் சொல்லுக்குக் கண் என்பது பொருளாகும். அதன் அடிப்படையில் வந்ததே 'சாட்சி' எனும் சொல். ஆதலின் சாட்சி சொல்லும் பொழுது தன் கண்ணால் காணாத ஒன்றைக் கூறுவானேயானால் அதுவே அவனது மனத்தை உறுத்திப் பின்னே தண்டனைக்குரியதாகிக் கண்களைப் பாதிக்கும். சபதம் பொய்த்தாலும் கண்கள் கெடும் என்பதற்கு நம் ஆசாரிய மூர்த்தியாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் வரலாற்றை இவ்வகையில் எடுத்துக்கொள்ளலாம். இது

தவறுடையது எனினும் வாழ்வியல் நெறிமுறைகளை விளங்கிக் கொள்வதற்கும் கடவுளின் நடுநிலைத் தன்மையைப் புரிந்து கொள்வதற்கும் பயன்படும் என்ற வகையில் அடக்கத்தோடும் அச்சத்தோடும் அவ்வரலாற்றைச் சிந்திக்கலாம்.

எறும்புக்குக் கண் இல்லை :

இதுவரை சிந்தித்த கருத்துக்களால் கண் கெடுவதற்குரிய காரணங்களை எண்ணியது போல இனிக் கண்ணைப் பாதுகாத்தற்குரிய சில வழிமுறைகளையும் சிந்திப்போம். கண் நன்கு தெரிவதற்குப் பொதுவாகக் கீரை வகைகளைக் குறிப்பாக முருங்கைக் கீரையை உணவில் சேர்த்துக்கொள்ளுதல் நல்லது. மேலும் அறநோக்குப்படிப்பார்த்தால் கண் பார்வையில்லாத ஜீவராசிகளுக்கு உணவு அளித்தலும் கண்ணைக் காப்பாற்றும். உலக உயிர்களில் கண்பார்வையில்லாத உயிர் எறும்பு ஆகும் தொல்காப்பியர் ஓரறிவுயிர், ஈரறிவுயிர் என்பதுபற்றி ஒரு நூற்பாக் கூறுகின்றார்.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே — தாவரம்
இரண்டறி வதுவே அதனெடு நாவே — கரையான்.
மூன்றறி வதுவே அவற்றெடு மூக்கே — எறும்பு.
நான்கறி வதுவே அவற்றெரு கண்ணே — வண்டு.
ஐயறி வதுவே அவற்றெடு செவியே — விலங்குகள்.
ஆறறி வதுவே அவற்றெடு மனனே — மனிதன்.
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

என்னும் நூற்பாவில் ஆறு அறிவுபற்றிய உயிரினங்களைப் பிரித்துக்கூறுகின்றார். உற்றறியும் அறிவு ஒன்றுமட்டும் உடைய உயிரினங்கள் புல், மரம் போன்றவை. நாவறிவாகிய ஈரறிவும் உடைய உயிரினங்கள் நத்தை, சங்கு என்பன. மூக்கறிவும் சேர்ந்து உடைய மூவறிவுயிர்கள் சிதல், எறும்பு போன்றவை. கண்ணறிவும் சேர்ந்த நிலையிலுள்ள நாலறிவு உயிர்கள் நண்டும் வண்டும். செவியுணர் அறிவுடன் சேர்ந்த ஐயறிவுயிர்கள் மாக்களும் விலங்கினங்களும். ஆறறிவாகிய மனனுணர்வுடைய உயிர்கள் மக்கள் ஆவர். இங்ஙனம் பிரித்துக் கூறப்பட்ட வகையில் எறும்பு எனும் உயிருக்கு உற்றறிவு நாவறிவு மூக்கறிவு எனும் மூன்றும் உண்டு என்றும் கண்ணறிவு இல்லை என்றும் உணர்ந்துகொள்கின்றோம்.

எறும்பு தின்றால் கண் தெரியும்:

இத்தகைய கண்பார்வை இல்லாத உயிருக்குநோய்முதலிய தானியங்களை எறும்புப் புற்றில் இடுதலும், வீடுகளின் முன்னர் அரிசி மாக்கோலம் போடுதலும் காரணமாக உணவுதரும் அறச்செயல்கள் நாட்டில் தொன்றுதொட்டு நடைபெறுகின்றன. அரிசி மாக்கோலம் போடும் நிலையில் இப்பொழுது மாறுதலாகக் கல்லால் ஆன மாவைக்கொண்டு கோலம் போடுகின்றனர். இது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்; அறத்தின் நோக்கத்திற்கே புறம்பானதாகும்.

இங்ஙனம் எறும்புபோன்ற கண்பார்வை இல்லாத உயிரினங்கள் உண்ணும்படி உணவை இட்டால் கண்பார்வை நன்கு தெரியும் எனும் பொருளில்தான் உலக வழக்கில் "எறும்பு தின்றால்கண் தெரியும்" என்னும் பழமொழி வழங்கி வருகிறது. ஆனால் இப்பழமொழியின் உண்மைப்பொருள் அறியாத சிலர் உணவுப் பண்டங்களில் எறும்பிருந்தால், "பரவாயில்லை; சாப்பிடுங்கள், கண் தெரியும்" என்று மாற்றிப் பொருள்கூறி வருகின்றனர். இது தவறு; எறும்பு தின்றால் கண் தெரியும் என்றால் எறும்பு, நாம் போடும் உணவைத்தின்றால் நமக்குக் கண் தெரியும் என்று பொருளேதவிர எறும்பையே தின்றால் தின்பவருக்குக் கண்தெரியும் என்பது பொருளில்லை. பழமொழிகளை வழங்கக் கற்றுக்கொண்ட மக்கள் அவற்றின் உண்மைப் பொருளையும் புரிந்துகொள்ளுதல் அவசியம்.

வைத்தியநாதரின் வாழ்த்து:

இங்ஙனம் கண் பார்வை நன்கு தெரிவதற்குச் சில நெறி முறைகளையும் கண் பார்வை கெடுவதற்குரிய சில காரணங்களையும் இந்தநேரத்தில் இங்கே சிந்திப்பதற்குக் காரணமாக இருந்தது இந்த "சஞ்சய்காந்தி நினைவு கண் சிகிச்சை முகாம்" ஆகும். பலரோக வைத்தியநாதராக விளங்கும் வைத்திய நாதப்பெருமான் எழுந்தருளி அருள்வழங்கும் இந்த வைத்தீசுவரன் கோயிலில் இந்தக் கண் சிகிச்சை முகாம் நடைபெறுவது அவர் அருள்பெறும் குறிப்பாகவே அமைந்துள்ளது.

இந்த முகாமை மிகவும் சிறப்பாக நடத்தி நாற்பதுக்கும் மேற்பட்ட மக்களுக்கு கண் சிகிச்சை அளித்துக் கண்ணாடிகளும்

வழங்கியிருப்பது பாராட்டுதற்குரியது. இம்முகாமின் இயக்குநர்களையும் இதனை முன்னின்று நடத்திய பாராளுமன்ற உறுப்பினர் குடந்தை திரு. ராமலிங்கம் அவர்களையும், இம்முகாமிற்கு ஆதரவு நல்கிவரும் திரு. துளசி ஐயா வாண்டையார் அவர்களையும் மற்றும் தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர், உள்ளூர் பிரமுகர்கள், மயிலாடுதுறை கோட்டாட்சியர் முதலானவர்களையும், கண்ணொளி பெற்றவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளைப் பொறுத்துத்தான் அவர்களின் நன்மைதீமைகள் அமைகின்றன. அதனால் எல்லோரும் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ எல்லாம்வல்ல செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க நல்லறம்!

வளர்க கண்ணொளி!

55

வேளாளர் வரலாறும், அவர்தம் கொள்கையும்*

'செய்யநின் கமலபாதம் சேருமா தேவர்தேவே
மையணி கண்டத்தானே, மான்மறி மழுவொன்றேந்தும்
சையனே, சாலஞானம் சற்றறி விலாதநாயேன்
ஐயனே, ஆலவாயி லப்பனே, அருள்செயாயே''

— திருஞானசம்பந்தர்

[சிவநெறி வழுவாது, ஊற்றமுடன் வாழ்ந்து சைவப்பயிர் வளர்த்த பெருமை தமிழ் நாட்டுச் சைவ வேளாளர்களுக்கு உண்டு. சைவ வேளாளர் குலவரவுபற்றியும், அவர்கள் இயல்பு பற்றியும் அரிய பல நுட்பங்களை உலகியல் கண்ணோட்டத்துடன் குருமணிகள் அருளிச் செய்தது.]

கண்மணியிற் சிறந்த நன்மணி

குடந்தைமாநகரத்தில் சைவ வேளாளர்கள் இன்று ஒரு புரட்சியைச் செய்துள்ளார்கள். அது திருவருள் புரட்சியாக்வே அமைந்திருக்கிறது. இதற்கு உறுதுணையாயிருந்து இயக்கிய வர்கள் நமதுகண்மணியிற் சிறந்த நன்மணியாகிய காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் ஆவார்கள். இத்தகைய ஓர் அருஞ்செயலைச் செய்த நம் சிஷ்யரைப் பாராட்டுகின்றோம்; அதில் மகிழ்ச்சியும் அடைகின்றோம். ஒரு பிள்ளையின் வளர்ச்சியைக் கண்டு தந்தை பூரிப்படைவது போன்றது இது! சைவ வேளாளர் சங்கம் ஏறத்தாழ நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பெற்று, மெதுவாக நடைபோட்டு வந்து

* கும்பகோணத்தில் நடைபெற்ற சைவ வேளாளர் மாநாட்டில் 17—5—82 அன்று வழங்கியருளியது.

இப்பொழுது கொஞ்சம் வேகமாக நடைபோட ஆரம்பித்துள்ளது. இது சங்கத்தின் வளர்ச்சிக்கோர் நல்ல அறிகுறியாகும். இதுபோன்ற நல்ல செயல்களில் மக்களை ஈடுபடுத்தி அவர்களின் உள்ளத்தில் நற்பண்பை விதைத்து, குருஉபதேசம் பெறுகின்ற பக்குவ நிலைக்குத் தயார்செய்து அழைத்துவரவே சிஷ்யர்கள் இருக்கிறார்கள். அப்படி இருத்தல் அவசியமானதாகும். நமது ஆதீனத்தின் நான்காவது குருமூர்த்திகளுக்கு ஒரு குமரகுருபரர் அமைந்ததுபோல, இராமகிருஷ்ணபரமஹம்சருக்கு ஒரு விவேகானந்தர் கிடைத்ததுபோல, இப்பொழுது நம் ஆதீனத்திற்குக் காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் கிடைத்துள்ளார்.

வேளாளர் யார் ?

வேளாளர் என்பார் யார் ? என்று முதலில் சிந்தித்தல் அவசியமாகும். பரமேசுவரனின் முடியில் கங்காதேவி இருக்கிறார். அவரை இறைவன் பார்த்தருளினார். அவரிடத்திலிருந்து ஓர் ஆண்மகவு தோன்றியது. விஷ்ணுவின் பாதத்திலும் ஒரு கங்கை இருக்கிறார். அவரை இறைவன் நோக்கியருள அவரிடத்திருந்து ஒரு பெண்மகவு தோன்றியது. தேவர்கள் இவ்விருவர்க்கும் திருமணம் முடித்துவைத்தனர் இவர்களிடத்திலிருந்து தோன்றியதுதான் வேளாளர்குலம். இத்திருமண காலத்தில் உடனிருந்தவர்கள் 8000ம் மகரிஷிகள் ஆவார்கள். அவர்களின் பாரம்பரியத்தில் 8000ம் கோத்திரங்கள் தோன்றின. கோத்திரம் எனும் சொல் வழிவழியாக வந்தவர்கள் என்ற பொருளுடையது. அதனால்தான் இன்றும்,

"கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு
பாத்திரம் அறிந்து பிச்சை இடு"

என்று கூறிவருகின்றனர். இவ்விபரம் அபிதான சிந்தாமணியில் காணப்பெறுவது.

'வேளாளர்' எனும் சொல்லுக்கு வரலாற்று இலக்கியவகையில் பிறிதொருபொருள் காணப்படுகிறது. 'வேள்' எனும் சொல் விருப்பத்தை உண்டுபண்ணுபவர் என்னும் பொருளுடையது. வேள், குரிசில், நம்பி போன்ற சொற்கள் இன்றும் ஆண்களில் சிறந்தவர்களுக்குப் பட்டமாக வழங்கப்படுவதைக் காணலாம். முருகவேள், காமவேள், தமிழவேள் போன்ற சொற்களையும் இதற்கு ஆதாரமாகக் கூறலாம்.

விருப்பத்தை உண்டுபண்ணுபவர்கள் என்றால் எல்லோருக்கும் உபகாரியாக இருந்து மக்கள் விரும்பும் செயல்களை மேற்கொள்ளுகிற ஒழுக்கம் உடையவர்கள் என்பது விளக்கமாகும், அதனால் வேள் + ஆளர் எனும்பொழுது விருப்பத்தை ஆள்பவர்கள் ; விருப்பத்தால் ஆள்பவர்கள் என்று பொருள் கூறலாம். இவர்கள் சிறந்த உபகாரியாக இருப்பவர்கள் என்பதற்குச் சான்றாகத் 'திரிகடுகம்' எனும் நூலின் ஆசிரியர் நல்லாதனார் ஒரு பாடல் கூறுகின்றார்.

''தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான்; இம்மூவர்
கேள்ஆக வாழ்தல் இனிது''

எனும் இப்பாடலில், வேளாளன் என்பான் பிறவிருந்தினர்கள் இருக்கும்பொழுது தான் தனித்து உண்ணும் பழக்கம் இல்லாதவன் எனும் பொருளில் ''வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்'' என்று கூறுகின்றார். இக் கருத்தை வள்ளுவரும்,

''தாளாற்றித் தந்தபொருள் எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு''

என்று கூறுகின்றார். முயற்சியால் ஈட்டப்படும் பொருள் தக்கவர்கட்கு உதவுதல் பொருட்டேயாகும் என்பது இதன் பொருளாகும். எனவே 'வேளாண்மை' என்று கூறுவது உபகாரத்தன்மையை ஆளுதல் என்றபொருளில் வருவதைக் காணுகிறோம், மேலும்,

''வேளாளர் என்பவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே''

என்னும் ஞானசம்பந்தர் தேவாரத்தாலும் இவர்கள் உபகாரிகள் என்பது புலனாகும். அதாவது உதவிபுரிவோர். எனவே ஈத்துவக்கும் இயல்பினர் என்பது தெளிவாகும்.

இணைக்கும் சைவம்!

இத்தகைய வேளாளர்கள் பல பிரிவுடையவர்களாக வாழ்ந்துவருகின்றார்கள். தொண்டைமண்டல வேளாளர்கள், சோழமண்டல வேளாளர்கள், பாண்டிமண்டல வேளாளர்கள் தொண்டை மண்டல துளுவ வேளாளர்கள், கொங்குமண்டல

வேளாளர்கள் எனும் பாகுபாட்டுடன் வாழ்கின்றனர். தொண்டை மண்டல வேளாளர்கள் தொண்டை மண்டல முதன்மையார் என்றும், சோழமண்டல வேளாளர்கள் சோழிய வேளாளர்கள் என்றும் வாழ்ந்து வருகின்றனர். இப்பிரிவுகள் வந்தமைக்குரிய காரணம் அவரவர்கள் வாழ்ந்த நாட்டுப் பகுதியைப்பொருத்து அமைந்த அமைப்பு ஆகும். அவர்கள் செய்த செயலும், பேசும் மொழியும், வழிபடும் கடவுளும், மேற்கொள்ளும் பழக்க வழக்கமும் ஒன்றாக இருந்தாலும் சார்ந்து வாழும் நாட்டின் சூழலால் வேறு வேறு பெயர்களைக் கொண்டு வாழ்ந்துவரலாயினர். அப்படிப் பிரிந்து பல்லாண்டுக் காலம் வாழ்ந்தபோது சில நடைமுறை பழக்க வழக்கங்களும், ஒழுக்க நெறிகளும் மாறுபடலாயின. இவைபற்றி உறவு முறையும் மாறுபடலாயின.

இவர்கள் அனைவரும் இணையவும், இவர்களுக்குள் உள்ள வேறுபாடு மறையவும் உரிய ஒரேவழி, இவர்கள் கடைப்பிடித் தொழுகும் சமயத்தின் பெயரால் இவர்களை ஒன்றுபடுத்துவது தான் என்பதை இந்தநேரத்தில் சிந்தித்தல் பயனுடையதாகும். 'சைவம்' என்ற ஓர் அமைப்பில் திரண்டு ஒன்றுபடுவது இவர் களுக்கும், இவர்கள் சார்ந்துவாழும் நாட்டிற்கும் நன்மை பயப்பதாகும். சிறுகுட்டைகளாக இருப்பவை குளமாக இணைவதும்; குளங்கள் பலசேர்ந்து ஏரியாக இணைவதும், ஏரியாக இருப்பது பெரிய ஏரியாக-கடலாக அமைவதுமபோல சிறு சிறு பிரிவினர்களாக இருப்பதை மறந்து ஒரு பெருங் குழுவில் ஒன்று திரள்வது அனைவருக்கும் நன்மைதரும் என்பதில் ஐயமில்லை. இவ் விரிந்த மனப்போக்கைத்தான் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றது புறநானூறும்.

உடல் வளர்ச்சிக் கொள்கை!

அங்ஙனம் ஒன்றுபடும் 'சைவர்' என்பவர்கள் கடைப்பிடித் தொழுக வேண்டிய கொள்கைகளை இனிச் சிந்திப்போம். அவற்றை உடல்வளர்ச்சிக்குரியவை, உயிர்வளர்ச்சிக்குரியவை என இரண்டாகப் பிரித்துக் காண்போம்.

சைவர்கள் என்பவர்கள் உடல்வளர்ச்சிக்குரிய கொள்கை களாக அதாவது ஒழுக்கங்களாக மூன்றினைக் கடைப்பிடித்தல் அவசியமாகும். 1. புலால் உண்ணாமை 2. மது அருந்தாமை

3. புகை பிடிக்காமை. இவற்றினைக் கடைப்பிடித்து ஒழுகுதல் சைவன் ஒவ்வொருவனுக்கும் தலையாய கடமையாகும். முதற்கண் உள்ள புலால் உண்ணாமை இன்று பல சைவர் களிடத்தில் இலைமறை காய்மறையாகத் தலைக்காட்டுவதால் அதை முளையிலேயே கிள்ளவேண்டும் என்பதற்காகவே இக்கொள்கையினை வற்புறுத்தவேண்டியது அவசிய மாகின்றது. இன்றும் உணவு விடுதியில்கூட புலாலை நீக்கியுள்ள உணவினைச் ''சைவச் சாப்பாடு'' என்று கூறுவதனைக் காணுகின்றோம். ஆதலின் 'சைவன்' என்றால் புலால் உண்ணமாட்டான் என்பது வழக்கத்தில் வந்த ஒன்றாகும். ''அன்பே சிவம்'' என்ற அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டது சைவம். அக்கொள்கையைக் கடைப் பிடிப்பவரே சைவர். இவன் பிறருக்கோ, பிற உயிருக்கோ தீங்கு செய்யாது வாழவேண்டும். வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். திருவள்ளுவர் இப்புலால் உண்ணலைக் கண்டிக்கிறார்.

''தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்''

என்கின்றார். புலால் உண்ணுவோரின் 'உள்ளம்' நல்லன வற்றைச் சிந்திக்காது என்பதனையும் திருவள்ளுவர்.

''படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றறக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்''

என்ற குறளால் கூறுகின்றார். எனவே புலால் உண்ணா மையைச் சைவர்கள்–சைவ வேளாளர்கள் தீவிரமாகக் கடைப் பிடித்தல் அவசியமாகும்.

அடுத்துக் ''குடி, குடியைக் கெடுக்கும்'' என்பதை அனை வரும் அறிவர். ஆதலின் அப்பழக்கமும் அறவே வராமல் பார்த்துக் கொள்ளுதல் நலம் பயக்கும்.

புகை பிடித்தல் இன்று சைவர்கள் மத்தியில் கூடச் சர்வ சாதாரணமான பழக்கமாகப் படர்ந்துவருகிறது. தன் உடலுக்குக் கெடுதி பயக்கும் என்று தெரிந்தும்கூடப் படித்தவர் களும் அறிஞர்களும் சிறந்த வல்லுநர்களும் போதையில் மயங்கி ஆப்புகை பிடிக்கும் பழக்கத்தை ஒரு நாகரிகமாகக் கருதிப் பயன்படுத்துகிறார்கள். இச்செயல் அறவே அகற்றத்தக்கது.

திருநீறுபூசுவது உடலுக்கும் உயிர்க்கும் நன்மைதரும் என்று அறிந்தும் பூசுவோரைப் பார்த்துக் கேலி பேசும் இவ்வுலகம், புகைபிடித்தல் போன்ற பழக்கங்கள் உடலுக்கும், உயிருக்கும் கேடுபயக்கும் என்று அறிந்தும் குடிக்கிறவனைப் பார்த்து ஒன்றும் சொல்லாமல் இருப்பது விந்தையினும் விந்தையாக உள்ளது. ஆனால் உலக விமரிசனத்திற்கு முழுமையாக ஆட்பட்டுவிடாமல் தம்மனம் நினைக்கும் நற்காரியங்களைச் செய்கின்றோம் என்று சிந்தித்தும் உறுதியுடன் செயலாற்றும் திறன் சைவர்கள் ஒவ்வொரு வருக்கும் வேண்டத்தக்கதாகும்.

இங்ஙனம் உடல் வளர்ச்சிக்குப் பயன்படும் இம்மூன்று ஒழுக்கங்களுடன் 'திருநீறு அணிதல்' என்ற ஒன்றும் உடல் வளர்ச்சிக்கு நன்மை பயப்பது என்பதனைப் புரிந்துகொண்டு பின்பற்றுதல் நலம் பயக்கும். திருநீறு அணிதல் உயிர் வளர்ச்சிக்குப் பயன் தருவதோடல்லாது உடல வளர்ச்சிக்கும் பயனளிப்பது என்பது ஆன்றோர் கண்ட உண்மையாகும்.

உயிர் வளர்ச்சிக் கொள்கை !

இனி உயிர் வளர்ச்சிக்குரிய ஒழுக்கங்கள் சிலவற்றைச் சிந்திப்போம். அவையும் மூன்று பிரிவுபடும். 1. உருத்திராக்கம் அணிந்து கொள்ளுதல் 2. திருநீறு அணிதல் 3. இளமையிலேயே பஞ்சாட்சர உபதேசம் பெறுதல் என்பனவாகும்.

ஒவ்வொரு பெற்றோர்களும் தம்பிள்ளைகளை 7 வயது முதல் 9 வயதிற்குள் அல்லது 11 வயதிற்குள், தாங்கள் விரும்பிப் போற்றும் குருநாதரிடம் அழைத்துச் சென்று பஞ்சாட்சர உபதேசம் பெற ஏற்பாடு செய்தல் இன்றியமையாததாகும். பிள்ளைகள் எப்பொழுதும் சிறுவயதில் நல்லவர்களாகத் தான் இருக்கிறார்கள். அவர்கள் நாம் பூசிப்பதைப் பார்த்துப் பூஜை அறையில் சென்று பூஜை செய்வது போன்ற செயல்களை செய்து மகிழ்கிறார்கள். ஆனால், பெற்றோர்களில் சிலர் இதனைப் பார்த்து, "நீ ஏன்? இப்பொழுதே இதுபோன்ற செயல்களில் ஈடுபடுகின்றாய்?" என்று கண்டிக்க ஆரம்பித்த உடன் அப்பிள்ளைகளின் மனம் மாறிவிடுகிறது. ஆதலின் பெற்றோர்கள் பிள்ளைகளை இளமையிலேயே இதுபோன்ற நற்செயல்களில் ஈடுபடுத்துதல் மிகமிக முக்கியமானதாகும்.

காலையில் எழுந்தவுடன் நீராடுதல்; உடனே நெற்றியில் நீறு அணிதல்; தனக்குத் தெரிந்த இறைபக்திப் பாடல்களைப் பாடுதல் போன்ற பழக்கங்களில் இளமையிலேயே பிள்ளைகளை ஈடுபடுத்துவார்களேயானால் அவர்கள் எதிர்காலத்தில் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் தன்னம்பிக்கையும் இறைநம்பிக்கையும் உள்ளவர்களாகவும் வளர்வார்கள் என்பது உறுதி.

சைவத்தில் வைணவம்!

இங்கே இன்னொன்றையும் சிந்தித்தல் அவசியமாகும். வேளாளர்களில் சிலர் வைணவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் எப்படிச் 'சைவ வேளாளர்கள்' எனும் பட்டியலில் சேர்வார்கள் என்ற கேள்வி எழும். வைணவம் சைவத்தின் உட்கூறான சமயமேயாகும். முருகனை வழிபடும் கௌமாரம். சத்தியை வழிபடும் சாக்தம், கணபதியை வழிபடும் காணாபத்தியம் போன்றவை ஒரு காலத்தில் தனித்தனிச் சமயங்களாக வளர ஆரம்பித்தன. ஆனால் சுச்சியப்பர் போன்ற பெரியோர்களால் இப்பொழுது அவை அனைத்தும் 'சைவமே என்ற நிலைக்கு வந்தாயிற்று. இவைபோன்றே திருமாலை வழிபடும் வைணவமும் சைவத்தினின்றும் வேறுபட்டதில்லை. இதனை நன்கு உணர்ந்து கொள்ளுதல் நலம் பயக்கும். திருமால் சக்தியின் தமையன் என்பதால் சைவத்தின் உட்குடும்பமே வைணவம் என்பதனை யாரும் மறத்தல் கூடாது. எனவே எல்லோரும் ஆண்டவனின் பிள்ளைகள் எனும் உணர்வில் அனைவரும் இணையும்காலம் பின்னேவரும் என்றாலும், இன்று சிவபெருமானை வழிபடுவோர், சிவகுடும்பத்தைச் சார்ந்தோர் என்ற கொளகையில், 'சைவர்' என்ற ஒரு பெயரின் கீழ் இணைந்து ஒன்றுபட்டு வாழ இது போன்ற மாநாடுகள் பெரிதும் பயன்தரும் என்பதில் ஐயம் இல்லை. இவற்றையே இம்மாநாட்டின் குறிக்கோளாகக் கொள்ளுதல் தகுதி என்பதில் கருத்து வேறுபாடு இருக்க இயலாது.

56
நவராத்திரிவிழா வழிபாடு - ஒரு விளக்கம்

வையந் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே.

- அபிராமிபட்டர்

[நமது முன்னோர் மேற்கொண்டு ஒழுகிய பண்டிகைகளும், திருவிழாக்களும் அரிய நோக்கு உடையன. நவராத்திரி விழாச் சிறப்பினை விதந்துரைத்து குருமணிகள் அருளியுள்ள இச் செய்தியில் பல்வேறு சமய தத்துவங்கள் விளக்கம் பெற்றுள்ளன.]

ஐந்தொழில்:

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்யவல்ல பரம்பொருளையே சிவபெருமான் என்று சைவம் பேசுகிறது. அப்பெருமானது கருணையையே நாம் சக்தி என வழிபடுகின்றோம். மல்லில் மணம்போலவும், மணியில் ஒளிபோலவும். பரம்பொருளோடு பிரிப்பின்றி நிற்கும் அச்சக்திக்குப் பராசக்தி என்று பெயர். தேவர் முதல் தாவரம் ஈறாய எல்லா உயிர்களுக்கும் நலம் செய்தற்பொருட்டு அப்பராசக்தி எளிய நிலைகளில் பல்வேறு வடிவங்கொண்டருள்கிறாள்.

---

* 10—10—'82 'ஞான சம்பந்தம்' இதழுக்கு நவராத்திரி விழாவை முன்னிட்டு வழங்கியருளியது.

சக்தி பேதம் :

சிவபிரான் எல்லாவற்றையும் கடந்தவனாய், பரசிவமாய் விளங்கும்போது பராசக்தியாய் இலங்கிய அன்னை, அவன் நாதமாயபோது – அதாவது ஒலியாயபோது சக்தி விந்துவாயும் அதாவது ஒளியாயும், அவன் உருவ நிலையில் சதாசிவ மூர்த்தியாகும் போது மனோன்மணியாயும், உருத்திரனாகும்போது துர்க்கை – அதாவது உமையாயும், திருமாலாகும்போது இலக்குமியாயும், பிரமனாகும்போது கலைமகளாயும் உருக் கொள்கிறாள்.

அம்பிகை பராசக்தி நிலையினின்றும் கருணையினால் உயிர்களுக்கு உதவி செய்வதற்காகத் துர்க்கை, இலக்குமி சரசுவதி என்னும் வடிவங்களில் எளியளாய் வந்து அருள் புரிகிறாள். உலக வாழ்க்கையில் நமக்கு இன்றியமையாது வேண்டப்படும் வீரம், செல்வம், ஞானம் ஆகியவற்றைத் தருகிறாள். இம்மூன்றும் உள்ள மனிதனே பூரணத்துவம் பெற்றவனாகிறான்.

நவராத்திரி:

அம்பிகையைச் சிறப்பாக வழிபடுதற்குரிய நாள்கள் நவராத்திரி எனப்பெறும். இது மாதந்தோறும் அமாவாசையை அடுத்துள்ள ஒன்பது நாட்களில் வரினும், இரண்டு நவராத்திரிகளையே சிறப்பாக எடுத்துக் கூறுவர் பெரியோர். ஒன்று கோடைக்காலத்தில் பங்குனி அல்லது சித்திரை மாத அமாவாசையை அடுத்து வரும் ஒன்பது நாள்களில் கொண்டாடப்படுவது. இது வசந்தருதுவில் வருதலால் வசந்த நவராத்திரி எனப்படும். பிறிதொன்று பலராலும் சிறப்பாகப் போற்றப்படும் நவராத்திரியாகும். இது புரட்டாசி அமாவாசையை அடுத்து வருவது. இது சரத் காலத்தில் வருவதால் சாரதா நவராத்திரி எனப்படும். வசந்த ருதுவும், சரத் ருதுவும் எமனுடைய இரண்டு கோரைப்பற்களுக்குச் சமமானவை என்று கூறுவர். இவ்விரு ருதுக்களும் வெம்மை மிகுதியாலும், தண்மை மிகுதியாலும் முறையே அம்மை, காலரா, முதலிய நோய்கள் பெருகி மக்களைத் துன்புறுத்தும் காலங்களாகும். இக்காலங்களில் உலகமாதாவாக விளங்கும் அம்பிகையை வழிபடுவோர் அந்நோய்களினின்றும் நீங்கி அனைத்து நலங்களையும் பெற்றுவருகின்றனர். மேலும்

மக்கட்கு ஒரு ஆண்டு தேவர்கட்கு ஒருநாளாதலின் உத்தராயணத்தில் வரும் தைமாதம் முதல் ஆனிமாதம் முடிய உள்ள ஆறு மாதங்களைத் தேவர்கட்குப் பகற்பொழுதென்றும், தக்ஷிணாயனத்தில் ஆடி முதல் மார்கழி முடிய உள்ள ஆறு மாதங்களை இரவுப் பொழுதென்றும் கூறுவர். இவ்வகையில் வசந்தநவராத்திரியும், சாரதாநவராத்திரியும் அம்பிகையை நாம் பகல் இரவு ஆகிய இருபொழுதுகளிலும் வழிபடுவதாக அமைகிறது.

உபாசனை:

மனிதன் எந்தத் தெய்வத்தைத் தியானித்து உபாசனை செய்கின்றானோ அந்தத் தெய்வத்தின் அருளைப்பெறுவான். மன்னர்களும் படைவீரர்களும் போருக்குச் செல்லும் காலங்களில் கொற்றவை எனப்படும் துர்க்கையை வழிபட்டு வெற்றியைப்பெற்று மகிழ்ந்தனர். திருமகளை வழிபட்டுச் செல்வம் பெற்றுச் சிறந்தனர். கலைமகளைப் போற்றிக் கல்வியறிவு பெற்றுக்களித்தனர் என்கின்ற விபரத்தைத் தொல்காப்பியம் முதலிய நூல்கள் காட்டுகின்றன.

நம் நாட்டில் இம்மூன்று தெய்வங்களும் முக்கோண வடிவில் இருந்து அருள் புரிந்து வருவதைக் காணலாம். இந்தியாவின் வடகிழக்கு முனையில் உள்ள (கூளிகட்டம்) கல்கத்தாவில் காளியைச்சிறப்பாக மக்கள் வழிபடுவதால் வீர உணர்வு அம்மக்களிடம் சிறந்திருப்பதைக் காணுகின்றோம். வடமேற்கில் உள்ள பம்பாய் மாநில மக்கள திருமகளை வழிபடுவதால் அங்குள்ள மக்கள் செல்வச் செழிப்புடையவர்களாய் விளங்குவதைப் பார்க்கிறோம். தமிழக மக்கள் சரசுவதியை வழிபடுவதால் ஞானத்தில் மேம்பட்டவர்களாய் விளங்குகின்றனர். இவ்வாறு அம்பிகை பல்வேறு கோலங் கொண்டு உயிர்கட்கு நலம் செய்யும் நிலைகளை எண்ணுப் நல்விழாவாக நவராத்திரி அமைகிறது.

நவராத்திரி ஒன்பது நாள்களும் ஒன்பது சக்திகளை முறையே நினைந்து வழிபடும் விழா. ஒன்பது சக்திகள் மாகேசுவரி, கௌமாரி, வாராகி, மகாலக்ஷ்மி, வைஷ்ணவி, இந்திராணி, பிராமி, நரசிம்ஹி, சாமுண்டி எனப்படுவர். இவர்களில் முதல் மூவர் துர்க்கை அம்சமாகவும், அடுத்து

வரும் மூவர் இலட்சுமி அம்சமாகவும், இறுதியிலுள்ள மூவர் சரசுவதி அம்சமாகவும் விளங்குவதால் துர்க்கை இலக்குமி சரசுவதி ஆகிய முப்பெருந் தேவியர்க்குரிய வழிபாடாக நவராத்திரி கொண்டாடப்படுகிறது.

நவராத்தி நாட்களில் விரதமிருந்து திருக்கோயிலுக்குச் சென்று அர்ப்பிகையை வழிபட்டும், வீடுகளில் அம்பிகையை எழுந்தருளச் செய்து ஆராதனை செய்தும், தேவிமகாத்மியம் அபிராமி அந்தாதி முதலிய நூல்களை ஓதியும், ஓதச்செய்து கேட்டும் வழிபடுவோர் எண்ணற்ற நலன்களை எய்துவர்.

தனம்தரும் கல்வி தரும்ஒரு நாளுந் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.



57

சைவசித்தாந்த ஆய்வு மையமும் அதன் பணிகளும்

கற்கஇடர்ப் பட்டுமிகக் கற்றஎல்லாம் கற்றவர்பால்
தற்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ — நற்கருணை
வெள்ளம் அடங்கும் விரிசடையாற் கானாகி
உள்ளம் அடங்கவல்ல வோ.

ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

[தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சைவத் தமிழ் உலகிற்கு வழங்கிய அரும்பெரும் கருணைக் கொடை தருமையாதீனம் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம். இக்கட்டுரையில் குருமணிகள் தத்துவக்கல்வியின் சிறப்புக்களையும், இன்றியமையாமையையும் பல்வேறு கோணங்களில் விளக்கியுள்ளார்கள்.]

ஆவணிமூலத் திருநாள் ஆலவாயிறைவன் அடியார் படுதுயராயின எல்லாம் அகற்றியருளிய நன்னாள். திரிபுணர் வுடைய மன்னனைத் தெருட்டிச் செந்நெறிக்கேற்றிய பெரு நாள். அன்று இறைவனால் துயரகற்றப்பட்ட அடியவர் மணிவாசகரும் வந்தியம்மையுமாவர். திரிபுணர்வுடையவனா யிருந்து இறைவனால் தெருட்டப்பட்டவன் அரிமர்த்தன பாண்டிய மன்னன். இவ்வாறு இறைவனது கருணை பெருகி அன்பர்களை ஆட்கொண்ட நன்னாளாகிய இந்நாளில் பொது

---

*தருமையாதீனத்தில் நடைபெற்ற ஆவணி மூலப்பெரு விழாவில் சைவசித்தாந்த ஆய்வுமையத்தைத் தொடங்கிவைத்து 29—8—82 அன்று வழங்கியருளியது.

வாகச் சமயதத்துவங்களையும், சிறப்பாகச் சைவ சித்தாந்தத் தத்துவங்களையும் ஆராய்ச்சி செய்யும் ஆய்வு மையத்தைத் தொடங்கிலைப்பது பொருத்தமானதாகும்.

சமநிலை:

துன்பத்தை இன்பமாகக் கருதுவதும், இன்பத்தைத் துன்ப எண்ணுவதும் தத்துவ உணர்வு இன்மையால் - மெய் யுணர்வு வாய்க்கப்பெறாமையால் உண்டாவனவாகும். மெய் யுணர்வு, தத்துவ ஆய்வு மேற்கொண்டவர்களுக்கே தலைப்படு கிறது. மெய்யுணர்வு தலைப்பட்டவர்கள் இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகவே கருதுவர். அத்தகையவர் கடமை உணர்வுகளில் தவறாத வாழ்வினை உடையவராவர். உரிமை என்ற உணர்வே இல்லாதவராயிருப்பர். அவர்களே என்றும் இன்பம் பெருகும் இயல்பினராய் விளங்குபவர். அப்பரடிகள் போன்றவர்கள் இந்நிலையில் வாழ்ந்து காட்டிய பெரு மக்களாவர். 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்பது அப்பரடிகளின் அருள்வாக்கு. இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக எண்ணும் மனநிலையைச் சமநிலை எனக்கூறுகிறது தொல்காப்பிய உரை. சமநிலையாவது 'செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந் தோடா நிலை' எனச் சமநிலைக்கு விளக்கம் தருகின்றனர் தொல்காப்பிய உரை யாசிரியர்கள். (செஞ்சாந்து சிவந்த நிறமுடைய சந்தனம்) மணமுள்ள சந்தனம் பூசினாலும் கோடெறிகொண்டு உடலைச் செத்தினாலும் பிளந்தாலும் மனம் மாறுபடாதநிலையைச் சமநிலை எனக் கூறுகின்றனர்.

திருவள்ளுவரும் இன்பத்துன்பங்களைச் சமமாக எண்ணும் மனநிலையை மக்கள் பெறவேண்டும் என வலியுறுத்துகிறார்.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.

இக்குறள்களால் வள்ளுவர் இன்பத்தைக்கண்டு மகிழாமலும் துன்பத்தைக்கண்டு துவளாமலும் இருக்கும் மனநிலையை மக்கள் பெறவேண்டுமெனக் கூறுவதைக்காணலாம்.

இன்பத்துன்பங்களைச் சமமாக எண்ணும் மனநிலை பெறுதல் எளிதல்ல. தத்துவ உணர்வுகளை நெறியாக வளர்ப்பதனாலேயே அதனை மக்களிடையே உண்டாக்க முடியும்.

தத்துவ உணர்வும் பயனும் :

தத்துவ உணர்வு வளர்ச்சியடையுமானால், நாட்டில் மக்களிடையே ஏற்படும் பல்வேறு குழப்பங்களும் அகலும். மனம் தெளிவு பெறும். நன்மை உண்டாகும். மணிவாசகரிடத்தில் மன்னன் கொண்ட திரிபுணர்வு அவனை, மயங்கச் செய்தது. தத்துவ உணர்வு தலைப்படாமையால் மணிவாசகரை வருத்திய மன்னன் இடர்ப்பட்டான் அவ்வுணர்வில் தலைநின்ற மணிவாசகர் துன்பப்படவில்லை தத்துவ ஞானிகளுக்கு, இறையருள் வாய்க்கப்பெற்றவர்கட்கு வரும் துன்பங்கள் உடலுழாய்க் கழியுமேதவிர அவர்களை அவை வருத்தமாட்டா. இதனை அடியவர் வரலாறுகள் பலவற்றிலும் நாம் காணலாம்.

சமய தத்துவ ஆராய்ச்சி மக்கட்குப் பலவகைகளிலும் வேண்டப்படுவதொன்றாகும். மனிதனை மனிதனாக வாழச் செய்து தெய்வமாக உயர்த்தும் இவ்வாராய்ச்சியை மேற் கொள்ளுதல் அறிவுடைப் பெருமக்களின் தலையாய கடமையாகும். எனவேதான் சைவ சித்தாந்த ஆய்வுமையத்தை பல்லாண்டுகளாகச் சமய தத்துவ உணர்வின் பண்ணையாகத் திகழும் தருமையாதீனம் திருவருள் உந்துதலால் தொடங்க முன்வந்திருக்கிறது.

அனுபூதிமான்களின் நிலையம் :

தத்துவ உணர்வுடையவர்களை அனுபூதிமான்கள் என்பர் அறிஞர். இத்தகையோர் பலரைச் சொத்தாகப்பெற்றது நமது தருமை ஆதீனம். நமது ஆதிகுருமூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞான சம்பந்தர் சிறந்த அனுபூதிமான். எனவேதான் ஆதீனத் திருக் கூட்டத்தினரின் செயல்களை அவர் குறிப்பிடும்போது,

ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை, ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம், கல்வி கேள்வியல்லல்
ஓய்வார், சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார், கமலையுள் ஞானப்ர காசன்மெய்த்
தொண்டர்களே.

என்று அருளிச்செய்கிறார். பிரசாதயோகமுறை நமது ஆதீன நடைமுறையில் இருப்பது என்பதை அவர் அருளிய சோடசகலாப் பிரசாதசட்கம் என்ற நூலாலும் அது அனுபவத் திலிருந்ததை நமது திருமடத்திலுள்ள பதினாறொடுக்கம் என்ற தவச்சாலையாலும் நாம் அறியலாம்.

குருஞானசம்பந்தர் அருளிய சிவபோகசாரம், சிவானுப வத்தைப் பெற்றுத் தமது அனுபவ நிலையை உரைக்கும் நூலாக விளங்குவதைப் பலரும் உணர்வர். முன்னே குறித்த 'சுற்க இடர்ப்பட்டு' என்ற சிவபோகசாரப்பாடல் ஞான நூலாராய்ச்சி, அனுபவத்திற்கே உரியது எனத் தெளிவு செய்வதைக் காணலாம்.

நான்காவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளைத் தரிசிக்கவந்தார் குமரகுருபரர். அவர் தருமை யின் எல்லையை அணுகிய அளவில் சீவன் என்ற சொல்லின் முதலில் உள்ள நெட்டெழுத்து ஒரு மாத்திரை குறைந்து சிவன் என ஆயிற்று. இதை, 'ஊரிற்குறுகினேன் ஓர்மாத்திரை அளவில் பேரிற் குறுகினேன் பின்' என்று குமரகுருபரர் தம் அனுபவத்தை உரைக்கக் காண்கிறோம். அதற்கேற்பக் குருமூர்த்திகளும் அவரிடம் 'ஐந்து பேரறிவும்' என்ற பெரியபுராணப் பாடலுக்கு அனுபவப் பயன் உரைக்க என்றுதான் ஆணையிட்டார்கள் என்ற வரலாறும் நோக்கத்தக்கது தருமையாதீனம் சிவஞான அனுபவ நிலையமாக விளங்கி வந்துள்ளதை இவ்வரலாறுகள் நமக்கு நன்கு உணர்த்தும்.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் நம் அன்பர் திரு. வச்சிரவேல் முதலியார் அவர்களிடம் உரையாடும் போது 'தருமையாதீனம் அனுபூதிமான்கள் நிறைந்த இடம்' என்று குறிப்பிட்டதாகச் சொல்லக் கேட்டிருக்கிறோம். இத்தகைய சிறப்புக்கள் பலவற்றையும் பெற்ற நமது தருமை யாதீனத்தில் சைவசித்தாந்த பண்பாட்டு ஆய்வுச் சமூகம் தொடங்குவது எல்லா வகையிலும் திருவருட்பொருத்தமாகவே அமைந்துள்ளது.

ஆய்வாளர் கடமை:

சைவ சித்தாந்தம், ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பொருள் கள் இறை உயிர் தளை என்று மூன்று வகைப்படும். இம்மூன்று பொருள்களில் எல்லா ஆய்வுகளும் அடங்கிவிடும். இறை- கடவுள். கடவுள் எந்நிலையில் இருக்கிறாரோ அந்நிலை

யிலேயே நாம் செய்ய முற்படும் ஆய்வும் அடங்குதல் இயல்பாக அமைகிறது. 'ஐயாயென ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனாக' விளங்குகிறான் இறைவன் என மணிவாசகர் கூறுகிறார். ஆய்வாளரும் அதுபோல உயர்ந்த கொள்கையும், ஆழ்ந்த சிந்தனையும், பரந்த மனப்பான்மையும் நுண்ணிய உணர்வும் உடையவர்களாய் விளங்குதல் வேண்டும். நெறியாக உண்மையாக ஆய்வு செய்யத் தலைப்படுவோர் எல்லாச் சமயங்களும் நாட்டு மக்களுக்கு நல்லன செய்யத் தோன்றியனவே என்னும் கருத்துடையவராயிருப்பர். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்றொரு நூற்பா தொல்காப்பியத்திலுள்ளது 'பொருள் குறிப்பனவே சொற்கள். பொருளுணர்த்தாதன சொற்களாகா' என்பது அச்சூத்திரத்தின் கருத்தாகும். அது போல எல்லாச் சமயங்களும் ஏதேனும் சில உண்மைகளை நன்மைகளை மக்கட்கு உணர்த்துதற்கு எழுந்தனவேயாகும். அவ்வாறுணர்த்தாதன சமயம் என்ற பெயர் பெறா என்ற உண்மை நோக்கத்தோடு அவற்றை அணுகி அவற்றின் உண்மைகளைக் கண்டு அனைத்துச் சமயங்களையும் அரவணைத்துச் செல்லுவது தான் ஆய்வறிஞர்களுக்கும் அனுபூதிமான்களுக்கும் ஏற்புடைய செயலாகும்.

சமயப் பொது நோக்கு ;

எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படையாகவும், எல்லாச் சமயங்களையும் அரவணைப்பதாகவும் எல்லாத் தத்துவங்களையும் இணைத்து ஆய்வதாகவுமுள்ள ஒரு மையமாக சைவசித்தாந்தம் விளங்குகிறது என்பதை ஐன்ஸ்டீன், சர். ஜான் மார்ஷல் போன்ற மேலைநாட்டு ஆய்வு அறிஞர்களும் திரு வி க., என். ஆர். பட் போன்ற இந்நாட்டு ஆய்வறிஞர்களும் கூறுவது கண்டும் இதனை நாம் தெளியலாம். நம்முடைய சைவசித்தாந்த ஆசிரியப் பெருமக்களும் எல்லாச் சமயத் தத்துவங்களையும் ஒத்துக்கொண்டு அவற்றிற்கும் மேலான சில பல உண்மைகளைத் தம் நூலுள் உணர்த்துகிறார்கள், சிவஞானபோதம் சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய நூல்களைக் கற்று உணர்ந்தோர் அனைத்துச் சமயங்களையும் பக்க நிலைகளாகக்கொண்டு அவற்றுக்கும் மேலான உண்மைகளைச் சைவசித்தாந்தம் விளக்குகிறது என்றே கூறுகின்றனர். இவற்றை மனத்தில் கொண்டு ஆய்வறிஞர்கள் பிற சமயங்களை நடுநிலை பிறழாமல் காழ்ப்பின்றி ஆய்வு செய்து அவற்றின் உண்மைகளையும் மக்கட்கு எடுத்துக்கூறும் நற்பணியை இம்மையத்தின் வாயிலாகச் செய்வதையே இக்கழகம் தன் சீரிய கொள்கையாகக் கொண்டுள்ளது.

ஆய்வுத் திட்டங்கள் :

இம்மையத்தின் மூலம் சமய உலகிற்கு நாம் வழங்க எண்ணும் சில திட்டங்களாவன.

சமய நூல்களின் ஆய்வடங்கல், அதாவது சமய, தத்துவ நூல்களின் பெயர்ப்பட்டியல், சமயத்துறையில் வழங்கும் சைவ சித்தாந்தப் பரிபாஷைச் சொல்லகராதி, கலைக் களஞ்சியம் இவற்றைத் தயாரித்தல் இம்மையத்தின் முதற்பணி யாகும் இந்து மதத்திற்கு அடிப்படையாக உள்ள வேதங்கள் உபநிடதங்கள், ஆகமங்கள். பதினெண்புராணங்கள், இராமா யணம், பாரதம் ஆகிய இதிகாசங்கள் திருமுறைகள் இவ்ய பிரபந்தங்கள் ஆகியவற்றை ஆராய்தல். ஆய்வைப் பலமொழி களிலும் வெளியிடுதல், தத்துவத்துறையில் எம். ஏ. பட்டம் பெற்றவர்களை ஆய்வு மாணவர்களாகக் கொண்டு ஆய்வு செய்யப் பயிற்சியளித்து பிளச்.டி, பட்டம் பெறச்செய்தல், இதற்கேற்ற வகையில் இம்மையத்தை திருச்சி பாரதிதாசன பல்கலைக் கழகத்துடன் இணைத்தல், எல்லோரும் பயன்பெறும் வகையில் அஞ்சல்மூலம் தத்துவபோதனை வகுப்பு நடத்துதல்.

சைவ சமய நூல்களேயன்றிப் பிறசமயங்கட்குரிய ஆகமங்கள் தத்துவ நூல்கள் சமய இலக்கியங்கள் முதலிய வற்றையும் ஆராய்தல்.

சைவ சமய தத்துவங்களைப் பிற சமய தத்துவங்களோடு இணைத்து ஆய்தல், அவற்றிலிருந்து சைவம் பொது வகையில் ஏற்றுக்கொண்டுள்ள உண்மைகளையும் சிறப்புத்தன்மையா மேற்கொண்டுள்ள தத்துவ உண்மைகளையும் ஆய்வு செய்து வெளியிடுதல்.

அகத்தியம், தொல்காப்பியம் போன்ற தமிழ் இலக்கணங்கள், பாணினீயம் போன்ற வடமொழி இலக்கண நூல்கள், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், பிற்காலப் பிரபந்த இலக்கியங்கள் சமயத்துக்கும் சமுதாயத்துக்கும் உதவும் முறைகளை ஆய்வு செய்தல்.

மொகஞ்சதாரோ ஹரப்பா முதலிய இடங்களை அகழ்வா ராய்ச்சிசெய்து அறிஞர் வெளியிட்ட கருத்துக்களை ஆய்வு செய்து உண்மைகாண்டல்.

கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயங்கள் ஓலைச்சுவடிகள் ஆகியவற்றைத் தொகுத்து நம் சமயத்துறைக்கும் தத்துவத் துறைக்கும் பயன்படும் செய்திகளைத் திரட்டுதல்.

சிற்பம் சித்திரம் நாட்டியம் முதலிய கலைகளில் நமது சமய தத்துவ மரபுகள் ஊடுருவிநிற்றலை வெளிப்படுத்தல்.

சித்த மருத்துவக்கலை, வான்நூற்கலை ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்து உணர்த்துதல், வானநூற்கலையுள் அரிச் சுவடியாகிய பஞ்சாங்கத்தை வளர்த்து வழக்கப்படுத்துதல்.

யோகமுறைகள் தியானமுறைகள் மக்கள் வாழ்க்கைக்கு எந்த அளவில் நன்மைகள் விளைக்கின்றன என்பதையும் சமயச்சடங்குகள், ஒழுக்கங்கள், மக்களுக்கு நன்மைசெய்யும் முறைகளையும் தற்கால அறிவியல் முறைகளோடு ஒப்பிட்டு ஆய்வுசெய்து வெளியிடல்: மேற்சொல்லியுள்ள பணிகளை இம்மையத்தின்வாயிலாக நாம் தொடர்ந்துசெய்யலாம்.

மக்கள் பங்கு :

சமய உலகிற்கு இந்த ஆய்வு மையம் மாபெரும் பணியைச் செய்ய முன்வந்துள்ளது. இதற்குப் பெரும்பொருள் செலவாகும். இது கோடிக்கணக்கில் முதலீடுசெய்து தொடங்க வேண்டிய நற்பணியாகும். இருப்பினும் நம்மால் இயன்ற அளவில் 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்ற பழமொழிக் கிணங்க நம்முடைய ஸ்தாபன்த்தில் எந்த அளவு செய்ய முடியுமோ அந்த அளவில் இதனைத் தொடங்கியுள்ளோம். சமயம், தத்துவம், சமுதாயம் இவற்றுக்குப் பணியாற்ற முன் வந்துள்ள இந்நிறுவனத்தை; சமய தத்துவ சமுதாய அறநிறுவனங்கள் இதனுடன் இணைந்துஎவ்வளவுக்கெவ்வளவு ஆதரவு செய்யமுடியுமோ அவ்வளவுக்கவ்வளவு இம்மையமும் வளர்ச்சியுறும், இதன் வளர்ச்சி நமதுநாட்டின் வளர்ச்சி. முடிவில் இது உலகத்தின் வளர்ச்சியாகவும் பரிணமிக்கும். இம்மாதிரியான் ஆய்வு நிறுவனங்கள் பொருளால்மட்டும் வளராது. பொருளுடையோர் பொருள்துறையிலும் அருளுடையோர் அருள்துறையிலும். அறிவுத்துறையில் மேம்பட்டோர் அறிவுத் துறையிலும் ஆட்சித்துறையில் உள்ளோர் ஆட்சித்துறையிலும், நேசித்துப் பணியாற்றுவதாலேயே இம்மையத்தின் உண்மைப் பயன் பெருகி விளையும், எந்த அளவிற்கு நம் முயற்சியும் உழைப்பும்

இருக்கிறதோ எந்த அளவிற்குப் பயனும் மிகுதியாகும். பொருளாதாரத்துறையில் நம் சமய நிறுவனங்கள் திருக்கோயில்கள். அறநிலையங்கள் இம்மையத்திற்கு உதவிகள் செய்யலாம். இதற்கு அறநிலைய இலாகா மனம் உவந்து பேருதவி செய்யலாம் அரசும் உதவலாம். இது பாரதி நூற்றாண்டு. அவர் விடுக்கும் வேண்டுகோள் ஒன்றையே இங்கு நாம்தெரிவிப்பது பொருந்தும் எனக் கருதுகிறோம்.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
ஆண்மையாளர்கள் உழைப்பினை நல்கீர்
அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளீர்

என்பது அவர்தம் நல்வாக்கு. அவ்வாக்கிற்கிணங்கப் பலரும் தம்மால் இயன்ற ஒத்துழைப்புக்களை நல்கினால் இம்மையம் ஒரு தத்துவப் பல்கலைக் கழகமாக வளர்ந்தோங்கும் நிலை உருவாகும். இந்நிலை உருவாக, எல்லோரும் இதுபற்றிச் சிந்தித்துச் செயல்படவும், எல்லா நலமும் பெறவும் ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க சமய தத்துவக்கலை.

வளர்க மக்கள் பண்பாடு.

58

புற இருளும் அக இருளும்

" ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்தோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடாங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துக்குந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே."

— திருமாளிகைத்தேவர்

[நமது சமய வாழ்வில் ஒளி விளக்குப் பெறும் இடம் பெரிது. குருமணிகள் விளக்கீடு பற்றியும், அதனால் பெறும் பேறு பற்றியும், உலகியலும், சமயவியலும் கூறும் நுட்பங்கள் பலவற்றையும் ஒருங்கே திரட்டி வழங்கியுள்ளார்கள்.]

ஊரும் பெயரும்!

நமது நாட்டிலுள்ள பெரும்பாலான ஊர்களின் பெயர்கள், தெய்வ சம்பந்தமான வரலாற்றுடன் தொடர்பு கொண்டனவாகவே இருத்தலைக் காணலாம். அந்தவகையில் 'மாதலிபுரம்' என்று அழைக்கப் பெறும் இவ்வூரின் பெயரும் ஒரு தெய்வ சம்பந்தமான வரலாற்றுடன் இணைந்துள்ளது. இலங்கையில் இராமபிரானுக்கும் இராவணனுக்கும் போர் நடைபெற்ற போது இராமபிரானுக்குத் தேர் இல்லாமையைக் கண்டு வருந்திய தேவேந்திரன், தன் சாரதியாகிய மாதலி என்பானை

* 26—6—'82 அன்று மாதிரவேளூர் திருக்கோயிலில் மின் விளக்கு ஏற்றி வைத்து, வழங்கியருளியது.

அழைத்து, ''நீ சென்று உதவிசெய்து வருக'' என்று ஆணை யிட்டான். அதனைச் சிரமேற் கொண்டு சென்ற மாதலி தேரில் இலங்கை நோக்கிச் சென்றான். அப்போது இவ்வூரில் முன்னமே மணலால் மூடி இருந்த சிவலிங்கம் உள்ள இடத்தில் தேர் தடைபட்டு நின்றது. செய்வதறியாத மாதலி உடனே கீழே இறங்கிப் பார்த்தபோது மணற்சிதைவில் சிவலிங்கம் இருக்கக்கண்டான். சிவபெருமானைப் பணிந்து பிரார்த்தித் தான். இறைவன் அருளாணைப்படி இலங்கை சென்று வாகை சூடி மீண்டும் வந்த மாதலி புதைந்திருந்த சிவலிங்கத் திருமேனியை வெளியில் எடுத்துப் பிரதிட்டைசெய்து வழி பட்டான். மாதலியினால் வழிபடப்பட்ட காரணத்தால் இத் தலம் 'மாதலீபுரம்' என வழங்கலாயிற்று.

வடமதுரை :

இத்தலம் பற்றிய மற்றொரு வரலாறும் கூறப்படுகிறது. வசிஷ்ட மகரிஷியின் சாபத்தால் கொள்ளிடத்தில் முதலையாக வாழ்ந்த சுந்தருவன் ஒருவன், அங்கு நீராடவந்த விசாரசன்மன் என்னும் சிவபக்தனின் காலைப்பற்ற, அவன் ஐந்தெழுத்து மந்திரமாகிய மகாமந்திரத்தைச் சொல்ல, அதுகேட்ட முதலையாயிருந்த சுந்தருவன் சாப விமோசனம்பெற்றுப் பழய வடிவம் பெற்றான். அவன் பின்னர் பலகாலம் இத்திருக் கோயிலின்கண் தங்கி வழிபாடுசெய்துவந்தான். அவனுக்கு இறைவன் மீனாட்சி சுந்தரேசுவரராகத் திருக்கல்யாண கோலத்துடன் காட்சி தந்தருளினார். அது முதல் இத்தலம் வடமதுரை என்றழைக்கப் பெறுவதாயிற்று. திருக்கல்யாணக் காடசி தந்தருளிய திருக்கோயில்களில் இறைவிடன் திருக் கோயில் இறைவனின் வலப்பாகத்தில் அமைந்திருத்தல் மரபு. எடுத்துக்காட்டாக திருவதிகை, மதுரை போன்ற தலங்களைக் காணலாம். அவ்வகையில் இங்கும் இறைவனுக்கு வலப்பாகத் தில் அம்பாளின் திருக்கோயில் அமைந்துள்ளது. இறைவி சந்நிதியின் எதிரில் மதுரையில் உள்ளது போல் பொற்றாமரைக் குளமும் அமைந்துள்ளது. இங்ஙனம் வடமதுரை என்றழைக் கப்பெறும் சிறப்புடைய இம்மாதலீபுரம் இன்று திரிந்து மாதர வேளூர் என்றும், மாதர்வேளூர் என்றும், மாதலூர் என்றும் அழைக்கப்பெறுகிறது.

புறஇருளும் அகஇருளும்:

இத்திருக்கோயிலின் கண் மின் விளக்குகள் இல்லாத நிலை யில் இதுகாறும் புறஇருள் சூழ்ந்திருந்தது. இன்று இந்நிலை

யைப்போக்கி ஆண்டவன் எழுந்தருளியுள்ள இடம் விளக்கமாக ஒளியுட்ன் திகழ விரும்பிய இவ்வூர் பக்தர்கள் சிலர், மின்விளக்கினைப் பொருத்தியுள்ளார்கள். இது மகிழ்ச்சிக்குரியது. மின் விளக்குகள் ஏற்றிப் புற இருளைப் போக்கியுள்ள இந்நாளில் இங்குச் சிலவற்றைச் சிந்திப்போம்.

ஆண்டவன் ஒளி வடிவானவன். இதனை வேத சிவாகமங்களும் புராண இதிகாசங்களும் திருமுறைகளும் பலவாறாக விளக்கிக் கூறுகின்றன. திருநாவுக்கரசர், ''தேச விளக்கெலாம் ஆனாய் நீயே; திருவையாறு அகலாத செம்பொற் சோதீ'' என்று குறிப்பிடுகின்றார். மாணிக்கவாசகரும், ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி'' என்று இயம்புகின்றார். திருமாளிகைத்தேவரும், '' ஒளிவளர் விளக்கே ! உலப்பிலா ஒன்றே !'' என்று விதந்து கூறுகின்றார். இங்ஙனம் அருளாளர்கள் பலரும் இறைவனை, சோதி' என்றும் 'விளக்கு' என்றும் 'ஒளி' என்றும் அருளுகின்றமைக்குரிய காரணத்தை இங்குச் சிந்தித்தல் பொருத்தமாகும்.

புற இருளாகிய உலக இருளைப்போக்கக் கண்ணுக்குத் தெரிகின்ற ஒளிவிளக்குகள் பலவும் இறையருளாணையால் அமைந்துள்ளன. அக இருளாகிய அறியாமையை, நீக்க கருத்துக்குத் தெரிகின்ற அறிவாகிய, ஒளிவடிவான, ஆண்டவனே அமைந்துள்ளான். புற இருளைப் பற்றியும் அக இருளைப் பற்றியும் திருவருட்பயன் ஆசிரியர், சிறப்பாக விளக்குகின்றார்.

''ஒருபொருளும் காட்டாது இருள், உருவம் காட்டும்,
இருபொருளும் காட்டாது இது''

என்பது உமாபதி சிவம் தரும் விளக்கமாகும். புற இருள் உலகிலுள்ள ஒரு பொருளையும் காட்டாது எனினும் தன் உருவத்தைக் காட்டும், ஆனால் ஆணவம் எனும் அக இருள் உலகப் பொருள்களையும் காட்டாது: தன்னையும் காட்டாது என்பது அவர் தரும் விளக்கமாகும்.

அறிவுவடிவானவன்;

இங்ஙனம் வன்மையாகவுள்ள ஆணவமெனும் அஞ்ஞான இருளைப் போக்க ஆண்டவனின் ஞானம் அல்லது அறிவு எனும் சுடர் விளக்கே தேவைப்படுகின்றது. இதனால்தான் அடியார்கள் எப்பொழுதும் இறைவனாகிய சுடர்விளக்கினை உள்ளத்தின்கண் ஏற்றிவைத்து வழிபடுகின்றனர் இக்கருத்தில் தான் ஞானகுருபர அடிகள், ''அகந்தைக் கிழங்கை அகழ்ந்து

எடுக்கும் தொழும்பர் உள்ளக் கோயிற்கு ஏற்றும் விளக்கே" என்று குறிப்பிடுகின்றார். குமார தேவரும் "ஒப்பில் தவத்தர் உளக்கோயிற்கேற்றும் ஞானமணி விளக்கே "என்று பாடுகிறார். அறிவு எப்படி விளக்காகும் என்ற கேள்வி சாதாரண மக்களிடையே எழும், எழுவது இயற்கை. அதற்கும் விடை காண்போம். ஒரு பாடலுக்குப் பொருள் காணமுற்படும் போது புலப்படாநிலை இருள் எனப்படுகிறது, இருளைத்தான் அறியாமை என்கிறோம். பாடலுக்குப் பொருள் புலப்படும் நிலை அறிவு எனப்படுகிறது. எனவே அறிவு உயிருக்குப் பொருளை விளக்கி உணர்த்துவதால் விளக்கெனப்படுகின்றது. உயிருக்கு ஒரு பொருளைப்பற்றிப் புலப்படாதவாறு செய்வது அறியாமை, ஆதலால் அது இருள் எனப்படுகிறது. எனவே இத்தகைய ஞானத்தைத் தந்தருளும் ஆண்டவனை ஒளி வடிவானவன் என்று கூறினர். ஆதலால் கண்ணுக்குத்தெரியும் புற ஒளியைப்போல அல்லாமல் கருத்துக்குப் புலப்படும் அக ஒளியாக விளங்குபவன் இறைவன் என்று உணர்தல் அவசியமாகும்.

புறத்தூய்மையும் அகத்தூய்மையும்:

இவ்வகையில் ஒளிவடிவான ஆண்டவன் எழுந்தருளி யிருக்கும் இடம் இருள் சூழ்ந்திருத்தல் கூடாது. இறைவனை வழிபடும் இடமும் சூழலும் தூய்மையும் ஒளியும் உடையதாக இருப்பின் அவ்விடத்திலிருந்து வழிபாடு செய்யும் மக்களின் உள்ளங்கள் மகிழ்ச்சியாகவும் பிரகாசமாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை, புறத்தூய்மை இருக்கும் இடத்தில்தான் அகத்தூய்மையும் உண்டாகும். இதனால்தான் அப்பர் பெருமான் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடங்களைத் தூய்மை செய்பவர்கள் பெரும்பயன்களை எய்துவர் என்று ஒரு பாடலில் குறிப்பிடுகின்றார்.

"விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினால் பதிற்றியாகும்
துளக்கினன் மலர்தொடுத்தால் தூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்தெறி ஞானமாகும்
அளப்பில கிதஞ்சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே"

எனும் இப்பாடலில் திருக்கோயிலைத் திரு அலகினால் பெருக்கி விளக்கித் தூய்மை செய்தவர்கள் பெறும் இன்பத்தில் பத்து மடங்கு அதிகமாக அத்திருக்கோயிலை மெழுகியவர்கள் பெறுவர் என்றும், நன்மலர் தொடுத்துச்சார்த்திப் பூசித்தவர் விண்ணுலகு பெறுவர் என்றும், திருக்கோயிலின் கண் திரு விளக்கு ஏற்றியவர்கள் ஞானம் பெறுவர் என்றும், இசைப்

பாடல்களைப் பாடியவர்கள் பெறும் பேறு அளவில்லாதன என்றும் விளக்குகிறார். எனவே இத்திருக்கோயிலின்கண் பல்வேறு திருப்பணிகளைச் செய்தவர்களும், திருவிளக்கு மற்றும் மின் விளக்கு ஏற்றியவர்களும் நலம்பல பெறுவர் என்பதில் ஐயமில்லை.

சமத்துவம் சாத்தியமாகுமா?

இங்கு இவ்விழாவில் வரவேற்புரை கூறிய அன்பர் ஒருவர் எங்கும் எதிலும் சமத்துவம் தேவை எனும் கருத்துப்பற்றிப் பேசினார். இன்று நாட்டு மக்களிடையே இந்த சமத்துவம் எனும் சொல்லும், சமரசம் எனும் சொல்லும் கலர்ச்சியாக மேடைகளில் பேசப்பட்டு வருகின்றன. சமத்துவம் என்பது பற்றி ஆழ்ந்து சிந்தித்தல் அவசியமாகும்.

இன்று எல்லோரும், எல்லாமும் சமமாகப் பெற வேண்டும் என்றே விரும்புகின்றனர். அவ்விருப்பத்தில் ஒன்றும் குறையில்லை. அருளாளராகிய தாயுமான அடிகள் கூட, 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று மறியேன் பராபரமே" என்று கூறுகின்றார். இறைவனும் எல்லா உயிர்களுக்கும் நலம் கொடுக்கக் காத்திருக்கின்றான். ஆனால் இன்பம் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்காமைக்குரிய காரணமென்ன என்பதைச் சிந்தித்தல் அனைவரின் கடமையாகும். தாயுமான அடிகளும் ஆண்டவனின் அருள்பிரவாகம் பொங்கித்ததும்பிப் பூரணமாய்ப் பரவியிருக்கிறது; முகந்து கொண்டு அனுபவிக்க வாருங்கள்! உலக மக்களே என்று அறை கூவல் விடுக்கின்றார்.

"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்; அகண்டா காரசிவ
போகம் எனும் பேரின்ப வெள்ளம் பொங்கித ததும்பிப்
பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடக்குதையோ! இன்புற்றிடநாம் இனிஎடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே"

என்பது அவர் அழைக்கும் பாடலாகும். இவற்றைச் சிந்திக்கும் பொழுது ஓர் உண்மை புலனாகின்றது. எங்ஙனம் கதிரவனின் கிரணங்கள ஓர மாதிரியாகப் பொய்கையில விழுந்தாலும் பக்குவம் வாய்ந்த தாமரை மலர்கள் இன்று மலர்கின்றன; மற்றவை அருமையாக. போதாக வளர்ந்து நாளடைவில் மலர்கின்றனவோ அதுபோல ஆண்டவனின் அருள் வெள்ளம்

ஒரே மாதிரியாக ஓடினாலும் பயன்கொள்வோர் பக்குவத்திற்கு ஏற்ப காலப்போக்கில் வளர்கின்றனர். ஒரே காலத்தில் எல்லோரும் எல்லாம்பெற இயலாது. இந்நிலைக்குக் காரணம் உயிர்களின் தரவேறுபாடுகளே அன்றி இறைவனின் கருணை வேறுபாடு அல்ல.

உலகம் ஒரு மாதிரி இல்லை :

இந்நிலை ஏன் எனில்? உலகம் முழுமையும் ஒரே மாதிரியான அறிவாளிகளையும், செயல்திறன் உள்ளவர்களையும் பார்த்தல் இயலாது என்பதுதான் விடையாகும் இவ் வேறுபாடுகள் இயற்கையானவையே! ஒரு கையின் விரல்கள் அனைத்தும் ஒன்றாயிருத்தலில்லை; உடலின் உறுப்புகள் அனைத்தும் ஒரே மாதிரியாக இருத்தல் இயலாது என்பது போலவே உலகில் வாழும் மக்களை ஒரே மாதிரியாகக் காணுதலும் இயலாது எனவே பலவேறு தரப்பட்ட மக்களைக் கொண்ட சமுதாயத்தில் சமரசம் தேவை என்பது பொருத்தமற்றது. அங்ஙனம் எனில் சமத்துவம் என்பது எப்பொழுது கிடைக்கும் என்று சிந்திக்க வேண்டும்.

உதாரணமாக அலுவலகத்தில் புதிதாகப் பணிபுரியச் சேர்ந்த எழுத்தர் பத்துப்பதினைந்து ஆண்டுகள் அனுபவமும் அதற்குத்தக்க அறிவு வளர்ச்சியும் பெற்றால் அவர் தலைமை எழுத்தராக வருவதற்கு வாய்ப்புண்டு. எனவே முடிவில் வளர்ந்த நிலையில் எல்லாம் ஒன்றாக வேண்டும் என்று கூறுவது பொருத்தமில்லை. ஆகவே ஒரே மாதிரியான முயற்சியும் ஒரே மாதிரியான அனுபவ வளர்ச்சியும் பெற்றவர்கள் சமமாக இருத்தலை விரும்பலாமே தவிர, பல்வேறுபட்ட நிலையிலுள்ளவர்கள் சமத்துவத்தை விரும்புவது சாத்தியமில்லை. இக்கருத்தில் தான் திருவள்ளுவரும், இன்று நாட்டில் செல்வமுடையார்கள் சிலரும், செல்வமற்றவர்கள் பலரும், இருக்கின்றார்களே என்ற கேள்விக்கு விடை கூறுவாரைப் போன்று ஒரு குறள் கூறுகின்றார்.

> ''இலர் பலராகிய காரணம் நோற்பார்
> சிலர்பலர் நோலா தவர்

என்னும் குறளில், முயற்சியுடையவர்கள் சிலரும் முயற்சியற்றவர்கள் பலரும் இருப்பதே இதற்குக் காரணம் என்கின்றார்.

இக்கருத்தை இக்கால நிலையோடு இணைத்துப்பார்ப்போம். இக்கோயிலுக்குரிய நிலக் குத்தகையைக் கொடுப்போர் சிலர். கொடுக்காதோர் பலர் எனத் தெரிகிறது.

கொடுக்காத மனநிலை உள்ளவரையும், கொடுக்கின்ற மனநிலை உள்ளவரையும் சமமாக எப்படிக் கருதமுடியும்? கடமை உணர்ந்து கொடுப்போர் அதற்கேற்ற நற்பலனையும், கடமை உணராது கொடுக்காதவர் அதற்கேற்ற துர்ப்பலனையும் தானே பெறுவர். இதனை எப்படி சமப்படுத்த இயலும்? எனவே நமது ஆதீன ஆதிபரமாசாரிய சுவாமிகள் அருளியபடி அவரவர் வினைவழி அவரவர் அனுபவம் கிட்டும் இக் கருத்துக்கள் அனைத்தையும் நன்கு சிந்தித்துப் பார்த்து, வேறு பாடுகள் வேறுபாடுகளாகவே இருத்தலைத் தவிர்க்க விருப்பு பவர்கள் வெறும் உணர்ச்சி வயப்பட்டுப் பேசுவதைத் தவிர்த்து உண்மையான காரணத்தைக் கண்டுபிடித்து அதன்வழி எல்லோரையும் வாழ நெறிப்படுத்துவார்களாக.

இன்று இத்திருக்கோயிலின்கண் மின்விளக்கு ஏற்றும் இப் புண்ணியப் பணியில் பங்குபற்றிய அன்பர்கள் பலரும் நலம் பல பெற்று நீடுவாழச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

59

நன்றி மறப்பது நன்றன்று*

"குலங்கொடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை இடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே"

—திருநாவுக்கரசர்.

[உழைக்கும் வர்க்கத்தவர்களான ஹரிஜன இன மக்களுள் சிலர் தம் தாய்ச்சமயமாகிய இந்து மதத்தை விடுத்து இஸ்லாமில் சேர முயன்றபோது, காரண காரிய வாதங்களை முன் வைத்து, பழமையை நினைவூட்டி, அவர்களை மீண்டும் இந்துமதம் திரும்பச் செய்த குருமணி களின் சிந்தனை வளமாக இக்கட்டுரை நிறைகிறது.]

சாம்பான் சொல் விளக்கம் :

சிவபெருமானைக் குறிக்கும் பல சொற்களில் ஒன்று 'சம்பு' என்பதாகும். 'சம்பு' என்றால் இன்பத்தின் ஊற்றுக் கண்ணாக விளங்குபவன் என்பது பொருள். உயிர்களுக்கு அவ்வின்பங்களை வற்றாது வழங்குபவன் என்பது கருத்தாகும்.

---

* மயிலாடுதுறை, கீழையூர் ஹரிஜனக் காலனியில், விஸ்வ ஹிந்து பரிஷத் ஏற்பாடு செய்திருந்த விழாவில் 27—9—'81 அன்று வழங்கியருளியது.

அவ்வகையில் 'சம்பு' எனும் இச்சொல் பின்பு 'சாம்பு' என்றாகி இச்சொல்லே பின்னும் திரிந்து 'சாம்பவன்' என்றாகி, பின் 'சாம்பான்' என்று மாறி இருக்கலாம் எனத் தோன்றுகிறது. சாம்பவன் என்பதும் சிவபெருமானைக் குறிக்கும் சொல்லே. இதற்குப் பொருள் உமையுடன் கூடியிருப்பவன் என்பதாகும். சிவன் உமாமகேசனாயிருப்பதும், உயிர்கட்குப் போகம் அளிப்பதற்காகவேயாம். சம்பு-சாம்பவன் என்ற சொற்கள் வேறாயினும் பொருள் இன்பத்தை உயிர்கட்கு அளிப்பவன் என்பதில் மாறுபாடில்லை. காந்தி அடிகளால் ஹரிஜனங்கள் என்றழைக்கப்பெற்ற ஆதிதிராவிடர்கள் பழங்காலத்தில் ஏன் இப்போதும் சில இடங்களில் தங்களைச் சாம்பவகுலத்தினர் என்று வழங்கி வந்தனர்; வருகின்றனர். இச்சொல் வழக்கத்தினால், இவர்கள் சிவனைச்சார்ந்தவர்கள் எனும் கருத்து முற்காலத்தில் நிலவிவந்தது என்பது தெளிவாகும். இதற்கு ஏற்ப இம்மக்கள் பத்திரங்களில் தங்களின் பெயருக்குப் பின்னால் 'சாம்பான்' என்று எழுதிக் கொள்வதும் ஆதாரமாகும். எனவே இவர்கள் சிவனுடன் சம்பந்தமுடையவர்கள், அவர்தம் பிள்ளைகள் என்பதே வரலாற்று அடிப்படையில் காணப்பெறும் கருத்தாகும்.

காந்தியின் கருணை!

இவர்கள் ஹரிஜனங்கள் என்று அழைக்கப்பெறும் நிலை காந்திஅடிகள் காலத்தில்தான் தோன்றியது. இந்தியா அடிமைப்பட்டுக்கிடந்த பொழுது இந்தியாவிலுள்ள மக்கள் அனைவரும் இந்தியதாயின் பிள்ளைகள் எனும் உணர்வைத் தோற்றுவிக்க விரும்பியவர், 'தேசப்பிதா' என்றழைக்கப்பெறும் மகாத்மா காந்தி அடிகள் ஆவார். அப்பொழுது அவரின் மனதில் ஆதிதிராவிடர்களின் தாழ்வுற்று வறுமையில் வாடிய நிலை மிகவும் வருத்தத்தை உண்டாக்கியது. அந்நிலையினை மாற்றி அவர்களும் சமமாக மதிக்கப்பெறும் காலம் மலரவேண்டும் என்று கருதி இரு திட்டங்களைக் கொண்டு வந்தார். ஒன்று அவர்கள் விரும்பி வழிபடத் திருக்கோயில்களுக்குள் சுதந்திரமாகச் செல்லும் உரிமை பெறுதல் இரண்டாவது இந்தியாவிலுள்ள அனைத்துச் சாதிகளிலும் வயது வந்தோர் ஓட்டுப்போடும் உரிமை பெறுதல். இவ்விரண்டு திட்டங்களினால் சமய அடிப்படையிலும், அரசியல் அடிப்படையிலும் உரிமைகள் பெற்றால்தான் அம்மக்கள் சமமாக வாழ்வார்கள் என்று அத்தலைவர் விரும்பினார்.

மேலும் அவர், தாம் விரும்பி வணங்கும் கடவுளாகிய ஹரியின் பிள்ளைகள் அவர்கள் என்று கூறி 'ஹரிகன்' என்றழைக்க ஆரம்பித்தார். அது முதல்தான் ஆதி திராவிடர்கள் அரிஜன் என்று அழைக்கப்பெற்றனர்.

இங்ஙனம் சமுதாய நிலையில் தாழ்ந்திருந்த இவர்களை எப்படியும் மேலே கொண்டுவரவேண்டும் என்று எண்ணி அதற்காக உரிய வகையில் திட்டமிட்டுப் பாடுபட்டவர்கள் இந்துமதத்தைச் சார்ந்தவர்களே என்பதனை இம்மக்கள் மறந்து விடக்கூடாது. மகாத்மாகாந்தி அடிகள் தீட்டிய திட்டங்களின் அடிப்படையில்தான் இம்மக்களும் இன்று பல்வகையில் முன்னேறி வந்துள்ளனர் என்பதை இம்மக்களே உணர் வார்கள்.

அன்றும் இன்றும்:

சுதந்திரம் பெறுவதற்கு முன்பு ஆதிதிராவிடர்களாகிய இவர்கள் எங்ஙனம் இருந்தனர் என்பதும், இன்று நாற்பது ஆண்டுகளில் எவ்வளவு முன்னேற்றம் பெற்றுள்ளனர் என் பதும், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்களுக்குத் தான் தெரியும். இன்று ஹரிஜன ஆடவர்கள் வேட்டி, சட்டை மற்றும் நாகரிக உடைகள அணிந்து எல்லோருடனும் சமமாகப் பழகி வருகின்றனர், அதேபோல் பெண்களும் மற்ற இந்து மக்களைப் போலவே ஆடைகளை அணிந்து மற்ற மக்களுடன் வேறுபாடு இன்றி வாழ்ந்து வருகின்றனர். நாற்பது ஆண்டு களுக்கு முன்பு அரிஜன ஆடவர்கள் இடுப்பில் ஒரு கோவணமும் தலையில் முண்டாசும் அணிந்திருப்பார்கள். திருக்கோயில்களில் நுழையக்கூட அவர்களுக்கு உரிமை இல்லாதிருந்தது. உணவு நிலையும் மிகமிகத் தாழ்ந்த நிலையிலேயே இருந்துவந்தது. ஆனால் இப்பொழுது அவை எல்லாம் மாறிப் பல மடங்கு எல்லா நிலையிலும் இவர்கள் வளர்ச்சி பெற்றிருக்கின்றார்கள்

மற்றைய இந்துக்களும் இவர்களைப் பார்த்து அன்புடன் பழகிச் சகோதர பாசத்துடன் அரவணைத்து வாழ்ந்து வருகின் றனர். ஒரு சிலர் தான் ஒரு சிலருடன் பிணக்குக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அப்பிணக்கும் குறிப்பாகப்பிற்படுத்தப் பட்டோரில் சிலரும் தாழ்த்தப்பட்டோரில் சிலரும் தான் கொள் கின்றனரே தவிர முற்படுத்தப்பட்டோருடன் இவர்களுக்குப் பிணக்கு ஏற்பட்டதாக இந்த நாற்பது ஆண்டுகளில் வரலாறே

இல்லை. எனவே இந்நிலையினை நன்கு சிந்தித்து இவ்விருதிறத் தாரும் தேசியப் பற்றுடன் எல்லோரும் இந்தியர்கள் என்று கருதி ஒற்றுமையுடன் வாழ்ந்து வருதல் மிகவும் அவசியமாகும்.

யார் பகைவர்கள்?

இவர்கள் இன்னொன்றையும் சிந்தித்தல் நலம் பயக்கும். இந்த ஆதித்திராவிட இனத்தில் பிறந்து, அதனால் பல்வேறு நன்மைகளை அரசிடமிருந்தும் பிறரிடமிருந்தும் பெற்றுக் கல்விக் கூடங்களிலும் பிறபிற இடங்களிலும் முன்னேறி நல்ல பதவிக்கு வந்தவர்கள் தாம் வளர்ந்து வந்த நிலையினை மறந்து தம் இனத்தைச் சார்ந்தவர்களை முன்னேற்றவோ அவர்களுக்கு வேண்டும் உதவிகளைச் செய்யவோ முன் வராமல்தம் பதவிக்கு ஏற்ப உயர்ந்த ஜாதியினருடன் பழக ஆரம்பித்து அங்ஙனமே வாழ்வது இன்று இவர்களில் பல்லோரிடமும் காணமுடிகின்றது. எனவே இவர்களுக்கு முதல் பகைவர்களாக விளங்குபவர்கள் இவர்கள் இனத்தில் பிறந்து பெரும் பதவி வகிப்பவர்களே என்று கூறினால் அது மிகை யாகாது. இவர்கள் இதனைச் சிந்திக்காமல் பிற பிற சாதியினர் தங்களுக்குப் பெரும் துன்பம் இழைக்கின்றனர் என்று கருதுவது சரியாகாது. ஒரு சாதியில் பிறந்தவர்களே தாம் உயர்ந்த அளவிற்கு அச்சாதியினரைப் பின்னர் உயர்த் தினார்களா என்பதற்கு உதாரணம் காண்பது அரிதாகவே இருக்கும்.

ஓர் உதாரணம்:

இன்று மிகச்சிறப்பான நிலையில் வாழ்ந்துவரும் நாடார் சமூகத்தினர் இருநூறு ஆண்டுகட்கு முன்பு மிகவும் தாழ்ந்த நிலையிலேயே இருந்தனர். இவர்கள் தங்கள் நிலையினை நன்றாக உணர்ந்து பிற சாதியினரைக் குறை கூறாமல் தங்கள் சாதியினருக்குள் யாராலும் தகர்க்க முடியாத ஒற்றுமையைக் கொண்டு இடையறாத உழைப்பும், அயராத ஊக்கமும், உலையாத முயற்சியும் கொண்டு வாழ்ந்து வந்தமையால் இன்றுள்ள உயரிய நிலையினைப் பெற்றனர். சுற்றம்தழால் என்ற நிலையில் தங்கள் இனத்தாரைத் தழுவி வாழ்ந்தனர். வசதி படைத்தவர்கள் வசதி இல்லாதவர்களைக் கண்டு வேண்டும் உதவிகளைச்செய்து அவர்களையும் உயர்த்தினர். இது நாடறிந்த உண்மை. இக் கருத்தினை அரிஜனங்களும் உதாரணமாகக்கொண்டு வாழத்தலைப்பட்டால் இவர்களும்

உறுதியாக முன்னேறலாம். ஒருவருக்கொருவர் பாசத்துடனும், நேசத்துடனும் உதவி செய்து உயர்வதற்கே சாதிகள் ஏற்பட்டன. ஆனால் அது இப்போது முரண்பாடாக மாறி வருகிறது.

வேறு பலரும் உள்ளனர்:

தாழ்த்தப்பட்டோர்கள் இன்று பல வகைகளில் உள்ளனர் அவர்கள் குறவர்கள், தோல்தைக்கும் பணியாளர்கள் (சக்கிலியர்) நகரசுத்தித் தொழிலாளர்கள் (தோட்டி) போன்றவர்கள். அவர்களையும் சிந்தித்தல் அவசியமாகும். அவர்களும் இவர்களைப் போலவே இன்று முன்னேறவேண்டிய நிலையில் உள்ளவர்களே. இந்தச் சுதந்திரப் பெருநாட்டில் எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்பதில் யாருக்கும் இருவேறு கருத்தில்லை. இந்திய சட்டமும் எல்லோரும் எல்லாப் பதவிகளும் பெறவாய்ப்பு அளித்திருக்கிறது. ஆனால் அந்நிலையினைப்படிப்படியாகப் பெற இயலுமே தவிர ஒரே அடியாக ஒரே நாளில் அடைவது என்பது சாத்தியமில்லை. இவர்கள் இன்று உள்ள பல்வேறு அரசு சலுகைகளைப்பெற்று முன்னேறிய அளவுக்குக் கூட மற்றவர்கள் முன்னேறவில்லை. ஆனால் அவர்கள் யாரும். ''நாங்கள், பிறமதத்தைச் சாரப் போகின்றோம்'' என்று பயமுறுத்துவதில்லை. அவர்கள் அளவுக்கு அவர்கள் வளர்ந்து கொண்டுதானிருக்கின்றார்கள்.

நன்றி கொன்ற செயல்:

இந்நிலை இப்படி இருக்க, இவர்கள் இந்து ராஜ்ஜியத்தின் சலுகைகளைத் தாராளமாகப் பெற்றுக்கொண்டு இந்த அரசின் மீதும் இந்த நாட்டின் மீதும் இந்து மக்களின் மீதும் வெறுப்புக் கொண்டு பிற மதம் சாருவது என்பதோ, சாரப் போகின்றேன் என்று பகிரங்கமாக அச்சுறுத்தல் நிலையில் அறிக்கை தருவதோ உண்மையில் நன்றி கொன்ற செயலே ஆகும். அப்படி மதம் மாறும்போது இந்து மதத்தினிடத்தில் குறை கண்டு அதனை விளக்கமாகக் கூறிவிட்டுச் செல்வார் களேயானால் அது பொருத்தமாக இருக்கும். அதனை விட்டு அந்த வசதி கிடைக்கும்; இந்தப் பதவி கிடைக்கும் என்று நம்பிப் போவதும் அங்குச் சென்றால் இந்த தாழ்ந்த சாதிக் கொடுமை இருக்காது என்று எண்ணிப்போவதும், நன்மை தராது என்பதனை அவர்கள் அங்கே போன பிறகுதான்

உணர்வார்கள். எந்த சமயத்திலும் எந்த இனத்திலும் தாழ்ந்த சாதி, உயர்ந்த சாதி என்ற பிரிவினைகள் இல்லாம லில்லை. எனவே, இவர்கள் தங்கள் நிலையில், கிடைக்கும் வாய்ப்பினையும் சலுகைகளையும் முழுமையாகக் கொண்டு ஒற்றுமையாகவும் நன்முறையிலும் உழைப்பார்களேயானால் இந்த வேறுபாடும், இப்பொழுது இருப்பதாகக் கருதும் தாழ்ந்த நிலையும் எளிதில் நீங்கிவிடும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

நாடு நலம் பெற:

எனவே இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்து தங்கள் வாழ்க்கை மேன்மை பெறவும், தங்கள் சமூகம் முன்னேறவும், தாங்கள் வாழும் நாடு நலம்பெறவும் இவர்கள் இம்மதமாற்றப் பிரச்சனையை இத்துடன் முடித்துக் கொள்வதும், மதம் மாறிச் சென்றவர்கள் மீண்டும் தாய்ச் சமயம் திரும்புவதும் அவசியம் ஆகும் ஏனெனில் இந்திய வரலாற்றில் குறிப்பாக தென்னிந்திய வரலாற்றில் பிற நாட்டுச் சமய ஊடுருவல் காரணமாகவும் அவர்களைநம்பி அவர்கள்பின்னே சென்றவர்களின் இழி செயல்கள் காரணமாகவும், இந்நாடு அடிமைப்பட்டது என்பதை யாரும் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. ஆதலின் நாடு நன்முறையில் சுதந்திரத்துடன் இருந்தால்தான் நம்பிரச்சனைகளை உரிமையுடன் நம்மவர்களிடம் கேட்கலாம் என்னும் உணர்விலாவது இதனைச்சிந்தித்து மனத்தை மாற்றிக் கொண்டு தாய்ச்சமயம் திரும்புவார்களாக!

அங்ஙனம் அவர்கள் திரும்பிவரவும், இவர்கள் நாட்டுப் பற்றோடும் இனப்பற்றோடும் இருந்து ஒற்றுமைக்குக் குறைவு வராமல் வாழ்ந்துவரவும், இங்ஙனம் வாழ்ந்துவரும் அனைவரும் நலம்பல பெற்று நீடுசிறக்கவும், எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு'

60

அறநெறி எது?*

" சிரமஞ் செய்து சிவனுக்குப் பத்தராய்ப்
பரம னைப்பல நாளும் பயிற்றுமின்
பிரமன் மாலொடு மற்றொழிந் தார்க்கெலாம்
குரவ னார்உறை யும்குட மூக்கிலே

— அப்பர்

[அறநெறியாவது எது என்று தொடங்கி, பல் வேறு விளக்கங்கள் அருளிச்செய்து, ஈதல், அறம் என்ற ஒளவை வாக்கை விரித்துரைத்து அறத் திற்குப் புதிய ஆக்கம் சேர்த்த குருமணிகளின் அரிய சிந்தனையின் வெளிப்பாடு இது.]

அறநெறி:

மனிதன் தன்வாழ்வில் அடைய வேண்டிய பயன்கள் நான்கு என்பர். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம். இவற்றை முறையாகத் தெரிந்துகொண்டு அவற்றின் பயனை அடைவதற்கே நூல்களைப் படிக்கின்றோம். இக்கருத்தைத் தான் பவணந்தி முனிவர், " அறம், பொருள், இன்பம், வீடு, அடைதல் நூற்பயனே " என்று நன்னூலில் நவின்றுள்ளார். இந்நான்கனுள் வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம். இதனால் உலக வழக்கில் நாம் அறிந்து அனுபவிக்கக் கூடியனவாக

---

* குப்பகோணம் சிவனடியார் திருக்கூட்டத்தின் 35 ஆவது ஆண்டு விழாவிற்கு 31—12—82 அன்று எழுந்தருளிய காலை வழங்கியருளியது.

இருப்பவை அறம், பொருள், இன்பம், எனும் மூன்றுமேயாம். அறம் பொருள் இன்பமான மூன்றையும் அறிந்து அவற்றின் வழி நடத்தலே அறநெறி எனப்படுகின்றது. இதனைச் சேக்கிழார்பெருமான் மனுநீதி கண்ட சோழன் வரலாற்றில் அறிவிக்கின்றார்.

" அறம்பொருள் இன்பமான அறநெறி வழாமற் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற வையகம் காக்கும் நாளில்
சிறந்தநல் தவத்தால் தேவி திருமணி வயிற்றில் மைந்தன்
பிறந்தனன் உலகம் போற்றப் பேர்அரிக் குருளை அன்னான்"

இப்பாடலிலுள்ள 'அறம் பொருள் இன்பமான அறநெறி' எனும் வரி ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. அறமாவது, உலகிலுள்ள பொருள்களையும், இன்பங்களையும் தனக்கும் பிறருக்கும் தீங்கின்றி அனுபவிக்கச்செய்வது என்பதாம். பொருளை ஈட்டுவதற்கும், இன்பத்தை அனுபவித்தற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. ஆனால் அப்பொருளை ஈட்டுகிற பொழுதும், இன்பத்தை துய்க்கிறபொழுதும் தனக்கும் பிறர்க்கும் தீங்கு வராமல் நடந்துகொள்வதே அறமாகும். இவ்வறத்தின் வழிப்பொருளை ஈட்டுதலும், அறத்தின் வழியே, இன்பம் துய்த்தலும் அறநெறி என்பது நம் சான்றோர்களின் கருத்தாகும். இது சேக்கிழார் வாக்காலும் தெளிவாகின்றது.

ஔவை அறம்;

இவ் வறம் பொருள் இன்பம் என்பன பற்றி ஔவைப் பிராட்டியாரும் ஒரு பாடலில் விளக்குகின்றார். அறம் என்பது ஒரு மனிதன் தன்னிடத்துள்ள அறிவு ஆற்றலையும் தன்னால் ஈட்டப்பெறும் பொருளையும் மனமுவந்து தக்கார்க்கு ஈதல் என்று கூறுகின்றார். பொருள் என்பது, அறத்தின் வழியே, அதாவது தனக்கும் பிறருக்கும் தீங்கின்றி ஈட்டுதலாகிய அறத்தின் வழியே சேமிப்பதாகும். இவ்வறத்தின் வழி வாராப் பொருள், கண்ணுக்குப் பொருளாகத் தோன்றினும், அது அறம் இன்பம் வீடு ஆகிய பயன்களைத் தாராது. ஆதலின், அப்பொருளைப் பொருளல்ல என்றனர் ஆன்றோர். இக் கருத்தைத் திருவள்ளுவரும்,

" அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புறள விடல்"

என்று கூறுகின்றார். தம்மாட்டு அன்பும், பிறர்மாட்டு அருளும் கொண்டு ஈட்டப்பெறும் பொருளே பொருள் என்பது

வள்ளுவர் கருத்து. இக்கருத்தைத்தான் தனக்கும் பிறர்க்கும் நீங்கு வாராவகையில் ஈட்டப்பெறும் பொருளே பொருள் என்றனர் ஆன்றோர். இவ்வறத்தைச் சிந்திக்காமல் எப்படி எப்படி எல்லாமோ ஈட்டப்பெறும் பொருள் முடிவில் தமக்கும் பிறர்க்கும் நாட்டிற்கும் தீங்கினையே தரும் என்பதை நாட்டு நடப்பே நமக்கு உணர்த்தி நிற்கிறது.

இன்பம் என்பது எஞ்ஞான்றும் காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டதே என்பர் ஔவைப் பிராட்டியார். இங்கும் அறத்தின்வழி பெறும் இன்பமே இன்பமாய் அமையும். எனவே பொருளிற்கும் இன்பத்திற்கும் அறமே அடிப்படை என்பது தெளிவாகும். இக்கருத்தினையே புறநானூற்றுப் புலவர் கோவூர் கிழாரும்,

> ''சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
> அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல''

என்று கூறுகின்றார்.

பரனை நினைதலே அறம்:

அறத்தினை நன்குணர்ந்து அவ்வறத்தின் வழிப் பொருளை ஈட்டலும், இன்பத்தைத் துய்த்தலும் யாருக்கு வரும் எனின்? எப்பொழுதும் இறையுணர்வு உள்ளவர்கட்கே வரும் என்று ஔவைப் பிராட்டியார் கூறுகின்றார். கண்ணுக்கும் கருத்திற்கும் புலனாகும் இவ்வறம், பொருள். இன்பம் ஆன அறநெறிக்கு அடிப்படை., சாதாரண மனிதனின் கண்ணிற்கும் கருத்திற்கும் புலனாகாத இறையுணர்வே என்பது ஆன்றோர் களின் கருத்தாகும். இறையுணர்வில்லா அறம், ஊற்று இல்லாத ஓடையும், மணமில்லாத மலரும், அடித்தளமில்லாக் கட்டடமும் போல் நிலையான பயன் அற்றதாய் முடியும், இக்கருத்தில்தான் ஔவைப் பிராட்டியார், ''பரனை நினைந்து'' என்று கூறுகின்றார். இக்கருத்துக்கள் அமைந்த பாடல்.

> ''ஈதலறம்; தீவினைவிட் டீட்டல் பொருள்; எஞ்ஞான்றும்
> காதல்இரு வர் கருத்தொரு மித்து — ஆதரவு
> பட்டதே இன்பம்; பரனைநினைந்து இம்மூன்றும்
> விட்டதே பேரின்ப வீடு''

என்பதாம், இப்பாடலிலுள்ள, 'பரனை நினைந்து' எனும் சொற்களை இடைநிலைத் தீவகமாகக்கொண்டு, பரனை

நினைந்து ஈதல் அறம், பரனை நினைந்து தீவினைவிட்டு ஈட்டல் பொருள், பரனை நினைந்து காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம் பரனை நினைந்து இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு எனப்பொருள் கொள்ளல்தக்கது. பரனை நினையாமல் துறவும் கூடாது வீடும் பெற இயலாது. எனவே பரனை நினையாவிடின் இவை எல்லாம் முழுமையான பயனைத்தரமாட்டா. இக்கருத்துகளால் அறம், பொருள், இன்பம் எனும் மூன்றும் அறநெறி என்றும், இவ்வற நெறிக் கெல்லாம் அடிப்படையாய் உள்ள அறம் பரனை நினைதலே என்றும் உணர்ந்து கொள்ளலாம். ஆகவே எல்லாவற்றிற்கும் அடிப்படையாய் உள்ள அறம் இறையுணர்வு என்பது தெளிவாகும்.

சித்தியார் அறம்:

இக்கருத்துக்களிலுள்ள அடிப்படை அறமாகிய இறை யுணர்வு பற்றி இன்னும் விளக்கிக் கூறுவாரைப் போன்று அருணந்தி சிவாசாரியார் தமது சிவஞான சித்தியாரில்,

"மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர் கையில் கொண்டங்(கு) இச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுதல் அகற்றி வாழும் செயலற மானால் யார்க்கும்
முனம்ஒரு தெய்வம்எங்கும் செயற்குமுன் னிலையாம்அன்றே"

என்று அருளுகின்றார். மனத்தின் செயலாகிய பரனை நினைதல் அறம் என்று ஔவைப் பிராட்டியார் கூறியதை மேலும் விளக்கி மந்திரங்கள் சொல்லுவதாகிய வாக்கின் செயலையும், கையில் மலர் கொண்டு அர்ச்சித்தலாகிய மெய்யின் (உடல்) செயலையும் இங்கே சேர்த்து அறம் என்று சுட்டி விளக்குகின்றார் அருணந்திசிவம்.

எனவே இறையுணர்வு எனும் அடித்தளத்தில் எழுப்பப் பெறுகின்ற மாளிகையே அறம், பொருள், இன்பமான அறநெறி. அதுவே சிவநெறி; அதுவே மெய்ந்நெறி.

அன்றாட வாழ்வில் அறங்கள்:

இங்ஙனம் நுட்பமாகவும் சுருக்கமாகவும் விளக்கப்பெற்ற அறம், பருப்பொருளாகவும் செயல் முறைகளாகவும் சிவஞான சித்தியாரில் இன்னொரு பாடலில் விளக்கப் பெற்றுள்ளது.

நம்முடைய வாழ்வு நெறிமுறைகள் எல்லாமே அறத்தின் அடிப் படைமீதுதான் எழுப்பப்பட்டுள்ளன என்று சுட்டுகின்றார் அருணந்தி சிவாசாரியார்.

"ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம்,
உபசாரம், உறவு, சிலம்,
வழுக்கிலாத் தவம், தானங்கள்,
வந்தித்தில், வணங்கல், வாய்மை
அழுக்கிலாத் துறவு, அடக்கம்,
அறிவொடு அர்ச்சித்தல், ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனால்
இரங்குவான் பணிய றங்கள்"

என்பது அப்பாடல். இப்பாடலில் அடங்கியுள்ள அறங் களாவன: தமக்குற்ற ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல், எவ் வுயிர்க்கும் அன்புடையராயிருத்தல், பிற உயிர்கள் மாட்டுக் கருணை உடையராயிருத்தல், அகத்தும் புறத்தும் தூயராயிருத் தல், பிறரை அகமும் முகமும் மலர உபசரித்தல், பிறருடன் பண்பு பாராட்டி உறவுகொள்ளுதல், நன்னெறியுடையராயிருத்தல், வழுவில்லாத் தவநெறியுடையராயிருத்தல், நல்லோருக்குப் பொருளை வழங்கல், பெரியோரைக்கண்ட வழி தைகூப்பி வழிபடுதல், அடுத்து தலை நிலமதோய வணங்குதல், வாக்கினில் மெய் பேசுதல், அழுக்கில்லாத் துறவு நெறியுடையராயிருத்தல், எல்லாம் தெரிந்தும் அடங்கியிருத்தல், ஆண்டவனை மலர்கள் இட்டு அர்ச்சித்தல் எனும் இவையும் இவை போல்வன பிறவும் அறங்களாகும்.

அறநெறியே சிவநெறி:

இங்ஙனம் கூறப்பெறும் நம்முடைய வாழ்க்கை நெறி முறைகள் அனைத்துமே அறத்தோடு பின்னிப் பிணைந்து இருப்பதனைச் சைவ நூல்களாலும், இலக்கியங்களாலும் உணரலாம். நாம் செய்யும் எச்செயலுமே அறத்தோடு மிளிர்வதனை இப்பாடலால் தெளியலாம். வாழ்வில் தொட்ட தொட்ட இடம் எல்லாம் அறநெறி பின்னிப்பிணைந்து வாழ்வைச் செம்மைப்படுத்தி வருவதனைச் சிவஞானசித்தியார் இப்பாடலால் விளக்குகின்றது. இதுவரை சிந்தித்த சிந்தனையில் கருத்துகளைத் தொகுத்துக் காணலாம். அறம், பொருள், இன்பம், வீடு அடைதலே மனித வாழ்க்கையின்

குறிக்கோள். இவற்றில் வீடு எனும் ஒன்று மட்டும் இம்மை வாழ்வில் உணர்ந்து செயல்படலாமே தவிர அடைய முடியாது. இம்மையில் அறம், பொருள், இன்பம் எனும் மூன்றுமான அறநெறியைச் செய்தல் இயலும். இவ்வற நெறியே சிவநெறி எனப் போற்றப் பெறுகின்றது. இவ்வற நெறிக்கு அடிப்படையானது இறையுணர்வு என்னும் மூல அறமாகும். இக்கருத்தை ஒளவைப்பிராட்டியாரும் அருணந்தி சிவமும் ஏற்று உரைத்துள்ளனர்.

வாழ்த்து:

இவ்விறையுணர்வை அடிப்படையாகக் கொண்ட அறநெறி யாம் சிவநெறியைக் கடந்த 35 ஆண்டுகளாகக் குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம் கைக்கொண்டு மக்களிடையே பரப்பிச் செயற்படுத்தி வருவது பாராட்டுதற்குரியது. இக் கூட்டத்தினர் வாரந்தோறும் இடையீடின்றி ஒவ்வொரு திருக் கோயிலுக்கும் பக்தர்களுடன் சென்று வழிபாடாற்றித் தமக்கும் பிறர்க்கும் நலம் சேர்க்கும் அறநெறியைச் சிறப் பாகச் செய்து வருகின்றனர். என்றும் இந்நெறியினைக் கடைப்பிடித்து,

> ''என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
> ஒன்று காதலித் துள்ளமும் ஒங்கிட
> மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
> நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்''

எனும் சேக்கிழாரின் வாக்கிற்கிணங்கச் சிறப்புற்றுத் திகழ எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

''மன்னுக தில்லை; வளர்க நம் பக்தர்கள்''

61
எண்ணமே வாழ்வு*

"கருமணியைக் கனகத்தின் குன்றொப் பானைக்
கருதுவார்க் காற்ற எளியான் தன்னைக்
குருமணியைக் கோளரவம் ஆட்டு வானைக்
கொல்வேங்கை யதளானைக் கோவணவன் றன்னை
அருமணியை அடைந்தவர்கட் கமுதொப் பானை
ஆனஞ்சும் ஆடியைநான் அபயம் புக்க
திருமணியைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே"

— திருநாவுக்கரசர்

[திருமுதுகுன்றத்து இறைவன்பால் இளமை முதலே அளப்பரிய ஈடுபாடு கொண்ட குருமணிகள், அத்தலத்தின் பெருமை பேசி, முப் பொருள் உண்மைகாட்டி, எண்ணம்போல் வாழ்வு அமையும் என்பதைப் பல்வேறு நூற்சான்று களுடன் விளங்க அருளிச்செய்துள்ளார்கள்.]

பழமலையின் பெருமை:

திருமுதுகுன்றம் என்பது தமிழ்ப்பெயர்; விருத்தாசலம் என்பது வடமொழிப்பெயர். இத்தலம் மிகப்பழமை வாய்ந்தது என்பது இதன் பெயராலேயே விளங்குகிறது இதை விருத்த காசி என்றும் வழங்குவர். காசியை விட வீசம் அதிகம் என்றும் இதன் பெருமையைச் சிறப்பித்துக் கூறுவர் இங்கு மணிமுத்தா நதி திருக்கோயிலின் வடபால் உத்தரவாகினியாகச் (வடக்கு நோக்கி) சென்று கிழக்கே திரும்புகிறது. இது பற்றியே விருத்த

* திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) அருள்மிகு விருத்தகிரீசுவரர் திருக்கோயில் திருப்பணியைத் தொடங்கிவைத்து 17—1—83 அன்று அருளிச்செய்தது.

காசி என்று இத்தலம் குறிக்கப்பெறுகிறது. இப்பகுதி இன்றும் புண்ணிய மடு என்று போற்றப் பெறுகிறது. திருமுதுகுன்றம் என்பதாலேயே சுவாமி பழமலைநாதர் என்றும் விருத்தகிரிசுவரர் என்றும், அம்பாள் விருத்தாம்பாள் என்றும் பெரியநாயகி என்றும் போற்றப் பெறுகின்றனர். இது தேவாரம் அருளிய மூவராலும் போற்றி வழிபட்டுப் பதிகம் பாடப்பெற்ற சிறப்புடையது.

திருஞானசம்பந்தர், மணிமுத்தாநதி திருக்கோயிலைவலமாக வருகிறது என்று குறிப்பிட்டருளுகின்றார். அந்நிலை இன்றும் காணத்தக்கது. ''முழங்கொலிநீர் முத்தாறு வலஞ்செய்யும் முதுகுன்றத் திறையை!...'' என்பது அவர் அருளியவாக்கு, திருஞானசம்பந்தர், '' முக்கனியின் சாறொழுகிச் சேருலரா நீள்வயல் சூழ் முதுகுன்றமே'' என்று ஆயிரத்துமுந்நூறு ஆண்டுகட்கு முன்பு அருளிய வாக்கு இன்றுவரை மெய்யாய்த் திகழ்கிறது

மூப்பொருள் உண்மை:

திருஞானசம்பந்தர், இவ்வூர்த் திருப்பதிகம் ஒன்றில் சைவ சித்தாந்தம் உணர்த்தும் முப்பொருளுண்மையினை விளக்கி யருளுகின்றார். அக்கருத்து ஈண்டுச் சிந்திக்கத் தக்கதாகும். கடவுள், உயிர், உலகம் எனும் இம்மூன்றும் என்றும் உள்ள நித்தியப் பொருள்கள் என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப் படைத் தத்துவம் இக்கருத்தினை,

'' விளையாததோர் பரிசில்வரு பசு, பாசு, வேதனை, யொண் தளை, யாயின தவிரவ்வருள் தலைவன், அதுசார்பாம் களையார்தரு கதிராயிரம் உடையவ்வ வனோடும் முளைமாமதி தவழும் உயர் முதுகுன்றடைவோமே''

எனும் பாடலால் விளக்கியருளுகின்றார். பசு என்பது உயிர், பாசம் என்பது ஆணவம்; வேதனை என்பது நல்வினை, தீவினையாகிய கர்மங்கள்; ஒண்தளை என்பது மாயை. எனவே, மும்மலங்களும் குறிக்கப்பெற்றன. 'தவிர அருள் தலைவன்' என்பதால் பதி குறிக்கப்பெற்றது இங்ஙனம் உயிராகிய பசு தம்மைப் பற்றி நிற்கும் பாசங்களாகிய தளை களைத் தவிர்க்க அருளுகிறவன் தலைவனாகிய பதி. இத் தகைய தலைவன் எழுந்தருளியுள்ள திருமுதுகுன்றத்தை அடைந்து நாமும் நலம் பெறுவோம் என்கிறது இத்தேவாரப் பாடல். இதில் சைவ சித்தாந்தத்துவம் தெளிவாகக் குறிக்கப் பெற்றிருத்தலை நன்கு உணரலாம்.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் ஏழும், திருநாவுக்கரசர் அருளிச்செய்த திருத்தாண்டகப்பதிகம் ஒன்றும், சுந்தரர் அருளிய திருப்பதிகங்கள் மூன்றும் ஆகப்பதினொரு திருப்பதிகங்கள் உள்ளன.

திருப்பணியின் சிறப்பு:

புராணச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் உடையது இத்தலம். கற்பகமரமே வன்னிமரமாக வந்து பழமலைநகர் திருக்கோயில் திருப்பணி செய்தது என்பர். மேலும் சிவபெருமான், பிரமன் இவ்வுலகைப் படைக்குமுன் தாமே மலைலடிவாகி நின்றார். பிரமன் அதனை அறியாது பலமலைகளையும் படைத்து அவற்றை நிலைபெறுத்த இடமின்றிமயங்கினான். அப்போது சிவபெருமான் பிரமன்முன் தோன்றித் தானே பழமலையாதலைத் தெரிவித்தருளினார் என்பது தலபுராணம்: சுக்கிராச்சாரியார், அகத்தியர், விபச்சித்து முனிவர் போன்ற முனிவர்களும் வழிபட்ட பெருஞ் சிறப்புடையது இத்தலம்.

விபச்சித்து முனிவர் போன்ற அருளாளர்களால் திருப்பணி செய்விக்கப் பெற்ற சிறப்புடைய இத்தலத் திருக்கோயில், சுமார் அறுபது ஆண்டுகட்கு முன்னர் வயிநாகரம் செட்டியார் குடும்பத்தினரால் பெருந்திருப்பணி செய்து குடமுழுக்கும் நிகழ்த்துவிக்கப்பெற்றுள்ளது 1944இல் உபாயமாகத்திருப்பணி செய்து குடமுழுக்கும் நடந்துள்ளது அதன்பின் பதினைந்து ஆண்டுகட்கு முன்பு இத்திருக்கோயில் திருப்பணி தொடங்கப் பெற்று அது இன்னும் நிறைவேறாமல் இருந்துவருகின்றது. அத்திருப்பணி திருவருள்வலத்தாலும் இங்குள்ள இறைபணி மன்ற அன்பர்களின் முயற்சியாலும் மீண்டும் இன்று தொடங்கப்பெறுகிறது.

எண்ணமே எல்லாவற்றிற்கும் அடிப்படை :

எந்தச் செயலும் இறைவன் அருளால் அன்றி நிகழாது. இதனை, 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்று தாயுமானார் குறிக்கின்றார். ''ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே'' என்று அப்பர் பெருமானும் இக்கருத்திலேயே விளக்கியிருக்கின்றார். ஒரு சில திருப்பணிகள் விரைவிலேயே நிறைவுபெறுகின்றன. ஒரு சில திருப்பணிகள் தொடங்கப் பெற்றுப் பலகாலங்கள் ஆகியும் நிறைவுபெறாமல் உள்ளன. இவற்றிற்கெல்லாம் காரணம் ஆங்காங்குள்ள மக்கள் மனோ பாவமும், செயல்முறைகளுமே ஆகும். மக்களின் மனநிலையை

ஒட்டித்தான் இறைவன் திருவருளும் நிகழ்கிறது. எண்ணியது நிறைவேறவேண்டுமாயின் எண்ணம் சரியாகவும் முறையாகவும் இருத்தல் அவசியம். எனவே, நாடு நலமுற அமைய வீடு நலமுற அமைதல் இன்றியமையாததாகும். பல வீடுகள் சேர்ந்ததே ஊர். பல ஊர்கள் சேர்ந்ததே நாடு. எனவே வீடு திருந்தினால் நாடு திருந்தும். இங்கு வீடு என்பது அங்குவாழும் மனிதர்களையே குறிக்கும். எந்த நாட்டில் நல்லவர்களும், திறமையுள்ளவர்களும், நல்ல உழைப்பாளிகளும் இருக்கின்றார்களோ அந்தந்த நாடும் ஊரும் நலம் பெறும் என்பது உண்மை. நல்லவர்களும் உழைப்பாளிகளும் இல்லாத நாடும் ஊரும் நலம் பெறுவது என்றும் இயலாது என்பது கண்கூடு.

நாடு நல்லவர் வழியில் :

எனவே நாடு எப்படி இருந்தாலும் அங்குவாழும் மக்களின் செயல் முறைகளால் அது உயர்வு பெறுவதும், தாழ்வு அடைவதும் நேருகிறது. இக்கருத்தையே ஔவையார் தம்புறப் பாட்டில் குறிக்கின்றார். ஒரு நிலம் நாடாக இருந்தால் என்ன! காடாக இருந்தால் என்ன ! அது மேடாக இருந்தால் என்ன ! பள்ளமாக இருந்தால் என்ன ! அந்நிலத்தில் வாழும் மக்கள் எவ்வளவில் முயற்சியும் உழைப்பும் உடைய நல்லவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவில் அந்நிலம் பெருமைபெறுகிறது என்று கூறுகிறார்.

> "நாடா கொன்றோ! காடா கொன்றோ !
> அவலா கொன்றோ ! மிசையா கொன்றோ!
> எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை! வாழிய நிலனே!"

என்பது அப்பாடல். ஒரு நாடு சுபிட்சமாக இருந்தால் அந்நாட்டில் நல்லவர்கள் இருக்கின்றார்கள் என்பது பொருள். இதனை மகாபாரதம் விளக்குகிறது.

பாரதக்கூன்று :

பஞ்சபாண்டவர்களும் திரௌபதியும் சூதாட்டத்தின் விளைவினால் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் இருந்து விட்டுப்பின் ஓராண்டு மக்கள் யாரும் அறியாவகையில் நாட்டில் மாறு வேடத்தில் வாழத்தலைப்பட்டனர். அப்பொழுது தருமன் முனிவர் வேடத்திலும், பீமன் சமையல்காரன் வேடத்திலும், அர்ச்சுனன் பேடிவேடத்திலும், நகுலன் குதிரை ஓட்டுபவன் வேடத்திலும், சகாதேவன் ஆயர்குடியன் வேடத்திலும், திரௌபதி பணிப்பெண் வேடத்திலும் விராடதேசத்தில்

வசித்துவரலாயினர். அவ்வபயம் துரியோதனன் தனது பங்காளிகள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் கடந்து இந்த ஓராண்டு மறைந்தும் வாழ்ந்துவிடுவார்களோயானால் அதன் பின்னர் அவர்கட்கு நாடு தரவேண்டியிருக்குமே! அதனால் அவர்கள் மறைந்துவாழும் இத்தருணத்திலேயே அவர்களைத் கண்டுபிடித்துக் கொலைசெய்விட்டால் துன்பமில்லை என்று எண்ணியவனாய் நாடு முழுக்கப் பாண்டவர்களைத்தேடிக் கண்டுபிடிக்க ஆட்களை அனுப்பினான். யாரும் கண்டுபிடிக்க வில்லை: எல்லோரும் கண்டுபிடிக்க இயலவில்லை என்று கூறினார்கள். அப்பொழுது அவையிலிருந்த பீஷ்மர் துரியோதனைப்பார்த்து, "நீ தேடுவதுபோன்று ஆட்களை அனுப்பினால் கண்டுபிடிக்க இயலுமா? நான் ஒரு யோசனை கூறுகின்றேன்! கேள்! எந்நாடு சுபிட்சமாகவும் நீர்வளம் நிலவளங்களோடும் இருக்கிறதோ அங்கேதான் அந்த நல்லவர் கள் மறைந்து வாழ்கின்றார்கள என்பது பொருள்" என்று கூறினார். இக்கருத்து ஆழமாகச் சிந்திக்கத்தக்கது. பீஷ்மர் கூறியது போல நல்லவர்கள் வாழ்ந்தால் அந்நாட்டில் மழை வளமும் பிற வளங்களும் குறைவு படா என்பது உறுதி. வாழும் மக்களின் மனநிலை கேடுற்றால் நாடும் கேடுறும் என்பது பாரதம் கூறும் தெளிபொருள். இக்கருத்தினைத் திருமூலரும் தம் திருமந்திரத்திலும் கூறியருளுகின்றார்.

இன்பமும் துன்பமும்:

இன்பமும் துன்பமும் தானாக வருவதில்லை. நாம் நினைக்கும் நினைவு, பேசும் பேச்சு, செய்யும் செயல் இவை தூய்மையாயிருப்பின் இன்பமே வரும். இல்லையேல் துன்பமே வரும் இதனை நன்குணர்ந்து அரசன் அல்லது அரசு முறை செய்யின் நாடு நலமுறும் என்பதில் ஐயமில்லை.

"இன்பமும் துன்பமும் நாட்டார் நிடத்துள்ள
நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்
என்ப இறைநாடி நாடோறும் நாட்டினில்
மன்பதை செப்பஞ் செயின் வையம் வாழுமே"

என்பது அத்திருமந்திரப் பாடல்.

இங்ஙனம் புறநானூறும், பாரதமும், திருமந்திரமும் ஒரே கருத்தையே பல வகையில் விளக்குகின்றன; வலியுறுத்தியும் கூறுகின்றன. எனவே ஒவ்வொருவனும் தான் நல்லவனாக இருந்தால் தான்வாழும் நாடும் ஊரும் வீடும்நலம் பெறும் என்பதனைச் சிந்தித்தாவது நல்லவனாக வாழ முற்படுதல்

அவசியமாகும். தான் தியனாக வாழ்ந்தால் பிறருக்குக் கெடுதல் என்றில்லாமல் அது மறைமுகமாகத் தனக்கும் தீங்கையே தருகிறது என்று சிந்தித்தல் மிகமிக இன்றியமையாததாகும்.

பூஜைகள் தடைப்பட்டால்:

மேலும் நமக்கு இவ்வுடம்பைத் தந்து, அதில் உட்கருவி களையும் தந்து, உலவுதற்கு உலகினையும் ஈந்து, நாம் திருந்தி இன்பத்துன்பங்களையும் கொடுத்து நம்மைக் காப்பாற்றுகின்ற வன் இறைவன். அவ்விறைவனின் திருக்கோயில்களில் விளக்குப் போடக்கூட எண்ணெய் இல்லாமலிருப்பதும் அத்திருக் கோயிலில் தொடங்கிய திருப்பணிகள் சரிவர முற்றுப் பெறாம லிருப்பதும் நமக்கே தீங்கு தருவனவாகும் என்று சிந்தித்தல் இப் போதைய இன்றியமையாத் தேவையாகும். திருக்கோயிலில் பூஜைகள் தடைப்படின் அதனால் நாட்டிற்கும் அரசிற்கும் தீங்கே விளையும் என்றும் திருமூலர் ஒரு பாடலில் குறித்தருளு கின்றார்.

> "முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
> மன்னர்க்குத் தீங்குள; வாரி வளங்குன்றும்;
> கன்னங் களவு மிகுத்திடும் காணினி:
> என்னரு நந்தி எடுத்துரைத் தானே"

என்பது அப்பாடல். இன்று நாட்டில் மழைவளம் குன்றியிருப் பதற்கும் நீதி, நேர்மை அழிவதற்கும், களவும் பொய்யும் மிகுவதற்கும் இவற்றால் மக்கள் அனைவரும் சொல்லொணாத் துயரங்களை அனுபவிப்பதற்கும் காரணம் திருக்கோயிலில் சரிவரப் பூஜைகள் நடைபெற இயலாமல் இருப்பதே ஆகும். அதற்குக் காரணமாக உள்ள நிலக் குத்தகைதாரர்கள் மனைப் பகுதி வாடகைதாரர்கள், கடை கட்டிட வாடகைதாரர்கள் அரசு சட்டம் எப்படியிருந்தபோதிலும் தன்னை வாழ வைக்கும் இறைவன் திருக்கோயிலுக்குக் கொடுக்க வேண்டிய உரிய பொருளை — பகுதியை — வாடகையை நியாயமாகக் கொடுக்க வேண்டும். கொடுக்காமல் ஏமாற்றத் தலைப் பட்டால் அடுத்த அடுத்த ஆண்டுகளில் இது கூட நமக்கு இல்லாமல் போய்விடும். இந்த உணர்விலாவது பயமும் பக்தியும் கொண்டு அளக்கவும் கொடுக்கவும் முன் வருதல் அவசியம்.

வாழ்த்து :

அங்ஙனம் செய்யின் அவர்கள் வழிபடும் திருக்கோயில் களிலும் பூஜைகள் சரிவர நடைபெறும். அதனால் நாடும், நீர் வளம், நில வளத்தில் மேலோங்கி இன்னும் பலன்களை நிறைவாகத் தரும் என்பதில் ஐயமில்லை. எனவே நின்று போன இத்திருக்கோயிலின் திருப்பணி சரிவர நடைபெற மக்களின் மன நிலையில் மாறுதல் அவசியம். அதற்கு இங்குள்ள அன்பர்கள் பரம்பொருளாம் பழமலைநாதரைப் பிரார்த்தித்து அம்மாறுதல் விரைவில் நிகழ வேண்டிக் கொள் வார்களாக ! நாளும் எல்லோரும் பிரார்த்தனை புரிவோமாக! இப்புண்ணியப் பணியில் ஈடுபட்டுச் செயலாற்றிவரும் திருமுதுகுன்றம் இறைபணி மன்றத்தாரின் செயல் பாராட்டு தற்குரியது.

வாழ்க நல்லவர்கள்

வளர்க நல்லறங்கள்.

62

திருக்கோயில்களின் ஆற்றல்*

" கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழல் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே "

அப்பர்

[இறைவன் கடவுள் முதலிய சொற்களின் உள்ளார்ந்த பொருள்களை விளக்கியருளி, திருக்கோயில்களின் ஆற்றல்களையும் பல்வேறு கோணங்களில் விரிந்துரைத்து அருளிச் செய்துள்ளார்கள்.]

எங்கும் நிறைந்த இறைவன்;

கனியில் சுவையாய் இருப்பவனும், கற்கண்டில் இனிப்பாய் இருப்பவனும், பாவை நல்லாரிடத்தே இன்பாய்த் திகழ்பவனும், ஆட்சிபுரியும் அரசில் இனிதாய்த் திகழ்பவனும் இறைவனே ஆவான். இக்கருத்தை உணரவேண்டுமானால் மனித இனம் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும் எல்லா இடத்திலும் இறைவன் இருக்கின்றான். இதனையே தாயுமானவர்.

" அங்கிங் கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி"

என்று குறிப்பிடுகிறார்.

---

* திருநெல்லிக்கா, அருள்மிகு நெல்லிவனநாதர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவை ஒட்டி 30—3—83 அன்று எழுத்தருளிய குருமணிகள் அன்பர்களிடையே அருளிச் செய்தது.

''ஒன்று நீ யல்லை; உனையன்றி ஒரு பொருளுமில்லை'' என்று மாணிக்கவாசகரும் குறித்தின்றார்.

'கரந்து எங்கும் பரந்துளன்' என்பது நம்மாழ்வார் பாசுரம். உண்ணும் சோற்றில் உணவு ஆகவும், பருகும் நீரில் சுவையமுதாகவும். தின்னும் வெற்றிலையில் ஜீரண சக்தி யாகவும், இவை எல்லாமாகவும் திகழ்பவன் அவன் என்பதை.

''உண்ணும்சோறு பருகும்நீர் தின்னும் வெற்றிலை யும்எல்லாம்
கண்ணன்எம் பெருமான் என்றென்றே கண்கள் நீர்மல்கி
மண்ணினுள் அவன்சீர் வளம்மிக்கவன் ஊர்வினவித்
திண்ணம்என் இளமான் புகுமூர்திருக் கோளூரே''

என்ற ஏழாவது திருவாய்மொழியின் முதல் பாசுரத்தில் நம்மாழ்வார் குறிப்பிடுகின்றார்.

இவற்றையெல்லாம் உள்ளடக்கியே நம்மால் வணங்கப் பெறும் பரம்பொருளை நம்முன்னோர் 'இறைவன்' என்று குறித்தனர். இறை என்றசொல் செறிவு, நிறைவு எனப் பொருள்படும். அப்படி எங்கும் நிறைந்திருக்கின்ற பொருள் சராசரி மனிதனுக்குப் புலப்படாது; சான்றோனாய்த் திகழ் பவனுக்குப்புலப்படும் மேலும் 'கடவுள்' என்ற சொல்லாட்சி கடந்தும் நிறைந்தும் அமைந்திருக்கின்றது என்பதைப் புலப் படுத்தும் கட + உள் = கடவுள். கட என்ற சொல் கடந்தது என்பதையும், உள் என்ற சொல் உள்ளத்தே உள்ளது என்பதையும் உணர்த்தும்.

கடந்தவன் கடவுள்:

மனிதன் படுகின்ற துன்ப இன்பங்களையெல்லாம் கடந்தவன் கடவுள் என்பதைக் கட என்ற பகுதிச்சொல் நமக்கு உணர்த்துகின்றது. இதனை,

'துன்பமொடு இன்பம தெல்லாம் கடந்தவர்
காதலில் வாழும் கற்குடி மாமலை யாரே''

என்ற திருக்கற்குடிப் பதிகத்தில் ஞானசம்பந்தர் அருளிச் செய் கின்றார். கடந்து நின்றமையால் நாட்டுக்கு யாது பயன் என்று கேட்பார்க்கு விடையாக நம் உள்ளத்துளே இருக்கிறார் கடவுள், என்பதை உள் என்ற விகுதி விளக்குகிறது.

உள்ளத்தில் உள்ளான்:

அறியாமையாலும் அழுக்கினாலும் சராசரி மனிதன் இறைவனை அறியாமல் இருக்கிறான்; இறைவன் நம்முள் மறைந்திருக்கின்றான். இதனாலேயே ஞானசம்பந்தர் இறைவனைக் 'கள்வன்' என்று குறிக்கிறார்.

"உள்குவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந்து அறிதி"
என்று அப்பரும் இக்கருத்தை வெளியிடுகிறார்.

அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும் தொழும்பர் உளக்கோயிலில் வீற்றிருப்பான் இறைவன். எல்லாருடைய உள்ளத்திலும் வீற்றிருந்து அருளுகிறான் இறைவன் என்றாலும் ஞானியரின் தூய உள்ளத்தில் இருப்பதை விளக்கமாகக் காணலாம்.

"தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"
என்பதும்

"நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"
என்பதும் அப்பர் சுவாமிகள் அருள்வாக்கு.

மேலும் கடவுளைத் தமிழ்ச் சான்றோர் 'இயவுள்' என்றும் போற்றியுளளனர். இயவ என்றால் வழி வழியாகவும் வழி நடத்துவோனாகவும் இருப்பவன் இறைவன் என்பதை இச்சொல் நமக்கு உணர்த்துகிறது. "பெரும் பெயர் இயவுள்" என்பது திருமுருகாற்றுப்படை. எனவே எங்கும் நிறைந்தவன் இறைவன் என்றும், ஒரு வகையில் கடந்தும் ஒரு வகையில் உள்ளத்தில் மறைந்தும் இருப்பவன் கடவுள் என்றும், இயங்கியும் இயக்கியும் வருவோன் இயவுள் என்றும் அறிந்தும் அனுபவித்தும் வந்தவர்கள் நம் முன்னோர்கள்.

உயிரை வளர்ப்பனவே திருக்கோயில்கள்:

வான மண்டலத்தில் மின்சாரம் பரவி நிற்கிறது. அந்த மின் ஆற்றலை மனித வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ள மின்சார நிலையங்கள் தேவைப்படுகின்றன.

பூமிக்கு அடியில் நீர் நிரம்பிப் பரவிக் கிடக்கின்றது. அந்த நீரைப் பயன்படுத்தி நம் அனுபவத்திற்கு கொண்டுவர வேண்டுமானால் கிணறு தோண்டிப் பயன்படுத்துகிறோம்;

தற்காலத்தில் குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் மூலம் தண்ணீரை அனுபவத்திற்குக் கொணர் கிறோம்.

அடுத்து உயிர்ச் சத்துள்ள பால் தேவை என்றால் அதற்குப் பசுவை வளர்த்து அதன் மடியிலிருந்து பால் பெறு கிறோம் பசுவின் உடல் முழுவதும் பால் சத்து இருப்பினும் மடி வழியாகத்தான் பெற முடிகிறது.

இவற்றுக்கெல்லாம் நம் முயற்சியும், உழைப்பும், பொருட் செலவும், காலமும் எவ்வளவு தேவை என்பதை நம்மில் பலர் அறிவோம். இதே போலத்தான் கடவுளை, அறிந்து அனுப விக்க வேண்டுமென்றால் முயற்சி, பொருட்செலவு, உழைப்பு காலம் என்பன மிகமிகத் தேவை. அவற்றுள் எந்த வழியிலே நாம் ஈடுபடுகிறோம் என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

நீர், பால், மின்சாரம் இவற்றால் எல்லாம் நாம் பெறுவது உடல் வளர்ச்சியே; உடல் வளர்ச்சி உயிரை வளர்ப்பதற்காகவே என்பதை நம்மில் பலர் உணர்வதில்லை. வீடு எதற்காகக் கட்டுகிறோம் என்றால் நாம் வாழ்வதற்காக என்று புரிந்துகொள்கிறோம். வீட்டுக்காக மனிதன் இல்லை, மனிதனுக்காக வீடு. இவ்வாறு பல உதாரணங்கள் தரலாம். உயிர் வளர்ச்சிக்காகவே என்பதைத் திருமூலர்,

> "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
> திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
> உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
> உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்று விளக்குகிறார்.

உடலுக்காக உயிர் இல்லை; உயிருக்காகவே உடல் என்பதை ஏனோ புரிந்துகொள்ளாமலே வாழ்ந்து வரு கின்றோம். உயிரை வளர்க்க எழுந்தவையே திருக் கோயில்கள்.

திருக்கோயில்களின் ஆற்றல்:

ஆன்மீக ஆற்றலை உயிர்களிடத்தே வளர்த்து இறை யுணர்வை – ஆன்ம அனுபவத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக அமைந்தவை கோயில்கள். மின் ஆற்றலைப் பெறவும் பெருக்கவும் மின் நிலையங்கள் அமைந்துள்ளன; நீரினைப்

பெறக் கின்று முதலியன உதவுகின்றன. ஆன்மீக ஆற்றலைப் பெறத் திருக்கோயில்கள் அமைந்துள்ளன. திருக்கோயில்கள் மனிதனிடத்தே தெய்வ சக்தியைப் பெருக்கி வாழ்வாங்கு வாழ வழி வகுக்கின்றன.

மின் நிலையத்தில் அதிகாரிகள், அலுவலர்கள், தொழிலாளர்கள் இடைவிடாது பணியாற்றுவது போல, தருமகர்த்தாக்கள், அருச்சகர்கள், அலுவலர்கள் திருக்கோயில் பணிகளை ஒழுங்காகச் செய்தால், தெய்வீக, ஆன்மீக நெறி பரவி எல்லோரும் எவ்வுயிரும் இன்புற்றிருக்கப் பெருந்துணை புரிவதாகும்.

மின் நிலையம் போன்றவற்றில் சேவை தடைப் படுமானால் உடனடியாகப் பலன் தெரிந்துவிடும். திருக்கோயில்களில் பணி தடைப்படுமானால் நாளடைவில் தான் காலப்போக்கில் தான் தெரியும் மின் ஆற்றல் போன்றவை அறிவற்ற ஆற்றல்; ஜட சக்தி. திருக்கோயில்களில் இறை ஆற்றல் முற்றறிவுடையது. எனவே, நன்மை வருவதும் தீமை வருவதும் நம்முடைய தரமறிந்து இறைவன் காலப் போக்கில் கொடுப்பான்.

பயன்களைப் பெறுவோம்:

திருக்கோயில்களின் ஆற்றல் கண்ணுக்குப் புலனாவதில்லை என்பதால் அலட்சியம் செய்துவிடக் கூடாது. உலகியல் பொருள்கள் நேர்முகப் பலன் தரும். இறையியல் மறைமுகப் பயன் தருவது.

தாவரம் – நேர்முக மறைமுகப் பலன் தருவதுண்டு. நேர் முகப் பலனைத் தருவதை அனைவரும் அறிவர்; மறைமுகப் பலன் சிலருக்கே தெரியும். ஒரு மரம் காய், கனி, தளிர், இலை முதலிய பயன்களைத் தருகிறது: பெருமரங்கள் கட்டில்கால் முதலியனவற்றைத் தருகிறது மரம் தரும் பலனாக இவற்றை மட்டும் கருதினால் போதுமா? இவைகள் காட்சிக்குத் தெரிவன. கண்ணுக்குத் தெரியாத சில பயன் களும் உண்டு. ஒரு மனிதன் அன்றாடம் சுவாசிக்கும் பிராண வாயுவுக்கு மரமல்லவா உதவுகிறது! ஒரு மனிதன் சுவாசிக்கத் தேவையான பிராண வாயுவைத்தர 6 மரங்கள் தேவை என அறிஞர் குறிப்பிட்டுள்ளனர். மரங்கள்

அல்லனவற்றை ஏற்று நமக்கு நன்மை செய்கின்றன. அவை, நாம் விடும் கரிமலவாயுவை உட்கொள்கின்றன. பிராணவாயு வாகிய நல்லகாற்றை நமக்குச் சுவாசிக்கத்தருகின்றன. மறை முகப்பயன். ஆற்றங்கரையின் ஓரத்தில் இருக்கிற மரங்கள் தண்ணீர் ஆவி ஆகாதவாறு தடுத்து உதவுகின்றன. 'ஒலியைக் கட்டுப்படுத்துவதும் மரம், செடி, கொடிகளே' என்று ஆய்வறிஞர் அறிவிக்கின்றனர். இப்படி மறைமுக, நேர்முகப் பலன்களை மரங்கள் தருகின்றன.

பெற்றோர் பிள்ளைகட்குச் செய்கின்ற நலன்களை, நன்மை களைப் பிள்ளைகளும் புரிந்து தொண்டாழல் இருக்கின்றனர். அதுபோல் கடவுளும் மறைமுகப் பலன்களையே நமக்குத் தருகிறார். நாமும் அவற்றை உணர்வதில்லை. எனவே, திருக்கோயில் வழிபாடு நம்முடைய அன்றாட வாழ்வியல் முன்னேற்றத்துக்கும் ஆன்மீக முன்னேற்றத்துக்கும் வாழ் வாங்கு வாழ்ந்து வளம் பெறுதற்கும் பெருந்துணைபுரிவன.

மாரி பொழியும் :

திருக்கோயில்களைச் சுண்ணம் பூசி, வண்ணம் தீட்டிப் பழுது பார்த்துப் புதுப்பித்தும் சிலர் வடிவங்கள், செப்புப் படிமங்கள் என்னும் இவற்றைச் செம்மையாகப் பாதுகாத்தும் நாள்தோறும் கோயில்களில் மக்கள் வசதிக்கு ஏற்ப 2 காலம் அல்லது 4 காலம் அலது 6 காலம் பூசைகளை இடைவிடாது நடத்தியும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அஷ்டபந்தன மருந்துசாத்தி, வேதாகம முறைப்படி குடமுழுக் கும் பூசைகளும் ஆற்றியும் வருவோமானால் மாதம் மும்மாரி பொழியும் என்பதில் ஐயமில்லை; மாதம் மும்மாரி இல்லை என்றாலும் ஒருமாரியேனும் பொழியும்; நாடும் வீடும் சிறக்கும் நலம் பெருக்கும்

இறைநெறிபோற்றி இன்பம்பெறுக.

63

ஒரு நெறிபற்றி உய்வோம்*

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லனஎல்லம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

—அபிராமிபட்டர்

[பல்வேறு மதங்களையும், அவற்றின் கோட்பாடுகளையும் முறையாக அறிந்து, பேதமின்றிப் போற்றும் பண்பில் திளைத்த குருமணிகள் கிறித்தவ மக்கள் விழாவில் பங்கேற்றுச் சமய ஒருமை பற்றி விதந்துரைத்த நற்சிந்தனைகள் இங்கே வழங்கப்பெற்றுள்ளன.]

சமயங்கள் பலவும் ஏன்?

ஏசுநாதர் பிறந்த நாள் டிசம்பர் இருபத்தைந்து. அதனைச் சிறப்பாகக் கொண்டாடுகிற நீங்கள், அவ்ஏசுநாதரை ஈன்றெடுத்த அன்னை மரியாளுக்கு உகந்த மாதங்களாகிய ஏப்ரல், மே ஆகிய இரு திங்களிலும் விழா எடுத்துச் சிறப்பிப்பது பாராட்டுதற்குரியது.

மக்களைத் தக்க நெறியில் செலுத்தி உய்விப்பதற்கே சமயங்கள் தோன்றின. மயிலாடுதுறை செல்வதற்குப் பல வழிகள் இருத்தல் போல இறைவனை அடைவதற்குச் சமயங்களும் பலவாக உள்ளன. அவரவர் விரும்பும் வழியில் சென்று

---

*பட்டவிளாகம், தூயநற்பயண அன்னை ஆலயத் திருவிழாவில் 27—4—83 அன்று வழங்கியருளியது.

மயிலாடுதுறையை அடைவது போல அவரவர் விரும்பும் சமய நெறியில் சென்று பரம்பொருளை அடைவதில் குறைவில்லை. இங்ஙனம் இந்நாட்டில் தோன்றிய சைவம், வைணவம், பௌத்தம், சமணம் போன்ற சமயங்களும் பிற நாட்டில் தோன்றிய கிறித்துவம், இசுலாம் போன்ற சமயங்களும் முழு முதற்பொருளாகிய பரம்பொருளை அடைவதற்குரிய நெறிகளையே படிமுறையால் விளக்குகின்றன மக்கள் அனைவரும் தம் விருப்பத்திற்கும் தகுதிக்கும் ஏற்ப ஒரு நெறியினைப் பின்பற்றி உய்திபெறுதல் தக்கதாகும்.

எதனையும் கேட்கும் இறைவன்:

எல்லாச் சமயங்களும் இறைவன் எங்கும் உள்ளான் என்பதனைக் கூறுகின்றன. இக்கருத்திற்குப் பல எடுத்துக் காட்டுக்கள் கூறலாம். எனினும் இன்று கிறித்துவ சமயத்தைச் சார்ந்த ஓர் விஞ்ஞானியின் வரலாற்று நிகழ்ச்சியினை இங்குச் சிந்திப்பது பொருத்தமாக இருக்கும்.

மார்க்கோனி என்ற அறிவியல் புலவன் சிறுவனாய் இருந்த பொழுது தன் தந்தையோடு மாதா கோயிலுக்குச் செல்வது வழக்கம். அக்கோயிலில் தந்தையார் வழிபடும் பொழுது, 'பரமண்டலத்திலிருக்கும் பிதாவே!' என்று கூறுவதைக் கேட்டான் கேட்ட சிறுவன் இக்குரல் பரமண்டலத்திலிருக்கும் பிதாவின் திருச்செவியில் விழுமா? என்று ஐயுற்றான். அம் மார்க்கோனி வளர்ந்த நிலையில் கம்பியில்லாமல் ஒலியைக்கேட்கும் வானொலியினைக் கண்டுபிடித்தார். அவ்வமயம் பலரும் வந்து அவரைப்பேட்டி கண்டனர். அப்பொழுது அவர்கள், இக் கருவியைக் கண்டு பிடித்ததனால் நீங்கள் உலகிற்கு அளிக்கும் செய்தி என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அவர் தொலை தூரத்திலிருந்து எழுப்பப்பெறும் ஒலி எங்கோ இருக்கும் வானொலிப்பெட்டியில் கேட்க முடியும் எனும் இதனால் என்சிறு வயதில் ஏற்பட்ட ஐயம் ஒன்று நீங்கியது என்றார். என் தந்தையார் பரமண்டலத்திலிருக்கும் பிதாவே! என்று அழைக்கும் ஒலி உறுதியாகப் பிதாவின் திருச்செவியில் விழுந்து என்பதை இக்கருவியைக் கண்டு பிடித்ததன் மூலமாக அறிந்து கொண்டேன் என்றார். இங்ஙனம் நாம் பேசும் ஒலி இறைவனின் காதில் விழும் என்ற உணர்வு எல்லோருக்கும்

இருக்குமானால் தவறுகள் நிகழா. ஆசிரியர் பாடசாலையில் இருக்கின்றார். நாம் பேசும் பேச்சு அவர் காதில் விழுந்து விடும் எனும் அச்ச உணர்வே மாணவர்களை நல்லவர்களாக உருவாக்குதல்போல மக்கள் நல்லவர்களாக வாழ இக்கடவுளுணர்வு உதவும்.

இன்றுபலர் தாம்பேசும் பேச்சுக்கள் யார் காதிலும் விழாது என்ற மனநிலையில் நினைத்ததை எல்லாம் பேசுகிறார்கள். இவர்கள் இந்நிகழ்ச்சியினை அறிந்து, உணர்ந்து தம்மை நல்வழியில் மாற்றிக்கொள்ள முற்படுவார்களாக!

எதனையும் பார்க்கும் இறைவன்:

இறைவன் நாம்செய்யும் எல்லாச் செயல்களையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பதனையும் எல்லாச் சமயங்களும் விளக்குகின்றன. பையன் எங்கிருந்தாலும் பெற்றோர் அவனைக் கண்காணிப்பது போன்று இறைவனும் நம் செயல் களைக்கண்டு கொண்டே இருக்கின்றார். இக்கருத்திற்கு இஸ்லாமிய சமயத்திலிருந்து ஒரு நிகழ்ச்சியினைச் சான்றாகக் காணலாம்.

ஓர் அரசன் தன் அரண்மனையின் மேல்மாடத்தில் இருந்த பொழுது ஒரு அழகிய இளமங்கை அவ்விடத்தைத் துப்பரவு செய்துகொண்டிருந்தாள். அவ்வரசன் அவளுடைய அழகில் மயங்கி அவளை அடைய எண்ணினான். அவளை அழைத்து எல்லாக் கதவுகளையும் மூடும்படிக்கூறினான். அவள் அரசனின் உள்ளக் கருத்தை உணர்ந்து கொண்டாள். அவளுக்கு மனம் இல்லையாயினும் அரசன் கூறுவதைத் தட்டமுடியாத நிலையில் வேறு வழியின்றி எல்லாக் கதவுகளையும் மூடிவிட்டு வந்தாள். அரசன் அவளைப் பார்த்து, "எல்லாக் கதவுகளையும் மூடி விட்டாயா?" என்று கேட்டான். அவள், "எல்லாக் கதவுகளை யும் மூடிவிட்டேன்; இரண்டு கதவுகளை மட்டும் என்னால் மூட இயலவில்லை" என்றாள். வியப்புற்ற அரசன் "ஏன்?" என்றான். "அரசே! அக்கதவுகள் இறைவனின் கண்கள்" என்றாள். உடனே அரசன் நல்லுணர்வு பெற்று அவளையே குருவாகக் கொண்டான்.

எனவே இறைவன் நாம் செய்யும் அனைத்துச் செயல்களை யும் தவறாது பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பதை

உணர்தல் அவசியமாகும். யார் கேட்டால் என்ன ? என்றோ யார் கண்டால் என்ன ? என்றோ மக்கள் இறுமாப்பாக நடந்துகொள்வது என்றும் துன்பங்களையே விளைவிக்கும். என்பதை உணர்ந்து அனைவரும் நல்லவர்களாக வாழ முற்படுவார்களாக !.

முருகன் பார்க்கிறார், கேட்கிறார், செய்கிறார்:

இறைவன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருக் கின்றார் என்பதும், எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக் கின்றார் என்பதும் சைவசமயநெறியிலும் விளக்கப்படுவதோடு எல்லாச் செயல்களும் செயற்படவும், தடைப்படவும் செய் கிறார் என்பதும் விளக்கப்படுகின்றன. முருகப்பெருமான் திருவுருவநிலையில் ஆறு முகங்கள் கொண்டிருக்கின்றார். நான்கு திசைகளையும் கீழ் மேல் திசைகளையும் அவர் பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்பதை ஆறுமுகங்களும் உணர்த்து கின்றன. அப்பெருமானின் திருச்செவிகள் பன்னிரண்டும் நாம் பேசும் பேச்சுக்களை எல்லாத்திசைகளிலும் கேட்டுக்கொண்டே யிருக்கின்றன. மேலும் அப்பெருமானின் திருக்கைகள் பன்னிரண்டும் அன்பர்களின் செயல்களுக்கேற்ப வாழ்வும் தாழ்வும் வழங்குகின்றன என்பது கொண்டு இக்கருத்தை நன்கு தெளியலாம்.

தவிர்த்து வாழுங்கள்:

இயேசுநாதர் நெறியினைப் பின்பற்றும் அன்பர்களே நீங்கள் நல்ல முறையில் வாழவேண்டுமானால் களவு, பொய், அதிகாமம், கள்ளுண்டல் ஆகிய தீய பழக்கங்களைத் தவிர்த்து வாழுங்கள், குடிப்பழக்கம் குடியைக் கெடுக்கும். அக்குடிப் பழக்கம் ஏதோ தீவினையின்காரணமாக மீண்டும் வந்துள்ளது. ஆனால்மனிதன், தானே கட்டுப்படுத்தித் திருந்த வேண்டுமே யல்லாது அரசு சட்டம் மூலமாக மக்களைத் திருத்துதல் என்பது இயலாது. எனவே நீங்கள், வாரத்தில் சில புனிதமான நாட்களி லாவது, இது போன்ற விழாக்கள் எடுக்கும் காலங்களிலாவது இப்பழக்கங்களைத் தவிர்த்து வாழுங்கள்.

குடிமக்கள் செழிக்க:

இங்கு முன்னே அமர்ந்துள்ள நம் குடிமக்கள் பற்றியும் சில செய்திகளைக் கூறுதல் அவசியம். நாம் ஆதினத்தின் அருளாட்சி யினை ஏற்கும் காலத்தில் குடிமக்களைப் பார்த்து இது வரை

யுள்ள குத்தகைப் பாக்கிகளைத் தராவிடினும் இனிமேல் வரும் குத்தகையினையாவது தவறாது அளந்து ஒத்து உழைக்குமாறு கோரினோம். ஆனால் குடிமக்கள் இதனைச் சரியாக ஏற்க வில்லை. இங்கு இயேசுநாதர் கூறியது ஒன்று நினைவுக்கு வருகிறது. தான் விதைத்த விதைகளில் சில மேடுகளிலும், சில கருங்கற்பாறைகளிலும், சில களர் நிலத்தும், சில நன்னிலத்தும் வீழ்ந்தன. மேடுகளில் வீழ்ந்தவை நீரின்றி முளைக்கவில்லை; கருங்கற்பாறைகளில் வீழ்ந்தவை வெப்பத்தால் கருகின; களர்; நிலத்தில் வீழ்ந்தலை உப்பின் கரியால் முளைக்காது போயின நன்னிலத்து வீழ்ந்தவை சிலவே முளைத்துப் பயன் தந்தன என்று இயேசுநாதர் கூறியதுபோல நாம் கூறிய அறிவித்துக்கள் சில இடங்களிலேதான் பலன்தந்து வருகின்றன. இங்கு ஒரளவே பயன்தருகின்றன. இன்று இங்குக் கூடியுள்ள மக்கள் ஆர்வத்தோடும் பக்தியோடும் வரவேற்று ஆசியுரையினைக் கேட்கக் குழுமியுள்ளமை மகிழ்ச்சியைத் தருகிறது.

இங்கு ஆதீனத்துக்குச் சொந்தமாக இப்பட்டவிளாகத்தைச் சூழ்ந்து எழுநூற்றுஇருபது ஏக்கர் நிலம்உள்ளது இப்பகுதியில் சுமார் ஈராயிரம் குடிமக்கள் இருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் இந்நிலத்தினை நம்பியுள்ளீர்கள். பாசன வசதி குறைவாயினும் இந்நிலத்தில் கடுமையாக உழைத்தால் மிகுந்த பயனைப் பெறலாம். பயனில் ஒரு பகுதியை ஆதீனத்திற்குக் கொடுங்கள். அரசு எப்படியிருப்பினும் மக்கள் யோக்கியர் களாக இருத்தல் அவசியம். அப்போது மழைபொழியும் வளம் பெருகும்; வழிவழியாய் உங்கள் குடிசெழித்து வளரும்.

ஜப்பானைக் காணுங்கள்:

உழைப்பு என்று கூறினால் ஜப்பானைத்தான் உதாரணம் கூறலாம். கீழை நாடுகளில் நூற்றுக்கு மேற்பட்ட சிறுசிறு தீவுகளால் ஆனது ஜப்பான்; வளமற்றது; அமெரிக்காின் அணு குண்டுகளால் பாலைவனமாக்கப்பட்டது; அங்கு வாழும் மக்களின் பெரும் உழைப்பினால் அது இன்று சோலைவனம் ஆக்கப்பட்டுள்ளது. அங்கு வாழும் மக்கள் வேலை நிறுத்தம் செய்தால் உற்பத்திக்குப் பங்கம் வராதவாறு செய்கின்றனர். 8 மணிக்குத் தொழிற்சாலை ஆரம்பம் என்றால் 7 - 45 க்குச் சென்று சரியாக 8 அடிக்கும் பொழுது தொழிலை ஆரம்பிக்கும்

பழக்கத்தை மேற்கொண்டுள்ளார்கள். அதனால், அவர்கள் அமெரிக்காவினையும் விஞ்சும் அளவிற்குப் பொருளாதார வளத்தைப் பெற்றுத் திகழ்கிறார்கள். ஆனால் சுதந்திரம் பெற்று முப்பத்தைந்து ஆண்டுகட்கு மேலாகியும் நம்மக்கள் உழைப்பின் உயர்வை உணரவில்லை. அரசும் இவ்வழியில் மக்களை நடத்திச் செல்லவில்லை. உழுதுண்போர்க்கும் உழுவித்துண்போர்க்கும், முதலாளிகட்கும், தொழிலாளிகட்கும், வியாபாரிகட்கும் நுகர்வோர்கட்கும் உறவினை பாதிக்குமாறு சட்டம் இயற்றி ஆட்சி செய்தனரே அன்றி ஆக்கபூர்வமான செயல்களில் மக்களை ஈடுபடுத்தவில்லை.

பாலைவனமாக ஒப்படைக்கப்பட்ட ஜப்பான் நாட்டை, அந்நாட்டு மக்கள் தம் கடும் உழைப்பினால் இன்று சோலை வனமாக்கியுள்ளனர். கத்தியின்றி இரத்தமின்றிச் சுதந்திரம் பெறற நிலையில் சோலைவனமாக ஒப்படைக்கப்பட்ட இந்தியாவை நாம் பாலைவனமாக்கிக் கொண்டிருக்கிறோம். இது சரிதானா என்று சிந்தித்துப் பாருங்கள்.

சமத்துவம், சுதந்திரம்:

இன்று பலரும் சமத்துவம், சுதந்திரம் எனும் சொற்களை அடிக்கடிப் பேசி வருகின்றனர். சமத்துவம் உள்ள நாட்டில் சுதந்திரம் இல்லை. சுதந்திரம் உள்ள நாட்டில் சமத்துவம் இல்லை. சமத்துவம் பேசும் நாடு சுதந்திரத்தைப் பறிக்கிறது. எடுத்துக்காட்டாகச் சீனா, ரஷ்யாவைப் பாருங்கள். சுதந்திரம் பேசும் நாட்டில் சமத்துவம் உண்டாவதில்லை. இந்தியா போன்றவற்றைக் காணுங்கள். சமத்துவம், சுதந்திரம் இவ்விரண்டுமே ஜப்பானில் உண்டு. காரணம் அங்கே உழைப்பும் உண்டு; உரிமையும் உண்டு; தாமரை மலரின் உயர்வு அப்பொய்கையின் வெள்ளமட்டத்திற்கு ஏற்ப உயர்வது போல மக்களின் உழைப்பிற்கு ஏற்ப நாடு உயரும். வள்ளுவரும் "வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனைய துபர்வு" என்றார். இதனை நன்கு உணர்ந்து நன்றாக உழைத்துத் தமக்கு உரிய பங்கை எடுத்துக் கொண்டு பிறருக்கு உரிய பங்கைக் கொடுத்து வாழ அனைவரும் முற்படுவார்களாக!

வாழ்த்து:

ஆதீனத்துக்குச் சொந்தமான குடிமக்களில் கிறித்துவர், இசுலாமியர், இந்துமதத்தினர் ஆகியோர் இருக்கின்றனர். அவர்கள் யாவரையும் ஒரு படித்தாக ஆதீனம் கருதுகிறதே தவிர யாரையும் புறக்கணிப்பதில்லை. அவர்கள் அனைவரும் கடமையை மறந்து உரிமையைப் பெற முற்படாமல், தம் கடமையைச் செய்து உரிமையைப் பெற்று வாழ்வார்களாக!

குடிமக்கள் அனைவரும் வளம் பல பெற்று ஆதீனத்திற்கும் அறநிலையங்களுக்கும் தரவேண்டிய குறைந்த குத்தகையைத் தந்து நலமுடன் வாழ எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

கடமையும் உரிமையும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள்! மறவாதீர்!



உ

குருபாதம்

திருவருட் செய்தி

(மூன்றாம் பகுதி)

அருஞ்சொற் பொருளகராதி

அடிமை 167
அடியவர் அடையாளம் 134
அட்டமூர்த்தங்கள் 29
அந்தணன் 217
அந்திக்காப்பு 96
அப்பர் கூறும் அரியவழி 175
அம்மையப்பர் 46
அவவேடம் 231
அறவாழி 217
அறிவுநெறி 139
அன்பு பலவகையானது 138-9
ஆலையைப் போல் ஆலயம் 198-9
ஆறுமுகனாய் அமைந்த கல்லூரி 178-9
இந்து 260-2
இயற்கை என்பது எது? (இறைவன்) 92
இருவகை ஞானங்கள் 292
உடைமை 167
உபாசனை 318
உயிரியல்பு 240
உயிர் வளர்ச்சிக் குரிய ஒழுக்கங்கள் 314-5
உரிமையும் கடமையும் 253
எண் குணத்தான் 223-4
எறும்பு தின்றால் கண் தெரியும் பழமொழி விளக்கம் 307
ஏயர்கோன்கலிக்காமர் வரலாறு தரும் விடை 66
ஐந்தொழில்கள் ஏன் 199-200
கடவுள்-கடந்தவன் 355-6
கந்தபுராணம் கூறும் கருத்துக்கள் 123
கந்தபுராணம் படிப்பதன் பயன் 122
கருங்குயில்நாதன்பேட்டை 52-3
கல்வியின் பயன் 16
கற்பு 68-9
கற்பினைக்காட்டுவது கண் 304
கிரகங்களும் அடியார்களும் 126-7
கிருஷ்ணாவதாரம் 246-7
கிழமை 126
குத்தங்குடி-பொருளாய்வு 112
குரு 291
குருவழிபாடு 36

தேளுங்கள் கொடுக்கப் படும் 132-3
கையில் காட்டிய பொய்யில் பொருள் (சின்முத்திரை) 181-2
சமணத்தின் தோற்றம் 285
சமயப்பிரிவு 204
சமயம் 25
சமயம் என்பதே சைவம் 26
சமரசம் என்பதன் உண்மைப் பொருள் 6-7
சனீஸ்வரன் - சனைஸ்சரன் 128
சாட்சி 305
சாதகன் யார்? 55
சாதனங்கள் 55
சாதி பிறந்த கதை 236
சாப்பாட்டுராமன் - பழமொழி விளக்கம் 83-4
சாம்பான் 335-6
சாயாக்கிரகங்கள் 125
சிவவழிபாட்டில் திருமால் வழிபாடும் ஓர் அங்கம் 276
சூரர்குரு யார்? 183
சேரநாடு வேழம்உடைத்து 152
சைவத்தின் தென்மை 284
சைவமே முதற்சமயம் 167
சைவரின் கடமை 312-3
சோதனையால் பெற்ற சாதனை 256-7
சோமாஸ்கந்த வடிவம் 31
சோழநாடு சோறுடைத்து 151
சோறு 151
தட்சம் யாகம் தருகின்ற பாடம் 121
தர்க்கம் 16
தலமரம் 73
தலைபெற்றதின் பயன் 221-2
தற்செயல் 167
தனிஒருவன்-இறைவனே 205-6
தாயுமானவர் கூறும் ஜீவகாருண்யம் 12
திருக்கூட்டம் 239
திருவடி 213
தில்லையின் பெருமை 134
தென்முகக்கடவுள் தத்துவம் 180
தேவர் 98
தொண்டைநாடு சான்றோருடைத்து 152
நகரம் 296-7
நலராத்திரி 317
நற்பொருளைக் கேட்போரின் தகுதி 142
நன்றி - நன்மை 120
நால்வகைப் பேறுகள் 271
நெறி 201
படையாட்சி 98
பண்ணும் பாடலும் 248-9
பண்டாரம் 294
பலகாரம் 84
பற்றிருத்தால் பற்றுவிடும் 168
பாயிரம் 209
பிச்சை எடுக்கவா பிறந்தோம் 206
பிரணவத்தின் தோற்றம் 60-1
பிரணவப் பொருள் 59-60
பிரணவம்-மறுபெயர்கள் 61
பெண்ணொரு பாகனும் பெண்ணொரு பாகமும் 249
மக்கள் சேவையே மகேசன் சேவை 50
மகா சந்நிதானம் 294
மகேசன் சேவையே மக்கள் சேவை 51
மடவிளாகம் 98
மண் சுமந்து கூலி கொண்ட மாண்பு-தத்துவவிளக்கம் 252
மதம் 202
மறம் 94
மற்கட நியாயம் 143
மனக்கவலைக்கு மருந்து 213-4

மனிதப் பிறவி 74
மனிதன் யார் ? 73
மாதிர வேளூர் 329
மாநாடுகளின் இன்றியமை யாமை 265
மாற்சால நியாயம் 143
முதல்வன் பற்றிய மூன்று செய்திகள் 210
முத்தும் முத்தியும் 151-2
முப்புரம் எரித்த மூர்த்தி 169
முப்பெரும் புராணங்களும் இறைவனின் மூன்று கண்களும் 117-8
முப்பெரும் புராணங்களின் நோக்கம் 119-20
மூலன் மறபில் வந்த மௌன குரு 2-3
மூவகை உயிர்கள் 37
வழிபாடு 193
வளாகம் 98
வாழும் இலக்கியம் 79-80
விஞ்ஞானம் உன்பது என்ன? 140
விநாயகர் தத்துவம் 244-6
விழாக்களின் இன்றியமை யாமை 154
வினை என்பதன் பொருள் 103-4
வேதத்தின் தோற்றம் 266-7
வேத வகுப்பு 268
வேளாளர் 310
வேளூரில்விளையும்தத்துவம் 299
வைப்புத்தலங்கள் 111

க

குறுபாதம்

மேற்கோள் செய்யுள், முதற்குறிப்பு அகராதி

செய்யுள் முதற்குறிப்பு	பக்க எண்.
அ	
அன்பு மிகவுண்டாய்	33, 142
அவரவர் வினைவம்	70,102,105
அரம்போலும்	74
அருமை உடைத்தென்று	79
அனைத்துயிர்க்கும்	105
அருவருப்பே மெத்தியிடும்	106
அவரவருக் குள்ளபடி	163
அன்ன சத்திரம்	179
அஞ்சொண் புலனும்	194
அறவாழி அந்தணன்	216
அரியவற்றுள் எல்லாம்	242
அறுவகைச் சமயத்தோர்க்கும்	281
அறம்பொருள் இன்பமான	342
அருளொடும் அன்பொடும்	342
அங்கிங் கெனாதபடி	354
ஆ	
ஆரூர் அமர்ந்த	30
ஆணவத்தோடு	90
ஆதி அந்தங்காட்டா	97
ஆனாயர் குழலோசை	100
ஆகூழால் தோன்றும்	147
ஆயிர முகத்தான்	208
ஆயிரத்து முந்நூற்று	209
ஆலம் உண்டான்	294
ஆலந்தான் உகந்து	302
ஆய்வார் பதிபசு	322
இ	
இனியே தெமக்குனருள்	23
இயல்பென்றும் திரியாமல்	27
இடையராறாப் பேரன்பும்	35
இல்லக விளக்கது	49
இன்னவினை இன்னதலத்து	70
இங்கிதன் நாமம்கூறின்	118
இன்பம் விழையான்	154, 321
இன்பம் விழையான் இடும்பை	154, 321
இறவா இறைவன்	227
இன்பமும் துன்பமும்	230, 280, 351
இலர் பலராகிய	333
ஈ	
ஈயறியாப் பசுந்தேனே	193
ஈதலறம் தீவினை	343

உ

உள்ளத்தால் பொய்யாது 19, 141
உள்ளபடி ஒன்றை 20
உள்ளம் அறியாதொருவர் 20
உனக்குப் பணிசெய்ய 41, 215
உஞ்சேனை மாகாளம் 63
உந்தி களிறொடு 142
உண்ணும் சோறு 355
உடம்பார் அழியின் 357

எ

எவ்வுயிருந் தம்உயிர்போல் 11, 12
எவ்வுயிரும் என்னுயிர்போல் 12 262
எவ்வுயிரும் நீங்காது 13
எல்லோரும் இன்புற்றிருக்க 14, 262
எல்லா உலகமும் 29
என்னை நினைந்தடிமை 39
என்னை ஏதும் 39, 89
என்னை நினைந்து 88
எல்லார் பிறப்பும் 39
எந்நன்றி கொன்றார்க்கும் 120, 193
என்றும் அடியவர் 150
எமக்கென் 291
என்றும் இன்பம் பெருகும் 346

ஏ

ஏவவும் செய்கலான் 132
ஏரின் சிவபோகம் 91

ஐ

ஐந்து பேரறிவும் 43

ஒ

ஒன்றே பொருளெனின் 26
ஒருகுடாய் உலகேழும் 58
ஒருமைக்கண் தான்கற்ற 104
ஒன்றறிவதுவே 306
ஒளிர்வளர் விளக்கே 328
ஒருபொருளும் காட்டாது 330
ஒன்றுபட்டால் 340
ஒழுக்கும் அன்பு 345

க

கற்க இடர்ப்பட்டு 15, 17, 320
கற்றதனால் ஆயபயன் 10
கற்றதும் கேட்டதும் 16
கற்று ஈண்டு 17
கற்றும் அறிவில்லாத 17
கல்லாத பேர்களே 18
கண்ணார நீர்மல்கி 21
கண்ணுதலும் கண்ட 37
கற்றாங் கெரியோம்பி 129
கவிவலம்கெட 132
கரவின்றி நன்மா 177, 194
கள்ளவினைப் பகுபோத 245
கண்டேன் இப்பாசம் 295
கருமணியைக் கனகத்தின் 347
கனியினும் கட்டி 354

கா

காதலாகிக் கசிந்து 267
காசும் உறவு 332

கு

குற்றம்நீ குணங்கள்நீ 46
குழைக்கலையும் வடிகாதில் 68
குனித்த புருவமும் 75
குகனொடும் ஐவர் 83
குத்தங்குடி வேதி 110
குருவே சிவமென 163
குலங்கொடுத்துக்
கோள்நீக்க 195, 335

கூ

கூடலாலவாய்க் கோனை 45
கூற்றாயின வாறு 255

கெ

கெடுங்காலம் வந்தால் 71

கை

கைகளும் தலைமீதேறக் 45

கொ

கொல்லாவிரதம் ஒன்று 12
கொல்லா விரதம் 12

கோ

கோளிற் பொறியிற் 221, 222

ச

சமயவாதிகள் 25
சன்மார்க்க ஞானமதன் 28
சத்சங்கத்தால் 241
சன்மார்க்க நெறியதனின் 288

சி

சித்திநெறி 1
சித்திரமும் கைப்பழக்கம் 56
சிவனடியே சிந்திக்கும்
162, 165, 293
சிந்தனை செய்ய 223
சிரமஞ் செய்து 341
சிறப்புடை மரபின் 343

சீ

சீரணியும் நுதலின் விழி
228, 290

சூ

சூழுதல் வேண்டும் 122

செ

செம்மலர் நோன்தாள் 56
செய்யநின் கமலபாதம் 309

சை

சைவம் முதலாம் 10
சைவசமயமே சமயங் 24, 25

ஞா

ஞானம் இவனொயழி 291

த

தராதரம் அறிந்து 7
தனக்குவமை இல்லாதான்
44, 130, 212, 213
தனந்தரும் கல்விதரும்
144, 319, 360
தன்னை அறியார் 166
தம்மையுணர்ந்து 166
தந்தைதாய் பெற்ற 187
தனியார் மதிசெஞ் 196
தனியயேன் பெரும்பிறவி 226
தன்னூன் பெருக்கற்கு 313

தா

தாயர் மகவருத்தம் 185
தாளாளன் என்பான் 311
தாளாற்றத்தந்த பொருள் 311

தி

திருக்கோயில் இல்லாத 76
திருஞான சம்பந்தர் 141

தீ

தீயாரைக் காண்பதுவும் 241

து

துந்துபியின் மிக்கசுக 280
துஞ்சாத புகழ்மதுரை 298
துன்பமொடு இன்பமதெல் லாம் 355

தெ

தெய்வத்தான் ஆகா 147
தெளிவு குருவின் 163, 240

தே

தேடிச் சென்று 143

தோ

தோன்றிற் புகழொடு 251

ந

நடமாடுங் கோயில் 50
நற்கொடிமேல் விடையுயர்த்த 112
நல்லாரைக் காண்பதும் 238, 240
நற்குஞ் சரக்கன்று 243
நலமிலன் நண்ணார்க்கு 259
நங்கடம்பனை 263

நா

நாடகத்தால் உன்அடியார் 20
நாடா கொன்றோ 73, 231, 350
நாள் என்செயும் 128
நான்மறையின் மெய்ப்பொருளை 212

நி

நிறைமறைக் காடுதன்னில் 52
நிலவரை நீள்புகழ் 78
நிச்சலும் ஈசன் 139
நிலைமை சொல்லு 171, 194
நிலத்தியல்பால் நீர்திரிந்து 239
நிதி மிகுந்தவர் 327

நீ

நீதியிலா மன்னர் 69
நீஇயற்ற ஒர்பொருளை 107, 279

நோ

நோய்நாடி நோய்முதல் 232, 233

ப

பஞ்சசுத்தி 9
பத்தியாய் நெடிது 22
பண்சுமந்த பாடற்பரிசு 102, 248
பற்றுகபற்றற்றான் 130, 168
பற்றிநின்ற பாவங்கள் 130
படர்ந்தாணம் முழங்க 247
பக்கத்து இருப்பவர் 262
பண்டைகொண்டார் 313

பா

பார்விரித்த 3
பாயுடையார் விடுத்தபழி 75
பால்நினைந்து ஊட்டும் 137, 142
பாலுக்குச் சர்க்கரை 214

பி

பிறப்போ டிறப்பென்றும் 91
பிறவிப் பெருங்கடல் 225

பு

புறந்தூய்மை நீரான் 19
புவியினுக்கு அணியாய் 80

புவனியில் போய்ப்பிற 97
புல்லினால் கோடியாண்டு 110, 119
புன்னெறி யதனிற் 117
புல்லினால் ஐந்துகோடி 297

பெ

பெறுதற்கரிய 72, 75
பெருமைக்கும் ஏனை 219

பே

பேராத மும்மலம் 37
பேராயிரம் பரவி 296

பொ

பொதுநோக்கான் 7
பொன்னால் பிரயோசனம் 194
பொவறியில் ஐந்தவித்தான் 208

போ

போனகம் இருக்கின்ற 4
போற்றும் தகையன 201

ம

மறையோர் வானவரும் 99
மனநலம் மன்னுயிர்க்கு 239
மண்ணில் வாழ்தரும் 303
மனமது நினைய 344

மா

மானுடப் பிறவிதானும் 101
மாலாகி நான்முகனாய் 273

மு

முயற்சி திருவினை 147
முன்னவனார் கோயில் 199, 205, 352

மூ

மூர்த்தி தலம் தீர்த்தம் 9
மூர்த்தி தலம் 85, 87, 301

மை

மைவைத்த கண்டன் 204

யா

யாதொரு தெய்வம் 264

வ

வஞ்சித்தென் 132
வம்மின் அடியீர் 156

வா

வான்முகில் வழாது 123
வாழ்த்த வாயும் 223
வாழ்கின்றாய் வாழாத 229
வாயானை மனத்தானை 260

வி

விரும்பும் சரியையுதல் 9, 55
விளக்கினார் பெற்ற 51, 331
விளையாததோர் 348

வே

வேதாந்தம் 5
வேதாந்த சித்தாந்த 8
வேதமுடன் 9
வேத வேள்வியை 45
வேதம் ஓதும் வேதியர்க்கு 68
வேயுறு தோளிபங்கன் 124, 127
வேழமுடைத்து 151
வேட்களத் துள்ளுறை 192
வேதப் பொருளை 221
வேளாளர் என்பவர்கள் 311

வை

வையத்துள் வாழ்வாங்கு 146
வையந் தரகும் 316



கணபதி பிரிண்டர்ஸ், மயிலாடுதுறை.